கலைஞரின்
கடிதங்கள்



39

17.09.2005 - முதல்
11.11.2006 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 39

17.09.2005 - 11.11.2006

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
அன்பழகன் நூல்
நிலையம்
சென்னை-18
அறிவாலயம்

தலைவர் **கலைஞர்**

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549 / 97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

Gowra Puthaga Maiyam

9, Saint John Church Complex,
Rockins Road, Trichy - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

Available @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

Gowra Agencies

No : 1 Samy Street,
Sai Baba Temple Back Side
Triplicane, Chennai - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

Kalaignarin Kadithangal

விலை : ரூ.300.00 CODE :2300

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

Author : Kalaignar
Editors:
K. Shanmuganathan M.com BGL
Dr K. Rajamanikam IAS
Subject : Epistle
© Rights :
Publisher :
S.Gowmareeswari M.A., M.L.I.S.,
Edition :
1st Edition - 2022
Published @ :
Seethai Pathippagam
6A/4, Parthasarathi Samy Street,
Triplicane,
Chennai-600 005.
Pages : 400
Typeset by : JaiJeena
Printed @ :
Classic Printers, Chennai - 2.
ISBN :

A2246

தி.மு.க. அறக்கட்டளைகள்
பேராசிரியர்
அய்வக நூலக
நிலையம்
சென்னை-113
அண்ணா அறிவாலயம்



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

"கலைஞரின் கடிதங்கள்" அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய – பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை – சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் – பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் "அணி"யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க.'' என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்”
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”
“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”
“கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”
“அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
“இடர் எது வரினும், ஏற்பேன்“
“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. 4051 **கடிதங்களைக் கொண்ட 54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

3174. இதுவன்றி இனியொரு பரிசும் உளதோ?	17-09-2005	23
3175. ஏனம்மா பொடா? எவரம்மா பலிகடா?	21-09-2005	28
3176. தெளிவற்ற முடிவுகளும் திடீர் விளைவுகளும்!	24-09-2005	32
3177. சரமாரியான 'அறிவிப்பு'களும் 'சவரி' முடிகளும்!	26-09-2005	42
3178. இனியொரு முறை ஏமாறலாமா; தமிழர்களே!	28-09-2005	51
3179. பொறுக்க முடியாத அறுவை, பொல்லாத அறுவை!	05-10-2005	57
3180. இன உணர்வுடன் தோள் கொடுத்து துணை நிற்பாய்!	08-10-2005	63
3181. துன்ப துயரங்களுக்கிடையே துளி தேன்!	11-10-2005	68
3182. திருச்சிக்கு மட்டுமல்ல; தி.மு.க. பாசறை அனைத்துக்கும்!	12-10-2005	73
3183. எங்கே பார்க்கலாம் என் தங்கைகளின் ஆற்றலை!	13-10-2005	80

3184. பேராசிரியர் வாக்கு; இளைஞரணி பெருமித வளர்ச்சி!	14-10-2005	89
3185. இந்திரஜித் எடுத்துக்காட்டும் இலட்சியப் பயணம்!	15-10-2005	98
3186. மாவலி மன்னனும்; மாமேதை இராவணனும்!	17-10-2005	106
3187. சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2006 (1) கையில் எடுத்த பேனா; கல்லறை செல்லும் வரையில்!	01-11-2005	113
3188. எதேச்சாதிகாரத்திற்குக் கதவு திறந்து விடாதீர்!	26-11-2005	121
3189. ஏழை எளியோர் துயரம் இரு கையால் ஏந்திடுவோம்!	29-11-2005	125
3190. விகடனின் நோக்கும்; விஷமிகளின் போக்கும்!	07-12-2005	128
3191. உவகை பொங்க; உனக்கோர் நற்செய்தி!	08-12-2005	133
3192. 'பாசக்கிளிகள்' படைத்த நோக்கம், கிடைத்த வெற்றி!	12-1-2006	139
3193. எச்சரிக்கை; ஏமாறாதே! ஏமாற்றாதே!	13-1-2006	146
3194. பாசக்கிளிகள்; பத்திரிகைகள் "பட" விமர்சனம்!	21-1-2006	153
3195. மான உணர்வு; மரக்கட்டைகளுக்கு ஏது?	31-01-2006	156
3196. "அருவருக்கத்தக்க அரசியல் தீண்டாமை!"	02-02-2006	160

3197. கூட்டணியைக் குலைத்திட குடும்ப சமேதராய் முயற்சி!	05-02-2006	166
3198. தேர்தல் பயம்; யாருக்கம்மா வந்துவிட்டது?	06-02-2006	170
3199. கதவைத் திறந்தார்; கரடி விடுகிறார்!	10-02-2006	175
3200. விழித்துக் கொள்க; விடியப் போகிறது!	11-02-2006	179
3201. செஞ்சிக் கோட்டையிலிருந்து சென்னைக் கோட்டைக்கு!	12-02-2006	185
3202. இரட்டைக்குழல் துப்பாக்கி போல!	15-02-2006	192
3203. திருச்சிப் பயணம் திருப்தி தருகிறது!	23-02-2006	198
3204. பணி புரிவோம்; 'பணி'யெனவும் சீறுவோம்!	24-02-2006	201
3205. தமிழகத்தின் மலர்ச்சி காண தவறாது வாரீர் திருச்சி!	26-02-2006	205
3206. மூட்டை மூட்டையாக ஊழல்கள், முறைகேடுகள்!	2-3-2006	211
3207. எப்போதும் வென்றானை எண்ணி இப்போதும் வெல்வோம்!	3-3-2006	220
3208. என்றும் அழியாத 'மெய்க்கீர்த்தி'கள்!	14-3-2006	224
3209. கருத்துக் கணிப்பா? - கடுப்புக் கணிப்பா?	16-3-2006	229

3210. மக்களுடன் நேர்காணல் எப்போது?	24-3-2006	236
3211. விடியல் காண - விலங்கொடிக்க - வீரர்காள்; எழுவீர்!	26-3-2006	240
3212. "மாயை" தோற்றுவிப்பர்; மயங்காது வெற்றி காண்போம்!	27-3-2006	245
3213. நிரந்தரமான எஜமானர்கள் தமிழ்ப் பெருமக்கள்தான்!	01-04-2006	249
3214. அய்யா வழி சென்றிடுவோம்; அண்ணா வழி வென்றிடுவோம்!	2-4-2006	253
3215. அன்று படித்த "அமிர்தமதி" கதை!	4-4-2006	257
3216. தேர்தல் களத்துக்குத் தேவையான கருத்துக் கணைகள்!	20-04-2006	261
3217. வெற்றியின் அளவு விரிகிறது!	4-5-2006	267
3218. பொருத்தமாக அமைந்த - புத்தர் ஞான ஒளி பெற்ற நாள்!	15-5-2006	270
3219. முகிலைக் கிழித்து வெளிவரும் முழுமதி!	6.7-2006	277
3220. அம்மையார் ஆட்சி நடத்திய அழகு!	1-9-2006.	281
3221. அம்மையார் ஆட்சி நடத்திய அழகு! (2)	02-09-2006	287
3222. அம்மையார் ஆட்சி நடத்திய அழகு! (3)	03-09-2006	292

3223. அம்மையார் ஆட்சி நடத்திய அழகு! (4)	04-09-2006	297
3224. கேள்வி நாயகியா? கேலிக்குரியவரா?	06-09-2006	304
3225. சிந்திக்க மறந்தோரை மட்டுமே ஏமாற்றலாம்!	11-09-2006	309
3226. எத்தகைய தாய்; எத்தகைய மகன்?	12-09-2006	314
3227. கதைகளல்ல; கண்ணீர் அருவிகள்!	13-09-2006	318
3228. இரத்தம் தோய்ந்த கோப்பு!	14-09-2006	322
3229. வாக்குறுதிகளின் கல்லறை எழுத்துக்கள்!	15-09-2006	326
3230. "பொய்" படம் போதிக்கும் பாடம்!	23-09-2006	332
3231. ஊரை அறிந்தால் உலகை அறியலாம்!	27-09-2006	336
3232. வாக்காளர்களுக்கு வழிகாட்டி!	28-09-2006	339
3233. நல்லாட்சியில் வளம் பெற்ற உள்ளாட்சி!	29-09-2006	343
3234. கூரையேறிக் கோழி பிடிக்க முடியாதவர்!	30-09-2006	349
3235. யானைக்கே குறி வைப்போம்!!	01-10-2006	355
3236. அதில் மட்டும் ஒரு குறைச்சலும் இல்லை !	02-10-2006	360
3237. சுழலையும் கடந்து சுலபமாக கரையேறுவோம்!	5-10-2006	365

3238. நல்ல தீர்ப்பு வழங்க வேண்டும்!	14-10-2006	369
3239. மனச்சாட்சியிருந்தால் “மய்யம்” கருதிப் பார்க்குமா?	25-10-2006	374
3240. தோழமை வளர்ப்போம்; துணை நிற்போம்!	26-10-2006	379
3241. “பாமா”க்களும் “லீமா”க்களும் நிறைந்த பாசறை; இது!	3-11-2006	382
3242. எங்கள் எண்ணத்தை - இந்த எண்ணிக்கை வெளிப்படுத்தும்!	8-11-2006	387
3243. அனுபவம் அனைவர்க்கும் உதவட்டும்!	11-11-2006	395

3174. இதுவன்றி இனியொரு பரிசும் உளதோ?

உடன்பிறப்பே,

ஒரு காலத்தில் நமது பழங்கலை எனப்படும் - தெருக் கூத்து; அதைத் தொடர்ந்து நாடகங்களில் நடிப்பதற்குக் கூட பெண்கள் முன் வர மாட்டார்கள். - எல்லா கதாபாத்திரங்களையும் ஆண்களே ஏற்று நடிப்பார்கள். பழைய கலைத்துறை வரலாறுகளைப் படித்தோ அல்லது அபூர்வமாகக் காணக் கூடிய புகைப்படங்களைப் பார்த்தோ அந்தக் காலத்து நாடக வேந்தர் எஸ்.ஜி. கிட்டப்பா அவர்கள் 'வள்ளி' வேடத்திலும் - அவரது காதல் மனைவியாகத் - திகழ்ந்த கொடுமுடி கோகிலம் கே.பி. சுந்தராம்பாள் அவர்கள், வேலன் - வேடன் - விருத்தன் ஆகிய "முருகன்" வேடத்திலும் நடித்தார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது. அதற்குத் தலை கீழ் மாற்றமாக; எஸ்.ஜி. கிட்டப்பா அவர்கள் முருகனாகவும், கே.பி. சுந்தராம்பாள், வள்ளியாகவுமே நடித்துயிருக்கிறார்கள்.

திரையுலக ஆதிக்கம் தலையெடுக்காத; நாடகக் கலை மட்டுமே கொடி கட்டிப் பறந்த மிகப் பழைய நாட்களில் "பாய்ஸ்" கம்பெனி என்ற பொதுப் பெயருடன்; குறிப்பாக இளம் வயது ஆடவர்கள் மட்டுமே கொண்ட நாடகக் கலைக் குழுக்கள் ஏராளமாக இருந்தன. "பால விநோத சபா" - "சரஸ்வதி கான சங்கீத சபா" இப்படிப் பல பெயர்களில் நாடக சபைகள் இருந்தன எனினும், எல்லாமே 'பாய்ஸ்' கம்பெனிகளாகவே விளங்கின. எந்த நாடகமாயினும் ஆண் பெண் கதாபாத்திரங்கள் அனைத்தையும் ஆண்களே ஏற்று நடிப்பார்கள். மருந்துக்குக் கூட ஒன்று இல்லை என்பார்களே; அதுபோல ஒரு பெண்மணியைக் கூட அந்த நாடகக் குழுக்களில் நடிகையாகக் காண முடியாது.

மெல்ல மெல்ல அரசல் புரசலாக என்பதுபோல ஸ்பெஷல் நாடகங்கள் சிலவற்றில் - ஆண் நடிகர்களும், பெண் நடிகர்களும் மாறி மாறி ஆண் பெண் கதாபாத்திரங்களை ஏற்று நடித்த காலமும் உண்டு. அப்போது எனக்குத் தெரிந்த வரையில் எம்.எஸ். விஜயாள், என்ற நடிகையும், டி.ஆர். மகாலிங்கம் அவர்களும் ஸ்பெஷல் நாடகங்களில் கதாநாயகி, கதாநாயகன் பாத்திரங்கள்

ஏற்றதுண்டு; அவ்வளவுதான். எனது மைத்துனர் "சிதம்பரம் சிங்கக் குட்டி" எனப்பட்ட சி.எஸ். ஜெயராமன், புளிய மாநகர் புலிக்குட்டி" எனப்பட்ட பி.எஸ். கோவிந்தன் இவர்கள் பெண் பாத்திரங்களும் ஏற்று நடித்திருக்கிறார்கள். பொதுவாக 'பாய்ஸ்" கம்பெனிகள் மற்றும் பலமான நடிகர்கள் பங்கேற்றிடும் நாடகங்களில் மிகப் பெரும்பாலும் சற்று கவர்ச்சியான தோற்றம் கொண்ட ஆண்களே நாடகத்தில் முக்கிய பெண் வேடங்களையேற்று நடித்து வந்தார்கள்.

இந்தப் பிரச்சாரத்துக்காக நாங்கள் நாற்பது பேர் - நாடகக் குழு; நாகை திராவிட நடிகர் என்ற பெயரில் இயங்கிப் பல ஊர்களில் பிரச்சார நாடகங்களை நடத்தியது. நாகை ஆர்.வி. அ கோபால் அவர்கள்தான் அக்குழுவின் தலைமைப் பொறுப்பில் நிர்வாகியாக இருந்தார் - அக்குழுவினராகிய நாங்கள் விழுப்புரம், புதுவை, திருவாரூர், நாகை ஆகிய இடங்களிலும் மற்ற ஊர்களிலும் நடத்திய "சாந்தா அல்லது பழனியப்பன்" நாடகமாயினும்; "சண்டமாருதம்" நாடகமாயினும் - அவற்றில் பிரதானக் கதாநாயகியாக ராஜேந்திரன் என்பவர்தான் நடித்தார்.

அவ்வளவு ஏன்; அண்ணா அவர்கள் எழுதி அவரே நடித்த நாடகங்களிலும், நான் எழுதி நானே நடித்த நாடகங்களிலும், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி நாடகக் குழுவில் பெண் வேடங்கள் தரித்துப் பிரபலமாகியிருந்த மகாலிங்கம், மணி என்ற இரு இளைஞர்கள்; (பின்னர் திரைப்பட இயக்குநர்களாகக் கூடப் பணியாற்றியவர்கள்) - அவர்கள்தான் முக்கிய பெண்கள் கதாபாத்திரங்களையேற்று நடித்துப் பாராட்டுப் பெற்றார்கள்.

சக்தி நாடக சபாவில் வி.சி. கணேசனாக விளங்கி; நூர்ஜகான் வேடந்தாங்கி பார்வையாளர்களை நடிப்பாலும், நளினத்தாலும் மயங்க வைத்த நடிகர் திலகத்தின் அந்தப் பெண் வேட நடிப்பைப் பாராட்டாதார் யார்?

நாடக உலகில் ஆண்கள் பெண்களாக நடிக்கும் அந்தக் காலம் மெல்லத் தேய்ந்து ஒரேயடியாக ஓய்ந்தது என்றாலும்; திரையுலகம்; பெண் நடிகர்களை ஆண்களின் பாத்திரமேற்கச் செய்த நிகழ்ச்சி கள்தான்; கோகில கான எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் சாவித்திரி என்ற படத்தில் "நாரத"ராகவும், எஸ்.டி. சுப்புலட்சுமி அவர்கள் "பக்த குசேலா" படத்தில் "கிருஷ்ணனாகவும்", கே.பி. சுந்தராம்பாள் அவர்கள் "நந்தனாராகவும் நடித்த அந்த நிகழ்ச்சிகளாகும்!

இந்தப் பழங்கதைகளை நினைவூட்டியும்; கலை யுலகம் பற்றியும் இந்தக் கடிதத்தில் நான் பேசுவதற்குக் காரணம் இல்லாமல் இல்லை, தொடர்பும் இருக்கிறது.

ஒருநாள் அறிஞர் அண்ணா அவர்களுடன் நானும், நாவலரும், பேராசிரியரும், அன்றைய மகளிர் அணித் தலைவியாக இருந்த திருமதி அலமேலு அப்பாதுரை - அவர்களும் மற்றும் முன்னோடிகளும் உரையாடிக் கொண்டிருந்தபோது; அண்ணா சொன்னார் - மூட நம்பிக்கைகளைப் பெண்களுக்கு உணர்த்தி அவற்றிலிருந்து அவர்களை விடுபடச் செய்வதற்கு ஆடவர்களாகிய நாம் கதை எழுதி, நாடகம் நடித்து, பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்வதைவிட; நமது "கழகத்தில் உள்ள பெண்களே நாடகங்கள் தயாரித்து, அவற்றில் அவர்களே நடித்துப் பிரச்சாரம் செய்தால் பெண்கள் மத்தியில் எளிதாகவும், விரிவாகவும், உறுதியாகவும் நமது கொள்கைகள் வெற்றிகரமாகப் பரவுமே" என்று!

அண்ணா அவர்கள் இதைச் சொல்லி சிலர் நாட்களுக்கெல்லாம்; திருமதி அலமேலு அப்பாதுரை அவர்கள் கழக மகளிர் அணியினர் சிலரைத் திரட்டி; அப்போது கழகப் பாடகியாக விளங்கிய திருமதி கஸ்தூரி என்பவரையும் துணைக்கு வைத்துக் கொண்டு கழகப் பிரச்சார நாடகமொன்றைத் தயாரித்து விட்டார். நாடக அரங்கேற்றத்தன்று அண்ணாவும் நாங்களும் ஆச்சரியத்தில் மூழ்கி விட்டோம்.

அலமேலு அம்மையாரே அந்த நாடகத்தில் பெரிய கிருதா மீசைகள் வைத்துக் கொண்டு ஜமீன்தார் வேடத்தில் தோன்றி, நாட்டாண்மை புரிந்து, உருட்டி மிரட்டியதும் - அந்த ஜமீனை எதிர்த்து ஏழை எளியோர், உழவர்கள் போர்க்கொடி தூக்கியதும் - உரிமைக்குரல் ஓங்கி ஒலித்ததும் - அந்தப் புரட்சிக்காரர்கள் வேடங்களைப் பெண்களே தரித்திருந்ததும்; "ஆகா!" என்று எங்களை அயர வைத்து விட்டது என்றே சொல்லலாம்.

அன்று நாடகத்தில் நாவடக்கமற்ற நாட்டாண்மையை எதிர்த்து உழைக்கும் வர்க்கத்தினர் - நடுத்தர வர்க்கத்தினரின் பிரதிநிதிகளாகப் பெண்கள் உரத்த குரலெழுப்பினர் - உரிமை முழக்கமிட்டனர் - அது; நாடகத்தில்! ஆம்; அண்ணாவின் ஆலோசனைப்படி நடந்த கழகப் பிரச்சார அரங்கத்தில்! இவ்வாறு

நாடகத்தில்; நடு வீதி மேடைகளில் உரிமைக்குரல் எழுப்பிய நமது மகளிர்;

இன்று நாடாளுமன்றத்தை நோக்கி - அந்த மன்றத்தில் வீற்றிருக்கும் நல்லோர் அனைவரையும் நோக்கி - நாடதிர முழக்கமிட்டுள்ளனர்!

ஒரு காலத்தில் நாடகத்தில் கூட பெண்களுக்கு நடிக்கும் உரிமையில்லை; அதுவும் ஆண்களுக்கே உரிமையென்ற நிலை மாறி; இன்று நாட்டை நிர்வகிக்கும் நாடாளுமன்ற, சட்டமன்றங்களில் பொறுப்பேற்கும் உரிமைக்குப் போரிடுகின்றனர் பூவையர்!

நமது கழகத்தில் மகளிர் அணி; மற்றுமுள்ள அணிகளைப் போலவே ஓர் அமைப்பு! அதனால் மகளிர் சமுதாயம் முழுமைக்கும் நாங்கள்தான் பிரதிநிதி என்பது போல மார்தட்டிக் கொள்ளும் அமைப்பாக அல்ல; பெண் இனத்துக்காக எந்தப் பக்கமிருந்து உரிமைக் குரல் எழுந்தாலும், அந்தக் குரலுடன் இணைந்து முழக்கிடும் பெரும் அமைப்பு.

அதன் பேருருவை செப்டம்பர் 15 பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் மாநகர் சென்னை கண்டது -

வேலூர் மாநாட்டில் இந்தப் பேரணி பற்றி நான் குறிப்பிட்டதும் - தென் சென்னை மாவட்ட ஆய்வரங்கக் கூட்டத்தில் கூறியதும் - முரசொலியில் மூன்று நான்கு கடிதங்கள் எழுதியதும் தவிர - ஒருசில ஏடுகளில் சிறிய அளவில் வந்த செய்திகள் - சன் தொலைக்காட்சியில் இருமுறை 10 விநாடி விளம்பரங்கள் - தலைமைக் கழகச் சார்பில் மாவட்டக் கழகங்களுக்கு விடுத்த அழைப்பு - (அதிலும் தென் மாவட்டங்கள் நீங்கலாக) - இவற்றைத் தவிர இலட்சக்கணக்கில் சுவரொட்டி விளம்பரங்களுக்கோ - கோடிக்கணக்கில் சுவர் எழுத்து விளம்பரங்களுக்கோ - செலவு எதுவும் செய்திடாமல்; ஏ, அப்பா! எங்கிருந்து வந்தனர் முகிலைக் கிழித்து வெளிக் கிளம்பிய முழுமதிகளாக மூன்று லட்சம் பேர்; என் தங்கைகள்! என்னைப் பெற்ற தாய் போன்ற மூதாட்டிகள்!

முப்பெரும் விழா நடைபெற இருக்கும் நெல்லையில் மூன்று பரிசுகளைப் பெறுவதற்கு போட்டியிட்ட மாவட்டங்களும் - அந்த மாவட்டங்களின் செயலாளர்களும் - பல்வேறு அமைப்புகளின் செயலாளர்களும் - அந்தந்தப் பகுதிகளின் மகளிர் அணி

சகோதரிகளும் - வயது ஏற்றத்தாழ்வு பாராமல் நான் வணங்கியும் வாழ்த்தியும் போற்றிப் புகழத்தக்கவர்கள் அல்லவா!

ஆயிரம் விளக்குப் பகுதியில் அண்ணாவின் (97வது பிறந்த நாள் விழாவை அதியற்புதமாகவும் அழகு மிளிரவும் - அறிவுச் சுடர் ஒளிரவுமான முறையில் ஏற்பாடு செய்ததுடன்; பேரணியில் முத்து தரமான அணிவகுப்பாகத் தென் சென்னை அணி வகுப்பை நடத்திக் காட்டிய தம்பி அன்பு என்ற ஜெ.அன்பழகன் - நெல்லை விழாவில் முதற் பரிசு பெறுகிறார்; தென் சென்னை மாவட்டச் சார்பில்!

நிறைந்த கூட்டம் - சிறந்த அணி வகுப்பு நிமிர்ந்த நடை - நேர் கொண்ட பார்வையுடன் செருமுனை நோக்கும் சேனையென அணி வகுத்த சேலத்து மகளிர் படை! தம்பி வீரபாண்டியின் தளராத உழைப்பும் திறனும் வெளிப்பட்ட ஆர்வமிகு அந்த அணி; முப்பெரும் விழாவில் இரண்டாம் பரிசு பெறுகிறது.

மூன்றாம் பரிசு; திருவண்ணாமலை மாவட்டத்துக்கு - தீபம் காட்டிட மட்டுமல்ல; திக்கெட்டும் ஒலி காட்டி திராவிட இன உணர்வு காட்டவும் தெரியும் என்பது போல திரண்ட அந்த அணியைப் பாராட்டி மூன்றாம் பரிசு வழங்கப்படுகிறது - தம்பி எ.வ. வேலு வாயிலாக!

மகளிர்க்கு 33 சதவிகிதம் வழங்கினால் ஆட்சி மன்றங்கள் எப்படி அமையும் என்பதை ஆடவர் மகளிரை இருக்கையில் அமர்த்தி வைத்தே விளக்கிக் காட்டியது விழுப்புரம் மாவட்டம்; எனவே அடைவோம் அரிவையர் உரிமையென சிறப்பு பரிசினை தம்பி பொன்முடியிடம் தருகிறது. பரிசேதும் பெறாவிடின் என்ன? அழைத்தேன்; அதனைத் தட்டாமல் அணி வகுத்தீர்; அன்புக் குல விளக்குகளே! என்றும் அணையாத திராவிட உணர்வுத் தீபங்களே!

முழங்கியது கடலோ என, முரசு தான் கொட்டியதோ என, மூன்று லட்சமாய்க் கூடிய மூன்றெழுத்துத் தி.மு.க. வின் மூச்சாக இருக்கின்ற முழுமதிகாள்! நான் வழங்கிடும் நன்றி நன்றி நன்றி - இதுவன்றி இனியொரு பரிசும் உளதோ!

அன்புள்ள

மு.க.

17-09-2005

3175. ஏனம்மா பொடா? எவரம்மா பலிகடா?

உடன்பிறப்பே,

நக்சலைட்டுகள் பிரச்சினை குறித்து நாடு தழுவிய அளவில் இல்லாவிடினும் நக்சலைட்டுகளால் பாதிக்கப்பட்டுள்ள மாநிலங்கள் - பாதிக்கப்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிற மாநிலங்கள் - பாதிக்கப்படும் மாநிலங்களுக்குப் பக்கத்து மாநிலங்கள் எனப்படும் மாநிலங்களின் முதல் அமைச்சர்களைக் கொண்ட ஒரு கூட்டத்தை இந்திய நாட்டின் தலைநகர் டெல்லியில் மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் 19-9-2005 அன்று கூட்டி; விவாதித்து நக்சலைட்டுகளை ஒடுக்குவது குறித்து அந்த முதல் அமைச்சர்களின் கருத்தினைக் கேட்டறிந்து உள்ளார். முடிவாக கூட்டு அதிரடிப்படை அமைக்கப்படுவது பற்றியும் அறிவிக்கப் பட்டுள்ளது.

அந்தக் கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா "தமிழ்நாட்டில் நக்சலைட்டுகளால் கொஞ்சம்கூட கால் பதிக்க முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது" என்று கூறிவிட்டு; "பொடா சட்டத்தை ரத்து செய்ததின் மூலம் தீவிரவாதத்தையும், பயங்கரவாதத்தையும் அடக்குவதற்காக நடவடிக்கை எடுக்கும் உரிமையும், திறமையும் பறிக்கப்பட்டுவிட்டன" என்றும் - எனவே பொடா சட்டத்தை மீண்டும் கொண்டுவர வேண்டும்" என்றும் வலியுறுத்திப் பேசியுள்ளார்.

நக்சலைட்டுகள் கால் பதிக்க முடியாத அளவுக்குச் செய்துவிட்டேன் என்று சொன்ன அதே வாயினால்தான் - தீவிரவாதத்தையும், பயங்கரவாதத்தையும் அடக்கப் பயன்பட்ட "பொடா" சட்டம் ரத்து செய்யப்பட்டது; சட்ட அமைப்பின் உரிமையை, திறமையைப் பறித்த செயலாகும் என்றும் ஜெயலலிதா, அந்தக் கூட்டத்தில் கூறியுள்ளார்.

தீவிரவாதிகளின் பயங்கர நடவடிக்கைகளை அடக்க ஒடுக்க தீவிரமான சட்டங்கள் தேவை என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை யென்றாலும்; ஒரு சட்டம் எதற்காக உருவாக்கப்பட்டதோ, அதற்குப் பயன்படுத்தப்படாமல் தனக்குப் பிடிக்காதவர்களைப் பழிவாங்கப் பயன்படுத்தும் நோக்குடன், துஷ்பிரயோகம் செய்யும் ஜெயலலிதாக்களின் கையில் கிடைத்துவிட்டால் என்ன ஆகும் என்பதை தம்பி வைகோவை 19 மாதங்கள் வேலூர் சிறையில் வைத்துக் கொடுமைப்படுத்திய நிகழ்ச்சியொன்றே தெளிவாக விளக்கிக் கொண்டிருக்கிறது.

தம்பி வைகோவும் அவருடன் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக முன்னோடிகள் எட்டு பேரும் எதற்காகக் கைது செய்யப்பட்டார்கள்? நக்சலைட்டுகளாக செயல்பட்டார்கள் என்பதற்காகவா? அப்படியானால் அவர்கள் எந்த அதிகாரியை - எந்த அமைச்சரை - எந்த எம்.பி., அல்லது எம்.எல்.ஏ.வை - அல்லது எந்த மிட்டா மிராசுவை; கொலை செய்தார்கள்? நக்சலைட்டுகளாகவோ - அல்லது நக்சலைட்டுகளைப் போலவோ - அவர்கள் நடந்து கொண்டார்கள் என்பதற்கோ; செயல்பட்டார்கள் என்பதற்கோ என்ன சாட்சியம்? எத்தகைய சான்றுகளை வைத்துக் கொண்டு அவர்களை ஜெயலலிதா ஆட்சி கைது செய்தது? 'பொடா' சட்டத்தை பிரயோகித்ததே எதற்காக? தன் அதிகார வரம்பில் அந்தப் "பொடா" இருக்கிறது; அதைத் தன் விருப்பம்போல் பயன்படுத்தலாம் என்ற வெறித் தனம் தவிர, வேறு என்னதான் காரணம்?

சட்டத்தை மீறுவோர் மீது நடவடிக்கை எடுத்து, பிறகு வழக்குத் தொடுத்து; பிறகு விசாரணை நடத்தி, கடைசியாக தண்டிப்பது என்றால் விரைவில் முடிகிற காரியமா என்றும்; விரைந்து நடவடிக்கை எடுக்கவே "பொடா" தேவை யென்றும் ஜெயலலிதா விளக்கம் தருவாரேயானால்; சிலபேர் தங்களின் வருவாய்க்கு மேலாக சொத்துக்களை குவித்துக்கொண்டு - உள்ளங்கை நெல்லிக்கனிபோல அது ஊருக்குத் தெரிந்த உண்மையாக இருந்தாலும்; சில பத்திரிகா உத்தமர்களை படுதாக்களாக்கிக் கொண்டு - பணத்தை வாரி இறைத்து - நீதி தேவதையையும் விலைக்கு வாங்க முடியுமா என்று வழக்குகளை இழுத்தடித்து நாட்களை ஆயுட்காலம் வரையில் நகர்த்தப் பார்க்கிறார்களே; அவர்களை என்ன செய்வதாம்!

ஏற்கனவே இருக்கின்ற சட்டங்கள் போதாதென்று "பொடா" சட்டம் மீண்டும் வேண்டுமென்று ஜெயலலிதா வலியுறுத்துவது; "ருசி கண்ட பூனை உரியை நோக்கித் தாவும்" என்ற பழமொழியையே நினைவூட்டுகிறது! ஒன்று; தனக்குப் பிடிக்காதவர்களையெல்லாம் "பொடா" கொண்டு பிடித்துப் போடுவது; மற்றொன்று; வைகோவையும் ம.தி.மு.க. முன்னோடிகளையும், பழ. நெடுமாறன், சுப. வீரபாண்டியன், நக்கீரன் கோபால் போன்றோர்களையும், 'பொடா' சட்டப்படி சிறையில் போட்டதை நியாயப்படுத்துவது - இதனை ஜனநாயகவாதிகள் எவரும் ஏற்கமாட்டார், ஏற்கவும் இயலாது!

நக்சலைட்டுகளை ஒடுக்க திட்டம் வகுத்த முதலமைச்சர்கள் நினைவில் நிறுத்த வேண்டிய முக்கிய கருத்து ஒன்று உள்ளது. நக்சலைட்டுகள் என்போர் முதலில் நாலைந்து பேர்தான் யாருடைய தூண்டுதலுமின்றி; அவர்களாகவே தோன்றுகிறார்கள். வன்முறை - அல்லது பயங்கரவாதத்தில் அவர்களோடு இணைந்து ஏக காலத்தில் நூறு பேர், இருநூறு பேர் திடுமெனத் தோன்றி விடுவதில்லை, அவர்கள் பிறகே அந்த இயக்கத்தில் இணைகிறார்கள். வறுமை - வேலையின்மை - பசி, பஞ்சம், பட்டினிக் கொடுமை போன்ற வாலிப வயதினரைத் தட்டி எழுப்பிடும் விரக்தி உணர்வுகள்தான் அவர்களை நக்சலைட்டுகளாக உருமாற்றுகின்றன - உணர்வும் - உணர்ச்சியும் அதற்கேற்ப மாறுகின்றன.

எப்படியிருந்தாலும் வறுமையால் சாகப் போகிறோம்; அதற்குப் பதிலாக பலித்த மட்டும் பார்த்து விட்டு சாகலாமே என்று; மரணத்தை நோக்கி வன்முறை வழியில் நடப்பவன்தான் நக்சலைட் எனப்படுகிறான்.

'நக்சலைட்' என்ற பெயரால் கவரப்பட்டவர்கள்; எண்ணிக்கையில் சிலரேதான் - விரல் விட்டு கணக்கிடக்கூடிய அளவுக்குத்தான்!

ஆனால் அது ஒரு இயக்கமாக - படையாக - பாசறையாக - சில பகுதிகளில் சாம்ராஜ்யமாகவே - உருவாவதற்குக் காரணம்; வறுமையின் தாக்குதலால் வாடிடுவோர் - வேலையின்மையால் வேதனைப்படுவோர் - ஆதிக்க வர்க்கத்திற்கு அடிபணியும் நிலையிலிருப்போர் - நாடிச் செல்லும் பாதுகாப்பு அரணாக அது இருப்பதுதான்!

வேலையில்லா திண்டாட்டம் - குறைந்தால்; நக்சலைட்டுகள் எண்ணிக்கை குறையும்! வேலையில்லா திண்டாட்டமே ஒழிந்தால்தான் நக்சலைட்டுகள் ஒழிவார்கள்!

இவை நடைபெறாத பட்சத்தில்; 'நக்சலைட்' என்ற பெயரில் இல்லாவிட்டாலும்; வேறு பெயரில் அத்தகையோர் அவதரித்துக் கொண்டே இருப்பார்கள்!

'பொடா' சட்டத்தை மீண்டும் கொண்டு வா அவர்களைப் பூண்டோடு ஒழிக்கிறேன் என்பதெல்லாம்; வெறும் பூச்சாண்டி காட்டும் வேலைதான்!

மூல காரணத்தைப் புரிந்து கொள்ளாமலோ; அல்லது அதைப் புரிந்துகொண்ட பிறகும் அதை எப்படிச் சரிசெய்து; மறு வாழ்வும் - அந்த வாழ்வில் மறுமலர்ச்சியும் எவ்வாறு ஏற்படுத்துவது என்று எண்ணிடாமலோ, "எடுத்தேன் கவிழ்த்தேன்!" என்று செயல்படுவதால்; மண்டபத்தில் முளைத்து வளர்ந்துள்ள செடியின் வேரை விட்டுவிட்டு அதன் தண்டு பாகத்தை மட்டும் வெட்டி எறிவது போலத்தான்; அவை மீண்டும் தழைத்துக் கொண்டேயிருக்கும்.

எனவே; நக்சலைட்டுகள் உருவாவதற்கு வேர் போல இருக்கிற சமுதாய பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் அகற்றப்படுவதே; சிறந்த வழி என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும்.

அன்புள்ள,

மு.க.

21-09-2005

3176. தெளிவற்ற முடிவுகளும் திடீர் விளைவுகளும்!

உடன்பிறப்பே,

விடிவதற்குள்ளாக எழுந்து விடும் பழக்கமுள்ளவனல்லவா; அதனால் அருகிலிருந்த புத்தகங்களின் முகத்தில்தான் முதலில் விழிக்க நேரிட்டது. அவற்றில் மேலாக இருந்தது, நேற்றையதினம் சின்னகுத்தூசி அவர்கள் கொடுத்த 'திரிகடுகம்' என்ற நூறு வெண் பாக்களைக் கொண்ட சிறிய நூல், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்று கேள்விப்பட்டோரும் உண்டு. பலமுறை அவற்றைப் படித்தோரும் உண்டு.

பதினெண் கீழ்க்கணக்கு என்பது பதினெட்டு நூல்கள். அந்தப் பதினெட்டு நூல்களுள் ஒன்றுதான் "திரிகடுகம்" என்பதாம்.

சுக்கு, மிளகு, திப்பிலி மூன்றும் எப்படி நோய் தீர்ப்பதற்கும் - வருமுன் தடுப்பதற்கும் பயன்படக்கூடியவை என்று கூறப்படுகிறதோ; அது போல "திரிகடுகம்" நூலில் உள்ள பாடல்கள் ஒவ்வொன்றிலும் மூன்று கருத்துகள் அமையப்பெற்று அவை உடலுக்கும் உள்ளத்திற்கும் ஆக்கம் தரக் கூடியவை என்று கூறப்படுகிறது.

இந்நூலில் வரும் நூறு பாடல்களையும் இயற்றியவர் நல்லாதனார் எனும் புலவர்.

நற்குணங்களைப் பரிந்துரைப்பதாகவும் - நன்னெறிகளை போதிப்பவைகளாகவும் - பாடல்களின் நோக்கம் இருப்பினும்; பழைய கால கருத்துக்களின் பின்னணியும் சில பாடல்களில் தலைகாட்டத் தவறவில்லை இந்த நூலில்!

இருப்பினும் மேகங்களுக்கிடையே மின்னிடும் விண்மீன்களென விழுமிய கருத்துக்களும் நம்மை காத்திடத் தவறவில்லை.

இதோ; இன்றைய தமிழகத்தின் நிலைப்பாட்டைக் குத்திக் காட்டுவது போல ஒரு பாட்டு :

“கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கறுக்கும்
மூத்தோரை இல்லா அவைக்களனும் – பாத்துண்ணும்
தன்மையி லாளர் அயலிருப்பும் இம்மூன்றும்
நன்மை பயத்த லில.”

பாடலின் பொருள் வருமாறு :

கல்வி கற்றுத் தரும் ஆசிரியர் இல்லாத ஊரும், சிக்கலைத் தீர்க்க வேண்டிய மூத்தவரே; அறிவு முதிர்ச்சியில்லாதவராக உள்ள அவையும், பகுத்தளித்து உண்பவர் பக்கத்தில் அமர்ந்திட அமையாத நிலையும் – தன் விளைவிக்காமல்; தீமை விளைவிக்கக் கூடியவைகளேயாகும்.

ஊரும், உணவருந்தும்போது பக்கத்திலிருப்போம் குணமும், ஊரார் கூடும் அவையும் எவ்வாறு அமைதல் நன்மை பயக்கும் என்பதையும் – அவ்வாறு அமையாவிடின் தீமையே பயக்கும் என்பதையும் நல்லாதனார் விளக்கும் விதம் கண்டு வியப்பில் ஆழ்ந்து விட்டால் மாத்திரம் போதுமா?

ஊர் மக்கள் கல்வியாளர்களாக – குறைந்த கற்றவர்களாகவாவது இருந்திடப் பாடுபட்டு முயற்சி மேற்கொள்ள வேண்டும். எந்தவொரு ஊரிலும் எழுத்தறிவில்லாதவரே இல்லை என்ற நிலை ஏற்பட எழுத்தறிவிக்கும் இறைவன்களாம் கணக் காயர்கள் எனப்படும் ஆசிரியர்கள் போதுமான அளவுக்கு இருக்க வேண்டுமல்லவா?

அதைப் போலவே பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்பாடு பற்றி; நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலையான கருத்தைத் தந்த அய்யன் வள்ளுவரின் அடியொற்றி; நம் வாயிலாக வழங்கப்படும் உணவு, உடை, மற்றும் பொருள்களைப் பகுத்தளித்து விட்டு நாம் நமக்குரியதைப் பெற்றுக் கொள்ள வேண்டுமே தவிர; எல்லாம் தமக்கேயென்று எடுத்தொளித்துக் கொள்ளக் கூடாதன்றோ?

மேலும் ஒரு கருத்தாக; இந்தப் பாடலில் அவைக் களத்தில் “பிணக்கறுக்கும் மூத்தோர் இருக்க வேண்டும்” என்பதை நல்லாதனார்; அத்தகைய முதிர்ச்சியுற்றோர் இல்லா அவைக்களம்

நன்மை பயக்கக் கூடியதாக அமையாது என்று அழுத்தம் திருத்தமாகச் சுட்டிக் காட்டுகிறார்.

இதற்கான சான்று தேடி; நாம் பழைய ஏடுகளையோ, செய்திகளையோ புரட்டிப் பார்க்கத் தேவையில்லை. 1. இதோ; இன்றைய 23-9-2005 "தினத்தந்தி" முதல் பக்கத்தில் வெளிவந்துள்ள செய்தி

முழுவதையும் திரும்பத் திரும்ப ஒரு முறைக்கு இரு ய முறை படித்துப் பார்த்தாலே போதும்.

இதோ அந்தச் செய்தி :

"தமிழக சட்டசபை கூட்டம் நேற்று நடந்தது. கேள்வி நேரம் முடிந்ததும் சட்ட முன் வடிவுகள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அப்போது கல்வி அமைச்சர் ஒரு சட்ட முன்வடிவை சபையில் தாக்கல் செய்தார். அதன் விவரம் வருமாறு :

மதராஸ் பல்கலைக் கழகத்தின் பெயரை எந்தவித மாற்றமும் இல்லாமல் தொடர்ந்து வைத்துக் கொள்வதற்கு அரசிடம் கோருகிற தீர்மானம் ஒன்றை பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழு நிறைவேற்றியது. ஆட்சிக் குழுவின் கோரிக்கையை அரசு பரிசீலனை செய்த பின்னர், மதராஸ் பல்கலைக் கழகத்தின் பெயரை மாற்றாமல் தொடர்ந்து வைத்துக் கொள்வது எனவும், அந்த நோக்கத்துக்காக சட்டம் ஒன்றை இயற்றுவது எனவும் முடிவு செய்துள்ளது. இச்சட்ட முன் வடிவு மேற்சொன்ன முடிவுக்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது. இவ்வாறு அந்தச் சட்ட முன்வடிவில் கூறப்பட்டிருந்தது.

இந்தச் சட்ட முன்வடிவு தாக்கல் செய்யப்பட்டதுமே தி.மு.க., காங்கிரஸ், பா.ம.க., கம்யூனிஸ்டு கட்சிகள், பாரதீய ஜனதா உட்பட எதிர்க்கட்சியினர் அனைவரும் எதிர்ப்பு தெரிவித்தனர். அறிமுக நிலையிலேயே இந்த மசோதாவை எதிர்ப்பதாக கூறினார்கள்.

துரைமுருகன் :- இந்த மசோதாவை இவ்வளவு அவசரமாக கொண்டு வருவது ஏன்? இதை விவாதித்து

பிறகு நிறைவேற்றலாம். பெயரை மாற்றக் கூடாது என்று பல்கலைக் கழக சிண்டிகேட் எப்போது தீர்மானம் நிறைவேற்றியது? இதை நாங்கள் ஒத்துக் கொள்ள முடியாது. சென்னை பல்கலைக் கழகம் என்ற பெயரை மாற்றக் கூடாது. தமிழ் பெயரை ஏன் மாற்றுகிறீர்கள்? தமிழ் உணர்வு உங்களுக்கு இல்லையா? தமிழுக்காக உயிர்த் தியாகம் செய்தார் சங்கரலிங்க நாடார். அவரைப் போல 100 சங்கரலிங்க நாடார் உயிரை விட்டால்கூட உங்களுக்கு தமிழ் உணர்வு வராதா?

முதல் அமைச்சர் ஜெயலலிதா :- தமிழ் உணர்வைப் பற்றி பேசுகிறவர்களுக்கு "சன் டி.வி." பெயரை மாற்ற தமிழ் உணர்வு வரவே வராதா?

துரைமுருகன் :- நீங்கள் கூட "போயஸ் கார்டன்" என்றுதான் பெயர் வைத்திருக்கிறீர்கள்.....

சபாநாயகர் காளிமுத்து :- அந்தப் பெயரை அவர் வைக்கவில்லை.

அமைச்சர் பொன்னையன் :- மெட்ராஸ் என்று பெயர் இருப்பதை எல்லாம் சென்னை என்று மாற்றம் செய்ய 1996ம் ஆண்டு சட்டம் போடப்பட்டது. ஆனால் மதராஸ் பல்கலைக் கழகம் என்ற பெயர் மாற்றப்படவில்லை. நீங்கள் ஆட்சியில் இருந்த போதும் அப்படியே வைத்திருந்தீர்கள். அதே பெயர் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்று பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

துரைமுருகன் :- சென்னை பல்கலைக் கழகம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்று நீங்கள் தாக்கல் செய்துள்ள சட்ட முன் வடிவில் கூறப்பட்டுள்ளது. பிறகு பெயர் மாற்றப்பட வில்லை என்கிறீர்கள். இது வாழைப்பழம் கதையாக இருக்கிறது. "அது தான் இது" என்கிறீர்கள்.

கல்வி அமைச்சர் :- உறுப்பினர் வாதத் திறமையால் பிரச்சினையை திசை திருப்புகிறார். மெட்ராஸ் என்று இருக்கும் பெயரையெல்லாம் சென்னை என்று

மாற்ற வேண்டும் என்று சட்டத் துறை கருத்து தெரிவித்துள்ளது. அதனால் மதராஸ் பல்கலைக் கழகம் என்ற பெயரை மாற்றாமல் நீடித்துத் தர வேண்டும் என்று பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு தீர்மானம் போட்டு அரசுக்கு அனுப்பியுள்ளது.

முதலமைச்சர் ஜெயலலிதா : எங்கெல்லாம் 'மெட்ராஸ்' என்ற பெயர் இருக்கிறதோ அதையெல்லாம் மாற்ற வேண்டும் என்று 1996இல் சட்டம் வந்து விட்டது. ஆனால் மதராஸ் பல்கலைக் கழகம் பெயர் மாற்றம் செய்யப்படவில்லை. அவர்கள் அதே பெயரில் தொடர்ந்து இயங்க அனுமதி கேட்டிருக்கிறார்கள். இதற்காக 2002ஆம் ஆண்டு சிண்டிகேட் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

துரைமுருகன் :- மெட்ராஸ் என்ற பெயரை மாற்ற வேண்டும் என்று 1996ஆம் ஆண்டு சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் 2002ஆம் ஆண்டுதான் சிண்டி கேட் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இந்த இடைப்பட்ட காலத்தில் பல்கலைக் கழகம் என்ன பெயரில் செயல்பட்டது?

முதல் அமைச்சர் ஜெயலலிதா :- 1996 முதல் 2001 வரை தி.மு.க. ஆட்சிதான் நடந்தது. அப்போதும் "யுனிவர்சிட்டி ஆப் மெட்ராஸ்" என்ற பெயரில்தான் இயங்கியது. அப்போது பெயரை மாற்ற பதவியில் இருந்த ஆட்சி தவறிவிட்டது. 5 ஆண்டுகள் கோட்டை விட்டு விட்டீர்கள்.

எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் (காங்கிரஸ்):தமிழில் சென்னை பல்கலைக் கழகம் என்று அழைக்கப்பட்டு வருகிறது. இந்தப் பெயரை மாற்றி விட்டு மதராஸ் பல்கலைக் கழகம் என்று அழைக்கக் கூடாது.

ஜி.கே. மணி (பா.ம.க.) :- "மெட்ராஸ்" என்று பெயர் இருப்பதை எல்லாம் சென்னை என்று மாற்ற வேண்டும். 1996ஆம் ஆண்டு சட்டம் கொண்டு வரப்பட்டுவிட்டது. ஆனால் இதை செய்யாமல் பல்கலைக் கழகம் தூங்கிக்

கொண்டிருந்ததா? சிண்டிகேட் என்ன செய்து கொண்டிருந்தது? மாநில மொழிக்கு ஏற்ப பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

சட்ட அமைச்சர் :- ஒரு வரலாற்று உண்மையை இப்போது இங்கு தெரிவிக்கிறேன். மதராஸ் என்பது ஆங்கில சொல் அல்ல. சென்னை முன்பு மீனவ குப்பமாகத்தான் இருந்தது. அப்போது மீனவ குப்பத் துத் தலைவராக "மதரேசன்" என்பவர் இருந்தார். அவர் பெயர் திரிந்துதான் "மதராஸ்" என்று ஆகிவிட்டது. இது சென்னை வரலாற்றில் கூறப்பட்டுள்ளது.

ஆற்காடு வீராசாமி :- சட்டமன்ற நடவடிக்கை குறிப்பில் கூட "சென்னைப் பல்கலைக் கழகம்" என்றே உள்ளது.

முதல் அமைச்சர் ஜெயலலிதா :- சட்டமன்ற நடவடிக்கை குறிப்பை எல்லாம் ஆதாரமாக எடுத்துக் கொள்ள முடியாது. மெட்ராஸ் என்ற பெயரை மாற்ற 1996ல் சட்டம் கொண்டு வரப்பட்டாலும் "யுனிவர் சிட்டி ஆப் மெட்ராஸ்" பெயர் மாற்றம் செய்யப்படவில்லை. அவர்கள் தங்கள் கடிதப் போக்குவரத்திலும் "யுனிவர்சிட்டி ஆப் மெட்ராஸ்" என்ற பெயரையே பயன்படுத்துகிறார்கள்.

துரைமுருகன் :- அவர்கள் சென்னை பல்கலைக் கழகம் என்றே போர்டு வைத்துள்ளனர்.

முதல் அமைச்சர் ஜெயலலிதா :- ஆங்கிலேயர்கள் வருவதற்கு முன்பு சென்னை மீனவர் குப்பமாக இருந்தது. மீனவர் குப்பத் தலைவராக மதரேசன் இருந்தார். காலப் போக்கில் அவர் பெயர் மாறி மெட்ராஸ் என்று ஆகி விட்டது. அதனால் மெட்ராஸ் என்ற பெயர் இருப்பது தவறு அல்ல.

மாநிலத்துக்கு தமிழ்நாடு என்ற பெயரும், மாநகருக்கு சென்னை என்ற பெயரும் உள்ளது. பல்கலைக் கழகத் துக்கு மீனவர் தலைவர் பெயர் உள்ளது. மதராஸ் கெட்ட சொல் அல்ல. அதை ஏன் மாற்ற வேண்டும்?

(தொடர்ந்து தி.மு.க. உறுப்பினர் பொன்முடி எழுந்து நின்று பேச முயன்றார். அவருக்கு சபாநாயகர் அனுமதி

கொடுக்கவில்லை. ஆனால் அவர் எழுந்து நின்று பேசிக் கொண்டே இருந்தார். அவரை எதிர்த்து அ.தி.மு.க. உறுப்பினர்கள் சத்தம் போட்டனர். இதனால் சபையில் கூச்சலும் குழப்பமுமாக இருந்தது). இந்த மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து தி.மு.க., காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு, இந்தியக் கம்யூனிஸ்டு, பாரதீய ஜனதா கட்சி உறுப்பினர்கள் வெளி நடப்பு செய்தனர்.

குரல் ஓட்டெடுப்பு மூலம் இந்த மசோதா நிறைவேறியது."

★

உடன்பிறப்பே, மெட்ராஸ் ஸ்டேட் என்றும், சென்னை ராஜ்யம் என்றும் நமது மண்ணுக்கு இருந்த பெயரை அறிஞர் அண்ணா அவர்கள் முதல் அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர் "தமிழ்நாடு" என்று சட்டப் பூர்வமாக ஆக்கியதும் -

அண்ணாவின் மறைவுக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்புக்கு வந்த நான்; தமிழகத் தலைநகருக்கு "மெட்ராஸ்" என்றிருந்த பெயரை அதன் பழைய பெயரான "சென்னை" என்றே அழைக்க வேண்டுமென சட்டமியற்றி அறிவித்ததும் - நாடறிந்த உண்மை மட்டுமல்ல; நல்ல தமிழர்களை உவகையில் ஆழ்த்திய செய்திகளுமாகும்.

மதராஸ்; சென்னையென்று ஆக்கப்பட்டது போலவே பம்பாய், மும்பை என்றும்; கல்கத்தா, கொல்கட்டா என்றும் ஆக்கப்பட்டிருப்பதை அனைவரும் அறிவோம்.

"சென்னைப் பல்கலைக் கழகம்" என்றுதான் சட்டமன்ற நடவடிக்கை புத்தகத்திலேயே அச்சிடப்பட்டிருக்கிறது என்று நண்பர் ஆர்க்காடு வீராசாமி அவர்கள் ஆதாரம் காட்டிப் பேசியபோது; "சட்டமன்ற நடவடிக்கை குறிப்பையெல்லாம் ஆதாரமாக எடுத்துக்கொள்ள முடியாது" என்று முதல் அமைச்சர் ஜெயலலிதா; சபாநாயகர் முன்னிலையிலேயே - சபையிலேயே - தனது தீர்ப்பாக அறிவித்து விட்டிருக்கிறார்.

அவையில் ஏதாவது ஒரு வாதத்திற்கு - அல்லது ஒரு மேற்கோள் காட்டுவதற்கு ஆதாரம் காட்ட வேண்டுமென்றால் - அது சட்டமன்ற நடவடிக்கை புத்தகத்திலேயே இடம்

பெற்றுள்ளதைச் சுட்டிக் காட்டுவதுதான் நடைமுறை - அதற்கும் இப்போது "தடைமுறை" வந்து விட்டது!

தாயின் பெயரில் முதல் எழுத்தைத்தான் இனிமேல் "இனிஷியலாக" போட்டுக் கொள்ள வேண்டுமென்று அவையில் அறிவித்துவிட்டு; அப்படி அறிவித்த முதலமைச்சர் "ஜெ. ஜெயலலிதா" என்று தந்தையின் பெயரின் (ஜெயராமன்) முதல் எழுத்தை இனிஷியலாகப் போட்டுக் கொள்ளலாமா என்று கேட்டால்கூட "முதலமைச்சர் அவையில் சொன்னதெல்லாம் ஆதாரம் ஆகாது...." என்பாரோ?

அப்படியானால் அவர் அவையில் அடுக்கடுக்காக தினந்தோறும் படித்த 110வது எண் அறிக்கைகளின் கதியும் இது தானோ? இப்படியெல்லாம் கேட்கத் தோன்றுமல்லவா?

"ஆங்கிலேயருக்கு முன்பு, சென்னை மீனவர் குப்பமாக இருந்தது. அதில் மதரேசன் என்பவர் தலைவராக இருந்தார் - காலப் போக்கில் அவர் பெயர்தான் "மெட்ராஸ்" என்றாகி விட்டது. அதனால் மெட்ராஸ் என்று.

பெயர் இருப்பது தவறல்ல உடன்பிறப்பே; இவ்வாறு முதலமைச்சர் சொல்லியுள்ள இந்தக் காரணங்களையெல்லாம் சொல்லி பல்கலைக் கழக சிண்டிகேட்; 'சென்னைப் பல் கலைக் கழகம்' என்ற தமிழ்ப் பெயரை மாற்ற வேண்டுமென்று வலியுறுத்தவில்லை. முதலமைச்சர்தான் மீனவர் தலைவர் பெயர் என்று கூறி புதிய வரலாறு உருவாக்குகிறார். சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பெயரால் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அமைத்துள்ள நம்மை - அவரது சிலைகளை தமிழகத்தில் பல பகுதிகளில் திறந்து வைத்த நம்மை - திசை திருப்பப் பார்க்கிறார்கள்.

மீனவர் தலைவர் ஒருவரை 'தாதா' முத்திரையிட்டு என்கவுண்ட்டரில் சுட்டுக் கொன்று விட்டு - மீனவர் குப்பத்தையே அகற்றி விட்டு, அங்கே தலைமைச் செயலகம் கட்ட முனைந்து; அதிலே தோற்றவர்தான் இப்படியொரு புதிய தொடர் கதை எழுதப் பார்க்கிறார்.

"சென்னைப் பல்கலைக் கழகம்" என்ற தமிழ்ப் பெயரை அகற்றாதீர்கள் என்று தம்பி துரைமுருகன் உணர்ச்சி வயப்பட்டு கோரிக்கை வைத்தால்; "சன் டி.வி." மீது பாய்கிறார்.

சன் டி.வி. வரலாறு "ஜெயா டி.வி."க்காரருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

முதலில் முரசொலி மாறனின் மூத்த மகன் கலாநிதி மாறன் தொடங்கியது; உள்ளூர் அளவில் "பூமாலை" வீடியோ தான்!

அதன் வளர்ச்சியாகத்தான் அந்த "பூமாலை" தொலைக்காட்சியாக உருவெடுத்தது;

அதைத் தொடர்ந்து தமிழ்நாடு முழுதும் காட்டப்படுவதற்காக "தமிழ் மாலை" என்று பெயர் பூண்டது.

இப்போதும் அந்தப் பெயர் இணைந்தே இருக்கிறது.

அந்தத் தொலைக்காட்சி அனைத்து நாடுகளிலும் காட்டப்படுகிற அளவுக்கு அமெரிக்கா, ஆப்பிரிக்கா என்று அனைத்து நாடுகளிலும் வளர்ந்த நிலையில்தான் - ஆங்கிலப் பெயரும் தேவைப்படுமென்று; "சன் டி.வி.'" என்றும் ஆகியது. அதற்காக "தமிழ் மாலை" என்பதையோ, "வணக்கம் தமிழகம்" என்பதையோ அகற்றிவிட வில்லை.

வேதனையான வேடிக்கை என்னவென்றால் - சட்டப் பேரவையில் தி.மு.க., காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, மார்க்சிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, பாரதிய ஜனதா ஆகிய அனைத்து எதிர்க்கட்சிகளும்; எதிர்ப்பு தெரிவித்தும் - வெளி நடப்பு செய்துங்கூட; அவற்றைப் பொருட்படுத்தாமல் ஆய்வுக்குழு (Select Committee) வுக்கும் விடாமல்; ஒரு நாள் தாமதித்து விவாதிக்கலாமே என்று வேண்டியதையும் கேட்காமல் அவசர அவசரமாக "சென்னைப் பல்கலைக் கழகம்" என்ற தமிழ்ப் பெயரை அகற்றி விட்டு;

நமக்குத் தமிழ் உணர்வு
கற்பிக்க வருகிறார்களே; அது
வேடிக்கை மட்டுமல்ல;
"தமிழ்நாடு" என்று அண்ணா
சூட்டிய பெயரையே மாற்றி
விடுவார்களோ என்ற வேதனையுங்கூட
ஏற்படத்தான் செய்கிறது!

ஏன் செய்யமாட்டார்களா என்ன? அண்ணா வைத்த "கண்ணகி" சிலைக்கு நேர்ந்த கதி தொடராது என்பதற்கு என்ன உறுதி?

பொதுவாக இது போன்ற முக்கியமான தீர்மானங்கள் அவையிலே கொண்டு வந்தால், அதைப்பற்றி நன்கு ஆராய்ந்து பேச வேண்டும் என்பதற்காகவே நேரம் கொடுப்பது வழக்கம். தீர்மானம் என்றைக்கு அறிமுகம் செய்யப்படுகிறதோ அன்றைக்கே அதனை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள மாட்டார்கள். ஆனால் அதற்குக் கூட வாய்ப்பு தராமல் - அந்த ஜனநாயக முறைக்குக் கூட மதிப்பளிக்காமல் - 22.9.2005 அன்றுதான் அந்தத் தீர்மானம் அறிமுகப்படுத்தப்பட்டது. உடனடியாக அன்றைய தினமே அதன் மீது விவாதம் நடத்தப் போவதாக தன்னிச்சையாக அறிவித்தார்கள்.

மேலும் இது போன்ற முக்கியமான தீர்மானங்களை அனைத்து எதிர்க்கட்சிகளும் எதிர்க்கின்ற போது, அரசாங்கம் அதனைப் பொறுக்குக் குழு (Select Committee) விற்கு விட்டு, அங்கே என்ன முடிவெடுக்கப்படுகிறது என்று பார்க்க வேண்டும். ஆனால் இந்த ஆட்சி அதனையும் ஏற்றுக் கொள்ள வில்லை. மாறாக அவசர அவசரமாக தீர்மானத்தை நிறைவேற்றி விட்டு, மறுநாள்தான் அதன் விளைவுகளை சீர்தூக்கிப் பார்த்து விட்டு முதலில் எடுத்த முடிவினைத் திரும்பப் பெறுவதாக பேரவையிலே செய்துள்ள அறிவிப்பு நான் இந்தக் கடிதத்தை எழுதிக் கொண்டிருக்கும்போது வந்தது.

உடன்பிறப்பே,
இப்போது புரிகிறதா?

"பிணக்கறுக்கும் மூத்தோரை இல்லா
அவைக்களன்"

என்ற 'திரிகடுகம்' பாடலுக்குத் தெளிவான விளக்கம்?

அன்புள்ள,

மு.க.

24-09-2005

3177. சரமாரியான 'அறிவிப்பு'களும் 'சவரி' முடிகளும்!

உடன்பிறப்பே,

நாலாண்டுக் காலத்திற்கு மேலாக நாள்தோறும் ஒரு கோடித் தேள் சேர்ந்து கொட்டியது போலவும் - கூர் வாள் கொண்டு குத்தியது போலவும் - நாட்டு மக்களைக் கொடுமைப்படுத்திய அ.தி.மு.க. ஆட்சியினர், பொதுத் தேர்தல் நெருங்குகிறது என்றவுடன், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக நாவின் நுனியில் தேன் தடவும் தந்திரச் செயலாக - திட்டங்களை அறிவித்தனர். அறிக்கைகள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டு; சொர்க்கலோகத்தையே கொண்டுவந்து தமிழ்நாட்டில் வைத்து தேசத்தின் அமைப்பையே மாற்றுவது போல இப்போது வேடங்கட்டி ஆடிக் கொண்டிருக்கின்றனர்.

அந்த அறிக்கைகளைத் தொடர்ந்து வந்துள்ள துணை மதிப்பீடு அறிக்கையையும் - அதன் தொடர்பான விரிவான "துணை மதிப்பீடு" என்ற புத்தகத்தையும் படித்துப் பார்த்தால்தான்

"முள்ளு முனையிலே மூன்று குளம் -
அதில் இரண்டு குளம் பாழ்
ஒரு குளம் தண்ணீரே இல்லை"

என்ற பழங்காலத்து நகைச்சுவையை நம்மாலே அனுபவிக்க முடிகிறது.

இதோ, அரசினரே அளித்துள்ள துணை மதிப்பீடு அறிக்கை ஏடுகளை ஆதாரமாகக் கொண்டு இன்னமும் மூடிக் கிடக்கும் தமிழ் மக்கள் சிலரது விழிகளைத் திறக்கும் முயற்சியாக ஒரு சில புள்ளி விபரங்களை முன் வைக்கிறேன்.

ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 920 கோடி ரூபாய் செலவில் தமிழக சாலைகளை மேம்படுத்த முதல்வர் உத்தரவு என்ற செய்தி 11-7-2005

நாளிட்ட ஏடுகளில் பெரிதாக வெளிவந்தது. துணை மானிய கோரிக்கையில் அதற்காக எத்தனை கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது? இந்தப் பணிகள் எல்லாம் தொடங்கப்பட்டு விட்டதா? விரிவான துணை மதிப்பீடுகளில் பக்கம் 52இல் என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறதென்றால் -

"2005-2006ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த சாலை அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் அரசு 820 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது." (ஆனால் அனுமதித்த அளவுக்கு நிதி ஒதுக்காமல் துணை மதிப்பீட்டில் இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு தெரியுமா?) "துணை மதிப்பீடுகளில் ரூ. 2000 மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது".

2000 ரூபாயை மட்டுமே நிதியாக ஒதுக்கிவிட்டு, 820 கோடி ரூபாய்க்கு திட்டத்தை அறிவித்து அனைத்து ஏடுகளும் அதனை கொட்டை எழுத்துக்களில் விளம்பரம் செய்கின்ற அதிசயம் இங்குதான் நடக்கும்.

மேலும் அந்தக் குறிப்பில் எஞ்சிய தொகை, மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதி ஒதுக்கத்தின் மூலம் செலவிடப்படும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. மானியத்தில் ஏற்படும் மீதம் என்றால் எந்த மானியத்திற்கு ஒதுக்கிய தொகையின் மீதத்தை செலவழிக்கப் போகிறார்கள்? அந்தத் துறையின் மானியத்திற்கே இந்த அளவிற்கு 820 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்காது. ஆனால் மானியத் தொகையில் எஞ்சியத் தொகையிலிருந்து செலவழிக்கப் போவதாகக் கூறுவது ஏமாற்றுகின்ற செயல்தானே? இஃது என்ன வெல்லத்திலே பிள்ளையார் செய்து அந்த வெல்லத்திலிருந்தே கொஞ்சம் கிள்ளி, வெல்லப் பிள்ளையாருக்குப் படைக்கின்ற கதையா? இந்த ஒரு ஒதுக்கீட்டிற்கு மாத்திரம் இவ்வாறு மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து ஒதுக்குவதாக கூறவில்லை. தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் கூட இதுபோல ஒரு சில திட்டங்களுக்கு அடையாளத் தொகையாக ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் என்று ஒதுக்கப்படுவதுண்டு; ஆனால் தேர்தல் வருவதற்கு முன்பு அவசர அவசரமாக முதலமைச்சரால் அன்றாடம் அறிவிக்கப்பட்ட பல திட்டங்களுக்கு இந்த முதல் துணை மதிப்பீட்டில் தொகை ஒதுக்கப்படவில்லை என்பதுதான் புதுமை!

அதே புத்தகத்தில், அதே பக்கத்தில் மற்றொரு ஒதுக்கீட்டைப் பார்க்கலாம். தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 3ன் கீழ் இரண்டு சாலை மேம்பாலங்கள் கட்டுவது தொடர்பாக அரசு 27 கோடியே 45 லட்சம் ரூபாய் அனுமதித்துள்ளது. ஆனால் துணை மதிப்பீடுகளில் ரூ. 1000 மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறுநிதி ஒதுக்கம் செய்வதன் மூலம் செலவிடப்படுமாம்.

சென்னை பெரு நகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் புதிய திட்டங்களுக்கு அரசு 525 கோடி ரூபாய் வழங்க முடிவு செய்துள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் துணை மதிப்பீடுகளில் எத்தனை கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் தெரியுமா? ரூ.1000 மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள பத்து மாவட்டங்களில் 14 நீர்ப்பாசனத் திட்டங்களை 44.82 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்ற முதலமைச்சர் உத்தரவு என்று ஏடுகளில் பெரிய செய்தி வெளிவந்தது. நபார்டு வங்கி உதவியுடன் இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்றும் சொல்லப்பட்டது. அதற்கான பணிகள் தொடங்கப்பட்டுவிட்டனவா? ஏனென்றால் இந்த அறிவிப்பு வந்தபோதே 'விரைவில் செய்து முடித்திட முதலமைச்சர் உத்தரவிட்டதாகக் கூறப்பட்டிருந்தது. ஆனால் இந்தத் துணை மதிப்பீட்டில் அதற்கான தொகை எதுவும் அந்த 'விரைவை' முன் வைத்து ஒதுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கான 416 விடுதிகளை 131 கோடி ரூபாய்ச் செலவில் கட்டுவதற்கு முதலமைச்சர் உத்தரவு என்பது 16-7-2005 அன்று ஏடுகளில் வந்த தலைப்புச் செய்தி. துணை மதிப்பீடுகளில் இதற்கு எந்த நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டதாக தெரியவில்லை. ஒருவேளை நிதி நிலை அறிக்கையில் செய்த அறிவிப்பின் தொடர்ச்சியாக ஆணை பிறப்பிக்கப்பட்டு, அதை ஏதோ இப்போது புதிய அறிவிப்பு போல வெளியிட்டார்கள் போலும்! ஜெயலலிதா அரசு பொறுப்பேற்ற 2001ஆம் ஆண்டு முதல் 2004-2005 வரை பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காக இவர்கள் கட்டிய விடுதிகளே 103.95 கோடி ரூபாய் செலவில் 345 விடுதிகள்தான். ஆனால் இந்த ஆறு மாத காலத்தில் மட்டும் 416 விடுதிகளை 131 கோடி ரூபாய் செலவில் கட்டப் போவதாக

கூறுவது எத்தகைய அகடவிகடம்? ஆனால் கடந்த ஆண்டு ஆளுநர் உரைக்குப் பதில் அளிக்கும் போது முதலமைச்சர் தனது பதில் உரையிலே வாடகை கட்டிடங்களில் இயங்கும் அனைத்து விடுதிகளுக்கும் இந்த ஆண்டு சொந்தக் கட்டிடங்கள் கட்டப்படும் என்று அறிவித்து ஓராண்டு முடியப் போகிறது. ஆம் ஆண்டு முடியப் போகிறது. ஆனால் ஒரு கட்டிடம்கூட கட்டப்பட்டதாக செய்தி இல்லை. இந்தத் துணை மதிப்பீடுகளிலும் இதற்கான தொகை ஒதுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாத அய்யர் வாழ்ந்த உத்தமதானபுரம் இல்லத்தை 1.37 லட்சம் ரூபாய்க்கு வாங்கி, அங்கே 23 லட்சம் ரூபாய் செலவில் நினைவு இல்லம் எழுப்ப முதலமைச்சர் உத்தரவு என்று 18-7-2005 தேதிய ஏடுகளில் செய்தி விளம்பரப்படுத்தப்பட்டது. கடந்த 94ஆம் ஆண்டில் ஒருமுறை இதே ஜெயலலிதா, இதே தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாத அய்யர் வாழ்ந்த இல்லத்தை நாட்டுடைமையாக்கி 11.50 லட்சம் ரூபாய் செலவில் நினைவு இல்லமாக்க ஒருமுறை ஆணையிட்டு ஏடுகளில் அப்போதே பெரிதாக வெளி வந்தது. அதே பணிக்கு இந்த ஆண்டு ஒருமுறை மீண்டும் அறிவிப்பு செய்துள்ளார். தற்போதாவது இதற்கான நிதி ஒதுக்கப்பட்டதா? துணை மதிப்பீடு அறிக்கையிலே அதைப் பற்றி எந்தக் குறிப்பும் இல்லையே?

திருவள்ளூர் மாவட்டத்தில் 261 கோடி ரூபாய் திட்டங்களுக்கான பணிகளுக்கு முதல்வர் 18-7-2005 அன்று அடிக்கல் நாட்டினார். அதற்கான நிதி ஒதுக்கம் எவ்வளவு? எப்போது செய்யப்பட்டது?

மாநில, மாவட்ட, சாலை மேம்பாட்டிற்காக 920 கோடி ரூபாய் என்ற அறிவிப்பினைத் தொடர்ந்து அதற்கு அடுத்த சில நாட்களிலேயே அதாவது 24-7-2005 அன்று மற்றொரு அறிவிப்பு அதன்படி 401 கோடி ரூபாய் செலவில் நகராட்சி பகுதிகளில் உள்ள சாலைகளை மேம்படுத்த முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவு என்று அனைத்து ஏடுகளிலும் கொட்டை எழுத்துச் செய்தி வெளிவந்தது. அதற்கு துணை மதிப்பீட்டில் எவ்வளவு ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் தெரியுமா? பேரவையில் அமைச்சர் படித்த அறிக்கையில் “400.80 கோடி ரூபாய் மொத்தச் செலவில் மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் உள்ள

சாலைகளை வலுப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.” - ஆமாம் முடிவு செய்திருப்பதுதான் 400 கோடி ரூபாய். ஆனால் துணை மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டது வெறும் 75 கோடி ரூபாய்தான். அறிவித்தபோதே இத்திட்டத்திற்காக இந்த ஆண்டு 75 கோடி ரூபாய்தான் ஒதுக்கப் போகிறோம் என்று கூறியிருக்கலாமல்லவா? பெரிய அளவில் 100 கோடி ரூபாயில் திட்டத்தை இப்போதே நிறைவேற்றப் போவதைப் போல அறிவித்து விட்டு, 75 கோடி ரூபாய் மட்டுமே இந்த ஆண்டு ஒதுக்கியிருக்கிறார்கள், ஆனால் புத்திசாலித்தனமாக முதலமைச்சர் அறிவித்த 401 கோடி ரூபாய் என்பதைச் சுட்டிக் காட்டாமலே 75 கோடி ரூபாய்க்கான திட்டம் என்பதைப் போல அறிவித்து, அதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ரூ. 19.21 கோடி ரூபாய் செலவில் மேலும் 150 சார் பதிவகங்களை கணினி மயமாக்க முதலமைச்சர் உத்தரவு (7-8-2005) துணை மதிப்பீட்டில் பத்திரப் பதிவுத் துறைக்கே ஒதுக்கப்பட்டிருப்பது 50 லட்சம் ரூபாய்தான். 19.21 கோடி ரூபாய் எந்தத் தலைப்பிலே ஒதுக்கப்பட்டுள்ளது? ஒருவேளை தகவல் தொழில் நுட்பத்துறை தலைப்பிலே இந்த நிதி ஒதுக்கப் பட்டுள்ளதோ என்று பார்த்தால் அந்தத் துறைக்கு ஒதுக்கப் பட்டிருப்பது வெறும் 85 லட்சம் ரூபாய்தான். ஆனால் 19 கோடி ரூபாய் செலவில் முதல்வர் ஆணையிட்டுள்ளேன் என்று அறிவித்துள்ளார். எந்த தலைப்பின் கீழ் என்பதை அமைச்சர் பதில் உரையில் விளக்கினால் தெரிந்து கொள்ளலாம்.

கால்நடைகளைப் பேணி காக்க 59.79 கோடி ரூபாய் செலவில் திட்டங்களை நிறைவேற்றப் போவதாக கடந்த 22-3-2005 அன்று முதலமைச்சர் அறிவித்திருப்பதாக ஏடுகளில் செய்தி வந்தது. இது நபார்டு வங்கி உதவியளிக்கும் திட்டம். ஆனால் 7 கோடி ரூபாய் மட்டுந்தான் துணை மானியக் கோரிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் 59 கோடி ரூபாய்க்கான திட்டம் என்று விளம்பரம் செய்யப்பட்டது.

ரூ. 151 கோடி செலவில் 540 முறைசாரா சிறு பாசன ஏரிகளை தூர் வாரி புனரமைக்க முதலமைச்சர் ஆணை என்று 24-5-2005 ஏடுகளில் செய்தி வந்தது. அமைச்சர் படித்த அறிக்கையிலே இதைப் பற்றி எதுவும் கூறப்படவில்லை . விரிவான துணை மதிப்பீடுகள் என்ற புத்தகத்தில் 68 கோடி ரூபாய் இத்திட்டத்திற்கான அனுமதி

அளித்திருப்பதாகக் கூறிவிட்டு ஆனால் அடையாள ஒதுக்கீடாக ஆயிரம் ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசு அறிவித்த பல்வேறு திட்டங்களுக்கு மக்களை திசை திருப்புகின்ற வகையில் அதிகத் தொகையை அனுமதித்து விட்டதாகக் கூறிவிட்டு, ஆனால் துணை மானிய மதிப்பீடுகளில் அடையாளத் தொகையை மட்டும் ஒதுக்கியிருக்கிறார்கள். இவ்வாறு மேலும் பல்வேறு திட்டங்களுக்கு அனுமதிக்கப்பட்ட தொகையும் துணை மதிப்பீட்டில் பங்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை பற்றிய ஒரு சில விவரங்கள் வருமாறு:

புதிய நீதி மன்றங்களுக்கு சட்டப் புத்தகங்கள் வாங்கிட 1 கோடி ரூபாய் அனுமதிப்பதாக அறிவித்து விட்டு, துணை மதிப்பீட்டில் ஒதுக்கிய தொகை 1000 ரூபாய் மட்டுமே!

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க அனுமதிக்கப்பட்ட தொகை 12,53,000. ஆனால் அதற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை 2000 ரூபாய் மட்டுமே!

காஞ்சிபுரம் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவ மனைக்கு கருவிகள் வாங்க 34,14,000 ரூபாய் அனுமதித்து விட்டு, ஒதுக்கியிருப்பது 1000 ரூபாய் மட்டுமே!

மாணவர்கள் கண் பரிசோதனை செய்யும் திட்டத் திற்காக அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.16.54,000. ஆனால் ஒதுக்கப்பட்டுள்ள நிதி 1000 ரூபாய் மட்டுமே!

தொடக்கப் பள்ளிகளில் உள்ள இடைநிலை ஆசிரியர் பதவிகளை தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர் பதவிகளாக நிலை உயர்த்த அரசு அனுமதியளித்த போதிலும் துணை மதிப்பீட்டில் ஆயிரம் ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் சிறப்பு கிராம ஊராட்சி பகுதிகளில் நபார்டு உதவியுடன் ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ் மேற்கொள்வதற்காக துணை மதிப்பீட்டில் 2000 ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. எத்தனை கோடி ரூபாய் இத்திட்டத்திற்காக அனுமதிக்கப்பட்டது என்ற விவரம்கூடத் தரப்படவில்லை.

முதலமைச்சர் ஜெயலலிதா பதவிப் பொறுப்புக்கு வந்த நாள் முதல் தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முதல் இடத்திற்கு கொண்டு வரப் போவதாக திரும்பத் திரும்ப இந்த நான்கரை ஆண்டுகளாக சொல்லி வருகிறார்.

அவர் எந்த அளவிற்கு முதல் இடத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார் என்பதற்கு எடுத்துக் காட்டாக, தமிழக அரசின் சார்பில் அச்சடிக்கப்பட்ட 'Statistical Hand Book of Tamil Nadu-2004' என்ற புத்தகத்தில் வெளிவந்துள்ள சில விவரங்களை இங்கே தருகின்றேன். இதற்கான பதிலை முதலமைச்சர் அளிப்பாரென எதிர்பார்க்கிறேன்.

STATISTICAL HAND BOOK OF TAMIL NADU - 2004.

தமிழக அரசே தயாரித்துள்ள புத்தகத்தில் உள்ள சில முக்கிய விவரங்கள்.

முக்கியமான பயிர்கள் எத்தனை ஹெக்டோர்களில் சாகுபடி செய்யப்பட்டன என்பதற்கான விவரங்கள்.

பயிர்	1999-2000 ஹெக்டேர் (தி.மு.க. ஆட்சி)	2000-2001 ஹெக்டேர்	2002-2003 ஹெக்டேர் (அ.தி.மு.க. ஆட்சி)
நெல்	21,64,000	20,80,000	15,16,000
கம்பு	1,58,000	1,29,000	1,02,000
ராகி	1,23,000	1,27,000	1,04,000
நிலக் கடலை	7,59,000	6,99,000	5,02,000
எள்	1,12,000	1,04,000	64,000
கரும்பு	3,16,000	3,15,000	2,61,000
பருத்தி	1,78,000	1,70,000	76,000

முக்கியமான உணவு தானியங்கள் எந்த அளவிற்கு உற்பத்தி செய்யப்பட்டன?

பெயர்	2000-2001 (தி.மு.க. ஆட்சி)	2002-2003 (அ.தி.மு.க. ஆட்சி)
நெல்	73,66,000 டன்	35,77,000 டன்
சோளம்	3,06,000 டன்	2,11,000 டன்

கம்பு	1,70,000 டன்	89,000 டன்
ராகி	2,59,000 டன்	1,40,000 டன்
நிலக் கடலை	13,58,000 டன்	7,17,000 டன்
எள்	65,000 டன்	28,000 டன்
மொத்தம் உணவு தானியங்கள்	83,04,000 டன்	42,60,000 டன்

வேளாண்மைத் துறையைச் சார்ந்த தமிழக அரசின் 'அக்ரோபெட்' நிறுவனத்தின் வரவு செலவினை எடுத்துக் கொண்டால் தி.மு. கழக ஆட்சியில் 2000-2001இல் 23 கோடியே 18 லட்சம் ரூபாய் என்பதற்கு மாறாக அ.தி.மு.க. ஆட்சியில் 2003-2004இல் வெறும் 99 லட்சம் ரூபாய் மட்டுமே!

தமிழக அரசின் தொழில் முதலீட்டுக் கழகத்தின் சார்பில் தி.மு. கழக ஆட்சியில் 2000 2001இல் வழங்கப்பட்ட கடன் தொகை 200 கோடி ரூபாய் 2003-2004இல் அ.தி.மு.க. ஆட்சியில் வழங்கப்பட்ட கடன் தொகை 140 கோடி ரூபாய்.

விவசாயமல்லாத துறைகளுக்கும் சிறு தொழில்களுக்கும் கூட்டுறவு வங்கிகள் 2000-2001இல் வழங்கிய கடன் தொகை 85 கோடி ரூபாய். 2003-2004இல் 59 கோடி ரூபாய்.

நலிந்த பிரிவினருக்கு குறுகிய கால கடன்கள் என்று 2001-2002இல் 639 கோடி ரூபாய் வழங்கியதற்கு மாறாக 2003-2004இல் 330 கோடி ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

பொது மக்களுக்கு அத்தியாவசியத் தேவையான இத்தகைய முக்கிய திட்டங்களுக்கு தொகையை அறிவிக்காத நிலையில் - வரக்கூடிய தேர்தலை மனதிலே கொண்டு தி.மு. கழக ஆட்சியில் 1989ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு நாளும் வளர்ந்து வருகிற மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஏராளமான நிதி இந்த துணை மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக புதிய சுய உதவிக் குழுக்களுக்கான சுழல் நிதிக்காக பத்து கோடி ரூபாய் இந்த அரசினால் துணை மதிப்பீட்டில் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர சென்னையில் சுய உதவிக் குழு மாநாடு மற்றும் கண்காட்சிக்காக மட்டும் அரசு 84 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது.

புதிய சுய உதவிக் குழுக்களை அமைக்கும் செலவிற்காக என்று கூடுதல் நிதி ஒதுக்கமாக ஒரு கோடியே 12 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் துணை மதிப்பீடுகளில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள சுய உதவிக் குழுக்களுக்கு பயிற்சி மற்றும் இதர செலவினத்திற்காக துணை மதிப்பீடுகளில் 23 கோடியே 31 லட்சத்து 91 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

சுய உதவிக் குழுக்கள் என்ற பெயரை மாற்றி அ.தி.மு.க.வின் தேர்தலுக்கான சுய நல உதவிக் குழுக்கள் என்றே பெயர் சூட்டிக் கொள்ளலாம்.

உடன்பிறப்பே, ஒய்யாரக் கொண்டையாம் தாழம் பூவாம்; உள்ளே இருக்குமாம் ஈரும் பேனும் என்று பழமொழியொன்றுண்டு; அந்தத் தாழம்பூக் கொண்டைக்குள்ளாவது ஈரும் பேனும் இருக்குமென்று பழமொழி பகருகிறது; ஆனால் இந்தக் கொண்டையை உற்றுக் கவனித்தால் சந்தையில் விற்கும் "சவரி" முடிகளைத் தவிர வேறொன்றுமில்லை - அவற்றையும் எடுத்துவிட்டால்; வெறும் வழுக்கைத் தலை - மொட்டைத் தலை - சொட்டைத்தலை என்பது போலத்தான்; அம்மையார் வெளியிட்ட அண்மைக்கால அறிவிப்புகள் அனைத்தும்; சந்தேகமின்றி 'சவரி' முடிகளேதான் என்று பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

குதிகாலைத் தொடும் கூந்தலழகி என்று புகழப்பட்ட தமிழ்க் குமரி; இன்று 'சவரி' முடி தரித்தல்லவோ கொண்டை போட்டுக் கொண்டு கொலுவுக்கு வரப்பார்க்கிறார், "முதல் நிலை மாநிலம் நான் தான்" என்று கூறி; அழகுப் போட்டியில் வென்றிட அவரால் முடியுமா?

தலை முடி வளர்ந்து தலையும் முகமும் தனிப் பொலிவு பெற; தகுதி வாய்ந்த மருத்துவ முறையும் தரமான மூலிகைத் தைலங்களுமன்றோ தேவை!

அதுதானே இன்றைய தமிழகத்தின் நிலை!

அன்புள்ள,

மு.க.

26-09-2005

3178. இனியொரு முறை ஏமாறலாமா; தமிழர்களே!

உடன்பிறப்பே,

காலையிலே தடையிலாச் சான்றிதழ் (என்.ஓ.சி) கொடுக்க முடியாது என்று கண்டிப்பு - உடனே கேட்க வேண்டிய முறையிலே கேட்டவுடன்; 24 மணி நேரத்திலே “டால்மியா” கையிலே தடையிலாச் சான்றிதழ் தஞ்சமடையும் தமாஷா மட்டுமல்ல: வெட்டப்பட்ட மின்சார இணைப்பும் வெகு உபசாரத்தோடு திரும்பத் தரப்படுகிறது - அதன் தொடர் விளைவாக புதிய கட்டிடம் எழுப்பிய இருபது தொழிலாளிகள் இடிந்து விழுந்த கட்டிடத்துக்குள் பிணமாகிப் போகிறார்கள் - இவையெல்லாமே இந்த ராஜ்யத்தில் மூன்று மாதங்களுக்கு முன்னால் திருச்சி மாவட்டத்தில் நடைபெற்ற திகிலூட்டும் நிகழ்ச்சிகள். வேகமும் - சோகமும் நிறைந்த இந்த நாடகத்தில் மகாராணியாக வேடமேற்ற மகா புண்யவதிதான்; “சராசரி மக்களின் வாழ்வாதாரங்களைக் கொள்ளையடித்து தங்களின் சட்டைப்பைகளை நிரப்பிக் கொள்வதற்காகவோ சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம்?” என்று கேள்வியை எழுப்பி; “மக்களின் விலா எலும்புகள் மீது எழுப்பப்படும் சேது திட்டம் வெற்றி பெறாது என்றும், அதற்குத் தமிழ்நாட்டில், தனது அரசு உடந்தையாக இருக்காது என்றும் உறுதிபடத் தெரிவித்துக் கொள்வதாக” ‘ருத்திர தாண்டவ’மென எண்ணிக் கொண்டு ‘கோமாளிக் கூத்து’ நடத்திக் காட்டியிருக்கிறார்.

இதற்கிடையே சேது திட்டத்துக்கே தடை கோரி உச்ச நீதி மன்றத்தில் ஒரு வழக்கு - யார் தொடுத்தது என்று சொல்லத் தேவையில்லை - தடை கொடுக்க முடியாது என உச்ச நீதிமன்றம் சொன்னதைக் கூட “தமிழரின் தந்தி” தாராளமாக தலைப்புச் செய்தியாகக்கூட உள்பக்கத்தில் வெளியிடத் தயங்கி, நோட்டீஸ் கொடுத்த செய்தியை மட்டும் நாட்டுக்குத் தெரிவிக்க முனைந்துள்ள நாகரிகத்தின் உச்ச கட்டம் - மீனவர் பாதிக்கப்படுவர் - மீன் வளம் குறையும் - பயணத் தொலைவு கூடுமே தவிர - குறையாது - அதிகமான கப்பல்கள் போக

முடியாது - இப்படியெல்லாம் சேது சமுத்திரத் திட்டப் பணிகளுக்கு எதிராக - சண்டிராணிகள் சதிராடிக் காட்டுகின்றனர். இது பற்றி மத்திய அமைச்சர் தம்பி பாலுவைக் கேட்டால் "உலகில் உள்ள கப்பல்களில் 84 சதவீதம் கப்பல்கள் அந்தக் கால்வாய் வழியாகப் போக முடியும்" என்று உறுதியாய்ச் சொல்லுகிறார்.

ஊழல்தான் நடைபெறுமென்றும்; இது உதவாத திட்டமென்றும்; ஊழலிலே ஊறித் திளைத்து - வளர்ப்பு மகனுக்கு நூறு கோடி ரூபாயில் திருமணம் நடத்தி; சர்வலங்கார பூஷிதைகளாக மேனியெங்கும் வைர, வைடூர்யம், முத்து, பவளமென, பூட்டிக் கொண்டு மேரி அண்டனைட்டாகக் காட்சி தந்தவர், சிறுதாவூர் அரண்மனையென்ற பெயரால் சிறிய குடிசை(?) யொன்று கட்டி வாழ்பவர்; பாசாங்கு மொழி - பம்மாத்து மொழி - பாட்டாளிகளை, பாமரர்களை ஏமாற்றும் பசப்பு மொழி பயின்றுள்ளதைக் காட்டிக் கொள்ள, பல ஆண்டுக் காலத் தமிழர்களின் கனவான சேதுக் கால்வாய்த் திட்டத்தைப் பள்ளம் தோண்டிப் புதைத்தாலும் புதைப்பேன் - உள்ளம் குளிர ஏற்க மாட்டேன் என உறுமுகிறாரே இன்று; இந்த உத்தம புத்திரி; இவர் "2001 தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுத் தேர்தலுக்காக அ.தி.மு.க. சார்பில் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் சேது முத்திர திட்டம் பற்றி 83ஆம் பக்கம் தொடங்கி, 84 மேலும் 85ஆம் பக்கங்களில் குறிப்பிட்டிருப்பது என்ன?

இதோ; உடன்பிறப்பே - நீ மட்டும் படித்தா போதாது, எல்லோருக்கும் படித்துக் காட்டி எத்தர்களின் பித்தலாட்டத்தை எடுத்துக்காட்டு!

அ.தி.மு.க. 2001 தேர்தல் அறிக்கையில் சேது சமுத்திரத் திட்டம் பற்றிய வாக்குறுதி வருமாறு :

"இந்தியத் தீபகற்பத்தைச் சுற்றி இது வரை தொடர்ச்சியான கப்பல் போக்குவரத்திற்கு ஏற்ற பாதைகள் இல்லை. மேற்கிலிருந்து கடல் வழியாக கிழக்கு நோக்கி கப்பல்கள் செல்லவேண்டுமானால் இலங்கையைச் சுற்றிக் கொண்டுதான் செல்ல வேண்டியுள்ளது. இதற்குத் தீர்வாக அமைவதுதான் சேது சமுத்திரத் திட்டம். இத் திட்டத்தின்படி ராமேஸ்வரத்திற்கும், இலங்கையின் தலைமன்னார்க்கும் இடையில் உள்ள ஆடம்ஸ் பிரிட்ஜ் பகுதியில் கப்பல் போக்குவரத்திற்குத்

தடையாக உள்ள மணல் மேடுகள், பாறைகள் அகற்றி ஆழப்படுத்தி கால்வாய் அமைப்பதுதான் சேது சமுத்திரத் திட்டத்தின் தலையாய நோக்கம்.

இத்திட்டம் காலம் காலமாக ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு மேலாக பேசப்பட்டு வருகிறதே தவிர, சரியாக உருப்படியாக உருவாகவில்லை. ஆங்கிலேயர் காலத்திலிருந்து பேசத் தொடங்கி, நாடு விடுதலை பெற்ற பின் சற்று அதிகமாகப் பேசப்பட்டு, பல்வேறு நிபுணர்கள் குழுக்கள் நியமிக்கப்பட்டு, அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டு, பின் கிடப்பில் போடப்பட்டு விட்டது. இத்திட்டத்திற்கு ஒரு உந்துதலை, 1981இல் ஆட்சியில் இருந்த டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் அரசுதான் கொடுத்தது. இருப் பினும் திட்டத்தை நிறைவேற்ற வேண்டிய மத்திய அரசு, இத்திட்டத்திற்கான உரிய கவனத்தையோ முக்கியத்துவத்தையோ கொடுக்கவில்லை. தற்பொழுது ஆட்சியில் இருக்கின்ற பி.ஜெ.பி. - தி.மு.க. கூட்டணி அரசின் பிரதமர் சென்னை வந்தபோது சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று வாக்களித்தார். அதற்கு முன் ராமேஸ்வரம் வந்து சென்ற அப்போதைய பாதுகாப்புத் துறை அமைச்சரும் இதே பல்லவியைத் தான் பாடினார். ஆனால் நடந்தது என்னவென்றால், ஏற்கனவே பல முறை ஆய்வு செய்யப்பட்ட இந்தத் திட்டத்தை மீண்டும் ஆய்வு செய்யப் போகிறோம் என்றுதான் இப்போதும் சொல்லப்படுகிறதே தவிர, இத்திட்டத்திற்கென தற்போதைய பட்ஜெட்டில் ஒதுக்கீடு எதுவும் செய்யப்பட வில்லை.

சேது சமுத்திரத் திட்டத்தால் நம் நாடு மட்டும் அல்ல; தென் கிழக்கு ஆசிய நாடுகளும் கடலோரப் பகுதிகளில் அமைந்துள்ள நாடுகள் அனைத்தும் பயன் அடையும்; வாணிபமும், தொழிலும் பெருகும்; அந்நிய முதலீடு அதிகரிக்கும்; அந்நியச் செலாவணி அதிகம் கிடைக்கும்; கப்பலின் பயணத் தூரம் வெகுவாகக் குறைவதால் எரி பொருளும், பயண நேரமும் மிச்சமாகும்; ஏற்றுமதி, இறக்குமதி அதிகரிக்கும்; குறிப்பாக, இராமநாதபுரம் போன்ற மிக மிகப் பிற்பட்ட தமிழக தென் பகுதி

மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படும்; வேலை வாய்ப்பு பெருகும்; தூத்துக்குடி துறைமுகம் சர்வதேச அளவில் விரிவடையும்; சுற்றுலா வளர்ச்சி யடையும்.

இன்னபிற நன்மைகளைத் தர இருக்கும் இத்திட்டத்தின் தேவையை, முக்கியத்துவத்தை உணர்ந்து, நிதி நெருக்கடியை ஒரு சாக்காகக் கூறிக் கொண்டிருக்காமல், உலக வங்கி போன்ற சர்வதேச நிறுவனங்களுடன் மத்திய அரசு தொடர்பு கொண்டு வேண்டிய நிதியைத் தேடி இத்திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து ஒரு காலக் கெடுவுக்குள் இத்திட்டத்தை நிறைவேற்றும்படி மைய அரசை விடாது தொடர்ந்து வலியுறுத்தும்"

★

உடன்பிறப்பே, ஜெயலலிதாவின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி 1981இல் எம்.ஜி.ஆர். ஆட்சியில் சேது திட்டத்துக்கான உந்துதல் கொடுத்தது மட்டுமல்ல; சுமார் 150 ஆண்டுக்கு மேலாக எத்தனையோ தலைவர்கள், நிபுணர்கள், வல்லுநர்கள் வலியுறுத்தி; இப்போதுதான் "வாராது வந்த மாமணி யாய் வரப்பிரசாதம்" என்பார்களே; அதுபோல வந்துள்ளது - என் செய்வது; எம்.ஜி.ஆரே இனி முதல்வராக இருக்கத் தகுதியில்லை - தன்மீது பொறாமைப்படுகிறார் என்று தன் கைப்படவே அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கு கடிதம் எழுதி; அது "மக்கள் குரல்" ஏட்டிலேயே வெளிவந்த பிறகும் - மானாபிமானம் பற்றிக் கவலைப்படாத மனித ஜென்மங்கள் சில, தன் முன்னால் மண்டியிட்டுக் கிடப்பதால் ஏற்படும் மமதையன்றோ; நடுநிலையாளராக இருக்க வேண்டியவர்களையும் தடுமாறச் செய்திடும் கெடுமதியை ஏற்படுத்தி மகிழ்கின்றது.

அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையிலே "ஏற்கனவே பல முறை ஆய்வு செய்யப்பட்ட இந்தத் திட்டத்தை மீண்டும் ஆய்வு செய்யப் போகிறோம் என்றுதான் இப்போதும் சொல்லப்படுகிறதே தவிர, இத்திட்டத்திற்கென தற்போதைய பட்ஜெட்டில் ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை" என்று 2001ஆம் ஆண்டு இத் திட்டத்திற்காக வடித்த கண்ணீர் உண்மையானதா? அல்லது இப்போது சேது கால்வாய்த் திட்டத்தை முழு மூச்சாக எதிர்க்கிறாரே? இது உண்மையானதா? என்று சிந்தித்தால் சேதுக் கால்வாய்த் திட்டத்தின் மீது ஆத்திரமில்லை, அதைக் கொண்டு வரக்

காரணமாக தி.மு.க.வும், மற்ற தோழமைக் கட்சியினரும் இருந்து விட்டார்களே என்ற எரிச்சல்தான் காரணம் என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ளலாம் அல்லவா? 2001ஆம் ஆண்டுக்குக் கூடச் செல்ல வேண்டாம். அண்மையில் 25-6-2005ஆம் தேதியன்று ஜெயலலிதா விடுத்த நீண்ட அறிக்கையில் ஓர் இடத்தில் "என்னுடைய வற்புறுத்தலின் பேரில்தான் 1998ஆம் ஆண்டில் இத்திட்டம் ஒரு முன்னுரிமைத் திட்டமாக மேற்கொள்ளப்பட்டு, தொடக்கச் சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு ஆய்வுப் பணி தேசிய சுற்றுச் சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனத்திடம் 1998ஆம் ஆண்டு மார்ச் திங்களில் ஒப்படைக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் அறிக்கையும், 1998ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் அளிக்கப்பட்டது. இவ்வாறாக, சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் நனவாவதை உறுதிப்படுத்துவதற்கு நான் முக்கியக் காரணமாக இருந்திருக்கிறேன்" என்று பெருமைப்பட்டுக் கொண்டாரே, அப்போது சேது திட்டம் ஏழைகளின் விலா எலும்புகள் மீது கட்டப்படும் திட்டமாக ஜெயலலிதாவிற்கு தெரியவில்லையா?

இது மாத்திரமல்ல; கடந்த ஆண்டு 9-9-2004 அன்று "தேசிய ஜனநாயகக் கூட்டணி செயல் திட்டத்தில் சேது சமுத்திரத் திட்டத்தை சேர்க்க வைத்தேன்" என்றும், 12-9-2004 அன்று "சேது சமுத்திரத் திட்டம் எனது இடையறாத முயற்சிக்குக் கிடைத்த இமாலய வெற்றி" என்றும் ஜெயலலிதா பேசினாரே, அப்போது இத்திட்டத்தினால் மீனவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று ஜெயலலிதாவின் எண்ணத்தில் உதிக்கவில்லையா?

உடன்பிறப்பே, இந்த விபரங்களையெல்லாம் - உனக்குச் சொல்லி; நீயும் நானும் உணர்ந்தால் மட்டும் போதுமா? - உலகத் தமிழர்களுக்கெல்லாம் சொல்லுகிறேன்;

தமிழா;
உன் மாநிலம் வளமாகிட;
வளங்குலுங்கி செழித்திட;
உலக நாடுகளோடு வாணிபம் பெருகிட;
ஒரு திட்டம்;
செகம் புகழும் சேது சமுத்திரத் திட்டம்
1860இல் ஆங்கிலேய கமாண்டர் டெய்லர்
வகுத்த திட்டம் -
பெரியாரின் பெரு விருப்பம் -
அறிஞர் அண்ணாவின் அருங்கனவு -

பெருந்தலைவர் காமராசரின் பேரவா -
தமிழன் கால்வாய் என ஆதித்தனார் செய்த தவம் -
தம்பி முரசொலி மாறனும் தம்பி வைகோவும்
முழங்கிய முரசம்!
கோசல்ராம் எழுப்பிய ஒலி!
வாஜ்பய் வழங்கிய உறுதி
சர் ஏ. ராமசாமி முதலியார் குழுவின் பரிந்துரை -
1958இல் சட்டமன்றத்தில்
எதிர் வரிசையிலிருந்து
ஒலித்த எனது குரல் -
அனைத்துக் கட்சியினரும்
ஆதரித்து வரவேற்ற ஒன்று -
வெட்டென மறக்க வேண்டிய கிட்டாத
திட்டம் என்று ஏங்கிய வேளையில்

திருமதி சோனியா காந்தி தலைமையிலான காங்கிரசும், தி.மு.க. தலைமையிலான தமிழகக் கட்சிகளாம் பா.ம.க., ம.தி.மு.க., சி.பி.எம்., சி.பி.ஐ., முஸ்லிம் லீக் ஆகியவை கொண்ட கூட்டணியும் சிந்தித்துச் செயலாற்றி - பிரதமர் மன்மோகன் சிங் தீவிர ஆய்வுகளுக்குப் பின் வழங்கி, நாம் பெற்றுள்ள சேதுத் திட்டத்தை நிறைவேற்றும் பணி நிறைந்த மனத்துடன் நடைபெறும்போது; நிர்மூலமாக்குவேன் அதனையென; நிர்த்தாட்சண்யமாகப் பேசும் - அவலத்தைக் கண்டீர்களா; அகிலத்தில் இருக்கும் தமிழர்களே! ஆபத்தை உணர்ந்தீர்களா?

மகன் செத்தாலும் பரவாயில்லை; மருமகள் மாங்கல்யம் இழக்க வேண்டும் என்று எண்ணுகிற மாமியார் எங்கேயோ - எப்போதோ ஒருவரைத்தான் காண முடியும்.

இங்கோ; இப்போதே - தி.மு.க. இருக்கின்ற ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் சேதுத் திட்டம் நின்றால் போதும்; தமிழ்நாடு எக்கேடோ கெட்டுப் போகட்டும் என எண்ணுகிறவர் இருக்கிறாரே; இவரை நம்பி இனியொருமுறை ஏமாறலாமா தமிழர்களே?

அன்புள்ள,

மு.க.

28-09-2005

3179. பொறுக்க முடியாத அறுவை, பொல்லாத அறுவை!

உடன்பிறப்பே,

ஏ.வி.எம். தயாரித்து வெளியிட்டதும் - புகழ்மிக்க வெற்றிப்படமாக அமைந்ததும் - "டடடா.... டடடா" என்ற பிரபலமான பாட்டொலியை பட்டி தொட்டியெங்கும் பரப்பியதும் - திருமதி வைஜயந்திமாலா அவர்களைத் திரையுலகில் அறிமுகப்படுத்தியது என "வாழ்க்கை" எனும் படத்தில் நகைச்சுவை வேந்தர் கே. சாரங்கபாணி அவர்கள் ஒரு முக்கிய கதாபாத்திரமேற்று - ஒவ்வொரு காட்சியிலும் அவர் தோன்றும் போதெல்லாம்; **"நான் அந்தக் காலத்திலே காலேஜிலே படிக்கும்போது"** என்ற ஒரு வசனத்தை சம்பந்தா சம்பந்தமில்லாமல் உச்சரித்து படம் பார்க்கும் ரசிகர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி கையொலிகளைப் பெறுவார். ஆம்; "வாழ்க்கை" படத்தில்தான் இந்த வசனம் என்பதை நண்பர் பிலிம் நியூஸ் ஆனந்தன் அவர்களைக் கேட்டு உறுதிப்படுத்திக் கொண்டு இதை எழுதுறேன்.

எனக்கு அந்த வசனம் இப்போது ஏன் ஞாபகத்திற்கு வந்தது என்று உனக்குக் கேட்கத் தோன்றும் எந்த வரலாறுகளை எழுதுவதென்றாலும் அவர்கள் பேனாவில் ஊற்றிக் கொள்ளும் "மை" - உண்"மை" ஆக இருக்க வேண்டும். அப்போதுதான் அந்த வரலாறுகள் 'வாய்மை'யாக அமைய முடியும். திரையுலக வரலாறு எழுதுகிறேன் என்று அதனைத் திரித்தும் மறைத்தும் - தயவுதாட்சண்யங்களுக்குத் தலையாட்டியும் - "ஏதோ இன்றைக்கு என்னாலான கிறுக்கலை "ச் செய்து முடிக்கிறேன்" என்று கலையுலகத்தையே களங்கப்படுத்தும் கைங்கர்யம் இன்றைக்கு சில ஏடுகளில் நடத்தப்படுகிறது. அதுபற்றிப் பிறிதோர் சமயம் விரிவாக எழுதுகிறேன். இப்போது "விகடன்" இதழில் தொடர்ந்து எழுதி வருகிற "கலைஞர் - கலையுலகப் பயணத்தில்" என்ற குறுங்கட்டுரைகள்; விரிவு பெற்றுப் பெரிய தொகுப்பு நூலாக

வெளிவரும் காலம் வருமென்று நம்புகிறேன்; இப்போதுள்ள உடல் ஆரோக்கியம் தொடருமானால்!

அதற்கிடையே "கண்மணி முரசொலி மாறன்" எழுதி தொடக்க அத்தியாயங்களுடன் நின்று விட்டதும் - முதல் பாகமாக வெளிவந்துள்ளதுமான திராவிட இயக்க வரலாற்றை முரசொலி'யில் தொடர் கட்டுரையாக; அடுத்தடுத்த அத்தியாயங்கள் எழுதிட முயற்சி மேற்கொண்டு அவற்றுக்கான குறிப்புகளைத் தேடிக் குவித்துக் கொண்டிருக்கிறேன்.

அடேடே; எங்கேயோ தொடங்கி எங்கேயோ உன்னோடு வந்துவிட்டேனே! அதாவது **"அந்தக் காலத்திலே நான் காலேஜிலே படிக்கும்போது"** என்று ஏ.வி.எம். "வாழ்க்கை" படத்தில் கே. சாரங்கபாணி அடிக்கடி பேசிடும் அந்த வசன அறுவை விளைவிக்கும் அற்புதமான நகைச்சுவையைப் பற்றிக் குறிப்பிட்டு, இந்தக் கடிதத்தை தொடங்கியிருந்தேன் அல்லவா; இப்போது அங்கிருந்தே வருகிறேன்.

"நான் அந்தக் காலத்திலே காலேஜிலே படிக்கும்போது"

உடன்பிறப்பே, அதே அளவில் - அதே மெட்டில் - அதே பாணியில் - அதே அறுவை வசன அற்புதக் காமெடியாக; இப்போது அ.தி.மு.க. ஆட்சியின் முதலமைச்சர் ஜெயலலிதா, "நான் அந்தக் காலத்திலே காலேஜிலே படிக்கும்போது" என்று அதே வார்த்தைகளை உச்சரிக்கா விட்டாலும்; **"கடந்த தி.மு.க. ஆட்சியில் அதலபாதாளத்தில் இருந்த நிதி ஆதாரத்தை நான்தான் கை தூக்கி விட்டுக் காப்பாற்றினேன்"** என்ற மாற்று வார்த்தைகளைக் கொண்டு நிரப்பித் தானும் மகிழ்ந்து தனது "தம்பிரான் 'சாமி'களையும் கைதட்டி மகிழச் செய்து வருகிறார்.

- "அரசு ஊழியர்களை இலட்சக் கணக்கில் ஏனம்மா டிஸ்மிஸ் செய்தீர்?"

என்று கேட்டபோது; "என் செய்வது? கடந்த தி.மு.க. ஆட்சியில் நிதியாதாரம் அதலபாதாளத்துக்குப் போய் விட்டது" என "வாழ்க்கை" படத்து சாரங்கபாணியாக வக்கணையான முறையில் "அந்தக் காலத்துல நான் காலேஜிலே படிச்ச போது" என்ற 'டியூனையே வாசித்தார்.

● "தி.மு.க. ஆட்சி வழங்கிய இலவச மின்சாரத்தை ஏனம்மா ரத்து செய்தீர்?"

● என் செய்வது கடந்த கருணாநிதி ஆட்சியில் நிதி ஆதாரத்தை அதலபாதாளத்துக்குக் கொண்டுபோய் விட்டார்"

இதே பல்லவிதான் - இதே பாட்டுத்தான்!

● பெண்களுக்குத் திருமண உதவிப் பணம் பத்தாயிர ரூபாயை ஏன் பறித்துக் கொண்டீர்?

● சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு முட்டை வழங்கியதை எதற்காக நிறுத்தினீர்?

● மாணவர்கள் பஸ் பாஸ் கோவிந்தாவா?

● இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம் என்னவாயிற்று?

● அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட அடுக்கடுக்கான சலுகைகள் ஏன் பறிக்கப்பட்டது?

● கல்விக் கட்டணத்தை மாணவர்களுக்கு பல மடங்கு உயர்த்தியது ஏன்?

● புதிதாக பணியிலே நியமிப்பதற்கு தடைச் சட்டம் கொண்டு வந்து விட்டீர்களே, ஏன்?

● ஆசிரியர், தொழிலாளர், அலுவலர் போனஸ் போனது எங்கே? எங்கே?

● மாணவர்களுக்கு இலவச சைக்கிள் வழங்க மத்திய அரசு ஒதுக்கிய 20 கோடி ரூபாய் என்ன ஆச்சு?

● மதமாற்றத் தடைச் சட்டம் காஞ்சி சங்கரர் கட்டளைப்படி போட்டது நியாயமா?

அம்மையார் 2001இல் ஆட்சிக்கு வந்து இத்தனை அக்கிரமங்களையும் செய்து, உரிமைகளைப் பறித்து சலுகைகளை ரத்து பண்ணி,

"என் செய்வது கடந்த கருணாநிதி ஆட்சியில் நிதி ஆதாரத்தை அதலபாதாளத்துக்குக் கொண்டு போய் விட்டார்"

என்று "அந்தக் காலத்திலே நான் காலேஜில படிக்கும்போது" வசனத்தையே அதே அளவு குறையாமல் - அபிநயம் பிடித்து உச்சரித்துக் கொண்டிருந்தார்.

நாடாளுமன்றத் தேர்தல் வந்தது; 40க்கு 40ம் நமது தோழமைக் கட்சிகளுக்கு வெற்றியாக அமைந்தது.

ரத்து செய்யப்பட்ட திட்டங்களால் - பறிக்கப்பட்ட அரசு ஊழியர், தொழிலாளர் உரிமைகளால் -

தனக்கு இந்தத் தீர்ப்பு கிடைத்தது என்பதை உணர்ந்த பிறகு-

"வாகனம்" - 'ரிவர்ஸ்" எடுக்கப்பட்டு;

மீண்டும், இலவச மின்சாரம் எனத் தொடங்கி "இல்லை" என்று ரத்து செய்யப்பட்டதெல்லாம் இதோ வந்து விட்டது என அறிவிக்கப்பட்ட போது;

"இது எதிர்க்கட்சிகள் குரலுக்கும் - மக்கள் அளித்த தீர்ப்புக்குமான விளைவுகள்" என்பதை ஜெயலலிதா ஒப்புக் கொண்டால் வெட்கக்கேடு என்பதற்காக;

மீண்டும் அதே பாட்டு! அதே மெட்டில்!

"கடந்த தி.மு.க. ஆட்சியில் நிதியாதாரம் அதல பாதாளத்துக்குப் போய்விட்டது;" என்று கூறிவிட்டு; இப்போது அவர் சரிசெய்து விட்டதாக தனக்குத் தானே "சபாஷ்" போட்டுக் கொள்கிறார்.

இந்த நாலரை ஆண்டு ஆட்சியில் நமது கழக ஆட்சிக் காலத்து நல்ல திட்டங்களைப் பறித்துக் கொண்டு;

உரிமைகளை ஒழித்துக் கட்டிவிட்டு -

அவைகளில் சிலவற்றைத்தான் அதுவும் அரை குறையாக இப்போது திரும்பத் தருவதாக அறிவிக்கிறாரே தவிர,

மக்கள் விரோதச் செயல்கள் நின்றபாடில்லை;

மதுபான விற்பனைக் கூட்டுக் கொள்ளை

தொடர்ந்தபடிதான் இருக்கிறது -

மணல் வியாபாரக் கொள்ளை நீடிக்கிறது

ஊழல்; உக்கிரமான பேருரு எடுத்து நிற்கிறது

நீதி மன்றங்களின் கட்டளைகள் கூட

நெருப்பில் ஊற்றப்பட்ட தண்ணீரில்

அணைவதுபோல் அணைந்து போகின்றன

உதாரணம்; செத்துக் கொண்டிருக்கும் சாலைப் பணியாளர்களுக்கு "வேலை கொடு" என்ற நீதி மன்றத் தீர்ப்புக்கு ஏற்பட்ட கதிதான்!

நீதியை ஏற்பதில்லை -

நீதி மன்றங்களை மதிப்பதில்லை -

பணமிருக்கிறது; அது பாதாளம் வரையில் பாயும் என்ற ஆணவம்; அனுபவத்தால் வந்த ஆணவம்!

நேற்று சேது சமுத்திரத் திட்டம்; தன்னால்தான் வரும் - அந்த இமாலயச் சாதனையை நான்தான் சாதிப்பேன் என்று ஜெயலலிதா முழக்கம்! இன்று அந்தத் திட்டம் மத்திய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசினால் நடைமுறைப்படுத்திட தொடங்கி, அமைச்சர் தம்பி பாலு அதற்கான பணிகளை நிறைவேற்றி வரும் நிலையில் - அந்த சேது சமுத்திரத் திட்டத்தை நிறுத்தியே தீருவேன் என்று சட்டமன்றத்தில் சபதம்!

நேற்று - சேதுக் கால்வாய்க்கு வரவேற்பு -

இன்று வயிற்றெரிச்சல் - காந்தாரிக் கதறல்!

இதே போலத்தான்

1998இல் நேரு விளையாட்டு

திறந்த வெளி அரங்கத்தை

யாருக்கும் விழா நடத்த

அனுமதிக்கக் கூடாது என்று

உச்ச நீதி மன்றத்தில்

இதே அம்மையார் வழக்கு -

வாக்குமூலம் -

இன்று அதே திறந்த வெளி அரங்கில்

விழா நடத்துவேன் என்று விளம்பரம் -

விவசாயிகளை ஏமாற்றும் நாடகம் -

இப்போதுதான் விவசாயிகளைக் கண்ணுக்குத் தெரிகிறதா என்று கேட்டால்; அதற்குப் பதில் -

அதே "வாழ்க்கை" படத்து சாரங்கபாணி வசனம் போல;

"அந்தக் காலத்து கருணாநிதி ஆட்சியிலே நிதி நிலவரம் அதல பாதாளம்"

என்று ஆரம்பித்து விடுவார் - அடேயப்பா, ஒரே அறுவை! அறுவை!! பொறுக்க முடியாத பொல்லாத அறுவை!

அன்புள்ள,

மு.க.

05-10-2005

3180. இன உணர்வுடன் தோள் கொடுத்து துணை நிற்பாய்!

உடன்பிறப்பே,

நாளேடுகள் பல நாட்டிலே உள்ளன எனினும்; அவற்றில் நமது தமிழ் ஏடாயினும், அல்லது பிறமொழி நாடுகளாயினும் நமது கழகத்தின் செய்திகளை - அறிக்கைகளை - ஆட்சியாளர் பற்றிய விமர்சனங்களை - வெளியிட மறுக்கிற - அஞ்சுகிற - அலட்சியப்படுத்துகிற - இன உணர்வு பீறிடுவதால் இருட்டடிப்பு செய்கிற ஏடுகளே பலவாக உள்ளன. அவைகள் "நடுநிலை ஏடு" என்று நாமகரணம் சூட்டிக்கொள்ளத் தவறுவதில்லை.

"காரிருள் அகத்தில் நல்ல கதிரொளி நீதான்" என்று புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் 'பத்திரிகைப் பெண்' என்ற தலைப்பில் கவிதை எழுதினார். ஆனால் இன்றைய பத்திரிகை அரங்கம், கதிரொளி மறைத்திடக் காரிருளாகக் கவிந்திடும் நிலையையே பெரிதும் கடைப்பிடித்திடும் போக்கினைக் கொண்டதாகவே இருக்கிறது.

காலம் மாறும் என்றோ -

அந்தக் கடின சித்தர்கள் மாறுவார்கள் என்றோ -

நமது கருத்துகள், செய்திகள்; மறைத்தல், திரித்தல் இல்லாமல் அத்தகைய ஏடுகளில் வெளிவிடப்படும் நாள் வருமென்றோ -

எதிர்பார்த்துக் காத்துக் கிடக்காமல்; நாம் ஆளுங்கட்சியில் இருந்தாலும் அல்லது எதிர்க்கட்சியில் இருந்தாலும் -

இரு பொறுப்புக்களையும் சமமாகவே கருதி அவற்றிற்கேற்பப் பணியாற்றும் கொள்கைக் கடமையை நிறைவேற்றிடக் கூடியவர்கள் என்பதை

அறிஞர் அண்ணாவின் மதிப்புச் சான்றுரை பெறுகிற அளவுக்கு நிரூபித்துக் காட்டியவர்கள் என்பதால்;

நமக்கென்று - ஆம்; நமது கூட்டணிக் கட்சிகளாம் தோழமைக் கட்சிகளின் பேரணிக்கான பிரச்சார பீரங்கிகளின் வரிசையில் பத்திரிகை வலுவையும் வளர்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

1942ல் துண்டு வெளியீடாகத் தொடங்கப்பெற்று, இடையில் பெருந்தொய்வுக்கும், தொல்லைக்கும் உள்ளாகியும்கூட நின்றுவிடாத நமது 'முரசொலி' - 63 ஆண்டுக்காலமாக - வார இதழாகவும் - பின்னர் நாளிதழாகவும் - அடக்குமுறைகள், சிறைவாசங்கள், சட்டமன்ற தண்டனைகள், அராஜகச் செயல்கள் அனைத்துக்கும் ஈடுகொடுத்து, ஒவ்வொரு நாளும் தி.மு. கழகத்தின் தூதுவனாக; திராவிட இயக்கக் கொள்கை முழக்க முரசமாக; உன் இதயக் கதவுகளைத் தட்டி எழுப்பி, உன் கரங்களில் குந்திக் கொண்டு, ஆற்றிய பணிகளையும், ஆற்றிட வேண்டிய பணிகளையும் விவரித்து ஊக்கம் பெறச் செய்கிற தென்றால்; 'தொடர முடியவில்லை, நிறுத்தியே விடுகிறேன்' என்று நானே கையெழுத்திட்டு அறிக்கை விடுத்தபோது - நமது திராவிட இயக்கச் சகோதரர்கள் மாத்திரமன்றி; நம்மிடம் நெருங்கிய நட்பு கொள்ளாமலிருந்த பெருஞ்சித்திரனார் போன்ற பெரும் புலவர் மக்கள் எல்லாம் கூட சீற்றம் கொண்டு; நமது 'அன்பகம்' அலுவலகத்துக்கே வந்து காத் திருந்து; நான் வந்தவுடன் உரிமையுடன் என்னைத் தாக்கிப் பேசும் பாணியிலேயே; தமிழனுக்கு ஒரு போர்வாளாக இருக்கும் இந்த 'முரசொலி'யாம் படைக் கருவியையும் பகைவரிடம் ஒப்படைக்கப் போகிறாயா எனக் கேட்டது இன்னும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டுதானிருக்கிறது.

அதனைத் தொடர்ந்து கழகத்தின் மாவட்டச் செயலாளர்கள் கூடிக் கலந்து பேசி; 'முரசொலி' அறக்கட்டளையொன்றினை நிறுவி அதன் சார்பில் முரசொலி நாளிதழின் ஆயுள் மேலும் தொடர்வதற்குத் தோள் கொடுத்துத் துணை நின்றதின் காரணமாக; நின்றுபோக இருந்த இந்த ஏடு; பல களங்களை வென்று காட்டக் கூடிய அளவுக்கு வளர்ந்தது.

என்னதான் வளர்ச்சி பெற்றாலும்; ஓர் இயக்கச் சார்புடையதாக இயங்குகிற ஓர் ஏடு; அந்த இயக்கம் கொண்டுள்ள கொள்கையில்

விடாப் பிடியாக இருந்து பிரச்சாரப் பணி புரியும் ஓர் ஏடு; 'நடு நிலை ஏடு' எனச் சொல்லிக் கொண்டு ஒருதலைப்பட்சமாக நடைபெறுகிற ஏடுகளின் கூட்டத்துக்கிடையே அத்தகையப் பெயரளவு நடுநிலை ஏடுகளுடன் போட்டியிட்டு பல்லாயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில் அச்சிடப்பட்டு நமது கழகச் செய்திகளை, கருத்துக்களை, விடுபட்டு விடாமல் வெளியிடுகிற வாய்ப்பினைப் பெற முடியாமலேதான் இருக்க முடிகிறது. இந்தச் சங்கடம் 'முரசொலி'க்கும் இருப்பதை நான் அறியாமல் இல்லை.

எனவேதான் 'முரசொலி' படிக்கும் கழக உடன்பிறப்புகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த; விற்பனை வாயிலாக மட்டுமின்றி - சந்தாதாரர்களைச் சேர்ப்பதின் வாயிலாகவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

அந்த முயற்சிக்கு முன்னோடியாக நின்று நமது கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர்களில் ஒருவரும் - இளைஞர் அணிச் செயலாளரும் - முரசொலி அறக்கட்டளைத் தலைவருமான தம்பி மு.க. ஸ்டாலின், கழக மாவட்டச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் தொடர்பு கொண்டு அயராப் பணி ஆற்றியுள்ளார்.

அந்த முயற்சியின் காரணமாக, தென்சென்னை மாவட்டத்தில் 952 சந்தாதாரர்களும், வடசென்னை மாவட்டத்தில் 932 சந்தாதாரர்களும், திருவண்ணாமலை மாவட்டத்தில் 258 சந்தாதாரர்களும், தஞ்சை மாவட்டத்தில் 1977 சந்தாதாரர்களும், ஈரோடு மாவட்டத்தில் 923 சந்தாதாரர்களும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 879 சந்தாதாரர்களும், வேலூர் மாவட்டத்தில் 800 சந்தாதாரர்களும், நாமக்கல் மாவட்டத்தில் 910 சந்தாதாரர்களும், பெரம்பலூர் மாவட்டத்தில் 531 சந்தாதாரர்களும், திருச்சி மாவட்டத்தில் 620 சந்தாதாரர்களும், நெல்லை மாவட்டத்தில் 289 சந்தாதாரர்களும், விழுப்புரம் மாவட்டத்தில் 296 சந்தாதாரர்களும், மதுரை புறநகர் மாவட்டத்தில் 576 சந்தாதாரர்களும், கரூர் மாவட்டத்தில் 685 சந்தாதாரர்களும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 227 சந்தாதாரர்களும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 162 சந்தாதாரர்களும், திண்டுக்கல் மாவட்டத்தில் 211 சந்தாதாரர்களும், திருவள்ளூர் மாவட்டத்தில் 197 சந்தாதாரர்களும், மதுரை

மாநகர் மாவட்டத்தில் 165 சந்தாதாரர்களும், புதுவையில் 524 சந்தாதாரர்களும், காரைக்காலில் 91 சந்தாதாரர்களும், நீலகிரி மாவட்டத்தில் 259 சந்தாதாரர்களும், கடலூர் மாவட்டத்தில் 185 சந்தாதாரர்களும், தூத்துக்குடி மாவட்டத்தில் 58 சந்தாதாரர்களும், கோவை மாவட்டத்தில் 287 சந்தாதாரர்களும், தர்மபுரி மாவட்டத்தில் 176 சந்தாதாரர்களும், கன்யாகுமரி மாவட்டத்தில். 74 சந்தாதாரர்களும், நாகை மாவட்டத்தில் 104 சந்தாதாரர்களும், திருவாரூர் மாவட்டத்தில் 9 சந்தாதாரர்களும், விருதுநகர் மாவட்டத்தில் 88 சந்தாதாரர்களும், தேனி மாவட்டத்தில் 5 சந்தாதாரர்களும், சிவகங்கை மாவட்டத்தில் 25 சந்தாதாரர்களும், மற்றும் மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் 715 சந்தாதாரர்களும், தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் 108 சந்தாதாரர்களும், தொ.மு.ச. பேரவை சார்பில் 120 சந்தாதாரர்களும், சிங்கப்பூரில் ஒரு சந்தாதாரரும் என மொத்தம் 14,419 சந்தாதாரர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள். இன்னும் வர வேண்டிய விபரங்களுக்காக மாவட்டங்களுக்கு வேண்டுகோள் அறிவிப்பு தரப்பட்டுள்ளது.

எனவே அந்தந்த ஊர்களின் முகவர்களுக்கு அனுப்பி விற்பனையாவது அன்னியில், சந்தாதாரர்களுக்கு மட்டுமே ஏறத்தாழ 15,000 முரசொலி இதழ்கள் அச்சியற்றப்படுகின்றன.

உடன்பிறப்பே, உன் போன்றோரை - தொலைக் காட்சிகள், நாளேடுகள், காலை ஏடுகள், மாலை ஏடுகள், வானொலி என செய்திகள் வளைத்துக் கொண்டாலும்;

கழகச் செய்திகளையும் - கருத்துக்களையும் அன்றாடம் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் பொய்ப் பிரச்சாரங்களை அவ்வப்போது முறியடித்து உண்மையை உலகிற்குத் தெரிவிக்கும் வகையிலும் - அறிந்து கொள்ள 'முரசொலி' உன் கையில் ஒவ்வொரு நாளும் இருந்திட வேண்டும் என்பதை தவறியும் மறந்திடக் கூடாது.

மாணவர்களும், அலுவலர்களும், ஆசிரியப் பெருமக்களும், வழக்கறிஞர்களும், தொழிலாளர்களும், விவசாயிகளும், வணிகர்களும், வல்லுநர்களும், நமது கருத்துக்களைப் படித்துப் பரப்புதற்கு ஏற்ப; 'ஆங்கில மொழி வார ஏடு' ஒன்றும் முரசொலி

அறக்கட்டளை சார்பாகவே தொடங்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முகிலைக் கிழித்து வெளிக் கிளம்பும் முழுமதியாக "முரசொலி" விளங்குகிறது நமக்கு! இருளைக் கிழித்து வெளிக்கிளம்பும் எழு ஞாயிறாக; ஆங்கில வார ஏடும் திகழ வேண்டும்;

அதற்கு உன் திறனையும், திண் தோளையும் திராவிட இன உணர்வினையும்தான் நம்பியிருக்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

08-10-2005

3181. துன்ப துயரங்களுக்கிடையே துளி தேன்!

உடன்பிறப்பே,

இன்பங்கள், துயரங்கள், முற்றுகையிட்டு இருக்கும்போதுகூட; துளி தேன் உதட்டிலே விழுந்தால் அதைச் சுவைக்காமல் இருந்துவிட முடிகிறதா?

அதிலும் குறிப்பாக இருளில் மின்னல் ஒளிபோல விளையினும் - அந்த நிகழ்வுக்கு நமது உடன்பிறப்புகளில் ஒருவர் காரணமெனில்; அந்த மின்னல் ஒளிகூட - இன்னல் தராமல் நம் இதயத்தில் பதிந்து இனிமை வழங்குகிறதல்லவா!

அப்படியொரு நிகழ்வைத்தான் உனக்குச் சொல்லப் போகிறேன். ஆண்டாண்டு காலமாக நமது அன்பு உடன்பிறப்புகள் பலரும், தங்கள் இல்லத்து நிகழ்ச்சிகள் எதுவாயினும் அதில் நான் கலந்து கொள்ள வேண்டுமென்பதிலும்; நான் சென்று கலந்து கொள்ள இயலாத நிலையில் அல்லது நேரத்தில் - அவர்களே சென்னைக்கு என் இல்லம் தேடி வந்து திருமண நிகழ்ச்சிகளையோ அல்லது குழந்தைகளின் பெயர் சூட்டும் நிகழ்வுகளையோ நடத்திக் கொள்வதிலேதான் ஆர்வமுடையவர்களாக மட்டுமல்ல; அசைக்க முடியாத பிடிவாதமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள்.

தொடக்க காலத்தில் எப்போதோ ஒன்றிரண்டு நிகழ்வுகள் அப்படியென்றிருந்த நிலை மாறி; 1976 நெருக்கடி காலப் பிரகடனத்திற்குப் பிறகு வேன்களில், பேருந்துகளில், ஊர் ஊராகத் திரண்டு வந்து - வரும் வழியிலே காவல்துறையினரால் தடுக்கப்பட்டால் கூட, திருப்பதிக்குப் போகிறோம் - திருத்தணிக்குப் போகிறோம் என்று கூறிவிட்டு; என்னில்லத்தில் திருமணங்களை நடத்திக் கொண்டும் - தி.மு.க. வளர்ச்சி நிதியை வழங்கி விட்டும் திரும்பிச் சென்றிருக்கிறார்கள். அந்தச் சம்பவங்களையெல்லாம் இப்போது என் நெஞ்சம் அசைபோடும்பொழுதே 'பஞ்சாமிர்த'மாக இனிக்கிறதே; அப்போது நேரிலே அந்த நிகழ்ச்சிகளில் எவ்வளவு

ஐக்கியமாகியிருப்பேன் என்பதை எண்ணிப் பார்த்திடுக; என் உடன்பிறப்பே!

நானில்லாமல் அல்லது குறைந்தபட்சம் என் வாழ்த்தாவது இல்லாமல்; தங்கள் இல்லங்களில் எந்தவொரு மங்கல நிகழ்ச்சி நடப்பதிலும் மன ஆறுதல் பெறாத; மாசு மருவற்ற மாணிக்கங்களையன்றோ நான் பாசமுள்ள உடன்பிறப்புகளாகப் பெற்றுள்ளேன். அவர்களின் தூய அன்பு துணை நிற்கும் வரையில் தோள் வலிவு எனக்கு மிகுந்திடுமே தவிர; அணுவளவும் குறைந்திடப் போவதில்லை.

இதோ இந்தப் புகைப்படத்தில் நீ காண்பது உன் போன்ற ஓர் உடன்பிறப்பைத்தான்; ஆம், அவரது துணைவியாருடன் காண்கிறாய்!

அவரும் அவரது துணைவியாரும் என்னை அண்ணா அறிவாலயத்தில் சந்தித்தபோது எடுத்த படம் - 2001 ஆம் ஆண்டு இந்தச் சந்திப்பு! அவர் கையில் கட்டுப் போட்டிருக்கிறார் அல்லவா; அது கை எலும்பு முறிவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைக்குப் பிறகு போடப்பட்ட கட்டு!

கை எலும்பு முறிந்தது எங்கே, எப்போது, எப்படிக் கண்டுபிடிக்கப்பட்டது என்கிறாயா?

சென்னை ராயப்பேட்டை மருத்துவமனையில் அவசர சிகிச்சைக்காக அவர் சேர்க்கப்பட்டிருந்தபோது; நானும், பேராசிரியரும், தம்பி துரைமுருகனும், அவரைப் பார்க்கச் சென்றிருந்தோம் - அந்தப் புகைப்படம்கூட இக்கடிதத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

அவரை நாங்கள் மருத்துவமனையில் பார்த்தபிறகு - டாக்டர்களின் சிகிச்சை முடிந்து - நாட்கள் பல கழித்து - ஓரளவு உடல்நலம் பெற்றவர்; நன்றி கூற அண்ணா அறிவாலயம் வந்திருந்தபோது எடுக்கப் பட்டதே மற்றொரு நிழற்படம்!

ஏன்; கை எலும்பு முறிந்தது? என்ன காரணம்; ஏன் அவர் அவசர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்? இந்தக் கேள்விக்கான விபரமான பதில்:

2001 மே திங்களில் ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா, உடனடிக் காரியமாக என்னை சிறைபிடித்து சித்ரவதை செய்யத் திட்டமிட்டு

அடித்து உதைத்து இல்லாத வழக்கு ஒன்றை சோடித்து, நள்ளிரவில் கதவு உடைத்து வீடு புகுந்து; ஏன் என்று கேட்க வந்த மத்திய அமைச்சர் தம்பி முரசொலி மாறன், மத்திய அமைச்சர் தம்பி பாலு ஆகியோரையும் சென்னை மேயராக இருந்த தம்பி ஸ்டாலினையும் தொடர்ந்து பல்லாயிரம் கழகக் கண்மணிகளையும் அடக்குமுறைக்கு ஆளாக்கியது, அதே ஆண்டு ஜூன் 30ஆம் நாள் என்பதை நீ அறிவாய்!

அந்தக் கொடுமையைக் கண்டித்து சென்னையில் பேரணி கடற்கரையில் மாபெரும் பொதுக்கூட்டம் ஆகஸ்டு 12 அன்றைய தினம் நடைபெற்றபோது ஜெயலலிதா ஆட்சியினர் மீண்டும் காவல்துறையில் இருந்த சில பெரிய "கறுப்பு ஆடு"களை ஏவி, தாதாக்கள் சிலரின் உதவியுடன்; ரத்தக்களரியில் ஈடுபடச் செய்ததில் சிலர் மாண்டனர் - பலர் படுகாயமுற்றனர்.

அப்படிக் காயமுற்று அவசர அவசிய சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்தான்; வானூருக்கு அருகில் உள்ள கிராமத்தைச் (கீழ்க் கூத்தப்பாக்கம்) சேர்ந்த சுப்பராயன் என்னும் கழக உடன்பிறப்பு ஆவார். அவர் மாவட்ட ஆதிதிராவிட நலப்பிரிவின் கழக அமைப்பாளரும் ஆவார். அவரது துணைவியார் இந்திராணி அம்மையார்!

நையப் புடைக்கப்பட்டு, நலிவுற்று, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று நலம் பெற்று - இப்போது நாலு ஆண்டுகளுக்குப் பிறகு, திடீரென அவர்கள் நினைவு எப்படி வந்தது? ஏன் வந்தது? என்று கேட்கிறாயா?

9-10-2005 அன்றைய தினம் மாலையில் அண்ணா அறிவாலயத்தில் பார்வையாளர்களை சந்தித்துக் கொண்டிருக்கும்போது - என்னுடன் தம்பி வீரபாண்டி ஆறுமுகம் - தம்பி துரைமுருகன் மற்றும் சிலர் இருந்தனர். அப்போது தம்பி வானூர் சங்கர் உள்ளே வந்து; "அண்ணே, இன்றைக்கு சுப்பராயன் 60 வயது நிரம்பிய மணிவிழா; உங்கள் முன்னிலையில் நடத்திக் கொள்ள அவர் துணைவி இந்திராணி அம்மையாருடன் வந்திருக்கிறார்" என்று கூறவே, உள்ளே அழைத்துவரச் சொன்னேன்.

அன்று நாலாண்டுக்கு முன்பு காயம்பட்டு, காவல் துறையினரின் அராஜகத்தினால் மணிக்கட்டு எலும்பு உடைந்து

மருத்துவமனையில் கிடந்த அந்த உடன்பிறப்பு சுப்பராயன்; இன்று தனது மணி விழாவை தன் துணைவியுடனும், நண்பர் களுடனும் நடத்திக் கொள்ள என்னை நாடி வந்திருப்பது கண்டு - பாசம் பொங்கிட வாழ்த்தினேன் - என் முன்னிலையில் அந்த "மணிவிழா" தம்பதியர் மாலை மாற்றிக் கொண்டு மகிழ்ச்சியில் ஆழ்ந்தார்கள்.

உற்றார், உறவினர், குடும்ப உறுப்பினர், உற்ற தோழர்கள், கழக உடன்பிறப்புகள் என அனைவரையும் அழைத்து, கீழ்க்கூத்தப்பாக்கம் கிராமத்திலேயே நடத்தப்பட்டிருக்கக் கூடிய அந்த மணிவிழா நிகழ்ச்சி என் முன்னிலையில் என் வாழ்த்துக்களுடன்தான் நடைபெறவேண்டுமென்று விரும்பி; அந்த உடன்பிறப்பு சென்னை அறிவாலயம் நோக்கி வருகிறார் என்றால் - நாலாண்டுகட்கு முன்பு ஏற்றுக் கொண்ட அடக்குமுறை - தாங்கிக் கொண்ட தடியடி - உடம்பு முழுதும் வீக்கம் - கை எலும்பு முறிவு - அத்தனை தழும்புகளும், வடுக்களும் என்னைப் பார்த்து "வீரன் பெற்ற விழுப்புண்களைப் பார்" என்று தானே, மார்தட்டிக் கொண்டு கூறின -

"அதற்கு நீ என்ன பதில் சொன்னாய்? என்று கேட்பாய்; இதோ; இந்த வாழ்த்தும் பதிலும்தான்!"

"விழுப்புண் பெற்ற உடன்பிறப்பே! மணிவிழா கண் நீ
மனைவி மக்களுடன் மாசற்ற நல்வாழ்வு; வாழ்ந்திடுக!
உன் போன்ற நன்றியுணர்வும் - தியாக மனப்பான்மையும்
கொண்ட உடன்பிறப்புகள் தான்; அண்ணா உருவாக்கிய
கழகத்தின் படை வலிமைக்கும் நாம் காண இருக்கும்
களங்களுக்கும் தேவைப்படும் படைக் கலன்களாவீர்!"

1951 டிசம்பர் 13, 14, 15, 16 நாட்களில் சென்னையில் நடைபெற்ற தி.மு.க. முதல் மாநில மாநாட்டில் தலைமை வகித்து அண்ணா ஆற்றிய பேருரையில் பின்வரும் வாசகம்; என் நினைவில் நிழலாடி என் செவிகளில் இப்போதும் ஒலித்துக் கொண்டிருப்பதுபோல்; உன் போன்ற உடன்பிறப்புகளின் செவிகளிலும் ஒலிக்கட்டும்.

இதோ; அண்ணாவின் அந்தக் குரலைக் கேள்!

"இலட்சியத்தை நோக்கி, அமைதிப் பாதையிலே நடந்து செல்கின்றோம். அந்தப் பயணத்தின் இடையிலே வரும்

பிரச்சினைகள், பாதையிலே வரும் நண்பர்களைப் போல; பேசிக்கொண்டே செல்வோம், பிரிவோம் - ஆனால் பாதையை விடமாட்டோம்; மழை பெய்தால் ஒதுங்கி நிற்போம் சிறிது நேரம் - ஓய்ந்து விடமாட்டோம். தொடர்ந்து நடப்போம். பனி, மழை, வெய்யில், குளிர், இரவு, பகல் என்ற எதுவும் பயணத்தை நிறுத்தாது - பாதையை மாறறாது.

பாதையில் பிணங்கள் கிடக்கலாம். எலும்புக் கூடுகள் இருக்கக்கூடும். அவைகளைச் சுற்றிக் கழுகுகள் வட்டமிடலாம். நரிகளின் ஊளை கேட்கலாம். ஆனால் நாம் பாதையைத் தவறவிடோம். பிணமும், பிறவும் நமக்கு முன்னால் வீரர்கள் சென்றிருக்கிறார்கள் என்பதின் சின்னங்கள் என்றே கருதி நடப்போம். இடையிலே வரும் பிரச்சினைகளுக்காக நாம் எதற்காக உருவாகி, உழைத்து வருகின்றோமோ அந்த அடிப்படை இலட்சியத்தை இழந்து விடமாட்டோம்."

அண்ணாவின் இந்த வாசகத்தையும் இணைத்த என் பதிலானது அமைந்தது என்பதை நான் உணருகிறேன். நீயும் அவ்வாறே உணர்ந்திடுவாய் என்ற நம்பிக்கை எனக்கு எப்போதும் உண்டு!

அன்புள்ள

மு.க

11-10-2005

3182. திருச்சிக்கு மட்டுமல்ல; தி.மு.க. பாசறை அனைத்துக்கும்!

உடன்பிறப்பே,

நம்முடைய பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு திருவண்ணாமலை மாவட்டக் கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு திரும்பியுள்ளார். பொருளாளர் நம் நண்பர் ஆர்க்காடு வீராசாமி அவர்கள் குமரி மாவட்டக் கழகச் சார்பில் இரு நாட்கள் நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு சென்னை வந்துள்ளார். முதன்மைச் செயலாளர் தம்பி துரைமுருகன், கழகப் பொதுச் செயலாளர்கள் தம்பி பரிதி இளம்வழுதி, தங்கை சற்குணபாண்டியன் ஆகியோர் இரு மாவட்டங்களில் கழக நிகழ்ச்சிகளில் தமிழ்ப் பெருமக்களையும், கழக நிர்வாகிகளையும் மகளிர் அணியினரையும் சந்தித்து உரையாடிய விபரங்களைக் கூறினர். நமது கழகச் சொற்பொழிவாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், பல்வேறு பொது நிகழ்ச்சிகளில் மக்களைச் சந்தித்து, கழக செயல்வீரர்களுடனும் உரையாடியுள்ளனர்.

சுற்றுப்பயணத் திட்டமொன்று வகுத்துக் கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒன்றியங்களின் சார்பாகச் செயல்வீரர்கள் நிறைந்த ஆய்வரங்கக் கூட்டங்கள் கூட்டப் பெற்று ஒவ்வொரு மாதம் மூன்று நான்கு ஒன்றியக் கழகச் செயல் வீரர்களின் கலந்துரையாடலில் உரையாற்றிடவும், வாதித்திடவுமான வாய்ப்புகளைப் பெற்று துணைப் பொதுச் செயலாளர்களில் ஒருவரும் இளைஞர் அணிச் செயலாளருமான தம்பி மு.க.ஸ்டாலின் சென்னை திரும்பியவுடன்; அந்த சுற்றுப்பயண நிகழ்ச்சிகளில் கழகத்தினரிடையே பூத்துக் குலுங்கிடும் சுறுசுறுப்பையும் - விறுவிறுப்பையும் - பொதுமக்களின் ஆர்வப் பெருக்கினையும் உற்சாகத்துடன் எம்மிடம் விளக்கிக் கூறிப் பூரிப்படைந்துள்ளார்.

இதேபோல மாவட்டக் கழகச் செயலாளர்களும் - நமது மாவட்டங்களில் மாவட்ட அளவிலும் - ஒன்றியக் கழக அளவிலும் செயல்வீரர் ஆய்வரங்கங்களை நடத்தி வருவதை "முரசொலி"யில் வரும் செய்திகள் வாயிலாக அறிந்து, அகமிக மகிழ்கிறேன். கழகத்தின் மூத்த முன்னோடிகளும் மாவட்டக் கழக செயலாளர்களுமான தம்பி கோ.சி. மணி, தம்பி வீரபாண்டி ஆறுமுகம் போன்றோரும் தலைமைக் கழகம் காட்டும் வழியில் ஆங்காங்கு செயல்வீரர்களின் ஆய்வரங்குகளை நடத்தியுள்ளதோடு மற்ற மாவட்டக் கழகச் செயலாளர்களும், நிர்வாகிகளும் அவ்வழியில் நடை பயில முன்மாதிரிகளாக திகழ்கிறார்கள் என்பதையும் பணியாற்றும் கடமையிலே மாவட்ட, ஒன்றிய, நகரம், பேரூர், சிற்றூர் கிளைக் கழகத்தின் செயலாளர்கள் அனைவருமே போட்டி போட்டுக் கொண்டு செயலாற்றுகிறார்கள்.

இந்த எழுச்சிக்கும் விழிப்புணர்வுக்கும் - செயல் பாட்டுக்கும் - மூலகாரணமாக அமைந்ததுதான்; தலைமைக் கழக அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் எல்லா மாவட்டங்களின் நிர்வாகி களையும் ஏறத்தாழ ஒரு மாத காலமாக நாள்தோறும் ஒவ்வொரு மாவட்டமாக அழைத்து; ஆய்வு நடத்தி - நிறை குறைகளை விவாதித்து முடிவுகள் மேற்கொள்வதற்காக நடத்தப்பட்ட கருத்தரங்க நிகழ்ச்சிகளாகும் என்பதை; கழகத்தின் ஒவ்வொரு உடன்பிறப்பும் உணர்ந்து உவகை கொள்வதின் வாயிலாக நானறிந்து பூரித்துப் போகிறேன்.

இனியும் பெறவேண்டிய வெற்றிகளுக்கு - பெறக்கூடிய வெற்றிகளுக்கு - கழகத்தின் கொள்கை உறுதியைப் போலவே, கட்டுப்பாட்டு உறுதியும் மிகமிக அவசியமான ஒன்று என்பதை; அந்த ஆய்வுக் கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் - உணர்வுபூர்வமாகவும், உண்மை நிலை அறியும் வண்ண மும், உருக்கமாகவும், நானும் பொதுச் செயலாளரும் - பொருளாளரும் எடுத்துரைத்ததை ஒரு சிலரைத் தவிர, மற்ற எல்லா உடன்பிறப்புகளும் உணர்ந்து கொண்டு; அதன்படிக் கட்டுப்பாடு காத்து; ஒற்றுமையுடன் உழைத்திட முற்பட்டுள்ளனர் என்பதைத்தான், நேரிலே அறிந்து வந்து நெஞ்சம் குளிர என்னிடம் எடுத்துரைக்கின்றனர்; இப்போதும் அந்த மாவட்டங்களுக்குச் சென்று திரும்பிடும் இயக்கத்தின் முன்னோடிகள்!

அதில், முழு மனநிறைவு எனக்கு ஏற்பட்டு விட்டதா என்று கேட்பின்; களங்கமற்ற நீல வானத்தில் காணப்படுவதுபோல ஆங்காங்கு சில கரு மேகத் திட்டுகள் - ஆம்; நமது கழக அமைப்புகளில் தோன்றியிருப்பதை நான் மறைத்துக் கொண்டு; "ஆம், மனநிறைவு முழுமையாகத்தான்!" என்று கதைத்திட விரும்பவில்லை.

மருத்துவரிடம் நோயை மறைக்கக் கூடாதல்லவா; அது மாதிரி கழக உடன்பிறப்பாம்; இந்த இயக்கத்தின் உடலும் உயிருமான உன்னிடம் நானும் எதையும் மறைத்திட விரும்பவில்லை; காரணம் - கழகத்தின் கட்டுடல் குலையக் கூடாது என்பதிலே எனக்குள்ள கவலைதான்!

எல்லா மாவட்டக் கழக அமைப்புகளும் சரி; இன்னும் திருச்சி, இராமநாதபுரம், தூத்துக்குடி மாவட்டங்கள்! முழுமையாக சீரடையவில்லை யென்று கேள்விப்பட்டதாக ஓரிரு கடிதங்கள் வந்தன.

மீண்டும் தூத்துக்குடியை அழைத்துப் பேசி ஒழுங்குபடுத்தியுள்ளோம்.

இராமநாதபுரம்; "பொறுத்திருந்து பார்ப்போம்" என்ற பட்டியலில் வைத்துள்ளோம்.

திருச்சியில் பிரச்சினை எதுவும் "பூதாகார" வடிவு எடுக்கவில்லை. எதிர்காலத்தில் அப்படி எடுக்காமலிருக்க தடுப்பணை போட வேண்டுமல்லவா.

இதோ; இரண்டொரு நாட்களுக்கு முன்பு திருச்சியிலிருந்து தம்பி சிவா எழுதிய கடிதத்தின் சில பகுதிகள்:

"நீங்கள் கடல் அலையைப் போன்றவர். அநீதியையும், அக்கிரமத்தையும் சோர்வே இல்லாமல், ஓய்வே இல்லாமல் மீண்டும் மீண்டும் தாக்கி தகர்க்கிற இயல்பு உங்களுடையது.

சிலரைப் பற்றிய அபிப்பிராயங்கள் நாள்பட மாறும். சிலரைப் பற்றிய பிம்பங்கள் பின்னாளில் கலைந்து போகும். ஒரு சிலரைக் குறித்த எண்ணங்கள் ஏற்பட்ட விதத்திலேயே இருக்கும். இதுவே அபூர்வம்.

ஆனால் நாளாக, நாளாக வியப்புக் கூடுகிற அளவிற்கு, பிரமிப்பு பெருகுகின்ற அளவிற்கு எப்படி இது சாத்தியம் என்று ஆச்சரியப்படக்கூடிய அளவிற்கு நீங்கள் செயல்படுகின்ற விதமே நாளைக்கு ஒரு தனி வரலாறாக மாறும்.

உங்களுடைய தம்பிகள் நாங்கள் என்பதில் உண்டாகும் பெருமிதமும், உங்களுடைய படை வரிசை சிப்பாய்கள் என்பதில் ஏற்படும் கம்பீரமும் எங்களைப் பெற்றவர்கள் எங்களுக்கு தராத பெருமை.

> சோர்வின்றி கடமையாற்றும் உங்கள் பின்னால் நடக்கும் நாங்கள் எங்கள் கடமையாற்ற வேண்டுமல்லவா? உங்கள் உழைப்புக்கும், தகுதிக்கும் ஈடானதை பெற்றுத்தர பாடுபட வேண்டுமல்லவா? தகுதி, தரமற்றவர்கள் உச்சாணிக் கொம்பில் உட்கார்ந்து ஊராளும் நிலை மாறி, மக்கள் மனம் குளிர மண்ணின் மானம் காக்க அதற்கான பணியில் மக்களை ஒருமுகப்படுத்த, சிதறிக்கிடப்போரின் சிந்தனையில் கருத்து விளக்கத்தின் மூலமாக மாற்றம் ஏற்படுத்தி, ஒரு முனையில் கொண்டு வந்திடும் பொறுப்பினை அல்லும் பகலும் ஆற்றி வருகிறோம்.”

இக்கடிதத்தில் இந்தப் பகுதிகளை நான் நினைவூட்டுவதின் நோக்கம்; வேறொன்றுமில்லை; “சிதறிக்கிடப்போரை ஒரு முனையில் கொண்டு வந்திடும் பொறுப்பினை ஆற்றி வருகிறோம்; ஆற்றி வருவோம்” என்று சிவா குறிப்பிட்டிருப்பது போல - செயலாற்ற வேண்டும் என்பதுதான்.

மகத்தான பொறுப்பு மாணவர் அணி பொறுப்பு; அதனை மாநில அளவில் இன்னும் விரிவான அளவில் நானும் பேராசிரியரும் - வழங்கியுள்ள ஆலோசனைக்கேற்ப; ஒவ்வொரு கல்வி நிலையத்திலும் எண்ணிக்கை குறைவாயினும் எண்ணத்தில் இன உணர்வு, மொழி உணர்வு, நாட்டு நல உணர்வு மிக்கவர்களாக மாணவர் அமைப்புகள் எதிர்பார்த்தவாறு தோன்றிடவில்லை. ஆழமாகவும் - விரிவாகவும் - அழுத்தம் திருத்தமாகவும் - கொள்கை அடிப் படையில் உரையாற்றக்கூடிய சிவா போன்றவர்கள் தங்களை தங்கள் வட்டத்துக்குள்ளேயே சிறகடிக்கும் பறவையாக ஆக்கிக் கொள்ளாமல்; நாடு முழுதும் வட்டமிடும் வானம்பாடியாக

இருந்திட வேண்டுமென விரும்புகிற அண்ணன் நான் என்பதை உணர்ந்திட வேண்டும். அப்போதுதான் அவர் கடிதத்தில் வெளியிடும் "பாசம்" இயக்கத்திற்குக் கிடைத்திடும் பரிசாக மாறும்.

சொல் வல்லாரைப் பற்றி இதுவரை சொன்னேன். எழுத்து வல்லார் ஒருவர் திருச்சியில் உண்டு. என்பால் அவர் கொண்டுள்ள அன்புக்கும் உறவுக்கும் அவரது 'அவளைத் தேடி' என்ற நூலுக்கு நான் எழுதியுள்ள அணிந்துரையும் அதுகுறித்து அவர் அந்நூலில் படைத்துள்ள முன்னுரையுமே தக்க சான்றாகும். அந்த முன்னுரையில்;

> "சூரியனின் கதிர்களால்தான் பல உயிர்கள் கருக் கொள்கின்றன; உருக்கொள்கின்றன; உலா வருகின்றன.

எழுதும் எண்ணம் என்னுள் முதலில் கருக்கொண்டது தலைவர் கலைஞரவர்கள், மலேயா கணபதியைப் பற்றி எழுதிய ஒரு சிறுநூலைப் படித்த பின்னர்தான். தஞ்சை மாவட்டத்துத் தம்பிக்கோட்டையில் பிறந்து, மலாய் மண்ணில் மரித்துப் போன ஒரு பொது உடைமை இயக்கப் போராளியைப் பற்றிய கட்டுரை அது.

> எண்ணமெல்லாம் எரிமலையாகி எழுத்தெல்லாம் நெருப்பாகி ஓடும் அனற்பிழம்பு அந்த நூல். எழுத்துச் சூரியனான என் தலைவர் அன்று எழுதக் கருக்கொடுத் தவர் இப்போது முரசொலியில் என் எண்ணம் உலவ உருக்கொடுத்தவர். என் உடலுக்கு மறு உயிர் கொடுத்தவர். இன்று அணிந்துரையும் கொடுத்தவர்.
>
> இது கவிச்சக்கரவர்த்தி கம்பன் சொல்வதுபோல் "என் குலம் செய்த தவம்!" என் பிள்ளைகளுக்கு நான் வைத்துள்ள பல சொத்துகளிலேயே விலை மதிப்புள்ளது இந்த அணிந்துரைதான்! இது காலத்தால் அழியாதது; காலத்தின் ஏலத்தால் மலியாதது!"

எனக் குறிப்பிட்டுள்ள இந்த எழுத்து வல்லார் தம்பி செல்வேந்திரனும்; தலைமைக் கழகம் தந்துள்ள வெளியீட்டுச் செயலாளர் பொறுப்பினை; திருச்சியிலேயிருந்துதான் ஆற்றுகிறார் என்பதால் - திருச்சி யெனும் குறுகிய வான் வட்டத்திற்குள் சுழலுவதையே விரும்புகிறார். உள்ளேயிருந்து ஆற்ற வேண்டிய பணிகள் - வெளியே உலவி முடிக்க வேண்டிய வேலைகள் -

என வகுத்துக் கொள்ளாத காரணத்தால்; வனாந்திரத்தில் பெய்த மழையாகி; நாடு முழுதும் வளர வேண்டிய வயற்காடுகளுக்குப் பயன்பட வேண்டிய நேரத்தையே மறந்து விடுகிறார்.

சொல் வல்லார் - எழுத்து வல்லார் என இருவர் பற்றிக் குறிப்பிட்டேன் - திருச்சியில் செயல் வல்லார் ஒருவர் உண்டு; அவர்தான் தம்பி நேரு - அல்லும் பகலும் கழகப் பணிகள் எனச் சுற்றிச் சுழலுகிறார். எத்தனையோ ஆண்டுகளாக; அன்பு நண்பர் அன்பில் தர்மலிங்கம் எடுத்த இடையறாத முயற்சிகளால்கூட நிறைவேறாத பணியாக; திருச்சியில் தி.மு.க. மாவட்டக் கழகக் கட்டிடம் ஒன்று அமைத்திட; இருபதாயிரம் சதுர அடி மனையை திருச்சி சிந்தாமணிப் பகுதியில் விலை பேசி முடித்து ஒப்பந்தம் செய்துள்ளார் அந்த செயல் சிங்கம் எனும் மகிழ்ச்சியான செய்தியை நேற்றுத்தான் என்னிடம் தொலைபேசி வாயிலாக அறிவித்தார். சொல் வல்லார் - எழுத்து வல்லார் - செயல் வல்லார் - இந்த மூவர் மட்டுமல்ல; திருச்சி மாவட்டத்தில் தி.மு.கழகம் வளர்த்தவர்கள் - வளர்த்துக் கொண்டிருப்பவர்கள் அனைவருமே - என் சொந்தபந்தங்களே - ஆம்; என் அண்ணன் தம்பிகளே - அவர்களில் பலர் எனைத் தனிவிடுத்து இயற்கையோடு இணைந்தனர். இன்றிருப்போர் திருச்சியில் மட்டுமல்ல; இந்தத் திருநாடு முழுதும் உள்ள திராவிட இயக்கத்தினர் என் உடன்பிறப்புகளே; இதர், இனிய நண்பர்களே!

செயல் வல்லார் தம்பி நேருவிடம் ஒரே ஒரு குறை - சில நேரங்களில் புல்லாங்குழலில் எக்காள வாத்தியம் முழங்கிடுவார்! மிருதங்கத்தில் முரசம் கொட்டுவார் - நீலாம்பரி பாடிடவேண்டிய நேரத்தில் அடாணா ராகம் பாடி விடுவார். இது தவிர; எழுத்தையும் சொல்லையும் இணைத்துக் கொண்டு பணியாற்றிடவும்; அதற்கு எழுத்தும் சொல்லும் இணங்கிக் கழகம் பலமுற்றிடவும்; என் சொல் கேட்டு நடப்பரேல்;

“படைதனக்கு யானை வனப்பாகும் பெண்ணின்
இடைதனக்கு நுண்மை வனப்பாம் - நடைதனக்குக்
கோடா மொழிவனப்புக் கோற்கதுவே சேவகர்க்கு
வாடாத வன்கண் வனப்பு.”

என பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்றான “சிறுபஞ்ச மூலம்” படை வனப்பு பற்றியும், இடை வனப்பு பற்றியும், நடை

வனப்பு பற்றியும் கூறுவதுடன் போர் வீரர்களுக்குரிய வனப்பும் "கெட்டுவிடாத வீரம்" தான் எனக் கூறுகிறதே; அந்த வனப்பை திருச்சியில் கழக பாசறை வீரர்கள் பெற்றுத் திகழ்வர் - இப்போதே வனப்பு உடையவர்கள்தான் - அந்த வனப்பு; வலிமைமிகு வனப்பாக வேண்டுமென்பதுதான் என் எண்ணம்.

திருச்சிக்கு மட்டுமல்ல; தி.மு.க. பாசறைகள் அனைத்திலுமுள்ள வனப்பும் வலிவுமிக்க வீரர்கள் அனைவருக்கும் பொருந்தும் இந்த வேண்டுகோள்!

சொல்லால், எழுத்தால், செயலால் என மூன்று துறைகள் வாயிலாகவும் இயக்கம் வளர்த்துக் கொண்டிருக்கிற; அத்துறைகளில் இன்னும் முன்னேறிட முனைந்து முயற்சி மேற்கொண்டிருக்கிற மூத்த அண்ணன் நான் தீட்டும் இம்மடல் கண்டிடும் உடன்பிறப்பே; அடிக்கடி அன்புடன் நீ விசாரித்தறியும் என் உடல் நலம் பற்றி மட்டுமே கவலை கொள்ளாமல் - என் உள்ளத்தின் நலமே உடல் நலத்திற்கான வழி எனக் கருதி; அந்த மனநலம் பெற மருந்தாக உன் நிலைப்பாடு அமையுமாயின் என் உடல் நலமும் உயர் வளம் பெறும் என அறிக.

அன்புள்ள,

மு.க.

12-10-2005

3183. எங்கே பார்க்கலாம் என் தங்கைகளின் ஆற்றலை!

உடன்பிறப்பே,

திராவிட இயக்கத்தின் வித்துப் பருவமாக சுயமரியாதை இயக்கமும் - ஏறத்தாழ அதேகால கட்டத்தில் அல்லது இன்னும் பத்து ஆண்டுகளுக்கு முன்பே அந்த இயக்கத்தின் கொழுந்துவிடும் விதமாக நீதிக்கட்சி என்ற தென்னிந்திய நல உரிமைச் சங்கமும் - அதாவது தென்னிந்திய நல உரிமைச் சங்கம் 1916ஆம் ஆண்டிலிருந்தும்; சுயமரியாதை இயக்கம் 1925 ஆம் ஆண்டிலிருந்தும் தொடங்கப்பெற்று; தந்தை பெரியார் சுயமரியாதை இயக்கத் தலைமையேற்று வழிநடத்தியதும் - நீதிக் கட்சியின் முன்னோடித் தலைவர்களாக டாக்டர் நாயர், சர்.பிட்டி தியாகராயர், டாக்டர் நடேசனார் ஆகியோர் விளங்கியதும்; கால ஓட்டத்தில் பெரியார் அவர்களே; நீதிக் கட்சி என்ற அரசியல் இயக்கத்திற்கும் - சுயமரியாதை இயக்கம் என்ற சமுதாயப் புரட்சி இயக்கத்திற்கும் - தலைமை வகித்து நடத்திட வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டு; இரண்டு இயக்கங்களின் முன்னோடிகளில் ஆடவர் பெண்டிர் எனப் படித்துப் பட்டம் பெற்றோர் - 'அவர்கள் - வேறுபாடின்றி; பொதுவாக ஒரே வழியில் தந்தை பெரியார் காட்டிய தடத்திலேயே நடந்து, 1944ஆம் ஆண்டு சேலத்து மாநாட்டிலேதான் அண்ணாவின் தீர்மானமாக ஒரு தீப்பொறித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு வெள்ளையர் ஆட்சி காலத்தில் வழங்கப்பட்ட விருதுகள், பட்டம், பதவிகளைத் துறப்பதென்றும் - நமதியக்கத்தை "திராவிடர் கழகம்" எனப் பெயரிட்டு நடத்துவதென்றும் முடிவெடுக்கப்பட்டது என்பது வரலாறு! திராவிடர் கழகத்திலிருந்து அறிஞர் அண்ணாவின் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் பிரிந்து; அரசியல் சமுதாயமென இரு பணிகளையும் ஆற்றி வருகிறது.

1928-1929-ஆம், ஆண்டுகளிலேயே சுயமரியாதை இயக்க மாநாடுகளில் பெண்ணுரிமைக்கான குரல் எழுப்பப் பெற்றதுடன்; பெண்களுக்கு சொத்துரிமை வேண்டும் என்பதை வலியுறுத்தும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

விதவைத் திருமணம் - விவாகரத்து உரிமை - கலப்புத் திருமணம் - குழந்தை மணக்கொடுமை தடுத்தல் - பதவி மற்றும் உத்தியோகங்களில் பெண்களுக்கும் உரிய விகிதாசாரம் - போன்ற பெண் விடுதலைக்கான புரட்சிகரமான தீர்மானங்கள்; அந்தக் காலத்திலேயே சுயமரியாதை இயக்கத்தின் சங்க நாதங்களாயின - 1938ஆம் ஆண்டு இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தைப் பெரியார் முன்னின்று நடத்தியபோது; அண்ணா சிறை புகுந்தார் - அய்யா பெல்லாரி சிறைக்கே கொண்டு போகப்பட்டார் - அண்ணன் அழகிரி தலைமையில் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் பெரும்படை திருச்சியிலிருந்து சென்னை வரை நடைப்பயணம் மேற்கொண்டது. அந்தப் படை வரிசையில் முன்னணியில் வந்த பெருமாட்டிதான் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்.

1938 மொழிப் போரில் தம்பி ஸ்டாலினுடைய கொள்ளுப் பாட்டி ராஜாமணி அம்மையார் உள்ளிட்ட 67 மகளிர் சென்னையில் மறியல் செய்து, சிறைத் தண்டனை பெற்ற நிகழ்ச்சியையும், அந்த 67 வீராங்கனைகளின் பெயர்களையும், சென்னையில் நடைபெற்ற மாபெரும் மகளிர் பேரணியையொட்டி தியாகராய நகரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் விளக்கியிருக்கிறேன்.

அந்த மொழிப்போரில் சிறை சென்ற டாக்டர் தருமாம்பாள், இராமாமிர்தம் அம்மையார், மலர் முகத்தம்மையார், பட்டம்மாள் உள்ளிட்ட மகளிர்களின் பெயர்களை கூட்டத்தில் பட்டியலிட்டுப் பேசினேன் என்பது மாத்திரமல்லாமல் இந்த இதழிலும் அந்தப் பெயர்களைப் பதிவு செய்வது; சங்க காலத்துப் பெண்பாலோர் வீரத்தை தமிழ் மானத்துள் இணைத்துச் சொல்லியுள்ளது போல, எதிர்காலத் தமிழகத்திலும் அவர்களின் வழித்தோன்றல்களான வீரத் தமிழச்சிகள் இருந்தனர் என்பதை நினைவூட்டும் என்பதற்காகத்தான்! இதோ அந்த 67 பெயர்களை இந்த இதழ் 6ஆம் பக்கத்தில் காண்க. அவர்களில் ஆசிரியர்கள், டாக்டர்கள், தமிழ்ப் புலவர்களாக அந்த மகளிர் இருந்தனர் என்பதும், புவனேசுவரி

நடராசன் தன் கைக்குழந்தை என்.வி.என். சோமுவுடன் சிறை புகுந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கவையாகும்.

அப்பொழுதே சிறை செல்லவும் துணிந்து; மொழி காத்திடப் புறப்பட்டு தண்டனை பெற்ற தாய்மார்கள், நூற்றுக்கணக்கில் இருந்தனர். இன்று அந்தத் தொகைதான் சென்னை மகளிர் பேரணியில் மூன்று லட்சம் பேராகப் பெருகியது.

சமத்துவம் - சமதர்மம்; பொருளாதாரத்தில் மட்டுமல்ல; சமுதாயத்திலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் அட்டியின்றிக் கிடைக்க வேண்டுமென்பதற்காக பெரியார் எழுப்பிய புரட்சி முழக்கத்திற்கும் - மொழிப் போர்த் தலைமையேற்று அவர் கொட்டிய முரசத்துக்கும் நன்றி காட்டும் வண்ணமாகத்தான் 1938ல் சென்னையில் நடைபெற்ற மகளிர் மாநாடு ஒன்றில் அவருக்கு "பெரியார்" என்ற பட்டம் தரப்பட்டது என்றால்; அந்தப் பெருமையும் தமிழ்நாட்டுப் பெண்களுக்குத்தான் உரியதாகும்.

"பெண் ஏன் அடிமையானாள்?" என்று அன்றைக்கு பெரியார் எழுப்பிய வினாதான், விதையாகிச் செடியாகித் தருவாகி இன்று விரிந்து படர்ந்த கிளைகளுடனான ஆல மரமாக எழுந்து, தி.மு.க. ஆட்சியில் உள்ளாட்சி மன்றங்களிலும் உத்தியோகங்களிலும் உரிய விகிதாசாரத்தை பெற்று - இன்று நாடாளுமன்ற, சட்டமன்ற இடங்களிலும் 33 சதவிகிதம் மகளிர்க்குத் தேவையென்று வானளாவி நிற்கிற காட்சியைக் காண முடிகிறது. அந்த உரிமைப் போர்க் குரலும் உரத்துக் காதில் விழுவதைக் கேட்க முடிகிறது.

திராவிடர் கழகமும் - திராவிட முன்னேற்றக் கழகமும் இரட்டைக் குழல் துப்பாக்கியென்று அண்ணா அவர்களே அறுதியிட்டுக் கூறியதற்கேற்ப; 1967ஆம் ஆண்டு அண்ணா ஆட்சியிலிருந்தபோதே "ஆண் பெண் அடிமை நிலை" அகற்றிட சுயமரியாதை திருமணங்களை செல்லுபடியாக்கிடும் சட்டத்தை நிறைவேற்றினார்;

அண்ணாவுக்குப்பின் ஆட்சிப் பொறுப்பேற்ற நான் 1989ஆம் ஆண்டு; பெண்களுக்கு சொத்துரிமையில் சமபங்கினை உறுதியாக்கிடும் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினேன்.

அதற்குப்பிறகு பதினாறு ஆண்டுகள் கழித்து இப்போது மத்திய அரசில் "பெண்களுக்கும் சொத்துரிமை" என்ற சட்டம் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் நிறைவேற்றப்பட்டுள்ளது பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில்! திருமதி சோனியா காந்தி மற்றும் முற்போக்கு கட்சித் தலைவர்களின் துணையுடன்!

மேலும் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களுக்கு வழிகாட்டத்தக்க வண்ணம் சமூக அக்கறை கொண்டு தொண்டு புரிந்த மகளிர் குல விளக்குகளை நன்றியுடன் நினைவுகூர்ந்து அவர்களின் பெயரால் தமிழ்நாட்டில் என் தலைமையிலான கழக ஆட்சியில் எத்தனை எத்தனை திட்டங்கள்; மகளிருக்காக மட்டும் நிறைவேற்றப்பட்டுள்ளன!

- மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம்.
- டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமணத் திட்டம்.
- அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டம்.
- ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப்படிப்புத் திட்டம்.
- ஈ.வெ.ரா. மணியம்மையார் ஏழை விதவை மகள் திருமண உதவித் திட்டம்.
- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டம்.
- சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம்.
- பங்காரு அம்மையார் நினைவு மகளிர் குழுக்கள் திட்டம்.
- அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டம்.
- சத்தியவாணி முத்து அம்மையார் இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்.

- சத்தியா அம்மையார் குழந்தை காப்பகத் திட்டம்.

மகளிர் இன மாமணிகள் பெயரால் அமைந்த இந்த மகத்தான திட்டங்களையன்னியில், தொழில் முனைவோர் மகளிராயின், மானிய உதவி - மகளிர்க்கு தொழில் மனை ஒதுக்கீட்டில் முன்னுரிமை - மீனவ மகளிர்க்கு கூட்டுறவு சங்கங்களின் மூலம் இலவச மோட்டார் வாகனங்கள் 1- மகளிர்க்கு சிறு வணிகக் கடன், தினசரி மகளிர்க்கு கடன் தொகை உதவி ரூபாய் 100 முதல் ரூபாய் 5000 வரை - காவல்துறையில் பெண்கள் நியமனம்.

உடன்பிறப்பே, இவற்றையெல்லாம் நமது தமிழ் நிலத்துத் தாய்மார்கள் நன்றியுணர்வுடன் இதயத்தில் பதிய வைத்திருப்பதால்தான்; அவர்களின் நாடாளுமன்ற, சட்டமன்ற பிரதிநிதித்துவ இட ஒதுக்கீடு கோரிக்கைக்காக, சென்னையில் பேரணி நடத்தி - ஆணாதிக்கத்தின் விழிகளையும் செவிகளையும் திறக்கச் செய்யலாம் வா உரிமை முழக்கமிட! - என்று நான் அழைத்ததும் - மூன்று லட்சம் மகளிர் சென்னை "மன்றோ" சிலையருகே வந்து குழுமினர். பெரியார், அண்ணா, காமராஜர் சிலைகள் வழியே பேரணி நடத்திக் காட்டினர்.

நமது கழக மகளிர் அணி மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், அலமேலு அப்பாதுரையார், திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் ஆகியோரால் ஆரம்ப காலத்தில் அமைப்பு உருவம் பெற்றிருந்து - பொது நல சேவகி பொற்செல்வி இளமுருகு அம்மையார் போன்றவர்களும் - துணை நின்று; இன்றைக்கு "வாரீர் பேரணிக்கு" என நான் அழைத்ததும்; மூன்று லட்சம் பெண்டிர் கரங்களில்

கொடியேந்தி - முழக்கமிட்டு வந்தார்கள் என்கிறபோது.

எனக்கு அப்பொழுதே; பேரணியைப் பார்வையிட அமைத்திருந்த மேடையிலேயே தோன்றியது: பின்வரும் கருத்தாகும். அதாவது தி.மு. கழகத்தின் சார்பில் பேரணியாயினும் சீரணியாயினும் எந்த அணியை நடத்தினாலும், அந்த அணி அமைப்பு ரீதியாகவும் - அமைதியாகவும் நடைபெற ஆங்காங் குள்ள கழக அமைப்புகள் பொறுப்பேற்றுப் பொலிவும் வலிவும் மிகுந்திடும் வண்ணம் நடத்திட தலைமைக் கழகமே முன்னின்று மாவட்டக் கழக நிர்வாகிகளுடன் மகளிர் அணி நிர்வாகிகளுடன்

ஏனைய அணிகளின் நிர்வாகிகளுடன் கலந்து பேசி முடி வெடுக்க வேண்டியுள்ளது என்பதுதான் அந்தக் கருத்தாகும்.

செப்டம்பர் 15 அண்ணா பிறந்த நாளன்று பாராளுமன்ற, சட்டமன்றங்களில் இட ஒதுக்கீடுக்கான மகளிர் பேரணி; நாம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் பல மடங்கு பெரியது - அடுத்து இதுபோல ஓரணி காணுதல் எளிதல்ல! மகளிர் மட்டுமே ஒரு பேரணியில் மூன்று லட்சம் பேர் என்பது தமிழக வரலாற்றில் புதுமை - புதிய திருப்பம் என்பேன்.

சென்னையில் நடைபெற்ற அந்த சிறப்புமிகு மகளிர் பேரணியின் வெற்றிக்குப் பெரிதும் மாவட்டக் கழகச் செயலாளர்களின் உழைப்பும் பயன்பட்டிருக்கிறது. நீண்ட காலமாக மகளிர் எழுச்சியை நேரிடையாக முழு அளவில் கண்டிட அவா கொண்டவன் என்ற முறையில் ; முன்கூட்டியே பல மாவட்டச் செயலாளர்களுடன் தொடர்புகொண்டு பேசினேன்.

“முரசொலி’யில் விளக்கக் கடிதங்கள் எழுதினேன். அந்த முயற்சிகள் வீண் போகவில்லை. விளைச்சல் அமோகம் - எனினும் வெற்றி அறுவடைக்குக் காத்திருக்கிறது மகளிர் குலம்!

சொல்லால் - எழுத்தால் - செயலால் மகளிர்க்காக நாம் தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டு வந்திருக்கிறோம் - நாம் கலந்து கொண்ட கருத்தரங்குகள் ஆயினும் - கலைத்துறையாயினும் அவற்றின் வாயிலாக முன்னர் ஒரு மடலில் நான் குறிப்பிட்டுள்ளவாறு “மந்திரி குமாரி’’யில் அமுதவல்லியின் பெண்ணிய வலிமை பற்றியும்; “தேவகி’ப் படத்தில் அவள் தங்கையின் அறிவியக்க முழக்கம் பற்றியும்; “பராசக்தி’யில் விமலாவின் விவேக உரை பற்றியும்; “பாலைவன ரோஜாக்’’களில் மாவட்ட ஆட்சியராக மங்கையொருவர் காட்டும் திறன் பற்றியும் எடுத்துக்காட்டி; பெண்ணின் பெருமையை முழக்கியிருக்கிறோம். பிரச்சார வசதிகளைப் பயன்படுத்திப் பிற்போக்குவாதக் கூட்டத்தினர்கூடத் தங்களைப் பெண்ணியவாதிகள் எனக் காட்டிக் கொள்ளலாம். ஆனால் எழுத்தால், பேச்சால் மட்டுமல்ல; எண்ணத்திலும் எழுச்சியுற்ற பெண்ணுலகு காண எத்தனையோ பணிகள் செயலாலும் ஆற்றியவர்கள் நாம் என்பதற்கு அளவிடற்கரிய ஆதாரங்கள் உள்ளன நம்மிடம்.

அதற்கு அடிப்படைக் காரணம்;

“பெண்ணடிமை தீருமட்டும்; பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே”

எனப் பெரியார் வழி நின்று பாடிய புரட்சிக் கவிஞரும் -

அக்கவிஞர் மொழியைக் கலையுலகில் திரைக் காவியங்களாக - நாடக ஓவியங்களாக ஆக்கிய அறிஞர் அண்ணாவும்; நமக்குப் பெண்ணியம் பற்றிப் பேசிட, செயலாற்றிட உந்து சக்திகளன்றோ !

எனவே நமது கழக அணிகளில் எழுச்சி நடைபோடும் அணிகளில் ஒன்றாக - குறிப்பாக இளைஞர் அணிக்கு இணையாக மகளிர் அணி உருவாகிட வேண்டும் என்பதைத் துணைப் பொதுச் செயலாளர் திருமதி சற்குணபாண்டியனிடம் எடுத்துச் சொல்லி; அதற்கான முழுப் பொறுப்பையும் - ஆக்கப் பணிகளாம் ஆரம்பப் பணிகளை ஆற்றிட வேண்டிய பொறுப்பு உட்பட அனைத்துப் பணிகளையும் துணைப் பொதுச் செயலாளர்களில் ஒருவரான தம்பி மு.க. ஸ்டாலினிடம் ஒப்படைத்து; அப்பணிகள் எவ்வாறு நடைபெற வேண்டுமென்பதை நானும் பொதுச் செயலாளரும் - பொருளாளரும் - மகளிர் அணியில் பல்வேறு முக்கிய பொறுப்புக்களை வகிக்கும் - திருமதி நூர்ஜகான் பேகம், திருமதி வண்ணை தி, திருமதி சங்கரி நாராயணன், திருமதி காரல் மார்கஸ் ஆகியோருடன் கலந்து பேசி;

அந்த அடிப்படையில் இப்போது மகளிர் அணிக்கான உறுப்பினர்கள் சேர்க்கும் படிவமும் - மகளிர் அணி உறுப்பினர் அட்டையும் அச்சாகித் தயாராகியுள்ளன!

அவற்றைத் தலைமைக் கழகம் உரிய வகையில், மகளிர் அணியின் தலைமை முன்னோடிகளிடம் மாநில அளவிலும், தேவைப்பட்டால் மாவட்ட அளவிலும் கலந்து பேசி மாவட்டக் கழகச் செயலாளர்கள் மூலமாக வழங்கி ஆங்காங்கு மகளிர் அணி அமைப்புகள் - மாவட்ட அளவில், நகரங்கள் அளவில், பேரூர்கள் அளவில், ஒன்றியங்கள் அளவில், மாநகர வட்டங்கள் அளவில் அமைந்திட வழிவகுத்திட முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஏற்கனவே மேற்சொன்ன அமைப்புகளின் நிர்வாகிகளில் மகளிரும் இருக்கவேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

தி.மு.க. மகளிர் அணி

உறுப்பினர் பதிவுகான விண்ணப்பத்தாள்

தி.மு.க. மகளிர் அணிக்கான உறுப்பினர் விண்ணப்பத்தாளும், உறுப்பினருக்கான அட்டைகளும் வழங்கப்பட இருப்பவை; இக்கடிதத்துடன் படங்களாக அச்சியற்றப்பட்டுள்ளவை; தலைமைக் கழக வசம் உள்ளன. மகளிர் அணி தலைமை நிர்வாகிகளும் - மாவட்டக் கழகச் செயலாளர்களும் தலைமைக் கழகத்திடம் தொடர்பு கொண்டு, இந்த விண்ணப்பத்தாள்களையும் - உறுப்பினர் அட்டைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

இவற்றைப் பயன்படுத்திப் பணியாற்றுவதற்கான விளக்கங்கள் மேலும் தேவைப்படின்; தலைமைக் கழகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கழகத்தின் ஒவ்வொரு மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், மாநகர வட்டங்கள் எனக் கழக அமைப்புகளில் எற்கனவே பெண்களும் கழக சட்டதிட்டப்படி இடம் பெற்றுள்ளனர் - அவர்களையன்னியில் இன்னும் பலரும் "தி.மு.க. மகளிர் அணி உறுப்பினர்களாக ஆகிடும் வகையில் தொண்டு தொடங்கி; அது தொய்வின்றித் தொடர்ந்திடவும் வேண்டுமெனப் பொறுப்பான அனைவரையும் பொறுப்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

கழக மகளிர் ஆங்காங்குப் பொதுவான மக்கள் பிரச்சினைகளை - மகளிர்க்கு விளைக்கப்படும் கொடுமைகளைத் தீர்த்து வைத்திடவும் - அதற்காகப் போராடிடவும் - அறியா மக்களை அநியாயக் கொள்ளை நோய்களில் இருந்து காத்திடவும் - அறிவார்ந்த பிள்ளைகள் அந்தந்தப் பகுதிகளிலும் பட்டிதொட்டிகளிலும் வளர்ந்திட; - கல்விக் கண்களாக அமைந்திடவும் - துயர் துடைப் புப் பணிகளில் ஆதரவற்ற மக்களுக்கு அருந்துணையாக விளங்கிடவும் - போலீஸ் உடுப்பு அணியா விடினும் பொறுப்புள்ள பெண் பாதுகாவலர்களாகப் பணியாற்றப் பயிற்சி பெற்றிடவும்; இத்யாதி நற்செயல்கள்

அனைத்திலும் பங்கு கொண்டு; "மாசறு பொன்னே; இந்த மாபெரும் இயக்கத்தின் பெண்ணே " என்று மாற்றாரும் மதித்துப் போற்றிடும் வகையில் மகளிர் அணியினர் மாப்புகழ் ஈட்டிடுவீர் என்று; விரும்பி, வேண்டி, வாழ்த்துகிறேன்!

புத்தொளி பரவட்டும் - புது எழுச்சி தோன்றட்டும் - போதும் போதும் என்கிற அளவுக்கு பொதுச் செயலாளரும் நானும் பெரு மகிழ்ச்சி அடையும் வண்ணம்; இலட்சக்கணக்கில் மகளிர் உறுப்பினர்கள் எண்ணிக்கை பெருகட்டும்!

எங்கே பார்க்கலாம்; என் தங்கைகளின் ஆற்றலை!

அன்புள்ள,

மு.க.

13-10-2005

3184. பேராசிரியர் வாக்கு; இளைஞரணி பெருமித வளர்ச்சி!

உடன்பிறப்பே,

கம்பராமாயணத்தைப் பற்றிக் கடுமையான போராட்டம்; 1940களில் தமிழ்ப் புலவர்களுக்கும் தன்மான இயக்கத்தினருக்குமிடையே நடைபெற்ற போது; தமிழ் மக்களின் கவனத்தை முழுமையாக ஈர்த்த இரு நிகழ்ச்சிகள், ஒன்று சென்னையில் சட்டக் கல்லூரி மண்டபத்தில் 19.2.1943 அன்றும் - மற்றொன்று சேலம் செவ்வாய்ப்பேட்டைத் தேவாங்க பாடசாலை மண்டபத்தில் 14.3.1943 அன்றும் நடைபெற்றன.

இரண்டுமே கம்ப ராமாயணம் பற்றிய சொற்போர். இந்து மத பரிபாலன நிலையத் தலைவர் திரு. இராமச்சந்திரன் செட்டியார் தலைமையில் அறிஞர் அண்ணா அவர்களும், பெருந்தமிழ்த் தேவாரம் ஆர்.பி. சேதுப்பிள்ளை அவர்களும், அந்தச் சொற்போரில் சென்னையில் கலந்து கொண்டு வாதிட்டனர்.

அடுத்து சேலத்தில் நடந்த அதே தலைப்பிலான சொற்போரில் அறிஞர் அண்ணா அவர்களும் - தமிழ்க்கடல் எனத்தக்க நாவலர் பெருமான் சோமசுந்தர பாரதியார் அவர்களும் கலந்து கொண்டு வாதிட்டனர்.

இரு நிகழ்ச்சிகளும் - உரைகளும் - “தீ பரவட்டும்” என்ற கையடக்க நூலாக அப்போதே வெளிவந்துள்ளன.

சேலத்து நிகழ்ச்சிக்கு, சேலம் கல்லூரித் தலைமைப் பேராசிரியர் திரு. இராமசாமி (கவுண்டர்) அவர்கள் தலைமை வகித்தார்.

அவரது தலைமையுரையில்; “இன்று நமக்கெல்லாம் அரிய விருந்து - கம்ப ராமாயணம் பற்றி இரு தமிழ்நாட்டுத் தலைவர்கள் சொற்பொழிவாற்றப் போகிறார்கள்” என்று குறிப்பிட்டார். கம்ப

ராமாயணம் குறித்த விவாதத்தைத் தொடங்கி வைத்த அறிஞர் அண்ணா அவர்கள் முதலில் எழுந்து பேசிய போது பின்வருமாறு குறிப்பிட்டுத் தன் உரையை ஆரம்பம் செய்தார்.

> "இரண்டு தலைவர்கள் இன்று இங்கே வந்துள்ளனர் என்று கூட்டத்தின் தலைவர் அவர்கள் கூறினார். இங்கு வந்திருப்பது இரண்டு தலைவர்கள் அல்ல - வந்திருப்பது ஒரு தலைவரும் அவருடைய ஒரு தொண்டனுமே யாகும். நடைபெறப்போவதும் சொற்போர் என்று நான் கருதவில்லை. தலைவர் சோமசுந்தர பாரதியார் அவர்களின் தொண்டனாகிய நான், அவர் தூவிய உணர்ச்சி எனும் வித்துக்களால் விளைந்த கருத்துக்களை அவரிடம் காட்டுவதே இன்று நடைபெறப் போகும் நிகழ்ச்சியாகும்."

உடன்பிறப்பே;

34 வயதுடைய இளமைக் காலத்திலேயே எத்தகைய இனிய பண்பாடுடையவராக அண்ணா திகழ்ந்தார் என்பதற்கு; இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தில் தந்தை பெரியாருடன் இணைந்து நின்று தமிழ் மொழி காத்திடக் களம் புகுந்த சோமசுந்தர பாரதியாருக்குத் தர வேண்டிய மரியாதையை தந்திட்டதைக் காணும் பொழுது; நமக்குப் புல்லரிக்கிறதா இல்லையா?

இது நடந்தது 1943ல் - ஆனால் 1937லேயே, (22-8-1937) முசிறி வட்டம் துறையூரில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டுக்குத் தனது 28வது வயதிலேயே தலைமையேற்றபோதும் தன் தலைமை யுரையை அண்ணா பின்வருமாறுதான் தொடங்கி யுள்ளார்.

> "சுயமரியாதை இயக்கத்தில் அறிவு, அனுபவம், வயது யாவற்றாலும் என்னிலும் மிக்கார் பலர் இருக்க மிக சமீப காலத்திலே இயக்கத்திலே ஈடுபட்டு, தொண்டனாக இருந்து வரும் என்னை, இந்த மகாநாட்டுக்குத் தலைவராக இருக்கும்படி கட்டளையிட்டது எனக்கு வியப்பையே அதிகமாகத் தருகிறது. என் போன்ற 'வாலிபருக்கு' இதுபோன்ற கௌரவம் கிடைப்பது காலப்போக்கையும், நமது இயக்கத்தின் வேகத்தையுமே காட்டுகிறது. என்னை இம்முறையில் கௌரவித்த

உங்களுக்கு என் மன மார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்”

அண்ணாவின் இந்த உரை, அவரின் இளமைக் காலத்திலேயே அவர் கொண்டிருந்த அணுகுமுறையையும் - மூத்தோரை மதிக்கும் மனப்பான்மையையும் எந்த அளவுக்குப் பெற்றிருந்தார் என்பதைப் படமாகக் காட்டி; என்றைக்கும் இளைஞர்களுக்குப் பாடமாக அமைந்துள்ள ஒன்று என்பது தெளிவாகிறதல்லவா?

அவர் பெற்றிருந்த அத்தகைய அடக்க உணர்வும் - அளவிடற்கரிய ஆற்றலும்தான் நாவலர் நெடுஞ் செழியனையும், பேராசிரியர் அன்பழகனையும், நண்பர் மதியழகனையும், கடலூர் இளம்வழுதியையும், தோழர் ஈ.வெ.கி. சம்பத்தையும், அருமை நண்பர்களாம் ஆசைத்தம்பியையும், தத்துவமேதை டி.கே. சீனுவாசனையும் அவர்களோடு அன்றைய இளைஞனான என்னையும் பெரியாரின் பாசறை வீரர்களாக ஆக்கிப் பெருமைப்படுத்தியது என்பதை இன்றைய இளைஞர் சமுதாயம் படித்துணர வேண்டிய வரலாற்றின் சிறப்புமிகு அத்தியாயமாகும்.

ஆரூர் வி.எஸ்.பி. யாகூப் என்ற இஸ்லாமிய வாலிபர் தலைமையில் நானும் ஆருயிர் இளவல் இன்றைய திராவிடர் கழகத் தலைவர் வீரமணி அவர்களும், அருமைச் சகோதரர் அரங்கண்ணலும், அன்பு நண்பர் தில்லை வில்லாளனும் மாவட்டங்கள் பலவற்றில் மாணவர் சுற்றுப் பயண நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டதை, முன்பே ஓர் கடிதத்தில் நினைவுபடுத்தியுள்ளேன்.

அதற்கடுத்து அண்ணா அவர்கள் கண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தில் பிரச்சாரக் குழு உறுப்பினர்களில் ஒருவராகும் பேறு பெற்று - அதே ஆண்டு 1949 அக்டோபர் திங்கள் 17 ஆம் நாள் தூத்துக்குடியிலும், மறுநாள் அக்டோபர் 18 அன்று கோவில்பட்டியிலும் தி.மு. கழகத்தின் தொடக்க விழாவை நடத்துகின்ற பெருமையும் பெற்று - 26 வயது மட்டுமே நிரம்பிய நிலையில் அந்த இளமைப் பருவத்திலேயே கோவில் பட்டியில் 1950 ஆகஸ்டு 26-27 நாட்களில் நடை பெற்ற நெல்லை மாவட்ட தி.மு.க. மாநாட்டுக்குத் தலைமையேற்றிடும் வாய்ப்பையும் பெற்று - தலைமை முன்னுரை நிகழ்த்தியபோது, நான் ஆற்றிய உரையின் ஒரு பகுதியாக;

“தோழர்களே! தோழியர்களே!

கோவில்பட்டியில் கூடும் இம்மாநாட்டில் நான் தலைமை வகிப்பதில் குறிப்பிடத்தக்க அம்சமொன்றுள்ளது. சென்ற ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க விழாவில் கோவில்பட்டியில் நானேதான் கலந்து கொண்டேன். இப்போது அதே நகரில் மாநாட்டிலும் கலந்து கொள்கிறேன் என்பதை நினைக்கும்போது மட்டிலா மகிழ்ச்சி கொள்கிறேன்,

என்போன்றவர்களுக்கு இந்தச் சிறப்பு வழங்கப்படுவதன் நோக்கம், இயக்கம் இளைஞர்களின் சொத்து - உழைப்பாளிகள் அமைத்த மாளிகை - அதில் உல்லாச புரியினர் வாழ முடியாது என்பதை நாட்டுக்கும் - நாட்டிலே நம்மைப் பற்றி நச்சுக் கருத்துக்களை நடமாட விடுபவர்களுக்கும், எடுத்துக் காட்டத்தான் என்பது என் எண்ணம்.

தலைமை வகிப்பது என்பது கட்சியிலே ஒரு நட்சத்திரத்தை உண்டாக்குவது என்பதல்ல. அப்படி தலைமை வகிப்பவர்கள் கருதினாலும் - அல்லது தலைமை வகிப்பவரைப் பற்றிக் கருதினாலும் அது பெரும் தவறு! வரப் போகும் போராட்டங்களிலே இதுவரை கழகத்தின் சார்பாக நடைபெற்ற மாவட்ட மாநாடுகளின் தலைவர்கள் வரிசைக்கிரமமாக களத்திலே நிறுத்தப்பட வேண்டும். அந்தந்த மாவட்ட மாநாட்டுத் தலைவர்களின் சார்பாக நான் தலைமைக் கழகத்தை கேட்டுக் கொள்வதெல்லாம் 'எங்களை எதிர்காலப் போராட்டத்தின் தளபதிகளாக்குங்கள்' என்பதுதான்! மார்பிலே வேல் தாங்கி மரணத்தை அணைப்போமே தவிர மாற்றாரிடம் சரண் புக மாட்டோம். மாசற்றக் கொள்கைகளை எதிரிகட்குக் காணிக்கையாக்க மாட்டோம். இந்த உறுதியோடுதான் இன்றைய மாநாட்டுக்குத் தலைமை வகிக்கிறேன்."

என்றமைந்த அந்தப் பேச்சினிடையே, தி.மு.க. வின் அமைப்பு முறை கிளைக் கழக முதல் தலைமைக் கழகம் வரையில் எப்படி சங்கிலித் தொடர் போல இருந்திட வேண்டும் என்பதையும் வலியுறுத்திப் பேசினேன்.

தங்கம் நிகர் அண்ணன் நமை விடுத்துச் சென்ற பிறகும் -

அவர் தலைவராம் தந்தை பெரியாரும் இறுதிப் பயணம் மேற்கொண்ட பிறகும் -

சிங்கம் நிகர் உடன்பிறப்புகளாம் யாமிருக்கிறோம், அவர்கள் ஏற்றி வைத்த இரு விளக்குகளையும் திராவிடத் திருவிளக்குகளாய் அணையாமல் காத்திடுவோம் என்று சூளுரைத்துச் சுடர் முகந்தூக்கி, இடர் பல வரினும் இமைகள் கண்ணைக் காப்பது போல் கழகம் காத்து வருகிற பட்டாளத்துச் சிப்பாய்களாம் உன் போன்ற உடன்பிறப்புகளின் வரிசையில் தடங்கலோ, தயக்கமோ, தொய்வோ இன்றிப் புது ரத்தம் பாய்ச்சப்பட வேண்டும் என்ற குறிக்கோளுடன்தான்; இணை அணியாக இல்லாமல் துணை அணியாகத் தோற்றுவிக்கப்பட்ட அணிகளில் ஒன்றாக இளைஞர் அணி இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கிறது.

1980ஆம் ஆண்டு, ஜூலைத் திங்கள் 20ஆம் நாள் மதுரை ஜான்சி ராணி பூங்காவில் - மாபெருங் கூட்டத்தினிடையே - தி.மு.க. இளைஞர் அணியை நான் தொடங்கி வைத்தேன்;

அந்தக் கணக்கில்; இளைஞர் அணிக்கு இது வெள்ளி விழா ஆண்டு என்றும் - வெள்ளி விழா மாநாடு நடத்த வேண்டுமென்றும், தம்பி மு.க.) ஸ்டாலினும்;

மாநில, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்களும், என்னையும் பொதுச் செயலாளர் பேராசிரியரையும் துளைத்தெடுத்துக் கொண்டிருக்கிறார்கள், அவர்களை அமைதிப்படுத்தி; "பொறுத்திருங்கள், திருச்சியில் நடைபெற இருக்கும் தி.மு.க. மாநில மாநாட்டுடன் ஒரு நாள் மேலும் சேர்த்து உங்கள் வெள்ளி விழா மாநாட்டை நடத்திவிடலாம்" என்று உறுதி கூறியிருக்கிறோம். இது, அ.தி.மு.க. வின் தேர்தல் உறுதிபோல் ஆகி விடாது என்பதையும் கோடிட்டுக் காட்டியுள்ளோம்.

மதுரையில் இளைஞர் அணி தொடங்கியதுடன் நில்லாமல்; மாநில அளவில் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு, பின்னர் அமைப்பு முறை மாவட்ட அளவிலும் விரிவடைந்து, இறுதியாக இப்போது ஊர்கள்தோறும் - வார்டுகள் தோறும் - சார்பு மன்றங்களைப் போலவே இளைஞர் அணி அமைப்புகள் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வரும் நிலையைக் காண முடிகிறது. அவற்றில் சில வருமாறு:

● தமிழகம் முழுவதும் இளைஞர் அணி செயலாளர் தம்பி மு.க. ஸ்டாலின் சுற்றுப் பயணம் செய்து கழகக் கொடியேற்று நிகழ்ச்சிக்கு ரூபாய் 100, 200 என்று இளைஞர் அணிக்கு வளர்ச்சி நிதியாகப் பெற்று, அதன் மூலம் கிடைத்திட்ட தொகை ரூபாய் 11 இலட்சத்தை - முதலாவதாக தலைமைக் கழகத்தில் ஒப்படைத்து அன்பகத்தைப் பயன்படுத்தும் உரிமையைப் பெற்று 1988, ஜூன் 3ஆம் நாள் 'அன்பகம்' தி.மு.க. இளைஞர் அணி அலுவலகம் திறக்கப்பட்டது. மேலும் தி.மு.க. இளைஞர் அணியின் முயற்சியால் இந்த ஆண்டு (2005) அன்பகத்திற்குப் பக்கத்தில் இருந்த காலி மனை வாங்கப்பட்டுள்ளது.

● அன்பக முகப்பில் கண்ணகி சிலை அமைக்கப்பட்டது.

● கழகம் நடத்தும் விழாக்களை யொட்டி நடைபெற்று வந்த 'ஊர்வலங்கள்' - தி.மு.க. இளைஞர் அணி தொடங்கிய பிறகு 'பேரணி' என்று அழைக்கக் கூடிய பெருமையையும் பெற்றுள்ளது.

● விலைவாசி உயர்வைக் கண்டித்து 1992 மார்ச் 1 முதல் 10 வரை தமிழகம் முழுவதும் சைக்கிள் பிரச்சாரம் மற்றும் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

● தடா சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவதைக் கண்டித்து 23-3-1992 அன்று தமிழகம் முழுவதும் உள்ள மாவட்டத் தலைநகரங்களில் உண்ணா விரதப் போராட்டம் நடைபெற்றது.

● 1992 டிசம்பர் 5 முதல் 15 வரை விலைவாசி உயர்வினைக் கண்டித்தும், மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலும் பட்டி தொட்டிகள் தோறும் சைக்கிள் பிரச்சாரப் பயணம், தெருமுனைக் கூட்டங்கள் நடை பெற்றன.

● 1994 தமிழகம் முழுவதும் கிராமங்கள் - குக்கிராமங்கள் தோறும் தெரு முனைக் கூட்டங்கள் - பொதுக் கூட்டங்கள் - கழகக் கொடியேற்று நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

● 1996 ஜனவரி 5 முதல் 15 வரை சைக்கிள் பிரச்சாரப் பயணம்.

● 1997 கழக அரசின் சாதனை விளக்கக் கூட்டங்கள் தமிழகம் முழுவதும் நடத்தப்பட்டன.

● 1998 செப்டம்பர் 1 முதல் 7 வரை தமிழகம் முழுவதும் கழக அரசின் சாதனைகளை விளக்கி தெருமுனைக் கூட்டங்கள் - பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன.

● 1999 டிசம்பரில் கழக அரசின் சாதனை விளக்கக் கூட்டங்கள் தமிழகம் முழுவதும் நடத்தப்பட்டன.

● 2000, மார்ச் 10 முதல் 20 வரை கழக அரசின் சாதனை விளக்கக் கூட்டங்கள் - சைக்கிள் பிரச்சாரப் பயணம்.

தி.மு.க. இளைஞர் அணி சார்பில் இயக்க முன்னோடிகளைக் கொண்டு பயிற்சிப் பாசறைக் கூட்டங்கள் இதுவரை 22 மாவட்டங்களில் நடத்தப்பட்டுள்ளன. அனைத்து முகாம்களிலும் திராவிட இயக்க வரலாற்றுக் கண்காட்சி அமைக்கப்பட்டது.

மக்கள் விரோத ஜெயலலிதா அரசைக் கண்டித்து 2002 அக்டோபர் 21இல் தமிழகம் முழுதும் இளைஞர் அணி முன்னின்று நடத்திய மறியல் போராட்டத்தில், முன்கூட்டியே 10 ஆயிரம் பேரும்; மறியலில் ஈடுபட்டு 65 ஆயிரம் பேரும் கைதாயினர்.

இம்முறை தன்னியில் தி.மு.க. மாநாடுகளையொட்டி இளைஞர் அணியினர் பேரணிகளில் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள், பெருமிதம் வாய்ந்தவை. இளைஞர் அணிச் செயலாளர் தந்துள்ள விபரப்படி; இதுவரையில் மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டங்கள் அறுபதும்; பாசறைக் கூட்டங்கள் இணைந்து நடைபெற்ற மாவட்டங்கள் இருபத்தி இரண்டும்; மற்றும் நானும், பொதுச் செயலாளர் பேராசிரியரும், பொருளாளர் ஆர்க்காடு வீராசாமியும், கழக முன்னோடிகளும் கலந்து கொண்ட சிறப்பு நிகழ்ச்சிகளும் - பாராட்டத்தக்க அளவுக்கு நடைபெற்றுள்ளன.

இந்த அணியில் மட்டும் 16 லட்சம் பேர் இளைஞர்கள்; உறுப்பினர்களாயிருக்கின்றனர். இப்போது மேலும் பதிவாகியுள்ளோர் எண்ணிக்கை நான்கு லட்சத்து 42 ஆயிரம் பேர் என்பது நமது தலையை நிமிரச் செய்யும் தகவலாகும்.

1982ஆம் ஆண்டு; திருச்சியில் நடைபெற்ற இளைஞர் அணி விழா ஒன்றில் நமது பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியர் அவர்கள் -

> "இளைஞர் அணி நேற்றையதினம் - ஏறத்தாழ மூன்று ஆயிரம் பிரதிநிதிகள் கூடி தங்கள் ஆர்வத்தை வெளியிட்டு தி.மு. கழகம் சார்பாக இயங்கி வருகிற இளைஞர் அணி தோழர்களுக்கெல்லாம், ஆங்காங்கே தனித்தனி கிளைகளை உருவாக்கி, மிக நல்ல முறையிலே பணியாற்றுகின்ற தோழர்களுக்கெல்லாம் வழிகாட்டுவதற்கு உறுதுணையாகச் செயல்படுவதற்கு எங்களுடைய இளைஞர் அணியினுடைய செயலாளராக தோழர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இருக்க வேண்டும் என்று அந்த இளைஞர்கள் எல்லாம் திரும்பத் திரும்பக் கேட்டார்கள்.
>
> ஸ்டாலினைப் பொறுத்தவரையில் நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். அவருடைய ஆர்வம், உணர்ச்சி, துடிப்பு அத்தனையும் கலைஞர் ஒரு இளைஞராக இருந்தால் எப்படி இருக்குமோ - அந்த நிலையிலே உள்ளவர்.
>
> திராவிட முன்னேற்றக் கழகக் குடும்பத்திலே ஸ்டாலின் முழு அளவிற்குத் தன்னை ஒப்படைத்துக் கொண்டிருக்கிற போது, கலைஞரோ, அவருடைய பிள்ளைகளோ அல்லது அவரது குடும்பமோ - அந்தக் குடும்பத்தில் உள்ள அத்தனைப் பேரும் வேற்றுமை இல்லாத வகையில் கழகத்தில் தன்னை ஒப்படைத்துக் கொண்டிருக்கிறபோது, அவர்களைத் தனித் தனியாக இன்னின்ன பணிக்கு என்று பிரித்தனுப்ப வேண்டிய அவசியமே இல்லை."

உடன்பிறப்பே, பேராசிரியர் எந்த நினைப்புடன் வாழ்த்தினாரோ, அந்த நிலை பிறழாமல்; இளைஞர் அணி நடைபோட்டு வருகிறது. இந்த வெள்ளி விழா ஆண்டில் இளைஞர் அணியினருக்காக நான் ஏற்கனவே எழுதி வெளியிட்டுள்ள "அறிவுரை ஆத்திசூடி'யை மீண்டும் நினைவூட்டி என் வாழ்த்துக்களை இலட்சோப லட்சம் இளைஞர்களுக்கும் வழங்குகிறேன்.

1. அண்ணா வழி நில் !
2 ஆற்றுக பொதுப்பணி!
3. இலக்கியம் புதுக்கிடு!
4. எனரை ஒதுக்கிடும்
5. உயிர், தமிழாம் உணர்ந்திடும் !
6. ஊழலை நொறுக்கிடு!
7. எட்டப்பர் இகழ்ந்திடும்!
8. ஏறுபோல் வீறுகொள்!
9. ஐயம் களைந்து அறிவைப் பயிர் செய்!
10. ஒழுக்கம் போற்றிடும் !
11. ஓம்புக மெலியோரை!
12 ஔவைக் குலம் போற்று!
13. கழகம் வில்லாம்; நின் அணியே கணையாம்!
14. சாதியை விடுத்து சமத்துவம் முழக்கு!
15. ஞாயிறு வாழ்த்தி நாளும் உழைத்திடு!
16. தனியுடைமை தகர்த்திட தடந்தோள் தட்டு!
17. நாடு வாழ நலிவு தீர்த்திடும்!
18. பகைவர்க்கு வளையேல்!
19. மாயைக்கு மயங்கேல்!
20. வாய்மையே போர்வாள்!
21. யானை போல் பயன்படு!
22. “ழ’கரமாய்ச் சிறப்புறு!

அன்புள்ள,
மு.க.
14-10-2005

3185. இந்திரஜித் எடுத்துக்காட்டும் இலட்சியப் பயணம்!

உடன்பிறப்பே,

கழக மகளிர் அணி பற்றியும், இளைஞர் அணி பற்றியும், நேற்றும் நேற்றைக்கு முன்தினமும் எழுதிய கடிதங்களில் விளக்கமாகக் குறிப்பிட்டிருந்தேன். மாணவர் அணி போன்ற மற்றுமுள்ள அணிகள், அந்த அளவுக்கு வளர்ச்சி பெற வேண்டும், வலிவு பெற வேண்டும் என்பதே என் ஆர்வமும் - ஆழ்ந்த அக்கறையுமாகும்.

என் உணர்வையும், ஆதங்கத்தையும் புரிந்து கொண்டு; ஏனைய அணிகளை நடத்திடப் பொறுப்பேற்றுள்ள தம்பிமார்கள்; மேலும் விறுவிறுப்பாகச் செயல்படுவதென்பது ஒருபுறமிருந்தாலும்; பொதுவில் இப்போது மாணவர் சமுதாயம் எப்படி இருக்கிறது- எந்தத் திசையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை நாம் சிந்தித்தே ஆக வேண்டும்.

இளைஞர் சமுதாயம் என்று குறிப்பிட்டாலே; அதில் மாணவர்களும் அடங்குவார்கள்.

ஏறத்தாழ எழுபது ஆண்டுகளுக்கு முன்பு; தமிழகத்தில் வந்து புகுந்த இந்தி ஆதிக்கம்; தடுத்து நிறுத்தப்பட ஓர் மொழிப்போர் மட்டும் தொடங்கப்படாமல் இருந்திருந்தால்; இப்போது தமிழர்கள் இந்தியாவில் இரண்டாந்தரக் குடிமக்களாகத்தான் ஆகியிருப்பர். அந்த நிலை எய்திடாமல் தமிழ் மொழியையும் பாதுகாத்து, தமிழர்களையும் பாதுகாத்த பெருமை திராவிட இயக்கத்திற்கு உண்டு என்றாலும் -

இன உணர்வுமிக்க தமிழ்ப்புலவர் பெருமக்கள், மறைமலையடிகளார், பசுமலை சோமசுந்தர பாரதியார், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், பேராசிரியர் இலக்குவனார், காஞ்சி மணிமொழியார் போன்றவர்களும் -

அந்தப் பெருமைக்குரியவர்களின் பட்டியலில் - இடம் பெறுகிறார்கள்.

இன்னும் அந்த மொழிப் போரில் 1965ஆம் ஆண்டு களம் புகுந்த படை வரிசையில் மாணவர்களும் இடம் பெற்ற காரணத்தால் - தீக்குளித்து மாண்ட தியாகிகள் வரிசையில் வணங்கத்தக்கவர்களானது மாத்திரமன்றி; அந்த இந்தி ஆதிக்க எதிர்ப்பு; முதலில் கிளர்ச்சியாகத் தோன்றியது, மொழிப் போராக மூண்டெழுந்து; மொழிப் புரட்சி என்று உலகோர் உரைத்திடுமளவுக்கும் - அதன் விளைவாக இந்தியப் பேரரசு இறங்கி வந்து "இந்தி பேசாத மாநில மக்கள் விரும்பும் வரையில் ஆங்கிலம் பேசுவதற்கு உறுதியளித்தது" என ஆறுதல் பெறும் அளவுக்கும் - அன்று தமிழ் பாதுகாக்கப்பட்ட காரணத்தினால்தான் இன்று செம்மொழியாகும் அளவுக்கு வாழ்ந்து தமிழர்களின் சிந்தை குளிர்ந்தது என்பதற்கும் - 1938ஆம் ஆண்டு, முதல் கட்டப் போராட்டத்தில் ஓரளவு மாணவர்கள் பங்கேற்றதும் -

1965ஆம் ஆண்டு அடுத்த கட்ட போராட்டத்தில் உயிரையே பணயம் வைத்து ஆயிரமாயிரம் மாணவச் சீயங்கள்; போலீசாரின் துப்பாக்கிக் குண்டுகளைப் பூச்செண்டுகளாக மதித்து மரணத்தை மார்புறத் தழுவியதும் -

தியாக வேள்வியில் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளத் திண்தோள் தட்டி; எரிமலையெனப் பொங்கி யெழுந்த அடக்குமுறைகளை எதிர்கொண்டதும் -

என்றைக்கும் இத்தமிழ் நிலத்தின் வரலாறாகச் செதுக்கப்பட்டுள்ளவையாகும்.

1965ஆம் ஆண்டுடன் மொழிப்போர் முற்றிலும் நின்றுவிடவில்லை. 1967ஆம் ஆண்டு அறிஞர் அண்ணாவின் ஆட்சி முகிழ்த்த பிறகும் - அப்போரின் தொடர்ச்சி உருவாகிடவே; - அதையொட்டி முதல் அமைச்சர் அண்ணா அவர்கள் இனி தமிழ்நாட்டுப் பள்ளிக்கூடங்களில் தாய்மொழி தமிழும் - ஆங்கிலமும் என இருமொழித் திட்டம்தான் என்று அறிவித்தார்.

வாய்ப்பு கிடைத்தபோதெல்லாம் வாலாட்டிடத் தவறாத, இந்தி ஆதிக்கம் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழக முதலமைச்சராக இருந்தபோது;

1986ஆம் ஆண்டு மத்திய அரசு சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி "இந்தி வாரம் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும், மத்திய அரசு அலுவலகங்களிலே பணியாற்றுவோர் அனைவரும் இந்தியிலேதான் கையெழுத்துப் போட வேண்டு மென்றும் தெரிவித்து தர்பார் நடத்துவதற்குத் தயார் ஆனபோது, அதனைத் தட்டிக் கேட்க, தடுத்து நிறுத்த, தி.மு.க. போர்க்கோலம் பூண்டு; மொழிப் போரில் அண்ணா கடைப்பிடித்தவாறு அரசியல் சட்டத்தின் மொழிப் பிரிவு நகலுக்குத் தீயிடும் முறையைப் பின்பற்றி - 17-11-1986 அன்று சென்னையில் பொதுச் செயலாளர் பேராசிரியர் தலைமையில் அரசியல் சட்டமொழிப் பிரிவின் நகல் எரிப்புப் போராட்டம் தொடங்கியது. நகலை எரிக்கப் புறப்பட்ட பேராசிரியர் அவர்களை வடபழனி சிங்கார வேலர் திடலில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் நான் வழியனுப்பி வைத்து உரையாற்றினேன். மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டு கைதானவர்கள் அனைவரும் ரிமாண்டு காவலில் சிறையில் வைக்கப்பட்டிருந்தார்களே தவிர, அவர்கள் மீது வழக்கு நடை பெற்று நீதி மன்றம் குற்றவாளிகள் என்று தீர்ப்பு கூறாத நிலையிலேயே, அண்ணாவின் பெயரால் கட்சியை வைத்துக் கொண்டு ஆட்சி நடத்தியவர்கள் அரசியல் சட்ட நகலை எரித்ததைக் காரணமாகக் கூறி 24-11-1986 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் அப்போது கழகச் சட்டமன்ற உறுப்பினராக இருந்த பேராசிரியர் உள்ளிட்ட ஏழு பேரை பதவியிலிருந்தும் நீக்கிவிட்டதாக அறிவித்தார்கள். அதுவும் போதாதென்று 22-12-1986 அன்று சட்டமன்றத்திலே கழகச் சட்டப் பேரவை உறுப்பினர்கள், முன்னரே அறிவிக்கப்பட்ட ஏழுபேர் உட்பட மொத்தம் பத்துப் பேரை அதாவது பேராசிரியர், பி.பொன்னுரங்கம், சு.பாலன், அ.செல்வராசன், பரிதி. இளம்வழுதி, இரா.சின்னச்சாமி, கோவை மு.இராமநாதன், ஆலந்தூர் ஆபிரகாம், மதுராந்தகம் ஆறுமுகம், அரக்கோணம் வி.கே.ராஜு ஆகியோரை பதவி நீக்கம் செய்து ஒரு தீர்மானத்தையே அவையின் முன்னவர் நாவலர் நெடுஞ்செழியன் பேரவையில் முன்மொழிந்து நீக்கப்பட்ட கொடுமையும் நடத்தப்பட்டது.

தமிழகச் சட்டமன்றம் இந்தச் சாதனை (?) புரிந்த அதே நேரத்தில் டெல்லி மாநிலங்களவையில் தி.மு.க. உறுப்பினராக இருந்து, நெல்லையில் இதே முறையில் அரசியல் சட்ட மொழிப் பிரிவு நகலை எரித்த தம்பி வைகோ மீது மத்திய அரசு இதுபோன்ற

42246
தி 894.8116
தமுஎ.39

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்

எந்த நடவடிக்கையையும் நாடாளுமன்றத்தில் எடுக்கவில்லை யென்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அப்போது சட்டப் பேரவை உறுப்பினராக நான் இல்லாத நிலையில், 9-12-1986 அன்று இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து சட்ட நகலை எரித்ததற்காக நான், ஆர்க்காடு வீராசாமி உள்ளிட்டோர் சென்னையிலும், மற்றும் பலர் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் கைது செய்யப்பட்டோம்.

இந்தப் பழைய நிகழ்ச்சிகளையெல்லாம் இப்போது நினைவூட்டுவதற்குக் காரணம்; அன்றைய இளைஞர்களாம் மாணவர்களும் - வாழ்வில் வசந்தம் தேவைப்படுபவர்களாக இல்லாமல்; பொது நலத் தொண்டர்களாகவும், மொழி இன உணர்வு மிக்கவர்களாகவும்; இன்னும் சொல்லப்போனால் பொதுவுடைமை இயக்கம், காங்கிரஸ் பேரியக்கம் போன்றவைகளில் கூட; முறையே முற்போக்கு சிந்தனையுடையவர்களாக, நாட்டுப் பற்று மிக்கவர்களாக விளங்கி; அவற்றுக்காக மூள்கின்ற போராட்டங்களிலும் முன்னணியில் இருந்திருக்கிறார்கள் என்ற வரலாறு உண்டு.

அந்த வரலாறு பிறை போல இருந்து, வளர்ந்து, முழு நிலவாக மாறிய காட்சியையும் கண்டிருக்கிறோம் - இயற்கையை மாற்றுவது கடினமல்லவா; அதனால் அந்த வரலாறு நிலவாக மாறிய பிறகு; தேய்பிறைக் கோலம் பூணுகிற காட்சியையும் காணும் நிலை ஏற்படுகிறது! அது; நிலவைப் பொறுத்து மட்டும் இருக்கலாம் - வளர்வதும், தேய்வதும் - தேய்ந்து பிறகு வளர்வதும் - பின்னர் தேய்வதும் - இயற்கையின் நிலா விளையாட்டுக்களில் ஒன்றாக இருக்கலாம்; ஆனால் இளைஞர்களாம் மாணவர்களின் வாழ்வு அதுபோல ஒரு வட்டத்துக்குள் சுருங்கி விடலாமா?

ஓர் இளைஞன் அல்லது மாணவன்; தன்னை வளர்த்து ஆளாக்கிய பெற்றோர்க்கு ஆற்றிட வேண்டிய கடமையை கண்போல் போற்றிட வேண்டும் என்பது மட்டுமல்லாமல்; ஏற்றிடும் பொறுப்புகளால் வளமான வாழ்வும், வற்றாத புகழும் பெற வேண்டும் என நினைப்பதுடன் "பெற்ற தாயும் பிறந்த பொன் னாடும்" என்பதையும் இணைத்து நினைத்திட வேண்டுமல்லவா?

படித்து முடித்து விட்ட ஒரு மாணவன்; அல்லது ஓர் இளைஞன் - தன்னுடைய எதிர்காலத்தைப் பற்றி சிந்திப்பது;

இப்போதெல்லாம் பொது வாழ்க்கையை ஒட்டிய சிந்தனையாக இருந்தால் அது எப்படி யிருக்கிறது?

அவன் இலட்சியங்களை எண்ணுவதில்லை - கொள்கைகளை சீர்தூக்கிப் பார்ப்பதில்லை - கட்சிகளைப் பற்றியே மதிப்பீடு செய்கிறான் - எந்தக் கட்சிக்குப் போனால்; பதவிகள் பெறலாம் - எந்தக் கட்சியிலே இடம் காலியிருக்கிறது என்றுதான் சிந்தித்து முடிவெடுக்கிறானே தவிர; தன்னை ஈர்த்திடும் கொள்கைகள் பற்றியோ - இலட்சியங்கள் பற்றியோ அவன் கவலைப்படுவதில்லை.

நாட்டைப் பற்றிக் கவலைப்படுவதுபோல நடிக்கின்ற கட்சிகளின் தலைவர்களுக்குத் தொண்டனாகிட முடிவெடுக்கிறான்; அப்போதுதான் அருகிருந்து அந்த நடிப்பாற்றலைத் தானும் பெற முடியும் என்பதற்காக!

பேசும் மொழி - பிறந்த இனம் - வாழும் நாடு - வளர வேண்டிய சமுதாயம் - இவற்றைப் பற்றிக் கவலைப்படவும்; வரலாறுகளை உணரவும்; கலை இலக்கியம் கலாச்சாரம் பழம்பெரும் பண்பாடுகளைப் போற்றவும்; அவற்றை உரமாக்கிக் கொண்டு; புதுமைகளை உருவாக்கி அறிவார்ந்த செயல்களை ஆற்றிடும் ஆர்வத்தைப் பெற்றிடவும்; இன்றைய இளைஞர்கள் - மாணவர்களில் - நூற்றுக்கு இருபது பேர் கூட இல்லை என்பதுதான் யதார்த்த நிலை!

கடந்த காலத்தில் இப்படியொரு நிலை இருந்து; அதை மாற்றி அமைத்து; மாணவப் பருவத்திலேயே இளைஞர்கள் முழுமையாக அரசியலில் ஈடுபடா விடினும்; அரசியலைத் தெரிந்து வைத்துக் கொள்ளவேண்டும் என்ற ஆர்வத்தைப் பெறுவதற்கு நமது இயக்கத்தின் பணி, மாணவர்களுக்கிடையே விரிவாக நடைபெற்ற காரணத்தினால்தான்; திருச்சியில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் பெரியார் அவர்கள், கூட்டத்தினரை விளித்துப் பேசும்போது "என் வாலிப ஜீவ ரெத்தினங்களே!" என்று உணர்ச்சி பொங்கக் குறிப்பிட்டார். "ஈட்டி முனைகள்" என்று இளைஞர்களையும், மாணவர்களையும் அன்பொழுக அழைத்து, எழுதிப் பேசி அண்ணா அவர்கள் "ஆற்றோரம்" நின்று "தாழ்ந்த தமிழகத்தைத் தலை நிமிரச் செய்யும் பல தளபதிகளை உருவாக்கினார்.

இந்த இயக்கத்தினர் நானுள்ளிட்டவர்கள் மொழிப் போர் - மூட நம்பிக்கை ஒழிப்புப் போர் - பெண்கள் விடுதலைக்கான உரிமைப் போர் - சமூக நீதிப் போர் மட்டுமின்றி; சாதி பேதம், மத மாச்சரியம் - அகற்றுகின்ற போரிலும் அன்று முதல் இன்று வரை களத்தில் நிற்பவர்கள்தான் என்பதற்கு; நானே முன்னின்று சான்று கூறாமல்; இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி நண்பர் ஒருவர் காட்டும் ஆதாரத்தினையே சான்றாகக் காட்டிட விரும்புகிறேன்.

அப்போது நான் - 'முரசொலி' துண்டு வெளியீட்டின் மூலம் நமதியக்கக் கருத்துக்களை பரப்பியது போல - இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர் கோபு அவர்கள் மாணவராக இருந்த போது அவரும்; "பைந்தமிழ் இளைஞர் கழகம்" என்ற அமைப்பின் சார்பில் "பைந்தமிழ்ச் சாரல்" என்ற கையெழுத்து ஏட்டை நடத்தியிருக்கிறார்.

அவரது வரலாறு பற்றி ஒரு நூல் வெளியிட்டிருக்கிற என் அன்பு நண்பர் தோழர் த. இந்திரஜித், எம்.ஏ., அந்த நூலின் 32ஆம் பக்கத்தில் எழுதியிருப்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

"நாகையில் கோபு தங்கிப் படிப்பைத் தொடர்ந்தார். சென்ற இடத்தில் எல்லாம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை உருவாக்கும் கிரியா ஊக்கியாகவே கோபு இருந்தார்.. நாகப்பட்டினத்தில் நண்பர்களோடு சேர்ந்து "பைந்தமிழ் இளைஞர் கழகம்" என்ற அமைப்பை நடத்தினார். இந்த அமைப்பின் சார்பில் "பைந்தமிழ்ச் சாரல்" என்ற கையெழுத்து ஏட்டையும் நடத்தினார். இதே கால கட்டத்தில்தான் திருவாரூரில் கலைஞர் மு. கருணாநிதி "முரசொலி" ஏட்டைத் தொடங்கி நடத்தி வந்தார். எல்லோரும் கல்வியறிவு பெறும் வகையில் "நூலகம்" ஒன்றையும் நண்பர்களுடன் சேர்ந்து கோபு தொடங்கினார். அந்நூலகத்தை நூலகத் துறையில் பணி புரிந்து ஓய்வு பெற்ற ஒருவர் பார்த்துக் கொண்டார்.

நிறைய நூல்கள் அன்பளிப்பாக வந்து குவிந்தன. நாட்டு நடப்பை வெளிச்சம் போட்டுக் காட்டிய "பாரத தேவி, ஜனசக்தி, சுதேசமித்திரன்" போன்ற இதழ்களையும் நூலகத்திற்கு வர வழைத்துப் போட்டனர். இந்த நூல்களை வாசிக்க வாசிக்க சிந்தனையில் புதிய

பரிமாணம் ஏற்படுவதைக் கோபுவால் உணர முடிந்தது.

பைந்தமிழ் இளைஞர் கழகம் சார்பில் இலக்கிய சொற்பொழிவு, பகுத்தறிவுக் கருத்துக்களைப் பேசக் கூடிய பேச்சாளர்களை அழைத்து வந்து பேச வைத் தனர். திரு.வி.க., மறைமலை அடிகள் ஆகியோர் வந்து பேசினார்கள். 1944 வாக்கில் பகுத்தறிவுப் பிரச்சாரம் நாடு முழுக்க மாணவர்கள் மத்தியில் வேகமாகப் பரவிவந்த காலம். ஒரு இளைஞனைப் பேசுவதற்கு அழைத்து வந்தனர். ஆளைப் பார்த்தால் இவர் எங்கே பேசப் போகிறார் என்றுதான் எல்லோரும் நினைப்பார்கள். அவருக்கு இருபது வயதிற்குள்தான் இருக்கும். ஆனால் அந்த இளைஞர் வினாக்களை எழுப்பிய விதம், நிகழ்த்திய பேச்சு, கேட்டவர்கள் அனைவருக்கும் பிரமிப்பையும், அவர் கிளப்பிய வினாக்கள் மனதிற்குள் குடையவும் ஆரம்பித்தன. அவர் பேசினார் :)

“இரண்டாம் வகுப்புப் பாடப் புத்தகத்தில்
இப்படி இருக்கிறது.....

இவன் உழவன்
இவன் ஏர் உழுகிறான்.

இவன் குயவன்
இவன் மட்பாண்டம் செய்கிறான்.

இவன் தச்சன்
இவன் மரவேலை செய்கிறான்.

இவர் அய்யர்
இவர் மிகவும் நல்லவர்.

நமக்குக் கற்பிக்கும் பாடத்தில் உழைப்பவனுக்கு “அன்” விகுதி; உழைக்காமல் உண்டு கொழுக்கும் கூட்டத்திற்கு மரியாதை கொடுத்து “அர்” விகுதி; இது நியாயமா?

இதைத்தான் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் நாடு முழுக்கக் கேட்டு வருகின்றனர்” என்று பேசினார்.

இந்தப் பேச்சு கேட்டவர்கள் அனைவரையும் யோசிக்க

வைத்தது. இப்படி எழுச்சி உரை நிகழ்த்திய அந்த இளைஞனின் தோற்றமும் மறக்க முடியாத தோற்றமாக இருந்தது. ஒல்லியான தேகம், நடுவாகு எடுத்து சீவிய தலை. பளிச்சிடும் வேட்டி, ஜிப்பா, அவர்தான் பின்னால் தமிழகத்து இளைஞர்களை எழுத்தால் கட்டிப் போட்ட கலைஞர் மு. கருணாநிதி"

★

உடன்பிறப்பே,

இவ்வாறு; தோழர் கோபுவின் வரலாறு பேசும் புத்தகத்தில் நண்பர் இந்திரஜித் குறிப்பிட்டுள்ளதை; நான் எடுத்துக் காட்டுவது - என் பெயர் இடம் பெற்றுள்ளது என்ற சுய விளம்பரத்திற்காக அல்ல;

பின் எதற்காக?

இளைஞர்களாக - மாணவப் பருவத்தினராக இருந்திடும் நிலையில் எந்தவொரு இயக்கத்திலும் உணர்வும், ஆர்வமும் புதிய சிந்தனைகளும் வளர்க்கப்பட வேண்டும் என்பதைப் பொது நல உணர்வுடன் சுட்டிக்காட்டுவதற்காகவும் - அந்த மாணவர்களை, இளைஞர்களை நமது இயக்கத்திலும் நிரம்ப வளர்த்திடவும் உருவாக்கவும் வேண்டும் என்ற சுயநல உணர்வுடனும்தான் என்பதை; நான் குற்றமாகக் கருதவில்லை.

எனவே உடன்பிறப்பே, மூன்று நாட்களாக நான் எழுதிடும் இந்தக் கடிதங்கள், நமது கழகத்தில் அமைந்துள்ள அணிகள் அனைத்தும் இன்னும் வளர்ச்சியும் வலிவும் பெற்றிட; சோர்வின்றி அனைவரும் உழைத்திட வேண்டும் என்பதற்கான அன் பழைப்பாகவே கருதிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க

15-10-2005

3186. மாவலி மன்னனும்; மாமேதை இராவணனும்!

உடன்பிறப்பே,

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு 'ஓணம் பண்டிகை' பற்றி எழுதியிருந்தேன்; இன்று அத்துடன் இணைத்து "சராமலீலா" பற்றி எழுதுகிறேன்! சுருக்கமாக - ஆனால் சுவையாக இருக்கும் படிப்பதற்கு!

ஓணம் திருநாள், கேரளத்தில் மட்டுமின்றி மலையாள மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட குடும்பத்தினர் வாழுகின்ற பகுதிகள் அனைத்திலும் சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. ஓணம்; தமிழகத்திலும் பாண்டிய நாட்டில் ஒரு காலத்தில் கொண்டாடப்பட்டதற்கான சான்று உண்டு என்பதை சங்க இலக்கியமாம் "மதுரைக் காஞ்சி" யிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது.

"மாயோன் மேய ஓண நல் நாள்" என்று சிறப்பித்துக் கூறும், மாங்குடி மருதனார் பாடிய மதுரைக் காஞ்சியில்; ஓணம் விழாவை எப்படிக் கொண்டாடினர் என்பது பின்வருமாறு படம் பிடித்துக் காட்டப்படுகிறது.

"போரில் புறங்காட்டாமல் நின்றதால் வடுக்கள் ஏந்திய நெற்றியை உடைய மறவர்கள் திருமால் பிறந்த திருவோணம் எனப்படும் நாளில் ஓணம் விழாவை; அங்குசத்தால் முகத்தில் தாங்கிய காயங்களின் வடுக்களை உடைய; ஆண் யானைகள் இரண்டை - ஒன்றோடு ஒன்றை மோதவிட்டு அப் போரினைக் காண வருவோர் அருகில் வராதிருக்க வேண்டி; நெடிய கரையினை எழுப்பி; அதன் மீதுள்ள பருக்கைக் கற்கள் தமது பாதங்களில் குத்தி வருத்துவதையும் அறியாமல் தேறல் அருந்தி மகிழ்ந்து ஆடுவார்கள்.

இப்படி ஓணம் பண்டிகை தமிழ் மன்னர்கள் காலத்திலும் இங்கே கொண்டாடப்பெற்று; இப்பொழுது மளையாள மொழிக்காரர்களின் திருவிழாவாக நடத்தப்பெறுகிறது.

திருமாலின் சிறப்பைக் கூறும் மதுரைக் காஞ்சி தத் திருமால்; அவுணர்கள் எனப்படும் அசுரர்களை அழித்தவர் எனப் பொருள் கொண்டதால்; அந்த அசுரர்கள் இராவணன், இரணியன் என்று உரைப்போரும் உண்டு!

அந்த அசுரர் வரிசையிலேதான் "மகாபலிச் சக்கரவர்த்தி" யையும் கொண்டு வந்து நிறுத்தி; அந்த மகாபலி மகாக் கொடியோன் என சித்தரித்து, அவனை அழிக்க திருமால், வாமனாவதாரம் எடுத்து மூன்றடி மண் கேட்டு, அவன் தலையில் கடைசி அடியை வைத்து அழுத்திப் புதைத்து விட்டு, அமர லோகவாசிகளான ஆரிய தேவர்களைக் காப்பாற்றினார் என்று புராணக் கதை கூறி; அந்த அசுர மன்னன் பெயரால்தான் மகாபலிபுரம் விளங்குவதாக இன்றைக்கும் கூறிக் கொண்டிருப்போர் பலர்!

காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு பல்லவப் பேரரசை ஆண்ட நரசிம்மவர்ம பல்லவன்; மற்போரிலும் பல வெற்றிகளைக் கண்டு 'மாமல்லன்' எனப் புகழப்பட்டவன்.

அந்தப் பெயர்தான் மாமல்லபுரம் என அப்பகுதியின் புகழ் பரப்பும் பெயராயிற்று - அதை மகாபலிபுரம் என்பது புராணீக ஆதிக்கத்தின் வெற்றியாகுமன்றோ! சரித்திர உண்மையின் வீழ்ச்சிக்கு அடையாள மன்றோ!

கேரளத்தில் ஓணம் பண்டிகைக்கு கூறப்படும் கதை என்ன?

மாவலியென ஒரு மன்னன் இருந்தான் - அவன் ஆட்சியில் அனைத்து மக்களும் மகிழ்ச்சியுடன் இருந்தனர். மாவலி மன்னன் நல்லவன், வல்லவன் என்று பெயர் பெற்றான். மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்று; மாவலி மன்னன் ஆட்சி நடத்தியதால் அவனை வீழ்த்த முடியவில்லை. எனவே அவன் ஆட்சியே நீண்ட காலம் நடைபெற்றால், ஆரியர்களான தேவர்கள் எப்போது ஆட்சிக்கு வருவது? ஆகையால் அவனை ஒழிக்க வேண்டுமென்று தேவாதி தேவர்கள் திருமாலிடம் சென்று முறையிட்டனர்.

திருமால்; மாவலி மன்னனைச் சந்தித்து; "உன்னை கொடையாளி என்கிறார்களே; எனக்கு மூன்றடி மண் கொடு" எனக் கேட்கிறார்.

மன்னன் தருவதாக வாக்களிக்கிறான். "அது மோசடி; ஒப்புக் கொள்ளாதே!" என்று மாவலி மன்னனின் குரு தடுக்கிறார். மன்னன், வாக்குறுதி மீறாமல் மூன்றடி மண் தர ஒப்புகிறான். திருமால், ஒரு அடியை மண்ணிலும், ஒரு அடியை விண்ணிலும் அளந்து விட்டு; மூன்றாவது அடியை அவன் தலையிலே வைத்து - அவனை அழித்து விடுகிறார்.

இப்படிப் போகிறது கதை! மாவலி மன்னன், ஆட்சியை நன்றாக நடத்தியது பிடிக்காமல்; அவனை கடவுளே வந்து அழித்தார் என்பதே கேரளத்தில் வழங்கும் கதை!

கேரளத்தில் மாவலி மன்னன் நல்லவன் - நல்லாட்சி நடத்தியவன் - இறந்துபோன அவனை ஒவ்வொருவரும் தங்கள் வீட்டுக்கு ஒவ்வொரு ஆண்டும் வரவேற்று மகிழ்கிற விழாதான் ஓணம் பண்டிகை!

ஆனால் இங்கே தமிழகத்தில் மாவலியை; மகாபலி என அழைத்து, அவன் மகாமூர்க்கன் என்றுதான் சபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல; இதே மாவலி; கேரளத்தில் நல்லாட்சி நடத்தியதாகத்தான் இன்றளவும் பேசப்படுகிறான்.

உடன்பிறப்பே, அய்யர், அய்யங்கார்கள் எழுதிய வரலாறுகளாயினும்; ஆசிய ஜோதி பண்டித நேரு அவர்கள் படைத்திட்ட சரித்திரமாயினும்; அவற்றில் எல்லாம் இராம இராவண யுத்தம் - மகா பாரத யுத்தம் இவைகளை நடத்தியவர்கள் வரலாற்று நாயகர்கள் அல்ல என்றும், இதிகாச புராணங்களுக்கென்று பழம் பெரும் நூலாசிரியர்கள் - கவிஞர்கள் படைத்திட்ட பாத்திரங்கள் தானென்றும் தெளிவுபடுத்தியுள்ளார்கள். அந்தப் பார்வையில்தான் மாவலி மன்னனும்; வீரமும் விவேகமும் மிக்கவனாக - குடி மக்களின் கோரிக்கைகளையேற்கும் குணாளனாக ஒரு கதாபாத்திர அளவில் படைக்கப்பட்டிருக்கக் கூடும் என்றுதான் கருதிட வேண்டியுள்ளது.

இவ்வாறு கூறினால்; இங்குள்ள மிகப் பெரியவர்கள் எனத் தங்களை எண்ணிக் கொள்பவர்கள், நம் மீது சீறி விழுந்து "இதுகள் எப்போதும் இப்படித்தான்" என்று நெற்றியைச் சுருக்கி - நெருப்பு விழி காட்டுவார்கள் - ஆனால் உடன்பிறப்பே; இன்றைய தினம் என்னுடைய இந்தக் கருத்துக்கு முழுமையாக நெருங்கி வந்து விடாவிட்டாலும்; வருவதற்கு எத்தனிக்கிற - பாதி வழிநெருங்கி விட்டவர்கள் சிலர் அந்தப் பகுதியிலும் இருக்கிறார்கள் என்பதை ஒரு பத்திரிகைச் செய்தியைப் படித்துப் புரிந்து கொள்ள முடிகிறது.

இதோ அந்தச் செய்தி வருமாறு:

முசாபர்நகர், அக்.13.

ராம்லீலா பண்டிகையின்போது ஒவ்வொரு ஆண்டும் ராவணனின் உருவ பொம்மையை எரிப்பது வழக்கம். ஆனால், உத்தரப் பிரதேச மாநிலத்தில் நேற்று பெற்றோர்கள் தங்கள் குழந்தை கள் நல்ல முறையில் கல்வி கற்க வேண்டும் என வேண்டி ராவணன் உருவப் பொம்மைக்கு முன்பு அவர்களுக்கு மொட்டை போட்டனர்.

ராமாயணத்தில் மிகப் பெரும் கதாபாத்திரம் ராவணன். இலங்கை மன்னனான இவன், ராமனின் மனைவி சீதையை கவர்ந்து சென்ற குற்றத்திற்காக அந்தக் கதையின் வில்லனாக வர்ணிக்கப்படுகிறான். ஆனால், சிவ பெருமானின் நேரடி அருள் பெற்ற புண்ணியம் பெற்றவன் என்பது ராவணனின் சிறப்பம்சம். வட மாநிலங்களில் ராம்லீலா பண்டிகை புகழ் பெற்றது. ராவணனுக்கு எதிராக ராமன் வெற்றி பெற்றதை கொண்டாடும் விதமாக இந்தப் பண்டிகையின்போது, ராவணனின் உருவப் பொம்மை தீ வைத்து எரிக்கப் படுவது வழக்கம்.

ஆனால் உ.பி., மாநிலம் முசாபர் நகரில் உள்ள படேல் நகரில் ராம்லீலா விழா நேற்று கொண்டாடப்பட்டது. அப் போது ராவணனின் உருவ பொம்மைக்கு கீழ் தங்கள் குழந்தைகளுக்கு தலை முடியை மழித்து மொட்டை போட்டனர். இது குறித்து அவர்கள் கூறுகையில், "என்னதான் சீதையை கடத்திச் சென்றவன்

என்றாலும்கூட, அறிவு, வீரம், விவேகம், துணிச்சல், கல்வித் திறம் ஆகியவற்றில் ராவணன் சிறந்தவன். அவனது அனைத்துக் குணங்களும் மதிக்கத்தக்கவை. அவனது ஆற்றல்கள் எங்களது குழந்தைகளுக்கும் வளரும்போது கிடைக்க வேண்டுமென்று வேண்டி, முடி காணிக்கை செலுத்துகிறோம்" என்றனர். கடைசி குழந்தைக்கு மொட்டை போட்டு முடிந்தவுடன் ராவணன், மேகனாதன், கும்பகர்ணன் ஆகியோரது உருவ பொம்மைகளை தீயிட்டு எரித்து விட்டனர்."

இப்படியொரு செய்தியை வெளியிட்டிருப்பது முரசொலி', 'தினகரன்' இதழ்களல்ல; வேறு எந்த ஏடு என்று ஆவலுடன் கேட்கத் தோன்றும். 13-10-2005 சென்னையில் வெளிவந்துள்ள 'தினமலர்' ஏட்டிலேதான் இச்செய்தி வந்துள்ளது. "ராவணன் உருவ பொம்மை முன்பு குழந்தைகளுக்கு மொட்டை" என்பது இந்தச் செய்திக்குத் தலைப்பு! -

"என்னதான் சீதையைக் கடத்திச் சென்றவன் என்றாலும்கூட;"

எனக் குறிப்பிட்டுவிட்டு - அந்தச் செய்தியில் "அறிவு, வீரம், விவேகம், துணிச்சல், கல்வித்திறம் ஆகியவற்றில் ராவணன் சிறந்தவன், அவனது அனைத்துக் குணங்களும் மதிக்கத்தக்கவை" என்று பாராட்டியுள்ள பகுதியை நாமும் எவ்வளவு பாராட்டினாலும் தகுமல்லவா?

"ஏன்; சீதையைக் கடத்தினேன்? என் தங்கைக்கு

இழைக்கப்பட்ட இரக்கமற்ற கொடுமைக்கு -
பரிகாரமாகத்தானே!"

என்று; அண்ணா அவர்கள் இராவணன் வேடம் தாங்கி, அவரே எழுதி நடித்த "நீதி தேவன் மயக்கம்" நாடகத்தில்; நியாயம் கேட்பாரே - கம்பரைப் பார்த்து; அப்போது அண்ணாவையும், அவர் எழுதி நடித்த நாடகத்தையும் இந்த இயக்கத்தையும் இழித்துரைத்த அந்தக் காலத்தையும்; இன்றைக்கு தின மலரே, "என்னதான் ராவணன் சீதையைக் கடத்திச் சென்றவன் என்றாலும்கூட; அவன் வீரன் - அறிவாளி - விவேகி - துணிவுடையவன் - கல்வித் திறம் கொண்டவன்" என்று பாராட்டுகிற இந்தக் காலத்தையும் ('தினமலர்' ஏற்காவிடினும்) எண்ணிப் பார்த்தால்; "முசாபர்நகர்"

மக்கள், மொட்டை போட்டு ராவணனுக்கு காணிக்கை செலுத்தியதைக் காணும்போது மறுக்க முடியாமல் ஏற்றிடக் கூடிய மறுமலர்ச்சி தற்போது தோன்றியுள்ளதை உணர முடிகிறதல்லவா?

அந்த இராவணன் புகழ்பாடி புலவர் குழந்தை எழுதிய இராவண காவியம்தான் தமிழ்நாடு அரசினால் 1948ஆம் ஆண்டு தடை செய்யப்பட்டிருந்தது. அந்தத் தடை 17-5-1971 அன்று என் தலைமையில் இருந்த தி.மு.க. ஆட்சியில்தான் நீக்கப்பட்டது.

1964ஆம் ஆண்டிலேயே "தென்னவன் காதை" என்ற தலைப்பில் 'முரசொலி' பொங்கல் மலரில் இராவணன் பற்றி நான் எழுதிய கவிதையின் தொடக்கப் பகுதியைப் படித்துப் பார்த்தால்; 'இராவண காவியத்திற்கு' விதிக்கப்பட்ட தடையை நீக்கிட; என் பேனா போர்வாளாக மாறி; அத் தடையை வெட்டி எறிந்ததில் வியப்பொன்றும் ஏற்படாதல்லவா?

இதோ "தென்னவன் காதை" தொடக்கப் பகுதி :

"குறுந்தாடி; குள்ளத்தாடி; நெடுந்தாடி; வெள்ளைத்தாடி;
இப்படிப் பல தாடியுடனே....
புராண அங்காடி விரித்துப் புளிக்கும் பழங்காடி சுவைத்துப்
போதை யேறிக் கூத்தாடும் பூசுரர்கள் கூட்டம்.....
மாசு, மறு அற்றிருந்த மண்டிலத்தின் ஓரம்
மாடுகளை, ஆடுகளை, மனிதர்களை வெட்டிப் பிண
மேடுகளை வேள்விக்கெனக் குவித்து வந்த வேளை!
ஆரியரின் படையெடுப்பால்..... இல்லை .....
இடைநெளிவால்....கடை விழியால்.....இருடிகளின்
இன்பரச பானத்தால் - இருண்டுவிட்ட தென்புலத்தில் -
ஏற்றிவிட்ட விளக்குப் போல
எழுந்து நின்றான் இலங்கை வேந்தன்!
அவன் சரிதம் சொல்வதென்றால்....தசையெல்லாம்
ஆடுதய்யோ! திசையெட்டும் புகழ் சேர்த்த
தென்னிலங்கைக் கோமான், திராவிடரின் மூதாதை!
பழத் தமிழின்பால் பற்றுதலை வைத்த நம் பாட்டன்.
கண்ணுக்குள் பாவை போல் இலங்கைத் தீவு;
கருவிழிதான் ஆழ் கடல்கள்! தமிழ்
மண்ணுக்குப் புகழ் தந்த பெருவீரன்.

உருவில் சிங்கம், உள்ளம் தங்கம்! யாழ்ப்
பண்ணுக்கு யாரும் நிகரில்லையென வாழ்ந்த
யாழ்ப்பாணத் திருநாட்டான் - மலைத் தமிழன்!
அவன் துணைவி, வண்டமரும் பூங்குழலாள்
மண்டோதரி - மாதர் குல மாணிக்கம் - எதிர் வீணை மீட்டும்
பேச்சுக்காரி.....இராவணனின் யாழோசை
தோற்ப தெல்லாம்.....பத்தினியின் பள்ளியறைக்
கனி மொழியின் முன்னேதான்!
இமைக் கதவு உண்டே எழில் விழியைக் காப்பதற்கு;
அப்படித்தான் - இலங்கைக்கு இராவணன்!

அவனுக்கு அவள்!
காடுகளில் நமதெல்லைக் கோடுகளில் ஆரியர்கள்,
கடவுளுக்குப் பலி தேடும் வேலை, ஆகாது
கொடுமையென உருவினான் உடைவாளை!

பார்ணசாலை அழைப்புகள் முத்தமிட்டன அவன்தாளை,
அந்தப் பருவ மங்கையரின் சிரிப்போ விளைந்த பாளை!
அட; தொடுவேனோ ஆரியத் தேளை என
எதிர்ப்புக் குரல் கொடுத்தான் அந்தக் காளை!.....

நரிகள் உள்ள காடெல்லாம், நயவஞ்சகர் உலவும்
நாடெல்லாம் காவல்! காவல்! அந்தப் படைகளுக்கு
இராவணன், காலம் காட்டும் சேவல்! சேவல்!"

குறிப்பு :- 'சங்கொலி' திருநாவுக்கரசு அவர்கள் முன்னின்று சென்னை சிந்தனையாளர் மன்றம் சார்பில் 1-10-2005 அன்று "இராவண காவியம்" தொடர் நிகழ்ச்சியை; நமது பொதுச் செயலாளர் பேராசிரியர் - சிலம்பொலி செல்லப்பனார் ஆகியோரைக் கொண்டு தொடங்கியுள்ள இந்தக் காலகட்டத்தில் - இந்தக் கடிதம் - பொருத்தமான நேரத்தில் உனக்குக் கிடைத்திருப்பதில் எனக்கோர் மகிழ்ச்சி.

அன்புள்ள,

மு.க

17-10-2005

3187. சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2006 (1)

கையில் எடுத்த பேனா;
கல்லறை செல்லும் வரையில்!

உடன்பிறப்பே,

அறிஞர் அண்ணா அவர்களால் தொடங்கப் பெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை, குறிக்கோள், சட்ட திட்டப் புத்தகத்தில் கண்டுள்ளபடி;

குறிக்கோள்

“தமிழகம், ஆந்திரம், கேரளம், கருநாடகம் ஆகிய நான்கு மொழி வழி மாநிலங்களிலும் இந்திய அரசுரிமை ஒருமைத்தன்மை , அரசியல் அமைப்புச் சட்டம் ஆகியவற்றுக்கு உட்பட்டு நெருங்கிய திராவிட கலாச் சார கூட்டுறவு நிலவப் பாடுபடுவது, அரசியல் நிர்ணயச் சட்டத்தில் முழு நம்பிக்கையும், பற்றுறுதியும் கொண்டு சமதர்மம், சமயச்சார்பின்மை , ஜனநாயகம் ஆகிய லட்சியங்களில் முழு ஈடுபாடும், பற்றும் கொண்டு, இந்திய நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகிய வற்றைக் கட்டிக் காப்பது என்பது தி.மு. கழகத்தின் குறிக்கோள் ஆகும் “

கோட்பாடு

“கடமை - கண்ணியம் - கட்டுப் பாடு அடிப்படையில், அரசியலில் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்து, ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத் திடவும்; பகுத்தறிவு அடிப்படையில் மறுமலர்ச்சிக்கான சீர்திருத்தப் பணி ஆற்றிடவும்; பொருளாதாரத் துறை யில் வறுமையை வென்று, சமதர்ம அடிப்படையில் எல்லோரும் நல்வாழ்வு பெற வழிவகை கண்டிடவும்; பிற மொழி ஆதிக்கத்திற்கு இடங்கொடா மல் அந்தந்த மாநில மொழிகளை

வளர்த்திடவும் அவைகளுக்கான உரிய இடத்தைப் பெற்றுத் தரவும்; மத்திய அரசில் குவிந்து கிடக்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு, மாநிலங்களில் சுயாட்சியும் - மத்தியில் கூட்டாட்சியும் (Autonomy for States and Federation at Centre) உருவாகிடவும் தொண்டாற்றுவது."

உடன்பிறப்பே, இந்தக் குறிக்கோளும் கோட் பாடும் - திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளாக வெற்றி பெறவும் தந்தை பெரியார் நிறைவேற்ற விரும்பிப் பாடுபட்ட சமுதாய முன்னேற்றத் திட்டங்கள் நிறைவேறிடவும் அண்ணா வழியில் அயராது உழைத்திட; தி.மு.கழகம் அரசியலி லும் ஈடுபாடு கொண்டு; தேர்தலிலும் நிற்பதற்கு 1957ஆம் ஆண்டு முடிவெடுத்து - அந்த ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 15 இடங்களில் வெற்றி பெற்று - 1962இல் நடைபெற்ற தேர்தலில் 50 இடங்களில் வெற்றிபெற்று எதிர்க்கட்சியாகவும், 1967இல் நடைபெற்ற தேர்தலில் அண்ணா தலைமையில் ஆட்சி அமைத்தும் - அதன் பிறகு 1971 - 1989 - 1996 தேர்தல்களில் வெற்றி பெற்றும் - இடையே சில தேர்தல்களில் வெற்றி வாய்ப்பை இழந்தும்; வெற்றி யிலும் தோல்வியிலும் அடிப்படைக் கொள்கைகளை நிறைவேற்றுவதில் அக்கறை கொண்டு - தமிழக வளம் உயர்ந்திடவும் - தமிழ் மக்கள் நலம் பெருகிடவும் பெரும்பணியாற்றியுள்ளது. அந்த நிலையில் இப்போது 2006ஆம் ஆண்டு சட்டமன்றப் பொதுத் தேர்தலைச் சந்திக்க இருக்கிறது கழகம் - அதுபற்றியே இந்த முதல் கடிதம்.

இந்தக் கடிதம் உன் கையில் கிடைக்கும்போது; "ஓ! இந்த நாள் நவம்பர் 1ந்தேதி ஆயிற்றே - இன்னும் 30 நாள்களுக்குப் பிறகு, டிசம்பர் மாதம் தொடங்கி அதுவும் 31 நாள்கள் - ஆக மொத்தம் 61 நாள்களுக்குப் பிறகு, 2006ஆம் ஆண்டு எனும் புத்தாண்டு பிறந்து விடுமே! அந்தப் புத்தாண்டு, மே மாதத்திலேதான் தமிழகச் சட்டமன்றப் பொதுத் தேர்தலைச் சந்திக்கக் கூடிய வாய்ப்பு - என்பதால் - ஏறத்தாழக் கணக்கிட்டுப் பார்க்கும்போது, மார்ச் மாதம் முடிய 150 நாள்கள் - அதன்பிறகு ஏப்ரல் மாதம் மே மாதத்தில் சில நாள்கள் - ஆம்; சுமாராக அந்த நாற்பது நாள்களும் ஜனநாயகக் கடமையாற்றிட நேரடியாகவே களத்தில் இறங்கிப் பணியாற்றிட வேண்டிய நாள்கள். எனவே அந்த அறப் போராட்டத்திற்கான

ஆயத்தப் பணிகளில் ஈடுபட 150 நாள்களும் - களத்தில் கடமை யாற்றிட நாற்பது நாள்களும் இருக்கின்றன.

ஆம்; சட்டமன்றப் பொதுத் தேர்தலுக்கு இன்னும் 150 நாள்களே தான் இருக்கின்றன - அதாவது 3600 மணி நேரம்தான் இருக்கிறது - அதுவும் நாளொன்றுக்கு 24 மணி நேரமும் தேர்தலுக்கான ஆயத்தப் பணிகளில் ஈடுபடும்போது - உண்ண, உறங்க, ஓய்வு கொள்ள என்று 6 மணி நேரம் போக; நாள்தோறும் 18 மணி நேரம் என வைத்துக் கொண்டால்; மொத்தமாக ஆயத்தப் பணிகள் உள்ளிட்ட தேர்தல் பணிகளை ஆற்றிட 2700 மணி நேரம்தான் கிடைக்கும். இதிலும்கூட பொதுவானதாகவோ, தனிப்பட்ட முறையிலோ - நமது கூட்டணியின் செயல் வீரர்கள், எதிர்பாராத சில நிகழ்வுகளுக்காக மொத்தம் 200 மணி நேரம் கழித்து விட்டால் மீதம் 2500 மணி நேரம்தான் - நாள்கள் கணக்கிட்டால் 2500 மணி நேரத்துக்கு; பயணம் செய்தல் போன்ற பல நிகழ்வுகள் போக 100 நாள்கள் முழுமையாக ஆக்கப் பணிகள் ஆற்றிட வேண்டியிருக்கும். எனவே எல்லா வழிமுறைகளையும் - பணிகளையும் - எதிர்பாரா நிகழ்வுகளையும் கூட்டிக் கழித்துப் பார்க்கும்போது கழக உடன்பிறப்புகளும், நமது கூட்டணிக் கட்சிகளின் செயல்வீரர்களும் ஆக்கப் பணிக்கென 100 நாள்களும், நேரடிக் களப்பணிக்கென ஏப்ரல் மாதம் முதல், தேர்தல் நாள் முடிய 40 நாள்களும் ஒதுக்கிக் கொண்டு உழைத்திட வேண்டும்.

இப்போதே ஆளுங்கட்சியினர் சுவர்களில் சின்னங் களை எழுதத் தொடங்கி விட்டார்கள் என்றும்,

நமது கூட்டணியின் செயல்வீரர்களை மிரட்டு வதிலும், வேறு விதமாக வலை வீசிப் பிடித்து ஆளுங் கட்சிக்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்குவதிலும்,

பொய் வழக்குகள் புனைவதிலும் காவல் துறையில் உள்ள ஆளுங்கட்சி விசுவாசிகள் ஆங்காங்கு தங்களால் இயன்ற அளவுக்கு காரியமாற்றிடத் தொடங்கியுள்ளார்கள் என்றும்

அன்றாடம் செய்திகள் வந்தவண்ணமிருக்கின்றன.

“ஆயிரம் பேர் சேர்ந்தனர் - இரண்டாயிரம் பேர் சேர்ந்தனர்’’ என்று “அம்மை’யின் முன்னால்; ஆதி காலத்து அ.தி.மு.க. உறுப்பினர்களையோ அல்லது அன்றாடக் கூலிக்கு அமர்த்தப்பட்டவர்களையோ நிறுத்திக் காண்பித்து

புகைப்படமெடுத்து அவற்றைப் போடுவதற்கென்றே இருக்கின்ற ஏடுகளில் வெளி யிட்டுக் களிக்கின்ற வெத்து வேட்டு விளம்பர வெளிச் சங்களும் குறைவில்லாமல் காட்டப்படத் தொடங்கியுள்ளன.

யார் அந்த காவல் துறை அதிகாரிகள் என்று அறிந்து கொள்ள ஆவலாக இருக்கும் உன் போன் றோருக்கு! அவசரப்பட வேண்டாம் - அன்று 1971இல் இப்படித்தான் தி.மு.க.வுக்கு எதிராகத் தேர்தல் பணியாற்றியது மட்டுமல்லாமல் - தேர்தலுக்கு முதல் நாளே; எதிர்தரப்புத் தலைவர்களுக்கு ஆளுயர மாலை போட்டு ஆசிர்வாதம் பெற்ற பெரிய ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகள்; தேர்தல் முடிந்து; இதுவரை யில் தமிழ்நாட்டு வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு 184 இடங்களில் தி.மு.க. வெற்றிபெற்று - அ°தன்னியில் 26 இடங்களில் தி.மு.க. தோழமைக் கட்சிகள் வெற்றி பெற்றபோது; வாக்கு எண்ணிக்கை நாள் வரையில் தி.மு.க. அணிக்கு எதிரணியாகவே செயல்பட்டுக் கொண்டிருந்த அந்த ஒரு சில ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகள் என்ன ஆனார்கள்? எப்படி மக்களுக்கு அடையாளம் காட்டப்பட்டார்கள் என்பதை நாடறியும்!

தந்தை பெரியார் அவர்கள் தி.மு.க. வெற்றிக்காக செய்த பிரச்சாரத்தைத் திசை திருப்பி; பத்திரிகை சுதந்திரத்திற்குப் பகையாக தி.மு.க. இருப்பதைப் போன்ற நடவடிக்கைகளை அந்த அதிகாரிகளே எடுத்து - அந்த அடிப்படையில் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு பெரியார் மற்றும் தி.மு.க. மீது நடத் தப்பட்ட நச்சுப் பிரச்சாரத்தை மேலும் மேலும் விரிவாகச் செய்தும்கூட - இறுதியில் நமது அணியே வெற்றி பெற்றது என்பதும் - பெரியார் அவர்கள் அந்த வெற்றிக்காக எனக்கு வாழ்த்துரைத்து திருச்சி யிலிருந்து அனுப்பிய தந்தியில் “உங்களைப் பாராட்ட எனக்குத் தமிழில் வார்த்தை கிடைக்க வில்லை . என் மீதிருந்த பழி நீங்கியது. உங்களுக்கு உலகப் புகழ் கிடைத்தது’’ என்ற வாசகத்தையும் இணைத்திருந்தார் என்பதும் தமிழகத்தின் தலையாய அரசியல் நிகழ்ச்சிகளில் ஒன்றல்லவா?

அதிகாரிகள் மட்டுமா அன்றைக்கு தி.மு.க. வின் எதிர் முனையிலிருந்து அக்கினியாஸ்தரங்களை வீசினார்கள்? ஏடு நடத்தியோர் என்ன; அந்த அதி காரிகளுக்கு இளைத்தவர்களா? எதிர்ப்புக் கட்டுரைகள் எழுதி எழுதி நமக்கெதிரான பொய்ச்

செய்திகளை வெளியிட்டு, வெளியிட்டு, வெகுவாகக் களைத்துப் போனார்களே!

அந்த 1971ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுடன் இணைந்து நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் புதுவை உட்பட நாற்பது இடங்களில், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் போட்டியிட்ட நாகர்கோயில் தொகுதி ஒன்றைத் தவிர மற்ற எல்லா இடங்களும் தி.மு.க. தலைமையிலான கூட்டணிக் கட்சிக்கே கிடைத்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும். அந்தத் தேர்தலில் பாராளுமன்றத்துக்கு உறுப்பினர்களாக 10 இந்திரா காங்கிரஸ் வேட்பாளர்களும், 25 தி.மு.க. வேட்பாளர்களும், தோழமைக் கட்சிகள் சார்பில் 4 வேட்பாளர்களும் வெற்றி பெற்றார்கள்.

அப்போதுதான்; இனி இந்தக் கழகத்தை ஒரு விரற்கடை அளவு கூட வளரவிடக் கூடாது என்று சபதம் செய்து கொண்டு, தங்களுக்கு அத்துபடியான அத்தனை வித்தைகளையும் காட்டி, விஷமப் பிரச்சாரங்களைச் செய்து; எல்லா முனைகளிலுமிருந்து இன எதிரிகள் கூடி; ஏச்சு - பேச்சு - என்றெல்லாம் இடைவிடாது நடத்தி; இரு கூறாக்கி கழகத்தையே முற்றாக அழித்துவிட முனைந்தனர். எமர்ஜன்சியைப் பயன்படுத்திக் கொண்டு; இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடம் இல்லாதது பொல்லாததையெல்லாம் சொல்லி - உறவுக்குக் கை கொடுத்த நிலையை உடைத்தெறிவதில் வெற்றி பெற்றனர். அதனால் உரிமைக்குக் குரல் கொடுத்த நமது உணர்வு மழுங் கிப் போய் விடவில்லை. தணல் கொட்டிக் கொண் டிருப்பது போன்ற நெருக்கடி நிலவரத்திலும் கூட தணிக்கையில்லாமல் எதையும் ஏடுகளில் எழுத முடியாது - மேடைகளில் பேச முடியாது என்ற போதிலும்கூட;

“இன்று கையில் எடுத்தது அல்ல இந்தப் பேனா; என் 13வது வயதில் எழுதிடப் பிடித்த பேனா இது! உள்ளே ‘மை’ ஊற்றி எழுதத் தடை வந்தாலும், என் உதிரத்தை ‘மை’ யாக ஊற்றி எழுதிக் கொண்டே இருப்பேன் - என் எழுத்துக்குத் தடை என்றாலும், இருட்டடிப்பு என்றாலும்; என் மூச்சு புயலாகி அந்தத் தடையைத் தகர்க்கும் - கண்ணைப் பிடுங்கிக் கை விளக் காக எடுத்துக் கொண்டு, இருட்டைக் கிழித்தவாறு ; இனமான உணர்வுப் பயணத்தை நடத்துவேன் - இந்த

உயிர் என் உடலில் ஒட்டிக் கொண் டிருக்கும் வரையில் ஓய்வில்லை என் எழுத்துக்கு! என் பேச்சுக்கு! என் செயலுக்கு! என் உழைப்புக்கு! இதைச் சிறியோர்க்கும் ஞாபகம் செய்கிறேன்''

என்று அன்றைய அவசர நிலை காலத்திலேயே அறைகூவல் விடுத்தவன் நான்.

82 ஆண்டுக் கால வாழ்க்கையில் 70 ஆண்டுக் காலமாகப் போர்க் குரல் கொடுத்து வரும் நான்; பெரியாரின் கொள்கையைத் தலைமேற்கொண்டு, அண்ணாவின் நினைவை இதயத்தில் பதித்துக் கொண்டு; பெருந்தகை பேராசிரியர் மற்றும் பெருவெள்ளமென எங்கள் பின்னே திரண்டு நிற்கும் இனமானப் போர்ப்படையின் இலட்சிய வெற்றிக் காகக் கையில் எடுத்த பேனாவையும், பிடித்த ஒலிபெருக்கியையும் கல்லறை செல்லும் வரையிலும் விட்டுவிட மாட்டேன் என்று வஞ்சினங்கூறி; இப்போதும் வறண்ட பாலைவனத்தில் வாடாது பயணம் செய்யும் ஒட்டகத்தைப் போல வாழ்க்கையை நடத்திக் கொண்டிருப்பவனே தவிர; யார் வலையிலும் விழுபவனுமல்ல; யாருக்கும் வளைந்து கொடுப்பவனுமல்ல! எனவே உடன் பிறப்பே, நமது கழகத்தை - நமது தோழமைக் கட்சிகளின் கூட்டணி வலிமையை - நாமும் இணைந்து; திருமதி சோனியா காந்தி அம்மை யாரின் வழிகாட்டுதலோடு - மன்மோகன் சிங் தலைமையில் உள்ள மத்திய அரசின் சாதனையை - பொறுத்துக் கொள்ள முடியாதவர்கள்; போலீஸ் ராஜ்யம் நடத்தி - பொய் வழக்குகளைத் தொடுத்து - போலிகளை, பொய்க்கால் குதிரைகளை வைத்துப் போர் முழக்கம் செய்வது கண்டு; உன் போன்றோர் அஞ்சிட மாட்டீர்கள்; அயர்ந்திட மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும் - "அச்சமா? அதிர்ச்சியா? உடன்பிறப்பே! நீ இருக்கும்போதா? உன் நெஞ்சில் நான் இருக்கும் போதா?'' எனக் கேட்டு; "அச்சம் தவிர்'' என துணிவுரை கூறும் உன் அண்ண ன் நான்; உன்னைக் கேட்டுக் கொள்வதெல்லாம் -

"இப்போதே தேர்தலுக்கான ஆயத்தப் பணிகளை மேற்கொள்வதற் குத் தோதாக அமைந்திடும் அந்த 150 நாட்களைப் பயன்படுத்திக் கொள்ள; முகில் கிழித்துக் கிளம்பும் முழு மதி போல - உலக இருள் கிழித்து வெளிப்படும் உதயக் கதிர் போல - உடன்பிறப்பே; "வீதிக்கு வீதி பல வீட்டுப் புலித் தமிழர் விரைந்து

வருகின்றோம்'' என வாரீர்; வரிசைப் படுத்திடும் தேர்தல் பணிகளை வகைப்படுத்தி ஆற்றிடுவோம்; வாரீர்!"

என அழைக்கிறேனே; அதனை நீ ஏற்றுக் கொண்டு - இன்றைக்கே இடைவிடாது உழைத்திடப் புறப்படு என்பதுதான்!

தமிழகம் தாழ்ந்து கிடக்கிற நிலை யைத் தரமான முறையில் - தமிழ் மக் களுக்கு; ஏராளமான புள்ளி விவரங்களுடனும் எண்ணற்ற ஆதாரங் களுடனும் நீ தர வேண்டாமா?

அதற்கு ஊர்தோறும் கூட்டங்கள் - தெரு முனைப் பிரச்சாரங்கள் - கலை நிகழ்ச்சி போன்ற வைகள் - துணை அணிகளின் சார்பாக துண்டு அறிக்கைகள் - அவ்வளவையும் சான்றுகளோடு விளக்குகின்ற "முரசொலி'' கடிதங்கள் - கட்டுரைகள் - இவற்றை பட்டிதொட்டி முதல் - பட்டினக் கரைகள் வரையில் - பாமரர் - படித்தோர் - அனைவரும் உணர்ந்திட - விநியோகித்திடும் பணியைத் தொடங்கிடுவதும்; தேர்தல் ஆயத்தப் பணிகளில் சேர்ந்தவைதானே?

கழகச் செய்திகள், கழகம் பற்றிய வதந்திகளுக்கு மறுப்புரைகள், கழகத் தலைவர்களின் முக்கிய அறிவிப்புகள், சிற்றூர் - பேரூர் - முதற்கொண்டு சென்னைத் தலைநகர் வரையில் கழகத்தின் முக்கிய தகவல்கள் - இவையனைத்தும் "முரசொலி " மூலம் தெரிந்துகொள்ள; உன் போன்றோர் அந்தச் செய்திகளை அனுப்புவது மட்டுமல்ல; 'முரசொலி'யை நாள்தோறும் நீ வாங்கிப் படிக்கவும் வேண்டுமல்லவா; இல்லையேல் தினந்தோறும் நான் எழுதும் கடிதங்கள்; காட்டில் காய்ந்த நிலவாக - பாலையில் பெய்த மழையாக - ஆகிவிடுமல்லவா?

எனவே நீ மறக்கக் கூடாத வேண்டுகோள்களாக இந்த மடல் வாயிலாக நான் தெரிவிப்பது -

- "முரசொலி வளர்த்திடு!''
- "தெருமுனை கூட்டங்கள் தினந் தோறும் நடத்திடு!"
- "ஆட்சியாளர் அவலங்களை அன்றாடம் துண்டறிக்கை மூலம் தெரிவித்திடு"

- “கலை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திடு!”
- “கயவர்கள் சதியை மக்களுக்கு உணர்த்திடு!”
- “களம் செல்வதற்கு கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் கணையை எடுத்திடு!”
- “கலாச்சாரம் அழித்திட முனையும் கசடர்கள் மீது அதனை விடுத்திடு!”
- “வாகை சூடுவது பற்றியே சிந்தித்திடு!”
- “வாக்காளர்களை நாள் தோறும் சந்தித்திடு!”
- “அவர்களுக்கு வாழ்வு அளித் திடுவது பற்றியே எண்ணிச் செயல் புரிந்திடு!”
- “கடந்த தேர்தலில் வாக்குறுதி அளித்து வாக்கு பெற்றோர் - வழங் கியது அடக்குமுறைதான் - வாரி யிறைத்தது ஒடுக்குமுறைதான்; என் பதை - வரி வரியாகப் படித்துக் காட்டிடு!”
- “உரி உரியாகத் தாவும் பூனைகளை அடித்து விரட்டிடு!”

உடன்பிறப்பே, குருதி கொட்ட நேரிடினும் கொள்கைக்கு வெற்றி குவிப்போம்; இந்த உறுதி காத்திட உயிரையே பணயம் வைப்போம்!

பெரியாரின் பிள்ளைகள் நாம்;
அண்ணாவின் தம்பிகள் நாம் -
தோழமைக் கூட்டணி;
பேரணியாய்ப் புறப்படட்டும்;
தாரணியில் தமிழ்நாட்டுப் பெருமைதனைக்
காத்திடவே; வெல்லட்டும்! வெல்லட்டும்!

அன்புள்ள,
மு.க.
01-11-2005

3188. எதேச்சாதிகாரத்திற்குக் கதவு திறந்து விடாதீர்!

உடன்பிறப்பே,

கடந்த இரண்டு ஆண்டுக் காலமாகவே இந்தியத் திருநாட்டின் மிக உயர்ந்த ஜனநாயக மன்றமான பாராளுமன்றத்துக்குத் தொடர் தலைவலிதான்! எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எட்டாத பேராசை கோட்டை கட்டி; மீண்டும் வென்று இந்தியாவில் மதவாத ஆட்சிக்கு மணி மகுடம் சூட்டலாம் என்று கண்டு கொண்டிருந்த கனவு பலிக்காமற் போய்; மக்கள், பெருமூச்சு விட்டு ஆறுதல் கொள்வதற்கும் ஆக்கப் பணிகளில் அரசு ஈடுபடுவதற்கும் முடியாமல் அத்தனை எதிர்ப்புக்களை பா.ஜ.க. தலைவர்கள் காட்டி வருகிறார்கள்.

துரும்பைக் கிள்ளிப் போட்டுத் தொகை தொகையாய் அக்ரோணிக் கணக்கில் சேனைகளை உருவாக்கி; அருள் வேண்டி நிற்கும் அரசர்களுக்கு உறுதுணையாகக் காட்சி அளித்திடும் முனிபுங்கவர்களைப் புராணங்களில் பார்த்திருக்கிறோம்; படித்திருக்கிறோம்.

அப்படித்தான் இப்போதும் துரும்புகளைத் தூணாக்கி, எறும்புகளை யானைகளாக்கிப் பொருந்தாப் பொய்யுரைகளை மேடைகளில், ஏடுகளில் வெளிச்சம் போட்டுக் காட்டி, "இந்தியா ஒளிர்கிறது" என்று செய்தார்களே விளம்பரம்; அதையும் மிஞ்சுகிற அளவுக்கு இன்றைய மத்திய அரசுக்கு எதிரான விளம்பரங்களைச் செய்து வருகிறார்கள் பா.ஜ.க.வினர்!

முற்போக்குவாதிகள் என்ற முகமூடி போட்டுக் கொண்டு அரசியல், சமுதாய, கலை, இலக்கிய அரங்குகளில் அறிமுகமாகி உலவுகிறவர்கள்; இன்றுள்ள மத்திய கூட்டணி ஆட்சியை எப்படியும் தொல்லை கொடுத்துத் துரத்தி விட்டு, இராமர் கோயிலை கட்டி முடிப்பது என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அதன் சாயலைத்தான் - அந்த ஜாடையைத்தான் - இப்போது

இவர்கள் பாராளுமன்றத்தில் கடைப்பிடிக்கிற முறை - நமக்குச் சொல்லாமற் சொல்லிக் கொண்டிருக்கிறது.

இந்த முறையும் பாராளுமன்றம் நடக்காது என்ற ஆரூடத்துடனும் - நடக்க விட மாட்டோம் என்ற அறை கூவலுடனும்; ஒரு ஜனநாயக நாட்டில் வேண்டுமென்றே திட்டமிட்டு எந்த எதிர்க்கட்சிகள் செயல்பட்டாலும்; ஏதோ சில அழுத்தமற்ற காரணங்களால் எதிர்பாராத வெற்றிகளைப் பெற்றுவிட்டு; அதனையே ஜனநாயகத்தை வீழ்த்தும் ஆயுதமாக ஏந்திடுவோம் என்பது எவ்வகையிலும் ஏற்கத்தக்கதல்ல!

எடுத்துக்காட்டாக, நாடாளுமன்றத்தை நடக்க விடாமல் எதிர்க்கட்சிகள் கலவரம் விளைவிப்பது குறித்து, பிரதமரின் கருத்தாக அவருடைய செய்தி ஆலோசகர் சஞ்சய் பாரு கூறும்போது, "வோல்கர் கமிட்டி அறிக்கை குறித்து விவாதம் நடத்த இன்றே இப்போதே அரசு தயாராக இருக்கிறது. ஆனாலும் துரதிருஷ்டவசமாக பார்லிமென்ட் முடக்கப்பட்டு விட்டது" என்று கூறியிருக்கிறார். பார்லிமென்ட் விவகார அமைச்சர் பிரிய ரஞ்சன்தாஸ் முன்ஷி அவர்கள் வோல்கர் கமிட்டி அறிக்கை குறித்த விவாதம் நடத்தப்படும் என்று உறுதி அளித்திருக்கிறார். ஆனால் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மல்கோத்ரா, நட்வர்சிங் மற்றும் சோனியா இருவரும் பதவி விலகினால் மட்டுமே அவை நடக்கும், இல்லா விட்டால் அவை நடைபெற அனுமதிக்க முடியாது என்று வலியுறுத்தியிருப்பது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எந்த வகையிலும் உதவிடாது. இந்தப் பிரச்சினை குறித்து எதிர்க்கட்சிகள் சர்ச்சை எழுப்பி நாடாளுமன்றத்தை முடக்க முற்பட்டபோது லோக் சபாவில் முன் வரிசையில் திருமதி சோனியா காந்தி அவர்களும், மாநிலங்களவையில் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களும் அமர்ந்திருந்தது, ஜனநாயக முறையில் முறையான பதிலை அளிப்பதற்கு ஆளுங் கட்சி தயாராக உள்ளது என்பதை எதிரொலிக்கின்ற செயலாகும்.

எனவே அமைதியாக அனைவரும் அமர்ந்து இந்தப் பிரச்சினை குறித்து ஆளுங்கட்சியினரும், எதிர்க்கட்சியினரும் விரிவாகப் பேசி அதன் பிறகு அரசின் சார்பில் அமைச்சர்களோ, பிரதமரோ பதில் கூறுவதுதான் முறையாக இருக்க முடியுமே தவிர, அவையையே நடத்த விடாமல் அமளியில் ஈடுபடுவது சரியான முறையாக இருக்குமா?

ஒவ்வொருவர் மீதும் ஒரு குற்றச்சாட்டு கூறப்படும் போதெல்லாம் அந்த குறிப்பிட்ட குற்றஞ்சாட்டப்பட்டவர் அதற்காக உடனடியாக பதவி விலகிட வேண்டுமென்றால், பா.ஜ.க. ஆட்சியிலே இருந்தபோது பல அமைச்சர்கள் மீது குற்றச்சாட்டு கூறப்பட்ட போதெல்லாம் அவர்கள் அனைவரும் பதவி விலகினார்களா? இப்படியொரு முன்மாதிரியை உருவாக்கினால், எந்தக் கட்சி ஆட்சிப் பொறுப்பிலே இருந்தாலும், எதிர்க் கட்சியாக விளங்குபவர்கள், ஒவ்வொரு அமைச்சர் மீதும் வரிசையாக ஒரு குற்றச்சாட்டினைச் சுமத்தி, அவர்கள் பதவி விலக வேண்டும், இல்லாவிட்டால் நாடாளுமன்றத்தை நடத்த விட மாட்டோம் என்று செயல்பட்டார்களானால், எந்த ஆட்சியாவது முறையாக நடக்க முடியுமா ? இவ்வாறு அன்றாடம் நாடாளுமன்றத்தில் கலவரம் செய்து அதனை நடத்தவிடாமல் செய்கின்ற காரியத்தினால், நாடாளுமன்றம் நிறைவேற்றிட வேண்டிய பணிகள் எல்லாம் முறையாக, விரிவாக நடந்திட முடியாமல் போகின்ற காரணத்தினால், மக்களுக்குத்தானே இழப்பு ஏற்படுகின்றது. நாடாளுமன்றம் சென்று பல பிரச்சினைகளின் மீது மணிக்கணக்கிலே தங்கள் பேச்சாற்றலைக் காட்ட வேண்டிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேச முடியாமல் கலவரத்தில் சிக்க நேரிடுகிறது என்றால் அனைத்துக் கட்சியினருக்கும், பொது மக்களுக்கும்தானே இழப்பு? நிறைவேற்றப்பட வேண்டிய எத்தனை மசோதாக்கள் உரிய நேரத்தில் நிறைவேற்றப்பட முடியாமல் தாமதமாகிறது?

இதற்கெல்லாம்; இந்திய நாட்டு மக்களுக்கு பதில் அளிக்கும் பொறுப்பை எதிர்க்கட்சிகள் அலட்சியப்படுத்திவிட முடியுமா?

ஜனநாயகத்தில் கட்சிகளின் ஆட்சி மாறி மாறி வரும். எனவே இந்த முறைகளே தொடருமானால்; ஜனநாயகத்தை சவப் பெட்டியிலே வைத்து ஆணி அடித்துவிட்டு; அடுத்து அடுத்து வருகிற எந்தவொரு ஆட்சியும் பாராளுமன்றத்தில் செயல்பட முடியாமல் தடுத்து நிறுத்திட; தேவைப்படுகிற உரிமைகளை அவைகளாகவே எடுத்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் ஏற்பட்டு விடக் கூடாதல்லவா?

அப்படி ஏற்படின்; அது இந்தியாவில் ஒரு எதேச்சாதிகார ஆட்சி அமைந்திடக் கதவு திறந்து விடும் காரியமாகவே ஆகிவிடும் என்பதை எச்சரிக்காமல் இருக்க முடியாது. இப்படியே மாறி மாறி

நிலைமை தொடர்ந்து கொண்டேயிருந்தால்; இவரோ அவரோ என்றில்லை; எவரோ ஒருவர் கதவைத் தட்டுவார்; எதேச்சாதி காரம் உள்ளே நுழைய வேண்டுமென்று!

எச்சரிக்கை; எதேச்சாதிகாரத்துக்கு மட்டும் கதவு திறந்திட எவரும் முன்வராதீர்கள் என்றும் கதவு தட்டும் வாய்ப்பை யாருக்கும் அளித்துவிடாதீர்கள் என்றும் எதிர்க்கட்சியினரை வேண்டுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

26-11-2005

3189. ஏழை எளியோர் துயரம்
இரு கையால் ஏந்திடுவோம்!

உடன்பிறப்பே,

“காலப் பேழையும்
கவிதைச் சாவியும்”

காத்துக் கிடக்கிறது
மூன்று நாட்களாக!

நாட்டோர்க்குத் தெளிவுபடுத்த வேண்டிய
உலக வரலாற்றின் உண்மை வடிவத்தை - இந்தத்

தரணியின் சரித்திரத்தில்
தமிழகம் பெற்றுள்ள

தலையாய பங்கினை
உணர்த்துதற்குரிய

வாய்ப்புக்குத் தடையாக - இடையில்
வந்து சேர்ந்தது இயற்கையின் சீற்றம்.

என் தமிழ்க் குலத்தோர்
ஏழை, எளியோர், விவசாயிகள் -

பாடுபடுவோர், பாட்டாளி மக்கள்
பசியால் பட்டினியால்

பார்ப்பதற்கே பரிதாபமாய்
பதறிப் போய் நிற்கையிலே

பக்கம் பக்கமாய்த்
தீட்டி விட்ட என் கவிதையை

எப்படியும் வெளியிட்டே தீர்வதற்கு
இதயம் தான் இடம் தர மறுப்பதாலே;

பழங்காலத் தமிழர்களின், நாகரிகம்,
பண்பாடு பற்றி விளக்கமாக; தூய

வெண்புறாக்களாகத் திகழ்ந்த
பெண்புறாக்களாம் கண்ணகி மாதவி பற்றிய

எண்ணமிகு ஓவிய மிரண்டை; காலப்பேழையாக;
இன்னும் ஓரிரு நாள் கழித்தே வழங்கிடுவேன்.

அதற்கிடையே;

அமைதியிழந்து அல்லலுற்று
ஆதரவற்று நிற்போர்

வாழுகின்ற.....இல்லை இல்லை;
வாடுகின்ற பகுதி நோக்கி

வட்டமிட வேண்டியதாயிற்று; உடல் நலிவோடு!
பட்டுத்தான் போனதய்யா வாழ்வு என்று - கண்ணீர்

விட்டுத்தான் கதறுகின்ற பட்டினத்து ஏழை மக்கள்,
பட்டிக் காட்டுக் கடவுள்களாம் விவசாயிகள்,

உயிரிழப்பால்,
உடைமையிழப்பால்,

உளந் துடிக்கும்
உறவு முறையார்க்கு

உதவிக் கரம் நீட்டுதற்கும்
ஓரணியாய்த் திரண்டு நிற்பதற்கும்

கருணை நெஞ்சம் திறப்பதற்கும்
கட்சி வேறுபாடு கருதாமல்

கடின உழைப்பு நல்கிடவே; நம்
கடமை உணர்ந்து பணி புரிவோம்.

காலில் முள் குத்திற்றென்று
கடும் பயணம் நிற்பதுண்டோ?

கற்பாறைகளே குறுக்கிட்டாலும்
நிற்காத நம் பயணம்; இப்போதும்

நிற்காமல் தொடரட்டும்
நிர்க்கதியாய் ஆகியுள்ளோர்,

நிலையான வாழ்வுக்காக;
நெஞ்சுருகிப் புறப்படுக -

மத்தியில் பொறுப்பில் உள்ள
மாண்புமிகு தமிழக அமைச்சர்கள் பன்னிருவரும்
மாநிலத்தில் பாழ்பட்ட பகுதிகளில்
பணியாற்றச் செல்க என வேண்டுகோள் விடுக்காமலே

பலரும் சென்றுளார், சிலர் இன்னும் சென்றாரில்லை;
அந்தச் சிலரும் கூட, ஆங்காங்கு சட்டமன்றப்

பாராளுமன்ற உறுப்பினர்களுடன்
சற்றும் தயங்காது சேவை செய்திடக் கிளம்பிடுவீர்.

ஊர் தோறும் நம் செயல் வீரர்
உதவிகள் செய்திடவும்,
உழைப்பினை நல்கிடவும்
உடன் முனைந்திடுவீர்!

நன்று நம் பணியென நல்லோர் வாழ்த்திட
இன்று போல் என்றும் நீவிர்;

ஏழை எளியோர், துயரில் வீழாமல்
இரு கையால் ஏந்திடுவீர்!

அன்புள்ள,

மு.க.

29-11-2005

3190. விகடனின் நோக்கும்; விஷமிகளின் போக்கும்!

உடன்பிறப்பே,

11-12-2005 தேதியிட்ட "ஆனந்தவிகடன்" வார இதழில் எழுதப்பட்டுள்ள "அரசியல் ஆரோக்கியம்" என்ற தலையங்கம் குறித்து சில கருத்துகளை தெரிவிக்க விரும்புகிறேன். அந்தத் தலையங்கத்தின் முக்கிய பகுதிகள் வருமாறு :-

> "தமிழக முதல்வர் ஜெயலலிதாவும், எதிர்க்கட்சித் தலைவர் கருணாநிதியும் வெள்ளப் பகுதிகளுக்கு ஓடோடிச் சென்று ஆறுதல் அளித்திருக்கிறார்கள். எதிர் அணியில் உள்ள மற்ற தலைவர்களும், தமிழகத்துக்குத் தேவையான உரிய நிவாரணத் தொகை கேட்டு, மத்திய அரசிடம் அழுத்தம்திருத்தமாக வலியுறுத்தி இருக்கிறார்கள். இது, ஓர் ஆரோக்கியமான காட்சியே! எனினும் இந்தப் பேரழிவுச் சூழலில்கூட அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டி, மீட்பு நடவடிக்கைகள் குறித்து ஓர் ஆக்கப்பூர்வமான விவாதத்தைத் தமிழக அரசு நடத்தவில்லையே என்பது தான் சற்று வருத்தம் அளிக்கிறது. உளமார நம் துயரைத் துடைக்கும் சேவை மனப்பான்மையோடுதான், தலைவர்கள் தங்களைத் தேடி வருகிறார்கள் என்று மனதார நம்பி, கண்ணீர் மல்கக் கையெடுத்துக் கும்பிட்டு நிற்கும் அப்பாவி மக்களின் நம்பிக்கையை இறுதிவரை இந்தத் தலைவர்கள் காப்பாற்ற வேண்டும். இன்று இவர்கள் காட்டும் இந்த அக்கறையை, நாளை தேர்தல் களத்தில் வாக்குகள் திரட்டித் தரும் பிரச்சார ஆயுதமாக எக்காரணம் கொண்டும் பயன்படுத்தக் கூடாது"

இவ்வாறு தலையங்கம் தீட்டியுள்ள "ஆனந்த விகடன்" லாவணிக் கச்சேரி நடத்தக் கூடாது என்றும் அறிவுரை கூறியுள்ளது.

எனவே அந்தக் கருத்தினை எழுதியுள்ள ஆனந்தவிகடனுக்கு மட்டுமல்ல, அந்தக் கருத்தினைக் கொண்டுள்ள அனைவருக்கும் விளக்கமளிக்க வேண்டியதை என் கடமையாகக் கருதுகிறேன்.

அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி தமிழக அரசு விவாதம் நடத்த வில்லையே என்று 'விகடன்' வருத்தப்பட்டுள்ளது. ஆனால் பெருமழை பெய்து கொண்டிருக்கும் நேரத்திலேயே 25-11-2005 ஆம் தேதியன்றே அண்ணா அறிவாலயத்தில் அனைத்து தோழமைக் கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டி, விவாதித்து, தீர்மானம் நிறைவேற்றி, அந்தத் தீர்மானத்தை அன்றைய தினமே டெல்லிக்கு அனுப்பி வைத்து, தோழமைக் கட்சிகளைச் சேர்ந்த அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரதமரைச் சந்தித்து நிவாரணப் பணிகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

கூட்டத்திற்கு பின் செய்தியாளர்கள் என்னைச் சந்தித்தபோது, அவர்கள் அரசின் மீது குறை கூறி கேள்வியைக் கேட்ட நேரத்தில், "அதைப்பற்றி யெல்லாம் சொன்னால் குறை சொல்வதாக ஆகிவிடும், இந்த நேரத்தில் அந்தக் குறைகளை நான் சொல்லிக் கொண்டிருக்க விரும்பவில்லை. அதற்கான நேரமும் இதுவல்ல" என்று நான் கூறியது ஏடுகளில் வெளிவந்துள்ளது.

பின்னர் 27 ஆம் தேதியன்று நான் நெய்வேலியில் அளித்த நிருபர்கள் பேட்டியில் "தமிழக அரசு கடந்த நான்காண்டுகளாக தூர்வாரும் பணியை மேற்கொண்டிருந்தால் இந்த அளவிற்கு பெரு வெள்ளம் ஏற்பட்டிருக்காதே" என்று கேட்டபோது கூட, "மக்கள் பாதிக்கப்பட்டிருக்கும்போது அவர்களுக்கு உதவி செய்வதுதான் முக்கியம், இந்த நேரத்தில் அரசியல் பேசுவது அவ்வளவு சரியாக இருக்காது" என்றுதான் கூறினேன். மற்றொரு செய்தியாளர், "கடலூர் மாவட்டத்தில் மீட்பு பணிகள் முறையாக நடக்கவில்லையே?" என்று கேட்ட போதும், இதற்கு "நான் பதில் சொன்னால் அரசியல் ரீதியான குற்றச்சாட்டாக ஆகிவிடும், இது அரசு அதிகாரிகளின் கவனத்திற்குச் சென்று உடனடியாக இதை கவனிப்பார்கள் என்று நம்புகிறேன்" என்று தான் கூறினேன்.

இவ்வாறு நான் நடந்து கொண்ட நிலையில் முதலமைச்சர் ஜெயலலிதாவின் பேச்சுகள் எந்த அளவிற்கு இருந்தன என்பதையும் கவனித்திட வேண்டும். நிவாரணப் பணிகளைச்

சுற்றிப் பார்க்கச் சென்ற முதல் நாளே மத்திய அரசு இதுவரை ஒரு சல்லிக் காசு கூட வழங்க முன்வரவில்லை என்றார். - அதற்கு மறுநாள் கரூர் சென்றார். அப்போது அங்கே நடைபெற வேண்டிய நிவாரணப் பணிகளைப் பற்றி பேசிடாமல், "தி.மு. கழக ஆட்சியில் கட்டிய அமராவதி பாலத்தின் பெரும் பகுதி அப்படியே நொறுங்கி விழுந்து விட்டது, கட்டிட வேலையே நடைபெறவில்லை, பாலம் கட்டுவதில் ஊழல் ஏதும் நடந்ததா என்று ஆராய ஒரு விசாரணைக் குழுவை அமைக்கப் போகிறேன்" என்றெல்லாம் பேசியிருக்கிறார். ஒரு முதல் அமைச்சர் பொறுப்பை வகிப்பவரே அந்தப் பாலத்தின் பெரும் பகுதி நொறுங்கி விட்டதாகச் சொல்லியிருக்கிறார். ஆனால் உண்மையில் பாலம் நொறுங்கவே இல்லை, பாதிக்கப்படவில்லை. பாலத்திற்கு இரு புறத்திலும் உள்ள இணைப்பு சாலையின் ஒரு புறத்தில் மட்டும் மண் சரிந்திருக்கிறதே தவிர, பாலத்தில் எந்தவிதமான பாதிப்பும் இல்லை என்பதை அந்த ஊர் மக்கள் நன்கறிவார்கள். அந்தப் பாலம் அரசினால் அரசுப் பணத்தைச் செலவழித்து கட்டப்பட்ட பாலமும் அல்ல. தனிப்பட்ட ஒருவரால், அதாவது "பி.ஓ.ஓ.டி." முறையில் "ஈஸ்ட் கோஸ்ட் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் லிமிட்டெட்" என்ற நிறுவனத்தினால் அவர்கள் சொந்தப் பொறுப்பில் கட்டப்பட்ட ஒன்றாகும். 14 ஆண்டுக் காலம் அந்தப் பாலத்தின் பராமரிப்பு பொறுப்பினை அந்த நிறுவனம்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்த 14 ஆண்டுகளுக்கு அவர்கள் சுங்கம் வசூலித்துக் கொள்வார்கள். 14 ஆண்டுகளுக்குப் பிறகு நல்ல உறுதியான நிலையில் பாலத்தை அவர்கள் நகர்மன்றத்திடம் ஒப்படைப்பார்கள்.

ஆனால் முதலமைச்சர் ஜெயலலிதா "ஆகா - தி.மு. கழக ஆட்சியில் கட்டப்பட்ட பாலம் இது - இது இடிந்தது பற்றி விசாரணைக் குழு அமைக்கப் போகிறேன்" என்று விண்ணுக்கும் மண்ணுக்குமாக எகிறிக் குதித்திருக்கிறார்.

'ஆனந்தவிகடன்' குறிப்பிட்ட அந்த ஆரோக்கியமான அரசியல் நிலைக்கு அம்மையார் அபசுரம் பாடியதோடு - விசாரணையும் நடத்தப்படும் என்று வீறாப்பு அறைகூவல் விடுத்த பிறகு தான்; பழியைத் தூக்கி தி.மு.க. ஆட்சியின் மீது போட்டு, அப்பட்டமான அரசியல் நடத்த ஜெயலலிதா முன் வந்த பிறகு; "உண்மையில் உடைந்தது பாலமா?" - "உறுதுணையாக அமைந்த மண் கொட்டிய சாலையா?" என்று விளக்கிடாமலும்,

விடை பகராமலும் கடுகளவு சுய மரியாதை உணர்வு உள்ளவர்கள் கூட வாயை மூடிக் கொண்டிருக்க முடியாது.

மண் சரிந்து போன பக்கவாட்டு மண் மேட்டுச் சாலையை சரிப்படுத்திட அந்த தனியார் நிறுவனத்தினர் முன் வந்த போதிலும் அரசின் அறிவுரைப்படி, விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டுமென்பதற்காகவே, அந்தப் பாலத்தையே போக்குவரத்துக்கு அனுமதிக்காமல் மூடி வைத்துக் கொண்டு, அந்த நிறுவனத்தினர் பராமரிப்பு பணியைச் செய்யவிடாமல் மாவட்ட ஆட்சித் தலைவர் தடுத்துக் கொண்டிருக்கிறார். அதைக் கண்டித்து கரூர் அனைத்துக் கட்சித் தலைவர்கள் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக செய்தி வந்திருக்கின்றது.

முதலமைச்சர் பொறுப்பில் இருக்கும் ஜெயலலிதா இவ்வாறு நடந்து கொள்ளும் காரணத்தால்தான் சுனாமி நிவாரண நிதி; மத்திய அரசு வழங்கியதும் மாநில அரசு ஒதுக்கியதும், மக்கள் அள்ளித் தந்ததும் எங்கே போயிற்று; என்ன கணக்கு விபரம்? எங்கே ஏழை மீனவருக்கான நிரந்தர வீடுகள்? அதற்கெல்லாம் விசாரணை எப்போது என்று கேட்டு - இப்படிப் பல பிரச்சினைகள் குறித்து விளக்கம் மக்களுக்குத் தரப்பட வேண்டுமெனப் பட்டியலிட்டு கேட்க வேண்டியதாயிற்று.

அதற்குப் பதிலளிக்கத் திராணியற்ற ஜெயலலிதா என்னையும் நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்களையும் நாகரீகம் சிறிதுமின்றித் தாக்கி அறிக்கை வெளியிட்டுள்ளார். "காழ்ப்புணர்ச்சி கண்ணை மறைக்க, அழுக்காறு அறிவுக்குத் திரையிட, களங்கம் கற்பிக்க வேண்டும் என்ற ஒரே நினைப்புடன் கருணாநிதி குற்றச்சாட்டை கூறுகிறார். கருணாநிதி கூறுவது கேலிக்கூத்தாக உள்ளது என்றெல்லாம் என்னைப் பற்றி வசை பாடியிருக்கிறார்.

"அரசியல் ஆரோக்கியம்" என்று பாராட்டிய ஆனந்த விகடன் மட்டுமல்ல; அதனை எண்ணிக் களித்த நடுநிலையாளர் அனைவருமே ஏமாந்துப் போகிற அளவுக்கு நாவடக்கமின்றி வார்த்தைகளை அறிக்கையாக வடித்தளித்தது ஜெயலலிதாவா அல்லது அரசியல் பேசுவதற்கான நேரம் இதுவல்ல என்று திரும்பத் திரும்ப செய்தியாளர்களிடம் கூறிய நானா?

இதனை விகடன் மட்டுமல்ல; விகடனைப் போலவே அரசியல் ஆரோக்கியத்தில் அக்கறையுடையோர் அனைவரும் எண்ணிப் பார்த்திட வேண்டுகிறேன். என் செய்வது; விகடன் நோக்கு அரசியல் ஆரோக்கியம் பற்றியதாக இருக்கிறது; அரசு நடத்தும் ஜெயலலிதாவின் போக்கோ அதற்கு நேர் மாறாக இருக்கிறது!

அன்புள்ள

மு.க.

07-12-2005

3191. உவகை பொங்க; உனக்கோர் நற்செய்தி!

உடன்பிறப்பே,

உனக்கோர் நற்செய்தி! நீ எனக்கு எத்தனையோ நற்செய்திகளைச் சொல்லியிருக்கிறாய்; "இந்த ஆண்டு மட்டும் எங்கள் வட்டாரத்தில் பத்து சுய மரியாதைத் திருமணங்களை நடத்தியிருக்கிறோம் - அவற்றில் இரண்டு திருமண விழாக்களில் பழைய புரோகிதர் மகன் ஒருவரே, இப்போது படித்துவிட்டு பகுத்தறிவாளராக மாறி, அவரே மேடையேறி மணமக்களை வாழ்த்தினார் - பெரியார் பெருமைகளையும் அண்ணாவின் கருத்துக்களையும் அவர் தொகுத்துச் சொன்ன விதமே தனியழகாக இருந்தது" என்று நீ எழுதியுள்ள கடிதங்கள் மட்டுமா?

"கழக உடன்பிறப்புகளும், மாவட்ட நிர்வாகிகளும் ஒன்றுபட்டு உறுதியுடன் செயல்பட்டு அனைவரது ஒத்துழைப்பையும் பெற்ற காரணத்தினால், எங்களூரின் நீண்ட நாள் கனவு - கழகத்துக்குக் கட்டிடம் ஒன்று அலுவலகம் அமைக்கவும், படிப்பகம், நூலகம் ஏற்படுத்தவும் வேண்டுமென்பது; அதையும் நிறைவேற்றி அந்தக் கட்டிட புகைப்படத்தையும் இத்துடன் அனுப்பியிருக்கிறேன்" என்றெல்லாம் எத்தனையோ நற்செய்திகள் அடங்கிய மடல்களை எனக்கு அனுப்பியிருக்கிறாய்; நேரிலும் அண்ணா அறிவாலயம் வந்து அகமகிழக் காட்டியிருக்கிறாய்.

"ஏழாவது பொதுக்கூட்டம் இந்த ஆண்டு எங்கள் ஒன்றியத்தில் நடத்தினோம்; விளம்பரத்தில் குறிப்பிட்ட பேச்சாளர் குறிப்பிட்டபடியே குறித்த காலத்தில் வந்து சேர்ந்தார். அவரை மேடையில் உட்கார வைத்துக் கொண்டு, நாங்கள் உள்ளூர் பேச்சாளர்கள் மேடையை ஆக்ரமித்துக் கொள்ளாமல் - வந்தவர் மனம் நொந்து போகாத அளவுக்கு அவருக்கு விரைவிலேயே உரிய நேரத்தை ஒதுக்கித் தந்து; நீண்ட நேரம் அவரைப் பேச வைத்து மக்களை மகிழ்ச்சி அடையச் செய்தோம். கடந்த நாலு ஆண்டுக் காலமாக நடைபெற்ற ஆட்சியில் சகல பிரிவு மக்களும்

சங்கடத்துக்கு ஆளானதையும், இப்போது தேர்தலுக்காக ஜெயலலிதா மக்களை ஏமாற்றிட மாய்மால வேலைகளையும், அறிவிப்புகளையும் செய்வதையும், மக்கள் தெளிவாகவே புரிந்து கொள்கிற அளவுக்கு நமது தலைமைக் கழகப் பேச்சாளர் வழக்கம் போல் நாகரிகமாகப் பேசினார்"

இப்படியெல்லாம் எழுதி நீ அனுப்புகிற நற்செய்திகளின் பட்டியலில்தான் ஓய்வில்லாத உன் உழைப்பால் பெற்ற ஊராட்சி மன்ற வெற்றிகள் - நகராட்சி மன்ற வெற்றிகள் - மாநகராட்சி வெற்றிகள் - நாடாளுமன்ற, சட்ட மன்றங்களில் பெற்றிடும் வெற்றிகள் - அனைத்தும் இடம் பெற்று வருகின்றன - கடந்த 2004ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் புதுவை உள்ளிட்ட நாற்பது தொகுதிகளிலும் வெற்றிக்கனி பறித்து அனுப்பி வைத்தாயே; அதற்காக அல்லும் பகலும் அயராது உழைத்தாயே; அதையெல்லாம் மறந்து விட முடிகிறதா? -

ஏதோ; காஞ்சி, கும்மிடிப்பூண்டி இடைத் தேர்தல்களில் ஆளுங் கட்சி வெற்றி பெற்றது என்பதை விட இருந்த இடத்தைத் தக்க வைத்துக் கொண்டது என்பது தானே உண்மை! அந்த நிலைமைக்கும் என்ன பாடுபட்டார்கள், எத்தனை அதிகார துஷ்பிர யோகம்? அவைகள் அனைத்தும்; வென்றவர்களுக்கல்லவா தெரியும் - ஆன செலவு எவ்வளவு என்பதும் அவர்களுக்குத் தானே புரியும்!

கடலையைக் கையிலே நிரப்பிக் கொண்டு கொரித்துத் தின்னும் போது கடைசியாக இரண்டொரு கடலைகள் சொத்தையாக இருப்பதில்லையா? அது போலத்தான் இடைத் தேர்தல் முடிவுகளை எண்ணிக் கொண்டு; நீ பறித்தளிக்கும் வெற்றிச் செய்திகளை நற்செய்தியாகக் கருதி; உனக்கு நன்றியும் வாழ்த்தும் கூறிக் கொண்டிருக்கிறேன், கடைசியாகக் கையில் வந்த சொத்தைக் கடலைகளுக்காக கவலைப்பட்டுக் கொண்டிருப்ப தில்லை.

அது போகட்டும்; நற்செய்தி தரப் போவதாக எடுத்த எடுப்பில் குறிப்பிட்டாயே; அது என்ன நற்செய்தி என அறிந்து கொள்ள உனக்கேற்படும் ஆவலை நானறிவேன். இதை உனக்கு நான் சொல்லும் போது, நீயும் நானும் இருக்கிற இந்த இயக்கம்; இருளில் இடர் நிறைந்த பாதையில் நடை போட்டு வந்து எத்தனை

நற்செய்திகளை நாட்டுக்கும் இந்த நாட்டில் நலிவுற்றுக் கிடந்த சமுதாயங்களுக்கும் வழங்கியிருக்கிறது என்பதை எண்ணி மாளாது; அத்தனை செய்திகளை; செயலாக்கியே காட்டியிருக்கிறது; இந்த இயக்கம்!

இட ஒதுக்கீடு அடிப்படையில் சமூக நீதியின் இறுதித் தீர்ப்பினால் ஏற்படக் கூடிய ஆதாயங்களை இன்னும் அடைய வேண்டிய இடைவிடா முயற்சியில் ஈடுபட்டிருக்கும் இந்த இயக்கம்; அந்த வெற்றிப் படிகளில் ஒவ்வொன்றிலும் அடியெடுத்து வைக்க கொடுத்த விலை எவ்வளவு? பிடி சாபம் என்றோர் ஒரு புறம்! வகுப்பு வாதமா கிளப்புகிறீர்கள் என்று வசை பாடுவோர் ஒரு புறம்! எமக்குத் திரையிடுதல் - எம் வார்த்தைகளை திரித்துக் கூறுதல் - இரண்டும் முடியாத பட்சம்; இருட்டடிப்பு செய்தே ஒழித்து விடுதல் - என்று இத்தனை கெடு முறைகளைக் கையாண்டும்கூட; அவர்கள் கனவு நிறைவேறாமல் போனதால் ஏவிடும் எரிச்சல் கணைகள்! அனைத்தையும் அமைதியாகத் தாங்கிக் கொண்டு தான் ஆட்சிப் பொறுப்புக்கே வரக் கூடிய ஆற்றலையும், பொது மக்களின் ஆதரவையும் பெற்றிருக்கிறோம்.

பண பலத்தினாலா?

பத்திரிகை பலத்தினாலா?

இல்லை; இரண்டு பலமும் இல்லை - உன்னைப் போன்ற பாசறை வீரர்களைக் கொண்ட படை பலத்தினால் மட்டுமே படைத்திட்ட சாதனை இது! அத்துடன் பெரியார், அண்ணா இருவரிடமிருந்தும் பெற்ற அறிவு வலிவும், ஆற்றலும் நம்மை ஆட்சிப் பொறுப்பிலும் அமர்த்தியது.

ஆட்சியென்பது அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்றில்லாமல், அந்தப் பெருமையை அனுபவிப்பது என்பதுமில்லாமல்; அல்லற்படும் மக்களின் - அடித்தட்டு மக்களின் - நடுநிலையான மக்களின் உள்ளங்களில் இடம் பெற்று அவர்களுக்காக உழைக்கும் வாய்ப்பைப் பெறுகிறோம் என்பது தான் ஆகும்.

மொழிப் போரில் தியாக முத்திரை குத்தப்பட்டோர் நாம்; நாம் அமைத்துக் கொண்ட கூட்டணி அரசு தான் செம்மொழி தகுதி, தமிழுக்கு உண்டு என தரணிக்கு அறிவித்தது; ஆம்!

இருக்கும் உரிய தகுதியைக் கூட உலகிற்கு அறிவிக்க ஓர் அரசு மத்தியிலே தேவைப்பட்டது - அதே போலத்தான் சேது சமுத்திரத் திட்டமும்; செழிப்பும் வளமும் மேலும் தமிழ் நிலத்துக்குச் சேர்ந்திட; நாம் அமைத்து வென்ற கூட்டணி அரசு ஆணையும் பிறப்பித்து அதற்கான நடை முறையும் வகுத்து நிறைவேற்றி முடிக்க நடவடிக்கையும் மேற்கொண்டது - இப்படித் தமிழ்நாடு பல சாதனைகளை இன்றைய மத்திய அரசு மூலம் பெறுவதற்கு நமது கூட்டணி ஆட்சிதான் காரணமாக இருந்திருக்கிறது. இன்னமும் தமிழகத்தில் தொழில் வளமும் பொருளாதார வளமும் பெருக்கிடக் கூட்டணி அரசும் - அந்த அரசை இயக்கிடும் ஆர்வலர்களுமே அடிப்படையாக அமைந்துள்ளதை திட்டமிட்டு திரையிட்டு மறைத்திடும் முயற்சி நடைபெறாமல் இல்லை. அது, இன்றைக்குப் புதிதாக நடப்பதல்ல; திராவிட இயக்கம்; அதாவது உண்மையான திராவிட இயக்கம் வாழ்வதும் வளர்வதும் தங்களின் வஞ்சக வரலாற்றுக்கு முற்றுப்புள்ளியாக அமைந்து விடும் எனக் கணக்கிட்டுக் காரியமாற்றுவோர் எவராயினும் அவர்; திரித்துக் கூறியோ, திரையிட்டு மறைத்தோ நமது செய்திகளை மக்களின் விழிக்கும், செவிக்கும் எட்டாதவாறு பார்த்துக் கொள்வதில் எச்சரிக்கையாகவே இருந்து வருகின்றனர்.

அந்த இருட்டு எண்ணத்தினரையும் மீறி; முகில் கிழித்து வெளிக் கிளம்பும் முழுமதியாக நமது இயக்கத்தின் முகம் தெரிகிறதென்றால் - ஒளி யுமிழ்கிறதென்றால் - அது நமது வெளிப்படைத் தோற்றத்திற்குக் கிடைத்த வெற்றியல்ல; வெளியே அதிக விளம்பரமாகாமல் உள்ளூரத் தோய்ந்து கிடக்கும் உன்னதமான இலட்சியங்களுக்கு கிடைக்கும் வெற்றிகளாகும்.

ஏறத்தாழ எண்பது ஆண்டுகளுக்கு முன்பு; இந்த சமூகத்தின் அடித் தட்டு மக்கள் - அதற்கும் கீழே ஊசலாடிக் கொண்டிருந்த மக்கள் - அதாவது திராவிடர், தமிழர், சூத்திரர் என்று அடையாளங் காட்டப்பட்டவர்கள்; அவ்வாறு அழைக்கப்பட்ட வர்கள்; இன்றைக்குத் தம்மை திராவிட இனத்தவர் என்றும் - தமிழ்க் குலத்தினர் என்றும் அழைக்கப்படக் கூடிய அருகதை பெற்றிருப்பது; அவர்களது இயற்கையான பாரம்பர்யப் பெருமை எனினும்; அப்படி அழைப்பது தமது இனத்துக்கு அழகல்ல என்று தருக்கு மிகக் கொண்டலைந்தவரின் இறுமாப்பை அடக்கி இடுப்பை முறித்து; இன உரிமைச் சங்கநாதம் செய்திட வழி

காட்டியதும், தூண்டுகோலாயிருந்ததும் பெரியாரின் திராவிட இயக்கப் பிரச்சாரமும் - அறிஞர் அண்ணாவின் எழுத்துக்களும் தான் என்பதை எவர்தான் மறுக்க இயலும்?

குடியரசு, பகுத்தறிவு, திராவிட நாடு, புதுவை முரசு என புரட்சி முரசம் ஆர்த்த ஏடுகளின் வரிசையில் இருந்து; 1942ஆம் ஆண்டிலேயே இன ஒலி எழுப்பிய பெருமை உங்கள் முரசொலிக்கு உண்டல்லவா?

அந்த முரசொலிக்கு உன் போன்ற உடன்பிறப்புகள் காட்டிய ஆதரவும் - என் அருமைக் கண்மணி தம்பி முரசொலி மாறன் வழங்கிய ஊக்க உணர்வும், உழைப்பும் - நாள் முழுதும் நரம்பொடிய தொண்டாற்றி, கண் விழித்துக் கால முழுதும் காப்பாற்றி வரும் என் கடமை உணர்வும் - இன்றைக்கும் முரசொலி அறக்கட்டளை வாயிலாக அந்த ஒலியை உற்சாகத்துடன் வெளிப்படுத்தும் துணைப் பொதுச் செயலாளர் தம்பி ஸ்டாலினின் அயராப் பணியும் - அறக்கட்டளை உறுப்பினர்களின் ஒத்துழைப்பும் - மாவட்டக் கழக மாமணிச் செயலாளர்களும், கழக அமைப்புகளின் நிர்வாகிகளும் உன் போன்ற என் தம்பிமார்கள் வழங்கிடும் ஒத்துழைப்பும் - முகவர்கள், வாசகர்கள் கொண்டுள்ள அக்கறையும் இந்தச் சிறிய ஏட்டினை சீரிய ஏடாக ஆக்கிட வேண்டுமெனும் ஆவலுடன் நிகழுவதை என்னால் உணர முடிகிறது.

அந்த ஆர்வத்தின் வெளிப்பாடு திக்கெட்டுமிருந்து முரசொலி அலுவலகத்துக்கு தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு நாளும் காலையில் சேவலுக்கு முன், -செங்கதிருக்கு முன்பு - எழுந்து விடுகிற நான் முதல் வேலையாக முரசொலிக்கு எழுதுவதைத்தான் தொடங்குகிறேன். விடியற்காலை 4 மணி என்றும் 3மணி என்றும்; சில நாட்கள் விடியும் வரை தூங்காமலே விழித்திருந்தும் நான் எழுதுவதை நீ முரசொலியில் படித்தாய் எனில்; நான் அதை எழுதிட எடுத்துக் கொண்ட சிரமம் எல்லாம் எங்கேயோ பறந்து விடுகிறது.

“அண்ணே; இன்றைக்கு ‘முரசொலி படிக்கவில்லை’ என்போர்; என்னிடம் அதற்குக் கூறும் காரணம்; “பத்திரிகை கடைக்குத் தாமதமாக வருகிறது - வந்தது” என்பதுதான்.

இனி அப்படியொரு “சாக்கு” சொல்லி விடக் கூடாது - சொல்லித் தப்பிக்கக் கூடாது என்பதற்காகவே;

டிசம்பர் 15ஆம் நாள் முதல் 'முரசொலி'திருச்சி பதிப்பும், மதுரை பதிப்பும் வெளியிடப்பட இருக்கிறது.

எனவே முதற்கட்டமாக திருச்சி, மதுரை மாவட்ட, வட்டாரங்களிலேயுள்ள கழகச் செய்திகளை உடனடியாகத் தாமதமின்றி பிரசுரிக்கவும், கழகச் செய்திகளை அறிந்து கொள்ளவும் - சென்னையிலிருந்து மட்டுமல்ல; புதிதாக;

• திருச்சி

• மதுரை

ஆகிய நகரங்களிலுமிருந்தும் முரசொலி வெளிவருவது; உடன்பிறப்பே, உனக்கும் எனக்கும் மும்மடங்கு அதிக மகிழ்ச்சியை அளிக்கக் கூடியதாகும். இதைத்தான் "உனக்கோர் நற்செய்தி" என்று உவகைப் பொங்கிடக் குறிப்பிட்டேன்.

இந்த முயற்சி

வெற்றிகரமாக நடப்பதற்கு;

வாசகர்களின் ஒத்துழைப்பும்

முகவர்களின் ஆதரவும்

மிக மிகத் தேவை

என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள

மு.க.

08-12-2005

3192. ‘பாசக்கிளிகள்’ படைத்த நோக்கம், கிடைத்த வெற்றி!

உடன்பிறப்பே,

ஏறத்தாழ தொடர்ந்து அறுபது நாட்கள், கவிதைச் சாவி கொண்டு காலப் பேழையைத் திறந்து, திறந்து, வரலாற்று நிகழ்வுகளை அசை போடும் அரிய வாய்ப்பு கிடைத்து, அந்தச் சுவையை உன்னோடு பகிர்ந்து கொள்ளும் பாக்கியமும் பெற்றிருந்த நான், அதனை முதல் பாகத்துடன் நிறைவு செய்து விட்டு, இன்று முதல் வழக்கம்போல் என் வாஞ்சைமிகு உடன்பிறப்புகளுடன் “மடல் தொடர்பு” கொள்ளப் போகிறேன் என்ற மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உடன்பிறப்புக் கடிதம் எழுதுவதும், நான் தேடி வந்தோ - அல்லது நீயே தேடி வந்தோ நமக்குள்ளே “உடன்பிறப்பு சந்திப்பு” ஏற்படுவதும், எத்தகைய உணர்வையும், இன்பத்தையும், உறவு பூத்த பாசத்தையும் வெளிப்படுத்தக் கூடியவை என்பது உனக்கும், எனக்கும்தான் தெரியும்.

நாம், காலப் பேழையில் கடந்த காலச் சரித்திரங்களையும், களங் கண்ட வீரர்களின் செயல்களையும், காதல் கொண்டோர் கதைகளையும் எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்த போது,

சிலர் கறுப்புப் பேழைகளைத் திறந்து ‘கரன்சி’ கட்டுகளை,

எண்ணிப் பார்க்காமலே அள்ளிப் போட்டுக் கொண்டிருந்ததையும்.....அப்பணியை முற்றுப் பெறாமல் இன்னமும் அவர்கள் நடத்திக் கொண்டிருப்பதையும் நன்கறிவோம்!

வரப்போகும் பொதுத் தேர்தல் களத்திற்கானப் போர்க் கருவிகள் அவர்களுக்கு, அவைகள் தானே!

அவற்றை எடுத்து வீசி, ஏடுகள் சிலவற்றை விலை பேசியே, மேடுகளைக்கூட “மேரு மலை” என விளம்பரப்படுத்தச் செய்து விடலாம் என்றல்லவா எண்ணிக் கிடக்கின்றனர். இதுவரை எத்தனை பேருக்கு “அச்சாரம்” கொடுத்தாயிற்று எனக் கணக்கிட்டு,

அடுத்து எது? அல்லது யார்? என்று வீடணர்களை எதிர்பார்த்தும் இருக்கின்றனர்! இறுதியாக இருக்கவே இருக்கிறார்கள் "வாக்காளர்கள்" - அவர்களையும் மோசடி செய்ய "வாக்குறுதிகள்" தயார் என "வால் போஸ்டர்கள்" அச்சாகிக் கொண்டிருக்கின்றன அங்கே!

அந்தக் களங்காணும் நிகழ்ச்சிக்கு முன்புதான் இப்போது, தமிழன், தனது 'திருநாள்' என்றிருக்கின்ற ஒன்றைக் கொண்டாடும் வாய்ப்பைப் பெற்றுள்ளான் வழக்கம்போல! - இன்னும் இரண்டொரு நாட்களில் பொங்கல் விழா தொடங்குகிறது - "போகி" என்றும் - "பொங்கல்" என்றும் - "மாட்டுப் பொங்கல்" என்றும் - "காணும் பொங்கல்" என்றும், வள்ளுவர் விழா என்றும் ஏறத்தாழ ஒரு கிழமையை ஆக்ரமித்துக் கொள்கிற விழாக்கள் இணைந்த தமிழர் திருநாளைக் கொண்டாடப் போகிறோம்.

அந்தக் கொத்து மலர்ச் செண்டில் ஒரு "சொத்தை" வேண்டாமா? அதற்காகத்தான் திட்டமிட்டு நாள், நட்சத்திரம் பார்த்து தமிழக அரசின் சார்பிலான ஆளுநர் உரையை ஜனவரி 13 அன்று வைத்திருக்கிறார் ஜெயலலிதா!

யார் சொன்னதோ? வாஸ்துவோ? யோகமோ? யாகமோ? -

மூகாம்பிகையோ - மூஷிக வாகனரோ - யார் மொழிந்ததோ - பொதுவாகப் பொங்கலுக்கு முதல் நாள் "போகிப் பண்டிகை" என்பதே, "போக்கிப் பண்டிகை" என்பதுதான் என்பர் புலவர்!

ஏற்கனவே குவிந்துள்ள மாசு மருக்களை - அழுக்குகளைப் போக்குகிற நாளாக, அப்பண்டிகை நாளைத் தமிழர் இல்லங்களில் ஏற்றுள்ளனர்.

தமிழ்நாட்டில் குவிந்துள்ள தற்காலிக அழுக்குக் குவியலை அடியோடு போக்கிட, "போக்கி" நாளில் ஆளுநர் உரையை வைப்பதுதான் பொருத்தமெனக் கருதினார்கள் போலும் - ஒருவகையில், அது சரியான கருத்து எனினும், தமிழர்கள் அன்றுதொட்டுக் கொண்டாடி வரும் திருநாளில் ஒரு நாளை இப்படித் திருட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. அதனால் தான் தி.மு.க. பொதுச் செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான பேராசிரியர் அவர்கள், ஜெயலலிதா அரசு, தமிழர்களை இழிவுபடுத்தும் செயலில் ஈடுபடல் வேண்டாமென எச்சரித்து, அந்த நாளை மாற்றி அடுத்தடுத்த நாளில் ஆளுநர் உரையாற்றுவதால் யார் குடியும் முழுகிப் போய் விடாது என்று

அறுதியிட்டுக் கூறி அறிக்கை விடுத்தார் - பிடிவாதமாக அந்த நாளை மாற்ற முடியாது எனில், அன்று, அவை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தமிழரை இழிவு படுத்தும் செயலுக்கு இணக்கம் தெரிவித்திடும் போக்கினைக் கண்டித்து - ஆளுநர் உரையாற்றும் அந்நாள் ஜனவரி 13 அன்று, அவைக்குச் செல்வதில்லையென தி.மு.க., பா.ம.க., ஆகிய கட்சிகள் அறிவித்துள்ளன.

ஜனநாயக ரீதியில் இத்தனை கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தும்கூட, அந்த ஒரு நாள் தவிர வேறு நாள் கிடைக்காதது போல, ஜெயலலிதா, அதே நாளில், அதே 12 மணிக்குத்தான் ஆளுநர் உரை என்று அறிவித்ததை - தமிழர்களின் குரலை மதித்து மாற்றி அமைக்கத் தயாராக இல்லை - இது ஒன்றும் பொருளாதார பிரச்சினை அல்ல!

13ந்தேதி ஆளுநர் உரையைப் படித்து, 16ந் தேதிக்குமேல் அவையில் விவாதம் தொடங்குவதற்குப் பதிலாக, 16ந்தேதி உரையைப் படித்து 17ந்தேதி விவாதம் தொடங்கி, எப்படியும் ஒரு வாரம் நடைபெற இருக்கிற சட்டமன்றக் கூட்டத்தில் விவாதத்தை முடிக்க இயலும் என்கிறபோது, இவ்வளவு முரட்டுப் பிடிவாதம் ஏன் காட்டுகிறார்? அது தான் ஆணவம்! எதேச்சாதிகார மனப்பான்மை!

இதோ, மத்திய அரசு உணவு மானியத்தை 4000 கோடி ரூபாய் அளவுக்குக் குறைத்தது - அதனால் வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ளவர்களுக்கு எந்தவிதப் பெரிய பாதிப்பும் இல்லை என்றாலும்கூட, மானியக் குறைப்பை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென நம்மைப் போன்றவர்கள், எதிர் தரப்பினர்கூட சுட்டிக்காட்டியதைப் புறக்கணிக்காமல் - "நீ யார் சொல்ல? நான் யார் கேட்க?" என்ற அகம்பாவப் போக்கில் ஆட்டம் போடாமல் - மானியக் குறைப்பு அறிவிப்பை, மத்திய அரசு நிறுத்தி வைத்து விட்டதாக அறிவித்து விட்ட பெருந்தன்மையையும் -

தமிழர் திருநாளையொட்டிய போகிப் பண்டிகை ஒரு நாளை விட்டு விடுங்கள்! "அன்றைக்கு ஆளுநர் உரை வேண்டாம்" என்ற கருத்தைக் காலில் போட்டு மிதிக்கும் கர்வத்தையும் - ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ள, உடன்பிறப்பே உனக்கு இது ஒரு வாய்ப்பல்லவா?

பொங்கல் திருநாள் - தமிழர்க்குப் பூரிப்பு வழங்கும் நாள் - உழவர் பெருநாள் எனினும், கடந்த நான்கு ஆண்டுகளாகவே இந்தத் திருநாளில் ஒரு பகுதி, இருள்நாளாகத் தானே இருந்திருக்கிறது!

இந்த ஆண்டும் உழவர் பெருமக்கள் உற்ற துயர் கொஞ்சமா?-

எத்தனை உயிர்களைப் பலி கொடுத்து, எவ்வளவு பயிர் பாழாவதைப் பார்த்து, அந்தப் பாதிப்புக்கும் நிவாரணம் கிடைக்காமல், பதைபதைக்கிறார்கள் - சென்னையில் 51 உயிர்கள்! ஓரிரு நிமிடங்களில் மனிதர் காலில் மனிதர் மிதிபட்டு நசுங்கி, நொறுங்கி, உடைந்து உயிர் பிதுங்கிப் பலியாகி விட்டனரே! அதையெல்லாம் நினைத்தாலே நெஞ்சில் ரத்தம் கசிகிறபோது, பொங்கலில் மகிழ்ச்சியோ, இன்பமோ எங்கிருந்து கிடைக்கும்!

என் செய்வது, நமது இனத்தின் திருநாள் ஆயிற்றே! - பூகம்பக் குலுக்கலில் பூமி சிதறுண்டு, வீடு வாசல் புதைந்து கொண்டிருக்கும்போது, இடிபாடுகளில் சிக்கிக் கீழ் நோக்கி நாம் வீழ்ந்து கொண்டிருக்கும் நிலையில் - தலையில் ஒரு கம்பம் முட்டி - அதேசமயம், தேனடையொன்று உடைந்து ஒழுகிடும் தேன், நமது நாவிலே சொட்டினால் - அந்த இனிப்பை சுவைத்திடுவோமல்லவா - கசப்பு என்றா கூறிடுவோம் - அதுபோல பொங்கல் திருநாள் இனிப்பது இயல்பானது!

அத்தகைய தேன் சொட்டு போன்ற ஓர் இனிப்புச் சுவையாகத்தான், ஒரு செய்தி உனக்குச் சொல்லுகின்றேன் - உன் அன்பு அண்ணனாம் எனக்கு, 1945 முதல் கலையுலகிலும் தொடர்பு உண்டு என்பதும், எண்ணிக்கை எழுபது எட்டக் கூடிய அளவுக்குத் திரைப்படங்களுக்கு எழுத்தோவியம் தீட்டியவன் என்பதும் - அதன் தொடர்ச்சியாக, நம் அன்னை அஞ்சுகம் அம்மையார் பெயரில் இயங்கும் கலைக் கூடத்தினைத் தம்பி அமிர்தமும், தம்பி இராம நாராயணனும் உருவாக்கி, அந்தக் கலைக் கூட வெளியீடாகப் "பாசக் கிளி"களை உன் வீட்டுக்குப் பொங்கல் விருந்தினராக அனுப்பி வைக்கிறார்கள்.

கலையுலகில் எனக்கு மிகவும் பிடித்த இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், இசைவாணர்கள், கலை நிபுணர்கள், எத்தனையோ பேர் எண்ணிலடங்காதவர்கள் இத்திரையுலகில் இருந்தார்கள் - இப்போதும் இருக்கிறார்கள் - சிறப்பாக இயங்குகிறார்கள் - நான் வியப்புறும் வண்ணம் வித்தகம் புரிகிறார்கள் - விருதுகள் பெறுகிறார்கள் - இனிய நண்பர்களாகவும், இணையற்ற வல்லுநர்களாகவும் - விளங்கியோர், விளங்குபவர் என் நினைவை விட்டு என்றுமே அகலாதவர்கள்.

"கண்ணம்மா" படம் மூலம், கால் பதித்தேன் மீண்டும் கலையுலகில்! அடுத்து "மண்ணின் மைந்தன்" தொடர்ந்தான் - எல்லாமே, மனோகரா, பராசக்தி, மலைக்கள்ளன் என்றாகிவிட முடியாது! எப்படிப்பட்ட திறமை வாய்ந்தவனுக்கும்.

அதற்காக, "பாலைவன ரோஜாக்கள்", "நீதிக்குத் தண்டனை" போன்ற பகுத்தறிவுச் சித்திரங்களைத் தீட்டித் தர நான் தவறிடவில்லை.

பூமாலை புரட்சியும், பூம்புகார் இலக்கியமும், காஞ்சித் தலைவன் சரித்திரமும் தந்தவன் தானே - மறக்க முடியுமா கலை உலகு!

இப்போது, இந்தப் பொங்கல் நாளில், எனக்குத் தேன் துளியான மகிழ்ச்சி என்னவென்றால், 1952 (அதாவது 54 ஆண்டுகளுக்கு முன்பு) "தீபாவளியன்று திரையுலகில் ஒரு திருப்பம்" என்ற அறிவிப்புடன் வெளிவந்த 'பராசக்தி' படத்தில், கதாநாயகனாக அறிமுகமான ஆருயிர் நண்பர் நடிகர் திலகம் சிவாஜியின் மைந்தர் இளைய திலகம் தம்பி பிரபு இந்தப் படத்தில் பிரதானப் பாத்திரத்தில் நடிப்பது தான் -

அவருடன் எனது கலையுலக உடன்பிறப்புகள்,

நண்பர் நாசர், தம்பி முரளி, ஆச்சி மனோரமா, தம்பி வைகைப்புயல் வடிவேலு, செல்வி நவ்யா நாயர், செல்வி மாளவிகா, திருமதி ரோஜா, தம்பி வினித், தம்பி கலாபவன் மணி, தம்பி தியாகு, கஜேந்திரன்,. ஜூனியர் சில்க் ஆகியோர் நடிக்கின்றனர்.

தந்தையைப் போலவே கலைக்குத் தரும் மரியாதை, மதிப்பு - உணர்ச்சிகளைக் காட்டி நடிக்கும் உயர்வான பெருமிதம் - சிவாஜியின் வார்ப்படமாகவே இப்படத்தில் தோன்றுவது கண்டு, தம்பி பிரபுவின் மீது பாசம் பெருகுகிறது மேலும்! மேலும்! எனக்கு!

கலைத் துறையின் அனுபவக் களஞ்சியம் அருமை நண்பர் நாசர், உணர்வுகளைக் கொட்டும் சுயமரியாதைச் சுடராக - நம்மைக் கவருகிறார்.

தம்பி முரளிக்கேற்ற மிடுக்கான பாத்திரம் - தம்பியுடையான் படைக்கஞ்சான் என நிரூபிக்கும் வீரத்தின் உருவம் -

"நல்லரசு"க்கு உதாரணமாக தம்பி வினித்தும்,

குடும்ப விளக்காக நவ்யாவும், கலைவிளக்காக மாளவிகாவும் படத்தின் வெற்றிக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள்.

வைகைப் புயல் தம்பி வடிவேலுவின் வளைவு, நெளிவு, வார்த்தைகளில் அர்த்தப் பொலிவு - வயிறு வலி எடுக்கிறது - வந்து விட்டாலே! அவரைக் கண்டு விட்டாலே!

ஆச்சி, மனோரமா - கேட்க வேண்டுமா? கலைப் புதையல் - நகைச் சுவை நவமணி மாலையன்றோ!

நான் எழுதிய பாடல்கள் அன்னியில், என்னுடன் இணைந்து கவிப்பேரரசு தம்பி வைரமுத்து, கற்கண்டுச் சொற்களைக் கொண்டு, தமிழின் தட்ப வெப்பம் உணரும் வண்ணம், இரண்டு பாடல்களை எழுதியுள்ளார்.

மேலும், இசையருவியில் நனையக் குளிப்பாட்டி, இனிய தென்றலாய் வீசும் வித்யாசாகரின் இசையமைப்பு, எடிட்டிங் தம்பி ராஜ் கீர்த்தி, துணை இயக்குநர் தம்பி இளையபாரதி ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.

ஒளிப்பதிவு பன்னீர், உள்ளங்கவருகிறார் - ஒப்பற்றவராக முன்னேறியுள்ளார்!

சண்டைக் காட்சிகள் - சூப்பர் சுப்பராயன்....இளையோருக்கு நல்ல விருந்து. எல்லோருக்கும்தான்!

படத்தின் தொடக்கத்தில், படைத்த நோக்கத்தைப் பின்வருமாறு கூறியிருக்கிறேன்.

அன்பின் பெருக்கம் தான் பாசம். அந்தப் பாசத்தை
வெளிப்படுத்தக்
கிளியைக் கூண்டிலே வைத்து,
அதற்குப் பாலும் பழமும் கொடுப்பது
நம்மைப் பொறுத்தவரையில் பாசம் -
ஆனால் கிளியைப் பொறுத்தவரையில்
பாவம்! சிறைச் சாலையில் ஏ. வகுப்பு
கைதி மாதிரி; அவ்வளவுதான்.

உறவு முறையில் காட்டுவது
ஒரு விதமான பாசம் - பெற்றெடுத்த
தாய்தந்தையிடம் காட்டும் பாசத்தைவிட,
பெற்ற பிள்ளைகளிடமோ பெண்களிடமோ
காட்டுகிற பாசத்தைவிட, பேரர்கள்,
பேத்திகள் - கொள்ளுப் பேரக் குழந்தைகளிடம்
காட்டுகிற பாசத்தை விட, குறிப்பாகச் சொல்ல

வேண்டுமானால், வீட்டிலே உள்ளவர்கள் ஒருவருக்
கொருவர் காட்டுகிற பாசத்தைவிட,
வீட்டிலும் சரி, நாட்டிலும் சரி
உடன்பிறப்புகள் காட்டுகிற பாசமும் -
உடன்பிறப்புகளிடம் நாம் காட்டுகிற
பாசமும் தான் மிகமிக உயர்ந்தது என்று
என்னைப் பொறுத்தவரையில் கருதுகிறவன் நான்.

அதனால்தான்
இந்தக் கதையில்
மூன்று உடன்பிறப்புகளை
மையமாக வைத்து,
அவர்களின் பாசத்தை
எடுத்துக் காட்டியிருக்கிறேன்.
அது தான்
பாசக் கிளிகள்.

★

இந்த எனது முன்னுரையும், படத்தின் இறுதியில், அங்கயற்கண்ணி என்ற பாத்திரம் பேசுகிற

"தோண்டத் தோண்ட பொறுத்துக்கிட்டிருக்கிற
பூமி, ஒரு நாளைக்கி பூகம்பமா வெடிக்கிற மாதிரி,
ஆணாதிக்கத்தின் அக்கிரமம், அநியாயம் எல்லை
கடக்கிறப்ப பெண்ணியம் பொறுமையிழந்து பிரளயமாய்
புறப்பட்டுடும்ங்கிறதுக்கான எச்சரிக்கை தான் இது"

என்ற உரையாடலும்தான் - "பாசக்கிளிகள்" திரைப்படத்தின் மையக் கருவாகும்.

விரிக்கிற் பெருகும் -
படம் பார்த்து விட்டு எழுது!
படம் பார்ப்பது மட்டுமல்ல! வேறு பணிகளும்
நிரம்ப இருக்கிறது -

மார்ச் 3, 4, 5 - திருச்சி
மறந்து விட முடியுமா!

அன்புள்ள,
மு.க.
12-1-2006

3193. எச்சரிக்கை; ஏமாறாதே! ஏமாற்றாதே!

உடன்பிறப்பே,

“அரசாங்கத்தை திவால் நிலைக்குக் கொண்டு வந்து விட்டார்கள். ‘இலவச மின்சாரம்’ என்று அறிவித்து, கஜானா காலியாகும் நிலையை ஏற்படுத்தி விட்டார்கள். ‘சிமெண்ட்’ சாலைகளைக் குக்கிராமங்களிலும் அமைப்பதற்கு அனுமதித்து, சிமெண்ட் கம்பெனிகளுக்கு வருமானம் தேடிக் கொடுத்து விட்டு, தமிழக அரசின் பொருளாதாரத்தைத் தரைமட்டமாக்கி விட்டார்கள். இலவசமாக வேட்டி சேலைகளைப் பொங்கலுக்கு வழங்குகிற திட்டத்தை அசல் திட்டமாகவே நிறைவேற்றி, தொடர்ந்து நடத்தி, பட்ஜெட்டையே பாதிக்கிற செயலைப் புரிந்து விட்டார்கள் - ஏழை எளியோர் வீட்டுப் பெண்களுக்கு திருமண உதவித் திட்டம் என்ற பெயரில் பல கோடி ரூபாய்களைப் பாழாக்கி விட்டார்கள். அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் - பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம் - உழவர் சந்தை - இப்படிப் பல சமூக நலத் திட்டங்களை அறிவித்தும், நடைமுறைப்படுத்தியும் தமிழக அரசின் பொருளாதார வலிவை வீழ்ச்சியுறச் செய்து விட்டார்கள். நிதி நிலைமைக்கேற்ப செலவு செய்யும் திறனின்றி, “பட்ஜெட்”டில் பெரும் பகுதியை 94 சதவீதம் அரசு ஊழியர், ஆசிரியர் என்று அள்ளி அள்ளிக் கொடுத்து விட்டு, கஜானாவையும், களஞ்சியத்தையும் காலி செய்து விட்டார்கள்”

இப்படிப்பட்ட விமர்சனங்களை விநாடிக்கு விநாடி செய்து கொண்டு, அன்றைய தி.மு.க. ஆட்சியில் அரசு அலுவலர் உள்ளிட்ட அனைத்துத் தரப்பு மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி, நாம் சாதனைகள் பல புரிந்ததை ஜெயலலிதா அரசும், அந்த அரசின் அமைச்சர்களும் கேலியும், கண்டனமும் செய்து வந்ததை - நாடாளுமன்றத் தேர்தலில் படுதோல்வியைச் சந்தித்த பிறகும், இப்போது சட்டமன்றப் பொதுத் தேர்தல் விரைவில் வருவதையொட்டியும், தான் விழுங்கியதை தானே வாந்தியெடுத்து வெளிப்படுத்திடுவது போல, அரசு நடத்தும்

வேடிக்கையான வேதனையான காட்சிகளை, தமிழ்நாடு காணுகிற நிலை ஏற்பட்டுள்ளது.

தினசரிப் பத்திரிகையை எடுத்தால் - அதுவும் அந்தப் பத்திரிகை ஜெயலலிதாவின் ஆஸ்தான ஏடாக இருந்து விட்டால் - ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அறிவிப்பு - கோடி கோடியாக!

அதிலும் ஒரு வேதனையான வேடிக்கை - சகல பிரிவு மக்களையும், சந்தோஷப்படுத்துவதாக எண்ணிக் கொண்டு, வரும் தேர்தலில் அவர்களின் வாக்குகளைப் பெற்று விடலாம் என்ற நம்பிக்கையுடன் - ஏற்கனவே எந்தெந்த நலத் திட்டங்கள் - சமூக முன்னேற்றத் திட்டங்கள் - வேலை வாய்ப்புத் திட்டங்கள்; தி.மு.க. ஆட்சியில் செயல்படுத்தப்பட்டதோ, அவற்றையெல்லாம் அறவே ரத்து செய்து விட்டு, இன்று திடீரென்று "ஞானோதயம்" ஏற்பட்டது போல - அதே திட்டங்களை மேலும் விரிவாக்கி, ஏதோ இவர்கள் இப்போதுதான் புதிதாக அறிவிப்பது மாதிரி வாக்காளப் பெருமக்களை வஞ்சிக்கத் தொடங்கியுள்ளனர்.

2001 தேர்தல் முடிந்து ஆட்சிக்கு வந்தவுடன், "தி.மு.க. ஆட்சியின் திட்டங்களால் - மக்களுக்கான சாதனைகளை அறிவித்து, அவற்றைச் செயல்படுத்தியதால் - தமிழ்நாடு அரசின் நிதி நிலைமை படு பாதாளத்துக்குப் போய்விட்டது" என்று ஆகாயத்துக்கும் பூமிக்குமாகத் குதித்தவர்கள், இன்று எப்படியும் வெற்றி பெற்றே தீர வேண்டுமென்று வெறி கொண்டு, அவர்களே ரத்து செய்த திட்டங்களை இன்றைக்கு "வாந்தி" எடுத்ததை வாயில் போட்டுக் கொள்வது போல - வாக்காளர்களை ஏமாற்றி வஞ்சிக்கப் புறப்பட்டுள்ளார்கள்.

2001 தேர்தல் முடிந்ததும் - தி.மு.க. வின் சரித்திரச் சாதனைகளான திட்டங்களை ரத்து செய்தவர்கள், இன்று மீண்டும் தேர்தலுக்காக அன்று ரத்து செய்தவைகளையே செயல்படுத்த முன்வருகிறார்கள் என்றால், நாளை தேர்தல் முடிந்து ஒரு வேளை ஆட்சிக்கு வந்து விட்டால், மீண்டும் அறிவித்து கொண்டு வந்த திட்டங்களையே நாளை மாண்டு போகச் செய்யமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்திரவாதம்?

அரசு ஊழியர், ஆசிரியர்கள் இரண்டு இலட்சம் பேரை ஒரே நாளில் "டிஸ்மிஸ்" செய்ததை மறந்துவிட முடியுமா?

அவர்கள் நியாயம் பெறுவதற்கு, உச்சநீதி மன்றப் படிக்கட்டுகளில் ஏற வேண்டியிருந்ததே! அதை மறக்க முடியுமா?

பத்திரிகையாளர்கள், தங்களுக்கேற்பட்ட அடக்குமுறைக் கொடுமைகளை - பெங்களூர் வரையில் துரத்தப்பட்டதை - பயந்து கொண்டு மறந்து விடலாம்! ஆனால் பத்திரிகை சுதந்திரத்தில் அக்கறையுள்ளோர் மறந்து விட முடியுமா?

இலட்சக்கணக்கான ஏழைபாழைகளையும், மீனவர் களையும் பலி கொண்ட சுனாமிக் கொடுமையைத்தான் மறக்க முடியுமா? அதை விட சுனாமி நிவாரண நிதி சுருட்டப்பட்ட கொடுமையைத்தான் மறக்க முடியுமா?

அண்மையில் ஏற்பட்ட பாழும் வெள்ளப் பாதிப்பை மறக்க முடியுமா? பாதிக்கப்பட்டோருக்கான நிவாரண உதவிகள் வழங்குவதில், பாதுகாப்பற்ற முறையில், 51 பேர் மிதிபட்டு நசுங்கிச் செத்த கொடுமையை மறக்க முடியுமா?

எல்லாவற்றிலும் கொடுமையினும் கொடுமையாக, தமிழர் திருநாள் பொங்கலையொட்டிய போகிப் பண்டிகையன்று, நாள் நட்சத்திரம், பொருத்தம் என்பதற்காக, எதிர்க்கட்சிகளின் கருத்தை அலட்சியப்படுத்தி விட்டு,

ஆளுநர் உரை படிக்கும் நிகழ்ச்சியை நடத்துகிற ஆணவப் போக்கை மறக்க முடியுமா?

தேர்தல் வருகிறது என்றதும், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சாதனையாக அறிவிக்கின்ற ஜெயலலிதா, உண்மையிலேயே மக்களுக்கு அந்தச் சலுகைகள் கிடைப்பதில் அக்கறை கொண்டவரென்றால் கடந்த ஆண்டுகளில் அல்லவா அந்தச் சாதனைகளை அறிவித்து அமல்படுத்தியிருக்க வேண்டும்? தற்போது அவர் வாயளவில் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பீட்டில் அறிவிக்கின்ற அந்தத் திட்டங்களையெல்லாம் தேர்தலுக்குள் செய்து முடிக்க முடியுமா? மக்களை ஏமாற்றுவதற்காகச் செய்யப்படுகின்ற வாயளவு அறிவிப்புகள்தான் இவை என்பதை தமிழ்நாட்டு மக்கள் அறியமாட்டார்களா? என்ன?

ஜெயலலிதாவின் ஐந்தாண்டு கால ஆட்சியில், எந்தத் தரப்பு மக்களையாவது கொடுமைப்படுத்தாமல் இவர் மிச்சம் வைத்ததுண்டா? விவசாயிகள் ஓர் ஆண்டாவது நிம்மதியாக

பயிர் செய்து பலன் பெற்றதுண்டா? அண்டை மாநில அரசோடு சுமுகமான உறவுகொண்டு, காவேரித் தண்ணீர் சாகுபடிக்காக எந்த ஆண்டிலாவது பெற்றுத் தந்தது உண்டா? அந்த மாநில முதல்வரைப் பற்றி தாறுமாறாக பேசி, பூசலை வளர்த்துக் கொண்டு, விவசாயிகளைப் பட்டினி போடச் செய்தவர்தானே இந்த ஜெயலலிதா? விவசாயிகள் பட்டினி கிடந்து செத்ததை, பேரவையிலே கிண்டல் செய்து, அவர்கள் பசி, பட்டினியால் சாகவில்லை, வயிற்று நோய் காரணமாகத்தான் இறந்தார்கள் என்று கூறவில்லையா? சாப்பிட எதுவும் கிடைக்காமல் எலிக்கறி சாப்பிட்ட விவசாயிகளைப் பற்றி, அவர்கள், அதை "ருசி"க்காகச் சாப்பிடுகிறார்கள் என்று சொன்னவர்தானே இந்த ஜெயலலிதா? தன்னுடைய சாவுக்கு இந்த அரசு தான் காரணம் என்று ஒரு விவசாயி கடிதமே எழுதி வைத்து விட்டு மன்னார்குடியில் இறந்த போது, அந்தக் கடிதத்தை காவல் துறையைக் கொண்டு, கம்யூனிஸ்ட் கட்சி சட்டப் பேரவை உறுப்பினர் வீட்டில் நள்ளிரவில் புகுந்து கைப்பற்ற முயற்சி செய்த ஆட்சிதானே இந்த ஆட்சி! மக்கள் இவற்றையெல்லாம் மறந்து விடுவார்களா என்ன?

தொழிலாளர்கள், பாவம் என்ன செய்தார்கள்? தி.மு.கழக ஆட்சியில் அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 20 சதவிகித போனசை, ஒரு சதவிகிதம், இரண்டு சதவிகிதம் குறைக்கவில்லை, 8.33 சதவிகித அளவிற்குத் தானே கடந்த நான்காண்டுகளாகக் கொடுத்தார்கள். அவர்கள் ஊதிய உயர்வு கேட்டு வேலை நிறுத்தம் செய்யும் ஜனநாயக உரிமை கூட கிடையாதென்று அதற்காக வேலை நிறுத்தத் தடுப்புச் சட்டம் கொண்டு வந்த ஆட்சி அல்லவா இந்த ஆட்சி!

அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் பட்ட பாடு அளவிட முடியுமா? ஏன் அதிகாரிகளையே சாட்டையால் அடித்து வேலை வாங்குகிறேன் என்று பேரவையில் கூறியவர் தானே ஜெயலலிதா! வேலை நிறுத்தம் செய்தது தவறு, எப்படியாவது மீண்டும் பணியிலே சேர்த்துக் கொள்ளுங்கள் என்று அரசு அலுவலர்கள், குறிப்பாக, பெண்கள் தலைமைச் செயலகத்தில் மரத்தடியில் நின்று கதறினார்களே, பெண் என்ற முறையில் ஜெயலலிதாவிடம் இரக்கம் தோன்றியதா அப்போது? பதிவு செய்யப்பட்ட அரசு அலுவலர்கள் சங்கங்களின் அதிகாரத்தையே ரத்து செய்த ஆட்சி அல்லவா ஜெயலலிதா ஆட்சி? உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்ற

நீதிபதிகளும் அரசு அலுவலர்பால் அனுதாபத்தோடு நடந்து கொள்ளச் சொன்னார்களே, அப்போது ஜெயலலிதாவின் காதிலே விழுந்ததா, அந்த வார்த்தைகள்! இப்போது தேர்தல் என்றதும் அரசு அலுவலர் மாநாட்டை நடத்த தானே அழைத்துத் தேதி கொடுக்கிறார், பொங்கல் பரிசு என்கிறாரே, கடந்த நான்காண்டுகள் தமிழ்நாட்டில் பொங்கல் பண்டிகை கொண்டாடப் பட்டபோது அரசு அலுவலர்கள் அம்மையாரின் நினைவிலே வரவில்லையா?

மாணவர்கள், ஏன் மாணவிகள் ஜெயலலிதாவிற்கு என்ன செய்தார்கள்? ராணி மேரி கல்லூரியில் தலைமைச் செயலகத்தைக் கட்டப் போகிறேன் என்று கூறி அந்த மாணவிகளையெல்லாம் தெருவிலே நிறுத்தியவர்தானே ஜெயலலிதா? கல்விக் கட்டணத்தைப் பல மடங்கு உயர்த்தியதும் அவர் தானே? நுழைவுத் தேர்வில் கடந்த நான்காண்டு காலத்தில் நடைபெற்ற குழப்பத்திற்கு ஓர் எல்லை உண்டா? ஏன் இந்த ஆண்டுகூட என்ன நிலைமை? யாருக்காவது தெரியுமா? ஜெயலலிதா ஆட்சிக் காலமான கடந்த ஐந்தாண்டுகள் கல்வித் துறைக்கே இருண்ட காலம் அல்லவா?

நெசவாளர்கள் என்ன பாவம் செய்தார்கள்? தி.மு. கழகம் நாடாளுமன்றத் தேர்தல் முடிந்து மத்திய அரசிடம் வலியுறுத்தி, அவர்களுக்கான 'சென்வாட்' வரியை ரத்து செய்தது. அவர்கள் நெய்த நூலுக்கு விலை கிடைக்காத நிலை ஏற்பட்டு, பசியும் பட்டினியுமாக கிடந்த போது கஞ்சித் தொட்டி நிறுவிட தி.மு. கழகம் முயற்சிகளை எடுத்த நேரத்தில், அதற்கு எதிராக ஆளுங்கட்சியைத் தூண்டி விட்டு ஜெயலலிதா செய்த நடவடிக்கைகள் கொஞ்சமா?

பழி வாங்கும் நடவடிக்கைகள்தான் எத்தனை? எதிர்க்கட்சித் தலைவர்கள் மீதும், தொண்டர்கள் மீதும் போடப்பட்ட பொய் வழக்குகள் எத்தனை? ஆட்சிக்கு வந்ததும் வராததுமாக நள்ளிரவில் என் வீட்டிற்குள் புகுந்து, அவசர அவசரமாக கைது செய்தார்களே, அந்த வழக்கு என்ன ஆயிற்று? அந்த வழக்கில் ஏதாவது சிறிது உண்மை இருந்திருக்குமானால், அதற்குப் பிறகு எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? அதிலே உண்மை இல்லாமல் தானே இதுவரை எந்த நடவடிக்கையும் மேலாக எடுக்க முடியவில்லை. அப்படியானால் என்னைக் கைது செய்தது தவறான நடவடிக்கைதானே? அதற்கு என்ன பரிகாரம்?

ஏன் இப்போதும்கூட, அதே உணர்வோடு நெரிசலில் சிக்கி 51 பேர் உயிர் விட்ட நிகழ்ச்சிக்கு, தி.மு.கழகத்தைச் சேர்ந்த தனசேகரனைப் பொறுப்பாக்கி, நீதி மன்றம் அவரை ஜாமீனிலே வெளியே அனுமதித்தும் கூட, வெளியே விடாமல் குண்டர் சட்டத்தில் சிறையிலே வைத்திருப்பது ஜெயலலிதாவின் பழி வாங்கும் வெறிச் செயல் தானே?

31-12-2001 அன்று, முதலமைச்சர் பொறுப்பிலே இருந்தவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியிலே, பொங்கல் திருநாளையொட்டி எளிய மக்களுக்கு அரசின் சார்பில் வழங்கப்பட்டு வந்த இலவச வேட்டி, சேலைகள் அந்த ஆண்டு வழங்கப்படாது என்பதை நேரடியாகக் கூறாமல், வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்கள், மேலே உள்ளவர்கள் கணக்கை எடுக்கப் போவதாகவும், அதற்குப் பின் இலவச வேட்டி, சேலை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று அந்தத் திட்டத்தை கை விட்டார். ஆனால், இப்போது அவசர அவசரமாக இலவச வேட்டி, சேலைகளை வழங்கப் போவதாக அறிவிக்கின்றார்கள் என்றால், இதற்குப் பெயர் தானே ஓட்டுப் பிச்சை எடுப்பது என்பது!

மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றுவதில் தான் நிர்வாகக் குழப்பமே தவிர, எத்தனை எத்தனை ஊழல் திட்டங்கள்! புதிய வீராணம் திட்டம் என்று அறிவித்த போது, அதிலே எப்படிப்பட்ட ஊழல்கள் என்பதை, "இந்து" நாளேடு பக்கம் பக்கமாக எழுதியது மறந்து போய்விட்டதா? கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தில் ரஷ்ய கம்பெனி நீதி மன்றம் வரை சென்று, நமது தமிழக அரசின் மானத்தை ரஷ்யா வரை கொண்டு சென்றவராயிற்றே நமது முதலமைச்சர்! ஏன் கடந்த மாதம் சிறுசேரியில் தொழில் சாலை தொடங்குவதற்காகத் தி.மு. கழக ஆட்சியில் கையகப்படுத்தப்பட்ட சிப்காட் நிலத்தை, சிங்கப்பூரைச் சேர்ந்த தனியார் ஒருவருக்கு வீடு கட்டி விற்கும் பணிக்காக, குத்தகையாகக் கூட அல்ல, ஒட்டு மொத்த விற்பனையாக 180 கோடி ரூபாய் விலை குறைவாக விற்றது பற்றி அனைத்து ஆதாரங்களோடு வெளியிட்டேனே, அதைப் பற்றி முதல் அமைச்சர் இன்றுவரை வாய் திறக்க முடியவில்லையே? என்ன காரணம்? அசைக்க முடியாத உண்மை என்பதால்தானே?

இதற்குப் பதிலளிக்க முன்வராத ஜெயலலிதா, அதை விட்டு விட்டு தற்போது என் மீது வேறு வழக்கினை போட

முன்வந்ததற்குப் பதிலாக, என் மீது மான நஷ்ட வழக்கு போட்டு, சிறு சேரி விவகாரத்தை நீதிமன்றத்திற்குக் கொண்டு வந்திருக்கலாமே?

சுனாமி நிவாரணப் பணிகளிலே நடைபெற்ற ஊழல்கள் பற்றி, நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்புதல் வாக்கு மூலமே கொடுத்தாரே? எத்தனை பத்திரிகைகள் அதைப்பற்றி பக்கம் பக்கமாக எழுதின? இன்னும் இன்னும் எழுதிக் கொண்டே போகலாமே இந்த ஜெயலலிதா ஆட்சியின் வண்ட வாளங்களை! அதையெல்லாம் தற்போது அறிவிக்கும் சில பொய்யான அறிவிப்புகள் மூலம் சரி செய்து விடலாமென்று ஜெயலலிதா எண்ணிச் செயல்படுகிறார். ஆடையில் ஓரிரு கிழிசல் இருந்தால் தைக்கலாம்! ஆனால் ஆடை முழுவதும், அகல்யா பிரச்சினையில் சாபம் பெற்ற இந்திரனின் கண்களைப் போல, ஆயிரக்கணக்கான கிழிசல் இருந்தால், அது ஆடை அல்ல! பீடை தானே! அது போக வேண்டிய இடம் குப்பைக் கூடைதானே!

எனவே உடன்பிறப்பே, எந்த எம்.ஜி.ஆர்., தன்னைப் பார்த்து பொறாமைப்படுகிறார் என்று அன்றைய பிரதமர் ராஜிவ் காந்தி அவர்களுக்கு ஜெயலலிதா கடிதம் எழுதினாரோ? அந்த எம்.ஜி.ஆர். அவர்கள் பாடிய, முரசொலி சொர்ணம் எழுதிய, "அடிமைப் பெண்" படத்தில் காவியக் கவிஞர் வாலி அவர்கள் இயற்றிய,

"ஏமாறாதே! ஏமாற்றாதே!" என்ற பாடலைத்தான் அம்மையாரின் அண்மைக்கால அறிவிப்புகளைக் காணும்போது, வாக்காளப் பெருமக்களுக்கு எச்சரிக்கையாகப் பாடிக்காட்டி நினைவூட்ட வேண்டியுள்ளது.

அன்புள்ள,

மு.க.

13-1-2006

3194. பாசக்கிளிகள்; பத்திரிகைகள் “பட” விமர்சனம்!

உடன்பிறப்பே,

“பாசக் கிளிகள்” படத்துக்கு இன்னும் சில முக்கியமானதும், பிரபலமானதுமான ‘வார ஏடுகள்’ விமர்சனம் எழுதவில்லையே என்று நினைத்த போது, ‘விகடன்’ இதழும், ‘குமுதம்’ இதழும் கேலிச் சித்திரங்கள் வாயிலாக (கார்ட்டூன்) அதுவும் முழு பக்கச் சித்திரங்களாக வெளியிட்டு, ‘கலைத்துவம்’ மிளிரவும் - ‘அரசியல்’ ஒளிரவும் கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள்.

“திரைப்பட விளம்பரம் செய்வதற்கு இது போன்ற புதுமையைச் செய்யலாமா? அதாவது எழுத்துகளாலேயே ‘பாசக்கிளிகள்’ என்று குறிப்பிடலாமா? அல்லது “பாசக்” என்பது வரை பாதி வார்த்தையை எழுதி - மீதி வார்த்தைக்குப் பதிலாக “மூன்று கிளி”களின் ஓவியத்தை வரைந்து விளம்பரம் செய்யலாமா என்று கேட்டு, அதற்காக ஒரு மாதிரி விளம்பரத்தையும், “அஞ்சுகம் கலைக்கூடத்தின்” சார்பில் தயாரிப்பாளர் தம்பி இராம நாராயணனும், இயக்குநர் தம்பி அமிர்தமும், துணை இயக்குநரில் ஒருவரான தம்பி இளையபாரதியும் என் கருத்தினை அறிய விரும்பியபோது, இந்தக் காலத்து கலைப்பிரியர்களும், இளைஞர்களும் இப்படிப் படம் போட்டு விளம்பரம் செய்தாலே போதும் - தெளிவாகப் புரிந்து கொள்வார்கள் என்று நான் பதில் அளித்து, அவ்வாறே அவர்கள் விரும்பியபடி விளம்பரம் செய்யப்பட்டு, படமும் வெளியாகிப் பல திரை அரங்குகளில் நடைபெற்று வருகிறது.

விகடன், குமுதம் இதழ்களின் “கார்ட்டூன்”கள் மீது உன் கவனம் சென்றிருக்கும். குமுதம் இதழ், ஏழு கட்சிகளின் கூட்டணி என்பதை, ஏழு கிளிகளின் படங்களைப் போட்டு - “பாசக்கிளிகள்” என்றெழுதி, ஐந்து கிளிகள் கட்டுண்டு என் பிடியில் இருப்பது போலவும் - இரண்டு கிளிகள் கீழ் நோக்கி அமர்ந்திருப்பது

போலவும் - சித்தரித்திருப்பதை, நானும் தவறாக நினைத்துக் கொண்டு குமுதத்தின் மீது கோபம் கொள்ளவில்லை, நீயும் கொள்ளக் கூடாது என்பதற்காகவே இக்கடிதம் எழுதுகிறேன்.

நிகழ்வுகளை - கருத்துகளை - "அடையாள பூர்வமாக" - "உருவகப்படுத்தல் மூலமாக"- "ஒப்பீட்டு உவமைகளாக" - எடுத்துக் காட்டுகிற வகையில்தான், நான் கூட்டணிக் கட்சிகளிடம் கொண்டுள்ள பாசமும், நேசமும் கொண்ட தோழமை உணர்வை, ஒரு கயிறாகக் காட்டி, அந்தத் தூய்மையான உணர்வில், கூட்டணி, கட்டுண்டு இருக்கிறது என்பதை "கார்ட்டூனாக"ச் சித்தரித் திருக்கிறது குமுதம் இதழ்!

இரண்டு கிளிகள் கீழே தலை கவிழ்த்து அமர்ந்துள்ளதற்குக் காரணமே, "இந்தக் கூட்டணிக்கு எதிராக ஆளுங்கட்சி முகாமிலிருந்து யாராவது கீழறுப்பு வேலை செய்கிறார்களா என்று கீழ் நோக்கிப் பார்க்கின்றன" என்றும், 'குமுதம்' கருதுவதாக நாம் திட்டவட்டமாகத் தெரிவித்து அந்த இதழுக்கு நன்றியும் கூடச் சொல்லலாம்!

விகடனில் வெளியிடப்பட்டுள்ள "கார்ட்டூன்" வேடிக்கைச் சித்திரம், இன்னும் கூட நாம் பாராட்டி வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

வரப்போகும் தேர்தலை மனத்திற்கொண்டு, வாக்காளப் பெருமக்களை ஏமாற்றுவதற்காக - ஜெயலலிதா வாரி வழங்கும் சலுகைகளை "பொற்கிழிகள்" என்று அந்த அம்மையாரே சொல்லிக் கொள்வது போலவும், "அவை பொற்கிழிகள் அல்ல, வேஷக் கிளிகள்!" - "ஏமாறாதீர்" என்று நமது கூட்டணிக் கட்சிகள் எச்சரிப்பது போலவும் அந்தக் கேலிச் சித்திரம் அமைந்துள்ளது.

உடன்பிறப்பே! இரண்டு இதழ்களிலுமே நமது அனைத்துக் கட்சித் தோழமைக் கூட்டணியை கிளிகளுடன்தான் ஒப்பிட்டுப் படம் போட்டிருக்கின்றதே தவிர; ஆந்தைகளுடனோ, கழுகு, கோட்டான்களுடனோ; ஒப்பிட்டுப் படம் போடவில்லை - ஜெயலலிதா வீசுகிற மூட்டைகள் விழுந்து கொண்டே யிருக்கின்றன - தேர்தல் முடிந்து மூட்டைகளைப் பிரித்தால் தானே தெரியும்! "அத்திப் பழத்தை பிட்டுப் பார்த்தால், அத்தனையும் சொத்தை" என்ற உண்மை!

எனவே, இந்த மாநில மக்களுக்கு இன்றுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு விடை கொடுக்க - வேலை வாய்ப்புக்கு

வழிதிறக்க - சேது வாய்க்கால் திட்டம் போல, ஓரகடம் வாகன ஆய்வு மையம் போல - சேலம் உருக்காலைத் திட்டம் போல, தேசிய சித்த ஆய்வு மையம் போல, சேலத்தில் புதிய ரயில்வேக் கோட்டம் போல, செல்போன் கட்டணக் குறைப்பு போல, பாரத் நிர்மாண் திட்டம் போல, நெசவாளர்களுக்கு 'சென்வாட்' வரியை ரத்து செய்ததைப் போல, தகவல் தொழில் நுட்பத் திட்டங்கள் போல, 16 மாதங்களில் 27 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் 45 திட்டங்களை நமது மாநிலத்தில் மத்திய அரசு செயல்படுத்துவது போல, மாநில வளம் பெருக்கும் பல திட்டங்களுக்கு வகை செய்திட, இன்று மத்தியில் உள்ள அரசுடன் பகை கொண்டு செயல்படுகிற ஜெயலலிதா அரசு போல இல்லாமல் - நிர்வாக ரீதியில் ஒத்துழைத்து, கொள்கை வழி உறவுக்குக் கை கொடுத்து, உரிமைக்குக் குரல் கொடுக்கும் ஓர் அரசு தமிழகத்தில் அமைந்திட,

கூட்டணிக் கட்சிகள், உரிய நேரத்தில் தங்களுக்குரிய நியாயமான பங்கினைப் பகிர்ந்து கொண்டு தேர்தல் களம் காண முனைந்திடும்போது,

எங்கிருந்தோ கேட்கும் "நாரத கானங்கள்" நம் கவனத்தைத் திசை திருப்பி விடாமல், நல்லதையே நினைப்போம் - நல்லதாகவே முடிப்போம் - நாட்டின் நலமும், வளமும், பலமும் பெருகிடவும், நிலைத்திடவும் -

"ஜனநாயகத்தைப் பாதுகாப்போம்" என உறுதி எடுத்துக்கொள்ள, "விகடன்", "குமுதம்" கேலிச் சித்திரங்கள் நமக்கு எச்சரிக்கை உணர்வை ஊட்டட்டும்! எஃகு உள்ளத்துடன் நமது எதிர்க்கட்சிகளின் தோழமை அணி, களம் புகும்! வெற்றி காணும்!

அனபுள்ள,

மு.க.

21-1-2006

3195. மான உணர்வு; மரக்கட்டைகளுக்கு ஏது?

உடன்பிறப்பே,

"கருணாநிதி பொய்ப் பிரச்சாரம் செய்கிறார்" என்று கொட்டை எழுத்து தலைப்பிட்ட அறிக்கை யொன்றை உண்மையின் உறைவிடம்(?), வாய்மையின் பிறப்பிடம் (?) ஜெயலலிதா வெளியிட்டுள்ளார். கேபிள் டி.வி.யை அரசாங்கம் கையகப்படுத்தும் சட்டத்தை நான் முதலில் எதிர்த்ததாகவும் - பிறகு "பொது ஜன சமுத்திரமே" பொங்கியெழுந்து அந்தச் சட்டத்தை ஆதரிக்க கிளம்பியதைக் கண்டு, நான் நடுநடுங்கிப் போய், நானும் அந்தச் சட்டத்தை ஆதரிக்க ஆரம்பித்து விட்டேன் என்றும் அந்த அறிக்கையிலே தெரிவித்துள்ளார்.

தொடக்கத்திலிருந்தே அரசுடைமையாக்கும் சட்டத்தை மாநில அரசுக்கு அதிகாரமிருந்தால் நிறைவேற்றுவதில் எந்த ஆட்சேபணையும் இல்லை என்றும் - பொதுவான ஒரு சட்டம் இயற்றும்போது; பாரபட்சமாக 500 நிறுவனங்களில் குறிப்பிட்ட 10 நிறுவனங்களை மட்டும் அரசுடைமையாக்குவது பழிவாங்கும் போக்காகவும் - அரசியல் காழ்ப்புணர்வுக்கு அடையாளமாகவும் அமைந்து விடுகிறது என்றும்தான் நான் தெரிவித்து வருகிறேனே யல்லாமல்; ஜெயலலிதாவின் பொய்யான அறிக்கையில் சுட்டிக்காட்டுவதுபோல அந்தச் சட்டத்தை அடியோடு எதிர்ப்பவனல்லன்.

பேருந்துகளை அரசுடைமையாக்குகிற சட்டத்தை தி.மு.க. ஆட்சியில்தான் கொண்டு வந்தோம். அதைச் சீர்குலைத்த பெருமை அ.தி.மு.க. ஆட்சியைத்தான் சேரும்.

அனுமதியின்றி அரசு நிலங்களைக் கையகப்படுத்திக் கட்டப்பட்ட ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை தி.மு.க. ஆட்சியில் அரசுடைமை ஆக்கினோம் - அதற்கு அந்தக் கல்லூரி நிர்வாகக் குழுவின் ஒப்புதலைப் பெற்றிருந்தும்கூட; ஜெய

லலிதா ஆட்சிக்கு வந்தவுடன் - அந்த நிர்வாகத்தைத் தூண்டி வழக்கு தொடரச் சொல்லி, அந்த வழக்கில் சென்னை நீதி மன்றம்; அரசுடைமையாக்கிய அந்த நிறுவனத்தை மீண்டும் தனியார் நிர்வாகத்திடமே ஒப்படைக்க வேண்டுமென்று தீர்ப்புக் கூறி; சிறிய சிறிய விஷயங்களுக்கெல்லாம் உச்ச நீதி மன்றம் வரையில் அப்பீலுக்குச் செல்லுகிற ஜெயலலிதா - அப்படி எதுவும் செய்யாமல்; பேசிக் கொண்டு, பெற்றுக் கொண்ட பேரப்படி; அப்பீலே செய்யாமல் - அந்த ராமச் சந்திரா நிறுவனத்தை அந்தத் தனியார் நிர்வாகத்திடமே ஒப்படைத்துவிட்ட கதை ஊரறியும், உலகறியும்.

அந்த ஜெயலலிதாதான் ஏதோ அரிச்சந்திரன் வீட்டுக்கு அடுத்த வீட்டு அம்மாமி மாதிரி அறிக்கை விடுகிறார்; கருணாநிதியின் பொய்ப் பிரச்சாரம் என்று!

"டான்சி" நிலத்தை அரசிடமிருந்து வாங்கவே இல்லை என்று ஆரம்பத்தில் சொன்னது யார்? ஜெயலலிதாதானே!

அரசுக்குச் சொந்தமான டான்சி நிலத்தை முறைப்படித்தான் வாங்கியிருக்கிறேன் என்று மதுரை

அ.தி.மு.க. மாநாட்டில் மார் தட்டிக் கர்ச்சனை செய்தது யார்? இதே ஜெயலலிதாதானே!

"அடி மாட்டு விலை" கொடுத்து அந்த டான்சி நிலத்தை வாங்கி விட்டு - உரிய விலை கொடுத்ததாக உளறிக் கொட்டியது யார்? இதே ஜெயலலிதா தானே! எக்ரிமெண்டில் கையெழுத்துப் போடவில்லை என்றும் - அதில் இருப்பது தனது கையெழுத்தே இல்லையென்றும் சொன்னது யார்? இதே ஜெயலலிதாதானே! உச்ச நீதி மன்றத்தில் வழக்கும் - அதில் கூறப்பட்ட தீர்ப்பும் - ஜெயலலிதா கையெழுத்துப் போட்டு விட்டு, பிறகு இல்லையென்று கூறுவது தவறு என்று திட்டவட்டமாக அறிவித்தது ஜெயலலிதாவின் நேர்மைக்கு அடையாளமா? நீதியின் கூர்மைக்கு அடையாளமா?

அரசுக்குச் சொந்தமான நிலத்தை வாங்கியது தவறு என்பதால்தானே அதைத் திருப்பிக் கொடுக்குமாறு தீர்ப்பு அளிக்கப்பட்டது! சே! சே! வெட்கக் கேடு! போம்மா! பொய்க்குளி!

டான்சி வழக்கில் விடுதலை என்பது வேறு விஷயம்! ஆனால் தீர்ப்பு வாசகங்களில் சுட்டிக் காட்டப்பட்ட ஜெயலலிதாவின்

தவறுகள் - விதி மீறல்கள் - இல்லையென்று ஆகிவிடுமா? இந்த 'அழகில்' இவர் "பொய்" பற்றிப் பேச என்ன அருகதையிருக்கிறது?

இதோ சென்னை எம்.ஜி.ஆர். நகரில் வெள்ள நிவாரணம் வழங்குமிடத்தில் நெரிசலில் 42 பேர் நசுங்கிச் சாகிறார்கள் - தி.மு.க. பகுதிச் செயலாளரும், மாநகராட்சி மன்ற உறுப்பினருமான தனசேகரன் தான் அந்த 42 உயிர் பலிக்குக் காரணமென்று - அவரைக் கைது செய்கிறார் ஜெயலலிதா - அதாவது தனது தவறைத் திசை திருப்புகிறார் - உயர் நீதிமன்றம் தனசேகரனுக்கு ஜாமீன் விடுதலையை உறுதி செய்கிறது - இதற்கிடையே இந்தச் சண்டாள சர்வாதிகார ஆட்சி, தனசேகரனைக் குண்டர் சட்டத்தில் சிறையில் போடுகிறது - அவர் ஜாமீனில் வரக் கூடாதென்று! ஜாமீனில் தனசேகரன் விடுதலையாகலாமென சென்னை உயர்நீதி மன்ற உத்திரவை எதிர்த்து, ஜெயலலிதா; உச்ச நீதி மன்றம் சென்று வழக்கு தொடருகிறார் - அங்கே என்ன நடந்தது?

இதோ; உச்ச நீதிமன்ற நீதிபதிகள் இருவர் ஜெயலலிதா அரசின் வழக்கறிஞர் வாதத்தை ஏற்காமல் தீர்ப்புக் கூறி, அதோடு அவர்கள் சொல்லிய வாசகங்களையும் பார்த்தால்; மானமுள்ளவர்களாயிருந்தால் இந்நேரம் நாக்கைப் பிடுங்கிக் கொண்டிருக்க வேண்டுமே!

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தமிழக அரசுக்காக வாதாடிய வழக்கறிஞரைப் பார்த்து சொன்னது என்ன ?

> "தனசேகரனால்தான் 42 பேர் பலியானதாகக் கூறுகிறீர்களா? அப்படிக் கருத முடியாது. வதந்தி என்றாலே அதை யார் முதலில் பரப்பியது என்று தெரியாது. எனவே தனசேகரனால் இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டதாக கூறுவதை ஏற்க முடியாது. அதற்கு மாறாக உங்கள் (தமிழக அரசு) அதிகாரிகளின் அலட்சியத்தினால் தான் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. இதற்கு தமிழக அரசே பொறுப்பு"

இவ்வாறு உச்ச நீதிமன்ற நீதிபதி உதிர்த்துள்ள இந்த வாசகம் ஜெயலலிதா அரசின் ஆஸ்தான பத்திரிகையிலேயே வெளி வந்திருக்கிறது.

பாவம்; அதே பத்திரிகையில்தான் "கருணாநிதி கேபிள் டி.வி. பற்றிப் பொய்ப் பிரச்சாரம்" என்று தலைப்பிட்ட அறிக்கையும்

பெரிதாக, மிகப் பெரிதாக - நீளமாக மிக நீளமாக இரண்டு பக்கங்களில் வெளிவந்துள்ளது.

அந்த சட்ட முன்வரைவினை 21.1.2006 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் அறிமுகம் செய்தார்கள். அப்போது அந்தச் சட்ட முன்வடிவின் தலைப்பாக "2006ஆம் ஆண்டு தமிழ்நாடு கம்பி வட தொலைக்காட்சி இணைப்பமைவு (பன்முகச் சேவை ஒலி இதழ் செய்தி பரிமாற்றம்) மேலாண்மை கையகப்படுத்துதல் உரிமைமாற்றச் சட்ட முன்வடிவு'' என்று அரசு அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் 27ஆம் தேதி பேரவையில் விவாதத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட சட்ட முன் வடிவின் தலைப்பில் "உரிமை மாற்றம்" என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக "சொத்துரிமை மாற்றம்" என்றே வார்த்தைகளை மாற்றி அதனைத்தான் பேரவையிலே நிறைவேற்றினார்கள். இவ்வாறு அறிமுகப்படுத்தும் போது ஒரு பெயரையும், அதே சட்ட மசோதாவை நிறைவேற்றும்போது வேறொரு பெயரையும் குறிப்பிட்டு நிறைவேற்றிய "தலைப்பு மாற்றிகள்'' தான் நம்மைப் பார்த்து பொய் கூறுவதாக அறிக்கை விடுகிறார்கள்.

பொய்ப் பிரச்சாரம் செய்வதற்கென்றே பிறந்தவர் ஜெயலலிதாவேதான் என்பதற்கு "எம்.ஜி.ஆர். தன்னைக் கண்டு பொறாமைப்படுகிறார்'' என்று அன்றைய பிரதமர் ராஜீவ் காந்திக்குத் தனது கைப்படவே ஆங்கிலத்தில் கடிதம் எழுதினாரே, அது ஒரு சான்று போதாதா? இன்று எம்.ஜி.ஆர். நகர் சாவுகளுக்குக் காரணம் கூறி தம்பி தனசேகரனைப் பழி வாங்க குண்டர் சட்டம் பிரயோகித்தார் ஜெயா! இந்தப் பிறவி பொய் பேசவே பிறந்த பொய்க்குளிப் பிறவி என்பதைச் சுட்டிக்காட்டும் வகையில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு உலகறிய வெளிவந்த பிறகும்; இனி ஒரு நிமிடமாவது இவர் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்க வெட்கப்பட வேண்டாமா?

மான உணர்வும், வெட்கமும், நாணமும் மரக்கட்டைகளுக்கு ஏது என்கிறாயா?

அன்புள்ள,

மு.க.

31-01-2006

3196. “அருவருக்கத்தக்க அரசியல் தீண்டாமை!”

உடன்பிறப்பே,

‘தமிழகத்தில் கடைப்பிடிக்கப்படும் அரசியல் தீண்டாமை அருவருக்கத்தக்கது’ என்ற கருத்தினை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் தோழர் பாண்டியன் வெளியிட்டிருப்பதைத் ‘தினகரன்’ இதழில் படித்தேன்.

மனித நேயம், நட்புணர்வு ஆகியவற்றுக்கும் அரசியல் கருத்து மாறுபாடுகளுக்கும் முடிச்சு போட்டு; அதன் காரணமாக ஒருவரையொருவர் கண்டால் பேசுவது கூடப் பெருந்தவறு என எண்ணிக் கொண்டும்; தவறிப் பேசிவிட்டால் தலைமை என்ன தண்டனை தருமோ எனக் கருதி, நடுங்கிக் கொண்டும் இன்றைக்கு இருக்கின்ற ஒரே கட்சி அ.தி.மு.க. தான் என்பது உள்ளங்கை நெல்லிக் கனி போன்ற உண்மையாக இருக்கும்போது; தோழர் பாண்டியனின் கருத்தில் உள்ள நாகரிகம், பண்பாடு இவற்றை எண்ணிப் பார்க்கும் என்போன்றோர் “அரசியல் தீண்டாமை அருவருக்கத்தக்கது” என்ற அந்த வாசகத்தை அப்படியே எழுத்துக்கு எழுத்து வரவேற்று ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

பாண்டியன் அவர்களின் இந்தக் கருத்து; தமிழகத்தில் அரசியல் பண்பாடு, நலிவுற்று நாசமாகி விடலாகாது என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் எழுந்துள்ளது என்பதை உணர்ந்தே இதனை எழுதுகிறேன். சான்றாக; அவர் அங்கம் வகிக்கும் கம்யூனிஸ்டு கட்சியேகூட கடந்த காலத்தில் இரண்டு பிரிவுகளாகி - சர்வதேசப் பிரச்சினையில் கருத்து வேறுபாடுகள் - இந்திய தேசப் பிரச்சினையில் கருத்து வேறுபாடுகள் - கொடிகளிலேயே வெவ்வேறு அமைப்புகள் - இப்படிப் பல மாறுபாடுகள் ஏற்பட்ட நிலையிலுங்கூட அந்த இரு பிரிவு தலைவர்களிடையே மனித நேய உணர்வோ, நட்பு உணர்வோ

பட்டுப்போய் விடவில்லை. அரசியல் பண்பாட்டுக்கு ஆபத்து வந்து விடாமலே பாதுகாத்தனர். அந்த அரசியலுக்கு அப்பாற்பட்ட மனித நேய உணர்வுக்கு மதிப்பளிப்பவர்களில் ஒருவர் என்ற முறையில் பாண்டியன் அவர்கள் அறிவித்துள்ள "அருவருக்கத்தக்க அரசியல் தீண்டாமை" என்ற சொற்றொடர், தமிழக அரசியலுக்கு தக்க தருணத்தில் நோய் தீர்க்கும் மருந்தாகப் பயன்படு மென்றும் - பயன்படுத்தப்பட வேண்டுமென்றும் வலியுறுத்துகிறவர்களின் பட்டியலில் நானும் ஒருவன். பாண்டியன் அவர்களின் கருத்து பக்குவப்பட்ட உள்ளத்திலிருந்து வெளிப்பட்டது என்பதையும் என்னால் உணர முடிகிறது. உணர்ந்து பாராட்டவும் முடிகிறது.

வேறு சிலர்; அவர்கள் அரசியல் கூடாரங்களில் இருக்கலாம் - அல்லது ஏடு நடத்துவோராயிருக்கலாம் - அவர்களும் அரசியல் கட்சிகளின் மோதுதல்களைப் பற்றி கருத்து வெளியிடுகிறார்கள் ஆனால் அது பொதுவான நிலையை எதிரொலிக்காமல்; குறிப்பாக தி.மு.கழகத்தையும் அத்தகை வரிசையில் உள்ளதுதான் என்று குற்றம் சாட்டிட வேண்டுமென்ற குறுகிய நோக்கமுடையதாக இருக்கிறது.

உதாரணமாக; நண்பர் "பிரபு சாவ்லா" அவர்களை ஆசிரியராகக் கொண்டு நடத்தப்படுகிற "இந்தியா டுடே" பிப்ரவரி "2 - 8" எனத் தேதியிட்ட இதழின் தலையங்கத்தில் "எடிட்டர்" என அவரே கையெழுத்திட்டு வெளிவந்துள்ள வாசகங்களை மட்டும் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

> "மத்திய அரசியலிலும் சரி, பல மாநிலங்களிலும் சரி; ஆளுங்கட்சிகள், எதிர்க்கட்சியினர் அரசியல் ரீதியாக மோதிக் கொண்டு பொது இடங்களிலும், பொது விழாக்களிலும் பரஸ்பரம் சந்தித்து, பேசி அளவளாவும் ஆரோக்கியமான போக்கு இருந்து வருகிறது. ஆனால் தமிழக அரசியலில் எதிர்க்கட்சியினரை எதிரிக்கட்சியின ராக கருதும் போக்கு நிலவுகிறது. குறிப்பாக, அ.இ.அ.தி.மு.க., தி.மு.க. தலைவர்கள், தொண்டர்கள் தங்களை ஒருவருக்கொருவர் எதிரிகளாகப் பார்ப்பதையும் கடுமையாக மோதிக் கொள்வதையும் தரம் தாழ்ந்து விமர்சிப்பதையும் தனிநபர் விரோதம் பாராட்டுவதையும் தொடர்ந்து செய்து வருகிறார்கள்."

நண்பர் பிரபுசாவ்லாவின் இந்தக் கருத்தைப் படிக்கும் போது; இன்றைய ஆளுங்கட்சியான அ.தி.மு.க. வின் "தனிநபர் விரோதக் கொள்கை"யை விமர்சிக்கும் போது; அத்துடன் தி.மு.க.வையும் இணைத்துக் கொண்டால்தான் ஒரு வகையில் பாதுகாப்பு என்று அவர்கள் நம்புவது புரிகிறது.

புராண அடிப்படையில் அதே பாணியில் உதாரணம் கூறவேண்டுமானாலும்; தனது தங்கையை இராமனும் இலக்குவனும் அங்கங்களை அறுத்து அவமானச் சின்னமாக்கியதால்தான், இராவணன் கோபங் கொண்டு, சீதையை அபகரிக்கிறான் - அதையொட்டி இராமாயண யுத்தம் நடைபெறுகிறது. இராமனும், இராவணனும் யுத்தம் நடத்தினார்கள் என்றும் அதனால் மக்கள் அழிந்தார்கள் என்றும்; ஒரு சாரார் இராவணனைக் குற்றம் சாட்டியும் மற்றொரு சாரார் - ஆரம்ப காரணம் இராமன்தானென்று அவனைக் குற்றம் சாட்டியும்; இன்னமும் முடிவடையாத விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற தல்லவா!

அது போகட்டும்; அதை மறந்து விடுவோம் - அ.தி.மு.க., - தி.மு.க. தனி நபர் விரோதக் கொள்கையால்; மத்தியிலும் பல மாநிலங்களிலும் அரசியல் கட்சிகள் மோதிக் கொண்டாலும், பொது இடங்களில், பொது விழாக்களில், பரஸ்பரம் அளவளாவுகிற ஆரோக்கியமான போக்கினை இரு சாராரும் கடைப் பிடிக்கவில்லை யென்று "இந்தியா டுடே" ஏட்டில் பிரபு சாவ்லா கூறுவதை சற்று ஆய்வு செய்து பார்ப்போம்.

பெருந்தலைவர் காமராஜர் மறைந்த போது - மேலவையில் காங்கிரஸ் தலைவர் ராஜாராம் நாயுடு அவர்கள் கூறியது போல; காமராஜரின் சகோதரன் போல இருந்து இறுதிக் காரியங்களை ஆற்றினேன்.....

அதே காமராஜர் அவர்கள் என் தாயார் மறைந்த போது; நான் வீடு வந்து சேர்வதற்குள் என் அன்னைக்கு அஞ்சலி செலுத்த அவர் வந்து காத்திருந்தார் என்பதை மறக்க முடியுமா என்னால்!

தி.மு.க.வை விட்டுப் பிரிந்து அண்ணாவை மேடைகளில் விமர்சித்த ஈ.வெ.கி. சம்பத் மறைந்தபோது; மருத்துவமனைக்கே ஓடிச்சென்று; அந்த நண்பருக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தினேன்.

பக்தவத்சலனார் மறைவின்போதும்; துயரில் பங்கு கொள்ள அவர் இல்லம் சென்றேன் - அவர் குடும்பத்தார் கோரிக்கையேற்று அவருக்கு நினைவு மணி மண்டபம் கட்டினேன்.

அருமை நண்பர் எம்.ஜி.ஆர். உடல் நலம் மிகவும் பாதிக்கப்பட்டபோது "நானும் பிரார்த்தனை செய்கிறேன்" என்று உடன்பிறப்பு கடிதம் தொடர்ந்து எழுதிய நான், சுற்றுப்பயணம் முடிந்து ஈரோட்டிலிருந்து புகைவண்டியில் திரும்பும்போது சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இறங்கியதும் எம்.ஜி.ஆர். மறைந்து விட்டார் என்ற செய்தி அறிந்து, அங்கிருந்தவாறே நேரடியாக எம்.ஜி.ஆர். அவர்களின் தோட்டத்துக்குச் சென்று அஞ்சலி செலுத்தியதை அப்போது அந்த இடத்தில் இருந்த நண்பர் செ. மாதவன், டாக்டர் ஹண்டே போன்றவர்கள் நன்கறிவார்கள். எம்.ஜி.ஆர். மறைந்த அன்று தான் அண்ணா சாலையிலே இருந்த என்னுடைய சிலை உடைத்து நொறுக்கப்பட்டது என்பதும் உடைத்தவர்களை நான் வாழ்த்தி அறிக்கை விட்டேன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அ.தி.மு.க. அவைத் தலைவர், நாவலர் நெடுஞ்செழியனை மருத்துவமனைக்குச் சென்று பார்த்தேன். அவர் மறைந்த சேதி கேள்வியுற்று டெல்லியிலிருந்து அன்றிரவே திரும்பி; மலர் வளையம் வைத்திட விமான நிலையத்திலிருந்து நேராக அவர் இல்லம் சென்றேன். வீட்டு வாசலில் அ.தி.மு.க. தொண்டர்களும் - அ.தி.மு.க. மகளிரும் இழி மொழிகளால் என்னை அர்ச்சித்ததையும் தாங்கிக் கொண்டு, அஞ்சலி செலுத்தி விட்டுத் திரும்பினேன்.

ஆனால்? ஆனால்? ஆனால்? அமெரிக்க மருத்துவமனையிலிருந்து தம்பி முரசொலி மாறனை சென்னை ராமச்சந்திரா மருத்துவமனைக்கு அழைத்து வருவதென்று எல்லா ஏற்பாடுகளும் முடிந்து விட்டது. நான் சேலத்திற்கு, திருப்பூரிலிருந்து காரில் சென்று கொண்டிருக்கிறேன். சேதி வருகிறது வழியில் - என்ன செய்தி? மாறனை மருத்துவமனையில் சேர்த்திட எல்லாம் தயார் நிலையில் இருந்தும்; திடீரென ஒரு மணி நேரத்துக்கு முன்பு; அந்த மருத்துவமனையில் சேர்க்க இயலாதென்று மறுத்து விடுகின்றனர். மறுக்குமாறு ஆணையிட்டு விடுகின்றனர். திருப்பூர் சேலம் சாலையில் இருந்தவாறே சென்னை ராமச்சந்திரா மருத்துவமனையுடன் பேசுகிறேன் - முதலில் பேசியவர்கள் பிறகு பேசவே மறுத்து விடுகிறார்கள் - ஆகாயத்தில், விமானத்தில் மாறன் - திருப்பூர், சேலம் சாலையில் காரில் நான்! அனுமதிக்க முதலில் ஒப்புக்கொண்டு, அறைகள் எல்லாம் தயார் செய்து வைத்து மருத்துவமனை நிர்வாகம் கடைசியில் கைவிரித்து

விடுகிறது - கடைசி நிமிடத்தில் அப்போலா மருத்துவமனையினர் கருணை காட்டினர் - ஏன்? ஏன்? ஏன் முதலில் அனுமதிக்க சம்மதித்தவர்கள் பிறகு மறுத்தனர் ? யார் தலையீடு? எவர் போட்ட தடை?

தனி நபர் விரோதம் - தரம் தாழ்ந்த தன்மை என்ற இரு வாசகங்களையும் நண்பர் பிரபுசாவ்லா இப்போது யாருக்கு பொருத்துவார்?

அது மட்டுமா? அடுத்த ஓரிரு மாதங்களுக்குள்ளாக என் கண்மணி மாறன் மறைந்துவிட; அவர் உடல் என் இல்லத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது - அன்றைக்கு உச்சநீதிமன்றத்தில் ஜெயலலிதாவுக்கு டான்சி வழக்கில் விடுதலை என்று செய்தி வருகிறது - அதற்காக மாறனின் உடல் கிடத்தப்பட்டிருக்கும் என் வீட்டைச் சுற்றியுள்ள பகுதிகளில் பட்டாசு வெடித்து அ.தி.மு.க. வினர் கொண்டாட்டம் - 'டான்சியை வாங்கியது தவறு - திருப்பிக்கொடு' என்ற தீர்ப்புக்கே அவ்வளவு பட்டாசு வெடி ஒரு நாள் முழுவதும்! அம்மையார் வீட்டிலும் மத்தாப்பு - மற்ற வாண வேடிக்கைகள்! இவற்றை பிரபு சாவ்லா அறிய மாட்டாரா?

சட்டமன்றப் பேரவையில் எதிர்க்கட்சியினரை அவைக் குறிப்பில் ஏறத் தகுதியற்ற வார்த்தைகளைக் கொண்டு வசைபாடலாம் - அதற்குப் பதிலாக அதே வார்த்தைகளை எதிர்க்கட்சி பயன்படுத்தினால் அவை, சட்டமன்ற நடவடிக்கை குறிப்பில் ஏறாது என்று தீர்ப்பு!

இதையெல்லாம் சுட்டிக் காட்டி ஆளுங்கட்சிக்கு அறிவுரை கூற வரமாட்டார் நண்பர் பிரபு சாவ்லா!

கருணாநிதி கவர்னரை மரியாதை நிமித்தம் சந்திக்கப் போனாலே, அதற்கு உரிமைப் பிரச்சினை - ஏன் உரிமைப் பிரச்சினை? எதற்காக உரிமைப் பிரச்சினை? அதெல்லாம் எதுவும் கேட்காதே; மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் உரிமைப் பிரச்சினை இருக்கிறது என்று முடிவு அறிவிக்கிறார், சபாநாயகர்!

பிரபு சாவ்லாக்களால் பேச முடிகிறதா? பேச முடியுமா? - பேச முடிந்தாலும்; தி.மு.க. வையும் இணைத்துக் குற்றம் சாட்டித்தானே தப்ப முடியும்?

"தி.மு.க., அ.தி.மு.க. - தலைமை முதல் தொண்டர்கள் வரை அரசியல் ஆரோக்யமற்ற போக்கு இருப்பதாகக் கணித்து எழுதும்

பிரபு சாவ்லா அவர்கள், தொண்டர்களை விட்டு விட்டு; இரு கட்சிகளின் தலைமைகளையும் ஒப்பிட்டுப் பார்த்து, அரசியல் ஆரோக்யம் - மனித நேயம் - தரம் தாழாத விமர்சனம் - தனி நபர் விரோதமில்லாத பண்பு ஆகியவற்றை அலட்சியப்படுத்தி விட்டு இயங்குகிற தமிழகத்தின் அரசியல் தலைவர்கள் யார் என்பதை அறிந்து அதனை வெளிப்படுத்தி அவர்களுக்குத் தேவையான அறிவுரையை அச்சமின்றி வழங்கு வாரேயானால்;

அவரையும், அவரைப் போன்றவர்களையும் அவர்களது பாரபட்சமற்ற கணிப்புக்காக நாம் பாராட்டலாம்!

இல்லையேல்; அவர்கள் பிடித்திருக்கும் தராசின் முள்; எங்கேயோ உரசிக் கொண்டு; தவறான எடை காட்டுகிறது என்றுதான் எண்ணிட வேண்டியிருக்கிறது.

முன்னாள் குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன் அவர்கள் அண்மையில் மறைவுற்ற போது; தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா; தனது பதவிப் பொறுப்பின் அடிப்படையில்கூட எந்தப் பத்திரிகையிலும் ஓர் அனுதாப அறிக்கை வெளியிட வில்லை என்பதை மறந்து விட முடிகிறதா? கே.ஆர். நாராயணன் அப்படி செய்த குற்றம் என்ன? அவர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு, அண்ணா அறிவாலயத்திற்கு வந்து, வரலாற்றுக் கருவூலம் ஒன்றைத் திறந்துவைத்தார்; அவ்வளவுதான். அவர் மறைந்த செய்தி வந்தபோது தமிழ்நாட்டில்தானே முதலமைச்சர் ஜெயலலிதா இருந்தார்? இதை யெல்லாம் பிரபு சாவ்லாக்களால் சிந்தித்துப் பார்க்க முடியாதா?

இந்த வாதப் பிரதிவாதங்களையெல்லாம்கூட மறந்துவிட்டு; நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும்; இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும் என்ற நிலையில்; நமது அரசியல் பண்பாட்டை அன்றுபோல் இன்றும் என்றும் கடைப்பிடிக்க இனியாவது முன் வரலாமல்லவா?

"தலையிருக்க வாலாடுமா?" என்பது பழமொழி - தலை எங்கே இப்படியெல்லாம் தரக்குறைவாக ஆடுகிறது என்பதை பிரபு சாவ்லா போன்றோர்; கண்டுபிடித்து விட்டால் - கண்டிக்கத் தொடங்கி விட்டால் - கண்ணியமான அரசியல் காட்சிகளைத் தவறாமல் அனைவரும் காணலாம்!

அன்புள்ள,

மு.க.

02-02-2006

3197. கூட்டணியைக் குலைத்திட குடும்ப சமேதராய் முயற்சி!

உடன்பிறப்பே,

தமிழ்நாடு சட்டப் பேரவைப் பொதுத் தேர்தல் மே திங்களில் நடைபெற்று முடிவுற வேண்டிய நிலையில், காரிருள் அகத்தில் நல்ல கதிரொளியாக விளங்க வேண்டிய பத்திரிகைகள்; தங்களின் விருப்பு வெறுப்புக்கேற்ப வெளியிடும் செய்திகளால் மக்கள் பெரிதும் குழப்பமடைந்துள்ளார்கள். கட்சித் தலைவர்களிடம் பேட்டி காண்பதும், அவர்கள் அளிக்கும் பதில்களை தங்கள் ஆசை ஆவலாதிகளுக்கேற்ப, ஒப்பனை செய்து உருமாற்றியே கூடக் காட்டுவதும்; சில ஏடுகளுக்குக் கைவந்த கலையாகவே இருக்கிறது.

இந்தக் கடிதம் உனக்கு நான் எழுதும் இந்த நாளில் இருந்து தமிழகப் பொதுத் தேர்தல் பற்றிய அதிகாரப்பூர்வ அறிவிப்பினைத் தலைமைத் தேர்தல் ஆணையம் வெளியிடுவதற்கு இன்னும் ஒரு மாத காலம் ஆகுமென்று செவி வழிச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. முதலில் பிப்ரவரி 10 தேதிக்குள் அந்த அறிவிப்பு வெளிவருமென்று கூறப்பட்டு; இப்போது மார்ச் திங்கள் முதல் வாரத்தில் தான் தேர்தல் அறிவிப்பு முறைப்படி வெளியிடப் படலாம் என்று தகவல்கள் கிடைக்கின்றன.

தமிழகத்தில் இப்போதைய ஆளுங்கட்சியான அ.தி.மு.க., பொதுத் தேர்தலைச் சந்திப்பதற்காகவும் - வாக்காளர்களை வலையில் தள்ளுவதற்காகவும் ஆட்சி அதிகாரத்தைப் பெருமளவு பயன்படுத்திக் கொண்டுள்ளதோடு; அதில் காட்டும் அக்கறையை விடப் பன்மடங்கு அதிகமாக எதிர்க்கட்சிகளின் கூட்டணியைப் பிளவுபடுத்திட முயற்சிகளை மேற்கொள்வதில்தான் முனைந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இதற்கு முன்பெல்லாம் தேர்தல் சமயங்களில் ஆளுங்கட்சியின் பலம் பற்றியும் - ஆளுங்கட்சிக்கும் எதிரணியில் உள்ள

கட்சிகளுக்கும் எந்த எந்தத் தொகுதிகளில் வெற்றி வாய்ப்பு அல்லது தோல்விக்கான சூழ்நிலை; இவற்றை ஆராய்ந்து அரசுக்கு விருப்பு வெறுப்பின்றி அறிவிப்பது காவல் துறை தொடர்புடைய உளவுத் துறையின் வேலையாக இருந்தது.

ஆனால் இன்றைக்கு அ.தி.மு.க. ஆட்சியில் உளவுத் துறை அதிகாரிகளும் - காவல்துறையில் உள்ள ஒரு சில அதிகாரிகளும் - அரசின் நிர்வாக அரண்களாக இல்லாமல்; ஆளும் அரசியல் கட்சியின் அமைப்புச் செயலாளர்களாக இருந்தால்கூடப் பரவாயில்லை; பிரச்சாரச் செயலாளர்களாகவே ஆகி விட்ட "கொடுமை"யை அறியும்போதும் - எதிர்க் கட்சிகளின் கூட்டணிக்குள் குடும்பம் குடும்பமாக நுழைந்து குழப்பம் விளைத்திடக் குடும்ப சமேதராய்க் கிளம்பியுள்ள செய்திகளைக் கேள்விப்படும்போதும் - "இப்படித்தான் வாழ வேண்டும் என்றில்லாமல் எப்படியும் வாழலாம்" எனும் மானமற்ற தத்துவத்தை வாழ்க்கை இலக்கணமாக வகுத்துக்கொண்டவர்கள்; அதனை அரசியலுக்கும் பொருத்திடத் துணிந்துவிட்டார்களே என எண்ணித்தான் ஏக்கமுற வேண்டியிருக்கிறது.

இதே அ.தி.மு.க. ஆட்சியில் சில மாதங்களுக்கு முன்பு தலைமைச் செயலாளராக இருந்த ஒரு பெண்மணியே, அரசியல்வாதியாக மாறி; தமிழக ஆளுநராக ராம் மோகன ராவ் இருந்தபோது அவரை மாற்றுவதற்கு தடை விதிக்கக் கோரி உச்சநீதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கில், என்னைப் பற்றியும், பிரதமர் மன்மோகன் சிங் அவர்களைப் பற்றியும் அவதூறான வார்த்தைகளையெல்லாம் இணைத்திருந்தார். நேற்றையதினம் உச்சநீதிமன்றம் அத்தகைய வார்த்தைகளுக்கு ஆட்சேபணை தெரிவித்து, அவற்றை நீக்க வேண்டுமென்று தமிழக அரசுக்கு உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை அ.தி.மு.க. அரசுக்கு எடுபிடிகளாகச் செயல்படும் காவல்துறை அதிகாரிகள், அதிகார வர்க்கத்தினர் எவரும் மறந்து விடக் கூடாது.

இதற்கிடையிலே பரபரப்பான அரசியல் சூழலில், அடிப்படையற்ற செய்திகளை, தேர்தல் களத்து அஸ்திரங்களாகப் பயன்படுத்தி; ஆளுங்கட்சியை அதுவும் ஜெயலலிதா தலைமையை எப்படியும் வெற்றி பெறச் செய்திட வேண்டும் என்ற திட்டத்தோடு செயல்படுகிறவர்கள், யார் என்பதையும் - அவர்களுக்குத் துணை போகும் வீடணர்கள் எத்தகையோர்

என்பதையும் நமது கூட்டணியில் உள்ள ஒவ்வொரு கட்சியின் செயல்வீரர்களும் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

யுத்த களத்தில் தவறான செய்திகளை உண்மை போலச் சொல்லி போரின் போக்கையே மாற்றி விட்ட நிகழ்வுகளையெல்லாம் பாரதப் போரில் படித்திருக்கிறோம்.

பாண்டவர்களால் வெல்ல முடியாத வீரத்துடனும், வலிமையுடனும் பாண்டவர்களின் குருநாதரான துரோணரே களத்தில் நிற்கிறார் - அப்போது அவர் மைந்தன் அசுவத்தாமன் களத்தில் கொல்லப்பட்டு விட்டான் என்று தர்மன் வாயாலேயே சொன்னது போல் செய்து, புத்திர பாசத்தால் துரோணர் மயங்கி நின்று; அவரும் அர்ச்சுனனிடம் தோல்வியைத் தழுவினார் என்று அவர் கதை முடிகிறது. ஆனால் உண்மையில் அசுவத்தாமன் எனும் அவர் மகன் மாண்டானா? இல்லை; அசுவத்தாமன் எனும் பெயர் கொண்ட யானைதான் மாண்டது - அதைத்தான் தர்மனை சொல்ல வைத்து; அவன் சொன்னது முழுமையாகத் துரோணர் காதில் விழாமல் செய்து; யானை என்ற வார்த்தையை மறைத்துவிட்டு (கண்ணன், தன் காரியத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டான் என்கிறது மகாபாரதம்!

மாவீரர் துரோணர் போன்றவர்களையே குழப்ப முடியுமென்றால்; மற்றவர்கள் நிலை என்ன? அதனால்தான் அண்ணா ஒரு முறை காஞ்சிபுரம்: பொதுக் கூட்டத்திலே பேசும்போது சொன்னார்: "என்னைப் பற்றி எதிர்த் தரப்பினர் ஏதேதோ இட்டுக் கட்டிப் பேசுகின்றனர். எல்லாவற்றுக்கும் நான் பதில் சொல்லிக் கொண்டிருக்க இயலாது. பதில் சொன்னாலும் அவர்கள் திருப்தி அடையமாட்டார்கள். மக்களை திசை திருப்பி நமது கொள்கை குறிக்கோளைக் குலைப்பதே அவர்கள் நோக்கம். உதாரணமாக அண்ணாதுரைக்கு ஒரு கால் ஊனம் என்று ஊரெல்லாம் செய்தி பரப்புவார்கள். நான் அதற்கு மறுப்பு சொல்ல, மறுநாளே இங்கு கூட்டம் போட்டு, என் காலை ஒரு முக்காலி மீது தூக்கி வைத்து "பாருங்கள், என் கால் ஊனமா?" என்று கேட்கிறேன் என வைத்துக்கொள்ளுங்கள் - "வதந்தியாளர்கள் வாய் மூடிக்கொள்வார்களா?" மாட்டார்கள்! மறுநாளே அவர்கள் ஒரு கூட்டம் போட்டு, "நேற்று கூட்டத்தில் அண்ணாதுரை முக்காலியில் தூக்கி வைத்துக் காட்டியது; அவரது வலது காலை! நாங்கள் ஊனமென்று சொன்னது அவரது இடது காலை!" என்பார்கள் - அதற்காக நான் இடது காலைக் காட்டுவதற்கு

இன்னொரு கூட்டமா போட முடியும்? இது தான் நமக்கு வேலையா? நாம் மேற்கொண்டுள்ள இலட்சியம் அதுதானா?"

அண்ணா அன்று சொன்னது போலத்தான்; இன்று கூட்டணியின் குறிக்கோளைக் குலைத்திட - இலட்சியத்தை சிதைத்திட - ஏதேதோ சதிகள் திட்டமிட்டு நடத்தப்படுகின்றன! செய்திகள்; பரப்பப்படுகின்றன!

இதனை அறைகூவலாக ஏற்று, சமாளிக்கிற பொறுப்பு; நமது அணியிலிருக்கிற ஒவ்வொரு கட்சிக்கும் - கட்சிகளின் முன்னோடிகளுக்கும் - செயல்வீரர்களுக்கும் உண்டு - தனித்தனி கட்சிகளாக அந்தப் பொறுப்புச் சுமையைப் பகிர்ந்து கொண்டு தாங்கினாலும் - கூட்டணியில் உள்ள ஏழெட்டு கட்சிகளின் பிரச்சினைகளுக்கும் மொத்தமாகச் சுமுகத் தீர்வு காண்கிற பெருஞ்சுமை நமக்கு உண்டு என்பதை ஒருக்காலும் நாம் மறந்து விடப் போவதில்லை. அதற்குத் தோழமைக் கட்சிகளின் தலைவர்களும், அமைப்புகளும் துணை நிற்க வேண்டுமென்று உரிமையுடன் கோருவதுடன், எந்த நிலையிலும் பொறுப்பினைத் தட்டிக் கழிக்க மாட்டேன் என்ற உறுதியையும் அளித்து; அதற்குத் தோழமைக் கட்சிகளின் ஒத்துழைப்பையும் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். தேர்தல் பணிகளை மேற்கொள்வதற்காக கூட்டு முயற்சிகள், குழுக்கள் நியமனங்கள் என பல்வேறு வழிமுறைகளை வகுத்துக் கொண்டு செயல்படுகிற தி.மு.க., மற்றும் தோழமைக் கட்சிகளின் உடன்பிறப்புகள்; இன்னும் தேர்தலில் வாக்குப் பதிவுக்கான நாட்கள் அதிகமிருக்கின்றனவே என அயர்ந்திருந்திடாமல்; இன்றே செயல்படுக; நன்றே செயல்படுக; அதுவும் ஒன்றாய்ச் செயல்படுக; என மிக்கப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தோழமைக் கட்சிகளுக்கிடையே தொகுதி எண்ணிக்கை - தொகுதி பெயர் விபரம் - இவற்றை கலந்து பேசி விவாதித்து முடிவெடுக்க அவகாசம் தேவைப்படுவதை நினைவில் வைத்துக் கொண்டு - அதற்காக நீண்ட இடைவெளியும் ஏற்பட்டு விடாமல் பார்த்துக் கொண்டு - அதற்கிடையே விஷமிகளால் பரப்பப்படும் வதந்திகளுக்கும் செவி சாய்க்காமல் - அளிக்கப்படும் ஒத்துழைப்பே நமது கூட்டணியின் வெற்றிக்கு அடிப்படையாக அமையும் என்பதை மறந்து விடலாகாது.

அன்புள்ள,

மு.க.

05-02-2006

3198. தேர்தல் பயம்; யாருக்கம்மா வந்துவிட்டது?

உடன்பிறப்பே,

"புலிக்குப் பயந்த பசங்கள் எல்லாம் வந்தென் மேலே விழுங்கடா! புலியை அமுக்கி பிடித்துக் கொண்டால், அடித்து நொறுக்க மாட்டேனோ!" என்று கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் ஒரு படத்தில் பாடிய பாடல், இரண்டு நாட்களுக்கு முன்பு ஜெயலலிதா பேசியதாக ஒரு பத்திரிகையிலே வந்த வீர உரையை (?)த் தான் எனக்கு ஞாபகப்படுத்தியது. "எதிர்க்கட்சி கூட்டணியை ஒரு கை பார்ப்பேன்" என்று அறைகூவல் விடுத்துள்ள ஜெயலலிதா என்னையும் வம்புக்கு இழுத்திருக்கிறார். அதாவது "எனக்குத் தேர்தல் பயம் வந்து விட்டதாம்" - அ.தி.மு.க. பொதுக்குழு என்ற பெயரால் நடைபெற்ற ஓரங்க நாடகத்தில் முதலமைச்சர் ஜெயலலிதா இப்படியொரு வீர வசனம் பேசியிருக்கிறார். அவரது வாக்குமூலத்தின்படியே 1982ஆம் ஆண்டு அ.தி.மு.க.வில் உறுப்பினராகச் சேர்ந்தவர் ஜெயலலிதா! எம்.ஜி.ஆர். அவரை சத்துணவு உயர் மட்ட உறுப்பினர் ஆக நியமித்ததையும் - பிறகு கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் ஆக்கியதையும் - அதன் பிறகு ராஜ்ய சபா எம்.பி., என்று ஆக்கியதையும்; அந்தப் பொதுக்குழுவில் நினைவுபடுத்தியவர், அதற்கு நன்றிக் கடனாக (?) எம்.ஜி.ஆர். தன் மீது பொறாமைப்படுகிறார் என்று அன்றைய பிரதமர் ராஜீவ் காந்திக்குத் தன் கைப்படக் கடிதம் எழுதியதை மட்டும் மறந்து விட்டோ; அல்லது மறைத்து விட்டோ பொதுக் குழு மௌனசாமிகள் வாய் பிளந்து கரகோஷம் செய்யும் வண்ணம்; "கருணாநிதிக்கு தேர்தல் பயம் வந்து விட்டது" என்று கொக்கரித்திருக்கிறார்.

ஆமாம்; நான்தானே தேர்தல் அருகில் வந்து விட்டது என்றவுடன் "அய்யப்பா சரணம் சரணம்!" என்பது போல அரசு ஊழியர்களிடம் சரணடைந்திருக்கிறேன். பறித்த சலுகைகளை எல்லாம் இதோ எடுத்துக் கொள்ளுங்கள் என்று பம்மாத்து

செய்கிறேன் - கடந்த நான்காண்டு காலமாக சாலைப்பணியாளர்கள் போராட்டம் நடத்திய போதெல்லாம் ஏற்காத கோரிக்கையை தற்போது அவசர அவசரமாக ஜெயலலிதா அறிவித்தது; தேர்தல் பயம் வந்த காரணத்தினால்தான் என்று சிறுபிள்ளைகள் கூடச் சொல்வார்களே?

"அ.தி.மு.க. கதவுகள் திறந்து இருக்கின்றன" என்று ஜெயலலிதா கடந்த 1ஆம் தேதியன்று பேட்டியிலே கூறி அவரது ஆதரவு ஏடு முதல் பக்கத்தில் தலைப்பு செய்தியாக வெளியிட்டதே! இந்த ஒரு வாசகத்திலிருந்தே யாருக்குத் தேர்தல் பயம் என்பது தெரியவில்லையா? முதலில் ஜெயலலிதா நிருபர்களுக்கு பேட்டி அளிக்க முன்வந்ததே, அவருடைய தேர்தல் பயத்தினால் விளைந்ததுதானே! செய்தியாளர்கள் பேட்டிக்காக தவம் இருந்த போதெல்லாம் திரும்பிப் பார்க்காத ஜெயலலிதா, தற்போது பேட்டி கொடுக்க முன்வந்தது தேர்தல் பயத்தினால்தானே! அரசு அலுவலர்கள் சங்கத்தின் சார்பில் மாநாடு நடத்த எத்தனை முறை தேதி கேட்டிருப்பார்கள். ஜெயலலிதா ஒப்புக் கொண்டாரா? ஏன் ஒப்புக் கொண்டு அவர்கள் ஏற்பாடு செய்த பிறகும் அதைப் புறக்கணித்தது எத்தனை முறை? தற்போது; தானே தேதி கொடுத்து, அதுவும் ஊழல்போர்வழி என்று முத்திரை குத்தப்பட்டு, சங்கப் பணத்தை கோடிக் கணக்கில் சாப்பிட்டு விட்டார் என அந்தச் சங்கத்திலே உள்ளவர்களே குறைகூறிக் கொண்டிருக்கும் நபருக்கு தேதி கொடுத்து மாநாட்டிற்கு வருகிறேன், அறிவிப்பு களைச் செய்கிறேன் என்று கூறுவதற்குப் பெயர் தேர்தல் பயம் இல்லாமல் வேறென்ன?சில மாதங்களில் தேர்தல் வரப்போகிறது, அதற்கு தமிழ்நாட்டிலே உள்ள சில முக்கிய ஏடுகளின் தயவு தனக்கு வேண்டுமென்பதற்காகவே, அந்த ஏடுகளுக்கு அரசுப் பணத்தை விளம்பரம் என்ற பெயரால் வாரிக் கொடுக்க ஜெயலலிதா முன்வந்திருப்பது அவருக்கு ஏற்பட்டுள்ள தேர்தல் பயத்தின் காரணமாகத்தானே?

தி.மு. கழக ஆட்சிக் காலத்தில் பத்திரிகைகளின் விளம்பரக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டதுண்டு. ஆனால் அனைத்துப் பத்திரிகைகளுக்கும் சேர்த்துத்தான் ஒரே நேரத்தில் விளம்பரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டது. ஆனால் தற்போது ஜெயலலிதா செய்திருப்பது என்ன? ஆட்சிக்கு வந்த இந்த நான்கரை ஆண்டு காலத்தில் குறிப்பிட்ட ஒரு பத்திரிகைக்கு மட்டும்

இரண்டு முறை விளம்பரக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. அந்தப் பத்திரிகையில் ஒரு முழுப் பக்கம் விளம்பரம் வெளியிட 2003ஆம் ஆண்டு வரை ரூபாய் 2 லட்சத்து 51 ஆயிரமாக இருந்த கட்டணத் தொகையை முதலில் ரூபாய் 4 லட்சத்து 2 ஆயிரமாக உயர்த்தினார்கள். தற்போது தேர்தல் வரப் போகிறது என்றதும் மீண்டும் ஒரு முறை இந்தத் தொகையை ரூபாய் 7 இலட்சத்து 42 ஆயிரமாக உயர்த்தியிருக்கிறது ஜெயலலிதா அரசு. ஜெயலலிதாவின் செய்திகளை மற்ற ஏடுகளும் வெளியிடத்தானே செய்கின்றன. அவை களுக்கெல்லாம் ஏன் இந்தக் கட்டண உயர்வு தரப்படவில்லை. மக்கள் தரும் வரிப்பணம் இவ்வாறு ஒரு சில ஏடுகளுக்கு மட்டும் அள்ளி இறைக்கப்படுகிறதே, எதனால்? ஜெயலலிதாவுக்கு ஏற்பட்ட தேர்தல் பயத்தினால்தானே?

ஜெயலலிதா வீசி எறியும் பணத்தைப் பொறுக்கிக் கொண்டு யாராவது அந்தக் கட்சியிலே சேரமாட்டார்களா என்று ஏங்கி; அதற்காக காவல் துறையின் ஒரு சில எடுபிடி அதிகாரிகளை விட்டு வலை போட்டு தேட விடுவது அவருக்கு தேர்தலில் ஏற்பட்ட பயத்தினால்தானே?

கடந்த நான்கு மாதங்களாக அன்றாடம் ஒரு அறிவிப்பினை, அதனை நிறைவேற்ற முடியுமா, முடியாதா என்பதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் செய்து கொண்டிருப்பதைப் பார்த்து, தெருவிலே போவோர் வருவோர் கூட, அம்மாவிற்கு தேர்தல் பயம் வந்து விட்டது, அதனால்தான் இப்படியெல்லாம் அறிவிப்பு என்ற பெயரால் பிதற்றுகிறார் என்று கூறுவது அவர் சாலை வழியாக காரில் சென்றால் கேட்கும். ஆனால் அவர் ஹெலிகாப்டரிலேயே பறந்து கொண்டிருந்தால் எப்படி கேட்கும்?

அம்மையார் பொதுக் குழுவில் மேலும் பேசும்போது, கருணாநிதி ஏழு கட்சி கூட்டணி அமைத்திருப்பதாகவும், ஆனால் அந்தக் கூட்டணி வெற்றி பெறாது என்றும், ஜெயலலிதா எந்தக் கட்சியுடனும் கூட்டணி வைத்துக் கொள்ளவில்லை என்றும், தன்னந்தனியாக இருப்பதாகவும், ஆனாலும் வெற்றி பெறுவோம் என்றும் கூறிவிட்டு எனக்கு தேர்தல் பயம் என்கிறார். அவரது பேச்சிலிருந்தே தேர்தல் பயம் எனக்கா? அவருக்கா? என்பது தெரிகிறதா இல்லையா?

எனக்கு எதற்காக தேர்தல் பயம் வரப் போகிறது? நான் முதல் அமைச்சர் பதவி வகித்து, அது போய் விடப் போகிறதே என்று எனக்கு தேர்தல் பயம் வரப் போகிறதா? அல்லது இதுவரை நாம்

வகிக்காத பதவி கிடைக்காமல் போகிறதே என்பதற்காக பயம் வரப் போகிறதா? அல்லது கடந்த நான்கரை ஆண்டுகளாக தமிழ்நாட்டு மக்களின் கோரிக்கைகளை ஏற்காமல், அவர்களையெல்லாம் மதிக்காமல் நடந்து கொண்டு விட்டோமே, அரசு அலுவலர்கள் கெஞ்சிய போதெல்லாம் கேளாக்காதினராக இருந்து விட்டோமே, என்ன செய்வது என்ற பயம் எனக்கு வரப் போகிறதா?

எனவே உண்மையில் அம்மையாருக்குத்தான் தேர்தல் பயம் வந்து விட்டது என்பது தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றாகவே தெரியும்.

உயர்நீதிமன்ற நீதிபதிகள், உச்சநீதிமன்ற நீதிபதிகள் அறிவுரை கூறிய போதெல்லாம் அவர்களையெல்லாம் அலட்சியமாக நடத்தினோமே, தற்போது மக்களுக்கு அந்தத் தீர்ப்புகள் எல்லாம் நினைவுக்கு வருமே என்ற பயம் ஜெயலலிதாவை தூங்கவிடாமல் பயமுறுத்திக் கொண்டிருக்கின்றது.

சுனாமி நிவாரண நிதி, வெள்ள நிவாரண நிதி போன்றவைகளை உரியவருக்கு வழங்காமல், ஆளுங்கட்சியினர் கொள்ளையடிக்க அனுமதித்தோமே, பாதிக்கப்பட்ட மக்கள் இன்று தங்களுக்கு வாக்களிக்க மாட்டார்களே, என்ன செய்வது என்ற பயம் அம்மையாரை மிரட்டுகிறது.

சாலைப் பணியாளர்கள் 81 பேர் இறந்து போய் இருக்கிறார்களே, அவர்களின் நினைவு வந்து அம்மையாரை பயமுறுத்தாமல் விட்டுவிடுமா?

எத்தனை விவசாயிகள் பசி பட்டினியால் இறந்தார்கள். அப்போது எல்லாம் அவர்களை வயிற்று வலியால் இறந்தார்கள் என்று சொன்னோமே, சுவைக்காக எலிக்கறி சாப்பிடுகிறார்கள் என்று திமிராக பேரவையிலே சொன்னோமே, இப்போது அந்தக் குடும்பத்தினர் எல்லாம் தங்களுக்கு வாக்களிக்க மாட்டார்களே என்ற பயம் அம்மையாரைப் பிடித்து ஆட்டாமல் விட்டு விடுமா?

வெள்ள நிவாரண நிதி வாங்கச் சென்ற 51 பேர் நெரிசலில் சிக்கி உயிரிழந்தார்களே, அவர்களின் குடும்பங்கள் இன்றைக்கு நிர்க்கதியாக நிற்கின்றதே அந்தக் குடும்பத்தினர் அன்றாடம் விடுகின்ற சாபம் ஜெயலலிதாவை பயமுறுத்தாமல் இருக்குமா? அந்தப் பழியை கழகத் தம்பி தனசேகரன் மீது சுமத்தி, உச்சநீதிமன்றமே அதனைக் கண்டித்திருக்கிறதே, அதைப்

படித்தவர்கள் எல்லாம் தனக்கு வாக்குகளையா போடுவார்கள் என்று அம்மையார் நினைத்தால், அந்த நினைப்பே அவரைப் பயமுறுத்தாமல் விடுமா?

நெசவாளர் குடும்பங்களுக்கு தி.மு.கழகம் கஞ்சித் தொட்டி வைக்க முன்வந்தபோது, அதை நடத்த விடாமல் தடுத்து எதிர் விருந்து நடத்தினோமே, அந்தக் குடும்பத்தினர் எல்லாம் தமக்கு வாக்களிக்க மாட்டார்களே என்று அம்மையார் நினைத்தால் அவருக்கு தூக்கம் வருமா? பயம் போய் விடுமா?

ஏன் அவருடைய அமைச்சரவையிலே அங்கம் வகித்து, அவரால் பாதியிலே தூக்கி எறியப்பட்ட 25க்கு மேற்பட்ட அமைச்சர்களும், தற்போது அமைச்சரவையிலே இருந்து எந்த நேரத்தில் தூக்கி எறியப்படுவோமோ என்று எண்ணிக் கொண்டிருக்கும் பொன்னையன் உட்பட வேறு சிலரும், தனக்கு வாக்களிக்க மாட்டார்களே என்பதை நினைத்தால் அம்மாவிற்கு பயம் வராமல் இருக்குமா?

எனவே தனக்குள்ள பயத்தின் விளைவாக, அதைச் சொல்லிக் கொள்ள முடியாமல் எனக்குத் தோ்தல் பயம் வந்துவிட்டது என்று ஜெயலலிதா பொதுக்குழுவிலே புலம்பியிருக்கிறார். அது ஒரு பொதுக்குழுவா? எந்தக் கட்சியின் பொதுக் குழுவாவது இரண்டு மணி நேரத்தில் நடந்து முடிந்ததாக நாம் கேள்விப்பட்டிருக்கிறோமா? அந்தப் பொதுக் குழுவிலே பேசிய ஒரு பெண் அமைச்சர் கூட அதனை "ஒன் மேன் ஆர்மி" என்று சொன்னாராம்! அது "ஒன் மேன் ஆர்மி"யோ, "ஒன் உமன் ஆர்மி"யோ அல்ல. அங்கே நடந்தது, நடப்பது எல்லாமே "ஒன் உமன் ஷோ"! அவ்வளவு தான்!

உடன்பிறப்பே! அங்கே எது வேண்டுமானாலும் நடந்து விட்டுப் போகட்டும்; அதைப் பற்றி நமக்கு எந்தக் கவலையும் இல்லை. எந்தப் பயமும் இல்லை. நமது பணி திட்டமிட்டப் பணி. யாருக்கும் தீங்கு நினைக்காத பணி. அந்தப் பணியினைத் தொடர்வோம்.

அன்புள்ள,

மு.க.

06-02-2006

3199. கதவைத் திறந்தார்; கரடி விடுகிறார்!

உடன்பிறப்பே,

இடர் விளையாதா?

இரைச்சல் கேட்காதா?

புகைச்சல் கிளம்பாதா?

பூகம்பமே -தோன்றாதா?

என்று எட்டாந்தேதி காலை முதல் கொட்டாவி விட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு "அய்யோ! நாம் கட்டிய கோட்டை விழுந்து நொறுங்கிக் குட்டிச் சுவராகி விட்டதே;

கூட்டணிக் கோபுரத்தை நமது விஷமத்தினாலும் - விதைத்த வதந்திகளாலும் - விரோதமூட்டும் வெடிகளாலும் - அசைக்கக் கூட முடியவில்லையே; அய்யோ பாவம்! என்று நம்மைப் பார்த்தல்லவா மக்கள் கை கொட்டிச் சிரிக்கிறார்கள்! அனைத்துக் கட்சிக் கூட்டணிக் கூட்டம் என்றார்கள் - அத்துடன் அத்தியாயம் முடிந்து விடும் என்று எழுதினோம் - பேசினோம் - கேலிச் சித்திரம் வரைந்தோம் - எல்லாமே பாழாய்ப் பழங் கனவாய்ப் போய் விட்டதே!"

என்று சிறு சிறு கும்பல்களாக அமர்ந்து செருமிச் செருமி அழுது; மூக்கைச் சிந்திப் போட்டுக் கொண்டு, மூலையில் முடங்குகின்ற காட்சி; காண்பதற்கே பரிதாபமாகத்தான் இருக்கிறது.

அதற்கு நாமென்ன செய்ய முடியும்? நமது கடமை உணர்வை; கட்டுக்கோப்பை - பிளந்து காட்டலாம் என்றும் பேயாட்சியைத் தொடரலாம் என்றும் நம்பிக் கொண்டு வேள்விகளில், யாகங்களில் ஆழ்ந்திருந்தவர்களின் ஆசையில் ஆயிரம் அடி உயரத்துக்கு மண் விழுந்து விட்டது.

அதிலும் சில ஏட்டாளர்கள் சுதாரித்துக் கொள்ளப் பார்த்து - சமாளிக்க முயன்று - மேலும் மேலும் ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய்களைத் தேடி; "கூட்டணிக் கட்சிகள்; போட்டியிடும்

தொகுதிகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும்" என்று நான் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டது போல - தலைப்புச் செய்திகள் வெளியிட்டுப் பார்க்கிறார்கள்.

அதைப் படித்துப் பார்க்கிற அந்தப் பத்திரிகை அலுவலகத்துப் பையனே சிரிக்கிறானாம்! "இன்னுமா இந்த சிண்டு முடியும் வேலை?" என்று ஏளனம் செய்கிறானாம்; அதிபரும், ஆசிரியரும் பார்க்காத இடத்தில்; "பாருங்க; எட்டாந் தேதி ஏழு கட்சி கூட்டணித் தலைவர்கள் எல்லாம் எவ்வளவு சந்தோஷமா கூட்டத்திலே கலந்துகிட்டாங்க! எவ்வளவு சந்தோஷமா கலைஞ்சு போனாங்க - எத்தனை நிருபர்கள் கூடியிருந்த அந்தச் செய்தியாளர் கூட்டத்திலே, கேட்கப்பட்ட கேள்விகளுக்கெல்லாம் எவ்வளவு தெளிவான பதில் சொல்லப்பட்டது! அதுக்கு மேலேயும் 'பழைய பெத்தான்; கதவைத் திறடி'ன்னு - "தலைப்பு மாறித்தனம்" பண்றது நம்ப தகுதிக்கு நல்லதா?" என்று; ஆபீஸ் பையன்களை விட சற்று பெரிய பணிகளில் இருக்கிற அலுவலர்கள் - பேசிக் கொள்வதும் நமது காதில் விழாமல் இல்லை.

மொத்தம் இருக்கிற தொகுதிகளின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டு, கடந்த தேர்தல்களில் கூட்டணிகளில் அவை எவ்வாறு பகிர்ந்து கொள்ளப்பட்டன என்பதையும் குறிப்பிட்டு, ஒவ்வொரு கட்சியையும் கட்டி வளர்க்கிற செயல்வீரர்களின் உணர்வுகளை மதித்து அதற்கேற்பவும் - அராஜக ஆட்சியை அகற்றுவதற்குத் தேவையான முறையிலும் - தி.மு. கழகம் உள்ளிட்ட எல்லாக் கட்சிகளுமே சிறிது ஏறத்தாழ ஒத்துப் போகிற நிலையில் விட்டுக் கொடுக்கிற போக்கினைக் கடைப்பிடிப்போம் என்று தான் நானும் வேண்டுகோள் விடுத்து உரையாற்றினேன். அந்த அடிப்படையில் விவாதம் நடைபெற்றுத்தான் மார்ச் 3, 4, 5 தேதிகளில் திருச்சி மாநில மாநாட்டில் ஒவ்வொரு கட்சியும் பகிர்ந்து கொள்ளும் தொகுதிகளின் எண்ணிக்கையை அறிவிப்பது என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அதற்குள் சிலரது இயல்பு, அவர்களது விஷமத்தைச் செய்யாமல் இருக்க விடுவதில்லை.

இருந்ததையெல்லாம் ஒழித்துக் கட்டி விட்டு; இப்போது மீண்டும் விருந்து வைக்கிறேன் வா என இலை போட்டு அழைப்பவர்கள், கதவைத் திறந்தே வைத்திருக்கிறேன் என்று கட்சிகளின் தலைவர்களை மட்டுமல்ல; கருவூலப் பணம்

முழுவதும் காலி செய்யப்படுவது அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக் காகத்தான் செலவாகிறது என்று யாரைப் பற்றி பொது மக்களிடம் விஷமப் பிரச்சாரம் செய்தார்களோ; அந்தக் கடுமையை இன்றைக்குக் குறைத்துக் கொண்டது போல நடித்துக் கொண்டு; அவர்களையுமல்லவா சிங்காரப் பந்தலிட்டு சென்னைக்கு அழைத்து சீர் வரிசை தரப் போகிறோம் என்று கூறி ஆசை காட்டிக் கூப்பிடுகிறார்கள், அரசு நடத்துவோர்!

அத்தகைய அரசுக்கு எடுபிடிகளாக இருந்து ஏமாந்த காலத்தில் ஏற்றங்கொள்ளத் துடித்துக் கொண்டிருப்பவர்களை அடையாளங் கண்டு கொண்டு, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மட்டுமல்ல; விவசாயிகள், நெசவாளர்கள், தொழிலாளர்கள், ஆடவர், மகளிர் என அனைவருமே எச்சரிக்கையாக இருந்து ஜெயா அரசுக்குப் பாடம் கற்பிக்கத்தான் போகிறார்கள்.

அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் ஏனைய தமிழ்நாட்டு வாக்காளப் பெருமக்களும் எப்படி ஏமாறப் போகிறார்கள் என்பதற்கு பொருத்தமான குட்டிக்கதையொன்றை ஜெயலலிதாவே சென்னை கோயம்பேடு மாநாட்டில் கூறியிருக்கிறார். அந்தக் கதை "தினமணி"யில் வந்ததை; வந்தபடியே இதோ படித்துப் பார்க்கலாம்.

"அது ஒரு மழைக்காலம். ஆறுகளில் புது வெள்ளம் பொங்கி வருகிறது. ஆற்றின் கரையோரத்தில் நின்ற நான்கு பேர் அக் கரைக்குச் செல்வது குறித்து சிந்தித்துக் கொண்டிருந்தனர். அப்போது நடு ஆற்றில் கருமையான மூட்டை போல ஏதோ ஒன்று மிதந்து வந்தது. உடனே, 'அது என்ன என்று பாரப்பா?' என்றான் ஒருவன். "அது ஒரு கம்பளி போல் தெரிகிறதே" என்றான் இரண்டாமவன். "ஆமாம், கம்பளியே தான்" என்றான் மூன்றாமவன்.

தைரியசாலியான நான்காவது ஆள், "இதை மழைக் காலத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்" என்று கூறி ஆற்றில் குதித்து கம்பளியைத் தாவிப் பிடித்தான். ஆனால், கம்பளி மூட்டை போன போக்கிலேயே அவனும் வெள்ளத்தில் போனான். உடனே மற்ற மூவரும், "கம்பளியை விட்டு, விட்டு கரைக்குத் திரும்பு" என்று கத்தினர். வெள்ளத்தில் சிக்கியவனோ, தனது

நண்பர்களை நோக்கி, "நான் எப்போதோ கம்பளியை விட்டு விட்டேன், அதுதான் என்னை விடமாட்டேன் என்கிறது" என்றான்.

உண்மையில், அது; கருப்பு மூட்டை கம்பளி அல்ல. அது ஒரு நிஜமான கரடி. வெள்ளத்தில் சிக்கிய கரடி தனக்கு ஏதாவது பற்று கிடைக்காதா, கரை சேர முடியாதா எனத் தவித்துக் கொண்டிருந்தது. தனது உடலை மூட்டை போல சுருட்டிக் கொண்டு மிதந்தது. இதை நம்பி ஏமாந்து தன்னைப் பிடித்துக் கொண்டவனை வெள்ளத்தில் அமுக்கிக் கரை சேரப் பார்த்தது கரடி!"

உடன்பிறப்பே,

ஜெயலலிதா சொன்ன 'குட்டிக்கதை'யில் அவர் அறிவிக்கும் சலுகைகளும், திட்டங்களும் - கம்பளி மூட்டை போலக் காணப்பட்டாலும்; உண்மையில் அது ஏமாந்தவர்களைக் கடித்துக் குதறக் காத்திருக்கும் கரடி என்பதை அவரே மனந் திறந்து வெளியிட்டிருக்கிறார் என்றுதானே எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஆம்; கதவு திறந்திருக்கிறது என்று கூறியவர் இப்போது கம்பளி மூட்டையைக் காட்டுகிறார் - மனந் திறந்து; அது கம்பளியல்ல; கரடி என்பதை இந்தக் கதை மூலம் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

இந்த மர்மத்தை முன்கூட்டியே கூறியதற்காக நாடு; அவருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறது.

கதவைத் திறந்து வைத்துப் பார்த்தார்,

இப்போது கரடி விட்டுப் பார்க்கிறார்!

இவரது கோயம்பேடு கோலாகலத்தையும் - கரடி விடும் வேலைகளையும்

பிப்ரவரி 8 கூட்டணிக் கட்சிகளின்

உறுதி வாய்ந்த முழக்கம்;

முடக்கிப் போட்டு விட்டது என்பது தான்

நூற்றுக்கு நூறு உண்மை!

அன்புள்ள,

மு.க.

10-02-2006

3200. விழித்துக் கொள்க; விடியப் போகிறது!

உடன்பிறப்பே,

இரவு நேரம்-
இரண்டு மணி!

எழுதிக் கொண்டிருக்கும்போதே;
உறக்கம் கண்களைத் தழுவியது -
அரைத் தூக்கத்தில் ஒரு கனவு-
அந்தக் கனவையும் அதனையொட்டிய
நிகழ்வையும்; இதோ உனக்கும்
தெரிவிக்கிறேன். அதாவது;

அஸ்தினாபுரத்துக்கு அங்க தேச அதிபதி கர்ணன் விருந்தினனாக வந்தவன், மதிய உணவுக்குப் பிறகு, களைப்பு மிகுதியால் சற்று கண்ணயர்ந்து விடுகிறான்- அவன் காதோரம் சாய்ந்தும் - தோள் பட்டையில் படிந்தும் இருக்கிற "செல்போன்" சற்று சத்தமாகச் சிணுங்குகிறது.

தூக்கக் கலக்கத்திலேயே செல்போனில்; பேசும் விசையை அமுக்கி, கர்ணன் "அலோ" என்கிறான்.

மறுமுனையிலிருந்து ஒலி கேட்கிறது

ஒலி :- நான் சகாதேவன் பேசுகிறேன்

கர்ணன்:- எந்த சகாதேவன்?

(வியப்புடன்) இ.ஆர்.சகாதேவனா? பூலித்தேவன் நாடகத்தில் பூலித்தேவனாக நடித்த சகாதேவன்தானே?

ஒலி :- இல்லையண்ணா- நான் பாண்டவர்களில் ஒருவன்- நகுலனுக்கும் இளையவன் - சகாதேவன்; பாண்டுவின் கடைசி மகன் அண்ணா!

கர்ணன்:- அண்ணனா? நான் எப்படி உனக்கு அண்ணனாக முடியும்?

சகாதேவன்:- சத்தியமாக நான் உன் சகோதரன் தான் அண்ணா! அம்மா குந்தி தேவி உன்னைப் பார்க்க வந்தார் களே - உண்மையைச் சொல்லி யிருப்பார்களே! குந்தி தேவியின் பிள்ளையல்லவா நீ?

கர்ணன்:- அடடா; தாய் பிள்ளை- அம்மா மகன் சொந்த பந்தமெல்லாம் இப்போது நினைவுக்கு வருகிறதா? யுத்தம் என்றதும் என் தயவு தேவைப்படுகிறது- அன்றைக்கு என்னை சொந்த சகோதரனாக பாவித்து அங்கதேசாதிபதியாகவும் அமரச் செய்தவன்; என் நண்பன் துரியோதனன்! இப்போது அவனைப் பகைத்துக் கொள்ளச் சொல்லி அம்மாவும் தூது வருகிறார்; நீயும் என் கையில் தாது பார்க்கிறாய்- எல்லாம் அந்தக் கண்ணன் செய்யும் சூது என்பது எனக்குத் தெரியும்.....

சகாதேவன்:- கோபிக்காதேயண்ணா, உன்னைப் போன்ற உத்தமர்கள் துரியோதனன் அணியில் இருக்கக்கூடாது எத்தனையோ கொடையளித்த கை உனது கை- இப்போது எங்களுக்கு அதுதான் 'நம்பிக் கை'! அதை நீட்டு அண்ணா!

கர்ணன்:- சகாதேவா! போதும் உன் புகழாரம்!

நீ தர்மன் மீது கொண்டுள்ள விசுவாசத்தின் அளவும் எனக்குத் தெரியும்!

சகாதேவன்:- தர்மண்ணாவை பேசச் சொல்லவா ?....

கர்ணன்:- வேண்டாம், வேண்டாம்- உங்கள் ஐவருக்கும் சேர்த்துத்தான் அம்மா வந்து அழுது புலம்பிக் கெஞ்சிக் கூத்தாடி விட்டுப் போய்விட்டாரே! என் முடிவில் மாற்றமே இல்லை! நான் ஒரு தடவை சொன்னால்..... எத்தனை தடவை சொன்னதாக அர்த்தம் தெரியுமா?...

சகாதேவன்:- தெரியும் அண்ணா - ஒரு நிமிஷம் பாஞ்சாலி பேசணுமாம்

கர்ணன்:- யார் ?...

சகாதேவன்:- அதான்; திரௌபதி

கர்ணன்:- அதெல்லாம் வேண்டாம்- என் முடிவில் எந்த மாற்றமும் இல்லை

(அதற்குள் செல்போனில் பெண் குரல் கேட்கிறது -)

பாஞ்சாலி:- ஹலோ - நான்தான் பாஞ்சாலி பேசுகிறேன்.....

கர்ணன்:- நான் யாருடனும் பேசத் தயாராக இல்லை ...

பாஞ்சாலி:- அய்வருக்கும் தேவி அழியாத பத்தினியென்றால்; நீங்கள் பேச மறுப்பது நியாயம்- நான் உண்மையில் மானசீகமாக கர்ணனாகிய தங்களுக்கும் மனைவியாக எண்ணி இருப்பவள்- நீங்கள் விரும்பாவிட்டாலும் நான் அப்படி விரும்பியவள்

கர்ணன்:- என்ன புதிர் போடுகிறாய் பாஞ்சாலி?

பாஞ்சாலி:- நடந்ததைச் சொல்லிவிடுகிறேன்; கொஞ்சம் அமைதியாகக் கேளுங்கள்

கர்ணன்:- எல்லாம் விபரீதமாகத் தெரிகிறது உம்; சொல்லும்மா!....

பாஞ்சாலி:- பாண்டவர்களுடன் வன வாசம் செய்து வன வனாந்திரங்களைக் கடந்து சென்றபோது- தஞ்சை மண்டலத்தில் “விழுந்த மாவடி” என்ற ஊரில் ஒரு பெரிய மாமரம்! மரத்தடியில் ஒரு முனிவர் கடுந் தவம் செய்து கொண்டிருக்கிறார் - அந்த மாமரத்தில் ஒரே ஒரு குண்டு மாம்பழம் - அதை அருந்த வேண்டுமென்று ஆசைப்பட்டேன். உடனே என் கணவர்களில் ஒருவரான அர்ச்சுனன் அம்பு எய்து அந்த மாம்பழத்தைக் கீழே விழச் செய்தார். சப்தம் கேட்டு தவமிருந்த முனிவர் விழித்துக் கொண்டு “ஆகா! நான் எப்போதும் சிரஞ்சீவியாக வாழ்வதற்கு அந்த மாம்பழத்தைச் சாப்பிடக் காத்திருக்கிறேன்; அதற்குள் அதை அடித்துக் கீழே வீழ்த்திவிட்டீர்கள் - இதோ பிடியுங்கள்

சாபம்! அந்த மாங்கனி விழுந்தது போல் உங்கள் தலைகளும் வெட்டுண்டு கீழே விழட்டும்!" என்று சாபமளித்துக் கூக்குரலிட்டார்! நாங்கள் பயந்து நடுங்கி, பரந்தாமனை வேண்டி அழைத்து உயிர் பிச்சை கேட்டோம். - பரந்தாமன் சொன்னார் - "நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் மனதில் ஒளித்து வைத்திருக்கும் ஓர் உண்மையைச் சொன்னால் அந்த மாங்கனி ஒவ்வொரு உண்மைக்குமாக கொஞ்சம் கொஞ்சமாக மேலே உயர்ந்து சென்று - மாமரக் கிளையில் ஒட்டிக் கொள்ளும். அப்படிச் செய்துவிட்டால் முனிவர் சாபத்தையும் திரும்பப் பெற்றுக் கொள்வார்" என்று கூறினார். உடனே தர்மர், அவர் மனத்தில் மறைத்திருந்த ஓர் உண்மையைச் சொல்லவே, "மாங்கனி"- கொஞ்ச தூரம் மேலே உயர்ந்தது - இப்படி பாண்டவர் ஐவரும் ஆளுக்கொரு உண்மையைச் சொன்னவுடன், அந்தப் பழம், மரக்கிளைக்கு அருகே போய் நின்றுவிட்டது. கிளையில் அது ஒட்டிக் கொள்வதற்கு ஓர் உண்மைதான் பாக்கி! அந்த உண்மையை யார் சொல்ல வேண்டும்? நான்தான் சொல்ல வேண்டும் - நான் மறைத்திருந்த உண்மை யென்று ஒன்றைச் சொல்லியும் கூட; மாங்கனி மரக் கிளையில் போய் ஒட்டவில்லை. அப்படியே நின்றது நின்றபடி இருந்தது - அப்போது பரந்தாமன் கிருஷ்ணன் கோபத்துடன் என்னை நோக்கி; "பாஞ்சாலி! எதையோ மறைத்துப் பொய் கூறுகிறாய் - நீ அந்த உண்மையைச் சொல்லாவிட்டால்; உங்கள் அனைவரது தலைகளுக்கும் ஆபத்து" என்று மிரட்டினார். அப்போது மிகவும் பயந்துபோன நான் உண்மையாகவே உண்மையைச் சொல்லி விட்டேன்.... மாங்கனியும் மரத்தில் போய் ஒட்டிக் கொண்டது - மகாமுனி சாபத்திலிருந்து நாங்களும் உயிர் பிழைத்தோம்... கர்ண பிரபூ; அப்படி நான் மறைத்திருந்த அந்த உண்மை என்ன தெரியுமா?

கர்ணன் :- என்ன அது? சொன்னால்தானே தெரியும்....

பாஞ்சாலி :- பஞ்ச பாண்டவர் ஐந்து பேரே அன்னியில் எனக்கு ஆறாவதாகக் கர்ணன் மீதும் காதல் உண்டு என்பதே அந்த உண்மை ....

கர்ணன்:- (முகத்தை வெறுப்புடன் சுளித்துக் கொண்டு)

ஓ! அந்த ஊர்ப் பெயர் "விழுந்தெழுந்த மாவடி" என்றிருந்து சுருக்கமாக "விழுந்த மாவடி" என்று ஆன கதை இது தானா? சபாஷ்! நல்ல கதை! நல்ல உண்மை!

பாஞ்சாலி :- இப்போதும் கேட்கிறேன் உண்மை ஜெயிக்குமா?

கர்ணன் :- உண்மை ஜெயிக்கும் - அதற்கு உதாரணத்தை இங்கேயே இப்போதே கண்டிருக்கிறோம் - ஆனால் பாஞ்சாலியின் ஆசை ஜெயிக்காது - ஜெயிக்கவே ஜெயிக்காது!

பாஞ்சாலி :- சரி; என் ஆசை ஜெயிக்க வேண்டாம் - இந்தப் பாரதப் போரிலாவது, நீங்கள், எங்கள் பக்கம் வந்து உதவலாமே! ஏனென்றால் வென்றிடப் போவது நாங்கள்தான்...

கர்ணன் :- பாஞ்சாலியின் நம்பிக்கையைப் பாராட்டுகிறேன் - ஆனால் ஒன்று வெற்றியினால் மட்டும் ஒருவரின் பெயரும், புகழும் நிலைத்திருப்பதில்லை - மகா பாரத யுத்தம் நடை பெற்று முடிந்து - குருட்சேத்திரத்தில் பெருக்கெடுக்கப்போகும் குருதிப் புனலில் இரு தரப்பினரும் மிதந்து - இந்தப் போராட்டம் பற்றிய கதை மட்டும் வாழ்கிறபோது; மனைவியை பணயம் வைத்து சூதாடியவன் தர்மன் என்பதும் - சாவு சதிராடும் போர்க்களத்தில் கூட கொடை கொடுத்த வள்ளல் கர்ணன் என்பதும் அழியாத அத்தியாயங்களாக இருக்கும்....

(பேசிக் கொண்டே கர்ணன் செல்போனை நிறுத்திவிடுகிறான் - பாஞ்சாலியும் - அவளது ஐந்து கணவர்களும் "அலோ"-"அலோ" என்றவாறு செல்போனை ட அழுத்திப் பார்த்து - பயனின்றி உதட்டைப் பிதுக்கியவாறு நிற்கின்றனர்)

(மீண்டும் செல்போன்" ஒலிக்கிறது - பாஞ்சாலியும் பாண்டவர்களும் ஆவலுடன் ஒருவருக்கொருவர் மாற்றி மாற்றி செல்போனைத் தங்கள் காதுகளில் வைத்துக் கொண்டு கேட்கிறார்கள்)

(செல்போனில் கர்ணனின் குரல் கேட்கிறது)

கர்ணன் :- ஆனாலும் ஒன்று சொல்லுகிறேன் - பாஞ்சாலியும் பாண்டவர்களும் கேட்டுக் கொள்ளுங்கள் அன்று 'பாரதப் போர்' நடந்ததை இப்போது நினைவில் வைத்துக் கொண்டு ஏமாந்து போகாதீர்கள் - அந்தப் போரில் கிருஷ்ணனின் சூழ்ச்சியால் ஜெயித்து விட்டீர்கள் - அது வேறு யுகம் - திரேதா யுகமோ, துவாபர யுகமோ ஏதோ ஒரு யுகம்; இது உங்கள் பாஷைப் படி 'கலியுகம்! - எங்கள் கருத்துப்படி ஜனநாயக யுகம்! இந்த யுகத்தில் கிருஷ்ணனின் சூழ்ச்சிகளுக்கும் பாஞ்சாலியின் பசப்புகளுக்கும் இடமில்லை - அவை எடுபடாது - வெற்றி எங்களுக்குத்தான் என்பதை உங்கள் "ஆரூடப்புலி" சகா தேவனிடம் சொல்லி அதையும்.... கணித்து வைக்கச் சொல்லுங்கள் - அவன் 'தூது' தோற்றுவிட்டதற்காக என் ஆழ்ந்த அனுதாபத்தை அவனுக்குத் தெரிவியுங்கள்....

(அது கேட்டு பாஞ்சாலியும் பாண்டவர்களும் ஒரே குரலில் "ஆ" என்று அலறுகிறார்கள்)

(கர்ணன் 'கலகல'வென சிரிக்கிறான்)

உடன்பிறப்பே, அந்தச் சிரிப்பொலியில் நானும் கண் விழித்துக் கொண்டேன். கண்டது பாரதக் கதையின் அடிப்படையிலான கனவு என்றுணர்ந்ததுடன் அந்தக் கனவின் முடிவு, களிப்பூட்டுவதாக அமைந்ததால்; அதனை உனக்கும் சொன்னேன். நீயும் விழித்துக் கொள்; விடியப் போகிறது!

அன்புள்ள,

மு.க.

11-02-2006

3201. செஞ்சிக் கோட்டையிலிருந்து சென்னைக் கோட்டைக்கு!

உடன்பிறப்பே,

தி.மு.க. 9வது மாநில மாநாடும் - இளைஞர் அணியின் வெள்ளி விழா மாநாடும் வருகிற மார்ச் திங்கள் 3, 4, 5 நாட்களில் நடைபெற இருக்கிற திருச்சி மாநகரில்;

தி.மு.க.வின் இரண்டாவது மாநில மாநாடு 1956 மே திங்கள் 17, 18, 19, 20 ஆகிய நான்கு நாட்கள் நடைபெற்ற போது;

“அம்பில் அழைக்கிறார்’’ என்று தலைப்பிட்டு அறிஞர் அண்ணா அவர்கள், “திராவிட நாடு” வார இதழில் தம்பிக்கு என விளித்து, நீண்டதோர் கடிதம் எழுதியிருந்தார்.

அதனை இப்போது மீண்டும் படித்திடும் வாய்ப்பு பெற்றேன். வடிந்திடும் கண்ணீரைத் துடைத்தபடி; அந்த நாள் மாநில மாநாட்டு நிகழ்ச்சிகளையும் - அம்பிலும், கழக முன்னோடிகளும் ஓடியாடிப் பணிபுரிந்ததையும் - அண்ணாவும் திருச்சியிலே முகாமிட்டு மாநாட்டு அலுவல்களை முடுக்கி விட்டதையும் - பந்தலில் தேங்காய்க் குலை கட்டித் தொங்க விடலாமா? ஈச்சங்குலைகள் கட்டலாமா? என்ற ஆலோசனைகள் கூறி, அழகுபடுத்தியதையும் - பந்தலுக்கு வெளியே பனைமரத் தூண்களை நட்டு, பிரகாசமான மின் விளக்கு ‘டூம்’களை அவற்றில் பொருத்தி எழிலூட்டச் செய்ததையும் - விடிய விடிய விழித்திருந்து அண்ணாவும், எங்களுடன் மாநாட்டுப் பணிகளில் ஈடுபட்டிருந்ததையும் - அந்த மாநாட்டு வேலைகளையும் பார்த்துக் கொண்டு, அண்ணாவுக்கு அருகிலிருந்து நண்பர்களுடன் அவர் அளவளாவிடும் அழகை ரசித்துக் கொண்டும், அந்த மாநாட்டில் எனக்கு உரையாற்றிட அளிக்கப்பட்டிருந்த “திராவிடத்தின் உலகத் தொடர்புகள்’’ என்ற தனித் தலைப்புக்கான கருத்துக்களை திரட்டிக் கொண்டும்.....

விரிந்து பரந்த அந்தப் பந்தலில் நடமாடிய நினைவுகள் அல்லவா; நீர்த் துளிகளாக மாறி கண் விட்டுக் கசிந்து இப்போதும் என் கன்னங்களை நனைத்திடுகின்றன.

நேற்று (10-2-2006) அண்ணாவின் பெயர்த்திக்குத் திருமணம் என் தலைமையில்; பேராசிரியரும், பொருளாளரும், தம்பி ஸ்டாலினும், ஆர்.எம்.வீ.யும் கலந்து கொண்டு நடத்தி வைத்தோம். தம்பி பரிமளத்தையும் மற்றும் அந்த இல்லத்துச் செல்வங்களையும் சந்தித்தபோதும் - அவர்கள் அன்பு பொழிய எம்முடன் உரையாடியபோதும் - உடன்பிறப்பே; அந்த ஒரு நாள் மட்டுந்தானா ? என்றைக்கு? எந்த நாளில்? எந்த நேரத்தில் ? எந்த நிமிஷத்தில்? எந்த விநாடியில் ? அண்ணாவின் நினைவு நம்மை விட்டு விலகியிருக்கிறது - ஊனோடு, உயிரோடு, உணர்வோடு கலந்ததாயிற்றே அந்த நினைவு - அடடா; அந்த மணவிழாவில் மெய் மறந்து போனேன் - அதன் தொடர்ச்சியாகத்தான் 'முரசொலி' அலுவலகம் வந்தவுடன் 'அம்பில் அழைக்கிறார்' என்ற அண்ணாவின் மடலுடன் "திராவிட நாடு" இதழ் என்னைத் தழுவிக் கொண்டது! நானும் இறுக அணைத்துக் கொண்டேன்.

அப்போது (1956) அந்தக் கடிதத்தை அண்ணா எப்படித் தொடங்கியிருக்கிறார், பார்!

"தம்பி!

"மாற்றார்கள் தோற்றத்தில் மிகப் பெரியவர்கள் என்றெண்ணி மருட்சி அடையாதீர்கள். அவர்கள் மிகப் பிரம்மாண்டமான உருவினராகத் தெரிவதற்குக் காரணம், நீங்கள் மண்டியிட்ட நிலையில் அவர்களைப் பார்ப்பதுதான்!

பவுஜாடே எனும் பிரெஞ்சு நாட்டுத் தலைவருள் ஒருவர், இதுபோலக் கூறியுள்ளார். வெத்து வேட்டு வகையில் அமைந்த பேச்சல்ல, 'ஓஹோ' என்று வாழ்ந்தவர்கள், உலகப் புகழ் பெற்றவர்கள் களம் பல கண்டவர்கள், எனப் படும் நிலையினராகத் தலைவர்கள், பலர், தலைமுறை தலைமுறையாகக் கட்டிக் காத்து, தத்துவ அரண்களைத் தேடித் தேடி அமைத்துக் கொண்டு கட்சிகள் நடாத்தும் பிரான்சு நாட்டில், யார் இந்த அரசியல்வாதி? எப்போது கட்சி துவக்கினார்? தத்துவம் யாது? பத்திரிகைகள்

எத்தனை? என்று அலட்சியமும் ஏளனமும் கலந்த குரலில் பெரியவர்கள் கேட்டுக் கொண்டிருந்த நிலையில், சூறாவளி போலக் கிளம்பி, பொதுத் தேர்தலில் 52 இடங்களை வெற்றிகரமாகக் கைப்பற்றி, பிரெஞ்சு அரசியல் வட்டாரத்திலே புதிய பிரச்சினையாக உருவெடுத்துள்ள பவுஜாடேயின் பேச்சு இது.

காரியமாற்றியவர் பேச்சு; கனவு காண்பவரின் கற்பனையுமல்ல, களமென்றால் பன்னெடுங் காத தூரம் ஓடிச் சென்று பதுங்குமிடம் தேடியவரின் வீம்புப் பேச்சுமல்ல, வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்ற வகையான வரட்டுப் பேச்சுமல்ல, நிலைமைகளைத் தெளிவாகப் புரிந்து கொண்டு, அதற்கு ஏற்ற வண்ணம், நடவடிக்கையில் ஈடுபட்டு, அரசியலில் இன்றளவு வரையில், அலட்சியப்படுத்தப்பட முடியாத தாகி விட்டுள்ள தேர்தலில் வெற்றி கண்ட தலைவனின், அனுபவப் பேச்சு.

மாற்றார்களின் தோற்றம் - என்று இங்கு குறிப்பிடப்படுவது, தனி ஆட்களின் உடற் தோற்றம் பற்றியதல்ல, அவர்கள் சார்ந்துள்ள கட்சிகளுக்கு உள்ள வசதி வாய்ப்பு, அதன் பயனாக அமையும் பண பலம், படை பலம் இவை. இம்முறையில், ஆளுங்கட்சியாகி விட்ட குழுவில் இடம் பெற்றுள்ள எந்தத் தலைவரைப் பார்த்தாலும், பிற கட்சிக்காரர்களுக்கு, 'பிரம்மாண்டமான' வராகத்தான் தெரியும்; காரணம், அவர்கள் முன், நாம் கூனிக் குறுகி நிற்கிறோம், மண்டியிட்ட நிலையில் அவர்களைப் பார்க்கிறோம், அதனால் நமது கண்களுக்கு 'பிரம்மாண்டமாக'த் தெரிகிறார்கள் என்று பவுஜாடே கூறுகிறார்.

நான், தம்பி! இந்தப் பேச்சினைக் கண்டபோது மிக மிக மகிழ்ச்சியடைந்தேன் - ஏனெனில் என்னைத்தான் உனக்கு நன்றாகத் தெரியுமே, எதிரிகள் - பிரமாண்டமானவர்கள் என்ற ஏக்கம் அதிகமான அளவு கொண்டவனல்லவா; அதனால் பவுஜாடே என்பவர் கூறிய பேச்சு, என்னையும் கொஞ்சம் நிமிர்ந்து நின்று, பார்க்கத் தூண்டிற்று; வேடிக்கை என்னென்பேன்,

கூனிக் குறுகிடாமல், நிமிர்ந்து நின்று பார்க்கும்போது, அப்படி ஒன்றும் நமது மாற்றார்கள் உண்மையிலேயே 'பிரம்மாண்ட'மானவர்களல்ல என்பது புரியத்தான் செய்கிறது!"

இவ்வாறு பீடிகையுடன் கடிதத்தை எழுதத் தொடங்கிய அண்ணா அவர்கள்; அன்று நாம் கொண்டிருந்த "திராவிட நாடு" கொள்கை குறித்து விளக்கமளித்து விட்டு; தி.மு. கழகம் எனும் இந்தப் பேரியக்கம் வசீகரத்தையும், வனப்பையும் பொருட்படுத்தாமல் கொள்கை வலிமையைப் பெருக்கிக் கொண்டுள்ள வீரர்களின் பாசறை என்பதையும், இது என்றென்றும் தமிழர்களுக்குத் திசை காட்டக் கூடிய கலங்கரை விளக்கமென்பதையும் - அதனை உறுதிப்படுத்துவதற்கென திருச்சி மாநாட்டில் திராவிட தீரர்கள் இலட்சக்கணக்கில் கூடிடப் போகிறார்கள் என்பதையும் அதே கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"இலட்சக்கணக்கில் கூடப் போகிறார்கள் - இலட்சிய முழக்கம் கேட்கப் போகிறது.

சிங்களத் தீவிலிருந்தும் திருநெல்வேலிச் சீமையிலிருந்தும், சிங்காரச் சென்னையிலிருந்தும் பிற மாவட்டம் பலவற்றிலுமிருந்தும், அடலேறுகளும், அவர்கட்கு காதற் தேனில் வீரத்தைக் குழைத்தளிக்கும் குமரிகளும், வீரரைப் பெற்றெடுத்த தாய்மார்களும், அவ்தம் இளமை வளத்தை எண்ணிக் களித்திடும் முதியோரும், வரலாறு அறிந்த மாணவர்களும், புதிய வரலாறு காணும் பாட்டாளித் தோழர்களும் அணி அணியாக வரப் போகிறார்கள், கடலலையை மிஞ்சும் களிப்பொலி எழுப்பியபடி, குடும்பம் குடும்பமாக வரப் போகிறார்கள் - குதூகலம் காணப் போகிறார்கள். குன்றெடுக்கும் நெடுந்தோளையும், குளிர்மதிப் பார்வையையும், இன்று கண்டோம், இனி வென்றோம், என்று எவரும் ஆர்வத்துடன் கூறிடத்தக்க முறையில் திரண்டு வருகிறார்கள், திரு இடத்தவர்! காண வாரீர்! கடமையை உணர வாரீர்! கருத்தளிக்கவும் காரிய மாற்றவும், கலங்கா உள்ளம் படைத்தோரே! திரண்டு வாரீர்! தீரரும் வீரரும், திரு இட மீட்புக்கு எத்துணை

எழுச்சி யுடன் அணிவகுத்து நிற்கின்றனர் என்பதை எவரும் அறியத்தக்க விதத்தில் வந்து சேருமின்! தாயகம் அழைக்கிறது! தளை உடைபடும் வேளை எது எனக் கேட்டு, அழைக்கிறது. பெற்றேனே, இத்தகைய மக்களை, மாற்றான் என ஏச, கூசாது கேட்டுக் குனிந்த தலையுடன் கிடந்தனரே, என்னால் சீராட்டி வளர்க்கப்பட்ட இந்த மக்கள், என்று கூறிக் கதறிக் கொண்டிருந்த தாயகம், இன்று, மக்களிடம் ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சியையும் வீரத்தையும் கண்டு, கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "நான் பெற்ற செல்வங்களே! தீர்ந்ததடா என் துக்கம். இனி, என் தளைகளை உடைத்திடுவீர் என்ற நம்பிக்கை பிறந்ததடா!" என்று வாழ்த்தி வரவேற்கிறார். அன்னையின் பணிக்காக, அருமந்த மக்காள், அனைவரும் வருக!!.....என்றெல்லாம் கூறி அழைக்கிறார், அம்பில் தர்மலிங்கம்."

உடன்பிறப்பே, காடு மேடாக - புல் பூண்டு வளர்ந்ததாக - செடிகொடிகள் சூழ்ந்ததாக - கற்குவியலும் - முட்புதர்களும் நிறைந்ததாக இருந்த இடத்தை இப்போது தம்பி நேரு தலைமையில் உள்ள மாநாட்டு வரவேற்புக் குழுவினர் மட்டுமல்ல; இன்று போல் தான் 1956லும் இருந்த இடத்தை மாநாட்டுப் பந்தல் அமைக்கும் இடமாக அன்பில் தர்மலிங்கம் மாற்றிய விந்தையை அண்ணா எழுதுகிறார் அந்தக் கடிதத்தில்! ஆம்; எப்படியிருந்த மைதானத்தை அன்று எப்படி மாற்றி மாநாட்டுப் பந்தல் அமைத்தோம் என்பதையும் அண்ணா விளக்குகிறார் அன்றைய மடலில்!

"தம்பி, துவக்கமே மகிழ்ச்சியும் நம்பிக்கையும் தருவதாக அமைந்தது - அன்று அந்த வெட்ட வெளியை, வேகும் வெய்யிலில் காணச் சென்ற 'குழு' சாதாரணமாக, ஆண்டுக்கொரு முறையோ, ஆறு திங்களுக்கு ஒரு முறையோதான் ஒரு சேரக் காணக் கூடியது - அன்று அம்பிலின் ஏற்பாட்டின் திறம் பாருங்கள், நாவலரும், கருணாநிதியும், நடராசனும், உள்ளூர் நண்பர்களும், நானும், சம்பத்தும், இவ்வளவு பேரும், சென்று பார்த்தோம்.

மைல் கணக்கில் விரிந்து பரந்து கிடக்கிறது திடல் - பார்ப்போம், எனக்குப் போர்வை தர உங்களிடம் எவ்வளவு பணம் இருக்கிறது பார்க்கலாம் என்று மிரட்டுவது போலவே இருந்தது. எனினும் நாங்கள் திகைத்துப் போய் - விடவில்லை .

தம்பி! எங்கள் கண்களைத்தான், திடல் மிரட்டிற்று - நீ காணும்போது, அங்கு ஒரு சிறிய - சீரிய எழிலூர் காணப் போகிறாய்!"

ஒன்று கண்டாயா உடன்பிறப்பே, அண்ணாவின் கடிதத்தில்? - மாநாட்டுப் பந்தல் அமைய இருக்கும் இடத்தை துவக்கத்தில் சென்று பார்த்தவர்களின் பட்டியலை அண்ணா குறிப்பிட்டிருக்கிறாரே; அதில் நானும் இருக்கிறேன்; இப்போது நான் மட்டும்தான் இருக்கிறேன். புரிகிறதா; எத்தனை பேர் தாங்கிக் கொண்டிருந்த சுமை இப்போது நம் தலையில் தாங்க வேண்டிய நிலை! 'நான்' என்பது 'நாம்' என உருவெடுக்க வேண்டும் என்ற கூட்டு முயற்சியின் விளைவுதானே நமது கழகம் - என்றைக்கும் எதேச்சாதிகாரத்தின் நிழல்கூட விழக் கூடாது - எல்லாமே நான் - நான் - நான் என்ற ஆணவம் தலையெடுக்கக் கூடாது - இதுதானே அண்ணா உருவாக்கித் தந்த இந்த ஒப்பற்ற கழகத்தின் தத்துவம் - கொள்கை - கோட்பாடு - "நாம்" என்ற கூட்டு முயற்சிக்கான அறைகூவல்! அன்பழைப்பு!

அந்த அடிப்படையில்தானே பல்வேறு பிரிவு மக்களின் - பாட்டாளி வர்க்கத்தினரின் - தனித் தனியான தகுதி மிக்க அணிகள் எல்லாம் உடன்பாடு கொண்டு வரப்போகும் பொதுத் தேர்தலிலே கூட்டணியாக எதிர் முனையில் நின்று எதேச்சாதிகாரத்தை அகற்றுவதற்கு முற்பட்டுள்ளோம்! இந்த முற்போக்கு அணியினர் முழங்கிட இருக்கின்றனர் திருச்சி தி.மு.க. மாநில மாநாட்டில்! இந்த மாநாட்டின் சிறப்பு அம்சமாக இந்தியப் பேரரசினைத் தலைமையேற்று நடத்தும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் வழிகாட்டும் தலைவரான திருமதி சோனியா காந்தி அவர்கள் வருகை தந்து வாழ்த்திட இருக்கிறார்கள்! என் பிரியத்துக்குரிய உடன்பிறப்பே; தந்தை பெரியார் திடல் - பேரறிஞர் அண்ணா நகர் - அன்பில் பொய்யாமொழி பந்தல் - முரசொலி மாறன் மேடை - து.ப. அழகமுத்து அரங்கம் - எஸ்.ஜே. சாதிக்பாட்சா முன் முகப்பு

- க.சொ. கணேசன் உள்முகப்பு - ஜே.எஸ். இராசு நுழைவு வாயில் - சிங்கத் தமிழன் சின்னச்சாமி கொடி மேடை - இவற்றுடன்,

அறிஞர் அண்ணா; அன்று வர்ணித்துள்ளாரே; திருச்சி மாநாட்டு வளாகத்தை "எழிலூர்'' என்று; அந்த எழிலூர் தான் இப்போதும்! எப்போதும் போல இலட்சியபுரி! - எழுச்சிக் கோட்டை.

அதனால்தான்; இன்றே நான் செஞ்சி நகரில் பேச இருக்கும் கூட்டத்தை நமது கூட்டணியினரின் தேர்தல் பிரச்சாரத் துவக்கக் கூட்டமாகக் கருதிப் புறப்படுகிறேன்.

ஆம்; செஞ்சிக் கோட்டையிலிருந்து சென்னைக் கோட்டைக்கு என்று சொல்லத் தோன்றும் உனக்கு - ஆம்; அதோ மெல்லத் தோன்றுகிறது இருள் கிழித்துப் புதிய உதய ஒளி!

அன்புள்ள,

மு.க.

12-02-2006

3202. இரட்டைக்குழல் துப்பாக்கி போல!

உடன்பிறப்பே,

- மரங்கொத்திப் பறவை
- கழுதை
- கடத்தி வைப்பவர்
- புளிய மரத்து நிழல்
- திருதராஷ்டிரன் –
- இடி விழுந்து அழியப் போகிறவர்

இத்தனை அர்ச்சனைகளும் - அடைமொழிகளும் - உவமைகளும் - சாபங்களும் - குட்டிக் கதைகளும் அருமைத் தம்பி காளிமுத்து அவர்களால், எனக்கு நடத்தப்பட்ட ஆராதனை என்பதும், அவற்றை நீ ஏடுகளில் படிக்கும்போது எப்படிப் பதைத்துப் போனாய் என்பதும் நான் நன்றாக அறிவேன்.

வசைபாடுகிறவர்களின் வார்த்தைகளைக் கண்டோ கேட்டோ; அதற்குப் பதிலாக கடுமொழிகளை வாரியிறைப்பதைக் காட்டிலும்; அவற்றைப் பொறுத்துக் கொள்ளவும் - புறந்தள்ளவும் இருக்கின்ற ஒரே வழி; இதே மனிதர்கள் நம்மைக் கடந்த காலத்தில் “தமிழே! அமுதே! அமுதின் சுவையே! அண்ணனே! ஆற்றல் மன்னனே!” என்றெல்லாம் கவிதை மொழியில் பாராட்டியுள்ளதை எண்ணிக் கொண்டால் போதும்! இன்றைக்கு “இடிவிழுந்து அழிவேன்” என்று அவர்கள் இடுகின்ற சாபம்; அல்லது கணிக்கின்ற ஆரூடம் - இவையனைத்தும் அவர்களை அடைக்கலம் கொண்ட அந்த இடத்துக்கு நடத்துகின்ற “அபிஷேகம்” என்பதும் - நம்மைப் பகையென்று காட்டுவதின் வாயிலாக “கும்பிடத் தோன்றுகிறது!” “கூப்பிடத் தோன்றுகிறது!” என்ற வாந்தி குமட்டல் எடுக்கின்ற வர்ணனைகளை மறைத்து வைக்கும் மந்திரத் திரை என்பதும் எனக்கு நன்றாகவே தெரியும், அதனால்தான் பாவம் பிழைத்துப் போகட்டும்; பதவி கிடைக்குமானால் அதற்கு நம் மீது அவர்கள்

பாய்வதும் ஒரு காரணமாகப் பயன்படட்டும் என்றே நான் கருதுகிறேன். அதற்காகவே பொறுமை காத்திடுகின்றேன்.

நான் எழுதிய "திருக்குறள் கலைஞர் உரை"யை அவையில் நாள்தோறும் படித்து மகிழ்ந்த தம்பிக்கு; "கொக்கொக்க கூம்பும் பருவத்து" என்ற குறள் உரையின் நயம் தெரியாதா என்ன? அதேபோல "நெடும் புனலுள் வெல்லும் முதலை" என்பதும்; புனலெனப்படும் தண்ணீரை விட்டு முதலை வெளி வந்து விட்டால்; ஒரு சாதாரண உயிர்கூட அதனை விரட்டி விடும் என்பதும்; அவர், அவையில் பொருள் கூறிய "கலைஞர் குறள் உரை" தானே! அவற்றையெல்லாம் மறந்து விடுவாரா என்ன?

"கருணாநிதியை நம்பாதே - அவர் ஆலிங்கனம் செய்வது திருதராஷ்டிரன் ஆலிங்கனம்" என்று எச்சரிக்கிறார், என்னருந்தம்பி காளிமுத்து! என் செய்வது; இந்தத் தம்பிக்கு இப்போது இப்படி ஒரு வேலை; ஆலிங்கனங்களை வகைப்படுத்திச் சொல்லி; திருதராஷ்டிரன் ஆலிங்கனம் திருப்தி யளிக்குமா? அல்லது திரௌபதி ஆலிங்கனமா? என்று வியாச முனிவரின் பாரதத்தில் விபரீதமான ஆராய்ச்சி செய்து அதனைச் சிபாரிசு செய்யும் 'சிறப்புப் பணி'யை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்.

பனை மரத்தைத் தொட்ட பாவி மீது இடி விழுந்த கதையொன்றைச் சொல்லி; பொல்லாத தம்பி யன்றோ - அதனால் பொன்னையன் கதையை நினைவூட்டுகிறார்.

மேலும் அவர் சொன்ன உப்பு மூட்டை சுமந்த கழுதை, தண்ணீரில் விழுந்து தன் சுமையைக் கரைத்துக் கொண்டது என்ற கதையையும்; அதே கழுதை அழுக்கு மூட்டையுடன் தண்ணீரில் நனைந்து சுமையை அதிகமாக்கிக் கொண்டது என்பதையும்; உடன்பிறப்பே; நீங்கள் யாரும் உவமை காட்டி, அவைத் தலைவர் பதவியை உப்பு மூட்டையாகவும் - அவர் கனவு காணும் கல்வி அமைச்சர் பதவியை அழுக்குத் துணி மூட்டையாகவும் கற்பனை செய்து கொண்டு; அந்தப் பதவிகளைக் களங்கப்படுத்தி விடாதீர்கள் என்று அந்த அருமைத் தம்பியின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

"ஆரியமாலா" என்கிறார் - "காத்தவராயன்" என்கிறார். அவளைக் காத்தவராயன் மீட்டான் என்கிறார். ஆரியமாலாவை சிறையெடுத்துப் போனதே காத்தவராயன்தான் என்பதும்

- அவளைச் சிறையெடுத்துச் சென்று திருமணம் செய்து கொண்டான் என்பதும்தான் உண்மைக்கதை! தம்பியோ, புதுக்கதை புனைகிறார் - ஆர்யமாலாவை மீட்ட காத்தவராயன் என்கிறார் - ஒருவேளை "மீட்டிய" என்பதற்கும், "மீட்ட" என்பதற்கும் - வேறுபாடு தெரியாத விபரீதமோ என்னவோ! -

"பொடா" என்ன ஜெயலலிதா கொண்டு வந்த சட்டமா? என்று கேட்டு; ஏதோ அந்தச் சட்டத்தை வாஜ்பய் அரசு கொண்டு வராததைப் போலவும் - மன்மோகன்சிங் அரசுதான் கொண்டு வந்ததைப் போலவும் "மத்திய அரசு" என்று பொதுவில் சொல்லி; இன்றைய மத்திய அரசின் மீது "மாசு" தூவிடும் மாய்மாலத்தில் ஈடுபடுவது; பொடா சட்டத்தைக் கொண்டு வந்தது யார் என்பதும் - அதனால் அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டோர் யார் என்பதும் - தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரியாது என்று தம்பி காளிமுத்து நம்புவது; அவரையே அவர் ஏமாற்றிக் கொள்ளும் செயலாகும்.

"அடித்த புருஷன் மீது கோபப்படாமல்; சிரித்த கொழுந்தன் மீது கோபப்பட்டாளாம்" - இதுவும் தம்பி காளிமுத்துவுக்கே உரிய உவமைகளின் தொகுப்பு பட்டியல் தான் - ஏ, அப்பா! பட்டியல் போடுவதில் எம காதகனாயிற்றே அவர்! - பெங்களூரில் இருந்து தொடங்கி, சென்னை வரையில் அவர் தயாரித்துள்ள பட்டியல் - பல கூட்டங்களில் அவர் வாயாலேயே விவரித்து - ஒலி நாடாவில் பதிவாகியிருக்கிறதே; இரண்டு நாட்களுக்கு முன்பு கூட எனக்குப் போட்டுக் காட்டினார்களே; அப்படி விரல் நுனியில் அந்தப் "புள்ளிகளின் விபரங்களை வைத்திருப்பவர் அல்லவா!

"வைகோவை சிறையில் வைத்து உடல் நலம் பாதுகாத்தோம் - புத்தகம் படிக்க வைத்தோம் - எழுத வைத்தோம் - கால்பந்து விளையாட வைத்தோம் - பின் பத்திரமாக வெளியே கொண்டு வந்து விட்டோம்!"

இப்படி நீட்டோலை வாசித்து; கூட்டணியை விட்டுத் தங்களிடம் வருக என்று ஏ, அப்பா! எத்தனை எத்தனை தளுக்கு மொழிகளைத் தவழ விட்டிருக்கிறார் தம்பி காளிமுத்து; இவற்றை ஆமாம் என்று ஏற்றுக்கொண்டு இதற்கெல்லாம் ஏமாறுகிற தம்பியாக; அவர் எதிர்பார்க்கிற தம்பி வைகோ இருப்பாரா என்ன?

பெரியாரிடம் அண்ணாவுக்கு கருத்து வேறுபாடு - தி.மு.க. உதயமாயிற்று - அதற்காக அண்ணா பெரியாரின்

இயக்கத்துக்கு எதிரியாகவில்லை - "இரட்டைக் குழல் துப்பாக்கி நாங்கள்" என்றுதான் சொன்னார் - இடையில் எத்தனையோ கசப்புகள் - கடுமைகள் - காழ்ப்புகள் - கடைசியாகக் கனிவான உறவுதான் கொள்கை அடிப்படையில் இரு பெரும் இயக்கங்களுக்கிடையிலேயும் மலர்ந்து மணம் பரப்பியது.

ஏன்? எதற்காக? என்ன காரணம் பற்றி?

ஒரே பதில்; தமிழ் இனம் - தமிழ் நாடு - தரணியில் தலை நிமிர வேண்டும் என்பதற்காக!

இந்த உணர்வை மனத்தில் கொண்டுதான், ஜெயலலிதா அரசினால் தம்பி வைகோவும், ம.தி.மு.க. முன்னணியினரும் "பொடா" சட்டப்படி சிறைவாசம் இருந்தபோது, அவர்கள் சிறையிலே இருந்த ஓராண்டு நிறைவு நாளையொட்டி சென்னை மயிலாப்பூர் மாங்கொல்லையில் 11-7-2003 அன்று நடைபெற்ற ம.தி.மு.க. பொதுக் கூட்டத்தில் பின்வரும் கருத்தை நான் வெளியிட்டேன். அந்தக் கருத்து வருமாறு :

"மைலாப்பூரில் மாங்கொல்லையிலே மாத்திரமல்ல, தமிழ்நாடு முழுவதும் ஒரு எழுச்சி - வைகோ என்ற தனி மனிதனை விடுவிக்க வேண்டும் என்பதற்காக மாத்திரமல்ல, ம.தி.மு.க.வினர் ஒன்பது பேர்களை பொடா சட்டத்தின்படி சிறையிலே அடைத்திருக்கின்ற கொடுமையிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதற்காக மாத்திரமல்ல, ஆறு கோடி தமிழர்களை இந்த அநியாய ஆட்சியிலேயிருந்து விடுவிப்பதற்கு ஒரு மாபெரும் அமைதிப் புரட்சி, அறவழிப் புரட்சி தமிழகத்தில் விரைவில் நடைபெற வேண்டியிருக்கின்றது. அதற்கான தொடக்க நாளாக இந்த நாளை நான் கருதுகிறேன்.

இது தொடர வேண்டிய ஒரு முயற்சி. நான் இந்த மேடையிலே அமர்ந்திருக்கின்ற ம.தி.மு.க.வின் தம்பிமார்களுக்கும் சொல்லிக் கொள்கிறேன். என் எதிரே அமர்ந்திருக்கின்ற தி.மு.க.வின் தளகர்த்தர்களுக்கும் சொல்லிக் கொள்கிறேன். இந்த மாபெரும் பொதுக் கூட்டத்திலே வீற்றிருக்கின்ற மானமிகு தமிழர்கள் அத்தனை பேருக்கும் சொல்லிக் கொள்கிறேன். இன்று நாடு, நாடாக இல்லை, காடாக மாறிக் கொண்

டிருக்கின்றது. மன்னிக்கவும், மாறியே விட்டது. இந்தக் காட்டை அழித்து நாட்டை உருவாக்க வேண்டிய; சீர்படுத்த வேண்டிய பெரும் கடமை நமக்கெல்லாம் இருக்கின்றது. இல்லா விட்டால் எதிர்காலத்தின் சாபத்திற்கு நாம் ஆளாவோம். தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் கட்டிக் காத்த திராவிட இயக்க உணர்வுகள் இன்று பட்டுப் போய்க் கொண்டிருக்கின்றன. அந்த அநியாயத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்கின்ற பிரச்சார இயந்திரமாக நான் செஞ்சியிலே தம்பி ராமச்சந்திரன் வீட்டுத் திருமண விழாவிலே எடுத்துச் சொன்னதைப் போல, எப்படி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி என்ற இரண்டு கட்சிகளும் இருக்கின்றனவோ, இரண்டும் இடதுசாரி என்ற நிலையிலே ஒன்றுபட்டு போராட்டங்கள் நடத்தி, மக்கள் பிரச்சினைகளுக்காக ஆக்கப் பணிகளை ஆற்றுகின்றனவோ, அதைப் போல நாமும் திராவிட முன்னேற்றக் கழகம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் என்று இருந்தாலுங் கூட, திராவிட இயக்கம் என்கின்ற அந்த நிலையில் திராவிடக் கொள்கைகளைக் காப்பாற்ற ஒன்றுபட்டு உழைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். அதை நிறைவேற்றுகின்ற முதல் நாளாக இந்த நாள் அமைந்திருக்கிறது. செஞ்சியிலே சொன்னதை இன்று மயிலையிலே தொடங்குகிறோம். இது தொடர்ந்து இந்த மாநிலம் முழுதும் நடைபெற வேண்டிய ஒரு தொண்டு என்பதை இரு கட்சிகளிலே உள்ள அமைப்பாளர்களுக்கும் தொண்டர்களுக்கும், தம்பிமார்களுக்கும், உறுப்பினர்களுக்கும் நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

நான் ஏன் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி என்று உவமைக் காட்டினேன் என்பதை நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று கருதுகிறேன். அவர்கள்தான் இடது சாரி கட்சிகள். : காட்டிய உவமையை விசுவ இந்து பரிட்சத் போலவும், ஆர்.எஸ்.எஸ், போலவும் என்று சொல்லியிருக்கக் கூடாதா? சொல்லியிருக்கலாம். நினைப்பே வரவில்லை. வராது, வந்தால் நான் பெரியாரின்

தொண்டன் அல்ல, வந்தால் நான் அண்ணாவின் தம்பியல்ல. இவர்களுக்கெல்லாம் தோழன் அல்ல, இவர்களுக்கெல்லாம் தலைவன் அல்ல. அதனால் எனக்கு அந்த ஒப்புவமை வரவில்லை. கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஒப்புவமை நினைவுக்கு வந்தது. கடந்த காலத்தில் இருந்து திராவிட இயக்கத்தின் வரலாற்றை எடுத்துப் பார்த்தால், நம்முடைய பொருளாதாரக் கொள்கை, கம்யூனிஸ்ட் கொள்கைதான். ஏழையெளிய மக்களுக்கு, தொழிலாளர்களுக்கு, பாட்டாளி மக்களுக்காகப் பாடுபட்ட இயக்கம், இன்றைக்கும் பாடுபட்டு வருகின்ற இயக்கம் திராவிட இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம், மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகம். இந்த இரு இயக்கங்களும் கம்யூனிசத்தை அடிப்படையாகக் கொண்டவைதான். அதனால்தான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி போல, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி போல, இரு பிரிவுகளாக இருந்தாலும், ஒரே நிலையில் திராவிட இயக்கம் என்ற நிலையில் உழைப்போம் என்று குறிப்பிட்டேன். அதை ஏற்றுக் கொண்டு வேலூர் சிறைச்சாலையிலேயிருந்து செய்தி அனுப்பி, அவர்களுடைய வாரப் பத்திரிகை "சங்கொலி"யில் கட்டுரை எழுதியிருக்கின்ற தம்பி வைகோ இன்றைக்கு மிக அருமையான ஒரு உறுதிமொழி உரையை எழுதியிருக்கிறார்"

உடன்பிறப்பே, இந்த அடிப்படையில்தான் நான் திராவிட இயக்கங்களைப் பார்க்கிறேன். அ.தி.மு.க.வையும் அப்படித்தான் பார்க்கிறாயா எனக் கேட்பின்,

தயவுசெய்து தவறாக என்னை எடை போடாதே உடன்பிறப்பே; நான் திராவிட இயக்கங்களை மட்டுமே குறிப்பிடுகிறேன் என்பதே என் பதிலாகும்.

அன்புள்ள,

மு.க.

15-02-2006

3203. திருச்சிப் பயணம் திருப்தி தருகிறது!

உடன்பிறப்பே,

திராவிடர் இயக்கம் தீர்ந்து போய்விட்டது
நமது தீட்சண்ய மூளைகளைப் பயன்படுத்தி
அதனைத் தீர்த்துக் கட்டிவிட்டோம்;
நீர்த்துப் போகச் செய்துவிட்டோம்;
பிரிந்தது பிரிந்ததுதான்;
பிளந்தது இனி ஒட்டப்போவதில்லை
எத்தனை மறுப்புகள் அளித்தென்ன?
எத்தனை மடல்கள் எழுதியென்ன?

மக்களைத் திசை திருப்புவதற்கும்- திராவிடர் பக்கத்தை தேய்ந்த நிலவாக ஆக்குவதற்கும் நாம் பிற பயிற்சியும், கடைப்பிடிக்கும் முறைகளும், திராவிடர் இயக்கங்களை நடத்துகிறவர்களால் சமாளிக்க முடியாமல் திணறித்தான் போவார்கள் திமிர் அடங்கிய காளை தெருவிலே மெலிந்த பசுப் போல் நடந்து போவது போல ஆகிவிடும் திராவிட பக்கத்தின் நிலை!

இப்போதே பார்த்தீரோ; இனி எதிர்காலமில்லை என்பது போல ஏக்கப் பெருமூச்சு விடுகிறார்கள் எங்கே போவார்கள்?

இனி இங்கே வந்துதான் சரணடைவார்கள்-”

சில நாட்களாக இப்படி சில கும்பல்கள் சிரித்து மகிழ்ந்து சிலந்திகளாம் அவர்களின் வலையில் சிறகடித்துப் பூச்சிகள் பலவும் சிக்கத்தான் போகிறது எனக் கூறிக் கும்மாளம் போட்டு; ஏடுகள் மூலமும் தந்திகள் பரப்பியும்- விரிந்த அளவு விமர்சனங்கள் செய்து- திராவிட இயக்கத்தின் வீழ்ச்சி நிகழ்ச்சியை விமரிசையாகக் கொண்டாட நாள் பார்த்துக் கொண்டாட இருந்த நச்சு நினைப்பினர் நாணிக் கோணுகிற அளவுக்கு நடந்து முடிந்துவிட்டது; நமது ஐக்கியத்தை வலுப்படுத்திடத் தொடங்கியுள்ள ‘துவஜாரோ தணம்!’ உடன்பிறப்பே; வடமொழியில் துவஜாரோ தணம்

என்பது நமது செம்மொழியாம் தமிழ் மொழியில் கொடியேற்றம் எனப் பொருள்படுவதாம். திருச்சி மாநில மாநாட்டில்- மாநாட்டுத் தலைவர் என்ற முறையில் நமது இரு வண்ண இலட்சியக் கொடியை நான் ஏற்றி வைக்கிறேனல்லவா; அந்தக் கொடி நாட்டப்பட்டுள்ள இடம் சிங்கத் தமிழன் சின்னச்சாமி மேடை என்பதும்; அதனருகே சுயமரியாதை இயக்கத்தின் எண்பதாம் ஆண்டு நிறைவடைவதையொட்டி, மறைந்த சுயமரியாதை இயக்கத் தளபதிகளின் உருவங்கள் நிறைந்த நெஞ்சிலார் பெயரால் அமைந்த சுடர் மாடம் 80 அடி ததில் அமைக்கப்பட்டு அதனை திராவிடர் தமிழகத் தலைவர் ஆருயிர் இளவல் வீரமணி அவர்கள் திறந்து வைக்கிறார் என்பதும் சொல்லும் போதே என்னுடல் புல்லரிக்கிறதே; அதைப்போல் தானே இதைப் படிக்கும் உனக்கும் இருக்கும். நமது பேராசிரியர் பெருமகனார்; கூட்டம் தவறாமல் மாநாட்டு மேடைகள் தவறாமல் - தமிழ்ச் சமுதாயக் கட்டுக் கோப்பை மென்மேலும் வலுப்படுத்த வேண்டுமென விரிவுரையாற்றுவாரே; அதனை நம் விழிகள் நேரில் கண்டு மகிழ்ந்திடும் வண்ணம்; ஓர் இடைவெளிக்குப் பிறகு இனிய இளவல் திராவிடர் கழகத் தலைவர் 'சுயமரியாதைச் சுடர் மாடத்தை' மார்ச் 3 அன்று மாலை திருச்சி மாநாட்டில் திறந்து வைத்து உரையாற்ற இருப்பது; அன்று அய்யா பெரியாரும், அறிஞர் அண்ணாவும் கண்ட கனவல்லவா; இன்று அடியேன் கண்டு பல முறை உன் போன்ற உடன்பிறப்புகளிடம் வெளியிட்ட கனவல்லவா? அது நிறைவேறத் தொடங்குகிறது என்பதை நினைப்பதே ஓர் இனிப்பன்றோ?...

திருச்சி மாநாட்டுப் பணிகளை தம்பி நேருவும் ஏனைய தீர்களும் எப்படி நிறைவேற்றி வருகின்றனர் என்று கண்டிட - தம்பி மு.க.ஸ்டாலின், தம்பி துரைமுருகன் ஆகியோருடனும், புறப்படத் திட்டமிட்ட போது ஓரளவாக இருந்த மகிழ்ச்சி; நமது தேர்தல் கூட்டணியில் ம.தி.மு.க.வும் இருக்கிறது என அருமைத் தம்பி வைகோ; அவரது அறிக்கை வாயிலாக உறுதிப்படுத்தியதால் விளைந்திட்ட அளவிலா மகிழ்ச்சியாகவன்றோ பெருக்கெடுத்து விட்டது.

எத்தனை மாவட்டச் செயலாளர்கள்; ஆம்; கழகத்தின் முன்னணித் தளகர்த்தர்கள், கோ.சி. மணி, மத்திய அமைச்சர் ஆ.ராஜா, பொன்முடி, எ.வ.வேலு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வாசுகி முருகேசன், பெரியகருப்பன், சுப. தங்கவேலன், ஏ.கே.எஸ்.

விஜயன், பூண்டி கலைச்செல்வன், பெரி.அரசு, திருச்சி சிவா, கரூர் கே.சி. பழனிசாமி, அறந்தாங்கி ராசன், புலவர் செங்குட்டுவன், திருச்சி என்.செல்வராஜ், திருச்சி செல்வேந்திரன், திருவாரூர் அசோகன், திருச்சி பரணிகுமார், சேகரன், அன்பில் பெரியசாமி, திருச்சி நகரச் செயலாளர் மு.அன்பழகன், கே.கே.எம். தங்கராஜா, தொட்டியம் கண்ணையன், ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் மலர்மன்னன், மண்ணச்சநல்லூர் நடராசன், பொதுக்குழு உறுப்பினர் ஷேக்முகமது, திருச்சி மாநகராட்சி மேயர் திருமதி சாருபாலா தொண்டைமான் மற்றும் பலர் பூத்துக் குலுங்கிடும் முகத்தினராய் திருச்சியில் என்னைச் சந்தித்தனர். எல்லோரின் சிரிப்பும்- கம்பீரப் பார்வையும்- எனக்கு விளக்கியவை; திராவிடர் இயக்கத்தை இப்படியே சிந்தாமல் சிதறாமல் பாதுகாக்கும் பணியைத் தலைமேற்கொண்டு பாடுபடு என்பதேயாகும்!

ஏ, அப்பா- எவ்வளவு பெரிய மாநில மாநாட்டை நடத்த இருக்கிறோம்- 50 ஆண்டுகளுக்கு முன்பு 1956 இல் அண்ணா இருந்து நடத்திய மாநில மாநாடு - அதற்குப் பிறகு இப்போது- அதைவிடப் பன்மடங்கு பெரிதாக! - ஆனாலும் அண்ணா இருந்து பார்த்து மகிழ்ந்து அவர் பாராட்டினைப் பெறும் பாக்கியம் பெற்றிட முடியவில்லையே என்ற ஏக்கத்துடன் நடந்தாலும்

வரும் தேர்தலில் நமது கூட்டணியில் உள்ள காங்கிரஸ், பா.ம.க., ம.தி.மு.க., இரு கம்யூனிஸ்டுகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மற்றும் இதர தோழமைக் கட்சிகளின் வலிவுடன்- பணிகளாற்றி ஊக்கத்துடன் ஆற்றிடும் உழைப்பின் பலனை வெற்றிக்கனிகளாக மாற்றுவோம்.

மாநாட்டுக்கான ஏற்பாடுகள் - மகத்தான பணிகள் - மாபெரும் பந்தல் - ஓயாத உழைப்பு- கரை புரளும் உற்சாகம்- இத்தனையும் காணும் பொழுது; மாநாடு மட்டுமல்ல வெற்றி பெறப்போவது- நமது மாநிலமும் - மமதை கொண்டவர்களிடமிருந்து விடுபடப் போகிறது என்ற நம்பிக்கை நாடறிந்த உண்மையாக உருவெடுத்து நிற்கிறது.

முகாம்:- திருச்சி

அன்புள்ள,

மு.க.

23-02-2006

3204. பணி புரிவோம்; ‘பணி’யெனவும் சீறுவோம்!

உடன்பிறப்பே,

திருச்சி மாநில மாநாட்டைப் பற்றி நினைத்ததும்; .. பரவாயில்லை, மார்ச் மாதம்தானே; இது பிப்ரவரி மாதம் - இந்த மாதம் முடிந்து தானே மார்ச் வரப் போகிறது என்று மந்தமாக இருந்து விடுவாயோ என்ற அய்யப்பாட்டுடன்தான் இன்றைய கடிதத்தைத் தொடங்குகிறேன்.

இந்த மாதம்; அதாவது பிப்ரவரி மாதம்; இன்னும் ஐந்து நாட்களில் 28ந்தேதியுடன் முடிவுற்று - மார்ச் 3, 4, 5ஆகிய நாட்கள் வருவதற்கு இடையே ஒரு வாரம் கூட இல்லை என்பதை நினைவில் வைத்துக் கொண்டு செயல்படத் தொடங்கிட வேண்டும் என்பதற்காகவே மீண்டும் மீண்டும் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறேன்.

எத்தனை பணிகள்தான் என்னைச் சுற்றி?

அத்தனையும் உன் போன்ற உடன்பிறப்புகள் நல்கிடும் உற்சாகத்தினால் மட்டும்தானே ஆற்றிடும் வலிமை எனக்குக் கிடைக்கிறது!

‘பணி’ என்பதற்கென இருக்கின்ற பல பொருள்களில் ‘பாம்பு’ என்றோர் பொருளும் உண்டு என்பதை தமிழ் அகராதி கூறுகிறது.

“செயல்” என்ற செந்தமிழ்ச் சொல் பொருளாயிருக்க; சீறும் நாகத்திற்கும் ‘பணி’ என்றே பொருள் இருப்பானேன் என சிந்தித்துப் பார்த்தேன்.

ஒருவேளை பாம்பு; இடையூறு எதுவும் யாரும் விளைவிக்காத வரையில் தன் வேலையைப் பார்த்துக் கொண்டு போகும் - இடர் விளைத்தால் பட மெடுத்துப் பாயும் - பல் அழுந்தத் தீண்டும் என்பதால் ‘பணி’ என்பதற்கு அது ஒரு பொருளாயிற்று போலும்!

'ஆனந்தவிகடன்' எவ்வளவு தரமான பத்திரிகை பெரியார், அண்ணா, அடியேன் போன்றவர்களிடம் எவ்வளவு அன்பும், மதிப்பு மரியாதையும் - மட்டற்ற நட்புணர்வும் கொண்ட பெரியவர் திரு. எஸ்.எஸ். வாசன் அவர்களை அதிபராக - ஆசிரியராகக் கொண்டிருந்த ஏடு. அதற்குப் பிறகு இப்போதும் இனிய நண்பர் பாலசுப்பிரமணியம் பார்வையில் நடை போடும் இதழ் - அதன் அட்டைப் படத்தைத் தூக்கிக் கொண்டு;

திருச்சியில் ஒரு தம்பி தீப்பொறி கக்கும் கண்களுடன் என்னிடம் வந்து, "பார் தலைவா! எவனோ ஒரு கிறுக்கன்; "ஏய்; கருணாநிதி என்னோடு ஒண்டிக்கு ஒண்டி வருகிறாயா?" என்று கேட்டதாக விகடன் விஷம் கக்கியிருப்பதை" என்று கர்ச்சனை செய்து கொண்டு - கையிலிருந்த அந்த வார இதழையும் காட்டிய போது - எனக்கு முதலில் சிரிப்புத்தான் வந்தது - தொடர்ந்து எழுந்த சிந்தனையில் "அடேடே! ஆனந்த விகடனா - இவ்வளவு அநாகரிகத்தில் இறங்கி விட்டது? பாவம்; யாரைத் திருப்தி செய்ய இப்படித் தன் தரத்தைக் குறைத்துக் கொண்டுள்ளது எனும் சந்தேகம் எழுந்தது! என்னைப் போய் 'ஒண்டிக்கு ஒண்டி' அழைக்கிறார்களே; உடன்பிறப்பே! அதை எண்ணிப் பார்த்து அய்யோ, நம் தலைவன் உடம்பு தாங்குமா? என்ற பரிதாபத்தினாலோ; அல்லது என் தலைவனிடமா இப்படி ஒரு சவால் என்ற பதற்றத்தினாலோ திருச்சியிலே அந்தத் தம்பி அந்தப் பத்திரிகையுடன் ஓடி வந்திருப்பதை நான் புரிந்து கொண்டேன். பணி - பாம்பு என்ற வார்த்தைகளைப் பற்றிக் குறிப்பிட்டதால் ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

பற்றற்ற துறவியொருவரிடம் பாம்பொன்று சென்று "அய்யா! என்னைக் கண்டவுடன் அடிக்கிறார்கள், துவைக்கிறார்கள்" என்று முறையிட்டது.

துறவி சொன்னார்; "நீ யாரையும் கடிக்காதே - எல்லோரும் உன்னைப் பாராட்டுவார்கள் - பால் வார்ப்பார்கள்" - என்று!

துறவி சொற்கேட்டு - பாம்பு யாரையும் கடிக்காமல் இருந்தது. "ஓ! பாம்பு ஒன்றும் செய்யாது! ஓட ஓட விரட்டி அடிப்போம் வாங்கடா!" என்று தெருப் பையன்களெல்லாம் ஒன்று கூடி அதை அடித்துக் காயப்படுத்தினர்.

பாம்பு, பழைய துறவியைத் தேடிப் போய்; "பார்த்தீரா என் காயங்களை - நீங்கள் சொன்னபடி நான் யாரையும் கடிக்காமல் இருந்தேன் - அதனால் ஆளுக்கு ஆள் என்னை அடித்துக் காயப்படுத்தி விட்டனர்" என்று கலங்கியது!

பாம்பைப் பார்த்து; துறவி சொன்னார் "உன்னைக் கடிக்க வேண்டாமென்று சொன்னேனே தவிர; அடிக்க வருபவரைப் பார்த்து சீற வேண்டாமென்றா சொன்னேன் -"

பாம்புக்குப் பட்டெனப் புரிந்து விட்டது - பணிக்குப் பாம்பு எனப் பொருள் இருக்கிறதல்லவா; அதனால் தமிழ்ப் பணி, நாட்டுப்பணி, ஜனநாயகப் பணி, சமதர்மப் பணி, சமத்துவப் பணி, பகுத்தறிவு பணி, மனித நேயப் பணி, மத நல்லிணக்கப் பணி ஆற்றுகிற உன்னைப் பார்த்து; "ஏ அப்பா! இந்தப் பாம்பு கடிக்கும் என்று பகைப்படை நடுங்க வேண்டுமானால் - உனக்குப் பழக்கமான சீற்றத்தை வெளிக் காட்டு; அதை ஒளித்திடாமல் சீறிடு போதும்; சிறு பகை ஓடிடும்!"

நான் சொன்ன இந்தப் பழைய கதை கேட்டு, திருச்சியில் விகடனுடனும் வேகமுடனும் வந்த இளைஞனின் புண்பட்டிருந்த இதயம் பண்பட்டதாக உணர்ந்தேன் - இந்த மண் பட்டுப் போகவில்லை மான உணர்வின்றி என்பதை மர மண்டைகளுக்கும் அறிவுறுத்தும் வண்ணம்;

பண்பாடு குறையாமல் சீறிக் காட்டுவர் இளஞ்சிங்கங்கள் -

இளைஞர் அணி வெள்ளி விழா மாநாட்டில் - பணி புரிவர்;

பணியாகவும் திரிவர் - சிறுமதியாளர் சீண்டிப் பார்த்தால் சீறிக் காட்டுவர்!

வலிவை செயலில் காட்டுவர் - வஞ்சகர் வந்தவர் தமிழால் செழித்தார் - வாழ்வினில் உயர்ந்த பின் தமிழர் தலைவர்களையே பழித்தார் - இதோ கிளம்பிற்று காண் தமிழச் சிங்கக் கூட்டம் - கிழித் தெறியத் தேடுது காண் பகைக் கூட்டத்தை - வளம் பெரிய தமிழ்நாட்டில் தமிழரல்லார் வால் நீட்டினால் சீறிடும் பணியாய்; செயலில் காட்டிடும் பணியாய் செருமுனைக்கு அஞ்சாத இளைஞர் அணியாய் - செம்மாந்து கிளம்பும் -

இந்தச் சேதி அறிவிக்கத்தான்
முகில் கிழித்து வெளிக் கிளம்பும்

முழு மதியாய் - தமிழர் தம்
எதிர்காலத் தலைவிதியை
நிர்ணயிக்கும் இளைஞர் அணி
வெள்ளி விழா மாநாடு - மார்ச் 3
மற்றும் 4, 5 நாட்களில்
கழக மாநில மாநாடு -
கண்மணிகளாம் உடன்பிறப்புக்காள்;
இப்போதே பயணம் தயாராகட்டும் -
திருச்சியில் மட்டுமல்ல; இந்த
மாநில முழுதுமே மாநாடாக விளங்கட்டும்!

அன்புள்ள,

மு.க.

24-02-2006

3205. தமிழகத்தின் மலர்ச்சி கான தவறாது வாரீர் திருச்சி!

உடன்பிறப்பே,

இடையில் இன்னமும் ஐந்தே நாட்கள்தான் - 120 மணி நேரம்தான் - அடடா; அகக் கண்களால் காண்கிறேன், அணி தேர்ப் புரவி ஆட்பெரும் குடையுடன் அன்றிந்தத் தமிழ் நிலத்தில் அரசோச்சிய புலிக்கொடிச் சோழனும், மீனக்கொடிப் பாண்டியனும், வேற்கொடிச் சேரனும் போல நமது மாவட்டக் கழகங்களின் தளகர்த்தர்கள் கம்பீரமாக முதல் வரிசையில் அணிவகுத்து அமர்ந்திருக்க; அவர்கள் பின்னே அந்தந்த மாவட்டத்துச் செயல்வீரர்கள் உடனிருந்திடும் காட்சியும் - இளைஞர் அணி, தொழிலாளர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, விவசாயிகள் அணி, தொண்டர் அணி, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணியென எழுச்சிக் கோலம் காட்டி அந்தந்த அணிகளின் செயலாளர்களுடன் கடல் மடை திறந்தாற்போலவும் களத்தில் புகுந்து வீரம் விளைத்திட வீறுகொண்டெழுவது போலவும் சிப்பாய் நடை போட்டு வந்து மாநாட்டில் கலந்து கொள்கின்ற காட்சியும் - அந்தச் சிங்கக் குருளைகளையும், சீறி வரும் புலியதனை முறத்தால் துரத்திய வீராங்கனையர் வழி வந்த தமிழச்சிகளையும், காய்த்துப்போன கரங்களுக்குச் சொந்தக்காரர்களான பாட்டாளி வர்க்கத்தினரையும், வரலாறு படித்துத் தமிழகத்தில் புதிய வரலாறு படைத்திட தலை நிமிர்ந்து வந்து கலந்து கொள்ளும் மாணவச் செல்வங்களையும், இலக்கிய ஏந்தல்களையும், உழுது பயன் விளைக்கும் நாங்கள் கழகத்தின் விழுதுகளாய்ப் பரவுவோம் என்றுரைத்திடும் விவசாயப் பெருங்குடி மக்களையும், மானம் காப்போம்; தமிழரின் இனமானமும் காப்போம் என ஒலித்திடும் நெசவாளத் திருக்குலத்தையும், சட்டத்தின் ஆட்சிக்கு விடை கொடுத்து விட்டு சட்டம், ஒழுங்கை இஷ்டத்திற்குக் காயப்படுத்தி வரும் சர்வாதிகார அரசுக்கு சவுக்கடி தந்திட மாநாட்டில் பங்கேற்கும் சட்டத் துறை தோழர்களையும்

கண்டு கண்டு பேருவகை கொள்கிறேன், களிப்பிலாடும் கான மயிலாகிறேன்.

ஆகா, எத்தனை அணிகள் - அத்தனையும் கழகத்தின் வீரத் திருவுருவை அலங்கரிக்கும் மணிகள்! தகத் தகாயத் தங்கமணிகள்! வைர மணிகள்!

நான், தங்கமென்று அவர்களின் குணத்தையும் - வைரமென்று அவர்களின் உறுதியையும்தான் சொல்கிறேன்!

உடன்பிறப்பே, மனக் கண்ணால் நான் காணும் மாநாட்டுக் காட்சி; நானும், நீயும் மார்ச் திங்கள் 3, 4, 5 ஆகிய நாட்களில் திருச்சியில் காண இருக்கும் மாநாட்டின் எள் முனை அளவுதான்.

அது ஏழு கடல்! எழுச்சிக் கடல்! அலை கடல்! ஆர்ப்பரிக்கும் கடல்! ஆயிரம், பதினாயிரம், லட்சம், கோடியென்று அல்லி மொக்குகள் திருச்சி மாநகரத்தைப் பெருந்தடாகமாக்கிக் கொண்டு கிளர்ந்தெழுந்ததுபோல எங்கு நோக்கினும் தலைகள்! தலைகள்! தலைகள்!

இன்னும் ஐந்து நாட்களுக்குப் பிறகு பார்க்கப் பாவதை இப்போதே கனவு கண்டு மகிழ்கிறாயே, வேறு விழிகளால் எனைக் கேட்கும் நீ, இன்னொன்று கேட்பாய்; உன் கனவு நனவாகுமா என்று!

ஆகும் உடன்பிறப்பே, ஆகும்! ஆவதெல்லாம் உன்னாலே என்று நான் நம்பிக் கிடக்கும்போது; வெட்டி வா என்றுரைத்தால் கட்டி வரும் வீரத் திருக் கூட்டமாக உன் கூட்டம் இருந்திடும்போது - "ஆகும்" என்று சொல்வதற்கு நான் ஏன் தயங்க வேண்டும்?

"திருச்சி மாநாடு! ஊரெல்லாம் தீட்டிடுக விளம்பரங்களை!" என்று வேண்டினேன். ஆணையிடுமளவுக்கு நான் ஆண்டையுமல்ல; அதை அட்டியின்றி அடக்க ஒடுக்கமாய் நிறைவேற்றிட நீ அடிமையுமில்லை! ஆனால் ஒரு உண்மையை இந்த ஊரும் உலகமும் உணர்ந்தாக வேண்டும்; நாமிருவரும் அன்பால் ஒருவருக்கொருவர் அடிமை! அந்தப் பிணைப்புத்தான்; என் வேண்டுகோள் வெளிப்பட்டவுடன் உன் போன்ற உயிரினுமேலான என் உடன்பிறப்புக்களின் கைகளில் தூரிகை பிடிக்க வைத்தது! வண்ணக் கலயம் ஏந்திட வைத்தது! பார்க்கிறேனே நான் பல நகரங்களில்! பல ஊர்களில்! பற்பல

சுவர்களில்! கூலி கொடுத்து ஒரே சீராக எழுதப்பட்ட விளம்பர எழுத்துக்கள் அல்லவே அவைகள்!

பொன் வைக்குமிடத்தில் பூ வைத்தது போல என்பார்களே பழமொழி - அதனை மெய்ப்பிக்கும் விதத்தில் அல்லவா உன் கரங்கள் மாநாட்டு விளம்பரங்களை எழுதியுள்ளன. அவற்றைக் காணும் போதே தெளிவாகப் புரிகிறதே!

கழகத்தின் ஒன்பதாவது மாநில மாநாட்டின் மாட்சி குறித்து நான் கண்ட இன்பக் கனவு மார்ச் 3, 4, 5இல் திருச்சியில் நனவாகும்போது அது மாற்றார் மலைக்கத்தக்க அளவுக்கு எத்துணை மகத்தானதாக இருக்கும் என்பதையும் எண்ணிப் பார்க்கிறேன்.

உனக்கொரு புதுமை சொல்லட்டுமா? பகலிலோ இரவிலோ அதிக நேரம் தூங்காமல் இளமை முதல் பழக்கப்படுத்திக் கொண்டு விட்டவன் நான். தேர்தல் பிரச்சார நேரங்களில் விடிய விடியக் கூட்டங்களில் பேசி விட்டு விடிந்து ஆறுமணிக்குப் படுத்து, ஏழு மணிக்கெல்லாம் எழுந்து பணிகளாற்றியவன்தான் நான்.

எண்பதைத் தாண்டிவிட்டது வயது என்பதாலோ அல்லது இதயத்தில் எங்கோ ஒரு மூலையில் என்னையுமறியாமல் கவலைகளின் மேய்ச்சல் நடை. பெறுகிறது என்பதாலோ இடையில் ஒரு நாள் திருச்சி சென்று மாநாட்டுப் பந்தலைப் பார்த்து விட்டு வந்த அயர்வு காரணமாகவோ இரண்டு நாட்கள் வழக்கத்திற்கு மாறாக நெடு நேரம் உறங்கி விட்டேன்.

உறக்கமும் என்னை மறந்த உறக்கமல்ல; திருச்சி மாநாடு பற்றி உனக்கெழுதும் கடிதங்களில் என்னென்ன வாசகங்கள், வர்ணனைகள் குறிப்பிட்டிருந்தேனோ; அவையனைத்தும் வடிவங்களாகி வண்ணத் திரையில் ஓடுவது போல்; என் எண்ணத் திரையில் பதிந்து எழிலார் கனவுகளாகவே மாறி மாறி வந்து கொண்டிருக்கின்றன.

திருச்சிக்குப் புறப்பட நீ ஆயத்தமாகிறாய் - "துணிமணிகளை இப்போதே தயார்படுத்தி வை" என்று துணை மயிலிடம் கூறுகிறாய்!

"உங்களுக்கு மட்டுமா? எனக்கும் சேர்த்தா?" கேள்வி பிறக்கிறது, உரிமையுடன் உற்றவளிடமிருந்து!

"நம் குழந்தைகளுக்கும் சேர்த்து" இது உன் பதில்!

"ஆமாம்ப்பா; நான் கூட குடும்பத்துடன் வரப் போகிறேன், தலைவர் அழைத்து விட்டார். நானும் தான் வருவேன் என்று தள்ளாத வயதில் என் தாத்தாவும் பிடிவாதம் பிடிக்கிறார் - அவரை எப்படி நான் வர வேண்டாம் என்று சொல்ல முடியும். பெரியார் தலைமையில் திருமணம் செய்து கொண்டவர் அவர். என் தந்தைக்கு அண்ணா தலைமையில் - எனக்கு பேராசிரியர் தலைமையில் - என் தங்கைக்குக் கலைஞர் தலைமையில் திருமணம் நடத்தியவர் - அவர் கேட்கிறார் "நானில்லாத மாநாடா?" என்று! அதனால் வீட்டைப் பூட்டி விட்டு எல்லோருமே திருச்சிக்குத்தான்".

இப்படி விடாமல் பேசிக் கொண்டே எதிர் வீட்டு ஏகப்பன் உன் வீட்டுத் திண்ணையில் வந்து அமருகிறான்.

"ஏ! ஏ! வீட்டைப் பூட்டிட்டு வந்துடாதே! யாரு ஆட்சி நடக்குதுங்கிறதே மறந்துடாதே! யாராவது ஒருத்தராவது வீட்டிலே காவலுக்கு இருங்க! இல்லேன்னா ஒரு காவலாவது போட்டுட்டு புறப்படுங்க!" எச்சரிக்கையுடன் ஏகப்பனுக்கு நீ அறிவுரை கூறுகிறாய்!

இப்படி நான் கண்ட இந்தக் கனவெல்லாம் பலிக்கத்தான் போகிறது - திருச்சி குலுங்கத்தான் போகிறது - மாநில மாநாடு அறிவிக்கப்பட்ட பிறகு உன் போன்ற கழகக் கண்மணிகளிடத்திலே மட்டுமல்ல; பொதுவாகத் தமிழ் மக்களின் எல்லாப் பிரிவினரிடத்திலும் ஒரு புத்துணர்வு - எழுச்சி - முக மலர்ச்சி!

எதையோ எதிர்பார்க்கிறார்கள்; அதை என்னால் கொடுக்க முடியுமா? நீயின்றி, உன் உழைப்பின்றி, உன் ஆற்றல் மிகு செயல்பாடின்றி - தனித்தியங்கித் தரையைக் குடைந்து காட்டுவேன் - வானத்தைக் கிழித்துக் காட்டுவேன் என்று என்றைக்கு நான் நினைத்திருக்கிறேன்? என்றைக்கு அப்படிச் சொல்லியிருக்கிறேன் - நினைத்தால் அல்லவா சொல்வதற்கு!

உடன்பிறப்பே, இந்த மாநாடு பற்றிக் குறும்புத்தனமாகப் பேசும் "குணாளர்கள்" சிலர் இருக்கத்தான் செய்வார்கள், இருக்கிறார்கள். அந்தக் குறும்புக்காரர்களைப் பற்றி 1956 ஆம் ஆண்டு திருச்சியில் தி.மு.க. மாநில மாநாடு நடந்து முடிந்தவுடன் அண்ணா அவர்கள் தம்பிக்கு எழுதிய கடிதத்தில் "குருவிக் கதை"

ஒன்று கூறி விளக்கமளித்துள்ளார். ஒரு சிட்டுக் குருவி, மன்னன் ஒருவனை வம்புக்கிழுத்த கதை. அதாவது மன்னன் மாளிகை தாழ்வாரத்தில் உலவிக் கொண்டிருக்கிறான். அப்போது ஒரு சிட்டுக்குருவி அவனைப் பார்த்து, "எங்கிட்ட ஒரு காசு இருக்கு, யாருக்கு வேணும்?" என்று கத்துகிறது. மன்னன் திரும்பிப் பார்க்கிறான். குருவி மீண்டும் மீண்டும் அதையே சொல்லி சொல்லி கத்துகிறது. மன்னன் குருவியிடம் எனக்கு வேண்டும், கொடு என்று அந்தக் காசை வாங்கிக் கொள்கிறான். உடனே குருவி அய்யோ மகாராஜா எங்கிட்ட ஒரு காசு கடன் வாங்கிட்டாரே என்று கத்துகிறது. உடனே மன்னன் அந்தக் காசை திரும்ப குருவியிடமே வீசி எறிகிறான். அப்போதும் குருவி சும்மா இராமல், "எனக்கு பயந்துகிட்டு, மகாராஜா காசை திருப்பிக் கொடுத்து விட்டாரே" என்று கத்துகிறது. மன்னன் சிரித்துக் கொண்டே அங்கிருந்து போய் விடுகிறான். அந்தக் கதையின் முடிவில் அண்ணா என்ன கூறுகிறார் தெரியுமா?

"குறும்புக் குணம் கொண்டவர்கள், ஒருவர் எதைச் செய்தாலும் ஏதாவது பேசுவர்; நமது எந்தச் செயலுக்கும் ஏதேனும் ஒரு விஷமத்தனமான பொருள் கொண்டு ஏசுவர்; நமது சிந்தனை அத்தகைய 'சிட்டுக் குருவி' மீது செல்லக் கூடாது" என தம்பிக்கு அறிவுரை கூறுவார். "கதையில் வரும் சிட்டுக் குருவி போல அரசியலிலும் அதே போக்கில் பலர் இருக்கிறார்கள்" என்றும் இடித்துரைப்பார் அந்தக் குருவிக் கதையில் அண்ணா!

அண்ணன் 1956இல் எழுதிக் காட்டிய "மன்னனும் குருவியும்" என்ற அந்தக் கதை எல்லாக் காலத்திற்கும் பொருந்தும். குறும்புத்தனம் கொண்டோர், குணக்கேடர் இன்றைக்கும் இருப்பதால் - அவர்களுக்கும் பொருந்தும். உவமை நயத்தைப் புரிந்து கொள்ளும் திறன் இருப்பின் யாருக்கு எப்படிப் பொருந்தும் என்பதும் புரியும்.

இதனைத் தெளிவாக அறிந்து கொண்டுள்ள என் உடன்பிறப்பே, திருச்சி மாநாட்டுக்குப் பயணப்பட்டுக் கொண்டிருக்கும் உனக்கு; வழக்கமாகச் சொல்வது தான் என்றாலும் - என் சொல்லை, நீயும் உன்னுடன் வரும் உடன்பிறப்புகளும் தட்ட மாட்டீர்கள் என்ற நம்பிக்கையுடனும், தட்டக் கூடாது என்ற வேண்டுகோளுடனும் உன் காதுகளில் போட்டுவைக்கிறேன்.

எந்த வாகனத்தைத் தேர்ந்தெடுத்து அதில் வந்தாலும் மிகுந்த எச்சரிக்கையுடன் வர வேண்டும். தேவையற்ற வேகமோ, அவசரமோ, பரபரப்போ பயணத்தின் போது கூடாது. நீ வந்து திரும்பி ஊர் போய்ச் சேருகிற வரையில் என் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருப்பேன். சிறு தொல்லையுமின்றி வீடு போய்ச் சேர்ந்தாய் எனும் செய்தியே எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி வழங்கும், ஆறுதல் தரும்.

வழியில் ஆங்காங்கு ஓய்வெடுத்துக் கொண்டு பயணம் செய்க! வாகனங்களின் ஓட்டுநர்களும் பொறுப்புடன் செயல்பட வேண்டுகிறேன்!

மாநாட்டில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மிக மிக முக்கியம்! அவை நம் உயிரை விட மேலாகக் காப்பாற்றப்பட வேண்டியவை என்பதை மறந்திடக் கூடாது!

திராவிட இயக்கத்தைப் புதுப்பித்து வலுக் கூட்டி உறுதியுடன் நடத்திச் செல்லத்தானே; திருச்சியிலே கூடுகிறோம்! தீரர் கோட்டமாயிற்றே திருச்சி!

எழுச்சி! எழுச்சி! எங்கணும் எழுச்சி! இதுவே இன்றைய திருச்சி! நாளை காணுவோம்; தமிழகத்தின் மலர்ச்சி!

அன்புள்ள,

மு.க.

26-02-2006

3206. மூட்டை மூட்டையாக ஊழல்கள், முறைகேடுகள்!

உடன்பிறப்பே,

மூட்டைப் பூச்சிகள் இருக்கின்றனவே? அவற்றில் ஒன்றை நமது வீட்டு நாற்காலியிலோ - பலகைகளின் இடுக்கிலோ கண்டு விட்டால், தேடத் தேட ஊர்ந்து வந்து கொண்டே இருக்கும்.

எனக்கு ஏற்பட்ட ஒரு அனுபவத்தைச் சொல்லுகிறேன்! 1965ஆம் ஆண்டு, மொழிப் புரட்சியின் போது அந்தப் போராட்டத்தைத் தூண்டி விட்டவர்களில் எனக்கும் பங்கு உண்டு எனக் குற்றம் சுமத்தி, சென்னையில் கைது செய்து, தனிமைச் சிறையில் அடைக்க போலீஸ் லாரியில் பாளையங்கோட்டைக்குக் கொண்டு போனார்கள். போகும் வழியில் மதுரையைத் தாண்டும்போது, எனக்குக் கடுமையான நெஞ்சுவலி ஏற்படவே, இராணுவ முகாமில் தங்க வைத்து அவசர சிகிச்சைகள் செய்து, டாக்டர் ஆலோசனைப்படி, பயணத்தை தொடராமல், மதுரைச் சிறைச்சாலையில் என்னை அன்றிரவு ஓய்வு கொள்ள அடைத்து வைத்தார்கள்.

என்னைப் பூட்டி வைத்த அந்த சிறைக் கொட்டடியில், நான் படுத்த சிறிது நேரத்துக்கெல்லாம், என் மீது ஒன்றிரண்டு மூட்டைப்பூச்சிகள் தாக்கத் தொடங்கின. திடீரென எழுந்து என் ஆடையை உதறிப் பார்த்தால் அந்த மூட்டைகள் ஒன்றா இரண்டா? ஒன்றன் பின் ஒன்றாக எங்கிருந்துதான் வந்தனவோ! தானியங்களை வாரி இறைத்தது போல என் வேட்டியில் - சட்டையில் - ஏன், ஓரிடம் பாக்கியின்றி உடல் முழுதும் மூட்டைப் பூச்சிகள்! கண் கலங்கிக் கதறிக் கூச்சலிட்ட பிறகு, சாவதானமாக "சிறை வார்டன்" வந்து, ஒன்றோடொன்று தொத்திக் கொண்டு மூட்டைகள் வருவதைப் பார்த்து விட்டு, பிறகு அவர் சிறை அதிகாரியை அழைத்து வந்து காட்ட, அந்த அதிகாரியும் அதிர்ச்சி அடைந்து என்னை வேறு கொட்டடிக்கு மாற்றினார்.

அன்றிரவு அந்த மூட்டைகள் ஒன்று போக ஒன்று அடுக்கடுக்காக வந்தது போலவே - ஜெயலலிதா மீதான ஊழல் மூட்டைகளும், முறைகேடு முடிச்சுக்களும் - வரிசை வரிசையாக வந்து கொண்டிருக்கின்றன.

பழைய ஊழல்கள் - வழக்குகள் - தீர்ப்புகள் - விடுதலையானாலுங்கூட தீர்ப்பு வாசகங்களில் தீட்டிக் காட்டப்பட்ட "ஜெயா'வின் உண்மைச் சித்திரங்கள் - ஏற்கனவே ஊரறிந்த கதைகள்! இதோ! இப்போது ஐந்தாண்டு ஆட்சியை முடித்து விட்டு அம்மையார் விடைபெறக்கூடும் எனும் கால கட்டத்திலே கூட, மதுரைச் சிறையிலே மளமள வென்று என் சிறைக் கொட்டடியில் மொய்த்த மூட்டைகளைப் போல முறைகேடுகளும், ஊழல்களும் உருளுகின்றன - ஒன்றாய்த் திரளுகின்றன!

டான்சி நில விவகாரத்தில் கையெழுத்துப் போட்டு விட்டு - அது தன் கையெழுத்தில்லை என்று சாதித்து விட்டு - நீதிமன்றக் கண்டனத்துக்கு ஆளாகி - வாங்கிய அரசு நிலத்தை அரசுக்கே திருப்பிக் கொடு என்ற தீர்ப்புக்குத் தலை வணங்கி - திருப்பிக் கொடுத்த கதைபோல - இப்போதும் ஆட்சிக் காலம் ஐந்தாண்டு நிறைவுறும் கட்டத்திலும் - அதே போன்ற மூட்டைகள்! முறைகேடுகள்! ஒன்றையொன்று முந்துகின்ற விந்தையைப் பார்க்கலாம்!

சிறுசேரியில், சிப்காட் நிலம் 100 ஏக்கரை, சிங்கப்பூர் தனியார் கம்பெனிக்கு தாரை வார்த்த முறைகேட்டினை ஏற்கனவே வெளியிட்டுள்ளேன். அதற்கு ஜெயலலிதா அரசாங்கம் பதில் சொல்லவில்லை. தற்போது, அந்த ஊழலில் இருந்து தப்பிக்க முடியாது என்பதற்காகவும், ஒருவேளை ஆட்சி மாறுமேயானால், இதன் மீது கடுமையான நடவடிக்கை வரக்கூடும் என்பதாலும் என்ன செய்திருக்கிறார்கள் தெரியுமா?

15-2-2006 அன்று, நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் சிங்கப்பூர் கம்பெனிக்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டதை ரத்து செய்திருக்கிறார்கள்.

அதனை எதிர்த்து அந்த நிறுவனம், நீதிமன்றம் செல்வதாக தெரிவித்ததின் பேரில்,

அந்தக் கம்பெனியிடமிருந்து கொல்லை வழியில் பெறப்பட்ட 125 கோடி ரூபாயைத் திருப்பிக் கொடுத்து விடுவதாக ஒப்புக் கொண்டுள்ளார்களாம்.

★ பழைய மாமல்லபுரம் சாலையில் உள்ள சோழிங்கநல்லூரில், வீட்டு வசதி வளாகம் ஒன்றினை உருவாக்கிட நில எடுப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த முயற்சிகள் நடை பெற்றுக் கொண்டிருக்கும்போதே, சாலையை ஒட்டியுள்ள சுமார் 400 ஏக்கர் நிலத்தை ஸ்பிக் நிறுவனமும், அசின்டாஸ் என்ற நிறுவனமும் குறைந்த விலைக்கு வாங்கியிருக்கிறார்கள். அந்த இரு நிறுவனங்களும் வாங்கிய நிலத்தை, நில எடுப்பு நடவடிக்கைகளிலிருந்து விலக்கு அளித்துக் கைவிடுவதற்கான ஏற்பாடுகள் அவசரம் அவசரமாக தற்போது நடைபெற்று வருகின்றன. ஏற்கனவே நில எடுப்பு நடவடிக்கையிலிருந்து தங்கள் நிலங்களை விட்டு விட வேண்டுமென்று பலரிடமிருந்து கோரிக்கைகள் வந்த போது, வீட்டு வசதி வளாகம் உருவாக்கும் திட்டம் சிதைந்து போகும் என்பதால், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், அந்தக் கோரிக்கைகளை தள்ளுபடி செய்து விட்டது. ஆனால், இந்த இரண்டு நிறுவனங்களின் கோரிக்கைகளை மட்டும் ஏற்று, அந்த இடத்திற்கு விதி விலக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று அரசின் மேலிடம் விரும்புகிற காரணத்தால், அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, கோப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்தத் துறையின் மேல் அதிகாரியான ஐ.ஏ.எஸ்., அதிகாரி கோப்பிலே கையெழுத்திட மறுத்து விடுமுறையிலே சென்று விட்டார்.

★ 25-2-2006 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும், தனியாருக்கு இதுபோலவே நிலங் களைச் சலுகைகளுடன் அளிப்பதற்கான முடிவுகள் மேற்கொள்ளப்பட்டதாகச் செய்தி வந்துள்ளது. அவ்வாறு பயன்பெற்றவர்களில் ஒருவர்தான் தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்தி என்றும் கூறப்பட் டுள்ளது. இவரைப் போலவே மேலும் சில தொழிலதிபர்களும் பயன் அடைந்துள்ளார்கள்.

★ மற்றொரு தொழில் வளாகத்தில் 80 ஏக்கர் நிலத்தை நிர்ணயிக்கப்பட்ட விலையைவிட பல மடங்கு குறைத்து, விதிமுறைகளைப் பற்றியோ, சந்தை விலையைப் பற்றியோ கவலைப்படாமல், அடிமாட்டு விலைக்கு வட நாட்டு தொழிலதிபர்

ஒருவருக்குத் தாரை வார்ப்பதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன.

இதற்கிடையே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் நிர்வாக இயக்குநர் திரு. அஷோக் டோங்ரே, ஐ.ஏ.எஸ்., இந்த ஊழல்களுக்கு உடந்தையாக இருப்பதற்கு அஞ்சி நீண்ட விடுமுறையில் சென்றுள்ளார்.

25ஆம் தேதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டம் மொத்தமே பத்து நிமிடங்கள்தான் நடை பெற்றுள்ளது. அந்த பத்து நிமிடங்களிலும் ஊழல் நடத்துவதற்கான முடிவுகள் மட்டுமே அவசர அவசரமாக எடுக்கப்பட்டுள்ளன.

ஆட்சியிலிருந்து சென்று விடுவோம் என்று தெளிவாகப் புரிந்து கொண்டோ, என்னவோ, ஜெயலலிதா, தன்னால் முடிந்தவரை எவ்வளவு சேர்க்க முடியுமோ, அந்த அளவிற்கு சேர்த்துக் கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு, அதற்கான நடவடிக்கைகளில் இறங்கியிருப்பது நன்றாகவே தெரிகிறது. ஆனாலும், அந்த ஊழலுக்கு ஒத்துழைக்க சில ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அஞ்சி ஒதுங்கிக் கொள்ள முனைகிறார்கள்.

ஆட்சி மாறுமேயானால், இப்போது நடைபெறுகின்ற ஊழல்களுக்கு ஒத்துழைப்பவர்கள் மீது கண்டிப்பான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதால், அவர்கள், இப்போதே கவனமாக இருந்து கொள்கிறார்கள் போலும்!

★ 25ஆம் தேதி அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவு வருமாறு :-

தகவல் தொழில் நுட்பத் துறையைச் சார்ந்த எல்காட் நிறுவனத்திற்குச் சோழிங்கநல்லூரில் 393 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த நிலத்தை 'கிட்பிராஜக்ட்' என்ற பெயரால், தகவல் தொழில் நுட்ப நிறுவனமும், குடியிருப்பும் கட்டிக் கொள்ளத் தனியாருக்கு வழங்க இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

ஏற்கனவே, அந்த நிலத்தை ஒதுக்கித் தரும்படி கேட்டு, 59 விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன.

ஆனால், அந்த விண்ணப்பங்கள் எல்லாம் பரிசீலனைக்கே எடுத்துக் கொள்ளப்படவில்லை.

இறுதியாக 3 விண்ணப்பங்கள் வந்துள்ளன. அவைகளே பேரம் படிந்த விண்ணப்பங்கள்.

அந்த மூன்று விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவர்களுக்கே நிலம் வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

★★

அதன்படி, விப்ரோ நிறுவனத்துக்கு 80 ஏக்கரும், சத்யம் நிறுவனத்துக்கு 50 ஏக்கரும், எச்.சி.எல். நிறுவனத்துக்கு 50 ஏக்கரும் வழங்கப்பட அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில், அரசின் வழிகாட்டுதல் குழு மதிப்பீட்டின்படி, ஏக்கர் ஒன்று ஒன்றரைக் கோடி ரூபாய்க்கு விலை போகும்.

ஆனால், இந்த மூன்று நிறுவனங்களுக்கும், ஏக்கர் ஒன்று 45 இலட்சம் ரூபாய் என்ற விலையில் நிலங்களை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

சிறுசேரி நில ஊழலில் நடைபெற்றது போலவே, இந்த நிலப் பகுதியில் சாலை வசதிக்காக என்று கூறி 60 ஏக்கர் நிலத்தை இலவசமாக வழங்கிடவும் அரசு முன் வந்துள்ளது.

குடிநீர் போன்ற கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொள்ள என்று கூறி, அதற்காகவும் 13 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தச் செய்தி அரசு ஆதரவு ஏடான "தின மலரி"லேயே இடம் பெற்றுள்ளது.

இத்தகைய தவறான முடிவுக்கு ஒத்துழைப்பு தர மறுத்து, வீட்டு வசதி வாரிய நிர்வாக இயக்குநரான, ஐ.ஏ.எஸ். அதிகாரி விடுமுறைக் கடிதம் அனுப்பி விட்டு சென்று விட்ட காரணத்தால், திரு. மாலிக் பெரோஸ் கான், ஐ.ஏ.எஸ்., என்ற அதிகாரியை தற்போது இந்தப் பதவியிலே நியமனம் செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

★ இந்த ஆட்சியின் மற்றொரு ஊழல் வருமாறு:-

தமிழக அரசு, அண்மையில் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு, மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்குத் தடையின்மை சான்றிதழ் வழங்கியுள்ள செய்தியும் கிடைத்துள்ளது. திராவிட முன்னேற்றக்

கழக ஆட்சிக் காலத்தில், தனியார் யாருக்கும் மருத்துவக் கல்லூரி தொடங்க அனுமதிக்கக் கூடாது என்ற மாபெரும் போராட்டம் மாணவர்கள் சார்பில் தமிழகம் முழுவதும் நடத்தப்பட்டதும், அப்போது தமிழக அரசின் சார்பில், தனியார் யாருக்கும் மருத்துவக் கல்லூரி தொடங்கிட அனுமதி வழங்கப்பட மாட்டாது என்று உறுதியளிக்கப்பட்டதும் வரலாற்றுச் செய்திகளாகும். இதற்கு முன்பு தனியார் மருத்துவக் கல்லூரி தொடங்க இரண்டு பேர் முயற்சி செய்து, கிடைக்காத காரணத்தால் அவர்கள் நீதிமன்றம் சென்று முறையிட்டு, அந்த அனுமதியைப் பெற்றார்கள். அவைகள் முறையே மீனாட்சி மருத்துவக் கல்லூரி, பாலாஜி மருத்துவக் கல்லூரி.

ஆனால், எஸ்.ஆர்.எம். மருத்துவக் கல்லூரிக்குப் புதிதாக அ.தி.மு.க. ஆட்சியில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான கோப்பு முதல் அமைச்சருக்குச் சென்றது. ஆனால், அந்தக் கோப்பில் அவர், எச்சரிக்கையாகக் கையெழுத்திடாமல், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருக்குக் கோப்பினை அனுப்பி அவரை கையெழுத்திடச் செய்து, துறையின் செயலாளர் அதற்கான ஆணையைப் பிறப்பித்து விட்டார். தலைமைச் செயலக விதி முறைகளுக்கு இது முரணானது. ஏனென்றால், இது போன்ற அனுமதி அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டு அளிக்கப்பட வேண்டும். தனியாருக்கு மருத்துவக் கல்லூரி கொடுப்பதில்லை என்ற அரசின் பல ஆண்டுகால முடிவிற்கு எதிராக, மாணவர்களின் விருப்பத்திற்கு மாறாக, இந்த ஒரு நிறுவனத்திற்கு மட்டும் அனுமதி வழங்கியிருக்கக் காரணம் என்ன?

★ இந்த அரசின் மற்றொரு முறைகேடு வருமாறு :-

காவல்துறையைச் சார்ந்த சில முக்கிய அதிகாரிகள் ஓய்வு பெற்ற பிறகும், அவர்களுக்குப் பதவி நீடிப்பு வழங்கி முக்கிய பொறுப்புகளில் பணியாற்ற அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

உதாரணமாக, 31-3-2004 அன்று ஓய்வு பெற்ற ஏ. கந்தசாமி எஸ்.பி., க்யூ பிராஞ்ச், புலனாய்வுத் துறையாகவும், 31-10-2004 அன்று ஓய்வு பெற்ற திரு. எஸ். ஜெயச்சந்திரன் விருதுநகர் மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளராகவும், திரு. கிருஷ்ணப் பிள்ளை என்பவர் நாமக்கல் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளராகவும், திரு. சக்திவேல் என்பவர் மதுவிலக்குத் துறைக் கண்காணிப்பாளராகவும் பணியாற்றி வருகிறார்கள்.

ஆளுங்கட்சிக்கு ஆதரவாக இருப்பவர்களுக்குக் காட்டுகின்ற சலுகைதான் இந்தப் பதவி நீடிப்பாகும். இந்த பதவி நீடிப்புகளை இந்தியத் தேர்தல் கமிஷன் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்.

அ.தி.மு.க. ஆட்சியில், மற்றொரு முறைகேடும் நடைபெற்று வருகிறது. அதாவது, ஆளுங்கட்சிக்கு ஆதரவாக எந்தெந்த அதிகாரிகள் இருக்கிறார்களோ அவர்களுக்கு மற்றொரு பதவியும், பொறுப்பு அதிகாரிகள் (Additional charge) என்ற பெயரால் வழங்கப்படுகிறது. அதற்கு உதாரணம் கூற வேண்டுமேயானால், ஜெயந்தி, ஐ.ஏ.எஸ., சீப் விஜிலன்ஸ் கமிஷனராகவும், எம்.எம்.டி.ஏ.வின் வைஸ்-சேர்பர்சனாகவும் பணியாற்றுகிறார். சுர்ஜித் சவுத்ரி என்ற அதிகாரி, வனத்துறை மற்றும் சுற்றுச் சூழல் துறைச் செயலாளராகவும், சுற்றுச்சூழல் வாரியத்தின் தலைவராகவும் பணியாற்றுகின்றார். டி. ராஜேந்திரன் என்ற அதிகாரி ,தொழில்துறைச் செயலாளர், தகவல் தொழில்நுட்பத்துறை செயலாளர், டிட்கோ தலைவர், எல்காட் தலைவர், சர்க்கரை கழகத் தலைவர் ஆகிய இத்தனை பதவிகளையும் அவர் ஒருவரே அனுபவித்து வருகிறார். சுப்ரியா சாகு என்ற அதிகாரி, ஆதி திராவிட நலத்துறை இயக்குனர் ஆக இருந்து கொண்டே, மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் செயலாளராகவும் பணியாற்றுகிறார். பி. செல்வம் என்ற அதிகாரி, மதுவிலக்கு மற்றும் ஆயத்துறைச் செயலாளராக பணியாற்றுவதோடு, டாஸ்மாக் நிறுவனத் தலைவராகவும் பணியாற்றுகிறார். பி. சண்முகம் என்ற அதிகாரி, போக்கு வரத்துத் துறைச் செயலாளர் பணி ஆற்றுவதோடு, போக்கு வரத்துத்துறை ஆணையராகவும் பொறுப்பேற்றிருக்கிறார்.

எஸ். ராமசுந்தரம் என்ற அதிகாரி, டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தின் அதிகாரியாகவும் உள்ளார். அதே நேரத்தில் புகளூரில் உள்ள தமிழ்நாடு நியூஸ் பிரிண்ட் நிறுவனத்தின் சேர்மனாகவும் உள்ளார்.

டெல்லியிலும், புகளூரிலும் ஒரே நேரத்தில் எப்படி மாதக்கணக்கில் பணியாற்ற முடியும் என்பதை தலைமைச் செயலாளர்தான் கூற வேண்டும்.

இவ்வாறு இன்னும் எத்தனையோ அதிகாரிகள், ஒன்றுக்கு மேற்பட்ட பொறுப்புகளில் பணியாற்றி வருகிறார்கள். இதைப் போன்ற முக்கிய பதவிகளில் ஆளுங்கட்சி ஆதரவு காரணமாக,

பதவி நீடிப்பு பெற்று பணியாற்றுபவர்களைப் பற்றி, தேர்தல் ஆணையம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறதோ தெரிய வில்லை.

இந்த அரசின் இத்தகைய செயல்களையெல்லாம் மக்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென விரும்புகிற போது, எந்தப் பத்திரிகையிலாவது பட்டவர்த்தனமாகப் பார்க்க முடிகிறதா? முடியாது! அத்தகைய பத்திரிகைகள் ஒரு முடிவெடுத்துக் கொண்டுதான், அதாவது அம்மாவுக்குத் தேர்தல் நேரத்தில் சிறு துளி சீர்குலைவும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் அவ்வளவு அக்கறை அந்த ஏடுகளுக்கு!

அது மட்டுமா? முல்லைப் பெரியாறு அணை பற்றி தமிழகத்துக்குச் சாதகமாக உச்சநீதிமன்ற தீர்ப்பு வந்ததும் - அதே ஏடுகள், உச்சநீதிமன்ற வழக்கின் வரலாற்றுக்கே திரை போட்டு மூடி விட்டன - ஜெயலலிதா ஆட்சிதான் வழக்கு தொடர்ந்தது போல மக்கள் நினைத்துக் கொள்ளட்டும் என்று ஒரு மாய் மாலம்! அதனால்தான், எந்த ஆண்டு தொடரப்பட்ட வழக்கு என்றே பல ஏடுகள் குறிப்பிடவே இல்லை.

முல்லைப் பெரியாறு அணைக்காக வழக்கு தொடரப்பட்டது 1998ஆம் ஆண்டு நமது தி.மு.க. ஆட்சி காலத்தில்! கேரளாவில் சிலர் உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்து, அதைப் போலவே திரு. சுப்பிரமணிய சுவாமி அவர்களும் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து, அந்த வழக்குதான் உச்சநீதிமன்றத்திற்குச் சென்றது. தமிழக அரசுக்காக 98ஆம் ஆண்டு இந்த வழக்கில் ஆஜரானவர் புகழ் பெற்ற வழக்கறிஞர் திரு. பராசரன் அவர்களாகும். வழக்கு எண்கள் முறையே 1049 மற்றும் 1055. எந்த அரசாக இருப்பினும் வழக்குத் தொடுப்பது அதன் கடமை. ஆனால், இந்த வழக்கை தொடர்ந்தது தி.மு.க. அரசுதான் என்பதைச் சொல்ல, ஏனோ தயக்கம் சிலருக்கு!

அவ்வளவு பரந்த மனப்பான்மை!

பெருந்தன்மை!

மூட்டை மூட்டையாக முறைகேடுகள், ஊழல்களையே மறைத்திடும் மகானுபாவர்களாயிற்றே! அதனால்தான் முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையில் தமிழ் மக்கள் நலன் காத்திட, தி.மு.க அரசு உச்சநீதிமன்றம் வரை சென்றதைத் திறமையாக

மறைத்து விட்டார்கள். இந்த முல்லைப் பெரியாறு பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட வேண்டுமென்பதற்காகத் தி.மு. கழக ஆட்சியில் நான் முதலமைச்சராக இருந்த போது, நானும், பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த தம்பி துரைமுருகனும் திருவனந்தபுரம் சென்று அந்த மாநில முதலமைச்சருடனும், அமைச்சர்களுடனும் ஒரு நாள் முழுதும் பேச்சு வார்த்தை நடத்தியவர்கள்.

எப்படியோ, தமிழக விவசாயிகளில் ஒரு பகுதியினர் உவகையில் கூத்திடுகின்றனர்!

மூட்டைகள் ஒருபுறம் மொய்த்திடும்போது, தமிழக விவசாயிகளின் கேட்டை அகற்றும் தீர்ப்பு உச்ச நீதிமன்றத்தில் கிடைத்திருப்பது நமக்குப் பெரும் ஆறுதல்!

அன்புள்ள,

மு.க.

2-3-2006

3207. எப்போதும் வென்றானை எண்ணி இப்போதும் வெல்வோம்!

உடன்பிறப்பே,

திருச்சி மாநகரம் திராவிடப் பூங்கா எனக் காட்சி தருகிறது. வெள்ளம் போல் தமிழர் கூட்டம்! வீரங் கொள் கூட்டம்! உள்ளத்தால் ஒருவரே! உடலினால் பலராய்க் காண்பர்! என்றாரே புரட்சிக் கவிஞர் அந்தக் கவிதைக்கு வடிவம் காணுகிறேன் திருச்சியில், கண்கள் பனிக்கின்றன.

கலிங்கத்துப் பரணியில் "பார் சிறுத்தலிற் படை பெருத்ததோ! படை பெருத்தலிற் பார் சிறுத்ததோ!" என வியந்து பாடுவாரே செயங்கொண்டார்! அந்தப் பெரும் புலவர், முகில் வழி முகம் காட்டி, நமை நோக்கி முறுவல் பூக்கும் கவின்மிகு கம்பீரம் கண்டு, முறுக்கேறுகின்றன முதிர்ந்த வயதிலும் என் நாடி நரம்புகள் என்றால், தன்மானம் பெறுக தமிழா! என நமைத் தட்டிக் கொடுத்து, தலைநிமிர்ந்து நடக்க வைத்த தந்தை பெரியார் பெயரால் அமைந்த திடல்! காவிரியும், கொள்ளிடமும் கலந்து பெருகினாற் போன்றதன்றோ தலைகளே அலைகளாக - அலைகளே தலைகளாக அங்கெங்கெனாதபடி எங்கெங்கும் தமிழர் சேனை! திராவிடர் பட்டாளம்!

அதோ பட்டொளி வீசிப் பறக்கிறதே! இருள் கலந்த கலப்பினை எடுத்துக் காட்டி, ஒளி உதயம் ஆகின்ற செங்குருதிச் செவ்வானத்தை நாம் சிந்திய தியாக ரத்தத்தால் படைத்திடுவோம் என்ற உறுதி முழக்கும் இரு வண்ணக்கொடி! அது நடப்பட்டுள்ள மேடையைக் கண்டனையா?..... அடடா! தமிழைக் கருக்கிட வந்த தீயைத் தடுத்திட - அந்தத் தீயையே கவசமாக்கிக் கொண்டு களம் புகுந்து - சிங்கத் தமிழன் என செதுக்கப்பெற்ற கல் வெட்டுக்கு இவன் ஒருவனே உரியவன் என விளங்கிடும் தியாக உடன்பிறப்பு சின்னச்சாமியின் பெயரையன்றோ அந்த மேடை தாங்கி நிற்கிறது! அது என்னையும் அவன் தோளாயிருந்து தாங்கியன்றோ நமது இலட்சியக் கொடி உயர்ந்திட உதவ இருக்கிறது!

அண்ணா நகர் அழகு பார்த்தனையா? வீறு கொண்ட திருச்சித் தீரர்களும் - மாவட்டங்கள் பலவற்றின் தானைத் தளகர்த்தர்களும் - துணை நிற்க - நிர்மாணித்துள்ளோம் இந்த எழில் நகரை - எழுச்சி நகரையென்று - தம்பி நேரு வரவேற்புக் குழுத் தலைவராயிருந்து மற்றும் தம்பிகள் கோ.சி. மணி, ஆ. இராசா, வாசுகி முருகேசன், பெரியண்ணன் அரசு, அன்பில் பெரியசாமி ஆகியோர் செயலாளர்களாக இருந்து அமைத்துள்ள அண்ணா நகரின் அற்புதமே அற்புதம்! அழகே அழகு!

மாநாடு நடக்கப் போகுமிடம் இதுதான் என்று நேரு காட்டிய போது - முள்ளும், கல்லும், செடியும், கொடியும், புற்றும், புதரும் நிறைந்த நிலப் பகுதியாகத் தோன்றிய பாழ்வெளிப் பரப்பினை, பெரியார் திடலாகவும் - ஆங்கே அண்ணா நகராகவும் வண்ணமிகு ஓவியம் போல் ஆக்கிக் காட்டும் - வித்தை கற்றுள்ள என் உடன்பிறப்புகளன்றோ, அகண்டு நீண்டிருக்கும் அந்தப் பந்தலின் ஒவ்வொரு அங்கணத்திலும் - ஊன்றப்பட்டுள்ள ஒவ்வொரு பந்தற்காலிலும் - அணிவகுத்து நிற்பதுபோல் அடலேறுக் கூட்டமெனக் களிப்பிலாடிக் கை கூப்பி வரவேற்கிறார்கள்! பகலிரவு பாராது ஓய்வின்றி உழைத்துப் பாடுபட்ட அவர்தம் பாதம் பணிவதுதானே என் பொறுப்பு - ஆம்! அடியேன் தலைமைக்கு அது தானே சிறப்பு!

அதோ பார்த்தனையா! நமது பேராசிரியப் பெருமகனார் - உடுக்கையிழந்தவன் கை போலாங்கே இடுக்கண் களையும் நட்புக்கு இலக்கணமாம் - நல்லறிவாளர் அன்பழகனார் - அண்ணாவின் மதிப்புக்குரிய மாண்பினர் - என்னுயிரனையார் - திறந்து வைத்திட இருக்கும் அண்ணா நகர், திருச்சி மாநாடு - ஆம்! தி.மு.க. 9வது மாநில மாநாடு. சூதுவாது அறியாத சாதுவெனத் திகழ்ந்து சாதனைகள் இயற்றிய சாதிக் பாட்சாவின் பெயரால் பந்தலின் முதல் முகப்பு.

அந்த முகப்பினையொட்டித்தான் - மூடக் கொள்கைகளை முளையிலேயே கிள்ளி எறிய முற்பட்ட நமது மூதாதையர் உருவப் படங்கள் கொண்ட சுயமரியாதைச் சுடர்களின் மாடம் - அதனைத் திறந்து வைப்பவர் இளஞ்சுடராக இருந்தபோதே சுயமரியாதை ஒளி பரப்பிய பகுத்தறிவு இயக்கத்தின் பத்தரை மாற்றுத் தங்கமாம் - என் ஆருயிர் இளவல் - மானமிகு வீரமணியார் - சுயமரியாதை இயக்கம் எண்பதாவது ஆண்டினைக் கடக்கிறது என்பதற்கு

அடையாளமாக நாஞ்சிலார் பெயரால் அந்த எழில் தாங்கிய நன்மாடம்! எண்பதடி உயரத்தில் எழுந்துள்ளது!

ஊர்கள் பல சுற்றி விட்டு ஓய்வெடுக்க வந்த போது, "உறங்குங்கள் அப்பா! விடிவதற்குள் வந்து உங்களை எழுப்புகிறேன் - பயணத்தைத் தொடரலாம்" என்று சொல்லிச் சென்ற என் செல்லத் தம்பி அன்பில் பொய்யாமொழி - தான் மட்டும் தனியாகப் பயணம் சென்றானே! அந்தப் புலிக்குட்டியின் பெயரால் - நீண்ட நெடிய பந்தல்.

அங்கேதான் அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த நம் இனிய தலைவர்கள் கொள்கைச் சங்கொலிக்க இருக்கிறார்கள் - ஆம்! அங்கேதான் ஓடி வந்து ஒரே குரலில் முழங்கி, கதவைத் தட்டி ஏற்றிடுக என்னை யென்று ஏங்கிய இந்தியப் பிரதமர் பதவியை உதறியெறிந்த தியாகப் பிழம்பாம் திருமதி சோனியா காந்தி அவர்கள், இந்தத் தேசம் வாழ்ந்திட அறிவார்ந்த உரையாற்றிட இருக்கிறார்கள்.

இளமையின் எழுச்சிதானே, முதுமையிலும் புரட்சிக்கான வீரிய வித்து! என்பதை நிலைநாட்டும் வண்ணம், இருபத்தி ஐந்து ஆண்டுக்கு முன்பே மதுரையில் துளிர்த்த இளைஞர் அணியின் வெள்ளி விழா மாநாடு, இதே பந்தலில் - முதல் நாளே தம்பி மு.க. ஸ்டாலின் தலைமையில் நடக்கிறது - கழக இளைஞர் பாசறையின் கட்டுப்பாடும் - களமஞ்சாத் துணிவும் - கடமை உணர்வும்தானே, நமது கழக உடன்பிறப்புகள் அனைவருக்கும் உத்வேகம் தரும் மாமருந்தாக விளங்குகிறது - அடுத்தாற்போல மகளிர் அணி - அதற்கும் அடுத்தடுத்தே மற்ற அணிகள் - அனைத்தும் மாசற்ற அணிகள் - எல்லாமே எனக்கு மாமணிகள்தான் - மாநாடு நடத்துவதால் இளைஞர் அணிக்கு இப்போது தனிச் சிறப்பு! எப்போதுமே உழைக்கத் தயங்குவோர் மீதே எனக்குச் சிறு கசப்பு! அதுவும் மருந்துக்குப் பயன்படும் வேம்பின் கசப்பு!

இயக்கம் தழைத்திட உழைத்த எத்தனை எத்தனை இலட்சிய தீபங்கள் - இன்றைக்கும் நன்றிக்குரிய அந்த நல்லோர் பெயரால் - மேடை, நுழைவு வாயில், தோரண வாயில்கள், க.சொ. கணேசன் - கழக வரலாற்று மேதை கண்மணி முரசொலி மாறன் - அனுபவச் சுரங்கம் அழக முத்து - ஆற்றல் மிகுந்த ஜே.எஸ். இராசு இன்னும் இன்னும் எண்ணற்ற கழகக் கருவூலங்களின் நினைவூட்டும் சின்னங்களின் சிறப்பை நேரில் கண்டு கண்டு, நானும், நாடும்

பூரிப்பில் திளைத்திடும் பொன்னாள் இன்று! ஆம்! நாடு மலர்ச்சி காண இருக்கிறது என்பதை அறிவிக்க முரசு கொட்டும் நன்னாள் இன்று!

முரசொலி மாறன் எழுதினாரே! 'மாநில சுயாட்சி!' அது தீர்மான வடிவெடுத்து முழக்கமாகப் பெருக்கெடுத்தது, இந்தத் திருச்சியில் நடந்த மாநில மாநாட்டில் தானே!

பேராசிரியரும், முரசொலி மாறனும் முன்மொழிந்து, வழிமொழிந்த வரலாற்றுத் தீர்மானம் - மாநில ஆட்சி மொழிகளையும் - முதலில் தமிழையும் மத்திய ஆட்சி மொழியாக்கிடுக என்ற தீர்மானம் இந்தத் திருச்சியில் நடந்த மாநாட்டில் தானே!

ஆட்சி மன்றத்துக்குச் செல்ல, தேர்தலில் நிற்பதற்கு மக்கள் அனுமதி வழங்கியதும், அண்ணா வழி காட்டியதும், 1956இல் நமது அன்பில் நடத்திய திருச்சி மாநில மாநாட்டில் தானே!

அந்தத் தேர்தல் இதோ வந்து விட்டது எனும் சேதி வந்துள்ள போதன்றோ, இப்போதும் திருச்சியில் கூடுகிறோம்!

இளைஞர்களுக்கு வெள்ளி விழா மாநாடு -
இனிய உடன்பிறப்புகளுக்குப் பொன் விழா மாநாடு -

"எப்போதும் வென்றான்" என்று நெல்லைச் சீமை, தூத்துக்குடி மாவட்டத்தில், எட்டயபுரம் தாண்டினால் ஓர் ஊர் இருக்கிறது தெரியுமா? அதனை நெஞ்சில் பதித்து, நாமும் "எப்போதும் வென்றான்" என்ற தகுதி மிகு தன்மான விருது பெற்றிடச் சூளுரைத்து சுடர் முகம் தூக்கிடுவோம் -

தமிழர் சுயமரியாதைக்கு என்றும் தலையிறக்கமில்லை! எனத் தடந்தோள் தட்டுவோம்!

வெற்றி முரசு கொட்டுவோம்!
வாழ்க பெரியார்!
வாழ்க அண்ணா!
வெல்க; நமது குறிக்கோள்!

அன்புள்ள,
மு.க.
3-3-2006

3208. என்றும் அழியாத 'மெய்க்கீர்த்தி'கள்!

உடன்பிறப்பே,

திராவிட முன்னேற்றக் கழகத்தின் திருச்சி மாநில மாநாடு, தென்திசைத் தீபமாக - திராவிடர் எழுச்சியின் முரசமாக - திக்கெட்டும் ஒளிவிட்டும், ஒலியெழுப்பியும் உன்னையும், என்னையும் உற்சாகப் பெரு வெள்ளத்தில் ஆழ்த்தியதுடன், உத்வேகத்தையும் பல மடங்கு உயர்த்தியுள்ளது என்பதை ஊமைகளாக்கப்பட்டவர்களால் உரைத்திட இயலவில்லையே தவிர, உனக்கும் எனக்கும் உதட்டுக்குப் பூட்டும், நாவுக்குத் தாழ்ப்பாளும் போடக்கூடியவர்கள் உலகில் யார் இருக்கிறார்கள்.

அடடா; இன்னும் என் கண்களை விட்டு அகலவில்லை - கருத்தை விட்டு நகரவில்லை - "அழைக்கின்றார், அழைக்கின்றார் அண்ணா! அருமை மிகு தமிழகத்தைக் காத்திடத்தான்" என்ற இசைமுரசு நாகூர் அனீபாவின் குரல் இடி முழக்கமாக இன்னமும் செவிப்பறைகள் அதிரக் கேட்டுக் கொண்டுதானிருக்கிறது.

மார்ச் 3 ஆம் நாள் காலையில் கழகப் பொதுக்குழு மாவட்டச் செயலாளர், திருச்சி தீரர், தம்பி நேருவின் மகத்தான முயற்சியினால், பல லட்ச ரூபாயில் வாங்கப்பட்ட மனையில், தற்காலிகமாக எழுப்பப் பெற்ற கழக மாளிகையில், எழுச்சியுடன் நடைபெற்று - மொழி, இனம், மக்கள் பிரச்சினைகளை உள்ளடக்கிய ஏற்றமிகு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு - மாநாட்டுக்குப் பரிந்துரைக்கப்பட்டபோது, பொதுக் குழு உறுப்பினர்கள் ஆற்றிய உரைகளில் தென்றலும் வீசியது - தீப்பிழம்பும் வெளிப்பட்டது. தீயைத் திறமையுடன் சமாளித்து, தேர்தல் சமையலுக்கு அடுப்பு மூட்டிட பயன்படுத்திக் கொண்டேன்.

மாலையில் மாமேதைகள் போற்றும் மேதை அறிஞர் அண்ணாவின் சிலைக்கு மாலையணி விக்க, இளைஞர் அணி வெள்ளி விழா மாநாட்டின் தலைவர் தம்பி மு.க.ஸ்டாலின் சென்றிருந்த அந்தச் சில நிமிட இடைவேளையில், இரத வண்டியில்

அமர்ந் திருந்த என்னைக் குடைந்தெடுத்த சோகத்தை உன்னிடம் சொன்னால்தான் எனக்கோர் சுமையும் குறையும் நெஞ்சில்!

அண்ணா சிலைக்கு மாலையணிவித்துவிட்டு நாங்கள் மாநாட்டுப் பந்தலை நோக்கிச் சென்றிட வேண்டும் - அண்ணா சிலையிருக்குமிடம் திருச்சி சிந்தாமணிப் பகுதி - நான் அங்கிருந்த அந்த நேரம் முழுவதும் என் மனத்தை ஆக்ரமித்துக் கொண்டிருந்தது யார் தெரியுமா?

அண்ணா எழுதிய புத்தகங்களை முதன்முதலாக மேல்நாட்டு முறையில் அழகிய ஓவிய முகப்புடன் வெளியிட்ட புத்தகப் பதிப்பாளர் - குறிப்பாகத் திராவிடர் இயக்கப் புத்தகப் பதிப்பாளர் 'திராவிடப் பண்ணை முத்துக்கிருஷ்ணன்' தான்! உயரம் குள்ளம் - உயர்ந்த உள்ளம் - உயிரைத்தான் வைத்திருந்தார் கழகத்தின்மீதும் - என் மீதும்! என் புத்தகங்களையும், இயக்க எழுத்தாளர் பலரின் புத்தகங்களையும் மக்களிடையே பரவிடச் செய்தவர். அவர் அண்ணா சிலைக்கு அருகில் உள்ள வீட்டில்தான் வாழ்ந்தார்.

பெரியார் பெயரும் - பேரறிஞர் அண்ணா பெயரும் - பிரியமான தம்பி அன்பில் பொய்யாமொழி பெயரும் - மற்றும் திராவிட இயக்கக் காவலர்கள் பெயர்களும் தாங்கியிருந்த மாநாட்டுப் பந்தலுக்கு வந்து சேர்ந்தோம்!

வழியிலே சிறு தூறலாக மழை - துரோகங்கள் கண்டே துவளாத நாம், தூறல் கண்டா துவண்டு விடுவோம்? தொடர்ந்து சென்றோம், பெரியார் வளாகம் பேரறிஞர் அண்ணா நகர் நோக்கி!

அங்குதான் ஆகாயமளாவ ஓங்கி உயர்ந்து நின்றது, கழக இரு வண்ணக்கொடி! கம்பம் - சிங்கத் தமிழன் சின்னசாமியின் பெயரால் அமைந்த கொடி மேடையைத் தொட்டு வணங்கிவிட்டு, பேராசிரியப் பெருமகனார் கையில் எடுத்துத் தந்த கயிறு கொண்டு, ஏற்றி வைத்தேன் மாநில மாநாட்டுத் தலைவர் என்ற முறையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடியை!

திருச்சியிலே இப்போது நான் பெற்ற மாநாட்டுத் தலைவர் என்ற பேறு, ஐம்பத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்பே, 1953ஆம் ஆண்டு - கோயில்பட்டியில் நடைபெற்ற நெல்லை மாநாட்டுக்கு அறிஞர் அண்ணா அவர்களால் எனக்கு அளிக்கப்பட்ட பெரும் பேறுதான்! ஆம்! எனக்கு வயது இருபத்தி ஒன்பதில் கிடைத்திட்ட

அரும் பேறு. அந்தக் கோயில் பட்டியிலும், தூத்துக்குடியிலும் தானே 1949ல் தி.மு.க. அமைப்புகளை நான் தொடங்கி வைத்திருந்தேன்.

எப்படி அமையவேண்டுமென்று கருதினேனோ, அப்படி அமைந்திருந்தது மாநாட்டு முகப்பையொட்டி உருவாக்கப்பட்டிருந்த சுயமரியாதைச் சுடரொளிகளின் மாடம் -

இந்த இயக்கத்தின் வேர்களாக -
அடிக்கற்களாக -
தொண்டர்களாக -
தூதுவர்களாக -
தளகர்த்தர்களாக -
வழிகாட்டிகளாக -
கொள்கைக் குன்றங்களாக -
இலட்சிய ஜீவரத்தினங்களாக -

விளங்கி - மறைந்தும் மறையாத மாணிக்கங்களின் திருவுருவப் படங்கள் நிறைந்திருந்த அந்த எழில் மாடத்தை, இலட்சிய மாடத்தைப் பொருத்தமான ஒருவர் திறந்து வைக்க வேண்டுமேயென்று விரும்பி, அந்த விருப்பத்தை ஆருயிர் இளவல் வீரமணி அவர்களைக் கொண்டு நிறைவேற்றிக் கொண்டோம் - சுயமரியாதை இயக்கத்துக்கு எண்பதாண்டு நிறைந்தது என்பதைத் தாய்க் கழகமாம் திராவிடர் கழகம்தான் நினைவூட்டியது - பாலூட்டி வளர்த்த தாய்க்கும் மேலாக, பகுத்தறிவூட்டி வளர்த்த தன்மான இயக்கத்தையும், தந்தை பெரியாரையும், என்றைக்கு மறந்தோம்? இன்றைக்கு மறந்துவிட!

இந்த மண்ணுக்கு "தமிழ்நாடு" என்று பெயர் -

இந்தி ஆதிக்கத்திற்கு இடமில்லை இங்கே -

சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படி செல்லும் -

இவையெல்லாம் அய்யா பெரியாரை நினைவூட்டும் அழிக்க முடியாத கல்வெட்டுகளன்றோ! அண்ணா எனும் சிற்பி செதுக்கியவையன்றோ!

என்றைக்கும் நின்று கொண்டிருக்கிறார்கள் அவர்கள், நம் நெஞ்சில் என்பதால்தானே - பெரியார் நினைவுச் சமத்துவபுரங்கள் - பெண்களுக்குச் சொத்துரிமை - அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் - உள்ளாட்சி மன்றங்களில் மகளிர்க்கும் உரிய இட ஒதுக்கீடு

- செம்மொழியாக தமிழ் - சேது சமுத்திரத் திட்டம் - சேலம் இரும்பாலைத் திட்டம் இன்னும் பல சிறப்பு சாதனைகள்!

ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிடினும் அய்யா, அண்ணா இலட்சியங்களை வென்றெடுப்பதில்தான் வேகம் காட்டுவோம் என்பதற்கு, அடையாளமாக அமைந்தது திருச்சி மாநாட்டில் கழக முன்னோடிகள் ஆற்றிய உரைகள் என்பதை நமது பகைவரும் ஏற்றுக் கொள்வர்.

மாநாட்டுக்குத் தலைமையேற்றிட என்னை வழி மொழிந்து உரை நிகழ்த்தினர், மாவட்டக் கழகங்களின் தளகர்த்தர்கள் - அவற்றில் நமது பொருளாளர் உரை மிக உருக்கமாக அமைந்தது - தலைவரை வழி மொழிந்த தம்பி சுப்ரீம் ஸ்டார் சரத்குமார் அவர்களின் உரையோ, என் சார்பாக சமுதாயக் கோரிக்கைகளுக்கு உறுதியளிக்கும் உரையாக அமைந்தது - உண்மையின் தன்மையும் அதில் ஒளிர்ந்தது!

பேராசிரியர் நிகழ்த்திய பேருரை - பெருக்கெடுத்தத் தமிழ் அருவி! - எதேச்சாதிகாரத்தைத் தூக்கி எறிந்திட இளைஞர்களின் தோளுக்கு வீரம் வழங்கிய உணர்ச்சி வெள்ளம்!

தியாகத் திருவிளக்காகத் திகழும் திருமதி சோனியா காந்தி அவர்கள், தமிழ்நாட்டில் இன்றுள்ள தவறான ஜெயலலிதா ஆட்சிக்கு விடைகொடுக்க வேண்டுமென்றதுடன்,

“ஒவ்வொரு தமிழனுக்கும், தமிழகத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு ஏழைக்கும், சமூகப் பாதுகாப்புள்ள, கௌரவ முள்ள, மரியாதையுள்ள வாழ்க்கையை நாங்கள் உருவாக்கித் தருவோம் என்கிற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்”

என்றுரைத்தபோது, லட்சோபலட்சம் பேர் கூடியிருந்த அந்த மாநாடு; மகா சமுத்திரம்போல் அலைகள் உயர்ந்து, ஆனால் சுனாமியாகாமல் - சுகந்த வாழ்த்துகளை எதிரொலித்த வண்ணமிருந்தது!

சுதந்திரம் பெற்ற இந்தியத் திருநாட்டில் முதன் முறையாக தமிழகத் தமிழனுக்கு என்று திருமதி சோனியா காந்தி அளித்த இந்த உறுதிமொழி,

திருச்சி தி.மு.க. மாநாட்டின் உச்சகட்டத் தன்மான முழக்கப் பேரலையாக உயர்ந்து பொங்கியது.

உடன்பிறப்பே! அன்று அங்கே அந்த உணர்ச்சிப் பிரவாகத்தில் சங்கமமான நீ, ஊர்களுக்குத் திரும்பியதும், உன் கடமையைச் செய்திடக் கிளம்பி விட்டாய் - நானுந்தான் - நான்கு பக்கமும் வேடர் சுற்றிட நடுவில் சிக்கிய மானாய்த் தவிக்கும் "தமிழர் நலன்" காக்கும் களத்தில், உன்னை நம்பி உற்ற தோழமைக் கூட்டணிக் கட்சிகளின் துணையுடன் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என அண்ணா தந்த அறப்போர்க் கருவிகள் தாங்கி ,ஜனநாயகக் கவசம் பூண்டு நிற்கிறேன்.

வென்று காட்டுவோம் தேர்தலில்!

வீழ்த்திக் காட்டுவோம் எதேச்சாதிகாரத்தை!

இந்த எழுச்சிமிகு சூளுரைதான் - திருச்சியில் நடந்த இளைஞர் அணி வெள்ளிவிழா மாநாடும்,

தி.மு.க. மாநில மாநாடும் இன்றைக்கும் என்றைக்கும் செதுக்கி வைத்துள்ள அழியாத 'மெய்க் கீர்த்தி'களாகும்.

முக்கிய குறிப்பு :- கருத்துக் கணிப்பு என்று கதையளந்து மக்களை ஏமாற்ற, குமுத விழியாள் ஏட்டுக்கு கோடி ரூபாய் குவித்து பொய்ப்புள்ளி விபரம் வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்துள்ளார்கள் ஜெயாவின் உளவுத்துறையினர் - முன்பு அந்த ஏடு சொன்ன கருத்தை இன்று ஏன் மாற்றிக் கொண்டது என்று கேட்டால் - நம்மிடம் மாட்டிக் கொண்டுவிடும் என்பதை மறவாதே!

ஜனநாயக யுத்தத்தில் இந்த ஆயுதத்தையும் வலிவிழந்து போகச் செய்யும் வழி நமக்குத் தெரியும்.

அன்புள்ள,

மு.க.

14-3-2006

3209. கருத்துக் கணிப்பா? - கடுப்புக் கணிப்பா?

உடன்பிறப்பே,

"ஜனநாயக முற்போக்குக் கூட்டணியில் உள்ள தலைவர்களும் மற்றும் உள்ள பிரதிநிதிகளும் இந்தக் கூட்டத் திற்கான அழைப்பையேற்று வந்துள்ளமைக்காக என்னுடைய நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு நாம் கூடியிருப்பது, கடந்த காலத்தில் 2004இல் நாடாளு மன்றத் தேர்தலுக்காக முடிவெடுத்த தைப் போல, தமிழ்நாடு சட்டப் பேரவைப் பொதுத் தேர்தலுக்கு நம்மைத் தயார் படுத்திக்கொள்ள எத்தகைய முடிவினை மேற்கொள்வது, அந்த முடிவின் படி எவ்வாறு செயல்படுவது என்பனவற்றை விவாதித்து தீர்மானிப்பதற்காகத்தான் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாம் இதுகாறும் இந்தக் கூட்டணியைத் தமிழகத்தில் தொடங்கியதிலிருந்து, இதுவரையில் கடைப்பிடித்து வருகின்ற பண்பாட்டின்படி நடத்திச் செல்வதற்கு, ஏற்ற முடிவுகளை மேற்கொள்வதற்கு இந்தக் கூட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன்.

சட்டமன்றப் பொதுத் தேர்தலுக்கானப் பணிகளில் கூட்டணியைப் பொறுத்த வரையில், தலையாய முக்கியப் பணியாகவும், முதல் பணியாகவும் இருப்பது, நம் முடைய கூட்டணியிலே உள்ள கட்சிகள் ஒவ்வொன்றும் எத்தனை இடங்களில் போட்டியிடுவது என்பது பற்றியதாகும்.

இப்போது நம்முடைய கூட்டணியைச் சிதைக்கும் முயற்சியில், ஜெயலலிதாவின் ஆட்சியும், அதிகாரிகளும், இந்த ஆட்சிக்குக் கட்டுப்பட்ட பத்திரிகைகளும், இந்த ஆட்சியினால் ஆதாயம் பெறுகின்ற தன்னலக்காரர்களும் முயன்று வருகிறார்கள். தவறான பிரச்சாரங்களைச் செய்வதின் மூலம், நம்முடைய ஒற்றுமைக்கு ஊனம் விளைவிக்கலாமா என்று முயற்சி செய்து பார்க்கிறார்கள். நாம் விழிப்போடு இருக்கின்ற காரணத்தால், அவர்களின் முயற்சிகள் பலிக்கவில்லை என்பதோடு, மக்கள் மத்தியில் அவர்கள் நடத்துகின்ற தவறான பிரச்சாரமும் எடுபடவில்லை. ஆனால் எறும்பு ஊர, கல்லும் தேயும்.

கடந்த சட்டமன்றத் தேர்தல் 2001ஆம் ஆண்டு நடந்தபோது, அ.தி.மு.க. சில முக்கிய கட்சிகளோடு கூட்டணி ஏற்பாடு செய்து கொண்டு போட்டியிட்டது. அப்போது அ.தி.மு.க. 140 இடங்களில் போட்டியிட்டு, 132 இடங்களில் வெற்றி பெற்றது. காங்கிரசும், த.மா.கா.வும் இணைந்து 46 இடங்களில் போட்டியிட்டு, 30 இடங்களில் வெற்றி பெற்றன. பாட்டாளி மக்கள் கட்சி, 27 இடங்களில் போட்டியிட்டு, 20 இடங்களில் வெற்றி பெற்றது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, 8 இடங்களில் போட்டியிட்டு, 6 இடங்களில் வெற்றி பெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, 8 இடங்களில் போட்டியிட்டு, 5 இடங்களில் வெற்றி பெற்றது. இந்திய யூனியன் முஸ்லிம் லீக், ஓர் இடத்தில் போட்டியிட்டது. வெற்றி பெறவில்லை. தேசிய லீக், ஓர் இடத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றது. ஜான் பாண்டியன் ஓர் இடத்தில் போட்டியிட்டு வெற்றி பெறவில்லை. பார்வார்டு பிளாக், ஓர் இடத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றது. ஓர் இடத்தில் சுயேச்சை வேட்பாளரை ஆதரித்து வெற்றி பெற்றனர்.

அப்போது அந்தக் கூட்டணியில், மறுமலர்ச்சி தி.மு.க. இல்லை என்பதும், இப்போது நம்முடைய கூட்டணியில், மறுமலர்ச்சி தி.மு.க. இருப்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

2001ஆம் ஆண்டில் அ.தி.மு.க., 140 இடங்களில்

போட்டியிட்டபோது, 132 இடங்களில்தான் வெற்றி பெற்றது என்பதையும், 8 இடங்களில் தோல்வியுற்றது என்பதையும் மனதிலே பதிய வைத்துக் கொண்டு, இந்தத் தேர்தலில் தி.மு.கழகம் எத்தனை இடங்களில் போட்டியிடுவது சரியாக இருக்கும் என்பதையும் தீர்மானிக்க வேண்டும்.

இந்த அடிப்படையில் ஒவ்வொரு கட்சியும் சிந்தித்தால், சென்ற முறை போட்டியிட்ட இடங்களைவிட மேலும் அதிக இடங்களில் போட்டியிட வாய்ப்பு உள்ளதா அல்லது அந்த இடங்களை விட ஓரளவு குறைந்த இடங்களில் போட்டியிட்டால்தான் மொத்த எண்ணிக்கை சரியாக வருமா என்பதையெல்லாம் யோசிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இதை மனதில் வைத்து கட்சித் தலைவர்கள் அவரவர்களுடைய கருத்துகளை கூறி, அந்த அடிப்படையிலே விவாதித்து, மதச்சார்பற்றதும், முற்போக்கானதுமான மக்கள் சக்தி இந்த மாநிலத்தில் வெற்றி பெற்று, இப்போ துள்ள சர்வாதிகார மக்கள் விரோத ஆட்சியை மாற்றி அமைத்திட, இந்தக் கூட்டணியில் இருக்கிற தி.மு.க. உள்ளிட்ட எல்லாக் கட்சிகளுமே ஓரளவு தியாக உணர்வுடன் விட்டுக் கொடுத்து, ஒத்துப்போகும் போக்கினைக் கடைப்பிடிக்கத் தயாராக இருப்பதுதான் தமிழக ஆட்சியாளரின் எதேச்சாதிகாரத்தை வீழ்த்தக் கூடியதாக அமையும் என்பதை மறந்து விடாமல், ஒரு நல்ல சுமுகமான முடிவு எடுப்பதற்கு துணை நிற்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்."

உடன்பிறப்பே,

இது ஒன்றும் இப்போது புதிதாக விடப்படுகிற வேண்டுகோள் அல்ல என்பதையும், 8-2-2006 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற நமது ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் கூட்டத்தில், நான் ஆற்றிய தொடக்கவுரைதான் இது என்பதையும் நீ நன்கு அறிவாய்.

அந்தக் கூட்டத்தில் எடுத்த முக்கியமான முடிவுகளில் ஒன்றுதான் கூட்டணியில் உள்ள ஒவ்வொரு கட்சியும், தங்கள்

வேட்பாளர் நிற்க விரும்பும் தொகுதிகளின் எண்ணிக்கையையும், தொகுதியின் பெயர்களையும் பட்டியலிட்டு முன்கூட்டியே தர வேண்டும் என்பதாகும். இதற்கிடையே தி.மு.க. மாநில மாநாடு திருச்சியில். கூட்டணியில் உள்ள கட்சிகளில் ஒரே ஒரு கட்சி மட்டும் 25 தொகுதிகள் வேண்டுமென்றும், அதனை திருச்சி மாநாட்டுக்கு முன்பே அறிவிக்காவிட்டால், அவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள முடியாதென்றும் - அவர்களின் வீடு தேடிச் சென்று அழைப்பு விடுத்துப் பேசிய நமது கழகப் பொருளாளர் ஆர்க்காட்டார் அவர்களிடம் கண்டிப்பாகச் சொல்லி அனுப்பி விட்டனர். அதற்கு மேலும் கூட. நான் எனது முயற்சியைக் கை விட்டு விடவில்லை. நேரிலும். தொலைபேசியிலும் தொடர்பு கொண்டு பேசினேன். பயனில்லை. கடைசி நிமிடத்தில்தான் திருச்சி மாநாட்டுக்கு அவர்கள் யாரும் வரப்போவதில்லை என்பதைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

அ.தி.மு.க.வுடன் அவர்கள் நடத்திய பேச்சு வார்த்தைகள் ஜனவரி மாதமே தொடங்கி விட்ட காரணத்தால், கூட்டணியின் அனைத்துக் கட்சிகள் சார்பில். ஜனவரி 18 அன்று மக்கள் விரோத ஜெயலலிதா அரசைக் கண்டிக்கும் கூட்டம் என்ற தலைப்பில் தமிழக மாவட்டத் தலைநகர்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சிகளில். அவர்களின் தலைவர் உட்பட அக்கட்சியைச் சார்ந்தவர்கள் கலந்து கொண்ட அக்கூட்டங்களில் அ.தி.மு.க. ஆட்சியின் மீது தும்பு தூசு படாமல் சர்வ ஜாக்கிரதையாகவே உரையாற்றினர். சென்னையில் என்னோடு ஒரு கூட்டத்தில் கலந்து கொண்ட ஒரே ஒரு தம்பி மட்டுமே, அக்கட்சியைச் சேர்ந்தவர்; அ.தி.மு.க. ஆட்சியையும் - ஜெயலலிதாவின் எதேச்சாதிகாரத் தையும் கடுமையாகச் சாடிப் பேசினார். எனவே இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பே, நம்முடன் உறவு நீடிப்பது போல காட்டிக் கொண்டு - உடைத்துக் கொண்டு போகும் திட்டத்துக்கு அம்மையாரின் ஆணைப்படி, திருச்சி தி.மு.க. மாநில மாநாட்டில் அதிர்ச்சி ஏற்படுத்தத் தயாராகிக் கொண்டிருந்தார்கள் என்பது இப்போதுதானே தெளிவாகப் புரிகிறது!

அவர்கள் "அதிர்ச்சி" எனக் கருதி ஆற்றிய அந்தச் செயல், திருச்சி மாநாட்டில் லட்சோப லட்சமெனத் திரண்டிருந்த தி.மு.க. உடன்பிறப்புகளாகிய உன் போன்றோரையோ - தமிழ்ப் பெருமக்களையோ திகைத்திடச் செய்திடவில்லை. அதுபோன்ற

ஒரு செய்தி வரக் கூடும் என்று, முன்கூட்டியே ஏடுகளில் வெளி வந்த தகவல்களாலும், அவர்களின் கட்சியைச் சார்ந்தவர்களின் பேச்சுகள், பேட்டிகளாலும் - எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாகி விட்டதால், எரிமலையும் பொங்கிடவில்லை! பூகம்பமும் வெடிக்கவில்லை! எதிர்பார்ப்பு "புஸ்வாணம்" போல் ஆகி விட்டதே என்று தான் "பூசுர ராணி" புலம்பிக் கொண்டிருப்பதாக நமக்கு நம்பகமான தகவல்!

அழுகிற பிள்ளைக்கு கிலுகிலுப்பை ஆட்டிக் காட்டுவது போல, உளவுத் துறையினர், அவர்களின் இழுத்த இழுப்புக்கு வரக் கூடிய ஒரு சில ஏடுகளை வளைத்துப் போட்டுக் கொண்டு, - கற்பனையாகக் கருத்துக் கணிப்புகளை வெளியிடச் செய்து - அதற்குக் "கறுப்பாக" எவ்வளவு வழங்கவும் தயாராகி - அந்தக் காரியத்தை முடித்து இன்னும் இரண்டொரு நாளில் "இதோ பாருங்கள் புதிய கருத்துக் கணிப்பு" - "அம்மாவுக்கே அமோக வெற்றி!" என்று முழங்கப் போகிறார்களாம். அந்தக் கணிப்பு வெளியிட காகிதச் சுருள் கையில் கொண்டு வந்தவர்களே நம் காதில் சொன்ன ரகசியம் இது.

வேடிக்கை என்னவென்றால், இவர்களேதான் சென்ற இரண்டு மாதங்களுக்கு முன்பு - தி.மு.கழகம்தான் - அதன் தலைமையில் உள்ள கூட்டணிதான் - எல்லா மாவட்டங்களிலும் அறுபது, எழுபது விழுக்காடுகள் வாக்கு பெற்று - அற்புதமான வெற்றியைப் பெறப்போகிறது என்று கருத்துக் கணிப்பு வெளியிட்டவர்கள்; என்ன மாயமோ, மந்திரமோ - இப்போது திடீரென்று அம்மாவின் ஆட்சியைத் தூக்கிப் பிடித்தால் ஆவலாதிகள் அடங்குமளவுக்குப் பெட்டிகள் வந்து குவியும் என்பதற்காக, இப்போது வேறு விதமான கணிப்பை வெளியிடுகிறார்கள்! அப்படிக் குவிந்துள்ளதாகவும் நமக்குத் தகவல்! ஒரு கட்சியின் "பொது ஸ்தாபனக் கமிட்டி" அங்கத்தினர்களுக்கே, ஆளுக்கு ஒரு லட்சம் அளிக்கப்பட்டுள்ளதென்றால், ஏ அப்பா! எத்தனை கோடி கோடி - இனி காஞ்சி சங்கரர் கருணை மிகு பரிந்துரைக்காக அவர் காலில் சரணடையத் தேவையில்லை - சகஸ்ரநாம அர்ச்சனை செய்வது போல, சகலமானவர்களுக்கும் அவர்களின் கட்சி முன்னோடிகளுக்கும் மூன்று வேளை அர்ச்சனை செய்யலாம் - அந்தத் தொகையைக் கொண்டு!

என்னதான் அரசு அதிகாரிகளைப் பயன்படுத்தித் தேர்தல் விதிகளை மீறிச் செயல்பட்டாலும் - அந்த அதிகாரிகள் சிலரும் அம்மா ஆட்சியைக் காப்பாற்றினால்தான் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியுமென, ஜனநாயக விரோதமாகச் செயல்பட்டாலும் - மண்டில போலீஸ் அதிகாரிகளுக்கு மறைமுகத் தகவல்கள் அனுப்பி, மக்களை ஏமாற்றும் வேலைகளையோ - விதவிதமான வெகுமதிகளையோ வழங்கினாலும் - இந்த அரசு, உளவுத் துறை மூலம் நான்கு தடவை எடுத்த கருத்துக் கணிப்பும் ஜெயலலிதாவுக்குச் சாதகமாக இல்லை என்ற உண்மையினால் - துயரமான வேளையில் ஓய்வெடுக்கும் அறைக்கு அவரைத் துரத்தி விட்டிருப்பதாகவும் தகவல்!

அதனால்தான், அவருக்கு ஆறுதல் அளிக்கும் தந்திரமாகவும் - அ.தி.மு.க. தொண்டர்களுக்கும் நம்பிக்கை ஏற்படுத்தும் சூழ்ச்சியாகவும் - ஜெயிக்கப் போவது ஜெயலலிதாவேதான் என்ற எண்ணத்தை மக்களிடையே உருவாக்கிடும் ஒரு திட்டமாகவும் - பொய்யான ஒரு புதிய கருத்துக் கணிப்பை இந்தப் பொதுத் தேர்தல் ஆயுதமாகப் பயன்படுத்திட ஆயத்தமாகி விட்டார்கள் - உடன்பிறப்பே, அந்த "கோயபல்ஸ்" பிரச்சாரம் வெகுவேகமாகப் பெரும் விரிவாக நடத்தப்பட இருக்கிறது - அந்த விஷப் பிரச்சாரத்தை - விஷமப் பிரச்சாரத்தை - முறியடிக்க வேண்டுமானால், அதைப்பற்றி அணுவளவும் கவலைப்படாமல், சஞ்சலம் சிறிதும் கொள்ளாமல் - வீரமிகு தோள்களை உயர்த்தி - வெற்றியொன்றே குறிக்கோள் எனும் நிலையில், தேர்தல் களத்தில் கூட்டணித் தோழர்களுடன் கூடிச் செயல்புரிந்திட வேண்டுகிறேன்.

இந்தத் தேர்தலுக்காக நான்கு முறை 'ஜெ' அரசின் உளவுத் துறை எடுத்த கருத்துக் கணிப்பு, அவர்களைப் பொறுத்தவரையில், "கடுப்புக் கணிப்பாகவே" ஆகியிருக்கிறது.

எனக்கு வந்துள்ள செய்தி, நமக்கு "களிப்பான கணிப்பு".

இந்த அரசுக்குச் சென்றுள்ளதாகக் கூறப்படும் கருத்துக் கணிப்பில், உளவுத் துறை முகப்புரையாகத் தொடங்கியிருப்பதைப் படித்துப் பார்த்தால், துல்லியமாக வெற்றி நமக்குத்தான் என்பது ஒரு பானைச் சோறுக்கு ஒரு சோறு பதம் போல் உனக்கும் ஊருக்கும் விளங்கும்!

இதோ, அந்த முன்னுரை :-

"As on to-day, there is not much of a change in the election scene in Tamil Nadu from my earlier report. The coming over of VAIKO to the AIADMK front has not made any substantial difference"

(இன்றுள்ள நிலவரப்படி, எனது முந்தைய அறிக்கையில் அனுப்பிய தேர்தல் விவரங்களில் அதிக அளவிற்கு வேறுபாடில்லை. வைகோ, அ.இ. அ.தி.மு.க.விற்கு வந்தது, இந்தக் கூட்டணியில் எந்தவிதமான முன் னேற்றத்தையும் ஏற்படுத்தவில்லை)

உடன்பிறப்பே, இதைப் பார்த்துவிட்டு, நீ அளவுக்கு மீறிய நம்பிக்கையுடன் அலட்சியமாக இருந்துவிடக் கூடாது - வெற்றி, உன் வியர்வையில் - உன் உழைப்பில்தான் இருக்கிறது.

அன்புள்ள,

மு.க.

16-3-2006

3210. மக்களுடன் நேர்காணல் எப்போது?

உடன்பிறப்பே,

எத்தனை குழுக்களாகப் பிரிந்து, ஒவ்வொரு குழுவும் ஓய்வின்றி, இரவு பகல் பாராது, உணவு உறக்கம் கூட இன்றித் தேர்தல் பணியாற்றுகின்ற காட்சியையும், மாட்சியையும், அண்ணா அறிவாலயத்தில் நீ அன்றாடம் காண்கிறாய்! களிப்படைகிறாய்!உன் முகத்தில் மலர்ச்சி என்றால் எனக்கும் மகிழ்ச்சி. அந்த மகிழ்ச்சியை உன்னிடம் காண இயலாதபோது, என் உள்ளத்தில் ஓர் தளர்ச்சி - தலைமைக் கழகத்தில் நிர்வாகப் பொறுப்பேற்றுள்ள என்னையும் சேர்த்து, இருக்கின்ற அனைவருமே எப்பொழுது உணவருந்துகிறோம் - ஓய்வு கொள்கிறோம் - உறங்குகிறோம் என்று வரையறை ஏதும் வகுத்துக் கொள்ளாமல், "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" என்ற வள்ளலார் கவிதையை நினைவூட்டும் வண்ணமும் - "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே" என்ற பாரதியார் பாடல் வரியை நினைவுபடுத்தும் வண்ணமும், என் உடன்பிறப்புகளாகிய உங்களை அண்ணா அறிவாலய வளாகத்தில் மாறி மாறி, பார்த்து - முறையே வாடுவது ஒருக்கணமும் - மகிழ்ந்து ஆடுவது ஒருக்கணமும் என்ற மன நிலையுடன் - இந்த இரண்டு உணர்வுகளையுமே வெளிக்காட்டிக் கொள்ளாமல், உன்னைக் காண்பது, உன்னுடன் பேசுவது, உன்னுடன் விவாதிப்பது என இவற்றை விடவோ அல்லது இவற்றுடன் ஒப்பு நோக்கிடவோ எதுவுமேயில்லையென்ற பெருமிதத்துடன்தான் தேர்தல் பணி, என்னைப் பொறுத்தவரையிலும், என்னுடன் இருப்பவர்களைப் பொறுத்தவரையிலும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கேட்பாளர்களை நேர்காணலில் சந்தித்து, விபரங்களறியவும், விளக்கங்கள் பெறவும் அமைக்கப்பட்டுள்ள குழுவினர், அண்ணா அறிவாலயத்தில் ஒரு புறம் செயலாற்றுகின்றனர்.

இன்னொரு குழுவினரோ, நம்முடன் தோழமையும், உடன்பாடும் கொண்டுள்ள கூட்டணிக் கட்சிகளுடன் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி, தொகுதிப் பங்கீடுகள் சுமுகமாக முடிவதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் பணிகள் அனைத்துமே முக்கால் பங்கு முடிவுற்று முழுமை பெறுவதற்கும் - தொகுதிகளின் பெயர்ப் பட்டியல் வெளியிடுவதற்குமான நேரமும் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

கட்சிகளுக்குள் உடன்பாட்டுக் கூட்டணி யொன்று அமைய வேண்டுமென்று ஒவ்வொரு கட்சியினரும் கருதிச் செயல்பட்டாராயினும் - நான் விரிவாக எடுத்துக்காட்டி நமது ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கூட்டத்தில் தேர்தல் பற்றியதான தொடக்கவுரையில் குறிப்பிட்டது போல, தி.மு.க. உள்ளிட்ட எல்லாக் கட்சிகளும், தியாக மனப்பான்மையுடன் ஓரளவு தாங்கள் போட்டியிடும் தொகுதிகளைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை நிறைவேற்ற, திராவிட முன்னேற்றக் கழகம் எவ்வாறு முன்வந்தது என்பதை, ஒவ்வொரு கட்சியும் பகிர்ந்து கொண்டுள்ள தொகுதிகளின் எண்ணிக்கையைப் பார்த்து உன் போன்றோர் புரிந்துகொள்வீர்கள் என்றே நம்புகிறேன்.

நேர்காணல், அறிவாலயத்தில் நடைபெற்ற போது; சில மாவட்டங்களில் தொகுதிகள் கேட்டு, அந்தத் தொகுதி கேட்டவர்களுக்குக் கிடைக்காமல் கூட்டணியில் உள்ள ஒரு கட்சிக்குக் கிடைக்கிறது என்கிறபோது, அந்த இழப்புக்கு ஆளானவர்கள் கண்கள் குளமாவதை என்னால் பார்க்க முடிந்தது.

நம்முடைய தோழமைக் கட்சிக்குத்தான் அத்தொகுதி போகிறது, அங்கு நாமே நிற்பதாகக் கருதிப் பாடுபட வேண்டுமென்றுரைத்து, நமது கழக நிர்வாகிகளை, நமது வேட்பாளர்களை சமாதானப்படுத்துவதில் வெற்றிபெற்று, கூட்டணி வெற்றிக்கு எல்லா உடன்பிறப்புகளும் ஒத்துழைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்ட போதெல்லாம் - நமது உடன்பிறப்புகளின் விழிகளில் நீர் துளிர்க்கக் கண்டுள்ளேன். அந்தக் கலக்கம் வேறொன்றுமில்லை - மணமான பெண்ணொருத்தி, மாமியார் வீட்டுக்குச் செல்லும் போது, பெற்றோரை விட்டுப் பிரிகிறோமேயென்று கண்ணீர் சிந்திட அதைத் துடைத்தவாறே அப்பா, அம்மா, அண்ணன், தம்பிகள், அவர்களும், துக்கம்

தொண்டையை அடைக்க விடைகொடுத்து அனுப்புவார்களே! அதைப் போன்றதுதான்!

மணமகனுடன் சென்ற மகள் எப்படி வாழ்கிறாள் என்று கண்டறிந்திட தாய், தந்தையர் தவறாது சென்று அறிந்து மகிழ்ந்து திரும்புவது போலவே, நானும் வருவேன் - காண்பேன் - வாழ்த்துவேன் - அவர்கள் அமோகமாக வாழ்வதற்கு அந்த ஊர் மக்களிடம் ஆதரவு திரட்டுவேன் - அதன் பின்னர் திரும்புவேன் - உடன்பிறப்பே! புரிகிறதா? தேர்தலை முன்னிட்டு நான் நடத்தத் திட்டமிட்டிருக்கும் பிரச்சாரச் சுற்றுப் பயணத்தைப் பற்றித்தான் இப்படிக் குறிப்பிடுகிறேன்.

காங்கிரஸ், மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு, இந்தியக் கம்யூனிஸ்டு, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய நமது கூட்டணிக் கட்சிகளுடனான தொகுதிப் பங்கீடுப் பேச்சுவார்த்தைகள் முடிவுற்று, அவை வெளியிடப்படுவதற்கான தயார் நிலையில் இருக்கின்றன. பாட்டாளி மக்கள் கட்சியுடனான தொகுதிகள் பங்கீட்டுப் பெயர்ப்பட்டியல், இன்னும் ஓரிரு தொகுதிகள் பற்றிய முடிவான பேச்சுவார்த்தையும், இன்றோ நாளையோ முழுமை பெற்று நிறைவடையும் கட்டத்தில், இவற்றோடு இணைத்து வெளியிடப்பட இருக்கிறது.

தோழமைக் கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தைக் குழு, நேர்காணல் குழு, தேர்தல் பணிக்குழு என்ற குழுக்கள் மட்டுமல்லாமல், தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்கான ஒரு குழுவும் அடிக்கடி கூடி, அதன் பணியைச் சிறப்பாகச் செய்து வருகிறது.

எல்லாமே இந்த வாரத்தில் நிறைவுற்று; உன் நெஞ்சினிக்கும் வண்ணமும் என் நெஞ்சம் குதித்தாடும் வண்ணமும் - நடக்க இருக்கும் நிகழ்ச்சிதான்,

இத்தேர்தலையொட்டி, இத்தனை நாட்கள் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடத்தப்பட்ட "நேர்காணல்" நிகழ்ச்சியைத் தொடர்ந்து,

நான் உன்னையும், நமது தமிழ்ப் பெருங்குடி மக்களையும் நேரில் காண இருக்கும் "நேர் காணல்" நிகழ்ச்சி, ஏப்ரல் முதல் வாரத்தில் தேதி, நேரம் இவற்றுடன் அறிவிக்கப்பட இருக்கிறது.

ஆம்! உடன்பிறப்பே, தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான "வேட்பாளர் நேர்காணல்" அண்ணா அறிவாலயத்தில் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது என நீயும், நானும் மகிழப் போகிறோம் - அதற்கடுத்து அமைய இருக்கும் தமிழ் மக்களுடன் "எனது நேர்காணல்" நிகழ்ச்சியும் வெற்றியைத் தீர்வாக நமக்கு வழங்கும் என்ற முழு நம்பிக்கையுடன் இருக்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

24-3-2006

3211. விடியல் காண - விலங்கொடிக்க - வீரர்காள்; எழுவீர்!

உடன்பிறப்பே,

நமது ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சி களுக்கிடையே, சட்டமன்றத் தேர்தலுக்கானத் தொகுதிகளைப் பகிர்ந்து கொள்ளும் பணி நிறைவுற்று - ஒவ்வொரு கட்சியின் தொகுதி விபரங்களும் அறிவிக்கப்பட்டு அப்பணியில் ஒரு மாத காலமாக முழு மூச்சாக ஈடுபட்ட கட்சிகளின் தலைவர்களும், முன்னோடிகளும், "அப்பாடா" என்று பெருமூச்சு விட்டுக் களைப்பைப் போக்கிக் கொண்டும் - பெரிய வேலை முடிந்தது என்று மகிழ்ச்சியுற்றும் - அடுத்த பணிகளுக்கான அடியெடுத்து வைக்கும் தருணத்தில், வழக்கம் போல் சில செய்திகளை, அவை கடுகளவுகூட இல்லாதிருந்தாலும் - அவற்றை மலையளவு ஆக்கி ஓரிரு பத்திரிகைகள் வெளியிட்டுத் தங்கள் மனக்கிலேசத்துக்கு மருந்து தேடிக் கொண்டிருக்கின்றன.

வேறொன்றுமில்லை! "பொதுவாகத் தேர்தலைச் சந்திக்கக் கட்சிகளின் கூட்டணி வேண்டும் - ஆனால் எங்கள் தொகுதியை மட்டும் விட்டுக் கொடுக்கக் கூடாது" என்று ஒரு சிலர் - "மீசைக்கும் ஆசை, கூழுக்கும் ஆசை" என்ற பழமொழிக்கொப்ப உணர்ச்சி வசப்படுவதை, அவர்களின் செயல்கள் வாயிலாகக் காட்டியிருக்கிறார்கள். அவர்களின் கழக ஆர்வத்தையோ, கொள்கைப் பற்றையோ - நடைபெறுகிற நாசகால சர்வாதிகார ஆட்சியை வீட்டுக்கு அனுப்ப வேண்டுமென வீறுகொண்டு செயல்படும் தன்மையையோ நான் என்றைக்கும் மதிப்பவன்.

ஆனால் ஒன்று! நான் அடிக்கடி சொல்வதுபோல, "தன்னால் கழகத்துக்கு என்ன பயன் என்று கருதுகிறவன், கட்சியின் இரத்த நாளம் போன்றவன்! கழகத்தினால் தனக்கு என்ன பயன் எனக் கணக்கிட்டுக் கொண்டு, அதற்காகவே இருப்பவன், கட்சியில் வளரும் புற்று நோய்!" என்பதை மெய்ப்பிக்கும் வகையில், சிலர்

செயல்பட்டிருப்பதும் ஏடுகளில் வந்தது மட்டுமல்ல, எனக்கும் தெரியப்படுத்தப்பட்ட நிகழ்ச்சியே ஆகும்.

அவர்கள் இப்போது எடுத்துள்ள முடிவு - மேற்கொண்ட நடவடிக்கை இவற்றின் வாயிலாக, தாங்கள் யார் என்பதையும், இதுவரையில் நல்லவர்கள் போல நடித்துக் கொண்டிருந்தனர் என்பதையும், நல்லவேளையாக அவர்களுக்கு எந்தப் பதவி வாய்ப்பும் கிட்டாமல் போய்விட்டது; கழகத்தின் எதிர்கால நன்மைக்கே என்பதையும் இப்போது தெளிவாக உணர முடிகிறதல்லவா!

கொடியை வெட்டினார்கள், கொடி மரத்தைச் சாய்த்தார்கள், என் உருவபொம்மையை கொளுத்தினார்கள்!

ஒரு 'சபாஷ்' போடுகிறேன் என் உருவ பொம்மையைக் கொளுத்தியதற்காக! ஆனால், கொடி மரத்தையா வெட்டி வீழ்த்தினார்கள்? என்று என் இதயத்தில் இரத்தத் துளிகள் கொண்டு எழுதப்படும் கேள்விகளுக்கு, அந்தத் தோழர்களும் சரி! அல்லது அவர்களைத் தூண்டி விட்டவர்களும் சரி! அவர்கள் உடலில் சுயமரியாதை இரத்தம் சூடு தணியாமல் ஓடிக் கொண்டிருக்குமானால், அவர்களால் பதில் சொல்ல முடியாது. அப்படிப்பட்ட வீராதி வீரர்கள் பொதுக் குழுவில் தங்கள் கருத்தை அச்சமின்றி எடுத்துரைத்து, தேர்தலுக்குக் கூட்டணியே அமைக்க வேண்டாம் என்று பொதுக் குழுவிலேயே ஒரு முடிவெடுக்க முனைந்திருக்கலாமே?

அப்போது ஏன் வாய் மூடிக் கிடந்தார்கள்? கூட்டணி அமையும் - அதன் ஆதாயத்தைத் தனது தொகுதியும் - குறிப்பாகத் தானும் பெறலாம் - என்ற நம்பிக்கையாலும் - அந்தத் தொகுதியில் கூட்டணிக் கட்சிகளின் ஒத்துழைப்புடன் தனக்கு வெற்றி கிடைக்கும் என்ற தன்னல உணர்வுடனும் - உள்ளவர்களால் மட்டுமே, கடந்த காலத்தில் கழகத்தினால் பெற்ற பயன்களை, பதவிகளை அனைத்தையும் மறந்து விட்டு, இதுபோன்ற பாதகச் செயல்களில் ஈடுபடவும் - அதற்குச் சிலரைத் தூண்டி விடவும் முடிகிறது!

எந்தக் கொடி மரம் துண்டானது? எந்தக் கொடி சிதைக்கப்பட்டது?

அன்று அண்ணா அவர்கள் தேர்வு செய்து - தெளிவான விளக்கமளித்து திராவிட இனம் - பண்பாடு - மொழி - இவை இருள் படிந்து கிடப்பதை வெளிச்சமூட்டி விடியலுக்கு அழைத்து வர, செக்கச் சிவந்த செவ்வானத்தில் உதயக் கதிர் எழும் நேரத்தை விளக்குகின்ற

கொள்கைக் கொடி -
இனமானக் கொடி -
சமுதாய விடுதலைக் கொடி -
சமத்துவம் பரப்பும் கொடி -

நெல்லிக்குப்பம் மஜீது, நெஞ்சில் அரிவாள் வெட்டினைத் தாங்கிப் பிணமாகச் சாய்ந்தபோதும், பிடி தளராமல் கையில் வைத்திருந்த கொடி -

தூத்துக்குடி சிங்கம் கே.வி.கே. சாமி, துரோகிகளின் கத்திக்குத்து - கட்டாரி வீச்சு இவற்றுக்கிடையே, அவன் சிந்திய குருதியில் நனைந்த கொடி -

மாணவ மணி தியாகி ராஜேந்திரன், நெஞ்சாங் குழியில் குண்டு பாய்ந்து கொட்டிய இரத்தம் தோய்ந்த இலட்சியக் கொடி -

ஆலந்தூர் சின்னான், வடசென்னை பாண்டியன் என அருமைக் கண்மணிகளின் ஆவி போக்கிய அராஜகவாதிகளின் கத்திக்குத்து பட்டு பெருகிய குருதி வெள்ளத்தில் மிதந்திட்ட கொடி -

அந்தக் கொடி பறந்த கம்பத்தையல்லவா, குள்ள நரி உள்ளத்தை இத்தனை நாள் மறைத்துக் கொண்டிருந்த "குடிலர்கள்" வெட்டி முறித்து வீழ்த்தி வெறியாட்டம் போட்டிருக்கிறார்கள்.

இன்று நான் எழுதியுள்ள இந்தக் கடிதத்தைவிட வேறு கடுமையான தண்டனை அந்தக் கயவர்களுக்குக் கொடுத்திட முடியாது! காரணம், காயம்பட்டுள்ள என் இதயத்திலிருந்து எழுந்துள்ள கழக நடவடிக்கையாகும் இது!

இந்த முறை தனியாக நின்றே வெற்றிக் கனி நிச்சயம் பறிக்கலாம் என்று நம்பிக்கை வழங்கிக் கொண்டிருந்த தொகுதிகளைக்கூட, கூட்டணிக் கட்சிகள், தங்களுக்குள்

பேச்சுவார்த்தை நடத்தி பகிர்ந்து கொண்டிருக்கின்றன என்றால், அது இந்தக் கூட்டணியில் உள்ள கட்சிகளின் அரசியல் நாகரிகத்தையும், பண்பாட்டையும் உணர்த்துகின்றன என்பதை நமது உடன்பிறப்புகள் புரிந்து கொள்ள வேண்டும்.

புரிந்து கொண்ட உடன்பிறப்புகளை, அண்ணா அறிவாலயத்தில் நேர்காணலுக்கு வந்தவர்களை, ஆயிரக்கணக்கில் அன்றாடம் சந்தித்து, அவர்களிடம் நான் நிலைமைகளை விளக்கி விரிவாகப் பேசிய போது கூட, அவர்கள்,

> "அண்ணே! நீங்கள் ஏன் இவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டு, எங்களுக்குச் சமாதானம் கூற வேண்டும். தேவையே இல்லை. இன்றுள்ள சர்வாதிகார ஆட்சியை வீழ்த்துவதற்கும் - உண்மையான ஜனநாயகம் மலர்வதற்கும் - நாங்கள் எங்களையே ஒப்படைத்துக் கொண்டு எல்லா தொகுதிகளையும் நமது தொகுதிகளாகவே பாவித்துப் பணியாற்றத் தயங்கமாட்டோம்! வெற்றியுடன் வந்து உங்களைச் சந்திக்கிறோம் தலைவா!"

என்று கூறி விடைபெறும்போதுஇ 'ஆகா!' எத்துணை ஆர்வம் அவர்களிடத்திலே கண்டிட முடிந்தது!

புண் வாய்ந்தோர் அல்லர் காண்
நமது புலி நிகர் இளைஞர்கள் காண்;
தோள்கள் பூரித்தார் காண் –

எனும் புரட்சிக் கவிஞரின் முரசமல்லவா! தேர்தல் களத்தில் ஒலித்துக் கொண்டிருக்கிறது –

வாலிக்கு ஒரு சுக்ரீவனைப் போல,

வையத்தை வெற்றி கொள்ளும்

இராவணனுக்கு ஒரு வீடணனைப் போல,

ஒரு சிலர் தோன்றினும் - அல்லது தூண்டப்பட்டு எட்டப்பர்களாக - மீர்ஜாபர்களாக -

ஆங்காங்கு கிளம்பி, இந்த அலைகடலாம் கழகத்தை அழித்துவிட எண்ணினால்,

இந்த இருபத்தோறாம் நூற்றாண்டில் அவர்கள் கனவு பலிக்காது!

பலிக்கவே பலிக்காது!

உடன்பிறப்பே! உன் நெஞ்சில் நானிருக்கும்போது, என் நெஞ்சில் நீ இருக்கும்போது, துரோகம் - அராஜகம் - இவை எந்தச் சிவனிடமும் சிரஞ்சீவி வரம் பெற்றவை அல்ல!

சிங்கமே! வேலை வந்துவிட்டது செயல் புரியப் புறப்படுக - புலிக் கூட்டமே! பொழுது விடியப் போகிறது புறப்படுக!

விலங்குகளை அழைக்கிறேன் என்று கருதுகிறாயா?

சமுதாயத்தில் பூட்டப்பட்டுள்ள சாதிமதபேத மெனும் விலங்குகளை உடைத்து வீர நடை போடுவதற்குத்தான்,

அழைக்கிறேன்!

அன்பு உடன்பிறப்பே,

தேர்தல் களம் சென்றிடு!

திறன் காட்டி வென்றிடு!

அன்புள்ள,

மு.க.

26-3-2006

3212. "மாயை" தோற்றுவிப்பர்; மயங்காது வெற்றி காண்போம்!

உடன்பிறப்பே,

> **"ஓர் அரசின் சர்வாதிகாரத்திற்கும், மக்கள் விரும்புகிற ஜனநாயகத்திற்கும் இடையேயான போராட்டம் இது. இந்தப் போராட்டத்தில் மக்களின் திட்டவட்டமான வெற்றியை உறுதிப்படுத்த, தி.மு.க. அணியில் உள்ள கட்சிகளும், அவற்றின் ஊழியர்களும் விழிப்போடும், துடிப்போடும் செயல்பட்டாக வேண்டும்"**

என்று 25-3-2006 அன்றைய "தீக்கதிர்" ஏடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ள வாசகம், கூட்டணியில் உள்ள செயல்வீரர்களுக்கும் - அவர்களை வழி நடத்தும் முன்னோடிகளுக்கும் ஓர் எச்சரிக்கை வேண்டுகோளாகவே அமைந்திருக்கிறது என்பதை யாரும் மறந்துவிட முடியாது! மறந்துவிடக்கூடாது!

அந்த உணர்வை மனத்தில் பதிய வைத்துக் கொண்டுதான் ஏழாயிரத்துக்கு மேற்பட்ட கழக உடன்பிறப்புகள் ஒருவார காலத்திற்கு மேலாக அண்ணா அறிவாலயத்தில் என்னையும், பேராசிரியர், பொருளாளர், துணைப் பொதுச் செயலாளர்கள், தலைமைக் கழக முதன்மைச் செயலாளர் ஆகியோரையும், காலை முதல் இரவு வரையில் நேர் காணலில் சந்தித்து, ஜனநாயகம் காத்திடும் அறப் போராட்டத்தில் தாங்களும் கலந்து கொள்ளக் கூடிய வாய்ப்பினை வழங்க வேண்டுமெனக் கேட்டுள்ளனர். அந்த நேர்காணலில், அவ்வப்போது குறித்துக் கொள்ளப்பட்ட அவர்களைப் பற்றிய விபரங்கள், அவர்களுக்காகச் செய்யப்பட்ட பரிந்துரைகள் அனைத்தும் அடங்கிய ஏடுகள் எங்களிடம் மிகவும் பத்திரமாக இருக்கின்றன.

இப்போதுள்ள பிரச்சினையே, அப்படிக் குறித்துக் கொள்ளப்பட்ட பெயர்களில், எந்தப் பெயர்கள் தலைமைக் கழகத்தினால் வெளியிடப்பட இருக்கும் வேட்பாளர் பட்டியலில், இடம்பெறப் போகிறதோ, அவற்றில் தனது

பெயரும் இணைந்திருக்குமா என்ற ஆவல் ததும்ப அண்ணா அறிவாலயத்தில் அணி வகுத்திருப்போரைக் காணும்போதெல்லாம் கசிந்துருகுகிறது என் நெஞ்சம்.

பட்டியலில் அவர் பெயர் இருக்கிறது என்றால், அவரைக் காணும் போது எனக்கோர் ஆறுதல் கலந்த அகமகிழ்ச்சி, அணு அளவினதாக! அந்தோ! இவர் பெயர் பட்டியலில் இல்லையே என்று அறிந்துள்ள நிலையில், அந்த அணுவானது குண்டாகவே மாறி நெஞ்சுக்குள் வெடிப்பது போன்ற வேதனை.

"இல்லை" என்பதை இத்தனை நாட்களாகப் பழகி வரும் என் இனிய உடன்பிறப்புகளிடம் எப்படிச் சொல்வது? "தம்பி! இப்போது இல்லை எனினும் தொல்லையில்லாமல் ஒரு பதவி, நீ தேடிச் செல்லாமலே உன்னிடம் ஓடி வரச் செய்ய முடியும். அந்தச் சில காலம் காத்திரு!" என்று கனிவுடன் கூறினாலும் - பதவியை மக்களுக்குப் பணிபுரியும் ஒரு வாய்ப்பாகக் கருதுகிற உடன்பிறப்புகளால் மட்டுமே, தலைவனின் வார்த்தையாயிற்றேயென்று அதனைத் தட்டாமல் ஏற்றுக்கொள்ள இயலும்! மாறாக; அதனைப் பெறுவதில், ஏதோ கௌரவம் - மதிப்பு - இவை அடங்கியிருப்பதாக எண்ணுகிறவர்களுக்கு, என் சமாதானங்களையும், விளக்கங்களையும் ஏற்பது எளிதல்லதான்! "மேலைக்கே வாழ்க்கைப்படலாம், கழுத்தே சுகமாக இரு" என்ற கதையாக இருக்கிறது! என நீ கோபங்கலந்து கேலி செய்யினும் - தலைவன் என்பவன் தோத்திரங்களில் மட்டுமே மிதந்திட முடியாதே! தூற்றல் கணைகளைக்கூட, அதுவும் தூய தொண்டர்களிடமிருந்து பெறுவதில் ஒரு இன்பம் காணுகிற இதயத்தைப் பெற்றவனாகவும் இருக்க வேண்டுமே -

எதிர்ப்பு, துரோகம், ஏசல், ஏளனம், கடுமொழி, சுடுசொல் என எத்தனை கணைகள் தாக்கி சல்லடைக் கண்களாக ஆகியிருக்கிற இதயம் இது! "கடமையும், கண்ணியமும், பிறகு இருக்கட்டும் - முதலில் கட்சியின் கட்டுப்பாடுதான் முக்கியம்" என்று எனக்கு அறிவுறுத்திய தந்தை பெரியாரின் துணிவுமிக்க வாசகமும், "எதையும் தாங்கும் இதயம் வேண்டும்" என்ற அறிஞர் அண்ணாவின் கனிவு நிறை வாசகமும் - என்றைக்குமே அழியாத செப்பேட்டுச் சாசனங்களாக, கல்வெட்டுகளாக, மெய்க்கீர்த்திகளாக - என் வாழ்க்கையில் பின்பற்றப்படுகிற கருவூலங்கள் என்பதை, என்னை அறிந்த எவரேனும் மறுக்க இயலுமா? இயலாது! இயலவே

இயலாது! அதனால், இந்த இதயத்தை நோக்கி இன்னொரு கணை வீசுவதற்கும் இங்கே இடமில்லை! வேண்டுமானால் என் தம்பிமார்கள் யாரேனும் முயற்சி செய்து பார்க்கலாம். பொதுவாகப் புதியவர்களுக்கும், சிறப்பாக மகளிர்க்கும் தொகுதிகளில் நிற்பதற்கான வாய்ப்பளிக்கும் எண்ணத்துடன் கழக வேட்பாளர்கள் பட்டியல் தயாரிக்க இருக்கிறேன்.

இதற்கிடையே ஏதேனும் குறுக்கீடுகள் வரின், அதை நான் சமாளித்துக் கொள்கிறேன். களத்தில் இறங்கிவிட்ட உன்போன்ற நமது கூட்டணியின் செயல்வீரர்கள் ஆற்ற வேண்டிய பணி நிரம்ப இருக்கிறது.

ஜெயலலிதாவின் சர்வாதிகார ஆட்சி, தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளைத் தூக்கித் தெருவிலே வீசிவிட்டு, கடந்த காலங்களில் செயல் பட்டதைப் போலவே, இந்தத் தேர்தலிலும் செயல்படத் தயாராகிக் கொண்டிருக்கிறது. செயல்படவே தொடங்கியும்விட்டது.

குறிப்பாக, மகளிர் சுய உதவிக் குழுக்கள் மாநில அரசின் துணையினால்தான் தொண்டாற்ற முடிகிறது என்பதைப் போலவும், மாநில அரசின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டவை என்பதைப் போலவும், மத்திய அரசுக்கு தொடர்பே இல்லை என்பதைப் போலவும் ஒரு தோற்றத்தை ஏற்படுத்தி, தி.மு.க. அணிக்கு எதிரான பிரச்சாரங்களிலும், செயல்பாடுகளிலும் நாமக்கல், ராசிபுரம், ஆண்டிபட்டி, பெரியகுளம், தர்மபுரி, மொரப்பூர் தொகுதிகளில் கண்ணுக்குத் தெரியவே ஈடுபடுகிறார்கள் என்ற செய்தி வந்தவண்ணமிருக்கிறது.

கவனிப்போம், கடுமையான நடவடிக்கை எடுப்போம் என்று ஒரே மந்திரத்தை மட்டும், தலைமைத் தேர்தல் ஆணையமும், தமிழகத் தேர்தல் ஆணையமும் மூச்சுக்கு முன்னூறு தடவை சொல்லி வருகின்றனவே தவிர, அந்தத் தவறுகளைத் தடுத்திடவோ, தவறு செய்தோர்மீது தக்க நடவடிக்கை எடுக்கவோ, முன் வருவதில்லை! - இது நமக்கு தமிழகத் தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகளைப் பற்றிய சந்தேகத்தை உறுதிப்படுத்துவதாக இருக்கிறது.

எனவே, விதிமுறைகளுக்கு மாறான அதிகார துஷ்பிரயோகங்களை அவ்வப்போது கண்டிக்கவும் -

அம்பலப்படுத்தி நடவடிக்கை எடுக்கவும் - நீ விழிப்புடன் இருந்து செயலாற்றிட வேண்டும்.

இதோ சேலத்தில், லூதியானாவிலிருந்து இலவச சைக்கிள்களை லாரிகளில் கொண்டு வந்து இறக்கிக் கொண்டிருந்த அத்துமீறிய செயல் தம்பி வீரபாண்டி ஆறுமுகம் எடுத்த முயற்சியினால் தடுக்கப்பட்டு, அதுபற்றி சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் தம்பி சிவலிங்கம் விளக்கிக் கூறியதை, லாரிகள் படத்துடன், சன் டி.வி.யில் உன் போன்றோர் கண்டிருக்கக் கூடும்.

எனவே, எங்கே தேர்தல் விதி மீறல்கள் நடந்தாலும் - அதிகார துஷ்பிரயோகம் நடைபெற்றாலும், அங்கெல்லாம் குறுக்கிட்டு, அதனைத் தடுத்து நிறுத்தும் அறவழியை அச்சமின்றிக் கடைப் பிடிக்க முனைய வேண்டும் நமது அணியின் செயல்வீரர்கள்!

வாக்காளர்களை வீடு வீடாகச் சென்று சந்திக்க, இப்போதே தொடங்கிட வேண்டும்.

வாக்காளர் பட்டியலில் தேர்தல் வாக்குப் பதிவு நேரத்தில் "தில்லு முல்லு" எதுவும் நடைபெறாதிருக்க, இப்போதே முன் கூட்டி எச்சரிக்கையாகக் கண்காணித்திடும் பொறுப்பை நமது கூட்டணிச் செயல்வீரர்கள் ஏற்றிட வேண்டும்.

"ஆளுங்கட்சி தான் வெற்றி பெறும்" என்பது போன்ற ஒரு மாயையைத் தோற்றுவித்து, அதற்கேற்ப சாகசம் புரிந்து, ஜனநாயகத்தை எப்படியும் வீழ்த்தி, சர்வாதிகாரத்தை வெற்றிபெற வைக்க பத்திரிகைகள் சிலவற்றைக்கூட இந்த ஆட்சியினர் பயன்படுத்துவதை உன்னால் உணர முடிகிறதல்லவா?

எனவே நீயும், நமது செயல்வீரர்களும் நமது கூட்டணியின் பத்திரிகைகளாகவே மாறிப் பணியாற்றிட வேண்டும்.

வெற்றி நமக்குத்தான் என்று மக்கள் தீர்ப்பு அமைய இருக்கும்போது, எவர், "நெற்றிக் கண்ணைக் காட்டுவேன்" என்று பயமுறுத்தினாலும் - அடக்குமுறை ஏவினாலும் - அஞ்சாத நெஞ்சத்துடன் அவற்றைத் தூளாக்கிட, தோள் உயர்த்தித் தூய நல் உடன்பிறப்பே! தொடங்கிடுக நம் பணியை!

அன்புள்ள,

மு.க.

27-3-2006

3213. நிரந்தரமான எஜமானர்கள் தமிழ்ப் பெருமக்கள்தான்!

உடன்பிறப்பே,

கிடைக்கும் என்று எதிர்பார்த்தவர்கள் - கிடைக்காமற் போனதால் கிலேசமுற்றவர்கள் - கிலேசத்தின் எல்லையாகக் கீழறுப்பு வேலை செய்கிறவர்கள் - யாராவது கிடைக்க மாட்டார்களா என்று அ.தி.மு.க. அரசின் உளவுத் துறை; உயரப் பறந்தாலும் செத்த பிராணிகள் எதுவும் அகப்படாதா என்று கீழ்நோக்கிப் பார்த்துக் கொண்டே பறந்து; கழுகுக் கண்ணால் கண்டவுடன் திடீரெனப் பாய்ந்து அந்தப் பிராணிகளை கால் நகங்களில் இடுக்கிக் கொண்டு போவது போல - தி.மு. கழகத்தின் வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடப்பட்டதை யொட்டியும், வெளியிடப்படுவதற்கு முன்பும் அவர்களில் 'கிடைக்காமற் போனவர்கள்' ஒரு சிலரை அணுகி பேட்டிகள் எடுத்து வெளியிட்டு; உமியளவுகூட இல்லாத விஷயத்தை ஊதிப் பெருக்க வைத்து "உலகளவு" காட்டி; உட்கட்சிப் பிரச்சினையும், கசப்பும், காழ்ப்பும், கழகத்தில் தோன்றி விட்டதைப் போல உருவகப்படுத்தி - "திராவிட இனப் பரம்பரைப் பகை"வரான ஜெயலலிதாவின் வெற்றிக்கு எதையும் செய்யத் தயாரானவர்கள் நடத்துகின்ற "அரும்பணி"க்கு அகப்பட்டவர்கள் ஒன்றிரண்டு "விபீஷண சுக்ரீவர்களாக" இருக்க முடியுமே தவிர - குலத்தைக் கெடுக்கும் கோடரிகளாக மாறாத "கும்பகர்ணன், இந்திரஜித்தன்"களும் நமது உடன்பிறப்புக்களில் இருக்கிறார்கள் பல்லாயிரக்கணக்கில் என்பதற்கு இதோ ஓர் உதாரணம் மதுரை திருப்பரங்குன்றத்திலிருந்து ஒளி விடுகிறது.

'குமுதம்' ரிப்போர்ட்டர் என்ற ஒரு வார ஏடு; கூட்டணியில் தோழமைக் கட்சிகளுக்காக தி.மு.க. தொகுதிகளை, மிகவும் விட்டுக் கொடுத்துவிட்டது என்று எழுதிக் கண்ணீர் வடிக்கிறது. இதற்கு மாறாக; தோழமைக் கட்சிகள் கேட்ட தொகுதியை நாம் தர மறுத்துவிட்டால்; அப்போது என்ன எழுதுவார்கள்?

"கருணாநிதி; மற்ற கட்சிகளின் மீது சவாரி செய்யத்தான் பார்க்கிறார் - அவர்களுக்கு வாய்ப்பான தொகுதிகளை மறுத்து விட்டு, அவற்றைத் தானே வைத்துக் கொள்கிறார்; இதுவா கூட்டணி தர்மம்?"

இப்படியும் எழுதிக் குவிப்பார்கள் - கண்டனம் செய்வார்கள். கடந்த தேர்தலில் "சங்கரன் கோயில்" தொகுதியை ஒதுக்குவதில் ஒரு கட்சி காட்டிய பிடிவாதமும் - அந்தத் தொகுதிப் பிரச்சினையில் தி.மு.கழகம், கூட்டணியை உடைத்து விட்டது என்றும் பேசியவர்கள், எழுதியவர்கள்; இப்போது "சங்கரன் கோயில்" சங்கதியில், சப்தமில்லாமல் அடங்கிக் கிடக்கிறார்களா; இல்லையா? எந்தப் பத்திரிகையாவது மூச்சு விடுகிறதா அதைப்பற்றி - சுவாசப் பையும் மூக்கும் படைத்தவர்களே சும்மா கிடக்கும் போது; நடுநிலையோடு இருக்க வேண்டிய பத்திரிகைகளுக்கு என்ன வந்தது? எல்லாம் தி.மு.க. என்றால் தான் - எதிர்ப்புக்கணை - எரிச்சல் விமர்சனம் - கேலி, கிண்டல் அனைத்தும் நடக்கும்.

"இதுதான் பரம்பரை பரம்பரையாக தொடரும் யுத்தத்தின் ஒரு பகுதி!"

ஆம்; உடன்பிறப்பே, பல்லாண்டு காலமாக இரு பரம்பரைகளின் யுத்தத்தில் இடையிடையே சில களங்களில் வெற்றி தோல்வி மாறி மாறி நமக்குக் கிடைத்துள்ளன. அதாவது சில நேரங்களில் களங்களை இழந்திருக்கிறோம் - ஆனால் யுத்தத்தை நிறுத்தவில்லை.

அம்பேத்கர், பெரியார், அண்ணா ஆகியோர் நம்மிடையே உயிரோடு இல்லாவிடினும் - உணர்வுகளாக நமது ரத்த ஓட்டத்தில் கலந்திருப்பதால் - அந்த யுத்தம் - தொடர்ந்து நடந்து கொண்டேயிருக்கிறது.

அந்த யுத்தக் களத்தில் இருக்கிற வீரர்கள் சிலர், விரக்தியினால் - பயத்தினால் - பதவிவெறியினால் -நான் கடிதத் தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ள கழுகுகளின் கால் நகங்களில் சிக்கிக் கொள்ளக் கூடும்.

ஆனால் அப்படிச் சிக்காதவர்கள் கொண்ட சிறந்த சேனையும் - பல்லாயிரம் படைவீரர்களைக் கொண்டதாக - தி.மு.க. வில் அணிவகுத்து நிற்கிறது. அதற்கு இதோ ஓர் எடுத்துக்காட்டு -

இப்படிப் பல ஆயிரம் பல லட்சம் எடுத்துக்காட்டுகள் உண்டு - அவற்றில் ஒன்று என் அகம் கவர்ந்தது, அதனைக் குறிப்பிடுகிறேன்.

நான் சொன்ன வார இதழில் 2-4-2006 என தேதியிட்டு வந்ததில் பின்வரும் பகுதியைப் படித்துப் பார்.

> "திருப்பரங்குன்றம் கிடைக்காததால் அப்செட்டில் இருக்கிறார் என்று சொல்லப்படும் மேயர் ராமச்சந்திரனிடம் பேசினோம். "நிச்சயமாக அப்செட் இல்லை.
>
> தி.மு.க. சார்பில் போட்டியிட விண்ணப்பித்த பல்லாயிரக்கணக்கானோரில் நானும் ஒருவன். எனக்கும் மேயர் என்கிற தகுதியைத் தந்ததே தலைவர் தானே, தலைவர் எந்த முடிவு எடுத்தாலும், அது சரியாகத்தான் இருக்கும். அவரை மீண்டும் முதல்வராக்குவதுதான் ஒவ்வொரு தி.மு.க.வினரின் இலக்காக இருக்க முடியும். அந்தப் பணியில் முழுமையாக என்னை ஈடுபடுத்திக் கொண்டு, கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கம்யூனிஸ்ட் வெற்றிக்காக
>
> எப்படிச் செயலாற்றினேனோ அதை விடச் சிறப்பாகப் பணியாற்றி, தி.மு.க. அணி வெற்றி பெற கடுமையாக உழைப்பேன்"என்றார்."

இத்தகைய தம்பிமார்களைப் பெற்றிருக்கும் போது; மறைந்திருந்து தாக்குகிற - முகமூடி அணிந்திருந்து முதுகில் குத்துகிற - ஒளிந்திருந்து பாய்கிற - ஒரு சிலருக்காக நான் ஏன் கவலைப்பட வேண்டும் - நாம் எல்லோருமே எதற்காகக் கவலைப்பட வேண்டும்?

> *"நன்றாற்ற லுள்ளூந் தவறுண்டு அவரவர்*
> *பண்பறிந் தாற்றாக் கடை"*

எனும் குறளை மட்டும் நினைத்துக் கொண்டு - அடுத்தடுத்து எடுத்து வைக்கும் அடியை எச்சரிக்கையுடன் எடுத்து வைக்க வேண்டுமே தவிர; எதற்கும் அஞ்சிடத் தேவையில்லை - எவரிடமும் கெஞ்சிடத் தேவையில்லை; அவர்களை நமக்கு எஜமானர்கள் என எண்ணி!

"நமக்கு நிரந்தரமான எஜமானர்கள் தமிழ்ப் பெரு மக்கள்தான்" என்ற உறவு மனப்பான்மையும், தன்மான உணர்வும் பெற்றவர்களாக பயணம் தொடர்வோம்.

அன்புள்ள,

மு.க.

01-04-2006

3214. அய்யா வழி சென்றிடுவோம்; அண்ணா வழி வென்றிடுவோம்!

உடன்பிறப்பே,

"பரம்பரை பரம்பரையாக நடைபெறுகிற யுத்தம் இது!" என்று ஜெயலலிதா அறைகூவல் விடுத்து பேட்டியளித்தாரே! அந்த யுத்தத்தில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் குதிரைகள் பூட்டிய ஜனநாயகத் தேர் ஏறி, விவேகமெனும் வில்லேந்தி - கனிவு, தெளிவு, துணிவு எனும் கணைகளைப் பயன்படுத்தி சர்வாதிகாரமெனும் பகையைக் களத்தில் வீழ்த்தத் தயாராகிக் கொண்டிருக்கும் என் உயிரினும் மேலான உடன்பிறப்பாகிய உனக்கு நான் எழுதிய ஒரு பழைய கவிதையை நினைவூட்டுகிறேன்.

தன்மான இயக்கத் தமிழன் - தந்தை பெரியாரின் வழி வந்தவன் - அண்ணாவின் விழி காட்டிய திக்கில் நடை பயின்றவன் - இந்தப் போராட்டத்தில் இறுதி வெற்றி பெற்றே தீர்வான் என்பதையும் - எதிர் தரப்பினர் வீழ்ந்தொழிந்து புறங்காட்டி ஓடிடுவர் என்பதையும் விளக்குகிற வகையில், எப்போது நம் எதிரிகளுக்கு வெற்றி கிட்டும் என்பதையும் அக்கவிதையில் வேடிக்கையாகக் குறிப்பிட்டுள்ளேன். இதை எழுதி அறுபது ஆண்டுகளுக்கு மேலாகிறது. அதாவது 1945ஆம் ஆண்டு! இதோ; அந்தக் கவிதை!

"சுண்டெலி வந்த தென்று
சூரப் பூனை அடுப்பின்
அண்டையில் பதுங்க,
அரவ மொன்றாடி யோடக்
கண்ட கீரிப் பிள்ளை
கலங்கியே வியர்த்து நிற்க,
மண்டலத்தி லில்லா இம்
மாபெரும் வேடிக்கைகள்

வண்டமிழ் நாட்டில் வந்தால்
வாகை சூடி வாழ்ந்திருந்து
சண்டைக்குச் சளைக்காத
சிங்கத் தமிழ்க் காளை யெல்லாம்
நண்டுக்குப் பயந்தொளிந்த
நரியைப் போல் - அந்தோ!
வெண்டைக் காய் வீரரிடம்
வெற்றிகளைக் கொடுத்திடுவார்!

வெல்வது போலச் சொல்லுவர் - வென்று விடுவோம் எனத் தோற்றம் காட்டுவர் - மேடையதிரக் கூவிடுவர் - ஏடு கறுத்திட எழுதிப் படிப்பர் - எல்லாமே, தம்மை அடிமையாக ஏற்றுக் கொண்டிருக்கும் "எஜமானி"க்குத் துதி பாடத்தான்! அவரைத் தோத்திரத்தால் ஏத்தித் தொழுதிடத்தான்! ஆனால் 'வெற்றி வெற்றி' என்று அவர்கள் நெற்றியில் எழுதி வைத்துக் கொண்டு திரிய முடியுமே தவிர, கவிதையில் குறிப்பிட்டிருப்பது போல மண்டலத்தில் இல்லா இந்த அதிசயங்கள் நடந்தாலொழிய அவர்கள் நம்மை வீழ்த்தி விட்டு வெற்றி போதையில் குதிக்கலாம் எனக் காண்பது பகற்கனவே அல்லாது, பலிக்கப் போகும் கனவல்ல!

சிலர் காட்டும் சலசலப்பு - பதைபதைப்பு - நியாயப் பூர்வமாக - நீதியின்பாற்பட்டதாக இல்லை யென்பதை பொது மக்களும், வாக்காளப் பெருமக்களும் அறிந்தே வைத்திருக்கிற காரணத்தினால்தான், உறுதி செய்யப்பட்ட வெற்றி இங்கேதான் என்றுணர்ந்து மேலும் மேலும், நமது கூட்டணிக்கு ஆதரவைக் குவித்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்த நேரத்தில் தமக்குப் போட்டியிடும் வாய்ப்பு கிட்டாமல் போய் விட்டதேயென்று சிலர் வருந்துவதும் - கழகத்தின் கருணையினால் இதுவரையில் எத்தனை பதவிகளை அனுபவித்தோம் என்பதை ஆத்திரத்தில் மறந்து விடுவதும் - கழகமோ, கழகத் தலைமையோ தமக்கோ, தமது வீட்டுக்கோ செய்துள்ள உதவிகளை நினைவுபடுத்திக் கொள்ளாமல் இருந்து விடுவதும் - பதவிப் பித்து, பதவி வெறி என்னும் நோயினால்தான் என்பதைத் தமது செயல்கள் வாயிலாக நிரூபித்துக் கொண்டிருக் கிறார்கள்.

1967ஆம் ஆண்டு தேர்தலில் வாக்குப் பதிவெல்லாம் முடிவுற்று, வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாளில் நானும், கழக முன்னணியினரும் அண்ணா வீட்டிலிருந்தவாறு ஒவ்வொரு தொகுதியின் முடிவுகளையும் வானொலியில் கேட்டுக் கொண்டிருந்தோம். நாவலர் நெடுஞ்செழியன், பேராசிரியர் அன்பழகன், என்.வி. நடராசன், கே.ஏ. மதியழகன், ஏ.வி.பி. ஆசைத்தம்பி, சத்தியவாணிமுத்து, ஏ. கோவிந்தசாமி, கடலூர் இளம்வழுதி, அரங்கண்ணல் என இப்படிப் பலரும் மகிழத்தக்க அளவுக்கு தேர்தல் முடிவு பற்றிய செய்திகள் வானொலியில் வரவர - எங்கள் முகங்கள் மலர்ந்து விரிந்து கொண்டேயிருந்தன. ஆனால் அண்ணாவின் முகத்தில் மட்டும் மலர்ச்சி இல்லை. சிறிது சிறிதாக வாட்டம் குடி கொண்டதை எங்களால் காண முடிந்தது.

கழகம் வெற்றி பெற்ற இடங்கள் 100 என்று ஆகி, 120 என்று எண்ணிக்கையைத் தாண்டியபோது, திரு. என்.வி. நடராசன் அவர்கள் அண்ணாவைப் பார்த்து, "என்ன அண்ணா நூறு - நூற்றி இருபதைத் தாண்டி விட்டோம் - நாங்கள் எல்லாம் மகிழ்ச்சியாக இருக்கிறோம் - உங்கள் முகம் மட்டும் சோகமாக இருக்கிறதே?" என்றார்.

அப்போது அண்ணா சொன்னார் - "துள்ளிக் குதிக்காதீர்கள் தம்பிகளே! நூறு வரையில் சரி! அத்துடன் நின்றிருந்தால் போர்க்குணம் வாய்ந்த எதிர்க்கட்சியாக இயங்கியிருக்கலாம் - அதைத் தாண்டி, இவ்வளவு விரைவாக ஆட்சிக்கு வந்தால் - கொள்கை, லட்சியம், எல்லாம் பின்னுக்குப் போய், பதவி வெறி - பதவி ஆசை - இவைகளால் கட்சி பாதிக்கப்படும் - அதற்காகத்தான் கவலைப் படுகிறேன்" என்றார்.

இப்போது கூட இயக்கத்தில் ஓரிருவர் - அல்லது ஒரு சிலர் - கடந்த காலத்தில் பதவி இன்பங்களைப் பெற்றிருந்தாலும் - அதில் இப்போது இடையே ஒரு தொய்வு ஏற்படின் - அடடா! எத்துணை சோகத்தில் ஆழ்கிறார்கள்! எத்துணை வேகத்தில் குதியாய்க் குதிக்கிறார்கள் - துரோகிகளாக மாறி, கழகத்தின் முதுகில் குத்திடவும் தயாராகிறார்கள். இப்போது புரிகிறதா உடன்பிறப்பே! அண்ணா அன்றைக்கு 1967ல் சொன்னது எவ்வளவு உண்மையாக இன்றைக்கும் இருக்கிறது!

ஒரு நம்பிக்கை மட்டும் எனக்கு உண்டு - அனுபவத்தில் கண்டது!

ஒரு வாகனத்தில் நாலு பேர் ஏறுவதற்குப் பதில் ஆறு, ஏழு பேர் நெருக்கியடித்து ஏறி அமர்ந்து விட்டால், முதலில் சங்கடமாக இருக்கும். போகப் போக வாகனம் குலுங்கிக் குலுங்கி சரியாகிவிடும். நெருக்கடி குறைந்து விடும். எல்லோரும் அமர இடம் கிடைத்து விடும். ஆனால் சட்டமன்றம், நாடாளுமன்றம் போன்றவைகளில் வரிசைக் கிரமமாகத்தான் அந்த வாய்ப்பு ஏற்படும்.

அண்ணா மறைந்த பிறகு, அடியேன் அப்பொறுப்பை ஏற்றபோது - பெரியார், எனக்கும், கழகத்திற்கும் அறிவுரையாக ஒன்றைச் சொன்னார் - அது என்ன?

“கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என
அண்ணா சொன்னதில், தி.மு.க.,
கடமை, கண்ணியத்தைக் காட்டிலும் -

“கட்டுப்பாடு” காத்திட வேண்டியது
தான் மிக முக்கியம்”

என்று அய்யா நமக்குக் கூறியது அறிவுரை மட்டுமல்ல! ஆணையாகக் கருதி செயல்பட வேண்டிய ஒன்று!

கழக உடன்பிறப்புகளாகிய நாம் ‘கட்டுப்பாடு’ காத்து, கழகத்தை ஆயிரங்காலத்துப் பயிராக செழித்து வளரச் செய்யப் போகிறோமா? - அல்லது அற்பாயுள் கதிராக உதிர்ந்து போகவிடப் போகிறோமா? - தி.மு.க. இந்தத் தேர்தலுக்குப் பிறகு “காணாமல் போய் விடும்” என்று ஜெயலலிதா ஆணவத்துடன் அரசியல் ஆரூடம் கணித்து அறிவித்திருப்பதை ஓர் அறைகூவலாக எடுத்துக் கொண்டு, அவரது அந்த “வாசகம்” வசந்த சேனையின் வஞ்சக வாசகம்! என்பதை வருங்காலத் தமிழகத்திற்கு நமது உறுதிமொழியாக வழங்குவோம்! சர்வாதிகாரத்திற்குச் சரியான பாடம் புகட்டுவோம்!

அன்புள்ள,
மு.க.
2-4-2006

3215. அன்று படித்த "அமிர்தமதி" கதை!

உடன்பிறப்பே,

"அவரா இவர்? அவர் பேச்சா இப்படி இருக்கிறது? அன்றெல்லாம் வாய் திறந்தால் வரலாற்றுச் செய்திகளன்றோ வந்து விழும் - படபடவென ஒலியெழுப்பும் குளம்புகள் பளபளப்பான சாலையில் பட்டதா, படவில்லையா என்று தெரியாமல் பாய்ந்தோடும் குதிரைகளின் வேகத்தில் அல்லவா அவரது சொற்கள் சதிராடக் கண்டிருக்கிறோம்.

இன்று அந்தச் சதிராட்டத்தையும் காணோம் - சரித்திரச் சான்றுகளையும் காணோம் - சரிந்து வீழ்ந்த கூந்தல்,எரிந்து கொண்டிருந்த தீயில் கருகிக் கிளம்புகின்ற ஒருவித துர்நாற்றத்தையன்றோ உணர முடிகிறது, அவரது பேச்சைக் கேட்கும்போதும்! பேசியதைப் படிக்கும் போதும்!" என்று என் பிரியமான நண்பனிடம் பெருமூச்சு விட்டவாறு சொல்லிக் கொண்டிருந்தேன்.

நண்பன் சொன்னான், "இப்போதுதான் அவர், தனது இயல்பானதும் இஷ்டமானதுமான இடத்துக்குப் போயிருக்கிறார் - எனவே நீ இதில் ஐயமுறவோ அல்லது ஆச்சரியமுறவோ எதுவுமில்லை. இது வரையில் இங்கிதம் தெரிந்தவராக எப்படி அவரால் நடந்து கொள்ள முடிந்தது - இன்று மாத்திரம் எப்படி எடுத்தேன், கவிழ்த்தேன் என்று நிதானம் சிறிதுமின்றி நடந்துகொள்ள முடிகிறது?" என்று நண்பனே கேட்டுவிட்டு, அந்த மாறுதல் பற்றிய விளக்கத்தையும் அவனே சொன்னான்.

"நண்பா, இதுவரையில் வரலாறு - காவியம் - கவிதை - இலக்கியம் என்றெல்லாம் அவர் பேசிய அத்தனையும் அழகானவைதான், அதி ருசியானவைதான், அறிவு கொளுத்துபவைதான் - ஆனால் அவை அனைத்தும்; தாங்கியிருந்த வேடத்துக்காக அவர் காட்டிய கலைத்திறன்! அந்தத் தேவை

முடிந்து அடுத்த கட்டத்துக்கு வந்து விட்டார்! பழகிப் போனதும், இயல்பானதுமான பழைய கட்டத்திலேயே தான் அவர் இருக்கிறார் - நாம்தான் அப்போது பார்த்தவராக இப்போது இல்லையே என்று பதறிப் போகிறோம்!"

இந்த விளக்கத்தைச் சொன்ன நண்பன், இத்துடன் நிறுத்தவில்லை - மேலும் தொடர்ந்தான், "சில பேருடைய சுபாவம்! என்னதான் அவர்களைத் தூக்கி வைத்துக் கொண்டாடினாலும் - பாமாலை தொடுத்துப் பாராட்டினாலும் - புகழ்ந்துரைத்துப் புரவலராக இருந்து பாதுகாத்தாலும் - தமக்குப் பிடித்தமான இடம் - பிடித்தமானவர் - என்று அதே நோக்கில்தான் அவர்களின் நினைப்பு இருக்கும். நடவடிக்கையும் அமையும்" என்று திட்டவட்டமாகச் சொன்னவன், அதற்கு இதோ ஒரு கதையும் சொல்லுகிறேன் என்று ஆரம்பித்தான்.

நண்பன் சொன்னது நான் படித்த பழைய கதை தான் - இதுபோன்ற மாறுபாடான நிகழ்வுகள் அரசியலில் நடைபெறும்போதெல்லாம் இக்கதை என் நினைவுக்கு வரத் தவறுவதில்லை.

உடன்பிறப்பே! யசோதர காவியம் நீ படித்திருக்கிறாயா? இதுவரை படிக்காவிடில் படித்துப்பார். நானே அதை சுருக்கமாகச் சொல்லுகிறேனே - யசோதர காவியம் என்பது ஐஞ்சிறு காப்பிய வரிசையில் உள்ளது - அவந்தி நாட்டு மன்னனின் வரலாற்றையும் அவனது ராணியின் குணக் கேட்டினையும் கூறும் ஒரு சமண நூல் -

யசோதரன் அவந்தி நாட்டு மன்னன் - அவனது பட்டத்து ராணி அமிர்தமதி. ராணியின் மனமறிந்து மகிழ்ச்சியளிக்கும் மன்னன்தான் யசோதரன். சுந்தர ரூபன், சுகுமாரன், நாட்டு அதிபதி! அத்தகைய செங்கோலேந்தியின் சிற்றின்பக் கூடாரத்தை அலங்கரிக்கக் கூடிய பாக்கியம் அந்தச் சிங்காரி அமிர்தமதிக்குக் கிடைத்திருந்தது. மன்னவனின் மஞ்சத்து மயில் என்றால் சாதாரணமா? தாதிகள் உண்டு! தயவு கேட்டு நிற்கப் பல சேவகருண்டு! தங்கம் கலந்த உணவை உண்டு - அங்கம் பூரிப்பு கொண்டு - காதல் மிஞ்சுதே சேடி! காவலனைக் கூப்பிட்டு வாடி! என்று அழைத்த கணமே அவர்கள் ஓடி, ஆடிப்பாடி அரசனை அழைத்து வருவர். ஆனை மேல் அம்பாரியா? அணி தேர்ச் சவாரியா? பூனை ரோமத்தால் மிதியடியா? புலிப் பாலா? புரவிக் கொம்பா? எது கேட்பினும் தருவர்

- அதற்கெனவே எடுபிடிகள் ஏராளமாக உளர். இந்தச் செல்வாக்கின் மத்தியிலே செல்ல நடை போடும் சேயிழையாள் அந்த அமிர்தமதி!"

அழகி அமிர்தமதியும், அரசன் யசோதரனும் ஒரு நாள் அந்தப்புரத்தில் இன்பக் கேளிக்கையில் ஈடுபட்டனர்.

கட்டிற் காவியம் எழுதி முடித்தனர் - கண் அயர்ந்தனர்.

அரசன் தூங்கும் சமயம், ராணி கண் விழித்தாள். ஆமாம்! மலர் விழித்துக் கொண்டது! வண்டோ தூங்கிக் கொண்டிருந்தது. விழித்த சமயம் அந்த இரவில் ஒரு பாடல் ராணியின் காதில் ஒலித்தது! அந்த கானம் வந்த பக்கம் கருத்தைச் செலுத்தினாள். அந்தக் கானம் எழுப்பியவனைக் கட்டித் தழுவ வேண்டுமென்று துடித்தாள்.

மறுநாள் தன் தோழி குணவதியை அனுப்பினாள், அர்த்தராத்திரியிலே பாடியவன் யாரென்று அறிந்து வர! தோழியும் போய் அவனைக் கண்டாள். இசையை எழுப்பியவன் ஒரு யானைப் பாகன். அவன் எப்படிப்பட்ட அழகுடையவன் தெரியுமா? தோழி வாயிலாகக் கவிஞர் கூறுகிறார் - அது இது!

"நரம்புகள் வசித்த மெய்யன், நடையினிற் கழுதணிந்தோன், திரங்கியவிரவன், கையன், சிறுமுகன், சினவன், சீறிற் குரங்கினை யனையன், கூனன், குழிந்து புக்கழிந்த கண்ணன்!"

இன்னும் பலவாறாக அவனது விகாரங்களை வர்ணித்து, அவன் மீது ஆசை வைப்பது தகாது என்று ராணியிடம் தோழி கூறுகிறாள். அமிர்த மதியோ 'அவன் எப்படியிருந்தாலும் கவலையில்லை. அவனை அணைத்து மகிழத்தான் வேண்டும்' என்று துடிக்கிறாள். 'கனியிருப்பக் காய் பறிக்கலாமா அம்மா? சகல அழகும் பொருந்திய அரசர் பெருந்தகையின் மனைவியாகிய நீங்கள், கேவலம் குரங்கைப் போன்ற - ஒரு சாக்கடை மனிதனைக் கொஞ்சிக் குலவ விரும்பலாமா தாயே!' என்றெல்லாம் குணவதி தடுத்தாள். ஆனால் அரசியோ, அவன் எப்படியிருந்தால் எனக்கென்ன? அவன் நல்ல இசைவாணன் - அவன் அணைப்பிலேதான் சுகம் இருப்பதாக நான் உணர்கிறேன் என்று கூறியதோடு, அந்தப் பாடல் கற்ற யானைப் பாகனையும் வலிய இழுத்து, அணைத்து மகிழ்ந்தாள். நாளொரு மேனியாக அந்த நாய்க் காதல் வளர ஆரம்பித்தது. ஒரு நாள் அரசனே அவர்களது..... காதல் களியாட்டத்தைத் தூர நின்று பார்த்து விட்டான். அப்போது என்ன நடந்தது தெரியுமா? அரசன்

எந்தக் காட்சியைக் கண்டான் தெரியுமா? வழக்கமாக யானைப் பாகனைச் சந்திக்கும் அமிர்தமதி அன்று சற்றுத் தாமதமாக அவனிடம் வந்து விட்டாளாம். அதற்காக அந்த யானைப் பாகன், அட்டபங்கன் என்னும் பெயருடைய அந்த அவலட்சணம் அமிர்தமதியின் அழகுக் கருங் கூந்தலைக் கையால் இழுத்து எறிந்து, அவளைக் கீழே தள்ளி, இரு கைகளாலும் நையப் புடைத்து 'ஏன் காலம் தாழ்த்தி வந்தாய்?' என்று கனல் கிளம்பக் கேட்கிறான்.

கட்டளையிட்டால், யோசனை என்ற தூரம் ஓடிக் காரியமாற்றிடும் பணியாளர்களின் தலைவி - மண்டலாதிபதியின் மனைவி - ஓர் அழுகிய உடல் படைத்த யானைப் பாகன், தன்னைத் திட்டி அடிப்பதிலே சுகம் காண்கிறாள்.

அவள் மலர்ப் பாதங்களை அர்ச்சிக்க ஆயிரம் பேர் காத்திருப்பர் - அவள் அந்தப் பாகனின் கால்களைக் கண்ணில் ஒத்திக்கொண்டு காலந் தாழ்ந்தமைக்கு மன்னிப்புக் கோருகிறாள். இதைக் கண்ட மன்னன் வெகுண்டான். தனக்குத் தடையாக வந்த மன்னனுக்குத் தந்திரமாக நஞ்சு கலந்து அவனையே தீர்த்துக் கட்டி விட்டாள், அந்தப் பாகனின் பாட்டிலே சுகம் கண்ட பாதகி. அந்தப் பாதகிக்குப் பெயர் அமிர்தமதி! இதுதான் யசோதர காவியத்தின் சுருக்கம்!

உடன்பிறப்பே, அவரா இவர்? என்று நான் ஆச்சரியப்பட்டு நண்பனிடம் வேதனையுடன் கேட்டதையும் - நண்பன் எனக்கு "அமிர்தமதி" கதை மூலம் விளக்கம் அளித்ததையும் பார்க்கும்போது, இவ்வளவு சுற்றிப் போகாமலே விளக்கமளிக்க எத்தனையோ சுருக்கமான "கிராமியப் பழமொழிகள்" நமது தமிழகத்திலே உலவுகின்றன. அவற்றில் ஒரு பழமொழியை இதற்குரிய பதிலாக ஒரு பட்டிக் காட்டுப் பாமரனால் கூட சொல்ல முடியுமல்லவா?

அன்புள்ள,

மு.க.

4-4-2006

3216. தேர்தல் களத்துக்குத் தேவையான கருத்துக் கணைகள்!

உடன்பிறப்பே,

மேடையிலே வீசுகின்ற மெல்லிய தென்றலா? மேடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் குளிர் தருவின் நிழலென உன் சொற்பொழிவு இருக்கிறதா? அல்லது சுழன்றடிக்கும் புயலா? சூறாவளியா? சுருதி பிறழா சங்கீதமா? இவற்றில் உன் பேச்சு எந்த வகையைச் சேர்ந்தது ஆயினும் - அடித்தளக் கருத்தாக அமைய வேண்டியது தேர்தல் களம் காணும் நேரத்தில் எதுவாக இருக்க வேண்டுமெனத் தெரிவிப்பதே இந்தக் கடிதத்தின் நோக்கம்.

ஒரு கூட்டத்தில் பேசுவதற்குப் போதுமான நேரம் இருந்தால் முதலில் தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட நல்ல திட்டங்கள் - புரிந்த சாதனைகள் இவற்றைப் பட்டியலிட்டு; அந்தப் பட்டியலில் எவற்றையெல்லாம் அ.தி.மு.க. ஆட்சி ரத்து செய்தது - அல்லது கை விட்டு விட்டது - என்பதை மக்களுக்கு விளக்கிட வேண்டும்.

- சாதனையாற்றுவதற்குப் பதிலாக கடந்த ஐந்தாண்டுகளில் அ.தி.மு.க. ஆட்சி விளைத்த வேதனைகளை வரிசைப்படுத்துவது; பேச்சின் அடுத்த கட்டமாக அமைதல் வேண்டும்.

- ஜெயா ஆட்சியில் எத்தனை பொய் வழக்குகள் என்ற புள்ளி விபரமும் கையில் இருக்க வேண்டும் - தனக்குப் பிடிக்காதவர்கள் மீதெல்லாம் கஞ்சா வழக்கு - குண்டர் சட்ட வழக்கு எனத் தொடுத்து பழி வாங்கிய படலத்தை எடுத்துச் சொல்ல வேண்டும்.

- ஜெயா வழக்குகளில் அல்லது வேறு வழக்குகளில் நீதிமன்றங்கள், இந்த அரசின் மீது கூறியுள்ள கண்டனங்களை அப்படியே படித்துக்காட்ட வேண்டும்.

- விவசாயிகள், தொழிலாளர்கள், அரசு அலுவலர்,

ஆசிரியர்கள் மீது பொழிந்த அடக்குமுறைகள், அநியாய நடவடிக்கைகளை விவரிக்க வேண்டும்.

● ஆங்காங்கு எடுத்துரைக்கப்படும் குறைகளின் முக்கியத்துவம் - கோரிக்கைகளின் அவசியம் சுட்டிக் காட்டப்பட வேண்டும்.

● ஆளுங்கட்சியினர் அபத்த வாதங்களுக்கு அரசியல் நாகரிகத்துடன் பதில் அளிக்க வேண்டும்.

● நமது கூட்டணி வேட்பாளரின் சிறப்புக்களை அந்தத் தொகுதி மக்களுக்கு எடுத்துரைத்து ஆதரவு திரட்டும் பேச்சாக அமைய வேண்டும்.

● பேச்சின் இறுதியில் தி.மு.க. தேர்தல் அறிக்கையின் தொடர்ச்சியாக

“தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள
முத்திரை பதிக்கும் முத்தான திட்டங்கள்
என்ற அறிக்கையை முழுவதும் படித்து ஒவ்வொன்றையும் தேவைப்படும் அளவுக்கு விரிவாகவும் - கூடுமானவரை சுருக்கமாகவும் விளக்கிட வேண்டும்.

இதோ அந்த அறிவிப்புக்களின் பட்டியல் இணைத்துள்ளேன்:

★

● தாய்மார்கள் மனம் குளிர தரமான அரிசி கிலோ இரண்டு ரூபாய்.

● மகளிர் மனம் மகிழ்ந்து பொது அறிவு பெற்றிட வீடுதோறும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி

● மீண்டும் திருமண நிதி உதவித் திட்டம் 15000 ரூபாயாக உயர்வு.

● மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு பயிற்சிக்கான தினப்படி மீண்டும் 45 ரூபாய்.

● கர்ப்பிணிப் பெண்களுக்கு பேறு கால உதவி; மாதம் ஆயிரம் ரூபாய் வீதம் ஆறு மாதங்களுக்கு!

● ஏழை எளிய தாய்மார்களுக்கு எரிவாயு அடுப்பு இலவசம்!

● மாணவர்க்கு பலமடங்கு உயர்த்தப்பட்ட கல்விக் கட்டணம் பழைய நிலைக்கு குறைக்கப்படும்.

● மாணவர்களுக்கு சத்துணவோடு வாரம் இரண்டு முறை முட்டை வழங்கப்படும்.

● வேலையில்லா இளைஞர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை ரூ. 300 வரை தரப்படும்.

● காலியாக உள்ள அரசுப் பணி இடங்களில் மூன்று இலட்சம் இளைஞர்களுக்கு உடனடி வேலை வாய்ப்பு.

● தேர்வாணைக் கழகத் தேர்வு எழுதிட வயது உச்ச வரம்பு தளர்த்தப்படும்.

● வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கும் சுய உதவிக் குழுக்கள்.

● கிராமப் பகுதிகளில் இளைஞர்களுக்கு இலவசமாக கணினிப் பயிற்சி.

● விவசாயிகள் வேதனை தீர கூட்டுறவுக் கடன்கள் அறவே தள்ளுபடி!

● விவசாயிகளுக்கு மட்டுமின்றி நெசவுத் தொழில் செய்பவர்களுக்கும் இலவச மின்சாரம்!

● தமிழகத்தில் மொத்தம் உள்ள சுமார் 55 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களை நிலமற்ற ஏழை எளிய குடும்பங்களுக்கு தலா இரண்டு ஏக்கர் வீதம் வழங்கப்படும்.

● விவசாயிகள் மரணமடைந்தால் கூட்டுறவுக் கடன் அறவே ரத்து!

● வேலை வாய்ப்பு அலுவலகப் பதிவு மூப்பு அடிப்படையிலேயே ஆசிரியர்கள் தேர்வு - அதில் 50 விழுக்காடு பெண்களுக்கு!

● தேயிலை விவசாயிகள், தென்னை விவசாயிகள், பனைத் தொழிலாளர்கள் நலன்கள் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

● முந்திரி, காட்டாமணக்கு சாகுபடியை ஊக்குவிக்கவும், சர்க்கரை ஆலைகளில் எத்தனால் (Ethanol) உற்பத்தியை அதிகரிக்கவும் ஆவன செய்யப்படும்.

● சிறப்புத் தொகை கட்டி மின் கட்டண முன்னுரிமை இணைப்பு பெற்ற விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம்.

● அரசு ஊழியர் ஆசிரியர்களுக்கு பறிக்கப்பட்ட சலுகைகள்; திரும்ப வழங்கப்படும்.

● உரிமைப் போராட்டத்தில் உயிர் நீத்த அரசு ஊழியர் - சாலைப் பணியாளர் குடும்பங்களுக்கு நிதி உதவி - வாரிசுகளுக்கு வேலை.

● காவலர் குறை தீர்க்க, காவல் துறை மறுமலர்ச்சி பெற மூன்றாவது போலீஸ் கமிஷன்!

● ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் அறிவிக்கப்பட்டவுடன் தமிழகத்திலும் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும்.

● காலியாக உள்ள அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் மருத்துவர்கள் பணிகள் நிரப்பப்படுவதோடு - ஒப்பந்த நியமன முறை அறவே நீக்கப்படும்.

● அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு மீண்டும் தனித் தனி வாரியம், உறுப்பினர்களுக்கு மாதம் 300 ரூபாய் ஓய்வூதியம்.

● போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு அ.தி.மு.க. ஆட்சியில் பறிக்கப்பட்ட அனைத்துச் சலுகைகளும், உரிமைகளும் மீண்டும் வழங்கப்படும்.

● சுனாமியால் பாதிக்கப்பட்டு வீடிழந்த மீனவர்க்கும் பிறர்க்கும் உடனடியாக வீடுகள்!

● அர்ச்சகராகப் பயிற்சி பெற்ற அனைத்து சமூகத் தினருக்கும் ஆலயங்களில் ஆராதனை செய்ய வாய்ப்பு!

● இஸ்லாமியர் மற்றும் கிறித்தவர்களுக்கு இட ஒதுக்கீடு சட்டம்.

● ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள்,

அனைத்து மதங்களிலும் இருக்கின்ற ஆதிதிராவிடர் களுக்கும் கிடைக்குமாறு செய்யப்படும்.

● அ.தி.மு.க. ஆட்சியில் விதிக்கப்பட்ட மறு விற்பனைவரி போன்றவற்றை நீக்கி, வரிச் சீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

● சில்லறை வணிகத்தில் அந்நிய முதலீட்டுக்கு எதிர்ப்பு.

● முதியோர் உதவித் தொகை 400 ரூபாயாக உயர்வு!

● ஊனமுற்றோர் உதவித் தொகை 500 ரூபாயாக உயர்வு!

● அ.தி.மு.க. ஆட்சியில் அகற்றப்பட்ட கண்ணகிசிலை அதே இடத்தில் நிறுவப்படும்.

● அ.தி.மு.க. ஆட்சியில் உயர்த்தப்பட்ட பேருந்து கட்டணங்கள், ரயில் கட்டண அளவுக்குக் குறைக்கப்படும்.

● ஜெயலலிதா ஆட்சியில் சீர்குலைக்கப்பட்ட எம்.ஜி.ஆர். திரைப்பட நகரை, மீண்டும் புதிதாக உருவாக்குவோம்.

● நடிகர் திலகம் சிவாஜிக்கு சிலை மற்றும் மணி மண்டபத்தை விரைவில் அமைப்போம்.

● காமராஜர் பிறந்த நாளாம் ஜூலை 15ந்தேதியை கல்விக் கண் திறந்த நாளாக அறிவித்து பள்ளிகளில் விழா எடுப்போம்.

● சென்னையிலும், மற்ற மாநகரங்களிலும் புதிய புறநகர்கள் நிர்மாணிக்கப்படும்.

● கூட்டுறவு தேர்தல் உடனடியாக நடத்தப்படும்.

● விளையாட்டரங்கங்கள் இல்லாத மாவட்டத் தலைநகரங்களே இல்லை யென்ற நிலை உருவாக்கப்படும்.

● தமிழை மத்திய ஆட்சிமொழிகளில் ஒன்றாக ஆக்குவதற்கு பாடுபடுவோம்.

● தமிழகச் சட்டமன்ற மேலவை மீண்டும் கொண்டு வரப்படும்.

***

இந்தப் பட்டியல்; கழகச் சொற்பொழிவாளர்கள் ஒவ்வொருவர் கையிலும் எப்போதும் இருக்க வேண்டும்.

ஜெயா அரசின் அண்மைக் கால ஊழல்கள் பற்றிய எனது அறிக்கைகளும், கட்டுரைகளும் முழுமையாக முரசொலியில் வெளி வந்துள்ளன. அவற்றையும் படித்து குறிப்பெடுத்துக் கொண்டால் - மேடைக்கு மெத்தவும் பயன்படும்.

உடன்பிறப்பே, தேர்தல் களத்துக்குத் தேவையான கணைகளை; வெறும் காகிதக் கணைகளாக அல்லாமல், கருத்துக் கணைகளாக உன் கையிலே கொடுத்துள்ளேன்.

பயன்படுத்த வேண்டியது உன் பொறுப்பு - உன்னைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது நமது கழகத்தின் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், சிற்றூர்க் கழக நிர்வாகிகளின் பொறுப்பு.

இக்கடிதத்தை உனக்கு அனுப்பிவிட்டு நான் தெற்குச் சீமை நோக்கிக் கிளம்புகிறேன்; தேர்தல் பிரச்சார சுற்றுப்பயணம்தான்!

"களைப்பாக இல்லையா?" என்று நீ கேட்பது புரிகிறது - களைப்புப் போக்கும் மருந்து தேடித்தானே உன்னை நாடி வருகிறேன்.

அன்புள்ள,

மு.க.

20-04-2006

3217. வெற்றியின் அளவு விரிகிறது!

உடன்பிறப்பே,

எத்தனை பேச்சுக்கள் உண்டோ, அத்தனையும் பேசி விட்டார்கள்! எத்தனை ஏச்சுக்கள் உண்டோ அத்தனையும் கொட்டித் தீர்த்து விட்டார்கள். நான் கூட, இவர்கள் அணி மாறும்போது கொள்கை ரீதியான கருத்து மோதுதல்களுக்கு மட்டுமே முதலிடம் கொடுப்பார்கள் என்று கருதியிருந்தேன். ஆனால் அதற்கு மாறாக - இவர்கள் பழகிய பாசத்தையே குழி தோண்டிப் புதைத்து விட்டு, பாம்பு விஷம் கக்குவதுபோல் மேடைக்கு மேடை கக்குகிறார்கள். தேர்தலில் நான் நிற்பதற்கே தகுதியில்லையென்று எனது வேட்பு மனுவை நிராகரிக்கு மாறு தேர்தல் கமிஷனுக்கே மனுப் போடுகிறார்கள்.

சூழ்ச்சிக்காரி -

சூனியக்காரி -

சண்டாளி -

சதிகாரி -

என்று யாரை ஆத்திரம் கொப்பளிக்க அர்ச்சித்தார்களோ! அவரை இன்றைக்கு ஆராதனை செய்திட - "அம்பாள் தோத்திர"ப் பாடல்களை மனப்பாடம் செய்து, அவற்றை மண்டியிட்டபடி ஜெபித்திட பயிற்சி எடுத்துக் கொண்டு பவனி வருகிறார்கள்.

எதுவுமே பலிக்கவில்லை, என்ன செய்வார்கள்! இடி விழுவது போல உளவுத் துறையினர் செய்திகள் உரைக்கின்றனர் -

உண்மையைச் சொல்லாவிட்டாலும், மனச்சாட்சி குத்திக் குடையும் என்பதால் பெரிய அதிகாரிகள், திகைக்கிறார்கள் - திண்டாடுகிறார்கள் - திணறித் திணறி அடிமேல் அடி வைத்து மெதுவாக நடந்து சென்று. "அம்மையே! மக்கள் தீர்ப்பு, நாம் மகிழ்ச்சி யடைவது மாதிரி அமையாது போலிருக்கிறது" என்று ஈனக்குரலில் இயம்பத் தொடங்குகிறார்கள்!

"ஏன்? என்ன? நாம் தோல்வி அடையப் போகிறோமா?" என்று அம்மை ஆத்திரப்படுகிறார்.

"இல்லையம்மா, அப்படிச் சொல்ல மனம் வரவில்லை - அவர்கள் ஜெயிக்கப் போகிறார்கள்" என்று தான் சொல்ல வந்தோம்.

"எப்படி மேன்? எப்படி அவர்கள் ஜெயிப்பார்கள்?"

"பிரதான கல்லூரி கருத்துக் கணிப்பு கூட, கடைசியாக வந்ததில் குறைத்துக் காட்டினால்கூட அந்த அணிக்கு 180 வரையில் என்று வந்திருக்கிறது! நம்ப அணிக்கு ரொம்ப ரொம்பக் குறைவு!"

"அப்படியா? நான் தொங்கு சட்டசபை வந்தாலும் வருமென்று, சசி புருஷனிடம் 500 கோடிவரை கொடுத்து வைத்திருக்கிறேனே! குதிரை வியாபாரத்துக்கு?"

"ஆமாம் தாயே! நீங்க தான் தேர்தலுக்கு முன்பே எத்தனையோ குதிரைகளை கோடி கோடியா கொட்டிக் கொடுத்து வாங்கி விட்டீர்களே!"

"அட, அதுங்க எதுக்கய்யா பிரயோஜனம்? குதிரைகளா அதுங்க? கொஞ்சம் ஏமாந்து இருந்தால் நமக்கே குழி பறிச்சாலும் பறிக்கிற ஜென்மங்கள்!"

"ஆமாம் அம்மா! அவுங்க உங்களை நினைத்துப் பயப்படுறாங்க - நீங்க அவுங்களை நினைத்துப் பயப்படுறிங்க! பாம்பைக் கண்டு மனுஷனும், மனுஷனைக் கண்டு பாம்பும் பயப்படுகிற மாதிரி!"

"அதிருக்கட்டும் - இப்ப எனக்கு நீங்க சொல்ற ரிசல்ட்டை நினைச்சா, இருதயமே நின்னுடும் போல இருக்கே - ஏன் மேன்? நீங்க சொல்றது நிஜம்தானா? அவுங்களுக்கு 180க்கு மேலயா வருதாம்? - "

"ஆமாம் அம்மா!"

"அப்படின்னா ஒண்ணு செய்யுங்க!"

"சொல்லுங்க!"

"எட்டாம் தேதி முடியிற வரையிலாவது அந்த 180 என்பது நமக்குன்னு சொல்லிகிட்டு இருங்க!"

"அதிலே என்னம்மா பிரயோஜனம்?"

"ஆமாய்யா! அந்த நாலு நாளாவது நான் முதலமைச்சரா இருந்துட்டுப் போறேனே?"

"அப்பறம் எங்க துறைக்கே ஒரு களங்கம் வந்துடுமே?"

"அட போய்யா! இதுவரையில் வராத களங்கமா இனிமே வரப்போகுது? ஞாபகமிருக்கட்டும்! நமக்கு எந்தக் களங்கம் வந்தாலும் அதை வெளியில காட்டாம நம்மைத் தூக்கிப் பிடிக்க - நிரந்தரமா ஒரு கூட்டம் இருக்கு!"

★★

அன்பு உடன்பிறப்பே,

அதிகாரிகள் வட்டத்திலும், ஆளுங்கட்சி வட்டாரத்திலும் இப்படி உரையாடல்கள் ஆரம்பமாகி விட்டன.

நமது வெற்றியின் அளவும், எண்ணிக்கையும் மேலும் மேலும் உயர்வதற்கான வாய்ப்புகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன.

நாம் கொடுத்துள்ள வாக்குறுதிகள், நமது தேர்தல் அறிக்கையில் தெரிவித்துள்ள அடித்தட்டு மக்கள், ஏழை, எளியோர், நடுத்தர வர்க்கத்தினருக்கானப் புரட்சிகரத் திட்டங்கள், அறிவிப்புகள் இவற்றையெல்லாம் நிறைவேற்றிடத் தேவையான வழிமுறைகளை நாம் வகுத்திடுவதற்கான சிந்தனையினூடே, நீயும், உன் போன்ற உடன்பிறப்புகளும் செயல்வீரர்களும் கண்ணுக்குத் தெரியும் வெற்றியைக் கை நழுவ விட்டு விடாமல்; களத்து மேட்டுத் தானியத்தை வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்க்கும் விவசாயி போல அக்கறையுடன் பணியாற்றினால், அந்த வெற்றி உறுதிப்படுவதில் உமியின் நுனியளவு கூட ஐயமில்லை என்பதை நம்பிக்கையுடன் கூறுகின்றேன்.

அன்புள்ள,

மு.க.

4-5-2006

3218. பொருத்தமாக அமைந்த - புத்தர் ஞான ஒளி பெற்ற நாள்!

உடன்பிறப்பே,

27-4-2006 அன்று தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்துக்காக வேலூர் சென்ற போது, இடையே பல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வேண்டியிருந்ததால், தேர்தல் ஆணையம் வகுத்திருந்த நேரமான இரவு 10 மணிக்கு ஒரு நிமிடம் பாக்கியிருந்தபோது தான் மேடையில் ஏறினேன். மைதானத்தில் கூடியிருந்த பல லட்சக்கணக்கான மக்களைப் பார்த்துச் சொன்னேன்; அந்த ஒரு நிமிட நேரத்துக்குள்;

"இன்று வேலூர்க் கோட்டை வெளி மைதானத்தில் சந்திக்கிறோம். இன்னும் சில நாட்களில் சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் சந்திப்போம்" என்று!

அப்படியே சந்தித்திடும் வாய்ப்பை என் தமிழ் மக்களே எனக்கு வழங்கி விட்டனர்.

ஆம்! அந்த நாள் புத்தர் ஞானோதயம் பெற்ற நாளாக ஆகிவிட்டதுதான் பெருமைக்குரியதும் - பெரும் சிந்தனைக்குரியதுமாகும். ஐந்தாவது முறையாக அடியேன் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள நாள், புத்தர் ஞானோதயம் பெற்ற நாள்!

கோட்டைக்குள் நாம் நுழையும்போது, கோட்டை கொத்தளங்கள் மிகுந்த நாட்டை விட்டு வெளியேறி - நானில மக்களின் இதயங்களில் குடியேறி விட்ட கௌதம புத்தர் ஞானோதயம் பெற்ற நாள் கொண்டாடப்படுவது, சிந்தனைக்குரியதல்லவா!

இதோ என் சிந்தனை, 1942ஆம் ஆண்டு அண்ணா அவர்களின் "திராவிட நாடு" இதழின் பக்கம் போகிறது. அதே ஆண்டில் தான் அந்த இதழில் 'புத்தர் புன்னகை' என்ற தலைப்பில்

அண்ணாவின் கட்டுரை! "இளமைப்பலி" என்ற தலைப்பில் நான் எழுதிய கட்டுரை! - அதாவது 64 ஆண்டுகளுக்கு முன்பு எழுதியது.

அண்ணா, பெரியாருடன் வட நாட்டுப் பயணம் சென்ற பொழுது "சாரநாத்" என்னுமிடத்தில் புத்தர் சிலையொன்றைக் காணுகிறார். அந்தச் சிலை, தூண்டிவிட்ட சிந்தனையில் ஓர் எழுத்துச் சித்திரம் தீட்டுகிறார். அதற்குத் தலைப்பு "புத்தர் புன்னகை" என்பதாகும்.

இந்த 13-5-2006 அன்று, புத்தர் ஞானோதயம் பெற்ற நாளும் பொருத்தமாக இணைந்ததால், அண்ணா தீட்டிய "புத்தர் புன்னகை"யைத் தேடியெடுத்து எழுத்து மாறாமல் அப்படியே இக்கடிதத்தில் இணைத்து வழங்குகிறேன்; அது வருமாறு :-

தோழன் :

சித்தார்த்தரே! சிந்தை நொந்தவர் போல் நீர் இருப்பானேன்? உமக்கென்ன குறை? நீரோ கீர்த்தி வாய்ந்த மன்னரின் மகன்! சாம்ராஜ்ய சித்திரம் உமக்கு, மனோரம்மியமான மாளிகை இருக்கிறது. சிங்காரத் தோட்டமிருக்கிறது. அதோ பாரீர், நீலப் பட்டாடை அணிந்த மயிலாள் பச்சைக் கம்பளி மீது நடனமாடுகிறாள். குயில் கூவுகிறது. மயிலின் சாயல், குயிலின் இனிய குரல், தென்றல் போன்ற குணம் கொண்ட தர்ம பத்தினியும், செல்வக் குழந்தையும் உமக்கு உள்ளனர். இவ்வளவும் இருக்க நீர் ஏன் முக வாட்டத்துடன் இருக்கிறீர்? சந்திரனுக்கு களங்கம் உண்டு. உமக்கு அதுவுமில்லை. ரோஜாவில் முள்ளுண்டு. உமது வாழ்க்கை முள்ளில்லாத ரோஜாவாயிற்றே! சுருதியுடன் சேர்ந்த சங்கீதம் போன்று உள்ள உமது வாழ்க்கையில், வசீகரம் இருக்கக் காரணமிருக்கிறதே தவிர, விசாரத்துக்குக் காரணம் இல்லையே! அரண்மனை உம்மை அழைக்கிறது! மணிமுடி உமக்குச் சித்தமாக இருக்கிறது. கொலு மண்டபத்தில் மந்திரி பிரதானிகள், இளவரசர் என்றையத் தினம் சிம்மாதனமேறுவார் என்று ஆவலோடு காத்துக் கொண்டிருக்கின்றனர். வாழ்க்கை உம்மிடம் கொஞ்சி விளையாடுகிறதே, வலிய அணையும் சுகத்தைப் பெற்றும், வாட்டம் உமக்கு ஏன்?

சித்தார்த்தர் :-

நண்பா? என் சிந்தனையைக் கெடுத்து விட்டாய். நீ விவரித்த வசீகரங்கள் என்னை வாத்சல்யத்துடன் வரவேற்கின்றன. குதூகலமூட்டப் பலருண்டு. ஆனால், சந்திரனை கருமேகம் பிடித்து மறைப்பது போல், என் வாழ்க்கை வசீகரத்தை ஒரு வாட்டம் வதைக்கிறது. சந்திரன் மேகத்தை மிரட்டி அடித்து விட்டு மினுக்கிக் கொண்டு, வரக் கண்டிருக்கிறேன். ஆனால், நானோ, வாட்டத்தினிட மிருந்து விடுதலை பெறுவது முடியாத காரியம்.

தோழன் :-

இளவரசே! சோகத்தின் காரணமென்ன? மன்னிக்க வேண்டும். மதனனின் கணைகள்.....

சித்தார்த்தர் :-

சீச்சி! என் மனைவியின் அன்பெனும் கேடயத்தின் முன்பு, அக்கணைகள் கூர் மழுங்கிக் கீழே விழும்! என்னை வதைப்பது அதுவல்ல.

தோழன் :-

வேறு காரணம் யாதாக இருக்கும்?

சித்தார்த்தர் :-

மல்லிகையும், மனோரஞ்சிதமும் தூவித் தானிருக்கிறது பஞ்சணையின் மீது. தென்றல் வீசுகிறது. நிலவு நடனமாடுகிறது! யாழ் ஒலிக்கிறது! ஆம்! இவ்வளவையும் நுகர்ந்து இன்பத்தில் ஈடுபட ஆவலோடு பஞ்சணைக்கருகில் சென்றால் மலரணை மீது மங்கை இல்லை. சீறும் நாகமிருக்கிறது! என் வாழ்க்கைப் பஞ்சணையில் சீறும் நாகத்தை நான் கண்டேன். கலக்கம் ஏற்படாதோ? கூறு.

தோழன் :-

சீறும் நாகம் எங்கே?

சித்தார்த்தர் :-

எங்கேயா? எங்கும் அதனைத்தான் காண்கிறேன். சுகம், போகம், ஆட்சி, அன்பு, இவைகள் தவழும்

வாழ்க்கைப் பஞ்சணையில் படுத்துக் கொண்டிருப்பது, வறுமை, மூப்பு, நோய், மரணம் என்னும் நாலு தலைகள் கொண்ட நாகம், அதனைக் கண்ட பிறகு எனக்கு வாழ்க்கைப் பஞ்சணையில் படுக்க மனமில்லை.

தோழன் :-

இதைத் தான் கூறினீரோ? நன்று! நன்று! பால் போல் காயும் நிலவு சில நாள் தேயும். இருளும், ஒளியும் இன்ப துன்பமும் இயற்கை தானே? இதனை மாற்ற நாமா அதிகாரிகள்? சுகம் கிடைக்கும்போது அதனை நுகருவது; துக்கம் நேரிடும் காலையில் சகித்துக் கொள்வது என்பதைத் தவிர, வேறு வழி ஏது?

சித்தார்த்தர் :-

புது வழி காண்பேன். போகங்களைத் துறந்து அரசை விட்டு நீங்கி, அலைந்து, திரிந்து, இன்பமும் துன்பமும், பிணைந்துள்ள முடியை அவிழ்த்து விடும் "வித்தை"யைக் கற்பேன். அந்தப்புரத்து அலங்காரியும் வேண்டாம். அரச போகமும் வேண்டாம். உண்மை உணரும் வேலையில் ஈடுபடுவேன். தவசிகளை அழைப்பேன். அவர் தம் கருத்துகளைச் செவி மடுப்பேன் நாலு தலை நாகத்தை நசுக்குவேன்.

★

புத்தருக்கும், அவரது தோழருக்கும் மேலே தீட்டியுள்ளது போன்ற பேச்சு நடந்திருக்கக் கூடும். இளவரசர் துறவியாகும் முன்னம் தமது தோழருடன் கலந்து பேசியிருப்பார். இல்லையேனும், அவருடைய மனத்திற்குள்ளாகவேனும் இத்தகைய கருத்துப் போர் நடைபெற்றுத்தான் இருக்கும். இறுதியில் சித்தார்த்தர் துறவுக்கோலம் பூண்டார்! புத்தரானார்.

கருணை ததும்பும் பார்வையால் அவர் கசடர்களின் கல் மனத்தையும் கரைத்தார். புன்சிரிப்பால் புரோகிதரின் பொச்செரிப்பைப் பொசுக்கினார். அன்பினால், ஆரியப் புரட்டல்களை புறமுதுகிட்டு ஓடச் செய்தார். கொலையை வேள்வியென்றும், குருட்டுத்தனத்தைச்

சாத்திரமென்றும், ஆபாச ஆட்டங்களை ஆண்டவன் பணி என்றும், சாதிச் சனியனை கடவுள் கட்டளை என்றும் கூறி மக்களைச் சிறைப்படுத்திய பார்ப்பனீயத்தைப் புத்தரின் புரட்சி, மூலைக்கு விரட்டி விட்டது. புத்த மார்க்கம் வஞ்சக வர்த்தகரை வீழ்த்திற்று. ஆனால்....

இந்தியாவில் தோன்றிய புத்த மார்க்கம் இந்தியாவில் இல்லை! சீன நாட்டில் இருக்கிறது! புத்தரின் மறைவுக்குப் பிறகு, புதருக்குள் மறைந்திருந்த ஆரிய அரவம் வெளிக் கிளம்பி, மீண்டும் தனது விஷப் பல்லுக்கு வேலை தேடிக் கொண்டது. புத்த மதம் இந்தியாவிலே இடம் பெற்று இருந்திருப்பின், நாட்டு நிலையும், மக்கள் நிலையும் இப்போது சீனாவில் இருப்பதைப் போல இருந்திருக்கும்.

அன்று சுதேசமித்திரன் எழுதியது, பாரதத் தாய் ஈன்றெடுத்த புத்த பகவான் உபதேச மொழிகளே, சீனர் பின்பற்றும் "மதம்" என்று! கோபால கிருஷ்ணரின் லீலைகளுக்கு மதிப்பைத் தரும் மித்திரனுக்கு இந்த வாசகங்களை எழுதும்போது, துக்கமோ, வெட்கமோ ஏற்பட்டிருக்காது. பெருமையும், பூரிப்பும் உண்டாகி இருந்திருக்கும். புத்தரின் புரட்சி வேகத்தை நாடு கடத்தியவர்கள் நமது மூதாதையர்கள் என்ற எண்ணம் ஆரியருக்குப் பூரிப்பையும், பெருமையையும் அளிக்கும். ஆனால், பார்ப்பனீயத்தால் பாழான நமக்கோ, படிக்கும் போது வெட்கமும் துக்கமும் பிறக்கிறது. ஆரியச் சேற்றில் ஓர் சீரிய செந்தாமரை பூத்தது! அது சீனச் சீமைக்கு சென்று விட்டது. பூத்த இடத்தில் மீண்டும் ஆரியச் சேறே இருக்கிறது. புத்த மார்க்கம் காட்டிய வழி செல்ல மறந்தோம்! வெட்கம்! துக்கம்!

புத்தர் தமது அரசைத் துறந்தவர் மட்டுமல்ல, அவரது மார்க்கமும், அவரைப் போலவே இந்தியாவை விட்டு வெளியேறி சீனம் சென்று விட்டது.

இன்று "பாரதத் தாயின் பிள்ளையான புத்தர் தந்த பொன் மொழிகளை சீனர் போதனையாகக் கொண்டு வாழ்கின்றனர்" என்று கூறிய மித்திரன், அந்தப் பொன்மொழிகள்

பிறந்த நாட்டிலே ஏன் நிராகரிக்கப்பட்டு விட்டன என்பதற்குக் காரணங்கூறுமா?

காசிக்கு அருகே, சாரநாத் என்ற இடம் இருக்கிறது. அழகிய பாட்டை! வழியில் பெரும் பகுதியில் ஒரு வேப்ப மரம், அதன் பக்கத்திலே ஒரு மாமரம் என்று பாதை அமைந்திருக்கிறது. சித்தார்த்தர் உலகில் கசப்பும், இனிப்பும், ஒன்றை ஒன்று பின்னிக் கொண்டு நிற்பதைக் கண்டாரல்லவா? சாரநாத்தில் உள்ள புத்தர் கோட்டத்திற்குச் செல்லும் பாட்டையில் இதனை நமக்கு எடுத்துக் கூறுவது போல, வேம்பும், மாவும், ஒன்றன் பக்கத்தில் ஒன்றாக நின்று காட்சி தருகின்றன. கோட்டத்தை நெருங்குகையில், வேம்பு இல்லை, மாமரங்களே உள்ளன. சித்தார்த்தர், இன்பமும், துன்பமும் உள்ள வாழ்க்கைப் பாதையைக் கடந்து அறிவு உதயம் பெற்றதும், துன்பம் துடைக்கப் பெற்று ஈடிலா இன்பம் பெற்றார் என்று கூறுகிறார்களே! அதைச் சித்தரிப்பது போல், புத்தர் கோட்டத்தையணுகும் போது பாட்டையிலே இனிய மாமரங்கள் மட்டுமே உள்ளன. புத்தர் கோட்டத்திலே ஜப்பான் சர்க்கார் தானமாகத் தந்த "மணி" தொங்குகிறது. கோட்டத்தை அடுத்தாற் போல் சீனச் செல்வர் ஒருவர் புத்தர் கோட்டமொன்று புதிதாக அமைத்துக் கொண்டு இருக்கிறார்! அங்கு புத்த விக்ரகம் சீன உருவத்துடன் காணப்படுகிறது. சாரநாத்தில் சார்ந்த புத்தர், போதனை பல புரிந்தார். ஆனால் இன்று சாரநாத் பக்த கோடிகள் தேடிச் செல்லும் இடமாக இல்லை. அதை அடுத்துள்ள காசியே புண்ணிய ஷேத்திரமாக இருக்கிறது.

"பாரதத் தாய் ஈன்றாள்; பராமரிக்கவில்லை. நான் வேறு வீடு சென்றேன்" என்று சாரநாத்தில் உள்ள புத்த உருவம் கூறுவது போல், அந்த அநீதியைக் கேட்க ஆண்மையில்லையே உங்களுக்கு என்று கேலி செய்வது போல், புன்னகை புரியக் கண்டேன். "அரச குடும்பத்தினர் நீர்! புத்தரானீர்! உம்மையே பாடுபடுத்திற்றே பார்ப்பனியம்! என்னை அது என்ன செய்யுமோ? என்று புத்தரிடம் கூற எண்ணினேன்.

பெரியார் ஈ.வெ. ராமசாமி அவர்கள் என்னுடன் இருந்தார். நேரமாகி விட்டது உணர்ந்து, தமது கைத்தடியைக் கீழே தட்டினார். சிந்தனையிலாழ்ந்து இருந்த நான் விழித்துக் கொண்டேன். காற்று அடித்துக் கொண்டிருந்தது! அந்த வெண்ணிறத் தாடி அசைந்து கொண்டிருந்தது. மீண்டும் புத்தரை நோக்கினேன். "உம்மை பார்ப்பனியம் நாடு கடத்தி இருக்கிறது. ஆனால், நீர் அன்று மூட்டிய புரட்சியை அடியோடு ஆரியம் ஒழித்து விட வில்லை. அதோ பாரீர், பார்ப்பனீயத்தின் வைரி" என்று புத்தரிடம் பெரியாரைப் பற்றி நான் கூறவில்லை. என் மனதில் எண்ணிக் கொண்டேன். அதையும் அறிந்து "நன்று! நீதி நின்று கொல்லும். ஆனால் நிச்சயம் வெல்லும்" என்று என்னை நோக்கி சாரநாத் புத்தர் கூறினது போன்றிருந்தது அந்தப் புன்னகை!

★

உடன்பிறப்பே ;

கோட்டை கொத்தளங்கள் மிகுந்த - குதூகல வாழ்வு நிறைந்த இடத்தை விட்டுப் போய், குவலயத்து மக்களின் குருதியோட்டத்துடன் கலந்து விட்ட அந்தக் கோமகனின் துறவு மனப்பான்மை, இன்று கோட்டையைப் பிடித்துள்ள நமக்கும் தேவை யென்று நான் கூறாவிடினும், அந்த மனப்பான்மைக்கு வித்திட்ட அவனது மாசற்ற உள்ளத்தை நாம் பெற்றிட நம்மைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டுமல்லவா? அதனால்தான் நாம் பொறுப்பேற்கும் நாளும், புத்தர் ஞானோதயம் பெற்ற நாளும் ஒன்றாக அமைந்தது என எண்ணி மகிழ்ந்திடுவோம் - அதற்கேற்ப நடந்திடுவோம்!

அன்புள்ள,

மு.க.

15-5-2006

3219. முகிலைக் கிழித்து வெளிவரும் முழுமதி!

உடன்பிறப்பே,

எந்தவொரு தேர்தல் முடிவாக இருப்பினும், அதில் தி.மு.கழகமோ அல்லது அதன் தோழமைக் கட்சிகளோ அதிக இடங்களைப் பெறாமல் இருந்தால், "பத்திரிகா தர்ம"த்தைப் பால பாடமாகப் படித்தவர்கள், உடனடியாக உணவு உறக்கத்தைக்கூட மறந்து விட்டு, அல்லது துறந்துவிட்டு- "கொண்டு வா பேனா! கொடு எட்டு கலம் தலைப்பு" என ஒலியெழுப்பி, நமக்கே கிலியெழுப்பும் வண்ணம் செய்திகளை ஒரு நாள் அல்ல, இருநாள் அல்ல, ஒன்பது நாட்களுக்கு குறையாமல் வெளியிடுவார்கள்.

ஆனால், இப்போது புதுவை மாநிலத்தில் உள்ளாட்சித் தேர்தல்கள் முடிவுற்று, தி.மு.க., காங்கிரஸ், கம்யூனிஸ்டு கட்சிகள், பா.ம.க., பெற்ற இடங்கள் எத்தனை, எந்த நகராட்சிகள்? எத்தனை வார்டுகள் என்ற விபரங்களை மிக மிகக் குழப்பந் தரும் வகையிலும்-

காங்கிரஸ், தி.மு.க., கம்யூனிஸ்டுகள், பா.ம.க. ஆகியவை, களத்திலேயே நிற்காமல் காணாமற் போய் விட்டதைப் போலும்-

பேரூராட்சி போன்ற 18 வார்டுகள் கொண்ட காரைக்காலில் தே.மு.தி.க., இரண்டே வார்டுகளைப் பெற்று- பேரூராட்சித் தலைவர் பதவிக்கும் தேர்வாகியிருப்பதை, எதிர்காலத்தில் தமிழகத்தில் ஏற்படப்போகும் திருப்பத்திற்கு அறிகுறி என்றும் விபரம் புரிந்த ஏடுகளே விளாசித் தள்ளியிருக்கின்றன என்றால்,

அவைகள் வெளியிட்டுள்ள செய்திகளில் கலந்துள்ள விஷமம் வெகுளித்தனம் மிகுந்த பாமரர்களுக்கு வேண்டுமானால், வேடிக்கையில் திளைக்கும் சிறுவர்களுக்கு வேண்டுமானால், கண் எதிரே "கிலுகிலுப்பை" ஆட்டுவதுபோல இருக்கலாம்.

உண்மை என்ன என்பதைக் காரைக்காலில் அந்த நகராட்சியின் தலைவராக வெற்றி பெற்ற சகோதரியே ஓர் அறிக்கை வாயிலாக விளக்கியிருக்கிறார்.

"நான், முதலில் வார்டு உறுப்பினர் தேர்தலுக்குக் காங்கிரஸ் சார்பில் போட்டியிடுவதற்குத்தான் விண்ணப்பம் செய்திருந்தேன். ஆனால் அந்த வார்டு, கூட்டணி என்ற முறையில் தி.மு.க.வுக்கு ஒதுக்கப்பட்டு விட்ட காரணத்தால், பிறகு நான் தே.மு.தி.க.வில் சேர்ந்து நகராட்சித் தலைவருக்குப் போட்டியிட்டு வெற்றி பெற்றேன்"

இந்த வாசகம், வெற்றி பெற்றவரே ஏடுகளில் வெளியிட்ட ஒன்றாகும். தே.மு.தி.க. சார்பில் அதே காரைக்காலில் இரண்டு வார்டுகளில்தான் இரு உறுப்பினர் வெற்றி பெற்றுள்ளனர். ஆனால், அந்த நகரில் மொத்தமுள்ள 18 வார்டுகளில், 7 வார்டுகளில் காங்கிரசும், 5 வார்டுகளில் தி.மு.க.வும், வெற்றி பெற்றுள்ளதை வெளிச்சத்துக்குக் கொண்டுவர- விரும்பவில்லை நம்மை வெறுப்பது ஒன்றையே வேலையாகக் கொண்டவர்கள்!

புதுவை மாநிலத்தின் தலைநகரமாகவும் - சட்ட மன்றம் இயங்கும் இடமாகவும் உள்ள புதுவை நகராட்சியில் மொத்த வார்டுகள் 42. அங்கே நடைபெற்ற தேர்தலில், தி.மு.கழகம் 12 இடங்களிலும், காங்கிரஸ் 9 இடங்களிலும், சி.பி.ஐ. 1 இடத்திலும், புதுச்சேரி முன்னேற்றக் காங்கிரஸ் 5 இடங்களிலும், சுயேச்சைகள் 11 இடங்களிலும், அ.தி.மு.க. நாலே நாலு இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன.

புதுவை மாநகரில் மட்டும், இந்த வெற்றி அ.தி.மு.க. அணியினர்க்கு கிடைத்திருந்தால், அடேயப்பா! புதுவைக்கு எத்தனை புகழாரங்களை அந்த சில ஏடுகள் அணிவித்து வெற்றியைக் கொண்டாடியிருக்கும் தெரியுமா?

பாரதி உலவிய மண்ணில் - பார் புகழும் வெற்றி! பாரீர், பாரீர் என்றும், அரவிந்தரின் ஆசி பெற்ற பூமியில் அ.தி.மு.க. அமோக வெற்றி என்றும் ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டுக்கள் ஆகாயத்தையே கிழித்திருக்குமல்லவா?

இப்போது கழக வேட்பாளர் சீதேவி அம்மையார், இருபதாயிரம் வாக்கு வித்தியாசத்தில், ஒரு காலத்தில் "குபேர்" போன்ற ஜாம்பவான்கள் மேயர்களாக வீற்றிருந்த புதுவை மாநகராட்சியின் தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதை எவ்வளவு

லாவகமாக சில பத்திரிகைகள் மறைத்து வருகின்றன பார்த்தாயா உடன்பிறப்பே!

பாண்டிச்சேரி மாநிலத்தில் நடைபெற்ற இந்த உள்ளாட்சித் தேர்தலில், மொத்தம் ஐந்து நகராட்சிகளில் புதுவை, காரைக்காலை அடுத்து "உழவர் கரை" என்ற நகராட்சியில் மொத்த வார்டுகள் 37 என்பதில், காங்கிரஸ் 15 வார்டுகளிலும், தி.மு.க. 6 வார்டுகளிலும், சி.பி.ஐ. 4 வார்டுகளிலும், அ.தி.மு.க. ஒரே ஒரு வார்டிலும் வெற்றி பெற்ற நிலையையும் வெளிக்காட்டவே முடியாமல் சில ஏடுகள் வெட்கத்தால் தலை குனிந்து கொண்டன!

ஏனம் நகராட்சியில் மொத்த வார்டுகள் 10- அதில் 9 காங்கிரஸ் - ஒண்ணே ஒண்ணு அ.தி.மு.க.!

மாகி நகராட்சியில் காங்கிரஸ் 7, சி.பி.எம். 6 என்ற கணக்கில் வெற்றி- இருவர் சுயேச்சை!

புதுவை மாநிலக் கழக அமைப்பாளர் நமது தம்பி ஜானகிராமன் அவர்கள், நகராட்சிகளில் பெற்ற வெற்றி பற்றிய ஒரு புள்ளி விபரம் தந்தார்; அதாவது புதுவை மாநிலத்தில் உள்ள ஐந்து நகராட்சிகளிலும் மொத்தம் 122 வார்டுகளில், அ.தி.மு.க.வுக்கு 6 இடங்களில் மட்டுமே தலை தப்பியது. எஞ்சிய 116 இடங்களில் அ.தி.மு.க. படுதோல்வியைச் சந்தித்துள்ளது என்று!

நமது கூட்டணியோ 76 இடங்களில் வென்றுள்ளது.

அதைப்போலவே புதுவை மாநிலத்தில் உள்ள "கொம்யூன்கள்" என்று அழைக்கப்படும் பஞ்சாயத்துகளில் மொத்தம் 98 வார்டுகளில் காங்கிரஸ், தி.மு.க., பா.ம.க. கூட்டணி 59 இடங்களிலும் அ.தி.மு.க. 10 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன.

ஆனால்?

ஆனால்?

எத்துணை இருட்டடிப்பு இந்தச் செய்திகளுக்கு?

ஏன்? எதனால் என்பது புரிகிறதா உடன்பிறப்பே!

"முகிலைக் கிழித்து வெளிக் கிளம்பும்

"முழுமதி" என்றாரே புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்-

எத்தனை முகில்கள் சூழ்ந்தாலும்- இந்த இருட்டடிப்பு எனும் முகிலைக் கிழித்து வெளிக் கிளம்பும் முழுமதியாகவே நமது வெற்றிகள் தொடரும்!

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. கிருஷ்ணசாமி அவர்களும், புதுவை உள்ளாட்சி வெற்றியையொட்டி வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த நம்பிக்கையைத்தான் தெரிவித்துள்ளார்.

அன்புள்ள,

மு.க.

6.7-2006

3220. அம்மையார் ஆட்சி நடத்திய அழகு!

உடன்பிறப்பே,

அன்றாடம் ஓர் அறிக்கை; அவதூறுகளின் குவியலாக - அரசியல் நாகரிகத்துக்குப் புறம்பான அர்ச்சனைகளை உள்ளடக்கியதாக வெளியிட்டுத் தன் எரிச்சலைத் தீர்த்துக் கொள்ளத் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிற அம்மையார் ஜெயலலிதா அவர்கள்; ஆட்சி நடத்திய அழகை எல்லாக் கோணங்களிலும் பார்க்காவிடினும்; உடன்பிறப்பே, அவர் கோப்புகள் பார்த்த அழகை மட்டுமாவது - உன் போன்றோர் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக இந்தக் கடிதத்தில் ஒரு சில சான்றுகளை வழங்குகிறேன்.

* அ.தி.மு.க. ஆட்சியில், தம்பி துரைமுருகன், மற்றும் முன்னாள் "சீப் கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்டஸ்", கே.கே. சோமசுந்தரம் ஆகியோர் மீது -

* 135 பாரஸ்டர்ஸ் பணியிலே இருந்தவர்களை "ரேஞ்சர்ஸ்" பணிக்கு பதவி உயர்வு அளிப்பதற்காக இரண்டு லட்சம் ரூபாய் வீதம் லஞ்சம் பெற்றதாக குற்றச்சாட்டுகள் வந்ததாகக் கூறி - விஜிலன்ஸ் விசாரணை நடத்த உத்தரவு பிறப்பித்தார்கள்.

விஜிலன்ஸ் இயக்குநர் கொடுத்த அறிக்கையில் அந்தக் குற்றச்சாட்டின் மீது எந்த சாட்சியமும் கிடைக்கவில்லை என்றும், எனவே குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும் தெரிவித்து விட்டார்.

நடவடிக்கைகளை கைவிட்டு விடலாம் என்று ஆணை கோரி துறையிலிருந்து கோப்பு அனுப்பப்பட்டது. அந்தக் கோப்பில் தலைமைச் செயலாளர் 22-1-2004 அன்று கையெழுத்திட்டு பொதுப் பணித்துறை அமைச்சர், முதல் அமைச்சர் ஆகியோருக்கு கோப்பினை அனுப்பியிருக்கிறார்.

ஆனால் அந்தக் கோப்பு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களால் ஆட்சியை விட்டுப் போகும் வரை கையெழுத்திடப்படவே இல்லை.

தேர்தல் முடிவுற்று முடிவுகள் வரும் வரை அந்தக் கோப்பு வைக்கப்பட்டு, 22.1.2004 அன்று அனுப்பப்பட்ட கோப்பு 28 மாதங்களுக்குப் பின்பு, கையெழுத்திடப்படாமல் வைக்கப்பட்டு, திரும்ப அனுப்பப்பட்டுள்ளது.

* நலிந்த கலைஞர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிதி உதவியை கழக ஆட்சியில் 18-9-1989 அன்று 150 ரூபாயிலிருந்து 250 ரூபாயாக உயர்த்தியதுடன், நலிந்த கலைஞர்களின் எண்ணிக்கையும் 100லிருந்து 300 ஆக உயர்த்தப்பட்டது.

மீண்டும் தி.மு. கழக ஆட்சி 1996ஆம் ஆண்டு அமைந்தபோது, நலிந்த கலைஞர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிதி உதவி 400 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக உயர்த்தப்பட்டதுடன், ஆண்டுதோறும் 300 பேருக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த இந்த உதவித் தொகை 500 பேருக்கென உயர்த்தி வழங்கப்பட்டது.

1996-2001 தி.மு. கழக ஆட்சியில் 4267 நலிந்த கலைஞர்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்றனர்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் தேர்தலுக்கு முன்பு அவசர அவசரமாக கலைமாமணி விருது வழங்கும் விழா நடத்தப்பட்டது. 25-2-2006 அன்று நடைபெற்ற அந்த விழாவில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா நலிந்த கலைஞர்களுக்கு திங்கள்தோறும் வழங்கப்பட்டு வரும் நிதி உதவியை ரூ.500லிருந்து ரூ.750 ஆக உயர்த்தி வழங்கப்படும் என அறிவித்தார். அதற்கான ஆணை வெளியிடுவதற்கான கோப்பு, அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டு அனுப்பப்பட்டது. நிதித்துறை இதற்கு இசைவளித்து, அதன் காரணமாக அரசுக்கு கூடுதலாக 1.55 கோடி ரூபாய் செலவாகும் என்றும் குறிப்பிட்டு, அந்தக் கோப்பு முதல் அமைச்சரிடம் ஆணை பெற வேண்டும் என்றும் தெரிவித்தார். ஆணை வேண்டி, இக்கோப்பு நிதித் துறை செயலாளர், தலைமைச் செயலாளர் பார்வைக்குப் பின் முன்னாள் முதலமைச்சர் அவர்களுக்கு கோப்பு அனுப்பப்பட்டபோதிலும், அவர்கள் ஆட்சி முடிகிற வரை அந்தக் கோப்பில் கையெழுத்திடவே இல்லை.

எனவே திட்டங்களை அறிவித்து விட்டு, அதனைச் செய்ய மனமின்றி விட்டுச் சென்று விட்டார்கள் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. தற்போது மீண்டும் தி.மு.க. ஆட்சி வந்ததும்,

அந்தக் கோப்பு திரும்பவும் என்னிடம் வந்தது. ஜெயலலிதா அறிவித்ததாயிற்றே, அதை நாம் செய்ய வேண்டுமா என்ற எண்ணத்தோடு நடந்து கொள்ளாமல், அந்த அம்மையார் 750 ரூபாய் என்று அறிவித்ததை உயர்த்தி நலிந்த கலைஞர்கள் உதவி 1000 ரூபாயாக வழங்க நான் ஆணையிட்டேன்.

* தி.மு.கழக ஆட்சியில், திரு. மு.க. ஸ்டாலின் சென்னை மாநகர மேயராக இருந்தபோது - தன்னுடைய பதவியை தவறாகப் பயன்படுத்தி - மாநகராட்சிக்குச் சொந்தமான - எழும்பூர் பகுதியில் உள்ள ஓர் இடத்தினை - ஆர்க்காடு வீராசாமியும், அவரது குடும்பத்தினரும் கைப்பற்றிக் கொள்ள உதவிகரமாக இருந்தார் என்றும் அதன் காரணமாக அரசுக்கும், மாநகராட்சிக்கும் ஒன்பது கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்பட்டது என்றும் ஒரு குற்றச்சாட்டு கூறப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டின் மீது விஜிலன்ஸ் துறை விசாரணை நடத்தியது. விஜிலன்ஸ் துறையினர் நடத்திய விசாரணையில் இறுதியாக நிலம் விற்றது பற்றி முறையான விற்பனை பத்திரங்கள் இருப்பதாலும், பதிவு செய்யப்பட்டது உண்மை என்பதாலும், விற்பனை 14-7-1995க்கும் 30-10-1995க்கும் இடையே பதிவு செய்யப்பட்டிருப்பதாலும் இந்தக் காலக் கட்டத்தில் மு.க. ஸ்டாலின் சென்னை மாநகர மேயராக இல்லை என்பதாலும், இந்த விற்பனையில் அவர் எந்தவிதமான உதவியோ குறுக்கீடோ, பரிந்துரையோ செய்யவில்லை என்பது உறுதியாகிறது என்றும் ஆர்க்காடு வீராசாமி அவர்களுக்கும் இதற்கும் எந்தவிதமான தொடர்போ, குறுக்கீடோ இல்லை என்றும், வேறு எந்த பொது ஊழியருக்கும் இந்த பிரச்சினைக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்றும் தெரிவித்தது.

இந்தக் குற்றச்சாட்டிற்கான எந்தவிதமான ஆதாரமும் இல்லாததால், விஜிலன்ஸ் துறையினர் இந்தக் குற்றச்சாட்டின் மீதான நடவடிக்கைகளை கைவிடலாம் என்று பரிந்துரை செய்தனர். நடவடிக்கைகளை கைவிடுவதற்கு அனுமதி கோரிடும் கோப்பு, 2004ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் அனுப்பப்படுகிறது. குற்றச்சாட்டு 9 கோடி ரூபாய் என்பதால், இதைப் பற்றி மேலும் விரிவாக விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று அதிகாரிகள் கோப்பினைத் திரும்ப அனுப்பி விடுகிறார்கள். மீண்டும் விசாரணை நடத்தப்பட்டு, அதிலே

எந்தவிதமான தவறுதலும் நடைபெறவில்லை என்றும் தொடர் நடவடிக்கை எதுவும் எடுக்க இயலாது என்றும் கோப்பு மீண்டும் பொதுப்பணித் துறை அமைச்சருக்கும், முதல் அமைச்சருக்கும் (ஜெயலலிதாவுக்கும்) அனுப்பப்படுகிறது. முதலமைச்சரின் செயலாளர் ஓராண்டு காலம் தன்னிடம் கோப்பினை வைத்துக் கொண்டிருந்து விட்டு, 5-2-2005 அன்று மீண்டும் பொதுத் துறை செயலாளருக்கு கோப்பினை திரும்ப அனுப்புகிறார். அதில் குற்றச்சாட்டுகள் எல்லாம் முறையாக விசாரிக்கப்பட்டதா, விஜிலன்ஸ் துறையினரால் மீண்டும் விசாரணை நடத்தப்பட வேண்டுமா என்று கேட்டு கோப்பு திரும்ப அனுப்பப்படுகிறது. அந்தக் கோப்பில் விஜிலன்ஸ் கமிஷனர் எழுதும்போது விஜிலன்ஸ் துறையினரால் மறு விசாரணை நடத்தப்பட்டாலும் எந்தவிதமான பலனும் இருக்காது என்றும், மேற்கொண்டு நடவடிக்கையை கை விட்டு விடலாம் என்றும் எழுதுகிறார். தலைமைச் செயலாளரும் அதனை ஏற்றுக் கொள்கிறார். பொதுப்பணித் துறை அமைச்சரிடமும், முதல் அமைச்சரிடமும் இதற்கான ஆணை கோரி கோப்பு தலைமைச் செயலாளரால் 7-4-2005 அன்று அனுப்பப்படுகிறது. அந்தக் கோப்பு ஆட்சி மாறுகின்ற வரையில் திரும்ப வரவே இல்லை. 13 மாதங்களுக்குப் பிறகு ஆட்சி மாறிய பிறகு தான் கோப்பு திரும்பியது. புதிய ஆட்சியில் அந்தக் கோப்பு திரும்பவும் சுற்றுக்கு அனுப்பப்பட்டு 8.6.2006 அன்று நான் அதில் கையெழுத்திட்டேன்.

* முன்னாள் முதல் அமைச்சர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 12.9.2003 அன்று ஓர் அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கையில் ஈரோடு மாவட்ட ஆயுதப் படைப் பிரிவில் காவலராகப் பணியாற்றிய திரு. எம். மயில் சாமி என்பவர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருக்கும்போது திடீரென உடல் சுகவீனமுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 12-9-2003 அன்று உயிரிழந்து விட்டது கண்டு தான் மிக்க துயருற்றதாகவும், மிகுந்த வருத்தத்தை அளிப்பதாகவும் தெரிவித்து, அவரது குடும்பத்திற்கு முதல் அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் வழங்க உத்தரவிட்டதாகவும் முதல் அமைச்சர் அம்மையார் தெரிவித்திருந்தார். இந்த அறிக்கை தினத்தந்தி 13-9-2003 தேதியில் வெளிவந்தது.

முதல் அமைச்சர் ஜெயலலிதா 12-9-2003 அன்று அறிவித்தவாறு இந்த ஒரு இலட்சம் ரூபாய் மயில்சாமி யின் குடும்பத்திற்கு வழங்கப்பட்டதா?

இதற்கான கோப்பு முதலமைச்சரின் அறிவிப்புக்கு பதினைந்து மாதங்களுக்குப் பிறகு 22-12-2004 அன்று முதலமைச்சர் அலுவலகத்திற்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. 22-12-2004 அன்று அனுப்பப்பட்ட கோப்பு முதல் அமைச்சர் அலுவலகத்திலிருந்து மீண்டும் திரும்ப வரவில்லை என்றும், இறந்து போன மயில்சாமியின் தாயார் அந்தத் தொகையைக் கேட்டு வலியுறுத்துவதாகவும், கோப்பினை திரும்ப அனுப்பக் கேட்டு ஒரு குறிப்பு முதலமைச்சர் அலுவலகத்திற்கு 14-5-2005 அன்று அனுப்பப்படுகிறது.

மயில்சாமி இறந்தது 11-9-2003

முதலமைச்சர் 1 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்தது 12-9-2003.

அதற்காக ஒப்புதல் கேட்டு கோப்பு முதலமைச்சர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட தேதி 22-12-2004. அதாவது 15 மாதங்களுக்குப் பிறகு. இந்தக் கோப்பு அதற்குப் பிறகும் 9 மாத காலம் வரை திரும்ப வராத காரணத்தால் அந்தக் கோப்பினை உடனடியாக திரும்ப அனுப்பக் கோரி உள்துறை, முதலமைச்சர் அலுவலகத்திற்கு குறிப்பு அனுப்பிய தேதி 14-9-2005, அதாவது 9 மாத காலத்திற்குப் பிறகு. இதற்குப் பிறகாவது அந்தத் தொகை வழங்கப்பட்டதா?

24-1-2006 அன்று மீண்டும் உள்துறையிலிருந்து ஒரு கோப்பு தயாரிக்கப்பட்டு, ஒரு இலட்சம் ரூபாய் பாதிக்கப்பட்டவரின் குடும்பத்திற்கு வழங்க ஒப்புதல் கோரி முதலமைச்சர் அலுவலகத்திற்கு கோப்பு அனுப்பப்படுகிறது. இறுதியாக அந்தக் கோப்பில் நிதித் துறை செயலாளர் 27-1-2006 அன்று கையெழுத்திட்டு முதலமைச்சர் அலுவலகத்திற்கு கோப்பு அனுப்பப்பட்ட போதிலும், கடைசி வரை இந்தக் கோப்பில் முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா கையெழுத்திட்டு திரும்ப அனுப்பவே இல்லை.

தற்போது அந்தக் கோப்பு எனக்கு அனுப்பப்பட்டு நான் 11-6-2006 அன்று கையெழுத்திட்டு திரும்ப துறைக்கு அனுப்பியிருக்கிறேன் என்றால், கடந்த கால ஆட்சியில் முதல் அமைச்சரின் அறிவிப்புகள் எல்லாம் எந்த அளவிற்கு செயல்படுத்தப்பட்டன என்பதற்கு இது ஒன்றே தக்க சான்றாகும்.

* 1996-2001 ஆம் ஆண்டுகளில் - சென்னை மாநகர மேயராக மு.க. ஸ்டாலின் இருந்த காலத்தில் சென்னை மாநகரத்தில் உள்ள சாலைகளை தார்ச்சாலைகளாக மாற்றுவதற்கு ஏற்கனவே இருந்த தார்ப்பகுதியை பிரித்தெடுப்பதற்கு பயன்படுத்தப்படும் ரசாயனப் பொருளை வாங்குவதில் முறைகேடுகள் நடந்ததாக குறை கூறி, விஜிலன்ஸ் துறையினரால் விரிவான விசாரணை நடத்தப்பட்டது. (Detailed Enquiry)

டெண்டர் கோரி வழங்கப்பட்டதிலும், ரசாயனப் பொருள் வாங்கி வழங்கியதிலும், எந்த விதமான முறைகேடுகளும் நடை பெறவில்லை என்று விஜிலன்ஸ் துறையினரால் முடிவு செய்யப் பட்டது.

மேயராக இருந்த ஸ்டாலினோ மற்ற மாநகராட்சி அதிகாரிகளோ எந்த வகையிலும் தவறு செய்தார்கள் என்பதற்கான எந்தவிதமான ஆதாரங்களோ, சாட்சியங்களோ கிடையாது என்று விஜிலன்ஸ் துறையின் விரிவான விசாரணை தெளிவுபடுத்தியது.

விஜிலன்ஸ் துறையின் இந்த அறிக்கையை விஜிலன்ஸ் ஆணையமும் ஏற்றுக் கொண்டு, மு.க. ஸ்டாலினுக்கு எதிரான மேல் நடவடிக்கையை கை விடலாம் என்று பரிந்துரைத்தது.

இந்தப் பரிந்துரையை ஏற்றுக் கொள்ளலாம் என்ற கோப்பு பொதுப்பணித் துறை அமைச்சருக்கும், முதலமைச்சருக்கும் தலைமைச் செயலாளரால் 14-9-2004 அன்று சுற்றுக்கு அனுப்பப்பட்டது.

ஆனால் அதற்குப் பின் கடைசி நேரம் வரை இந்தக் கோப்பில் துறையின் அமைச்சரோ, அன்றைய முதல் அமைச்சரோ கையெழுத்திட்டு துறைக்கு அனுப்பவே இல்லை.

இதுதான் இருபது மணி நேரம் உழைத்த இலட்சணம். எந்த அளவிற்கு எதிர்க்கட்சிகள் மீது பழிவாங்கும் நோக்கோடு அ.தி.மு.க. அரசு நடந்து கொண்டது என்பதற்கும் அம்மையார் ஆட்சி நடத்திய அழகிற்கும் தக்க சான்றுதான் இந்தக் கோப்பு.

அன்புள்ள,

மு.க

1-9-2006.

3221. அம்மையார் ஆட்சி நடத்திய அழகு! (2)

உடன்பிறப்பே,

நேற்றைய தினம் சில கோப்புகள் எந்த அளவிற்கு முதல் அமைச்சர் கையெழுத்துக்காக ஆண்டுக் கணக்கில் தவம் இருந்தன என்பதைப் பற்றி எழுதியிருந்தேன். அதனைத் தொடர்ந்து வேறு சில கோப்புகளைப் பற்றி எழுதுவதற்கு முன்பு, கடந்த கால ஆட்சியிலே மிகுந்த வேகத்துடன் நகர்ந்த ஒரு கோப்பினைப் பற்றிய சில வார்த்தைகளுடன் இந்த மடலினைத் தொடங்குகின்றேன்.

சென்னை மாநகராட்சி ஆணையர் திடீரென்று தமிழக அரசுக்கு ஒரு அறிக்கை தாக்கல் செய்கிறார். அதிலே சென்னை மாநகராட்சி மன்றம்; தான் பெற்றுள்ள பெரும்பான்மையை துஷ்பிரயோகம் செய்து சர்வாதிகாரமாக நடப்பதாகவும், மேயர் மு.க.ஸ்டாலின்; தன் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கிறார். சட்ட விதிமுறைகள்படி மாநகராட்சி தனது நடவடிக்கைகளை அமைத்துக் கொள்ளவில்லை என்பதால் மாநகராட்சியை கலைத்துவிடலாமா என்று ஆணை கோரி மாநகராட்சி ஆணையர் அரசுக்கு அந்த அறிக்கையிலே தெரிவிக்கிறார். அந்த அறிக்கையை மாநகராட்சி ஆணையர் என்றைக்கு அரசுக்குப் பரிந்துரை செய்கிறார் தெரியுமா? 29-6-2001.

இதற்கான கோப்பு உள்ளாட்சித் துறை அமைச்சர், சட்டம் மற்றும் நிதித்துறை அமைச்சர் ஆகியோர் மூலமாக முதலமைச்சருக்கு ஒப்புதலுக்காக அனுப்பப்படுகிறது.

மாநகராட்சி ஆணையர் அறிக்கையை அரசுக்குக் கொடுத்த தேதி 29.6.2001. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மாநகராட்சி ஆணையரின் அறிக்கையின் மீது கோப்பு தயாரித்து சுற்றுக்கு அனுப்புகிறது. என்றைக்கு தெரியுமா? மாநகராட்சி ஆணையர் அறிக்கை கொடுத்த அதே நாளிலேயே அவசர அவசரமாகக் கோப்பு தயாரிக்கப்பட்டு சுற்றுக்கு 29.6.2001

அன்றே அனுப்பப்படுகிறது. அதே 29.6.2001 இல் அந்தக் கோப்பில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயலாளர் கையொப்பம் இடுகிறார். அதே 29.6.2001 இல் தலைமைச் செயலாளரும் கையெழுத்திடுகிறார்.

பின்னர் கோப்பு உள்ளாட்சித்துறை அமைச்சருக்கு அனுப்பப்படுகிறது. எப்போது தெரியுமா? அதுவும் 29.6.2001 அன்றே அனுப்பப்பட்டு, அவரும் அதே நாளில் கையெழுத்திடுகிறார். பின்னர் கோப்பு; நிதி மற்றும் சட்டத்துறை அமைச்சருக்குச் செல்கிறது. அவரும் அதே 29.6.2001இல் கையெழுத்திட்டுள்ளார். பின்னர் கோப்பு அன்றைய முதலமைச்சர் அம்மையார் ஜெயலலிதாவிற்குச் செல்கிறது. பல கோப்புகளை பல மாதங்களுக்குக் கிடப்பில் போட்டு வைத்த அந்த அம்மையார், இந்தக் கோப்பில் மட்டும் அதே 29.6.2001 அன்று கையெழுத்திட்டுள்ளார்.

கதை இதோடு முடியவில்லை. முதலமைச்சர் கையொப்பமிட்ட பிறகு, அந்தக் கோப்பு அதே நாளில் துறைக்கு திரும்பி, அதற்கான உத்தரவினை துறைச் செயலரும் தயார்செய்து அதே நாளில் கையொப்பமிட்டு, உள்ளாட்சித்துறை அமைச்சரிடமும் அதே நாளில் கையொப்பம் பெறப்பட்டுள்ளது. தி.மு.கழகம்; ஆளுகின்ற மாநகராட்சி மன்றத்தைக் கலைக்க எந்த அளவிற்கு ஆர்வத்தோடு ஒரே நாளில் அரசு செயல்பட்டிருக்கிறது என்பதற்கும், சென்னை மேயர் மு.க.ஸ்டாலின் மீது சாட்டப்பட்ட குற்றச் சாட்டுக்கு எவ்வித ஆதாரமும் இல்லை என்ற மாநில அரசின் விஜிலன்ஸ் துறையே தெளிவாக தெரிவித்த பிறகும், அம்மையார் அவர்கள் அவ்வளவு அவசர அவசரமாக செயல்பட்டதற்கு என்ன காரணம்? பழி வாங்கும் பாழும் நெஞ்சம்தானே!

இதோ – ஒரு கோப்பு.

அசையாச் சொத்தை வாங்குபவரும், விற்பவரும் தங்கள் "பாஸ்போர்ட்" அளவு புகைப்படங்களை விற்பனைப் பத்திரத்தில் ஒட்டுவதுடன், இருவரும் தங்கள் கைரேகையைப் பதிவு செய்ய வேண்டும் என்று மத்திய அரசு பதிவுச் சட்டத்தில் செய்துள்ள திருத்தத்தை ஏற்று தமிழ்நாட்டிலும் அதனை நடைமுறைப்படுத்துவது பற்றிய கோப்பு. இந்தக் கோப்பில் இந்தத் திருத்தத்தை தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில்

எந்தத் தேதியிலிருந்து அமல் படுத்தலாம் என்பது குறித்து சட்டத்துறையுடன் கலந்தாலோசிக்கப்படுகிறது. இந்தச் சட்டத்திருத்தம் குடியரசு தலைவரின் ஒப்புதலை 24.9.2001 அன்று பெற்று, அந்த நாளிலேயே வெளியிடப்பட்டுள்ளதால், இந்தியா முழுவதும் மேற்படி சட்டத்திருத்தம் 24.9.2001 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டதாகக் கருத வேண்டும் என்றும், மேற்படி தேதியை தள்ளிப் போட இயலாது என்றும், அவ்வாறு ஆணையிட்டால் சட்டத்தின் முன் அது செல்லுபடியாகாது என்றும் சட்டத்துறை கருத்துத் தெரிவித்தது. குடியரசு தலைவரின் ஒப்புதலை 24.9.2001 அன்றே பெற்றுவிட்ட போதிலும் தமிழகத்தில் 2004 ஆம் ஆண்டுவரை இதன்மீது முடிவெடுக்கப்படவில்லை. மைய அரசு கொண்டுவந்துள்ள சட்ட திருத்தத்தை ஏற்று, தமிழ்நாட்டில் பத்திரம் பதிவு செய்ய வரும் ஒவ்வொரு நபரும் அன்னாருடைய நிழற்படத்தை ஒட்ட வேண்டும் என்று முடிவெடுக்கலாமா என்பது குறித்து ஆணை வேண்டி கோப்பு பொதுப்பணித்துறை அமைச்சருக்கும், முதல் அமைச்சருக்கும் 9.11.2004 அன்று அனுப்பப்பட்டது. ஆனால் கடைசி வரையில் அதாவது 2006 ஆம் ஆண்டு மே திங்கள் வரை முதல் அமைச்சர் அந்தக் கோப்பில் கையெழுத்து போடவே இல்லை.

இந்தக் கோப்பு தற்போது மீண்டும் சுற்றுக்கு வந்து 21.6.2006 அன்று நான் கையெழுத்திட்டிருக்கிறேன்.

சிறுதொழில்களுக்கான குறைந்த அழுத்த மின் மானியம் பெறுவதற்கு சிறு தொழில் அலகுகளுக்கு மாவட்டத் தொழில் மையங்களின் பொது மேலாளர்கள் தகுதிச் சான்றிதழ் வழங்குவதற்கு காலம் நிர்ணயம் செய்வது பற்றிய கோப்பு ஒன்று. துறையின் சார்பில் இந்தக் கோப்பு 14.9.2004 அன்று அமைச்சர்களுக்கும், முதல் அமைச்சருக்கும் சுற்றுக்கு அனுப்பப்பட்ட போதிலும், கடைசி வரையில் இந்தக் கோப்பு கையெழுத்திடப்படவே இல்லை.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள திருக்கழுக்குன்றம் வட்டாட்சியர் அலுவலகத்தில் துணை வட்டாட்சியராக பணியாற்றிவந்த அ.ரா. வெங்கடேசன் என்பவர் 11.12.2004 அன்று திருட்டுத்தனமாக மணல் ஏற்றிச் சென்ற லாரியைத் தடுக்க முயன்றபோது, லாரி அவர் மீது மோதி அகால மரணம்

அடைந்ததை அடுத்து அவரது மனைவி திருமதி நிர்மலா என்பவர் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவிடம் தனது மகளுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி ஒரு மனு கொடுக்கிறார்.

மேற்படி மனுவினை காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்து அரசுக்கு அனுப்புகிறார். வருவாய்த்துறை அதற்கான கோப்பினை தயார் செய்து அகால மரணமடைந்த வெங்கடேசன் மகள் ஆஷாவுக்கு இளநிலை உதவியாளர் பதவி வழங்கலாமென பரிந்துரை செய்து முன்னாள் முதல் அமைச்சர் ஜெயலலிதா அம்மையாருக்கு 2005 ஆம் ஆண்டு அக்டோபர் 10ந் தேதி அனுப்புகிறது. இந்தக் கோப்பில் கடைசி வரையில் அம்மையார் கையொப்பம் இடவே இல்லை.

அந்தக் கோப்பு ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு என் கையெழுத்திற்கு வந்து, நான் அந்தப் பெண்ணுக்கு இளநிலை உதவியாளர் பதவி அளிக்க ஆணையிட்டு அந்தப் பெண் பணியாற்றி வருகிறார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணத் திட்டங்களை மேற்கொள்ள உலக வங்கியிடமிருந்து கடன் மற்றும் மானிய உதவி பெறுவது குறித்த கோப்பு. இந்தக் கோப்பின் முக்கிய நோக்கம் குறித்து "The main objective of the Project is to support the efforts of the Government of Tamil Nadu in construction of housing, reconstruction and restoration of livelihood, repair and reconstruction of Public Buildings and Public works, Technical Assitance and Training and implementation Support to the Tsunami victims in Tsunami affected areas" என்று எழுதியிருப்பதோடு, எந்த அளவிற்கு நிதி என்பதைக் கூறும்போது,

Housing Reconstruction 1551 crores

Restoration of Livelihood 122 crores

Repair and Reconstruction 85 crores

Technical Training 41 crores

Implementation Support 53 crores

Total 1,852 crores

சுனாமி நிவாரணப் பணிகள் எந்த அளவிற்கு அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை விளக்கத் தேவையில்லை. ஒரு கோடி ரூபாய் அல்ல, இரண்டு கோடி ரூபாய் அல்ல, 1852 கோடி ரூபாய் செலவழிப்பதற்கான திட்டம் இது. இந்தக் கோப்பில் முதலமைச்சர் எந்த அளவிற்கு அவசரப்பட்டு கையெழுத்திட்டிருக்க வேண்டும். ஆனால் முதலமைச்சர் கையொப்பம் இல்லாமலே அரசாணை 1.7.2005 இல் வெளியிடப்படுகிறது.

இந்த அளவிற்கு உள்ள தொகையைச் செலவழிப்பது பற்றி முதலமைச்சரின் கையொப்பம் இன்றியே அரசாணை பிறப்பித்த போதிலும், அதற்குப் பிறகு 6 மாதங்கள் கழித்துத் தான் 2006 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் கோப்பை முதலமைச்சரின் ஒப்புதலுக்காக- "பின்னேற்புக்காக" என்று குறிப்பிட்டு பொதுப்பணித்துறை அமைச்சர், நிதி அமைச்சர் மூலமாக அன்றைய முதல்வருக்குக் கோப்பு அனுப்பப்பட்டது.

1800 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்யப்படும் அந்தக் கோப்பு 2006 ஆம் ஆண்டு ஜனவரி 16இல் அனுப்பப்பட்ட போதிலும், அதிலே நாள் ஒன்றுக்கு 20 மணி நேரம் உழைப்பதாகச் சொல்லும் ஜெயலலிதா அம்மையார் என்றைக்கு கையெழுத்திட்டார் தெரியுமா? 15.5.2006 வரை அந்தக் கோப்பிலே கையெழுத்திடாமலேயே வைத்திருந்து விட்டு, திருப்பி அனுப்பியிருக்கிறார்கள்.

எந்த அளவிற்கு சுனாமி நிவாரணப் பணிகளிலே அம்மையாருக்கு; அக்கறை பாருங்கள்! இது சுனாமியை விடக் கொடுமையல்லவா?

அன்புள்ள,

மு.க.

02-09-2006

(தொடரும்)

3222. அம்மையார் ஆட்சி நடத்திய அழகு! (3)

உடன்பிறப்பே,

அம்மையார் ஜெயலலிதா ஆட்சியில் ஒவ்வொரு நாளும் ஏடுகளில் ஒரு புகைப்படம் வெளிவரும். அதாவது மறைந்த போலீஸ்காரர்களின் குடும்பத்திற்கு முதல் அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் முதல் அமைச்சர் வழங்கினார் என்பதற்கான புகைப்படம்தான் அது. தற்போது என்னிடம் ஒரு கோப்பு வந்தது. என்ன கோப்பு தெரியுமா? ஜெயலலிதா முதல் அமைச்சராக இருந்தபோது 153 காவல் துறையைச் சேர்ந்த நண்பர்களின் குடும்பத்திற்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்குவதற்கான அனுமதி அளிக்கின்ற கோப்புதான் அது.

அந்தக் காவல் துறை நண்பர்களுக்கெல்லாம் தான் முன்பே நிதி வழங்கப்பட்டுவிட்டதே, எதற்காக கோப்பு இப்போது என்று கேட்டேன். அதற்கு அதிகாரிகள் சொன்ன பதில் என்ன தெரியுமா? முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா கோப்பில் கையெழுத்திடாமல், ஆணையைப் பிறப்பிக்காத நிலையிலேயே 2004 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளிலே அத்தனை காவல்துறை நண்பர்களுக்கும் நிதியை வழங்கியிருக்கிறார்கள். அதற்கான கோப்புகள்தான் - 153 பேர்களுக்கு நிதி உதவி வழங்குவதற்கான கோப்புகள்; என்னிடம் பின்னேற்பு கையெழுத்து கேட்டு வந்துள்ளது. இவ்வாறு ஆணையே இல்லாமல், ஒருவருக்கு அல்ல, இருவருக்கல்ல, 153 பேருக்கு நிதி உதவி செய்யப்பட்டுள்ளது. இதைவிட நிர்வாகத்தில் கேடு இருக்க முடியுமா? ஒரு திட்டத்திற்கோ, ஒரு தனி நபருக்கோ அரசின் சார்பில் நிதி வழங்கப்படுகிறது என்றால், அதற்கான ஒப்புதல் முதல் அமைச்சரால் அல்லது அமைச்சர்களால் அரசாணைகள் வெளியிடப்பட்டு; அதன் பின்னர்தான் அந்தத் தொகை வழங்கப்பட வேண்டும்.

ஆனால், முதல் அமைச்சரின் கையெழுத்தே இல்லாமல் நிதி உதவி வழங்கிய அதிசயம், அம்மையார் ஜெயலலிதா ஆட்சியைத் தவிர வேறு எந்த ஆட்சியில் நடைபெற முடியும்!

அடுத்து, அ.தி.மு.க. ஆட்சியில் தம்பி கோ.சி.மணி மீது ஒரு குற்றச்சாட்டு கூறப்பட்டு, அதை விஜிலன்ஸ் துறை விசாரணைக்காக அனுப்புகிறார்கள். அந்தத் துறை அதனை விசாரித்து அந்தக் குற்றச்சாட்டுக்கு எந்தவித ஆதாரமும் இல்லை என்று கூறிவிட்டது. எனவே அந்தக் கோப்பின்மீது நடவடிக்கை எடுக்க இயலாததால், நடவடிக்கையை கைவிடுவதற்கான கோப்பு துறையின் சார்பில் 2004 ஆம் ஆண்டு தலைமைச் செயலாளர் பார்த்தபிறகு, பொதுப்பணித் துறை அமைச்சருக்கும், முதல் அமைச்சருக்கும் ஜூலைத் திங்களில் அனுப்பப்பட்டது. 2006ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சி மாறுகின்ற வரையில் கையெழுத்தாகவில்லை. தற்போது அந்தக் கோப்பில் நான் கையெழுத்திட்டேன் என்றால்; நடந்தது "ஆட்சி" என்பதை யாராவது நம்பிட முடியுமா?

தம்பி கே.என்.நேரு மீதான குற்றச்சாட்டு; விஜிலன்ஸ் டைரக்டருக்கு விசாரணைக்காக அ.தி.மு.க. ஆட்சியிலே அனுப்பப்பட்டு, "எந்தவிதமான தவறும் நடைபெறவில்லை" என்றும், "நடவடிக்கையை கைவிடலாம்" என்றும் பரிந்துரையுடன் வந்த கோப்பினை, தலைமைச் செயலாளர் 10.9.2005இல் அமைச்சர்களுக்கு அனுப்பி வைக்கிறார். 5 மாதங்களுக்குப் பிறகு சட்டத்துறை அமைச்சர் அரசு வழக்கறிஞரின் கருத்தினை கேட்கலாம் என்று குறிப்பெழுதி அந்தக் கோப்பினைத் திருப்பி அனுப்பி விடுகிறார். அரசு வழக்கறிஞரும் விஜிலன்ஸ் பரிந்துரையை ஏற்று நடவடிக்கையை கைவிடலாம் என்று எழுதி விடுகிறார், இருந்தும் ஆட்சி மாறுகின்ற வரையில் நடவடிக்கை கைவிடப்படவில்லை.

திராவிடர் கழகத் தலைவர், மானமிகு இளவல் திரு.கி.வீரமணி அவர்கள் 12.7.2001 அன்று திராவிட கழக உறுப்பினர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெறுமாறு கேட்டு அம்மையார் அரசிடம் வேண்டுகோள் விடுக்கிறார். சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் 2003ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் வழக்குகளைத் திரும்பப் பெறலாமென்று அரசுக்குப் பரிந்துரை செய்கிறார். அதற்குப் பின்னும் வழக்குகளைத் திரும்பப் பெறாமல்

அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞரிடம் கருத்து கேட்கப்பட்டு, அவரும் வழக்குகளைத் திரும்பப் பெறலாம் என்று கூறிய பிறகு 2005ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் வழக்குகளைத் திரும்பப்பெற அனுமதிகோரி முதலமைச்சர் அம்மையாருக்குக் கோப்பு அனுப்பப்படுகிறது. அ.தி.மு.க. ஆட்சி வீட்டிற்குச் செல்கிற வரையில் அந்த வழக்குகள் திரும்பப் பெறப்படவே இல்லை. தற்போது என்னிடம் கோப்பு வரப்பெற்று அதிலே நான் கையெழுத்திட்டேன் என்றால்; வேடிக்கையா? விளையாட்டா? வேதனையா?

"பப்ளிக் சர்வீஸ் கமிஷன்" அலுவலகத்திற்கு அரசின் சார்பில் அதிகாரிகளை நியமிப்பது குறித்து ஒரு கோப்பு. அந்தக் கோப்பினைத் தலைமைச் செயலாளர் 8.10.2005 அன்று முதல் அமைச்சர் ஒப்புதலுக்காக அனுப்புகிறார். கடைசி வரையில் கோப்பு கையெழுத்திடாமல் கிடப்பில் போடப்பட்டு, தற்போது என்னிடம் அந்தக் கோப்பு கையெழுத்திற்காக வந்து நான் கையெழுத்திட்டுள்ளேன்.

தி.மு.க. முன்னாள் அமைச்சர் தம்பி திரு.கே.பிச்சாண்டி மீது குற்றச்சாட்டுகளை சுமத்தி, விஜிலன்ஸ் துறையின் மூலம் விசாரணை நடத்த அம்மையாரின் உ ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதற்கான விசாரணை அனைத்தும் நடைபெற்று, குற்றச்சாட்டுகளுக்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை என்றும், எல்லாம் தெளிவற்ற நிலையிலே இருப்பதாகவும் கூறி, அது குறித்து எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க இயலாதென்று கூறிவிட்டதுடன் நடவடிக்கையையும் கைவிடுவதற்கான கோப்பு தயாரிக்கப்பெற்று, தலைமைச் செயலாளர் அதிலே 6.12.2004 அன்று கையெழுத்திட்டு சட்ட அமைச்சருக்கும், பொதுப்பணித்துறை அமைச்சருக்கும், முதல் அமைச்சருக்கும் அனுப்பப்பட்டது; ஆனால், அந்தக் கோப்பு அ.தி.மு.க. ஆட்சி போனபிறகுதான் திரும்பி வருகிறது; அதுவும் கையெழுத்து எதுவும் இடப் படாமல்! தற்போது தி.மு.கழக ஆட்சி வந்தபிறகு தான் அந்தக் கோப்புக்கு விடிவுகாலம் பிறந்து நான் கையெழுத்திட்டேன்.

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை சார்பில் ஒரு கோப்பு. ஆதரவற்ற விதவைகளுக்கு அரசாங்க சார்பில் வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. ஆதரவற்ற விதவைகள் யார் என்பதற்கு அவர்களின் மாத வருமானம்

1000ரூபாய்க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்றிருந்ததை மாற்றி, மாத வருமானம் 4000 ரூபாய் வரை என்று இருந்தாலும் அப்பெண்டிர் ஆதரவற்றவர் பட்டியலில் இடம் பெறுவர் என்பதைக் குறிப்பிட, ஒரு கோப்பு தயாரிக்கப்பட்டு, அதற்கான ஒப்புதல் பெற்றிட அனுப்பப்பட்டது. அந்தக் கோப்பு 2003ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் முதல் அமைச்சர் அம்மையாரின் ஒப்புதலுக்காகவும், நிதித்துறை அமைச்சரின் ஒப்புதலுக்காகவும் தலைமைச் செயலாளர் கையெழுத்திட்டு அனுப்பப்பட்டது. நிதித்துறை அமைச்சர் அந்தக் கோப்பில் 26.8.2003 அன்று கையெழுத்திட்டு, முதல் அமைச்சருக்கு 28.8.2003 அன்று அனுப்புகிறார். 26.8.2005 வரை அதாவது இரண்டாண்டு காலம் வரை, அந்தக் கோப்பு முன்னாள் முதல் அமைச்சர் ஜெயலலிதா அலுவலகத்தில் தூங்க வைக்கப்பட்டு முதலமைச்சர் கையெழுத்து இல்லாமலேயே, முதலமைச்சர் அலுவலகச் செயலாளர் ஒருவர் அந்தக் கோப்பை திரும்ப அனுப்பி, அதனை மறுசுற்றுக்கு (Recirculation) அனுப்பும்படி கையெழுத்திட்டு அனுப்புகிறார். அவ்வாறே அந்தக் கோப்பு மீண்டும் ஒருமுறை மறுசுற்றுக்கு துறையினால் அனுப்பப்படுகிறது.

அந்தக் கோப்பு தலைமைச் செயலாளர், சட்டத் துறை அமைச்சர், நிதித்துறை அமைச்சர் ஆகியோரால் மீண்டும் ஒருமுறை பார்க்கப்பட்டு, முதல் அமைச்சர் ஒப்புதலுக்காக 2005 ஆம் ஆண்டு நவம்பரில் அனுப்பப்படுகிறது. ஆனால் அந்தக் கோப்பும் கடைசி வரையில் கையெழுத்து ஆகாமல், ஆட்சி மாற்றத்திற்குப் பிறகுதான் எனது கையெழுத்துக்கு வந்து நான் கையெழுத்திட்டேன். பெண் ஒருவர் முதல் அமைச்சராக இருந்த காலக்கட்டத்தில் பெண் குலத்துக்குச் செய்யப்பட்ட பெருந்துரோகம் இது.

திரு.ஜெ.ஜனார்த்தனம் என்ற மீன்வள ஆய்வாளர் அலுவலகத்திற்கு தொடர்ந்து வராததினால் அவர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டார். அவரைக் கட்டாய ஓய்வில் அனுப்பி விடலாமா என்பதற்காக கோப்பு தமிழ்நாடு தேர்வாணையத்திற்கு அதன் ஒப்புதலைப் பெற அனுப்பியபோது, தொடர்ந்து அலுவலகத்திற்கு வராததினால் அவரை நிரந்தர பணி நீக்கம் செய்யலாம் என கருத்து தெரிவித்தது. அரசு திரு.ஜனார்த்தனம் ஒரு மன நலம் குன்றிய நபர் என்பதால்

அவரை நிரந்தர பணி நீக்கம் செய்தால் அவரது குடும்பம் பெரிதும் பாதிக்கப்படுமென கருதி தேர்வாணையத்தின் கருத்துக்கு மாறாக கோப்பு தயாரித்து, தற்காலிகப் பணி நீக்கத்தில் இருந்த காலத்தினை தண்டனைக் காலமாக கருதி, அன்னாரை 31.10.1999 முதல் ஓய்வு பெற்றதாகக் கருதி ஆணையிடலாமா என்பதற்கு ஒப்புதல் கேட்டு, கோப்பு முதல் அமைச்சரின் கையெழுத்துக்காக 3.9.2004இல் அனுப்பி வைக்கப்பட்டது. கையெழுத்திடாமல் இரண்டாண்டுகள் கிடப்பில் போடப்பட்டு, அந்த ஆட்சி மாறிய பிறகுதான் கோப்பு திரும்பவும் துறைக்கு வந்து, மீண்டும் அது என்னுடைய கையெழுத்திற்காக 19.6.2006 அன்று அனுப்பப்பட்டு, அதிலே நான் 29.6.2006 இல் கையெழுத்திட்டேன்.

சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 3000 வேலையற்ற கைவினைஞர்களுக்கு தளவாடங்கள், மற்றும் கருவிகள் வாங்க வட்டியின்றி தலா ரூபாய் ஆயிரம் வீதம் கடன் உதவி செய்யப்பட்டது. வழங்கப்பட்ட 30இலட்சத்தில் வசூலான தொகை போக எஞ்சியத் தொகையான 13 லட்சத்து 78 ஆயிரத்து 599 ரூபாயை தள்ளுபடி செய்யலாம் என தொழிலாளர் நலத்துறை சார்பில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு கோப்பு 14.5.2002 அன்று அனுப்பப்பட்டது. ஆனால் அந்தக் கோப்பில் கடைசிவரையில் முன்னாள் முதலமைச்சர் கையெழுத்திடவே இல்லை. தற்போதுதான் கோப்பு எனக்கு அனுப்பப்பட்டு நான் அந்தத் தொகையைத் தள்ளுபடி செய்து கையெழுத்திட்டேன்.

அன்புள்ள,

மு.க.

03-09-2006

(தொடரும்)

3223. அம்மையார் ஆட்சி நடத்திய அழகு! (4)

உடன்பிறப்பே,

சரியான பதில் கூறுகிற அளவுக்கு சரக்கு இல்லாதவர்கள், சப்தம் போட்டு அந்தக் கூச்சலில் தங்கள் தோல்வியை மறைத்துக் கொள்ள முனைவார்கள். போதையிலே ஆடுகிறவர்களைப் போல பொருளற்ற வாதங்களை எடுத்து வைத்துப் புலம்பித் தீர்ப்பார்கள். எத்தனையோ கனவு கண்டு அத்தனையும் கலைந்து போன எரிச்சலில் ஏடாகூடமாய் ஏதேதோ உளறுவார்கள். இவர்களைத் தனித்தனியாக விமர்சித்துக் கொண்டிராமல் பொதுவாக ஒரே வாக்கியத்தில் 'சந்து முனை சிந்து பாடிகள்' என்று பேரறிஞர் அண்ணா குறிப்பிடுவார். அப்படி அரசியலிலே ஒரு ரகம்; சென்னையிலே கழக அரசு துணை நகரம் அமைப்பதை எதிர்த்து விடுத்த அறிக்கையில்; தன்னைச் "சந்து முனை சிந்து பாடி" என்று மட்டும் காட்டிக் கொள்ளாமல், "சாக்கடை ஜவ்வாது" "புழக்கடைப் புனுகு" என்றும் தனது உண்மை உருவத்தை உலகிற்கு உணர்த்தி யிருக்கிறது.

ஒரு நாளைக்கு இருபது மணி நேரம் மக்களுக்காக உழைக்கிறேன் என்று மாய்மாலம் பேசி மக்களை ஏமாற்றும் இந்தப் பெண்ணாகி வந்ததொரு மாய மோகினி; என்னைப் பற்றியும் என் குடும்பத்தினர் பற்றியும் விடுத்துள்ள அறிக்கைக் குப்பைக்குச் செலவழித்துள்ள நேரத்தில் ஐந்தாண்டு ஆட்சியில் ஆயிரத்துக்கு மேற்பட்ட அத்யாவசியக் கோப்புகளில் ஏன் கையெழுத்திட வில்லை என்ற கேள்விக்கு பதில் அளிக்க முனைந்திருக்கலாமே! இதோ; இன்னமும் தொடர்கின்றன அந்தக் கோப்புகள் சில!

உள்துறை குறித்த கோப்பு ஒன்று. தொடக்கத்தில் சென்னை உயர்நீதிமன்றத்திற்கு உரியதாக இருந்து, பிறகு State Express Transport Corporationக்கு உரியதாக உள்ள இடத்தினை மீண்டும் உயர்நீதி மன்றத்திற்கு மாற்றுவது குறித்த கோப்பு.

சென்னை உயர்நீதி மன்றத்திற்கு உரியதாக இருந்த 32 கிரவுண்ட் நிலம், 1960 ஆம் ஆண்டு அப்போது இருந்த Madras State Transport Departmentக்கு விற்கப்பட்டு விட்டது. தற்போது சென்னை உயர்நீதி மன்றத்திற்கு வேறு பல தொடர் கட்டிடங்களை எழுப்ப வேண்டிய அவசியம் எழுந்துள்ளதால், அந்த இடத்தை மீண்டும் அவர்களுக்குத் தர வேண்டுமென்று கோரிக்கை வைத் துள்ளார்கள். இதற்கான கோரிக்கையை 26.2.2003 அன்று சென்னை உயர்நீதி மன்றம் அனுப்புகிறது. 16.4.2003 அன்று போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநரையும், நீதிமன்ற அதிகாரிகளையும் அழைத்து அன்றைய உள்துறைச் செயலாளர் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார். 10.12.2003 அன்று இந்தக் கோப்பு குறித்து நிதித் துறைச் செயலாளரும், போக்குவரத்துத் துறை செயலாளரும் கலந்து பேசியிருக்கிறார்கள். 1.1.2004 அன்று இந்த குறிப்பிட்ட இடத்தை மாற்றுவதற்கான கோப்பு நிதியமைச்சர், போக்குவரத்து அமைச்சர், சட்டத் துறை அமைச்சர் மூலமாக சுற்றுக்கு முதல் அமைச்சருக்கு அனுப்பப்பட்டது. 12.1.2004 அன்று நிதித்துறை அமைச்சர் கோப்பிலே கையெழுத்திட்டு, முதல்வருக்கு அனுப்பியிருக்கிறார். அதன் பிறகு தொடர்ந்து அவ்வப்போது முதல் அமைச்சர் அலுவலகத்திற்கு இது குறித்து நினைவுபடுத்தப்பட்டுள்ளது.

ஓராண்டு காலம் அந்தக் கோப்பு முதல் அமைச்சர் அலுவலகத்திலே ஓய்வு எடுத்துக்கொண்ட பிறகு, 11.1.2005 அன்று முதலமைச்சர் அலுவலகம் அந்தக் கோப்பினை திருப்பி அனுப்புகிறது. அதுவும் முன்னாள் முதல் அமைச்சரிடம் கையெழுத்து பெற்று அல்ல, ஒரு கேள்வியைக் கேட்டு திரும்ப அனுப்பப்பட்டது. அந்தக் கேள்வியில் "அந்த இடம் தற்போது யாருடைய பொறுப்பிலே உள்ளது" என்பதும்; அது போக்குவரத்துத் துறைக்கு மீண்டும் தேவைப்படுமா என்பதும்தான் முக்கியமான அம்சம்! ஆனால் அந்தக் கேள்விக்கான பதில்கள் அந்தக் கோப்பிலே ஏற்கனவேயே இடம் பெற்றுள்ளன. அப்போதிருந்த உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி இதுகுறித்து தலைமைச் செயலாளருடன் பேச விரும்பிய காரணத்தால், 19.7.2005 அன்று கோப்பு உள்துறைச் செயலாளருக்கு திரும்ப அனுப்பப்பட்டது. அதன் பின்னர் 4.10.2005 அன்று அந்தக் கோப்பு

மீண்டும் முதல் அமைச்சருக்கு ஒப்புதல் கேட்டு அனுப்பப்பட்டது. 7.1.2006இல் முதல் அமைச்சரின் செயலாளர் மீண்டும் அந்தக் கோப்பினை உள்துறைச் செயலாளருக்கு ஒரு கேள்வியைக் கேட்டு அனுப்புகிறார். என்ன கேள்வி தெரியுமா? "குறிப்பிடப்படும் இடம் அரசு துறைகளுக்காக தேவைப்படுகிறதா? அந்த இடத்தை எந்த அரசுத் துறைகளாவது வேண்டுமென்று கேட்டு திட்டங்கள் நிலுவையில் உள்ளதா?" அதன் பின்னர் இந்தக் கோப்பு மீண்டும் அனுப்பப்படவே இல்லை. தற்போது தி.மு. கழக ஆட்சி மீண்டும் அமைந்த பிறகு அந்தக் கோப்பிலே 10.7.2006 அன்று நான் ஏற்றுக் கொண்டு ஒப்புதல் அளித்துள்ளேன்.

தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் 1997ஆம் ஆண்டில் பத்திரிகையாளர் குடும்ப நிதி உதவித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, பத்திரிகைத் துறையில் இருபதாண்டுகள் தொடர்ந்து பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள் பணிகளில் இருக்கும் போது இயற்கை எய்தினால் அவர்களது குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 25 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அவ்வாறே வழங்கப்பட்டு வந்தது. 1999ஆம் ஆண்டு மீண்டும் தி.மு. கழக ஆட்சியில் இத்தொகை 40 ஆயிரம் ரூபாயாகவும், 2000ஆம் ஆண்டு மீண்டும் 50 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வந்தது.

வண்ணத் திரை வார இதழின் துணை ஆசிரியர் திரு. தேசிங்கு என்பவர் 6-11-2001 அன்று இயற்கை எய்தினார். அதற்கான நிதி உதவி கோரி, அவருடைய துணைவியார் ஆர்த்தி 13-3-2002 அன்று மனு செய்துகொண்டார். உதவிநிதி வழங்க வேண்டிய கோப்பு முதல் அமைச்சர் அலுவலகத்திற்கு 30-11-2004 அன்று அனுப்பப்படுகிறது. அதாவது அந்தக் கோப்பினை சமர்ப்பிக்க அம்மையார் ஆட்சியில் இரண்டு ஆண்டு காலம் ஆகியிருக்கிறது. முதலமைச்சர் அலுவலகத்திற்கு 2004ஆம் ஆண்டு அனுப்பப்பட்ட கோப்பில் 2006ஆம் ஆண்டு அவர் பதவியிலிருந்து வெளியே செல்கின்ற வரையில் கையெழுத்து போடவே இல்லை. இப்போதுதான் 14-7-2006 அன்று கோப்பு வந்து, 18-7-2006 அன்று நான் கையெழுத்திட்டுள்ளேன்.

இந்த ஒரு கோப்பு மாத்திரமல்ல; மதுரைமணி மற்றும் குமரி முரசு நாளிதழ்களின் சென்னை செய்தியாளர் திரு. எஸ். தாமோதரன் 25-4-2002 அன்று இயற்கை எய்தினார். அவரது துணைவியார் புனிதா நிதி உதவி கேட்டு அரசுக்கு 24-7-2002 அன்று மனு செய்து கொண்டார். இதற்கான கோப்பு 13-1-2005, சுமார் மூன்றாண்டுகளுக்குப் பிறகு முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டு, கடைசி வரை அவர் கையெழுத்தே போடாமல் துறைக்கே திரும்ப அனுப்பப்பட்டு, மீண்டும் தி.மு.கழக ஆட்சி ஏற்பட்டவுடன் இப்போது அந்தக் கோப்பு எனக்கு அனுப்பப்பட்டு, நான் 18-7-2006 அன்று கையெழுத்திட்டேன் என்றால்; அடடா; அம்மையின் நிர்வாகமும் நெஞ்சிரக்கமும் மலர் மாரி பொழிந்து போற்றப்பட வேண்டியவை அல்லவா!

மற்றொரு கோப்பு - மதுரை மாலை முரசு நாளிதழின் உதவி ஆசிரியர் திரு. எம். இன்பராஜ் 28-8-2002 அன்று இயற்கை எய்தினார். அவரது துணைவியார் திருமதி வேல்தங்கம் குடும்ப உதவி நிதி கேட்டு 17-10-2002 அன்று மனு செய்து கொண்டார். இதற்கான கோப்பு முதல் அமைச்சர் அவர்களுக்கு 17-1-2005 அன்று அனுப்பப்பட்டது. அதாவது சுமார் மூன்றாண்டுகள் கழித்து. 17-1-2005 அன்று முதல்வருக்குச் சென்ற கோப்பு 15 மாதங்கள் வரை கையெழுத்திடப்படாமல், ஆட்சி மாறிய பிறகு திரும்ப அனுப்பப்பட்டு, என் கண் முன்னால் வந்து அந்தக் கோப்பில் நான் 17-7-2006 அன்று கையெழுத்திட்டேன்.

இந்த நான்கு பத்திரிகையாளர்களுக்கும் 29-8-2006 அன்று நானே நேரில் அவர்களை தலைமைச் செயலகத்திற்கு அழைத்து பேரவை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே காசோலைகளை நேரடியாக வழங்கியதையும் ஏடுகளில் காணக்கூடும்.

பெரம்பலூர் கலெக்டர் அலுவலகத்தில் கார் ஓட்டுநர் பி. அசோகன். 2001ஆம் ஆண்டு அவர் மத்திய அமைச்சர் ஒருவருக்கு காரோட்டி சென்ற போது விபத்து ஏற்பட்டு, அதன் காரணமாக அந்தக் காரோட்டி கை, கால்கள் செயல் இழந்து நகர இயலாத நிலையில் உள்ளார். அவர் ஒரு அரசு அலுவலர்.

முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்ச ரூபாய் உதவி செய்ய கலெக்டர் அரசுக்குப் பரிந்துரை செய்தார்.

அன்றைய பொதுப்பணித் துறை அமைச்சரும், நிதியமைச்சரும் 16.6.2005 அன்று கையெழுத்திட்டு தூங்காமல் தொண்டாற்றும் (!)முதல்வருக்கு 16-6-2005 அன்று கோப்பு அனுப்பப்பட்டது. கடைசி வரை கையெழுத்தில்லை. இதில் 25-7-2006இல் நான் கையெழுத்திட்டேன்.

என். பசல் அகமது கான் என்ற துணை ஆட்சியர், தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தில் 3-7-2002 அன்று தனக்கு வழங்கப்பட்டிருந்த தண்டனை ரத்து செய்யப்பெற்று மாவட்ட வருவாய் அலுவலராக பதவி உயர்வு பெறுவதற்கு சாதகமான ஆணையைப் பெற்றார். ஆனாலும் கூட, 2006ஆம் ஆண்டு வீட்டிற்குப் போகும் வரையில் ஜெயலலிதா இந்தக் கோப்பில் கையெழுத்து போடவே இல்லை. அடடா; நாடாண்ட ராணியின் கேடான செயல்களுக்கு இஃதும் ஓர் உதாரணம் அல்லவா?

அரசு அலுவலர்கள் ஈட்டிய விடுப்பை சரண் செய்யும் திட்டம் 1968ஆம் ஆண்டு முதல் இருந்து வருகிறது. ஆண்டு ஒன்றுக்கு 15 நாட்களை ஈட்டிய விடுப்பை சரண் செய்து பணமாக்கிக் கொள்ளும் திட்டம் 1980 முதல் நடைமுறைக்கு வந்தது. இந்தச் சலுகை 2001ஆம் ஆண்டு 28-11-2001 முதல் அ.தி.மு.க. அரசினால் நிறுத்தி வைக்கப்பட்டது. நாடாளுமன்றத் தேர்தல் தோல்விக்குப் பிறகு 21-10-2004 முதல் ஆண்டுக்கு ஏழு நாட்கள் ஈட்டிய விடுப்பை சரண் செய்யலாம் என்று அ.தி.மு.க. அரசு ஆணை பிறப்பித்தது. தேர்தலுக்கு சில நாட்களுக்கு முன்பு அதாவது 8-2-2006 அன்று அரசு அலுவலர் சார்பில் சூர்ய மூர்த்தி நடத்திய மாநாட்டில் கலந்து கொண்ட முதல் அமைச்சர் ஜெயலலிதா ஆண்டுக்கு 15 நாட்கள் ஈட்டிய விடுப்பை சரண் செய்யலாம் என்று அறிவித்தார். அவ்வாறு அறிவித்த பிறகு, அதற்கான கோப்பு தயாரிக்கப்பட்டு, முதல் அமைச்சரின் ஒப்புதலுக்காக 15-2-2006 அன்று தலைமைச் செயலாளர் வழியாக அனுப்பப்படுகிறது. தலைமைச் செயலாளர் அந்தக் கோப்பில் - முதல் அமைச்சருக்கு அனுப்பாமல், ஆணையை முதலில் வெளியிட்டு விட்டு, பின்னேற்புக்காக முதல் அமைச்சருக்கு பிறகு அனுப்பி வைக்குமாறு துறை செயலாளருக்கு தெரிவித்து விடுகிறார். இதன் பிறகு, 23-2-2006 அன்று முதல் அமைச்சர் கையெழுத்து

பெறாமலேயே அரசாணை வெளியிடப்படுகிறது. அதன் பின்னர் கோப்பு முதல் அமைச்சரின் பின்னேற்பிற்காக 24-2-2006 அன்று தயாரிக்கப்பட்டு, அதிலே தலைமைச் செயலாளர் 1-3-2006 அன்றும் நிதியமைச்சர் 2-3-2006 அன்றும் கையெழுத்திட்டு முதல் அமைச்சர் அலுவலகத்திற்கு 3-3-2006இல் அனுப்புகிறார்கள். ஆனால் ஆட்சி மாறுகின்ற வரையில் முதல் அமைச்சர் அந்தக் கோப்பிலே கையெழுத்திடாமல், தற்போது தி.மு. கழக ஆட்சி ஏற்பட்டதும் என்னிடம் வந்து நான் அந்தக் கோப்பில் 10-8-2006 அன்று கையெழுத்திட்டு அனுப்பி வைத்தேன்.

25-8-2006 பேரவையில் 1997-98, 1998-99 மற்றும் 1999-2000 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கான தமிழ்நாடு விழிப்புப் பணி ஆணையத்தின் ஆண்டு அறிக்கை வைக்கப்பட்டது. இதற்கு ஒரு வரலாறு உண்டு. இந்த ஆண்டறிக்கைகள் சம்பந்தப்பட்ட மூலக் கோப்புகள், ஆளுநரிடம் ஆணை பெற்று, அறிக்கைகள் அச்சிடப்பட்டு, சட்டமன்றத்தில் வைக்கப்படாமல் இருந்தவை யாகும். பொதுத் துறையிலிருந்து இவைகளை சட்டமன்றத் தில் வைக்க தக்க அனுமதி கோரி கோப்புகள் முதல் அமைச்சர் அலுவலகத்திற்கு மூன்று முறை அதாவது 23-7-2005, 21-12-2005, 17-1-2006 ஆகிய நாட்களில் அனுப்பப்பட்ட போதிலும் அந்த ஆட்சி மாறுகின்ற வரையில் அந்தக் கோப்பு முன்னாள் முதல் அமைச்சர் அலுவலகத்திலிருந்து கையெழுத்து பெற்று வரவே இல்லை!

அடுத்து 2000-01, 2001-02, 2002-03 மற்றும் 2003-04ஆம் ஆண்டுகளுக்குரிய விழிப்புப் பணி ஆணையத்தின் ஆண்டறிக்கைகளின் கதி என்ன தெரியுமா? இதற்கான மூலக்கோப்புகள் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் முதலமைச்சர், ஆளுநர் ஆகியோரின் ஒப்புதலைப் பெறுவதற்காக 1-7-2005 மற்றும் 27-12-2005 ஆகிய தேதிகளில் அனுப்பப்பட்டது. ஆனால் இந்தக் கோப்பும் எந்தவிதமான ஒப்புதலும் இல்லாமல் ஆட்சி மாறிய பிறகு 12-5-2006 அன்று திரும்ப அனுப்பப்பட்டு விட்ட தால், அந்தக் கோப்புகள் மீண்டும் தற்போது எனது ஒப்புதலுக்காக வந்துள்ளன.

இவ்வாறு ஆறு மாதம் / ஒரு வருடம் / இரண்டு வருடம் என்று கால தாமதப்படுத்தி கையெழுத்திடாமல் கடந்த கால ஆட்சியில் 1112 கோப்புகள் முன்னாள் முதல்வரால் துறைக்கு 12.5.2006 அன்று திருப்பி அனுப்பப்பட்டது.

இஃதன்னியில் முதல் அமைச்சருக்கு 2002-03, 2004-05ல் அனுப்பப்பட்ட கோப்புகளில் பல, முன்னாள் முதல்வர் அலுவலகத்திலிருந்து "புதிய அமைச்சர் வழியாக அனுப்பவும்" என்றும், "மீண்டும் விசாரிக்கவும்" என்றும், "மீண்டும் ஆய்வு செய்யவும்" என்றும் கேள்விகள் கேட்டு திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. அந்தப் பட்டியல் நீண்டது என்பதால் இதில் சேர்க்காமல் விடப்படுகிறது.

அன்புள்ள,

மு.க.

04-09-2006

3224. கேள்வி நாயகியா? கேலிக்குரியவரா?

உடன்பிறப்பே,

"சிறந்த நிர்வாகத்தில் தமிழ்நாடு நெ.1," என்று முகப்பு அட்டையில் கொட்டை எழுத்துக்களுடன் வெளியாகியுள்ள 13.9.2006 நாளிடப்பட்ட "இந்தியா டே" தமிழ்வார இதழில், உள் பக்கத்தில் "கேள்வி இன் நாயகி" என்ற தலைப்பின் கீழ் எழுதப்பட்டுள்ள ஒரு சிறு கட்டுரையில், "இந்த ஆட்சி தொடங்கிய நாள் முதல் இன்று வரை மூன்று மாத காலத்திற்கு மேல் ஆகியும் கூட அதிகாரிகளின் மாற்றம் என்பது தொடர்கதையாக தினமும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது" என்று ஜெயலலிதா கேள்வி எழுப்பியிருக்கிறார் என்றும், அதற்கு நான் பதில் சொல்ல வேண்டுமென்றும், தமிழக அரசியல் வரலாற்றிலேயே இவ்வளவு அதிகாரிகள் தொடர்ந்து அதிரடியாக மாற்றப்பட்டுக் கொண்டே இருப்பது இதுவே முதல் முறை என்றும் குறிப்பிட்டுள்ளது. இதற்கு 5 ஆம் தேதிய முரசொலி நாளிதழில் தம்பி க. திருநாவுக்கரசு விளக்கமாக விரிவாகவும், ஆணித்தரமாகவும் ஒரு கட்டுரை வாயிலாகப் பதிலைத் தந்திருக்கின்றார் என்ற போதிலும் அதிகாரிகள் மாற்றம் குறித்து நான் காவல் துறை மானிய விவாதத்தின்போது இதே கேள்விக்கு நேரடியாக பதிலளித்துக் கொடுத்திருந்த புள்ளி விவரங்களையும் இப்போது நினைவூட்ட விரும்புகிறேன்.

"அதிகாரிகளையெல்லாம் மாற்றி விட்டோம் என்று எதிர் தரப்பிலே ஒரு குரல் கிளம்பியது. அ.தி.மு.க. ஆட்சியில் 2001 - 2006இல் ஐந்து டி.ஜி.பி.க்கள் மாற்றப்பட்டிருக்கின்றார்கள். (ஆட்சிக்கு வந்து முதல் மூன்று மாதங்களில் இரண்டு ஆட்சிகளிலும் நடைபெற்ற மாறுதல் குறித்து ஒரு ஒப்பீடு) தி.மு.க. ஆட்சியில் அலெக்சாண்டர் டி.ஜி.பி.யாக இருந்தார், அவர் மாற்றப்பட்டார். அவர் மாற்றப்பட்டு பின்னர் வந்த

டி.ஜி.பி. இப்போது இருக்கிறார். இவரை இப்பொழுது எங்கே மாற்றியிருக்கிறோம். எங்குமில்லை. ஏதோ பத்து டி.ஜி.பி.யை மாற்றியிருப்பது மாதிரி - மாற்றியது அவர்கள் - டி.ஜி.பி.யே ஐந்து பேர் மாற்றப்பட்ட ஆட்சி!

ஏ.டி.ஜி.பி.க்கள் 21 பேர் அ.தி.மு.க. ஆட்சியில் மாற்றப்பட்டிருக்கிறார்கள். தி.மு.கழக ஆட்சியில் 15 பேர்தான்.

ஐ.ஜி.பி.க்கள் 27 பேர் அ.தி.மு.க. ஆட்சியில் மாற்றப்பட்டவர்கள். தி.மு.கழக ஆட்சியில் 20 பேர்கள். எஸ்.பி.க்கள் அ.தி.மு.க. ஆட்சியிலே 86 பேர் மாற்றப்பட்டார்கள். தி.மு.கழக ஆட்சியிலே 92 பேர் மாற்றப்பட்டார்கள். இதிலே ஆறு பேர் அதிகமாக இருப்பது கூட பதவி உயர்வு காரணமாகத்தான் மாற்றப்பட்டனர்.

டி.எஸ்.பி.க்கள் 323 பேர் அ.தி.மு.க. ஆட்சியில் மாற்றம் செய்யப்பட்டனர். 332 பேர் தி.மு.க. ஆட்சியில் மாற்றப்பட்டிருக்கிறார்கள். இதில் 70 பேர் பதவி உயர்வு புதிதாக தரப்பட்டதின் காரணமாக மாற்றப் பட்டிருக்கின்றார்கள்.

இன்ஸ்பெக்டர்கள் 309 பேர் அ.தி.மு.க. ஆட்சியில்! 280 பேர் தி.மு.க. ஆட்சியில். இவையனைத்தும் அ.தி.மு.க. ஆட்சியிலும், தி.மு.க. ஆட்சியிலும் பொறுப்பேற்றுக் கொண்டபின் முதல் மூன்று மாதங்களில் செய்யப்பட்டவையாகும். ஏதோ தி.மு.க. ஆட்சியில் எல்லோரையும் மாற்றிவிட்டனர் என்று சொல்வதும், பத்திரிகைகளில் எழுதுவதும் ஒரு பரபரப்பை ஏற்படுத்துவதும்தான் இவர்களுடைய பிரச்சாரமாக இன்றைக்கு இருக்கிறதே தவிர வேறொன்றுமில்லை.

ஒரே மாதத்தில் டி.ஜி.பி.யாக இருந்த ஆர். ராஜகோபாலனை மாற்றி, ரவீந்திரநாத் அவர்களை டி.ஜி.பி.யாக நியமனம் செய்து, அவரை விட்டு என்னைக் கைது செய்யச் சொல்லி, அந்தக் காரியம் முடிந்ததும், அவரை சஸ்பெண்ட் செய்துவிட்டு, நெயில்வால் அவர்களை டி.ஜி.பி.யாக நியமித்து "போன மச்சான்

திரும்பி வந்தான்" என்பதைப் போல அவரை மாற்றி விட்டு, கோவிந்த் அவர்களை டி.ஜி.பி.யாக நியமித்து, பிறகு கோவிந்த் அவர்களையும் மாற்றிவிட்டு அலெக்சாண்டர் அவர்களை டி.ஜி.பி.யாக நியமித்தார்கள் என்றால், இந்த மாற்றங்கள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே காவல்துறை நிர்வாகத் திலே நடைபெற்றதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அலெக்சாண்டர் பெயருக்கேற்ப உயரம், கம்பீரம், இவையெல்லாம் உள்ளவர்தான். ஆனால், ஆட்சி மாறி அம்மையார் ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் அலெக்சாண்டர் எங்கே போனார்? இராமேஸ்வரம் கடற்கரைக்கு அனுப்பப்பட்டார். ஒரு நாற்காலி கூட கிடையாது. மேஜைகூட கிடையாது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே அவர் அங்கே மாற்றப்பட்டார். கடைசியாக அவருக்கு விமோசனம் ஏற்பட்டு, இராமேஸ்வரத்திலே இருந்த காரணத்தினாலோ என்னவோ விமோசனம் ஏற்பட்டு கடைசியாக வந்து சேர்ந்தார். வந்த பிறகும் அவரை மாற்றி விட்டார்கள். பிறகு கோவிந்த் அவர்களை அங்கே நியமித்தார்கள். பிறகு அவரும் மாற்றப்பட்டார். இப்படி டி.ஜி.பி.யினுடைய நிலைமைகளே இந்த அளவிற்கு இருந்தது; அ.தி.மு.க. ஆட்சியில்!"

உடன்பிறப்பே, இந்த புள்ளி விவரங்களைக் காணும்போது, தமிழக அரசியல் வரலாற்றிலேயே அதிகாரிகள் தொடர்ந்து அதிரடியாக மாற்றப்பட்டுக் கொண்டே இருப்பது, ஜெயலலிதாவும், இந்தியா டுடே ஏடும் கூறுவதுபோல இதுவே முதல் முறையல்ல என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

தி.மு.கழக ஆட்சியில் இந்த அளவிற்கு மாறுதல் செய்ததற்குக்கூட மற்றும் ஓர் காரணமும் உண்டு. கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலே பதவி உயர்வுக்கான கோப்புகள் எல்லாம் கையெழுத்திடாமல் வைக்கப்பட்டிருந்தன. தி.மு.கழக ஆட்சி ஏற்பட்டவுடன் அந்தப் பதவி உயர்வுக்கான கோப்புகளில் கையெழுத்திடப்பட்ட காரணத்தால் 70க்கும் மேற்பட்ட இன்ஸ் பெக்டர்கள் மட்டும் டி.எஸ்.பி.க்களாக பதவி உயர்வு பெற்றார்கள்.

அதன் காரணமாக அவர்களுக்குப் புதிய இடங்களில் வாய்ப்பளிக்க நேரிட்டது. தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்த காளிமுத்து என்பவர் கமிஷனர் ஆப் போலீசாக சென்னையிலே பணியாற்றி வந்தார். இவர் தி.மு.கழக ஆட்சியிலே சென்னையிலே அந்தப் பதவியிலே இருந்தார் என்பதற்காக அவரை சாதாரண அதிகாரமற்ற பதவியிலே அமர்த்தியதோடு மட்டுமல்லாமல், டி.ஜி.பி. பதவி உயர்வு கோப்பிலே கையெழுத்திட்டால் அவருக்கும் டி.ஜி.பி.யாக பதவி உயர்வு தர நேரிடும் என்பதற்காக அந்தக் கோப்பிலேயே கையெழுத்திடாமல் வைத்திருந்தார்கள். தி.மு.கழக ஆட்சி வந்த பிறகுதான் அந்தக் கோப்பிலும் கையெழுத்திட்டு அவருக்கு டி.ஜி.பி. அந்தஸ்தில் பதவி உயர்வே தரப்பட்டது. காளிமுத்துவுக்கு பதவி உயர்வு தராதது மட்டுமல்ல, வீரப்பனை பிடித்ததற்காக 700க்கும் மேற்பட்ட காவல் துறையினருக்கு வீடுகளும், பரிசுகளும் வழங்கப்பட்ட போதுகூட இவருக்கு எதுவும் வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இதுபோல ஒவ்வொரு நிலையிலும் பதவி உயர்வுகள் தி.மு.கழக ஆட்சி வந்தவுடன் வழங்கப்பட்டது.

கடந்த கால ஆட்சியிலே காவல் துறை அதிகாரிகள் மாற்றம் செய்யப்பட்டதோடு மாத்திரமல்ல; தி.மு.கழக ஆட்சியில் இருந்த டி.ஜி.பி.யை மாற்றிவிட்டு ரவீந்தரநாத் என்ற புது டி.ஜி.பியை ஜெயலலிதா ஆட்சியிலே நியமித்ததோடு, ஒரு மாத காலம் கூட அவரை அந்தப் பதவியிலே நீடிக்க விடாமல், அவரை சஸ்பெண்ட் செய்து வீட்டிற்கும் அனுப்பி வைத்தார். இந்தியாவிலேயே எந்தவொரு மாநிலத்திலும் இல்லாத வகையில் இப்படி டி.ஜி.பி.யாக இருந்த ஒருவரை சஸ்பெண்ட் செய்த பெருமையும் ஜெயலலிதாவிற்கு உண்டு. அது மாத்திரமல்ல, உள்துறைச் செயலாளராக தன்னிடம் பணியாற்றியவரை ஜெயலலிதா ஆட்சியிலே மாறுதல் மாத்திரம் செய்யவில்லை. சஸ்பெண்ட் செய்து தன் ஆட்சிக் காலம் வரை பதவி வாய்ப்பே கொடுக்காமல் இருந்த பெருமையும் ஜெயலலிதாவிற்குத்தான் உண்டு. அதுமாத்திரமல்ல, சென்னை மாநகர காவல்துறை ஆணையராக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரை ஒரு சில மாத காலங்கள் வரையில், அதாவது என்னைக் கைது செய்து சிறையிலே அடைக்கும்வரை பயன்படுத்திக் கொண்டு விட்டு, பிறகு அவரையும் “சஸ்பெண்ட்” செய்து வீட்டிற்கு அனுப்பிய “திறமை”(?) ஜெயலலிதாவிற்கு உண்டு. இவ்வாறு உள்துறை செயலாளர், டி.ஜி.பி., கமிஷனர் ஆப் போலீஸ் என்று

தன் ஆட்சியின் ஐந்தாண்டு காலத்தில் 'சஸ்பெண்ட்' செய்து வீட்டிற்கு அனுப்பியவர் எழுப்பியுள்ள கேள்வியை எடுத்து வெளியிட்ட "இந்தியா டுடே" இந்தச் செயல்களையெல்லாம் வசதியாக மறந்துவிட்டதே என்பதை நினைக்கும் போதுதான் சற்று வருத்தமாக உள்ளது. இருந்தாலும் "இந்தியா டுடே" நான் பதிலளிக்க வேண்டுமென்று எழுதியிருந்ததால் இந்த விளக்கத்தை அவர்களுக்கும் நாட்டுக்கும் நான் தந்திட முன்வந்தேன்.

அன்புள்ள,

மு.க.

06-09-2006

3225. சிந்திக்க மறந்தோரை மட்டுமே ஏமாற்றலாம்!

உடன்பிறப்பே,

என்னிடம் முதன்மைச் செயலாளராகப் பணிபுரிபவரும், தமிழக அரசின் ஐ.ஏ.எஸ். மூத்த அதிகாரிகளில் ஒருவருமான - சையத் முனீர் - ஹோதா அவர்களைப் பற்றி பயங்கரமான குற்றச் சாட்டு கூறி, அண்மையில் ஓர் அவதூறு அறிக்கை வெளியிட்டுள்ள முன்னாள் முதலமைச்சர் - அம்மையார் ஜெயலலிதாவைக் கண்டித்தும் - அவர் எந்த அளவுக்கு 'ஆழமான சிறுபான்மையோர் விரோதி' என்பதற்கு அடுக்கடுக்கான சான்றுகளைக் கூறியும்; தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத் தலைவர் பேராசிரியர் எம்.ஹெச்.ஜவாஹிருல் லாஹ் அவர்கள் ஒரு நீண்ட அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில்; "தனது ஆட்சிக் காலத்தில் முஸ்லிம் உயர் அதிகாரிகளை இஷ்டம் போல் பந்தாடிய ஜெயலலிதா, தன் பொறுப்பற்ற செயல்களுக்கு புதுப்புது காரணங்களைச் சொல்லத் தொடங்கியுள்ளார்" என்றும்;

"ஜெயலலிதா அரசினால், தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து திரு.சையத் முனீர் ஹோதா முறையீடு செய்தபின் உயர்மட்ட விசாரணை நடத்தப்பட்டு ஜெயலலிதாவின் நடவடிக்கையை ரத்து செய்து உடனடியாக முனீர் ஹோதா பணியில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என உத்தரவிடப்பட்டதே, இது ஒன்றே ஜெயலலிதாவின் குற்றச்சாட்டு ஓர் அண்டப்புளுகு என்பதற்கு ஆதாரம் அல்லவா? தன்னால் ஒரு மூலையில் முடக்கிப் போடப்பட்ட ஒரு முஸ்லிம் அதிகாரி தி.மு.க. அரசில் முக்கியப் பொறுப்பில் அமர்ந்து கொண்டு, முக்கியமான நலத்திட்டங்களை முழு வீச்சில் நடத்தி வருவதை சகிக்க முடியாத ஜெயலலிதாவின் சங் பரிவார புத்தி, சண்டாளக் குற்றச்சாட்டுகளை சுமத்தி சதிராடுகிறது"

என்றும்; "முனீர் ஹோதா மீதான விசாரணைகள் முழுமையாக முடிவுற்று, அவர் குற்றமற்றவர் என்பது நிரூபிக்கப்பட்ட பிறகும், நீதிக்குத் தலைவணங்கி அவருக்கு விதிக்கப்பட்ட தற்காலிக பணி நீக்கத்தை ரத்து செய்யாமல் நீதிமன்றத்தையும், குடியரசுத் தலைவரின் ஆணையையும் ஒரு சேர அவமதித்தவர் ஜெயலலிதா. இவர் நீதிமன்ற ஆணைகளைப் பற்றி பேசுவது வேடிக்கையானது. முனீர் ஹோதா மீது ஜெயலலிதா ஜோடித்த குற்றச்சாட்டிற்கு உதவி செய்யாததற்காக முன்னாள் -டி.ஜி.பி. முன்ஷினியைப் பழி வாங்கினார். அவர் ஒரு கிறிஸ்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் முதன்மைச் செயலாளராகவும், பல்வேறு நலத்திட்டங்களுக்கு பின்புலமாகவும் இருந்து சிறப்பாக செயல்பட்டு வரும் முனீர் ஹோதாவின் முன்னேற்றத்தையும் சகிக்க முடியாமல், ஜெயலலிதா இனவெறி கருத்துக்களை விஷம் போல கக்கியுள்ளார்" என்றும் எழுதியிருக்கிறார்.

உடன்பிறப்பே,

சிறுபான்மை மக்களின் சிநேகிதி போல சிலிர்த்துக் காட்ட அம்மையார் ஜெயலலிதாவுக்கு எல்லாவிதமான சாமர்த்தியங்களும் உண்டு - அதுவும் தேர்தல் என்று வந்துவிட்டால் அப்போதுதான் அவருக்கு சிறுபான்மை மக்களின் மீது அக்கறையும், ஆசையும் கூடை கூடையாக கொட்ட ஆரம்பிக்கும். திடீரென்று ஒரு நாள் வேளாங்கண்ணி மாதாக் கோவிலுக்குப் போவார். மறுநாள் "தர்ஹா" விற்கு பயபக்தியோடு செல்வார். பல ஆண்டுகளுக்கு முன் மறைந்த கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களுடைய நினைவும், அப்போதுதான் அவருக்கு வரும். ஒரு மலராடை எடுத்துக் கொண்டு அவர் நினைவிடத்திற்குச் செல்வார். ஆகா என்ன பவ்யம்? என்ன பாவம்? அந்த நினைவிடத்தில் அவர் கசிந்துருகுவதைக் காண கோடிக் கண் வேண்டும். இப்படியெல்லாம் நடிக்கக் கற்றவர். நாட்டு மக்களை அதிலும் குறிப்பாக சிறுபான்மை மக்களை ஏமாற்றுவதில் கெட்டிக்காரர்.

நண்பர் ஜவாஹிருல்லாஹ் அவர்கள் ஒரு முனீர் ஹோதாவிற்காக அம்மையார் ஜெயலலிதா எடுத்த நடவடிக்கைகளையும், விடுத்துள்ள அறிக்கையின் வாசகங்களையும் விமர்சித்துள்ளார். ஆனால், அந்த அம்மையார் சிறுபான்மை சமுதாயத்துப் பிரச்சினைகளை எப்படியெல்லாம்

அலட்சியப்படுத்தினார் அவர் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது; சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை எப்படி ஓரம் தள்ளினார் என்பதற்கு இதோ ஓர் உதாரணம்.

ஏனோதானோவென்று எடுத்துரைக்கும் உதாரண மல்ல. அம்மையார் முதலமைச்சராக ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருந்தபோது சிறுபான்மை மக்கள் பிரச்சினையில் எப்படி நடந்து கொண்டார் என்பதற்கு அவரால் அலட்சியப்படுத்தப்பட்ட அல்லது புறக்கணிக்கப்பட்ட அரசின் கோப்புகளே உதாரணங்களாக இருக்கின்றன.

> ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்த கருத்திற்கிணங்க ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 18ந் தேதியன்று "சிறுபான்மையினர் உரிமைகள் நாள்" என்ற தலைப் பில் கொண்டாடப்பட வேண்டுமென மாநில அரசுகளை தேசிய சிறுபான்மையினர் ஆணையம் 7.12.2001 அன்று கேட்டுக் கொண்டுள்ளது. அதன்படி 2005ஆம் ஆண்டில், "சிறுபான்மையினர் உரிமைகள் நாள்" கொண்டாடுவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டாயிரம் ரூபாய் வீதம் 30 மாவட்டங்களுக்கும் 60 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திட, முதலமைச்சரின் ஒப்புதலைக் கோரி அந்தத் துறையிலிருந்து கோப்பு 4.1.2005 அன்று அனுப்பப்படுகிறது.
>
> 12.2.2005 அன்று முதலமைச்சரின் செயலாளர் அந்தக் கோப்பில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட செயலாளருடன் விவாதிக்கப்பட்டது என்று குறிப்பெழுதி, திருப்பியனுப்புகிறார்.
>
> மீண்டும் துறையினால் அந்தக் கோப்பு தயார் செய்யப்பட்டு, தலைமைச் செயலாளர் அதில் 25.5.2005 அன்று கையெழுத்திட்டு முதல் அமைச்சருக்கு அனுப்பப்படுகிறது.
>
> கடைசி வரையில் இந்தக் கோப்பு கையெழுத்தாகவில்லை. தற்போது கோப்பு என்னிடம் வந்து இதற்கான நிதியை நிதிநிலை அறிக்கையிலே ஆண்டுதோறும் ரூ.60 ஆயிரம் ஒதுக்கீடு செய்ய ஒப்புதல் அளித்து 6.9.2006 அன்று கையெழுத்திட்டுள்ளேன்.

இவ்வாறு இந்தக் கோப்பு 2002ஆம் ஆண்டு முதல் அமைச்சர் ஜெயலலிதாவுக்கு அனுப்பப்பட்டு, ஆட்சி மாறுகின்ற வரையில் நான்காண்டு காலத்தில் கையெழுத்து பெறாமலே திருப்பியனுப்பப்பட்டது.

உடன்பிறப்பே, சிறுபான்மை சமுதாயத்திலே உள்ள ஒருவர், இருவர் அல்ல; அந்தச் சமுதாயத்தின் உரிமையை நிலை நாட்ட வேண்டி தேசிய சிறுபான்மை ஆணையம் மாநில அரசுகளுக்கு விடுத்த கருத்துருவின் கதி என்ன என்பதைச் சிந்தித்துப் பார்த்தால் இந்த அம்மையார் சிறுபான்மையோருக்கு சிநேகிதியா? அந்த மக்களின் நிழல் கூடப் படக் கூடாது என்று ஒதுங்கிச் செல்லும் விரோதியா? என்பதை எளிதில் புரிந்து கொள்ளலாம்.

தமிழக அரசில் எந்தவொரு அமைச்சரவையிலும் ஒருவரோ இருவரோ இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு பிரதிநிதித்துவம் அளித்து வந்த பழக்கத்திற்கு மாறாக ஜெயலலிதா அமைச்சரவையிலேதான் இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவர் களுக்கு பிரதிநிதித்துவமே இல்லை என்ற நிலைமை இருந்தது என்பதை மறைக்க முடியாது. இன்னும் சொல்லப்போனால், அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவருக்கு அமைச்சரவையிலே இடம் கொடுத்து விட்டு, அதை ஒருசில மாதங்களிலேயே பறித்துக் கொண்ட ஆட்சியும் ஜெயலலிதா ஆட்சிதான் என்பதை அந்த மக்கள் நன்றாகவே அறிவார்கள்.

சிறுபான்மை சமுதாய மக்களை ஜெயலலிதா எந்த அளவிற்கு சிறுமைபடுத்தினாரோ, அதைப் போலவே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு பெரிய காவல் துறை அதிகாரிக்கு ஜெயலலிதா ஆட்சியிலே எந்த அளவிற்கு இழுக்கு செய்யப்பட்டது என்பதற்கும் நான் இரண்டு நாட்களுக்கு முன்பு கையெழுத்திட்ட கோப்பிலிருந்தே உதாரணம் கூறிட முடியும். அது வருமாறு:

இந்தக் கோப்பு ஏ.டி.ஜி.பி.யாக இருந்த திரு.ஜெகன் ஐ.பி.எஸ். அவர்களைக் குறித்ததாகும். விஜிலன்ஸ் கமிஷனர் இந்த அதிகாரி மீது வரப்பெற்ற புகார்கள் குறித்து விசாரணை முறையாக நடத்தி, குற்றச்சாட்டுகள் நிரூபணமாகவில்லை என்று அறிக்கை கொடுத்து விடுகிறார். அதன் பேரில் இவர் மீதான குற்றச்சாட்டுகளை கைவிடுவதற்காக கோப்பு தயாரிக்கப்பட்டு, அன்றைய

முதல் அமைச்சரும், உள்துறை அமைச்சருமான ஜெயலலிதாவிற்கு 23.7.2003 அன்று அனுப்பப் பட்டது. அந்த ஐ.பி.எஸ். அதிகாரி தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர். அவர் ஏ.டி.ஜி.பி. பதவி அளவிற்கு தன் திறமை காரணமாக மேல் நிலைக்கு வந்த பிறகு அவர் மீது ஒரு குற்றச்சாட்டு கூறப்பட்டு, விசா ரணை நடத்தப்பட்டு, குற்றச்சாட்டில் எதுவுமில்லை என்று நடவடிக்கை கைவிடுவதற்கான கோப்பு அன்றைய முதல் அமைச்சர் அம்மையாருக்கு; 2003ஆம் ஆண்டு அனுப்பப்பட்ட போதிலும், ஜெயலலிதா ஆட்சியி லிருந்து செல்லும் வரை கையெழுத்திடவே இல்லை. தற்போது அந்தக் கோப்பு என்னிடம் வந்து 6.9.2006 அன்று கையெழுத்திட்டு அனுப்பினேன்.

உடன்பிறப்பே, போதாக்குறைக்கு; அம்மையார் முடி திருத்துவோரிடமும் மோதிக் கொண்டிருக்கிறார்; அவர்கள் விடுதலைப் போராட்ட வீரர் விசுவ நாததாசின் வழி வந்தோர் மட்டுமல்ல; திராவிட இயக்கப் போர் வாளாம் “விடுதலை” ஏடு படிக்கும் வாசகசாலைகளுக்கும் அடிக்கல் நாட்டியவர்கள் – திராவிட இயக்கத்தின் தொட்டில்களே முடி திருத்தும் நிலையங்கள்தான் என்பதை அறியாத மௌடீகங்களின் புலம்பலுக்கு புத்தி புகட்டுவோர்தான் யார்?

சிறுபான்மையோர்க்கும், தாழ்த்தப்பட்டோருக்கும், முடி திருத்துவோருக்கும் “ஜென்ம விரோதி” என்பதை செயலில் காட்டும் அம்மையார்; நான்தான் அவர்களுக்கு “சிநேகிதி” என்று சிலிர்த்துக் காட்டினால்; சிந்திக்க மறந்தவர்களை மட்டுமே ஏமாற்ற முடியும்!

அன்புள்ள,

மு.க.

11-09-2006

3226. எத்தகைய தாய்; எத்தகைய மகன்?

உடன்பிறப்பே,

பித்தம் தலைக்கேறி ஒருவர் பிதற்றும்போது; நாம் அமைதியாக இருந்துதான் அவரைக் குணப்படுத்தும் வழியைக் காண வேண்டும் - ஏன் பித்துப் பிடித்தது? இதற்கென்ன திடீர்க் காரணம்? என்பதைக் கண்டறிந்து எந்த வைத்தியம் பலிக்கும் என்பதை ஆராய்ந்தறிந்துதான் அதற்கேற்ப நாம் நடந்து கொண்டு, சிகிச்சை முறைகளைக் கையாளுதல் வேண்டும். சீக்கிரம் குணமாக வேண்டும் என்று அவசரப்பட்டு; அந்த நோய் குணமாகாத காரணத்தினால்; நாமும் அந்த நோய்க்கு ஆளாகி விடக் கூடாது!

என் செய்வது; தலையைப் பிய்த்துக் கொள்கிறார் - தன் தலையில் அடித்துக் கொள்கிறார் - அதற்காக அவர் எதிரில் சென்று - நின்று - அவரைப் போல "டேய்! உடுக்கு அடிடா! பம்பை அடிடா!" என்று தெரு மண்ணை இரு கைகளால் அள்ளிக் காற்றில் தூற்றிக் கொண்டிருக்க முடியுமா? அதைப் பார்த்தால் பகுத்தறிவுள்ள மனிதர்கள், நம்மையு மல்லவா அந்தப் "பித்தர் கோஷ்டி"யில் சேர்த்துப் பேசிவிடுவார்கள்.

அதனால்தான் உன் போன்ற அன்பு உடன்பிறப்புகளைக் கேட்டுக் கொள்கிறேன்; சித்தம் கலங்கிய பித்துக்குளிகளிடம் அனுதாபம் காட்ட வேண்டுமே தவிர; சுய நினைவுடன் பேசுகிறார்கள் என்றெண்ணிக் கொண்டு, பதிலுக்குப் பதில் நாமும் அவர்கள் தரத்துக்கு இறங்கி விடக்கூடாது - பதில் சொல்லாமலே இருந்தால் மக்களுக்கு விளக்கம் கிடைக்காமல் போய்விடுமே என்று நினைத்தோ; உண்மை தெரியாமல் போய்விடுமேயென்று கருதியோ - நாகரிகமாக நாலு வார்த்தை நீயோ நானோ சொன்னாலும்; உயர்குலத்துப் பித்துக்குளியின் வார்த்தை; ஒரு டன் பனிக்கட்டிக்குச் சமம் என்றும்; பதிலுக்கு

நாம் பயன்படுத்தும் சொல்; பயங்கரமான எரிமலைக் குழம்பு என்றும் வர்ணிக்கின்றவர்கள்; அதுதான் வேதகால தர்மம் என்றும் மனு நீதியென்றும் வாதிடுவார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. - "ஆரியர்களில் ஓர் ஆண்; ஒரு சூத்திரப் பெண்ணைக் கற்பழித்துவிட்டால்; அந்த ஆரிய ஆண் மகனின் தலையை மொட்டை அடித்தால் போதும் என்றும் - அதே மாதிரி ஒரு சூத்திரன், ஒரு ஆரியப் பெண்ணிடம் அதே பாணியில் நடந்து கொண்டால்; அந்தச் சூத்திரனின் ஆண் குறியை வெட்டி எறிந்து அவன் ஆவியைப் போக்கிட வேண்டுமென்றும்" ஆரிய நீதி அழுத்தம் திருத்தமாக எழுதி வைத்திருக்கிறது.

இன்று அப்படியே அது நடைமுறையில் இல்லா விட்டாலும்; நாட்டு நடப்பில் அதே பாணியில்தான் பல விஷயங்கள் கடைப்பிடிக்கப்படுகின்றன. விமர்சிக்கப்படுகின்றன. உண்மையான திராவிட இயக்கத்துக்காரனாக யார் இருந்தாலும் - அவர்களின் பிரச்சினையில் அரசியலில் ஆகட்டும் அல்லது வேறு துறையிலாகட்டும் - இந்த மனு நீதி (?) தான் எப்படியோ ஒரு வகையில்; இன்றைக்கும் பிரயோகப்படுத்தப்படுவதைக் காண முடிகிறதல்லவா?

அதனால்தான் உடன்பிறப்பே உனக்குச் சொல்கிறேன் - இமாலயத் தவறு செய்பவர்கள் - அல்லது செய்தவர்கள் - அதற்காகத் தண்டிக்கப்பட்டிருப்பவர்கள் - இன்றைக்குத் தாண்டிக் குதித்து தலைகீழ் வாதங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்றால்; அவர்கள் தவறிழைத்தது தெரிந்திருந்தும், அவர்களைத் தாங்கிப் பிடிக்கவும் - அதே சமயம் நேரம் வாய்த்தால் நம் தலையில் ஓங்கி அடிக்கவும் ஒரு கூட்டம் நாட்டில் தயாராக நடமாடிக் கொண்டிருக்கிறது என்பதையும் அந்தக் கூட்டத்தில் நன்றி கொன்றிடும் நய வஞ்சக நரிகள் சில வாய் பிளந்து நாக்கைத் தொங்க விட்டுக்கொண்டு ரத்தம் குடித்திடக் காத்திருப்பதையும் அறியாதவனல்ல நீ!

எனவே தான் அறிஞர் அண்ணா சொன்னது போல நாம் எடுத்துவைக்கும் காலடி ஒவ்வொன்றும் அளந்து வைக்கப்பட வேண்டுமென்று அறிவுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காரணம் உனக்குத் தெரியாமல் இல்லை - நம் மீது புழுதி வாரி வீசுவார்கள் - அது கண்டு புன்னகை புரியும் புல்லர்கள்; அந்தப்

புழுதியை நாம் கரங் கொண்டு நம் கண்ணில் படாமல் தடுத்தால்; கரம் கொண்டு தடுப்பதை மறைத்துவிட்டு; கத்தி கொண்டு தாக்கியதாகவே எழுதுவர்! பேசுவர்! எகிறிக் குதிப்பர்!

எனவே பித்தன் பிதற்றுகிறான் என்பதற்காக - நாமும் எதிர்த்துப் பேசி; இரு முனையிலும் பிதற்றல்தான் என்ற தந்திரிகளின் பேச்சுக்கு இடம் தந்து விடக் கூடாது.

ஆட்டம் போடுகிறவர்கள் - அதிகார வெறி பிடித்தவர்கள் - யாராக இருப்பினும் அவர்கள் எதற்கும் துணிவார்கள் - என்பதை "ரோமாபுரி ராணிகள்" புத்தகத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் தீட்டியுள்ள "அக்ரிப்பானாவின் அக்கிரமம்" என்ற தலைப்பிட்ட கட்டுரையில் நீ படித்ததில்லையா? இல்லையெனில் இதோ நினைவூட்டுகிறேன்.

"அரசி அக்ரிப்பானாவுக்கு இனி ரோமாபுரியின் கிளாடியஸ் அரசனால் ஆக வேண்டியது ஒன்றுமில்லை. தர்பாரிலே இடங்கிடைத்து விட்டது. மகனுக்கும் செல்வாக்கு வளர்ந்து விட்டது. பட்டம் அவனுக்கே என்பது நிச்சயமாகிவிட்டது. கிளாடியஸ் உயிருடன் இருந்து தர வேண்டியதனைத் தந்தாகி விட்டது. இனி இறந்து தரவே அவனிடம் பொருள் இருந்தது. அதுவே அவனுடைய கிரீடம்! அதைப் பெற, அரசி தீர்மானித்து விட்டாள்.

அரசனுக்கு ஏதோ நோய். அதற்கு மருந்திடலாயினர், அரசி விஷமூட்டினாள். ஜெனோபன் என்ற வைத்தியன் மருந்து தர வந்தான். அவனையும் அரசி சரிப்படுத்திடவே, அவனும் நஞ்சே தந்தான். மன்னன் மாண்டான்.

இவ்வளவு பாடுபட்டு மகனை மன்னனாக்கினாள். அவனுடைய ஆட்சியோ தாய்க்கு விரோதமாகவே ஆரம்பித்தது. மகன் பேருக்கு மன்னனாகவும், உண்மையான ஆட்சி தன்னிடமும் இருக்க வேண்டும் என்பது அக்ரிப் பானாவின் கருத்து. மன்னனான மகன் டோமிடஸ் என்ற பெயரை நீரோ என்று புதுப்பித்துவிட்டு பட்டஞ்சூட்டிக் கொண்டதுடன், தனது சகாக்களுடன் சேர்ந்து ஆளத் தொடங்கினான். ஆக்டே என்ற அழகியுடன் குலவினான். அதிகாரத்தில் அன்னைக்கு இடமளிக்க மறுத்தான். அதற்குப் பிறகுதான், மகனை

வேறு மாதர் மயக்கி, தர்பாரில் இடம் பெறுவதைத் தடுக்க தானே தன் மகனை மயக்கிடத் துணிந்தாள் மாதா! அந்தச் சம்பவமே முதலிலே தீட்டப் பட்டிருக்கிறது.

அந்தப் பாதகத் திட்டப்படியே அக்ரிப் பானா ஆடை அணிகளால் தன்னை அலங்கரித்துக் கொண்டு நீரோவுடன் சரசமாடவும் ஆரம்பித்தாள்! அவனுடைய மனம் பேதப்படும்படியாக, காமக் குறிகளுடன் நடிப்பாள்; போவாள்; ஆடை நெகிழ நிற்பாள். மேல் விழுந்து உபசரிப்பாள். உல்லாச பேச்சுகள் பேசுவாள்; இவைகளை அந்த மகனும் வெறுத்துத் தள்ளவில்லை!

எத்தகைய மகன்! எத்தகைய தாய்?"

இப்படிப் போகிறது போக போக்கியக் களஞ்சியமான ரோமாபுரியின் கதை!

அக்ரிப்பானாக்களால் ஆற்றல் மிகு வீரர்கள் நிறைந்த ரோமாபுரி எவ்வாறு வீழ்ந்தது என்பதைத்தான் அறிஞர் அண்ணாவின் "ரோமாபுரி ராணிகள்" விளக்குகிறது.

வீழ்ச்சியின் காரணமாகவும், தனது வித விதமான சாகசங்கள் தோல்வியுற்றதின் காரணமாகவும் - அகங்காரவல்லி அக்ரிப்பானா ஆடையைக் கிழித்துக் கொண்டு அலறியது போல அலறுகின்றவர்களின் ஆவேசக் கூத்துக்கு இனி; நீ; அலட்சியம் ஒன்றையே பதிலாக அளித்திடு!

அதுவே அண்ணாவின் வழி -

கண்ணான நம் கடமையை உணர்த்தும் வழி!

அன்புள்ள,

மு.க.

12-09-2006

3227. கதைகளல்ல; கண்ணீர் அருவிகள்!

உடன்பிறப்பே,

விக்கிரமாதித்தன் சிம்மாசனத்தில் ஏறி அமர்வதற்கு அதன் ஒவ்வொரு படியாகக் கடக்கும்போது; ஒவ்வொரு படியிலும் ஒரு பதுமை ஒரு கதை சொன்னது என்றும்; -

அந்தக் கதைகள் அனைத்தையும் காது கொடுத்துக் கேட்ட பின்னரே "போஜ மகாராஜன்" எனப்பட்டவன் இறுதியாக சிம்மாசனத்தில் அமர முடிந்தது என்றும்;

அப்படியே அமர்ந்தான் என்றும் - சிறிய வயதில் பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதையில் படித்த - நினைவு இருக்கிறது.

அந்த நினைவைச் சுமந்து கொண்டு தான் கடந்த 13.5.2006 அன்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டு ஆட்சி நடத்தத் தொடங்கிய நாளிலிருந்து ஒவ்வொரு நாளும் நிர்வாகத்தில் மிக முக்கியமான இரத்த ஓட்டமாக இருக்கின்ற கோப்புகள் படித்து ஆணைகள் பிறப்பிக்கின்ற அவசியமான பணியை ஆற்றி வருகிறேன்.

ஐந்தாண்டு 2001 முதல் 2006 என ஆட்சி புரிந்த அம்மையார் ஜெயலலிதா அவர்கள் கோட்டையில் அமர்ந்து கோலோச்சிய விதம் எவ்வாறு இருந்தது என்பதற்கு; தேங்கிக் கிடந்து; பொந்துகளில் இருந்து எட்டிப் பார்த்து என்னிடம் சிக்கிக் கொண்டுள்ள ஆயிரத்துக்கு மேற்பட்ட தூசுபடிந்த கோப்புகள் அசைக்க முடியாத சான்றுகளாக அமைந்துள்ளன.

அந்தக் கோப்புகளில் மிக முக்கியமானவைகளாக உள்ள சில; விக்கிரமாதித்தன் சிம்மாசனத்துப் பதுமைகள் போல என்னிடம் சொல்லியுள்ள கதைகளைத்தான் உனக்கும் ஊராருக்கும் தெரிவித்து வருகிறேன்.

ஊரார் என்றதும் இன்று நான் பிறந்த ஊர்ப் பக்கம் ஒருநாள் பயணமாக விவசாயத் தொழிலாளிகள் மாநாட்டுக்கு இந்தியக்

கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களாம் தோழர் நல்லகண்ணு, தோழர் தா.பாண்டியன் ஆகியோரின் அழைப்புக்கிணங்க திருவாரூருக்குச் செல்வது ஞாபகத்திற்கு வந்து விட்டது.

பயணத்திற்குத் தயாராகிறேன்; பதுமை பேசுவது போல பழைய கோப்பு ஒன்று என் எதிரே வந்து பேசுகிறது.

வணிக வரி மற்றும் பதிவுத் துறை சம்பந்தப்பட்ட கோப்பு தான் அது.

டாக்டர் அம்பேத்கர் மக்கள் சங்கம் (டாப்சி) சார்பாக ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த 550 நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு;

மயிலாடுதுறை

சீர்காழி

தரங்கம்பாடி

நன்னிலம்

வட்டங்களில் உள்ள 564.67 ஏக்கர் நிலங்களை ஒரு குடும்பத்திற்கு ஒரு ஏக்கர் என்ற திட்டத்தின்கீழ் வழங்கி; அதற்கான கொடை ஆவணங்களை (Gift Deed) பதிவு செய்யும் போது முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்துக்கு விலக்களிக்குமாறு கோரப்பட்டது. அந்தக் கோரிக்கை, தி.மு.கழக ஆட்சியில் 29.4.1998 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதற்கான அரசாணையும் பிறப்பிக்கப்பட்டது.

அதன் பின்னர் 12.3.2001இல், தி.மு.க. ஆட்சி மாறுவதற்கு இரண்டு மாதத்துக்கு முன்பு அம்பேத்கர் மக்கள் சங்கம், தனது முதல் கோரிக்கையை யொட்டிய மற்றொரு கோரிக்கையை வைத்தது. அதாவது அந்த நிலங்களை விற்பனை ஆவணங்கள் (Sale Deed) மூலமாக வழங்க உத்தேசித்துள்ளதாகவும், எனவே அரசின் ஆணையில் "கொடை ஆவணம்" என்று இருப்பதற்குப் பதிலாக "விற்பனை ஆவணம்" என்று திருத்தம் செய்து அரசாணை வெளியிட வேண்டும் என்ற சிறியதோர் கோரிக்கை தான் அந்த ஆதி திராவிட மக்களின் கோரிக்கையாகும்.

அந்தக் கோரிக்கையை நாகை மாவட்ட ஆட்சியர் அரசுக்குப் பரிந்துரை செய்து அனுப்பி வைக்கிறார்.

அதற்கிடையே 2001இல் நடைபெற்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலில் ஆட்சி மாறி விடுகிறது. அம்மையார் ஜெயலலிதா தலைமையில் அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்புக்கு வந்து விடுகிறது.

அம்பேத்கர் மக்கள் சங்கத்தின் சார்பில் வைக்கப்பட்ட அந்த "திருத்தக் கோரிக்கை" அ.தி.மு.க. அரசின் சட்டத் துறையினால் பரிந்துரை செய்யப் பெற்று, அடுத்து வணிக வரித்துறையும் ஏற்றுக் கொண்டு, நிதித் துறையும் மறுப்பு சொல்லாமல் ஒப்புதல் தந்து; முதல் அமைச்சர் ஜெயலலிதா அவர்களின் ஒப்புதல் கையெழுத்துக்காகக் கோப்பு 18.6.2003 அன்று அவரிடம் போய்ச் சேருகிறது. அம்மையாரின் செயலாளர் 'அந்தக் கோப்பு அமைச்சரவையில் வைக்கப்படலாமா' என்று அதிலே எழுதி, அதற்கான பதிலை மீண்டும் சுற்றுக்கு அனுப்புமாறு தெரிவித்து, கோப்பினை துறைக்கே திருப்பி அனுப்பி வைக்கிறார். -

"அமைச்சரவையில் விவாதித்து முடிவு எடுக்கலாம்" என்று முதல் அமைச்சரே அந்தக் கோப்பில் எழுதி அனுப்புவதற்குப் பதிலாக; இந்தச் சுற்று வேலை நடைபெறுகிறது.

எனவே முதலமைச்சர் ஜெயலலிதாவின் செயலா ளர் எழுப்பிய கேள்வியையொட்டி கோப்பு மீண்டும்; ஊர்வலமாக அனுப்பப்பெற்று - 25.6.2003 அன்று தொடங்கி; 16.11.2004 வரையில் பழனி முருகன் பரமசிவன் பார்வதியைச் சுற்றிவர மயில் வாகனத்தில் பறந்தான் என்பார்களே; அது போலப் பயணம் செய்து, ஆக மொத்தம் அந்தக் கோப்பு ஒரு வருடம், ஐந்து மாதங்களுக்குப் பிறகு முதல் அமைச்சர் அலுவலகத்தை மீண்டும் எட்டிப் பார்க்கிறது! முதல்வரின் கையெழுத்துக்காகத் தவியாய் தவிக்கிறது! கையெழுத்தாவது; கால் எழுத்தாவது; அதன் தலையெழுத்தை மாற்றி எழுத முடியுமா? இத்தனைக்கும் முடிவுசெய்ய வேண்டியது; பெரிய பிரச்சினை ஒன்றுமில்லை; ஏற்கனவே அம்பேத்கர் மக்கள் சங்கத்தினர் 550 ஏழை விவசாயிகளுக்கு, குடும்பத்திற்கு ஒரு ஏக்கர் வீதம் வழங்குவதை பதிவு செய்யும்போது "கொடை ஆவணம்" (Gift Deed) என்பதை, விற்பனை ஆவணம் (Sale Deed) என்று திருத்தம் செய்து ஆணை பிறப்பிக்க வேண்டும் என்ற இந்தக் கோரிக்கைக்குத்தான் - இத்தனை ஆண்டு - அம்மையார் ஆட்சியில் - அந்தக் கோப்புக்கு இந்தப் படாதபாடு!

அப்படியும் அம்மையாரின் அருள்மிகு ஒப்புதல் கையெழுத்து அந்த அரசாணைக்கு அந்தக் கோப்பில் கிடைத்ததா? இல்லை! இல்லை! இல்லவே இல்லை!

கோப்பு பாவம்; கொட்டாவி விட்டுக் கொண்டிருந்துவிட்டு, அம்மையார் கோட்டையைக் காலி செய்யும் வரையில்; கொட்டக் கொட்ட முழித்துக் கொண்டிருந்துவிட்டு - "அப்பாடா! ஐந்தாண்டு முடிந்து விட்டது, இனி நமக்கு அபயம் கொடுப்பார் யார்?" என்று தேடியலுத்து நேற்று (11.9.2006) என்னிடம் வந்து சேர்ந்தது!

எப்படி வேடிக்கை; வேதனையான வேடிக்கை யென்று எண்ணிப்பார் உடன்பிறப்பே; 1997ஆம் ஆண்டு இறுதியில் தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் ஆதி திராவிட மக்களுக்காக கொடுக்கப்பட்ட கோரிக்கையைப் பரிசீலித்து, அப்போதே ஒரு முறை அமைச்சரவையில் வைத்து முடிவெடுத்து 1998ஆம் ஆண்டு தொடக்கத்தில் அரசாணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது. ஆனால் அந்த ஆணையில் இருந்த "கொடை ஆவணம்" என்பதை "விற்பனை ஆவணம்" என்று ஒரு சிறிய திருத்தம் செய்து ஆணை பிறப்பிக்க; அதுவும் ஆதி திராவிட ஏழை மக்களுக்காக அந்த அனுகூலத்தைச் செய்திட; அம்மையார் ஆட்சிக்கு அருளே சுரக்காமல் - 2001 முதல் 2006 வரையில்; கருணை பிறந்து கையெழுத்தே போடாமல் - முதலமைச்சர் ஜெயலலிதாவின் அலுவலகத்தில் மூலையில் கிடந்த அந்தக் கோப்பு; 11.9.2006 அன்று பரிதாபமாக என்னைப் பார்த்துக் கொண்டு வந்து நின்றது, நான் அதிலே கையெழுத்து போட்டுவிட்டுத்தான் திருவாரூர் நிகழ்ச்சிக்குப் புறப்பட்டேன்.

பயணப்படும் பகுதிக்கு தொடர்புடைய பிரச்சினை என்பதால் அதிகப்படியான ஆர்வத்துடன்; பதுமை சொன்ன கதைகளை போஜராஜன் கேட்டது போல நானும் கேட்டேன் -

கேட்டதை உனக்குக் கடிதமாக எழுதினேன்; இன்னும் எத்தனை பதுமைகளோ; எத்தனை கதைகளோ! கதைகளல்ல; கண்ணீர் அருவிகள்!

அன்புள்ள,

மு.க.

13-09-2006

3228. இரத்தம் தோய்ந்த கோப்பு!

உடன்பிறப்பே,

திரு. வாஜ்பய் அவர்கள் பிரதமராக இருந்த போது "கார்கில் போர்" மிகக் கடுமையாக நடை பெற்றதை அறியாத இந்தியர்கள் யாரும் இருக்க முடியாது. இந்திய நாட்டு எல்லைகளைப் பாது காக்கும் பொறுப்பு மிகுந்த போராட்டத்தில், நாட்டுப் பற்று மிகுந்த நமது தமிழ் இனத்து மக்களும் தனித்ததோர் ஆர்வங் கொண்டு, உணர்ச்சிப் பிழம்புகளாகி நிதியை அள்ளி அள்ளி வழங்கினர். வாரி வழங்கிய அந்தப் போர் நிதி இந்திய மாநிலங்களிலேயே அதிகமான தொகையாக ஐம்பது கோடி ரூபாயை நான் நேரிலேயே டெல்லிக்குச் சென்று பிரதமர் வாஜ்பய் அவர்களிடத்திலே வழங்கியதையும் அது கண்டு மற்ற மாநிலங்கள் மலர்ந்த முகமுடன் அகல விழிகளை விரித்து நம்மைப் பாராட்டின - இந்த மண் மீதும், மண்ணின் மானம் காத்திட நாம் கொண்டிருந்த மன உறுதி பற்றியும் எழுதிப் போற்றின ஏடுகள் எல்லாம்! எத்தனை முறையீடுகளும்; அவை நிறைவேற்றப்படவில்லையே என்ற குறைபாடுகளும் இருந்தாலும்கூட அனைத்தையும் மறந்துவிட்டு, எல்லையோரத்து மலைப்பாறைகளில் ரத்தம் சிந்தி நாடு காத்திடக் கேடு பல வரினும் அவற்றைத் துச்சமெனக் கருதி துறந்தனர் தம் உயிர்களை, உடைமைகளை; இந்த அன்னை பூமி மீது அடங்காப்பற்றுக் கொண்ட ஆற்றல் மிகு வீரர்கள்! அவர்களைக் களத்திற்கு அனுப்பி வைத்து விட்டு; தன் மகனோ; மனாளனோ; போரில் புறமுதுகிடாமல் மார்பில் காயந்தாங்கி மடிந்தனரா என்பதிலே மட்டும் கண்ணும் கருத்துமாக இருந்தனர்; போருக்குப் புதல்வர்களை அனுப்பி வைத்த "புறநானூறு" வழி வந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

பகைவர்க்குப் பாதம் பதிந்திட ஓர் உடைந்த பாறையின் அளவு கூட விட்டுத் தர மாட்டோம் என்ற உறுதியேற்று நடந்த அந்தக் கார்கில் யுத்தத்தில் நமது நாட்டின் வீர சபதமே வென்றது

எனினும், ஆனால்; அதற்கு விலையாக எண்ணற்ற காளையரைக் காவு கொடுக்க வேண்டியதாயிற்று.

நூற்றுக்கணக்கான பட்டாளத்துச் சிப்பாய்களைப் பலி கொண்ட கார்கில் யுத்தம்; தமிழ்நாட்டுத் தன்மான வீரர்கள் பத்தொன்பது பேரை விழுங்கி ஏப்பமிடத் தவறவில்லை. தமிழர் வீரத்தின் விழுதாயினர் அவர்கள் பத்தொன்பது பேரும் என்றாலும் கூட; அவர்களைப் பெற்ற வயிறுகள் பற்றி எரியாமல் இருக்குமா?

அந்த நெருப்பை அணைத்து அவர்தம் நெஞ்சத் துயருடன் தன்னை இணைத்துக் கொள்ள தமிழக தி.மு.க. அரசு தயக்கம் காட்டிடவில்லை. போரில் உயிர் நீத்த அந்த இராணுவ வீரர்களின் வாரிசுகளுக்கு இலவசமாக வீடுகள் வழங்க முன்வந்தது. அவ்வாறே அறிவிப்பும் வெளியிடப்பட்டது. கார்கில் களத்தில் உயிர் கொடுத்த அந்த உத்தமர்களின் குடும்பங்களுக்கு; தலா ஐந்து இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டது. அவர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு கருணை அடிப்படையிலே வேலை வாங்கித் தரப்பட்டது. அவர்களின் குழந்தைகள் தொழிற்கல்வி படிக்க வசதி செய்து தரப்பட்டது. இவை மட்டுமல்லாமல் வீட்டு வசதி வாரியத்தின் வாயிலாக இலவசமாக உயர் வருவாய் தரத்தில் வீடுகள் வழங்குவதென்றும் அறிவிக்கப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலில் தி.மு.க. ஆட்சி மாற்றப் பெற்று அம்மையார் ஜெயலலிதா தலைமையில் அ.தி.மு.க. ஆட்சி, பொறுப்பேற்றுக் கொண்டது. அப்போதுதான் நாட்டுக்காக எல்லைப் போரில் உயிர் நீத்த 19 தமிழ்நாட்டு இராணுவ வீரர்களின் வாரிசுகளுக்கு வழங்குவதாக அறிவிக்கப்பட்டிருந்த வீட்டுப் பிரச்சினையும் எழுந்துவிட்டது - என்ன பிரச்சினை அது?

வீட்டு வசதி வாரியத்தினால் இலவசமாக அந்தப் போர்வீரர்களின் குடும்ப வாரிசுகளுக்கு வழங்கப்படுமென்று உறுதியளிக்கப்பட்ட வீடுகளை வழங்கிட "முத்திரைத் தீர்வை, பதிவுக் கட்டணம்" இரண்டுக்கும் விலக்கு அளிப்பதென்று ஏற்கனவே விதிப்படி அறிவித்தவாறு அதற்கான "கோப்பு" அரசுத் துறையின் சார்பில் தயாரிக்கப்பட்டு; அதில் அன்றைய நிதி அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் கையெழுத்திட்டு

அந்தக் கோப்பினை 4-4-2003 அன்றையதினம் முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையாருக்கு அனுப்பி வைக்கிறார்.

நிதியமைச்சர் அறையிலேயிருந்து முதல் அமைச்சர் அறைக்கு அந்தக் கோப்புப் போய்ச் சேர்ந்திட ஓராண்டு ஆகிறது போலும்! ஏனென்றால் முதல் அமைச்சரின் செயலாளர் அந்தக் கோப்பிலே 16-3-2004 அன்று தான் ஒரு கேள்வியை எழுப்பி அதனை மீண்டும் திருப்பி அனுப்பி, அந்தக் கேள்விக்கு விளக்கம் அளித்து மறு சுற்றுக்கு அனுப்புமாறு எழுதியிருக்கிறார். அந்தக் கேள்வி என்ன தெரியுமா?

"இந்தக் கோப்பில் உள்ள விஷயம் பற்றி அமைச்சரவையில் விவாதித்து முடிவு எடுக்க வேண்டாமா?"

அமைச்சரவையில் "கோப்பு" வைக்கப்பட வேண்டுமென்று முதல் அமைச்சர் அம்மையார் அவர்களே அதே கோப்பினில் ஒரு வரி எழுதி உத்திரவிட்டிருக்கலாம். ஆனால் பாவம்; அந்தக் கோப்பு, அங்கும் இங்கும் அலைந்து திரிந்து; அடுத்து ஓராண்டு கழித்து 29-9-2005 அன்றையதினம் நிதியமைச்சர் பொன்னையன் அவர்களின் கையெழுத்துடன் முதல் அமைச்சரை நாடிச் செல்கிறது!

அதாவது 4-4-2003 ஆரம்பமான அந்தக் கோப்பு; 16-3-2004 அன்று; முதலமைச்சர் அலுவலகத்திலிருந்து பந்தாடப்பட்டு, அதற்கும் அடுத்த ஆண்டு 29-9-2005 அன்று நிதி அமைச்சர் பொன்னையனின் கையெழுத்துடன் மீண்டும் முதலமைச்சர் அலுவலகத்தின் கதவைத் தட்டி "அம்மா! அம்மா! கார்கில் போர்க்களத்தில் உயிர் விட்ட 19 வீரர்களுக்கு - தமிழ் நாட்டுக் குடும்பங்களுக்கு - வீடு வழங்கும் பிரச்சினையம்மா! கொஞ்சம் கதவைத் திறந்திடுங்கள்! கருணை கொண்டு இந்தக் கோப்பில் கையெழுத்துப் போடுங்கள் - நாட்டுக்காக உயிர் நீத்த வீரர்களின் பிரச்சினை!"

"தயவுசெய்து கையெழுத்துப் போடுங்கள்" கோப்பு கதறியழுதது - அருகிருந்த தோழி கூட முகம் வாடினார்! இறந்த வீரர்கள் என்ன இருந்தாலும் தமிழ்நாட்டுக்காரர்கள் அல்லவா; அதனால்!

கோப்பு காத்திருந்தது -
காத்திருந்தது! காத்திருந்தது!

அம்மா; கையெழுத்தைப் போடலாமே!”

“அது கிடக்கு; கதவுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் போடுடி!”

கோப்பு; பயன் ஏதுமின்றி திரும்பியது - அதற்குப் போக்கிடம் ஏது? இத்தனை ஆண்டு கழித்து; 10-9-2006 அன்று என்னிடம் வந்து; கண்ணீர் விட்டது; **ரத்தம் தோய்ந்த முகத்துடன்!**

“களச்சாவு பெற்ற தமிழ் வீரர்கள் வாழ்க!”

என்று கண்கலங்கிடக் கூறிக்கொண்டே; அந்தக் கோப்பில் நான் கையெழுத்திட்டுள்ளேன் - இப்படிக் கோப்புகள் இன்னும் இருக்கின்றன - அசைக்க முடியாத ஆதாரமாக! பசப்பு மொழிகளால் மறைக்க முடியாத பச்சை உண்மைகளாக!

அன்புள்ள,

மு.க.

14-09-2006

3229. வாக்குறுதிகளின் கல்லறை எழுத்துக்கள்!

உடன்பிறப்பே,

"கோப்பு, கோப்பு என்று எழுதுகிறாயே; அது என்ன ?.....

கோப்பு அனுப்பப்பட்டது;
கோப்பு கிடப்பில் போடப்பட்டது;
கோப்பு தூசு படிந்து கிடந்தது;

கோப்பு கையெழுத்து ஆகாமலே நின்று போனது!" என்றெல்லாம் அடிக்கடி எழுதுகிறாயே; பேசுகிறாயே; அது என்ன?

கோப்பு என்பது எப்படித் தயாரிக்கப்படுகிறது?
எதற்குப் பயன்படுத்தப்படுகிறது?
உண்மையிலேயே அதன் சக்தி என்ன?

கோப்பு தொடர்பாக இவைகளைப் பற்றியெல்லாம் தெரிந்து கொள்ளும் ஆவலும் - ஆர்வமும் - அக்கறையும் உனக்கு இருந்தாக வேண்டும். இது வரையில் இல்லையென்றாலும் இனிமேலாவது நீ அதைப் புரிந்து கொண்டாக வேண்டும்.

ஒரு பெரிய நிறுவனத்தின் அலுவலகத்தில் மூத்த மேனேஜர் என்று ஒருவர் இருப்பார். அவருடைய பொறுப்பிலேதான் அந்த அலுவலகக் காரியங்கள் அனைத்தும் நடைபெறும் - அப்படித்தான் நடைபெற்றாக வேண்டும்.

மேனேஜர் என்ற மேல் மட்டத்திலேயிருந்து அடி மட்டம் வரையில் படிப்படியாகப் பணியாற்றும் பொறுப்பில் இருப்பவர்கள், வேண்டுமானால் ஒரு விண்ணப்பத்தை இணைத்து வைத்து, ஒரு தாளில் எழுதலாம். அந்த எழுத்து ஒரு வேண்டுகோளாக அல்லது விவரமான அறிக்கையாக உருவெடுக்கும். அந்த அறிக்கை அடுத்த படியில் அமர்ந்திருக்கும் உதவி மானேஜரிடம் உடனே சென்று அவர் கவனத்தை ஈர்க்கும்.

உதாரணத்துக்கு ஒன்று சொல்ல வேண்டும்; முதலாளி மகனின் திருமணம் ஏற்பாடாகிறது. பெண் பார்த்து நிச்சயம் செய்யும் படலத்திலிருந்து, திருமணத்திற்கான மண்டபம் ஏற்பாடு - இசை நிகழ்ச்சி - ஆடை ஆபரணங்கள் - சீர் வரிசை செய்தல் - திருமண விருந்து என பல்வகை செலவுகளைப் பற்றிய விபரங்களை எழுதி; அவற்றுக்கெல்லாம் பணம் எவ்வளவு செல விடுவது என்பதற்கான அனுமதி பெறுவதற்கு சில தாள்களில் நிறுவனத்தின் பெரிய முதலாளியிடம் கையெழுத்துப் பெற்று; கடைசியில் அதனைக் கல்யாண வரவு செலவு "பைல்" (கோப்பு) என்று பெயரிட்டு உருவாக்கி வைத்திருப்பார் மானேஜர் என்பதை அனுபவத்தில் காணுகிறோம் அல்லவா?

ஒரு முதலாளியின் தலைமையில் - அவரது மேனேஜரின் நிர்வாகத்தில் நடைபெறும் - நிறுவனத்தின் வரவு செலவு கணக்குக்கே; இப்படியொரு "கோப்பு" எழுதும் பழக்கமும் - உற்றார் உறவினர் குடும்பத்தினர் யாருக்கும்; யார் மீதும் வீண் சந்தேகம் ஏற்படாத அளவுக்குப் பாதுகாப்பு உருவாக்கும் வெளிப்படையான விவசாரங்களும் விளக்கப்பட்டு வீண் சந்தேகங் கான் விளைச்சல் கடுகளவும் குடும்பக் கழனியில் தோன்றாது காப்பாற்றப்பட கோப்பு எழுதும் முறையும் - அதனைப் படித்து மன ஆறுதல் அடையும் முறையும் பின்பற்றப்படுகின்றன.

ஒரு குடும்பம் அல்லது நிறுவனம் என்பனவற்றின் அளவிலேயே கோப்புகளும் குறிப்புகளும் தேவைப்படுகின்றன என்கிறபோது; பொது மக்களிடம் வரி வசூலித்து அந்த வரியைக் கொண்டும் இதர வருமானங்களைக் கொண்டும்; நடத்தப்படுகிற அரசாங்க நிர்வாகம் பற்றிய விபரங்களைச் சரி பார்க்கவும் ஒழுங்குபடுத்தவும் உரிய முடிவுகளை எடுத்திடவும் - எடுத்த முடிவுகளுக்கான அனுமதியை உரியவர்களிடம் பெற்றிடவும் - அவற்றுக்கான விபரங்களை முறைப்படி கோத்து வைத்து அல்லது தொகுத்து வைத்து அதனைத் திறந்த புத்தகமாக அந்த அரசு நடத்துவோர் தொன்று தொட்டுக் கையாளும் நிர்வாக முறை களில் ஒன்றுதான், "கோப்பு" எழுதுதலும் - அதன் மூலமாக அரசாங்கத்தின் பல தரப்பட்ட பிரிவுகளின் நிர்வாகங்களை நேர்மையாக நடத்துவதும் ஆகும்.

அறிஞர் அண்ணா ஆட்சிப் பொறுப்பையேற்றபோது சொன்னார் :

"அக்கறையற்றோ அல்லது சோம்பலினாலோ - பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று அர்சாங்க கோப்புகளைப் படிக்காமல் நாள் கடத்திவிட்டால்; அதன் காரணமாக - நமது ஆட்சியின் வாயிலாகப் பெற வேண்டிய பலனைப் பெற முடியாமல் எத்தனை ஏழைபாழைகள் - நலிந்த மனிதர்கள் - பாதிக்கப்படுவார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்" என்று அமைச்சர்களுக்கும் அரசு ஊழியர்களுக்குமாக அறிவுரையை ஒளிவு மறைவின்றி ஒரு முறைக்குப் பலமுறை சொல்லியிருக்கிறார்.

அதனால் அரசு நிர்வாகத்தில் "கோப்பு" என்பது உடலில் ரத்த நாளங்கள் குருதியோட்டத்தைச் சீராக வைத்துக் கொள்ள உதவுவதைப்போல - அரசு நிர்வாகத்தையும் தங்கு தடையின்றி நிறைவேற்றுவதற்குப் பயன்படும் கருவிகளாகக் கருதப்படு கின்றது.

நிர்வாகத்தில் ஒவ்வொரு துறையும் அந்தத் துறைக்கான கோப்புகளைத் தூதுவர்களாகக் கொண்டு அந்தந்தத் துறைக்குரிய அமைச்சர்கள் மூலம் இயங்கினாலும் - அனைத்துத் துறைகளையும் பொறுத்தமட்டில்; பல முக்கியமான பிரச்சினைகளில் கோப்புகளைப் படித்துப் பார்த்து; இறுதி முடிவைக் காலந் தாழ்த்தாது எடுத்து அமைச்சர்கள், அதிகாரிகள் உள்ளிட்ட அனைவர் மூலமாக ஆணை பிறப்பிக்கும் அத்தியாவசியக் கடமை முதலமைச்சருக்கு உண்டு. மற்ற அமைச்சர்கள் சிலருக்கும் அந்த அதிகாரம் அளிக்கப்பட்டாலும்; அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் பொறுப்புள்ள முதலமைச்சர் ஒருவர்; தனது அதிகாரத்தை அவரே முடக்கிப் போட்டுக் கொள்வதென்பது அரசு நிர்வாகத்தையே அசைவற்றதாக்கிவிடும். ஜனநாயகரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் அமைச்சரின் நிர்வாக சம்பந்தப்பட்ட அலுவல்களைக்கூட அதிகாரிகள் கையில் எடுத்துக் கொள்வதென்றால்;

அமைச்சர்கள் ஏதோ ஆட்டபாட்டங்களில் மூழ்கித் திளைத்துக் கொண்டிருக்கிறார்கள் - அரசு நிர்வாகம் ஒரு காலத்தில் ரோமாபுரியில் நடை பெற்றதுபோல நடைபெறுகிறது என்பதுதான் நிதர்சனமான உண்மையாகி விடும்.

ஆம்; அதுதானே அ.தி.மு.க. ஆட்சியில் - அம்மையார் ஜெயலலிதா முதலமைச்சர் பதவியில் இருந்த கால கட்டத்தில் - தற்காலிக சமாதிகளில் கோப்புகள் தள்ளப்பட்டிருந்த கொடுமை எனப்படுகிறது!

எல்லா கோப்புகளுமா? அதிலும் ஒரு வித்தியாசம் - எதிர்க்கட்சிகளைப் பழி தீர்க்கும் ஆணைகள் பிறப்பிக்கும் கோப்புகளாயினும்; தவறான வழியில் பணம் பண்ணும் கோப்புகளாயினும் அவை பந்தயக் குதிரைகளின் வேகத்தில் போயிருக்கின்றன - மாறாக; மக்கள் பிரச்சினைகளுக்கான ஆணைகளைத் தாங்கிச் செல்ல வேண்டிய கோப்புகள்தான் ஆமைகளாக நகர்ந்திருக்கின்றன - ஊமைகளாகவே மாறி; உறங்கிக் கொண்டும் இருந்திருக்கின்றன.

அத்தகைய கோப்புகள் குறித்த எடுத்துக்காட்டு ஒன்றிரண்டை இன்றைய கடிதத்தில் உனக்குத் தெரிவிக்காவிட்டால்; கோப்புகள், அம்மையார் ஜெயலலிதா ஆட்சியில் எவ்வளவு கோணல் வழிகளில் சென்றுள்ளன என்பதைக் கோடிட்டுக் காட்ட முடியாமல் போய் விடுமல்லவா?

"கையெழுத்துப் போடா விட்டால் காரியங்கள் நடக்காதா என்ன?" என்ற அய்யப்பாட்டுக்கும் அருமையான விடையளிக்கும் விதமாக; இதோ அ.தி.மு.க. ஆட்சியில் மாவட்ட ஆட்சியர் - காவல் துறையினர் மாநாட்டில் முதல் அமைச்சர் ஜெயலலிதா அம்மையார் அளித்த வாக்குறுதிகளின் கதியே என்னவாயிற்று என்பதை இதோ; பின்வரும் கோப்புகள் விளக்குவதைப் படித்துப் பார்! -

ஒவ்வொரு மாவட்டத்திலும் திட்டக்குழுவை உருவாக்கி, அவற்றில் உறுப்பினர்களை நியமித்தால்தான் அந்த மாவட்டத் திட்டக்குழு வாயிலாக மாவட்ட வளர்ச்சிப் பணிகளைக் கவனிக்க முடியும். அதற்காக துறையின் சார்பில் "கோப்பு" தயாரிக்கப்பட்டு முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையாரின் ஒப்புதலுக்காக, உள்ளாட்சி அமைச்சர், நிதி அமைச்சர் கையெழுத்துக்களுடன் 11-6-2002 அன்று முதல்வர் ஜெயலலிதா அலுவலகத்திற்கு அனுப்பப்படுகிறது. அப்போது முதல்வரின் செயலாளர் கேள்வி ஒன்றைக் கேட்டு 25-6-2002 அன்று அந்தக் கோப்பினை துறையின் செயலாளருக்கு திருப்பி அனுப்பி வைக்கிறார்.

அந்தக் கேள்விக்கான பதிலுடன் மீண்டும் அந்தக் கோப்பு, முதல் அமைச்சர் அலுவலகத்துக்கு 21-1-2004 அன்று வருகிறது.

அந்தோ பரிதாபம்! 2004ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மாவட்டத் திட்டக் குழுக்கள் அமைப்பது பற்றிய அந்தக் கோப்பு, முதல் அமைச்சரின் "அருள்மிகு" "கருணைமிகு" கையெழுத்தைப் பெறாமலே; 2006ஆம் ஆண்டு வரை காத்திருந்து; நல்ல வேளையாக ஆட்சி மாறிய பிறகு 11-9-2006 அன்று அந்தக் கோப்பு என் கைக்கு வந்து; அதில் நான் கையெழுத்திட்டிருக்கிறேன்.

இரவு பகல் இருபது மணி நேரம் தூங்காமல் வேலை செய்ததாக சொல்லிக் கொண்ட அம்மையார் ஜெயலலிதா; முதல் அமைச்சராக வேலை செய்தது; கோப்புகளை மூலையில் போட்டு வைத்த இந்த வேலைதானா?

உடன்பிறப்பே, 2004ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் நடைபெற்ற காவல் துறை மற்றும் கலெக்டர்கள் மாநாட்டில்

"மணிகண்டம்" புறக்காவல் நிலையத்தை முழுக் காவல் நிலையமாக மாற்றப்படும் என்றும் -

திருவண்ணாமலை நகரில் கூடுதலாக ஒரு காவல் நிலையம் அமைக்கப்படும் என்றும் -

திருச்செங்கோட்டில் காவல் துறை பிரிவு ஒன்று தொடங்கப்படும் என்றும் அம்மையார் ஜெயலலிதா அறிவித்தார்.

இந்த அறிவிப்புகளுக்கான கோப்புகளை காவல்துறை அதிகாரிகள் தயாரித்து அம்மையாருக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் முதல் அமைச்சர் ஜெயலலிதாவின் முத்தான கையெழுத்துகள் அந்தக் கோப்புகளில் இடம் பெறாமலே; இப்போது தான் 10-9-2006 அன்று அவற்றில் நான் கையெழுத்திட்டு; காவல் நிலையங்களுக்கான கட்டளையைப் பிறப்பித்துள்ளேன்.

இப்போது உனக்குப் புரியுமென்று நம்புகிறேன் - கோப்பு - கையெழுத்து என்பவை வெறும் சொற்கள் அல்ல; கடந்த கால ஜெயா ஆட்சியைப் பொறுத்தவரையில் வாக்குறுதிகளின் கல்லறைகளில் செதுக்கப்பெற்ற எழுத்துகள் என்ற உண்மை!

உடன்பிறப்பே; ஒரு கோப்பில் பிறப்பிக்கப்படும் ஆணைக்கான ஒப்புதல் கையெழுத்தினை முதல் அமைச்சர் போடாவிட்டாலும்

- பின்னேற்புக் கையெழுத்து என ஒன்றுண்டு; அதையாவது அம்மையார் போட்டிருக்கிறாரா என்றால்; அதுவுமில்லை.

நாளைக்கு மத்திய தணிக்கைக் குழுவினர் இந்தக் கோப்புகளைக் கண்டால்; என்ன விமர்சனம் எழுதுவார்கள் - ஏற்கனவே என்ன எழுதியிருக்கிறார்கள் என்பதையெல்லாம் ஆலோசனை செய்திட அம்மையார் ஜெயலலிதாவுக்கு; ஏது நேரம்?

அன்புள்ள,

மு.க.

15-09-2006

3230. “பொய்” படம் போதிக்கும் பாடம்!

உடன்பிறப்பே,

அருமைச் சகோதரர் அரங்கண்ணலின் படம் “அவள் ஒரு தொடர் கதை” இயக்குநர் சிகரம் பாலசந்தர் இயக்கியது; அதைப் பார்க்க வேண்டும் என்று அழைத்தனர் - பல ஆண்டுகளுக்கு பின்பு! பார்த்தேன்; ரசித்தேன் - பட உலகில் புதுமையென்று அப்போதே ‘முரசொலி’ முதல் பக்கத்தில் நீண்டதோர் விமர்சனம் எழுதினேன். அந்தப் படத்துக்கும் அன்றிருந்த சமுதாய அவலங்ளுக்கும் இடையே இருந்த நிலைமைகளை நானும் அந்த விமர்சனத்தில் விளக்கியிருந்தேன். அப்படம் வெற்றி மாலை சூடிக் கொண்டது!

இப்போது - அதே பாலசந்தர் இயக்கத்தில் வெளிவர இருக்கும் “பொய்” எனும் திரைப்படம் - நண்பர் பிரகாஷ்ராஜ் தயாரித்த படம் - கதாநாயகன், கதாநாயகியாக இரு புதிய நடிகர்கள் அறிமுகம் - இருவரும் ஓவியங்கள் போல! உளிபடா சிற்பங்கள் போல! இயக்குநர் சிகரமும் நடிக்கிறார் - கவிஞர்கள் வாலி, தம்பி வைரமுத்து கவிதை நூல்களை வைத்தும் கதையைப் பின்னி இருப்பது பெருஞ்சிறப்பு - காவியக் கவிஞரும் - கவிப்பேரரசுமன்றோ! ஆடாமல் அசையாமல் தலுங்காமல் சிரித்தும் பேசியும் பிரகாஷ் ராஜ் நடிப்பது பிரமாதம்! பாலசந்தர்; கேட்கவே வேண்டாம் - பாத்திரமாகவே ஒன்றி விடுகிறார்!

இவையனைத்தும் படம் குறித்த எனது விமர்சனப் பகுதி - ஆனால் முக்கியமான ஒரு விஷயம்; பொதுவாக நாட்டு நடப்பில் “பொய்யை” உண்மை போலக்காட்டி, அதாவது ‘பூதகி’யைக் கண்ணனின் நாய் போலவும் - மாரீசனை அழகிய மான் போலவும் சித்திரித்து உண்மையை மறைத்து ஊராரை, உலகத்தாரை ஏமாற்ற முனையும் உன்மத்தர்கள் புராணங்களில் மட்டுமல்ல; இப்போது இந்தப் புவியிலும் உண்டு! அவர்களைக் கதைகளில், நாடகங்களில், புத்தகங்களில், அரசியல், சமுதாயக் களங்களில் கண்டிருக்கிறோம். மக்களுக்கு அடையாளமும் காட்டியிருக்கிறோம். ஆம்; அவற்றில் எல்லாம் ‘பொய்’ உண்மை போல வேடமணிந்து கொண்டு வரும். ஆனால் இங்கே உண்மை,

பொய் போல வேடமணிந்து சிக்கலுக்கு உள்ளாவதுதான் இந்தப் புதுவித சிந்தனையில் விளைந்த திரைக்கதை என்பேன்.

திரைக்கதையில் மட்டுமா? பொய்யை முதலீடாக வைத்துக் கொண்டல்லவா நாட்டில் சிலர் அரசியலே நடத்துகிறார்கள்!

- உடன்கட்டை ஏற இருந்தேன் - அத்தகைய உயிரான கணவனை, மூத்தாள், மோரில் விஷங் கலந்து அவர் மூச்சை நிறுத்தி விட்டாள்! என்றார்கள்.
- கார் ஏற்றி தன்னைக் கொல்லச் சதித் திட்டம் - தப்பித்துக் கொண்டேன் என்று அலறினார்கள்.
- ஐவருக்கும் தேவி அழியாத பத்தினியை "வஸ்திராபரணம்" செய்து அவமானப்படுத்தியது போல் தன்னை அவமானப்படுத்தினார்கள் என்று ஒரு பொய்யை அவிழ்த்து விட்டார்கள்.
- மருத்துவமனையில் இருந்தபோது, கோவில் பிரசாதம் என்று கூறி பொங்கல் கொடுத்தார்கள், அதை ஒரு ஓரமாக வைத்து விட்டு தூங்கி விட்டேன். விழித்துப் பார்க்கும்போது பிரசாதத்தை தின்ற பூனை செத்துக் கிடந்தது. எனவே தன்னை கொலை செய்ய முயற்சி என்றார்கள்.
- எழுதி வைத்த பழைய உயிலைக் கிழித்து விட்டு புதிய உயில் எழுதி இறந்து விட்ட எம்.ஜி.ஆரின் இடது கை விரல் ரேகையை வக்கீல் உதவியோடு பெற்றார்கள் என்று குற்றம் சாட்டினார்கள்.
- தன்னுடைய வளர்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியாமல் எம்.ஜி.ஆர். தன் மீது பொறாமைப்படுகிறார் என்று பிரதமராக இருந்த ராஜிவ் காந்திக்குத் தன் கைப்பட கடிதம் எழுதினார்கள்.
- கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு தர மாட்டார்கள் என்றார்கள்.
- மெட்ரிகுலேஷன் தேர்வில் 200க்கு 200 மதிப்பெண் பெற்றதாக அவையிலேயே தற்பெருமை பேசிக் கொண்டார்கள்.

- அண்மையிலேகூட சிக்குன் குனியா நோய் காரணமாக இருநூறுக்கு மேற்பட்டவர்கள் இறந்ததாக பொய்ப் பட்டியல் ஒன்றைக் காட்டினார்கள்.
- ஆளுநர் சென்னா ரெட்டி தன்னிடம் தவறாக நடந்து கொண்டதாக பேரவையிலேயே சொன்னார்கள்.
- ராஜிவ்காந்தி கொலைக்கு மூப்பனாரும் தான் காரணம் என்று சேலம் பொதுக் கூட்டத்தில் முழக்கமிட்டார்கள்.
- டெல்லியில் கரசேவையை ஆதரித்துப் பேசிவிட்டு, தமிழகத்திலே வந்து நான் கரசேவையை ஆதரிக்கவே இல்லை என்றார்கள். இந்தியாவிலே ஒரு ராமர் கோவில் கட்ட முடியவில்லை என்றால் வேறு எங்கே கட்ட முடியும் என்று அறிக்கை விடுத்தார்கள்.
- விடுதலைப் புலிகளுக்கு தி.மு.க.வும் கருணாநிதியும் ஒன்றும் செய்ய வில்லை என்று குறை கூறி ஆங்கில நாளேடுகளுக்கு பேட்டி கொடுத்து விட்டு, பின்னர் விடுதலைப் புலிகள் இயக்கத்தையே தடை செய்தார்கள்.
- நீதிமன்ற விசாரணையில் தான் இட்ட கையெழுத்தையே தன் கையெழுத்தில்லை என்று துணிந்து சொன்னார்கள்.
- அண்மையிலே இரண்டரை மணி நேரம் அவையிலே உரையாற்றிவிட்டு, வெளியே வந்து தனக்கு பேசவே நேரம் அளிக்கவில்லை என்றார்கள்.
- பேருந்து கட்டணத்தை தன் ஆட்சிக் காலத்தில் உயர்த்தவே இல்லை என்றார்கள்.
- சோனியா காந்தியை பிரதமராக்க தான் ஆதரிக்கவே இல்லை என்றார்கள். ஜெயபால் ரெட்டி அதற்கான ஆதாரக் கடிதத்தையே செய்தியாளர்களிடம் காட்டினார்.
- மகளிர் சுய உதவிக் குழுக்களை தன் ஆட்சிக் காலத்திலேதான் தொடங்கியதாகச் சொல்லிக் கொண்டார்கள்.
- தி.மு.க. தேர்தல் அறிக்கையில் காவேரி பிரச்சினை பற்றி ஒரு வார்த்தைகூட கூறவில்லை என்றார்கள்.
- தமிழ்நாட்டில் தரிசு நிலம் 55 லட்சம் ஏக்கரா இருக்கிறது என்று நிதிநிலை அறிக்கையிலே கூறிவிட்டு, பிறகு அப்படி கூறவே இல்லை என்று சாதிக்க முனைந்தார்கள்.

- தொல்காப்பிய உரை எழுதுவதற்காக கோவா சென்றதை, சந்தனக் கடத்தல் வீரப்பனைச் சந்திக்கச் செல்வதாக கூசாமல் சொன்னார்கள்.
- ஆட்சிக்கு வந்தவுடன் கஜானாவும் களஞ்சியமும் காலி என்றார்கள்.
- அரசு சார்பில் வீரப்பனுக்கு நிதி உதவி செய்யப்பட்டதாக கூறினார்கள்.
- இந்திய அரசியல் சட்டத்தில் பெண்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதாகவும், குடிமகன் என்ற வார்த்தை இடம் பெற்றதாகவும் பேரவையில் தெரிவித்தார்கள்.
- அமைச்சரவையில் முன்னாள் அமைச்சர் ம.தி.மு.க. கண்ணப்பன் பற்றி பேசவே இல்லை என்று பேட்டி கொடுத்தார்கள். அதை மறுத்து இந்து நாளிதழ் "டேப்பில் பதிவு செய்ததையே வெளியிட்டது.
- தமிழ்நாட்டில் நடைபெறும் கொள்ளைகளுக்கு மத்திய அரசே காரணம் என்றார்கள்.
- வாக்களிக்கும் இயந்திரத்தில் கோளாறு என்றார்கள்.
- அரசு வருவாயில் 94 சதவிகிதம் அரசு அலுவலர்களின் ஊதியமாகச் செலவழிக்கப்படுகிறது என்றார்கள்.
- கிருஷ்ணா தண்ணீரே தமிழ் நாட்டிற்கு வரவில்லை என்றார்கள்.
- சுனாமியினால் இறந்தவர்களின் உடலை ராணுவத்தினர் தொடவே இல்லை என்று பேரவையிலே கூறினார்கள்.

இப்படி ஒன்றா இரண்டா பொய்கள்? இந்தப் பொய்களை யாரால் படம் எடுக்க முடியும் ? யாரால், டைரக்ட் செய்ய முடியும்?

உண்மையைப் பொய்யாக்கிச் சொன்னாலே; உலகம் ஒப்பாது என்கிறபோது; பொய்; உண்மை போல வேடமிட்டு உலவினால் இந்த உலகம் அந்த முகத்தில் துப்பாதா?

அன்புள்ள,

மு.க.

23-09-2006

3231. ஊரை அறிந்தால் உலகை அறியலாம்!

உடன்பிறப்பே,

சர்வாதிகாரத்தை காட்டுத் தீ என்றும் ஜனநாயகத்தை வீட்டு விளக்கு என்றும் நமது தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி எடுத்துக்கூறி, அந்தக் கருத்து நம் இதயத்தில் அழிக்க முடியாத அளவுக்குப் பதிந்து போயிருக்கிறது.

அதனால்தான் களங்கள் பலவற்றில் பகைவர்களின் தலைகளைப் பந்தாடிய மாவீரனாக இருந்தாலும்- அவன் தரித்துள்ள மணிமுடி மகா நதிகளாகப் பெருகிய மக்களின் குருதி வெள்ளத்தில் குளிப்பாட்டி எடுத்தது என்கிற வீரவரலாற்றைப் பின்னணியாகக் கொண்டது என்றாலும் - மகத்தான வீரத்தையும் மணிமுடியையும் அவன் நிலைப்படுத்திக்கொள்ள சர்வாதிகாரத்தை விட்டுவிட அவனே எண்ணினாலும்; அது அவனை விடுவதில்லை - கெட்டியாகப் பிடித்துக்கொண்டு விடுகிறது. “நாயர் பிடித்த புலி வால்” என்று மலையாளத்தில் ஒரு பழமொழி உண்டல்லவா? அது போல புலி வாலை நாம் விட்டால் புலி பாய்ந்து கொன்று விடும்- வாலை விடாமல் வழி முழுவதும் தொடர்ந்தால்; வலி யெடுக்கும் உடம்பு! விழி பிதுங்கும் - அந்த நிலைதான் - சர்வாதிகாரத்தை ஒரு முறை அனுபவித்து ஆட்டம் போட்டு ஆதிக்கக் கொடி நாட்டி விட்டால் - அடுத்து அதுவும் நம்மை விடாது - நாமும் அதைவிட முடியாது - ஒரே வழி தப்புவதற்கு இரு புறமும் நெருப்பு எரிவதுபோல் சர்வாதிகாரம் ஜுவாலை எழுப்பிடும்போது; இடையே ஓடிக்கொண்டிருக்கிற அருவியில் உயிருக்குத் துணிந்து குதித்து தப்புவது போல - சர்வாதிகாரத் தீக்காட்டுக்குத் தப்பி; ஜனநாயகத் தடாகத்தில், அதன் ஆழத்தைப் பற்றிக் கவலைப்படாமல் குதித்தவர் பலர் உண்டு.

தீ; காட்டை அழித்து முடித்துவிடும் - அல்லது தானே அணைந்து தணிந்துவிடும் - நிச்சயமற்ற ஒன்று அது - ஆனால் நிச்சயமானதும் - நித்தியமானதும் - நிரூபிக்கப்பட்ட முறைகளில்

கடைப்பிடிக்கக் கூடியதும்; மறுக்கவொண்ணா விதமாக விளங்குவதும் ஜனநாயக முறையே ஆகும்.

அந்த முறைகூட சர்வாதிகாரத்தின் சாயலைச் சிறிதும் பெற்றிடாத முறையாக இருத்தல் வேண்டும் - அந்த முறைதான் நம் பழைய திராவிடப் பண்பாட்டின் சீரிய முறைகளில் ஒன்றாக சிறந்து விளங்கி யிருக்கிறது.

உத்திரமேரூர் செப்பேடுகளும், கல்வெட்டுக்களும் நம் தமிழகத்தில் ஊராட்சிகளில் கூட "ஜனநாயகம்" தளிர் விட்டுத் தழைத்துப் பின்னர் தருவானதை எடுத்துக்காட்டும் அரிச்சுவடிகளாக இன்றைக்கும் ஆராய்ச்சியாளர்களுக்குப் பயன்படுவதைக் காண முடிகிறது.

விதையாய் - முளையாய் - செடியாய் - கொடியாய் - விரிவடைந்துள்ள ஜனநாயக முறையை படரும் கொம்பைப் பார்த்து வளர விடத்தான்; விடுதலை பெற்ற இந்தியத் திருநாட்டில் வரலாற்றுத் தழும்புகளைத் தடவிக்கொண்டே... வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடி; தேடிய சுதந்திரத்தின் மடியில் வைத்துப் பாதுகாக்கும் பணியைத் தாயுள்ளத்துடன் அண்ணல் காந்தியடிகளும் - அறிவொளி அம்பேத்கரும், அறிஞர் அண்ணாவும், மக்களைப் பக்குவப்படுத்தினர் - மக்களாட்சித் தத்துவத்தின் மாண்பினைப் பரப்பினர்.

ஊர் நலம் - ஊர் வளம் - இவற்றுக்கான ஊராட்சி வலிமையே உலகமெனும் உருள் பெருந்தேருக்கு அச்சாணி என்பதால்; அந்த ஊராட்சி தொடங்கி உலக நாடுகளின் ஆட்சி வரையில் உணர்ந்து, தெளிந்து, தேர்ந்திடும் உளப் பக்குவத்தை அனைவரும் பெற்றாக வேண்டும்.

இந்தக் கருத்தை அழுத்தமாகக் கொண்டவர்களே; மக்களாட்சியின் மகிமையை; பால காண்டத்திலிருந்து, பழப் பருவக் காண்டம் வரையில் அறிந்துணர்ந்து மக்களை மனத் துயரில் வீழ்த்தாமல் வாழ வைக்க முடியும்.

இதை நெஞ்சில் கல்வெட்டு எழுத்துக்களாய்ப் பதித்துக்கொண்டு;

ஊர்; செழித்திட,

பேரூர்; சிறந்திட,

நகர்; நலம் பெற்றிட,

நாடு; வளம் பெற்றிட

பலம் பெற்றிட,

உழைத்திட வேண்டுமென்ற எண்ணமுடையவர்களே; அந்த எண்ணத்தை வண்ணமிகு செயலாக வடிப்பவர்களாக இருந்திட இயலும்!

ஒவ்வொரு ஊரும்; அங்கு
உருவாகும் ஆட்சியும் -
ஒரு செங்கல்!

அந்தச் செங்கல்லின்
அடுக்குதான் உயரும் கோபுரமாக! கோட்டையாக!
செங்கல் இல்லாமல்
சேறு இல்லாமல்
ஒட்டுறவு இல்லாமல் -
ஓங்கி நிற்கும் கோபுரம்
கட்டுகிறேன் பார் என்பவன்;
உலகம் அறியாதவன் -
உலகத்தை அறிந்திட முதலில் ஊரை
அறிந்திடல் வேண்டும் -
ஊரை அறிந்தால் உலகை அறியலாம்
ஊரை ஆளத் தெரிந்தால் உலகையே ஆளலாம் -

ஆம்;

ஊர் ஆளத் தெரிந்தால்தான்
உலகாள முடியும்!

பத்து பேருக்குள் ஜனநாயகப் பாதை வகுத்திட
அறியாதவன் - முடியாதவன் -

"பார் ஆள்வேன்" என்பது பைத்தியக்காரத்தனமன்றோ!

அன்புள்ள,

மு.க.

27-09-2006

3232. வாக்காளர்களுக்கு வழிகாட்டி!

உடன்பிறப்பே!

அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது - அ.தி.மு.க. அறக் கட்டளை சார்பில் 1984ஆம் ஆண்டு அண்ணா பவள விழா மலர் ஒன்று வெளியிடப்பட்டது. மலர்க்குழுத் தலைவராக முழுப் பொறுப்பும் ஏற்று அதனை வெளியிட்டவர் - மறைந்த அமைச்சர் ஏ.ஜி. அவர்களுக்குக் கொடுத்த வாக்கினை மீறி; முதன் முதலாக என்னால் அமைச்சராக்கப்பட்டவரும் - பின்னர் எம்.ஜி.ஆரின் தலைமையில் அமைச்சராக இருந்தவரும், இன்று திரு. விஜயகாந்த் கட்சியில் பிரதானப் பொறுப்பில் இருப்பவருமான என் பழைய நண்பர் ஒருவர் - அந்த விழா மலரில் அந்நாள் நிகழ்ச்சிகள் சிலவற்றின் படங்களை தொகுத்து வெளியிட்டிருந்தார். குறிப்பாக, கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் சிலை திறப்பு விழா நிகழ்ச்சிப் படம் - உண்மை என்னவென்றால்; அறிஞர் அண்ணா அவர்கள் தனது வாழ்நாளின் கடைசி நிகழ்ச்சியாக சென்னை 'வாணி மகால்' எதிரே அந்தச் சிலையை என் தலைமையில் திறந்து வைக்கிறார். விழாவில் எஸ்.எஸ். வாசன், ஏ.வி. மெய்யப்பன், ஏ.எல். சீனுவாசன், நாகிரெட்டி, எம்.ஜி.ஆர்., இந்தி நடிகர் திலீப் குமார் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

அப்போது எடுத்த படம் என்று சொல்லி, அந்த மலரில் ஒரு படத்தை வெளியிட்டிருந்தார்கள் - அதாவது "குரூப்" படம்! - அதில் அந்தச் சிலை திறப்பு விழாவுக்கு தலைமை வகித்து நடத்தி வைத்த என் உருவம் அந்தப் படத்தின் நடுவே இருந்ததை - லாவகமாகக் கத்திரித்து எறிந்து விட்டு அந்த இடத்தில் எம்.ஜி.ஆர். படத்தை ஒட்டி விட்டார்கள்.

மறுநாளே 'முரசொலி'யில் அந்தத் தில்லுமுல்லு திருட்டு வேலையை வெட்டவெளிச்சமாக்கிட - உண்மையில்

எடுக்கப்பட்ட புகைப்படத்தையும்; ஒட்டு வேலை செய்து என் உருவத்தை மறைத்து விட்ட புகைப்படத்தையும் "பிளாக்" செய்து வெளியிட்டு - சகுனிகளின் சதி வேலையை அம்பலப்படுத்த வேண்டியதாயிற்று.

அத்தகைய மகானுபாவரின் மந்திராலோசனை பெற்று நடைபெறுகிற திரு. விஜயகாந்த் அவர்களின் கட்சியினர்; அதே மகானுபாவரிடம்(?) இப்போது பெற்றுள்ள மற்றுமொரு விஷயதானம் தான்; அவர்களது கட்சிக்கு ஒதுக்கப்பட்ட 'முரசு' சின்னத்தை இந்த 'அரசு' முடக்கிவிட்டது என்ற முழுப் பொய்ப் பிரச்சாரமாகும்.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் தே.மு.தி.க. கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு முரசு சின்னம் ஒதுக்கப்பட்டதாகவும், தற்போது அந்தச் சின்னம் அவர்களுக்கு வழங்கப்பட வில்லை என்றும், அதற்குக் காரணம் தி.மு.க. அரசு தான் என்றும் பாமர மக்கள் நம்புவதைப் போல ஒரு காரணம் கூறப்படுகிறது. சட்டமன்றத் தேர்தல் டெல்லியில் உள்ள மத்திய தேர்தல் ஆணையத்தால் நடத்தப்படுகிறது. தற்போது நடைபெறும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் சென்னையில் உள்ள மாநில தேர்தல் ஆணையத்தினால் நடத்தப்படுகின்றது. மத்திய தேர்தல் ஆணையம் நடத்தும் தேர்தல்களுக்கான சின்னங்களில் சுயேச்சைகளுக்கென தனியாக ஒரு பட்டியல் உண்டு. எனவே சட்டமன்றத் தேர்தலின்போது, அந்தப் பட்டியலிலே உள்ள சின்னங்களில் இடம் பெற்றிருந்த "முரசு" சின்னம், அப்போது விஜயகாந்த் கட்சியினர் போட்டியிட்ட போது அவர்களுக்கு ஒதுக்கப்பட்டது. தற்போது உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடைபெறும்போது, தமிழகத் தேர்தல் ஆணையம் இது வெட்டி ஒட்டிய னு; இதனை நடத்துவதால், - தமிழகத் தேர்தல் ஆணையம் சுயேச்சைகளுக்கான சின்னங்களுக்கு ஒரு பட்டியலை வைத்துள்ளது. அந்தப் பட்டியலிலே "முரசு" சின்னம் கிடையாது. எப்பொழுதுமே கிடையாது. பட்டியலிலே இடம் பெறாத சின்னத்தை தமிழகத் தேர்தல் ஆணையத்தினால் எப்படி ஒதுக்கிட முடியும்? அந்தக் கட்சியில் உள்ளவர்கள் - அல்லது சேர்ந்திருப்பவர்கள் - அவர்களேயன்னியில்; சிந்திக்கத் தெரிந்தவர்கள் - எவராயினும் தேர்தல் ஆணைய விதிமுறைப் படியோ - அல்லது அதன் அமைப்பு முறையில் வகுக்கப்பட்டுள்ள

நெறிப்படியோ - எந்தவொரு அரசும் ?) தலையிட முடியாதபடியோ - தேர்தல் ஆணையத்தின் வழிமுறை முடிவுகளைத் தடுத்து நிறுத்த இயலாதபடியோதான் - வகுக்கப் பெற்றுள்ளன என்பதை மிகத் தெளிவாக அறிவார்கள்.

ஏற்கனவே இருந்த ஒரு சின்னத்தை இப்போது - பறித்து விட்டதாகப் பறைசாற்றுவதைப் பாமரர்கள் - ஒருவேளை நம்பலாம் - படித்தவர்களோ, பட்டறிவு பெற்றவர்களோ நம்ப முடியுமா? - நம்ப மாட்டார்கள்!

கலைவாணர் சிலை திறப்பு விழாப் படத்தில் கருணாநிதியின் படத்தை மட்டும் கத்திரித்து விட்டு அறக்கட்டளை மலரில் வெளியிட்ட கதை போல; இதுவும் ஒரு "படம் கத்திரிக்கிற கதை" என்று தான் எண்ணிக் கொள்வார்கள். எடுத்தவுடனே பொய்யைத் துணைக்கு அழைத்துக் கொண்டு போருக்குப் புறப்படுகிறார்களே என்பதுதான் நமக்குச் சிரிப்பை வரவழைக்கிறது.

வாய்மையெனும் வாள் - அறநெறியெனும் கேடயம் - இவை ஜனநாயகப் போர்க்களத்து ஆயுதங்கள் என அமைந்திடல் வேண்டும் என்ற ஆன்றோர் சான்றோர் கூற்றுக்கு மாறாக; ஆகாசப் புளுகு, அதிரடிப் புளுகுகளைப் போர்க் கருவிகளாகக் கொள்ளுவது அநாகரிக அரசியலின் உச்சகட்டமாக ஆகிவிடுமென்று அவர்களுக்கே தெரியாதா?

தெரியும்; தெளிவாகவே தெரியும் - எனினும் தெரிந்த உண்மையைத் திரை போட்டு மறைத்து விட்டு - தேர்தல் ஆணையம் என்பது எந்தவொரு அரசின் கட்டுப்பாட்டிலும் இயங்கக் கூடியதல்ல; அப்படி இயங்கவும் முடியாது என்பதைக்கூட அறியாத அப்பாவிகள்போல நடந்து கொள்வது - அப்பாவி மக்களை ஏமாற்றுவதற்காகத்தான் என்பது

'கலைவாணர் சிலை திறப்பு நிகழ்ச்சி' படத்தில் கத்திரிக்கோல் வேலை செய்து கண்டுபிடிக்கப்பட்ட 'கண்யவான்'(?)களின் செயலாக இன்னமும் தொடர்கிறது.

இப்படிப்பட்டவர்களின் மக்கள் மன்ற நுழைவுகளை மக்கள் ஆதரிப்பார்களேயானால்; அந்த மன்றங்களில் "மணங்கு" கணக்கில் பொய்யும் புளுகும் - இட்டுக் கட்டிடும் செய்திகளும்; இன்னும் அதிகமாக இடம் பெறக் கூடுமேயல்லாமல் - ஊர் மக்களின் சுதந்திரத்திலோ - வாழ்வுரிமையிலோ - ஓர் ஊசி

முனையளவாவது பயன்படக் கூடிய திட்டங்கள் தீட்டப்பட முடியுமென்று உடன்பிறப்பே; நீ கருதுகிறாயா?

"ஊர் ஆளத் தெரிந்தால்தான் உலகாள முடியும்" என்று நேற்றைய கடிதத்தில் குறிப்பிட்டு - அந்த மடலை நிறைவு செய்திருந்தேன்.

ஆனால் இப்போது ஊராள்வதற்கு நடைபெறும் போட்டியில் - உண்மையைச் செங்கோலாகக் கொண்டு புறப்படுவதற்கு மாறாக பொய்யை அல்லவா போர் வாளாகத் தூக்கிக் கொண்டு; புயல் வேகத்தில் வருகிறார்கள்.

புயல் வீசி ஓயட்டும் - அதற்குப் பின் ஏற்படும் அமைதியில்தான்; அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவி தருவதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டும்.

ஊராளத் தெரியாதவர்கள் என்று யாரையும் ஜனநாயக யுகத்தில் உதாசீனப்படுத்தி விட முடியாது! கூடவும் கூடாது!

ஆனால் மாநிலம் ஆளும் நாம் பொறுப்பேற்று ஊராண்டதும் - நகராண்டதும் - மாநகர் ஆண்டதும் - எப்படிச் சீரோடும் செழிப்போடும் இருந்தது என்பதை; அடுத்து எழுதும் கடிதங்களில் தொடர்ந்து விளக்குகிறேன் - அது வாக்காளர்களைச் சந்திக்கும் உனக்கும்; வாக்காளர்களுக்கும் வழிகாட்டியாக இருக்கும் என்பதால்!

அன்புள்ள,

மு.க.

28-09-2006

3233. நல்லாட்சியில் வளம் பெற்ற உள்ளாட்சி!

உடன்பிறப்பே,

வாக்காளர்களுக்கு வழிகாட்டியாக இருக்கும் வண்ணம் வரைந்திடுவேன் கடிதங்கள் என்று நேற்றைய கடிதத்தில் அறிவித்திருக்கிறேன். அதற்கிணங்க இதோ எழுதியுள்ளேன்.

மக்களாட்சியில் அரசின் நிர்வாகத்தை ஆலமரத் திற்கு ஒப்பிட்டால் அதன் வேர்களாகவும் விழுதுகளாகவும் உள்ளாட்சி அமைப்புகள் விளங்குகின்றன. மரத்தை விடுத்து மனிதனோடு ஒப்பிடுவது என்றால் அந்த அமைப்புகள் நாடி நரம்புகளாகவும், உயிர்த் துடிப்புகளாகவும் விளங்குகின்றன. இத்துணை முக்கியத்துவம் வாய்ந்த இந்த அமைப்புகள்; இடையில் பத்தாண்டுக் காலம் செயல்பட முடியாமலே கட்டுண்டு கிடந்ததையும் - நான்காவது முறையாக தி.மு.கழக ஆட்சி 1996ஆம் ஆண்டு அமைந்த பிறகுதான் உடனடியாக உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தலை அறிவித்து மாநகராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சிகள் அனைத்திலும் 1,16,747 மக்கள் பிரதிநிதிகள் நிர்வாகப் பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்புகளைப் பெற்றதையும் நீயும் உன் போன்ற உடன்பிறப்புகளும் மட்டுமல்ல; நாட்டு மக்கள் அனைவருமே நன்கறிவார்கள்.

அந்தப் பொறுப்புகளில் மகளிருக்கு அனைத்துப் பதவிகளிலும் 33 விழுக்காடு ஒதுக்கீடு செய்து பெரும் சாதனையைப் புரிந்ததின் காரணமாக 44,143 பெண்கள் உள்ளாட்சி அமைப்புகளில் பதவியேற்கும் நிலையை தி.மு.கழக அரசு உருவாக்கியது!

இந்த அமைப்புகளுக்குத் தேவையான உரிமைகளை வழங்கி, உதவிகளையும் உடனுக்குடன் செய்து, அரசு நிர்வாகத்திற்கும் மக்களுக்குமிடையே இருந்திடும் தூரத்தைக் குறைத்து, நெருக்கத்தை ஏற்படுத்தி, நேர்மையான முறையில் நெறி பிறழாமல் இந்த அமைப்புகள் செயல்பட எல்லா வகையிலும் தி.மு.கழக அரசு உறுதுணையாக இருந்திருக்கிறது என்பதற்கான சுருக்கமான ஒரு

பட்டியலைத் தருகிறேன்; நீயும் திரும்ப ஒரு முறை படித்துவிட்டு வாக்காளர்களுக்கும் வழங்கிடுக - இயன்றால் யே அவர்களுக்கு வாசித்தும் காட்டிடுக!

உள்ளாட்சி அமைப்புகள் யாவும் சுய ஆட்சி அமைப்புகளாக செயல்பட மாநில அரசு நிதி மற்றும் மானிய பிற அதிகாரங்களை முழுமையாக பகிர்ந்தளித்து ஒவ்வொரு நிலையிலுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தெளிவாக பொறுப்புகளை முறை செய்ததோடு ஜனநாயக அமைப்பில் மக்களின் பங்கினை ஊக்கப்படுத்தும் நோக்குடன் சபையையும் வலுப்படுத்தியது.

திட்டங்கள் தாமதமின்றி உடனுக்குடன் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்காக, உள்ளாட்சி அமைப்புகளில் திட்டங்களுக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்படும் நிதிவரம்பு 1996க்குப் பின் சென்னை மாநகராட்சிக்கு ரூ.7.50 இலட்சம் வரை என்பது ரூ.50 இலட்சம் வரை என்றும், மற்ற மாநகராட்சிகளுக்கு ரூ.2 இலட்சம் வரை என்பது ரூ.25 இலட்சம் வரை என்றும், நகராட்சிகளுக்கு ரூ.10 ஆயிரம் என்பது ரூ.10 இலட்சம் வரை என்றும் உயர்த்தப்பட்டது.

முதல் தடவையாக 1997 - 98 முதல் கேளிக்கை வரி நீங்கலாக அனைத்து வரி வருவாயில் 8 விழுக்காடு நிதி உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்து வழங்கப்பட்டது.

இதன் காரணமாக 97 - 98இல் 612 கோடியே 57 இலட்ச ரூபாய் வழங்கப்பட்டதற்கு மாறாக 2000 - 2001இல் தி.மு.க. ஆட்சியில் 1036 கோடியே 42 இலட்சம் ரூபாயாக இது உயர்த்தி வழங்கப்பட்டது.

ஊராட்சி நிதியைப் பெருக்க விளம்பர வரி, கேபிள் கட்டணம் போன்றவற்றை ஊராட்சிகளே வசூலித்துக் கொள்ள அதிகாரம் வழங்கப்பட்டது.

தல வரி, தல மேல் வரி, சிறு கனிமம் மீதான வரி, முத்திரைத் தாள் வரி, கேளிக்கை வரி இவற்றை முழுமையாக ஊராட்சிகளுக்குப் பகிர்ந்தளித்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஆதாரத்தைப் பெருக்கியது.

ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் நிலுவையிலிருந்த தொகுப்பு வீடுகள், சிறு பாலங்கள் போன்ற 1,14,141 பணிகளுடன், 1996 முதல் 2001 வரையிலான

ஆண்டுகளில் எடுக்கப்பட்ட புதிய பணிகளையும் சேர்த்து மொத்தம் 9,36,129 பணிகள் நிறைவேற்றப்பட்டன.

அ.தி.மு.க. அரசு 1991 முதல் 1996 வரை ஐந்தாண்டுகளில் ஆதி திராவிடர்களுக்காகக் கட்டிய இலவசத் தொகுப்பு வீடுகள் ஒரு லட்சத்து 20 ஆயிரத்து 700. ஆனால் 96க்குப் பின் தி.மு.கழக ஆட்சியிலே 631 கோடியே 6 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 2,96,131 தொகுப்பு வீடுகள் கட்டி வழங்கப்பட்டன.

இந்த வீடுகளுக்கு காங்க்ரீட் கூரை போடுவதற்காக வீடு ஒன்றுக்கு மாநில அரசால் வழங்கப்பட்ட 7000 ரூபாய்; 98 - 99 முதல் 12 ஆயிரம் ரூபாயாக தி.மு.கழக ஆட்சியிலே உயர்த்தப்பட்டது.

தி.மு.கழகம் ஆட்சி நடத்திய 1996 முதல் 2001 வரையிலான கால கட்டத்தில் 29 கோடியே 49 இலட்ச ரூபாய் செலவில் உள்ளாட்சி நிறுவனங்களைச் சேர்ந்த 737 உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடங்களும் 133 கோடியே 15 இலட்ச ரூபாய் செலவில் 5,326 ஆரம்பப் பள்ளிகளுக்குக் கட்டடங்களும், 106 கோடியே 43 இலட்ச ரூபாய் செலவில் 6,652 நியாயவிலைக் கடைகளுக்கான புதிய கட்டடங்களும், 18 கோடியே 28 இலட்ச ரூபாய் செலவில் 1,406 சத்துணவு மையங்களுக்கான கட்டடங்களும் கட்டப்பட்டன.

அந்த கால கட்டத்தில்தான் மனிதக் கழிவுகளை மனிதனே சுமக்கும் அவல நிலையை அகற்றிட அனைத்து பேரூராட்சிகளிலும் இருந்த 417 உலர் கழிப்பிடங்களும், அனைத்து நகராட்சி - மாநகராட்சிப் பகுதிகளிலும் இருந்த 238 உலர் கழிப்பிடங்களும் - ஆக மொத்தம் 655 உலர் கழிப்பிடங்களும் நவீன கழிப்பிடங்களாக 10 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவில் மாற்றப்பட்டு சாதனை படைக்கப்பட்டது. தற்போது எந்தவொரு நகராட்சியிலும், மாநகராட்சியிலும் பொது உலர் கழிப்பிடம் எதுவும் இல்லை என்ற நிலையை ஏற்படுத்தியுள்ளோம். இதனை மனதிலே கொண்டுதான் தற்போது ஆட்சிக்கு வந்ததும், இந்தத் திட்டத்தைத் தொடரும் வகையில் அறிவிப்பு செய்யப்பட்டது.

ஊராட்சிப் பகுதிகளில் 90,097 புதிய தெரு. விளக்குகள் உட்பட மொத்தம் 2,72,012 தெரு. விளக்குகள் தமிழகம் முழுவதிலும் அமைக்கப்பட்டன.

ஊரகப் பகுதிகளில் 12,000 தெரு விளக்குகளும்; நகர்ப்புறப் பகுதிகளில் 90,000 தெரு விளக்குகளும் சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றப்பட்டன.

சாதி சமயப் பூசல் அகற்றிட தி.மு.கழக அரசின் மிகச் சிறந்த திட்டமான பெரியார் நினைவு சமத்துவ புரங்கள் 145 அமைக்கத் திட்டமிடப்பட்டதில் இதுவரை 144 சமத்துவபுரங்கள் திறக்கப்பட்டுள்ளன. அந்தச் சமத்துவபுரங்களில்தான் தற்போது இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டு, அனைத்துச் சமத்துவ புரங்களிலும் உள்ள வீடுகளுக்கு பேரறிஞர் அண்ணா பிறந்தநாளான செப்டம்பர் 15 அன்றும் செப்டம்பர் 16 அன்றும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

தி.மு.கழக ஆட்சிக் காலத்தில்தான் 1996 முதல் 2001 வரையிலான ஆண்டுகளில் மற்றுமொரு சீரிய திட்டமான அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் தொடங்கப்பட்டு, 692 கோடி ரூபாய் செலவில் 74,810 பணிகள் நிறைவேற்றப்பட்டன. (இப்போது அத்திட்டம் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டமாக விரிவாக்கப்பட்டுள்ளதை நீ அறிவாய்!)

அதே ஆண்டுகளில்தான் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 147 கோடியே 74 இலட்ச ரூபாய் செலவில் 18,590 பணிகள் நிறைவேற்றப்பட்டன. இத்திட்டத்தின்படி நிறைவேற்றப்படும் பணிகளுக்கு பொதுமக்களும் செலவில் ஒரு பங்கினை உழைப்பாகவோ நிதியாகவோ தந்திட வேண்டுமென்ற விதிப்படி மக்கள் பங்கு 51 கோடியே 42 இலட்ச ரூபாய் அப்போது கிடைத்தது. ஆனால் கடந்த ஐந்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியிலே உள்ளாட்சித்துறை மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த இந்த சீரிய திட்டங்களான பெரியார் நினைவு சமத்துவபுரம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம் போன்ற திட்டங்களுக்கு மூடுவிழா நடத்தப்பட்டது. அவர்கள்தான் தற்போது உள்ளாட்சி அமைப்புகளில் போட்டியிடுகிறார்கள்.

இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டமாக சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அப்போது சட்டமன்ற உறுப்பினர்களின் 234 தொகுதிகளிலும் 414 கோடியே 94 இலட்ச ரூபாய் செலவில் 30.505 பணிகள்

முதன் முதலாக நிறைவேற்றப்பட்டதும், அந்த ஐந்தாண்டு கால தி.மு.கழக ஆட்சியிலேதான்.

1989 - 91 ஆண்டுகளில் நடைமுறையிலிருந்த மக்கள் நலப்பணியாளர்கள் திட்டம் அ.தி.மு.க. ஆட்சியில் 13.7.91 அன்று கைவிடப்பட்டது. மீண்டும் 96ஆம் ஆண்டு கழக அரசு ஏற்பட்ட பிறகு பணியிழந்த மக்கள் நலப் பணியாளர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது. ஆனால், 2001ஆம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் இந்த 13 ஆயிரம் மக்கள் நலப் பணியாளர்களுக்கும் வேலையில்லை என்று மறுத்து வீட்டிற்கு அனுப்பினார்கள். ஆனால், ஐந்தாவது முறையாக நான் முதல்வர் பொறுப்பையேற்ற பிறகு அந்த மக்கள் நலப் பணியாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்கறிவார்கள், முதியோர் கல்வியைப் பரப்புவதிலும், குடிப்பழக்கத்தின் தீமைகளை மக்களுக்கு உணர்த்துவதிலும் தெரு விளக்குகளைப் பராமரிப்பதிலும் மற்றும் சத்துணவு மையங்களைக் கவனிப்பதிலும் இவர்களது பணி பயன்படுத்திக் கொள்ளப்பட்டு வருகிறது.

வரலாறு காணாத அளவில் கிராமங்களில் சுமார் 20,900 கிலோ மீட்டர் கிராமச் சாலைகள் தார்ச் சாலைகளாக மாற்றப்பட்டதும் அந்த ஐந்தாண்டு கால தி.மு.கழக ஆட்சியிலேதான், 2900 கிலோ மீட்டர் கிராமத் தெருக்கள் சிமெண்ட் காங்கிரீட் தெருக்களாக மாற்றப்பட்டது.

தாகம் தீர்த்துக் கொள்ளப் பருகிடும் நீர், பாதுகாக்கப்பட்ட குடிநீராக இருக்க வேண்டும் என்ற அக்கறையுடன் 1971ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் அதற்கெனத் தனியாக ஒரு வாரியம் 'குடிநீர் வடிகால் வாரியம்' என்ற பெயரில் அமைக்கப்பட்டது.

1995 - 9620 ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியிலே குடிநீர் வழங்கும் பணிகளுக்காக செலவிடப்பட்ட தொகை 213 கோடியே 82 இலட்சம் ரூபாய் என்பதற்கு மாறாக 2000 - 2001ஆம் ஆண்டில் தி.மு.கழக ஆட்சியில் குடிநீர் வழங்கும் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 842 கோடி ரூபாய் என்ற ஒரு புள்ளி விவரத்திலிருந்தே குடிநீர் வழங்குவதில் தி.மு.க. அரசுக்கு எந்த அளவிற்கு ஆர்வம் உள்ளது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து 1996ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட மேல்நிலை குடிநீர் தொட்டிகளின் எண்ணிக்கை 17,501 தான், ஆனால் 1996க்குப் பின் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த தம்பி கோ.சி.மணி அவர்களின் சீரிய முயற்சிகளின் காரணமாக 24733 மேல்நிலை குடிநீர் தொட்டிகளை அமைத்து சுமார் 50 2 ஆண்டு காலத்தில் நிறுவப்பட்ட மேல்நிலை குடிநீர் தொட்டிகளின் எண்ணிக்கையைத் தாண்டி சாதனை புரிந்தோம்.

அ.தி.மு.க. ஆட்சியில் ஊரக குடிநீர்த் திட்டங்களுக்கு 1995 - 96ஆம் ஆண்டில் 68.93 கோடி ரூபாய் மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், 2000 - 2001இல் தி.மு.கழக ஆட்சியில் அதை ஏழு மடங்கு அளவுக்கு உயர்த்தி 500 கோடி பி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஏராளமான பணிகள் நடை பெற்றன.

1992 - 93 முதல் 1995 - 96ஆம் ஆண்டு வரை அ.தி.மு.க. ஆட்சியில் ஊரகக் குடிநீர் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 307 கோடியே 43 இலட்ச ரூபாய் 1996-97 முதல் 2000-2001ஆம் ஆண்டு வரை தி.மு.கழக ஆட்சியில் வாகக் குடிநீர்த் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 1503 கோடியே 79 இலட்ச ரூபாய் உள்ளாட்சி அமைப்புகளின் மூலமாக தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் செய்த அத்தனை திட்டங்களையும் எழுதுவதற்கு ஏடு கொள்ளாது என்பதால், இந்த அளவில் பட்டியலை நிறுத்துகிறேன்!

அன்புள்ள,

மு.க.

29-09-2006

3234. கூரையேறிக் கோழி பிடிக்க முடியாதவர்!

உடன்பிறப்பே,

பசும்பொன் தேவர் திருமகன் பெயரால் தி.மு.க. ஆட்சி காலங்களில் உசிலம்பட்டி, கமுதி, மேலநீலித நல்லூர் ஆகிய நகரங்களில் மூன்று கல்லூரிகள் அமைக்கப்பட்டதையும், தென்னகத்தில் முதன் முதலாக என் தலைமையில் மதுரை மேயர் முத்து முன்னிலையில் மதுரை மாநகரில் பிரம்மாண்டமான தேவர் சிலையை குடியரசுத் தலைவர் வி.வி. கிரி அவர்களை அழைத்து வந்து திறந்து வைத்ததையும் - இன்றைக்கும் கமுதி அருகில் பசும்பொன் என்ற அழகான கிராமத்தில் இருக்கின்ற தேவர் நினைவு மண்டபத்தை தி.மு.க. ஆட்சியில்தான் அமைத்தோம் என்பதையும் - நெஞ்சில் பதிய வைத்துக் கொண்டு இக்கடிதத்தைப் படித்தால் மறைந்த மாவீரர்களுக்கும், மனித நேயப் பெரியோர்களுக்கும் மறக்க முடியாத அளவுக்கு நாமும் நமது கழக அரசும் காட்டி வந்த - காட்டி வருகிற மரியாதைக்கும், அந்தத் தலைவர்கள் பெயரைத் தங்கள் சுயநலத்துக்காகப் பயன்படுத்திக் கொண்டவர்கள்; காட்டி வந்ததும் - காட்டி வருவதுமான பொய்யானதும், போலியானது மான வெறும் விளம்பர வெளிச்சத்துக்குமுள்ள வேறுபாட்டை எளிதில் உணர்ந்து கொள்ள முடியும்! அண்ணா பெயரை கட்சிக்கு வைத்துக் கொண்டு அண்ணா பிறந்த நாளில்கூட அவர் சிலையிருக்கும் பக்கம் திரும்பிப் பார்க்காதவர்கள்தானே! தந்தை பெரியார் பிறந்த நாளில் கூட அவர் பெயரை ஒப்புக்காகவும் உச்சரிக்க முன்வராதவர்கள்தானே! காயிதேமில்லத்தையே தேர்தல் நேரம் தவிர மற்ற நேரங்களில் கண்டு கொள்வதில்லையே?

இதோ இவர்களின் பசுத்தோல் போர்த்திய பகல் வேடத்தைக் கலைத்துக் காட்டும், ஒரு சில ஆதாரங்கள்! இந்த மண்ணின் விடுதலைக்காகப் பாடுபட்ட மாமனிதர்களை - மனித நேயப் பண்பாளர்களை - இவர்கள் மனதார மதிப்பவர்கள் அல்லர்;

மார்க்கெட்டில் கிராக்கியிருந்தால் மட்டுமே; அந்த நேரம் பார்த்து மதிப்பது போல் மக்களை ஏமாற்றும் மாயாஜால சிகாமணிகள் இவர்கள் தொன்பதற்கு; இப்போது நான் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு என் முன்னால் அணி வகுத்திடும் கோப்பு 19களே கோபுரத்தின் மீது ஏறி நின்று கூவும் கட்சிகளாகும்.

உடன்பிறப்பே, நான் கடந்த இரண்டு மூன்று மகளாக எழுதுவது; நீ படித்து மகிழ்ந்து - சேர்ந்து - தெளிந்து - உள்ளத்திலேயே புதைத்து வைப்பதற்காக அல்ல; படிக்கிறாய் என்றால் எனக்கும் மகிழ்ச்சிதான் - அதைவிடப் படித்த விபரங்களை "அய்யோ நாம் தேடித் திரட்டாத விஷயங்களை; நமக்காக நமது தலைவன் கண்டுபிடித்துக் கடிதமாக்கித் தருகிறானே; அதை மக்களிடம் பரப்பி அவனுக்கு உவகையூட்டுவோம் - அதுதானே அவன் பெறுகிற பேறு - இயக்க வளர்ச்சிக்கும் மூலிகைச் சாறு" என்றெண்ணி, திண்ணைப் பேச்சில், தெருமுனைக் கூட்டத்தில், மக்கள் திரண்டிடும் பொதுக்கூட்ட மேடையில், இந்தத் தொடர் மடல்களைத் தொகுத்து நீயேகூடப் பேசலாமே! இதனால் கடுகளவுப் பயன் விளைந்தாலும் காரிருளில் மடுவில் தள்ளப்பட்டுள்ள மக்களை கண் விழிக்கச் செய்து மீட்க முடியுமே!

இதோ பார் ஒரு கோப்பு :

இக்கோப்பு விருதுநகர் மாவட்டம், சாத்தூர் ஊராட்சி ஒன்றியம், மேட்டமலை ஊராட்சியில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் சிலை வைப்பது குறித்ததாகும்.

மாவட்ட ஆட்சித் தலைவர் இந்தக் கோரிக்கையை ஏற்று, பரிந்துரை செய்து அரசுக்கு 3-11-2004 அன்றும், 15.12.2004 அன்றும் கடிதம் எழுதி யிருக்கிறார்.

இக்கருத்துருவினை ஊரக வளர்ச்சி இயக்குநரும் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

சிலை அமைத்திட ஒப்புதல் வழங்கலாம் என்று துறை சார்பில் கோப்பு தயாரிக்கப்பட்டு, துறையின் செயலாளர், தலைமைச் செயலாளர், உள்ளாட்சித் துறை அமைச்சர் ஆகியோர் கையெழுத்திட்டு, 24-11-2005 அன்று; முதல்வர் ஜெயலலிதாவுக்கு அனுப்பப்படுகிறது.

ஆனால் ஆட்சி மாறுகின்ற வரையில் முதல் அமைச்சர் அவர்களால் இந்தக் கோப்பில் கையெழுத்திடப்படாமல், அதே கோப்பு 11-5-2006 அன்று திரும்ப அனுப்பப்படுகிறது. இடையில் எத்தனை மாதங்கள்; எண்ணிப்பார்! ஏறத்தாழ ஆறு மாதங்களுக்கு மேலாகியும்; அம்மையார் நெஞ்சில் தேவர் திருமகனின் நினைவு பிறக்கவில்லை.

தற்போது இந்தச் சிலையை அமைத்திட அனுமதி கோரி கோப்பு என்னிடம் வந்து, 10/9/2006 அன்று அனுமதி தந்து கையெழுத்திட்டு அனுப்பி வைத்துள்ளேன்.

இதோ இன்னொரு கோப்பு; அதே விருதுநகர் மாவட்டத்தில், நரிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் நத்தகுளம் ஊராட்சியில் பசும்பொன் முத்துராம லிங்கத் தேவர் சிலையினை அமைக்க அரசு அனுமதி வழங்குவது பற்றியதாகும்.

ஊராட்சி மன்றம் இதற்காக ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறது.

சிலை அமைப்புக் குழுவினர் அந்தச் சிலையை அமைப்பதற்கான செலவினம், பராமரிப்பு மற்றும் சிலை பாதுகாப்பினை ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

விருதுநகர் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் தனது 5-6-2005 தேதிய கடிதத்தில், நத்தகுளம் கிராமத்தில் அனைத்து சமுதாயத்தினரும் மிகவும் ஒற்றுமையாக இருந்து வருவதாகவும், தேவர் சிலையை அமைப்பது பற்றி அங்கேயுள்ள 'தலித்' சமுதாயத்தினரிடம் விசாரித்ததாகவும், அவர்களுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்று தெரிவித்ததாகவும் எழுதியிருக்கிறார்.

விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநர் ஆகியோரும் தேவர் சிலையினை அங்கே அமைக்கலாம் என்று பரிந்துரை செய்துள்ளார்கள்.

அவர்களின் பரிந்துரையை ஏற்று, சிலை அமைக்க ஒப்புதல் அளிக்கலாமா என்று கேட்டு, கோப்பு துறைச் செயலாளர், தலைமைச் செயலாளர், உள்ளாட்சித் துறை அமைச்சர் வழியாக முதல் அமைச்சருக்கு அனுப்பப்பட்டது.

7-11-2005 அன்று முதல் அமைச்சர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட கோப்பு, 11-5-2006 வரை கிடப்பிலே போடப்பட்டு, ஆட்சி மாறிய பிறகு தான் என்னிடம் அந்தக் கோப்பு திரும்ப வந்து நான் 10-9-2006 அன்று கையெழுத்திட்டேன்.

தேவர் திருமகனார் சிலைக்கு அந்த நிலை - அதைத் தொடர்ந்து மேலும் ஒரு கோப்பு;

திருச்சி மாநகராட்சி, திருவரங்கம் கோட்டம், 26வது பிளாக், வார்டு "எப்"இல், நகரளவு எண். 7இல் மாநகராட்சி வணிக வளாகத்தில், முன்னாள் நகராட்சி மன்றத் தலைவரும், சுதந்திரப் போராட்ட வீரருமான ரத்தினவேல் தேவர் அவர்களின் முழு உருவச் சிலை அமைக்கவும், அதனை மாநகராட்சியே பராமரிப்பதற்கு அனுமதி வழங்கவும், திருச்சி மாநகராட்சி மன்றத்தில் 22-9-2003இல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தின்படி சிலையை அமைக்க அனுமதி கோரி திருச்சி மாநகராட்சி ஆணையர், தமிழக அரசுக்கு 21-11-2003இல் கடிதம் எழுதியிருக்கிறார்.

திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவரும் இந்தக் கருத்துருவையேற்று பரிந்துரை செய்துள்ளார்.

சிலை அமைப்புக் குழுவின் சார்பில் எழுதப்பட்ட மனுவில், திரு. ரத்தினவேல் தேவர் அவர்களின் முழு உருவச் சிலையை அமைத்து, திறந்து வைப்பதற்கு 1992ஆம் ஆண்டிலேயே அப்போது முதல் அமைச்சராக இருந்த ஜெயலலிதா அவர்கள் அறிவித்து, அந்த செய்தி ஏடுகளில் வெளி வந்ததையும் இணைத்திருக்கிறார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் துறை, மாநகராட்சி மன்ற ஆணையர் ஆகியோரின் பரிந்துரையின் அடிப்படையில் துறையின் சார்பில் இந்தக் கருத்துரு தயாரிக்கப்பட்டு, துறையின் செயலாளர், தலைமைச் செயலாளர், உள்ளாட்சித் துறை அமைச்சர் ஆகியோர் கையெழுத்திட்டு 2-6-2005 அன்று ஜெயலலிதாவின் ஒப்புதலுக்காக கோப்பு அனுப்பப்பட்டது.

ஓராண்டு காலம் அன்றைய முதலமைச்சரின் அலுவலகத்திலே கிடப்பிலே கிடந்த இந்தக் கோப்பு இறுதி வரை ஒப்புதல்

கையெழுத்திடப்படாமல், நாதியற்று நலன் குலைந்து மூலையிலே போடப்பட்டு விட்டது.

ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு அந்தக் கோப்பு எனக்கு அனுப்பப்பட்டு நான் 10-9-2006 அன்று கையெழுத்திட்டு, திருச்சியில் சுதந்திரப் போராட்ட வீரரான ரெத்தினவேல் தேவர் அவர்களின் சிலை வைப்பதற்கான அனுமதியை வழங்கியிருக்கிறேன்.

கும்பகோணம் நகர் மன்றத் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் மறைந்த தலைவர் திரு. ஜி.கே. மூப்பனார் அவர்களின் திரு உருவச் சிலையை, கும்பகோணம் நகரில், நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் உச்சிப்பிள்ளையார் கோவில் எதிரில் அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்ட கோரிக்கையின் அடிப்படையில் 31-1-2002 அன்று நகர் மன்றத்திலே இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

21-2-2002 அன்று கும்பகோணம் நகராட்சி ஆணையர் இந்தத் தீர்மானத்தை அரசின் உத்தரவிற்காக அனுப்பியுள்ளார்.

22-2-2002 அன்று தஞ்சாவூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் இந்தக் கருத்துருவைப் பரிந்துரை செய்து அரசுக்கு அனுப்பியிருக்கிறார்.

தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர், சிலை அமைப்பதற்கு காவல் துறை, நெடுஞ்சாலைத் துறை, மற்றும் வருவாய்த் துறை ஆகியவை தடையேதும் தெரிவிக்கவில்லை என்றும், எனவே சிலை வைக்க அனுமதி வழங்கலாம் என்றும் 10-12-2002 நாளிட்ட கடிதத்தில் பரிந்துரை செய்து அரசுக்கு கடிதம் எழுதினார்.

துறையின் சார்பில் கோப்பு தயாரிக்கப்பட்டு, துறையின் செயலாளர், தலைமைச் செயலாளர், உள்ளாட்சித் துறை அமைச்சர், வருவாய்த் துறை அமைச்சர் ஆகியோர் கையெழுத்திட்டு, அன்றைய முதல் அமைச்சரின் ஒப்புதலுக்காக 27-10-2003 அன்று அனுப்பப்பட்டது.

2001ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில், ஜெயலலிதாவோடு தேர்தல் உடன்பாடு வைத்திருந்த கட்சியின் தலைவருடைய சிலையை வைக்கத்தான் இந்தக் கோப்பு தயாரிப்பு! ஆனால் 18-10-2004 அன்று வரை அன்றைய முதல்வர் ஜெயலலிதா அறையில்

இந்தக் கோப்பு தூங்கிய பிறகு, முதல் அமைச்சரின் செயலாளர், அதிலே "புதிய உள்ளாட்சித் துறை அமைச்சர் பார்த்த பிறகு, திரும்ப அனுப்புங்கள்" என்று எழுதி திருப்பி விட்டார்.

2004ஆம் ஆண்டு நவம்பரில் மீண்டும் இந்தக் கோப்பு தயாரிக்கப்பட்டு, தலைமைச் செயலாளரால் அமைச்சர்கள் மற்றும் முதல் அமைச்சர் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது.

ஆட்சி மாறுகின்ற வரையில் இந்தக் கோப்பில் முதல்வர் ஜெயலலிதாவின் கையெழுத்தாகாமல் கிடந்து, தற்போது நமது ஆட்சியில் கோப்பு என்னிடம் வந்து நான் 19-9-2006இல் கையெழுத்திட்டுள்ளேன். - உனக்கும் "பெப்பே" - எனக்கும் "பெப்பே" - ஊருக்கே 'பெப்பே' என்பது போல தீரர் முத்துராம லிங்கத் தேவருக்கும் - திருச்சி ரத்தினவேல் தேவருக்கும் - தியாகச் செம்மல் மூப்பனாருக்கும் 'பெப்பே' சொன்ன ஆட்சியை நடத்தியவர்கள்; உள்ளாட்சிகளின் கோரிக்கைகளை எப்படி உதாசீனப்படுத்தினார்கள் என்பதற்கு இந்த எடுத்துக்காட்டுகள் போதாதா?

கூரையேறிக் கோழி பிடிக்க முடியாதவர், நாளை வானத்தைக் கீறி வழி காட்டப் போகிறேன் என்றால் நம்புவதற்கு மக்கள் என்ன நிரந்தர ஏமாளிகளாகவா இருப்பார்கள் - நித்திரை கலைந்து "நெற்றிக்கண்" திறக்கவே செய்வார்கள்!

அன்புள்ள,

மு.க.

30-09-2006

3235. யானைக்கே குறி வைப்போம்!!

உடன்பிறப்பே,

உள்ளாட்சித் தேர்தல்; அதற்கிடையே மதுரை மத்திய தொகுதி இடைத் தேர்தல் ஆகிய இரு' களங்களில் எப்படியும் வெற்றி பெற்றே தீரவேண்டு மென்று வெத்து வேட்டுச் செய்திகளை முழக்கங்களாக்கி நம் மீது மோதுகிற கட்சிகளில் நம் கண்ணுக்குத் தெரிகிற கட்சியாகயிருக்கும் ஜெயலலிதா தலைமையிலேயுள்ள அ.தி.மு.க. வின் ஆர்ப்பரிப்புக்குப் பஞ்சமில்லை - அப்படிப் பேச்சுக் களுக்கும் குறைவில்லை - நாமும் தனிப்பட்ட முறையிலே அல்லாமல்; நமது எதிரியைத் தத்துவ ரீதியாகவும் - கொள்கை ரீதியாகவும் - இனம் பிரித்து அடையாளம் கண்டு அடைந்தே தீருவது வெற்றியென்று அரிமாக்களாகச் சிலிர்த்து நிற்கிறோம்.

வாக்குச் சாவடிகளில் மத்திய அரசு ஊழியர்களையே தேர்தல் பணிக்கு அமர்த்தவேண்டு மென்றும் - தமிழக அரசின் அலுவலர்களை அமர்த்தக்கூடாதென்றும்; ஒரு வலியுறுத்தலை; அ.தி.மு.க. இப்போது தோளில் தூக்கிக் கொண்டு பேயாட்டம் போடுவதற்குக் காரணம் என்ன? அவர்களுக்கு இவர்கள் ஆட்சியில் நடத்தப்பட்ட கொடுமைகள் - அவிழ்த்து விடப்பட்ட அடக்கு முறைகள் - வேலை நீக்கம் - வன்முறை வெறி யாட்டம் போன்ற நெஞ்சு நடுங்கும் நிகழ்ச்சிகள் - பறிக்கப்பட்ட சலுகைகள் - உரிமைகள் - இத்தனைக்கும் பதிலடி கொடுக்கும் முறையில் அரசு அலுவலர்கள் பாடம் கற்பித்து விடுவார்களோ என்ற தேவையில்லாத அச்சம்; குற்றமுள்ள மனசு குறுகுறுக்கும் என்பதுபோல ஆகிவிட்டதால் - நடுங்கித் தொலைக்கிறார்கள். இவர்கள் நாடாண்ட அழகும் - நிர்வாகம் நடத்திய இலட்சணமும் - இன்னமும் வாக்காளப் பெருமக்களின் வைராக்கியம் நிறைந்த உள்ளத்திலிருந்து விலகாமல் இருக்கிறதே; அது ஒன்று போதாதா இவர்களின் வீழ்ச்சிக்கு? இவர்களை வீழ்த்திட அரசு ஊழியர்கள் வேறு ஆயுதம் தாங்க வேண்டுமா? பொதுமக்கள் ஏந்தியிருக்கின்ற

அறப்போர்க் கருவிகள் போதாதா? அந்த மக்களை அணி திரட்டி ஜனநாயகக் களப்போரில் நிறுத்தியிருக்கிறோமே; நமது அனைத்துத் தோழமைக் கட்சிகளின் சார்பாக; அது போதாதா; நாம் அடைய இருக்கிற வெற்றிக்கு ஆதரவாக, - இதோ திருமாவளவன் தலைமையில் விடுதலைச் சிறுத்தைகளும் நமது அணிவகுப்பில்!

எனவே உடன்பிறப்பே, மதுரை இடைத்தேர்தலில், சட்டமன்றத்தில் இஸ்லாமிய இளஞ்சிங்கம் கவுஸ் பாட்சாவை உட்கார வைத்திட, கடந்த ஜூன் மாதம் முதல் மூன்று நான்கு மாதமாக நடைபெறுகிற நமது ஆட்சியின் சாதனைகளும், திட்டங்களும், தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுகிற திறனும், போதுமானவையென்று நீயும் நம்புகிறாய் - நானும் நம்புகிறேன் - நம்பிக்கை வீண்போகாமல் நமது கழக உடன்பிறப்புக்களும், நம் தோழமைக் கட்சிகளின் செயல்வீரர்களும் விட மாட்டீர்கள் என்பதும் எனக்கு உறுதியாகவே தெரியும் - அதனால் அந்த வெற்றியை உறுதி செய்கிற அதே நேரத்தில்; மாநில முழுதும் பரவலாக நடைபெற இருக்கிற மாநகராட்சி, நகராட்சி, உள்ளிட்ட பல்வேறு உள்ளாட்சித் தேர்தலில் நீயும் நானும் கருதிப் பார்த்திட வேண்டிய "திருக்குறள்" ஒன்று இருக்கிறது.

"கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது"

இதற்குப் பொருள் யாதெனில், யானைக்குக் குறி வைத்து, அந்தக் குறி தப்பிவிட்டாலும் கூட; அப்படிக் குறிவைத்தது - "முயலுக்கு வைத்து அதை வீழ்த்துவதைக் காட்டிலும் சிறப்புடையது" - அதாவது சரியாகக் குறி வைத்து முயலை வீழ்த்தி விடலாம் - ஆனால் யானைக்குக் குறி வைத்து; அந்தக் குறி தப்பினாலும் அதுதான் பெருமை யுடையது - என்கிறார் அய்யன் வள்ளுவர். நன்னிலங்களை, பயிர் பச்சைகளை, வாழை, மா, பலாக்களை நாசப்படுத்தும் யானையை வேட்டையாடி வீழ்த்திட எடுக்கும் முயற்சிதான் பாராட்டுக்குரியது; அதை விடுத்துச் சரியாகக் குறி பார்த்து முயலை வேட்டையாடுவதால் என்ன பயன்? ஏது பாராட்டு?

உடன்பிறப்பே, இந்தக் குறளின் கருத்தை மனத்தில் பதித்துக் கொண்டு மாநில அளவில் உள்ளாட்சித் தேர்தலிலும் - மதுரை மத்திய தொகுதி இடைத் தேர்தலிலும் - நாம் வீழ்த்த வேண்டியது

மதம் கொண்ட யானையைத்தான் - பாவம் சிறு முயலை யல்ல; அது நமக்கு எதிரியுமல்ல என்பதை உணர்ந்து, மக்களுக்கு - ஜனநாயக மாண்புக்கு - நிர்வாக நேர்மைக்கு - உண்மையான பகையாக விளங்கும் தீய சக்தியை வீழ்த்த - திரளுவோம் ஓரணியில் என்றுதான் திண்தோள் தட்டிப் புறப்பட்டுள்ளோம். அண்மையில் சட்டப் பேரவையில், நமது இளைஞர் அணிச் செயலாளரும் - உள்ளாட்சித் துறை அமைச்சருமான தம்பி மு.க. ஸ்டாலின்; உள்ளாட்சித் துறை மானியத்தின் மீது ஆற்றிய உரையின் ஒரு பகுதியை இப்போது நீ படித்துப் பார்த்தால்; குறி தவறாமல் அடித்து வீழ்த்தி, குழியில் தள்ளப்பட வேண்டிய பலங்கொண்ட பகை எது என்பதை உணர்ந்து; குறி ஒருவேளை தவறினாலும் பரவா யில்லை; குறிவைக்கப்பட வேண்டியது யானையே தவிர, பாவம் முயல் அல்ல - என்ற முடிவுக்குத்தான் வர இயலும்!

இதோ ஸ்டாலின் பேரவையில் ஆற்றிய உரையில் அந்தப் பகுதி :

''தமிழ்நாடு ஊரக வேலை உறுதித் திட்டத்தைப் பொறுத்தவரையில், 6 மாவட்டங்கள்: திருவண்ணா மலை, விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திண்டுக்கல், சிவகங்கை இந்த ஆறு மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் நிறைவேற்றப்படுகிறது. இது மத்திய அரசினுடைய ஆணை. ஆக, அந்த ஆணையை ஏற்றுக்கொண்டு, மாநில அரசு அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு தொகை எவ்வளவு தெரியுமா? 90 சதவிகிதம். அவர்கள் தரக்கூடிய நிதி 90 சதவிகிதம். மாநில அரசு ஒதுக்கக்கூடிய தொகை 10 சதவிகிதம். ஆக, மத்திய அரசு, கடந்த கால ஆட்சியிலே ஒதுக்கிய தொகை, மொத்தமாக 164 கோடி ரூபாய். அந்த 164 கோடி ரூபாயிலே, கடந்த ஆட்சியிலே செலவு செய்திருக்கக்கூடிய தொகை எவ்வளவு என்று கேட்டால், வேதனையான செய்தி; வெறும் 3 கோடி ரூபாய்தான். ஆனால், இப்போது தி.மு.க. ஆட்சிக்கு வந்தபிறகு, இந்தக் குறுகிய காலத்திற் குள்ளாக, இந்தத் திட்டத்திற்காக 6 கோடி ரூபாயை நாம் செலவு செய்திருக்கிறோம் என்பதைப் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல; இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே, இந்தத் திட்டத்திற்கு மேலும் 26 கோடி ரூபாயை ஒதுக்கீடும் செய்திருக்கிறோம்.

தமிழகம் சுனாமியால் பாதிக்கப்பட்ட நேரத்தில், உலக வங்கி, மறு கட்டமைப்புப் பணிகளுக்காக, 1350 கோடி ரூபாய் நிதியுதவியாக அனுமதித்தது. அதிலே ஒரு பைசாவாவது கடந்த கால ஆட்சி செலவு செய்திருக்கிறதா என்று கேட்டால், இல்லை. அதேபோல, பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தினுடைய ஒப்புதல் பெற்ற நிதி 283 கோடியே 69 இலட்சம் ரூபாய். அதிலும் ஒரு சல்லிக் காசு கூட கடந்த கால ஆட்சி பயன்படுத்தவில்லை. அதேபோல, ஆசிய வளர்ச்சி வங்கியினுடைய நிதியுதவியான 301 கோடி ரூபாயிலே, வெறும் 4.95 கோடி ரூபாய் மட்டுமே கடந்த கால ஆட்சி செலவு செய்திருக்கிறது. அதிலே நகராட்சித் துறையின் மூலமாக நிறைவேற்ற வேண்டிய திட்டங்களுக்கு, உலக வங்கி தந்தது 11 கோடி ரூபாய். அதிலும் செலவு கிடையாது.

அதுபோல, ஆசிய வங்கி தந்த நிதி 49 கோடி ரூபாய். அதிலே எவ்வளவு செலவு செய்து இருக்கிறார்கள் என்று கேட்டால் ரூபாய் 2 கோடியே 85 இலட்சம்.

தமிழ்நாடு வடிகால் வாரியத்திற்கு (TWAD Board) ஆசிய வளர்ச்சி வங்கி தந்த நிதி ரூபாய் 82.18 கோடி. அதிலே வெறும் 46 இலட்ச ரூபாய்தான் கடந்த கால ஆட்சி செலவு செய்திருக்கிறது.

அதுபோல பேரூராட்சிகளுக்காக ஆசிய வளர்ச்சி வங்கி தந்த நிதி ரூபாய் 56.84 கோடி. அதிலும் கடந்த கால ஆட்சி செலவு செய்யவில்லை. அதனால்தான் நாம் ஆட்சிக்கு வந்தவுடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர்களையெல்லாம் சென்னைக்கு வரவழைத்து 24.6.2006 அன்று ஒரு கூட்டத்தை நடத்தி ஏறக் குறைய ஒரு நான்கு மணி நேரம் அந்தக் கூட்டத்திலே ஆய்வு செய்யப்பட்டு இந்தப் பணிகளை யெல்லாம் எப்படி வேகப் படுத்துவது,

விரைவுபடுத்துவது, இதற்கு என்னென்ன இடையூறுகள், தடைகள் இருக்கின்றன என்பதைப் பற்றி எல்லாம் ஆய்ந்து அதற்குப் பிறகு பல உத்தரவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.''

இப்படி ஓர் ஆட்சி நடந்திருக்கிறது; யானை நடத்திய நாச வேலைகளைப் போல! அந்த யானையை காடு கரம்பு, பயிர் பச்சை, தோட்டம் துரவுகளில் அனுமதிக்கலாமா? - குறி தவறி னாலும் பெருமைதான் என்கிறது குறள் - நான் சொல்லுகிறேன் குறி தவறாது - நம் பெருமையும் குலையாது - அதனால் முயல்களை விட்டுவிட்டு யானைக்கே குறி வைப்போம்!

அன்புள்ள,

மு.க.

01-10-2006

3236. அதில் மட்டும் ஒரு குறைச்சலும் இல்லை !

உடன்பிறப்பே,

தங்களின் நெஞ்சங்கவர்ந்த தலைவர்களுக்குச் சிலை அமைத்திட, அனைத்து விதி முறைகளையும் நிறைவு செய்து எல்லாத் துறை களின் அனுமதியையும் பெற்று இறுதியாகப் பெற வேண்டிய அரசின் அனுமதிக்காக முதலமைச்சர் ஜெயலலிதாவிடம் பல மாதங்கள் கேட்பாரற்றுக் கிடந்த கோப்புகள் அவர் பாரா காரணத்தால் - கருணை கிட்டாத காணத்தால் - சுதந்திரப் போராட்டத் தளகர்த்தர்களான தேவர் திருமகன், திருச்சி ரத்தினவேலு தேவர், ஜி.கே. மூப்பனார் ஆகியோரின் சிலைகளைத் திறந்திட அனுமதி கிட்டாமல் அதாவது அந்தப் பிரச்சினை குறித்த கோப்புகளையே தொட்டுக் கூடப் பார்க்காமல் உள்ளாட்சிகளின் வேண்டுகோள் உதாசீனப்படுத்தப்பட்ட உருக்கமிகு செய்தியை, நேற்றைய கடிதத்தில் அந்தக் கோப்புகளின் ஆதாரங்களுடன் வெளிப்படுத்தியிருந்தேன் - அது உயிரனைய தலைவர்களை அலட்சியப்படுத்தியதை மட்டுமல்ல உள்ளாட்சி மன்றங்களுக்கு முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா எந்த அளவுக்கு மரியாதை கொடுத்தார் என்பதையும் எடுத்துக் காட்டுவதுமாகும். உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறுகிற இந்த நேரத்தில் அதனை நினைவூட்டுவது நம் கடமையும் நமக்குள்ள முக்கிய பொறுப்பும் அல்லவா?

இவர்கள் ஊராண்ட அழகிற்குத்தான் ஓராயிரம் உதாரணங்களை உன்போன்ற உடன்பிறப்புக்கள் உணர்ந்திடும் வகையில் கடிதங்களாகத் தீட்டியிருக்கிறேன்

இதே; நமது அண்டை மாநிலங்களுடன் ஜெயலலிதா கொண்டிருந்த நட்புணர்வு (?) - அணுகுமுறை (?) - இவற்றைப் பற்றியும் ஏற்கனவே நாம் அறிந்து வைத்துள்ளோம் எனினும்,

இப்போது அவற்றுடன் இணைக்கிற புதிய தகவல் ஒன்றையும் கோப்புக் கதையையே மீண்டும் கூறி விளக்கிட விரும்புகிறேன்.

தேய்த்து தேய்த்துக் குளித்து தோலாகிப் போன சோப்புகளுக்கு காட்டப்படுகின்ற மதிப்பு கூட ஜெயாவின் அரண்மனையில் அவரை நாடி ஓடி வந்து கோடி கோடி தெண்டனிட்டுக் கும்பிட்டு நிற்கிற கோப்புகளுக்கு காட்டப்படுவதில்லை என்பது தான் நமக்கும் தெரியும், நாட்டுக்கும் தெரியுமோ?

இதோ, இப்போது, நான் கட்டிக்காட்டுகிற கோப்பு: பாண்டியாறு - புன்னம்புழா நீர் மின் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு, கேரள அரசின் இசைவினைக் கோருவது பற்றியதாகும். அதன் விபரம் வருமாறு -

> -28-11-1996 அன்று தி.மு. கழக ஆட்சிக் காலத்தில் கோரளம் மற்றும் தமிழ்நாடு மாநில அமைச்சர்கள் அளவிளான இரு தரப்பு பேச்சுவார்த்தையின் போது, பாண்டியாறு - புன்னம்புழா நதியிலிருந்து கோவை மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள வறட்சிப் பகுதிகளின் பாசனம் மற்றும் குடிநீர்த் தேவைகளுக்காக 7 டி.எம்.சி. தண்ணீரைத் திருப்புவதற்குக் கேரளா இசைவளிக்குமாறு தமிழ்நாட்டின் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.
>
> பேச்சுவார்த்தைக்குப் பிறகு பாண்டியாறு - புன்னம்புழா நீர் மின் திட்டத்திற்காக மாற்றுத் திட்டம் தயாரிக்கப் பட்டது. தமிழ்நாடு மின் வாரியம் தயாரித்த இந்தத் திட்ட அறிக்கை 1998 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் கேரள அரசின் இசைவு கோரி அனுப்பப்பட்டது
>
> தமிழ்நாடு நீர் மற்றும் மின்சார வாரியம் தயாரித்த பாண்டியாறு - புன்னம்புழா நீர்மின் திட்ட அறிக்கையைக் கேரள அரசின் இசைவைப் பெறும் பொருட்டு, அனுப்பி வைப்பதற்கும்; பாண்டியாறு - புன்னம்புழா நீர் மின் திட்டத்தினால் தமிழ்நாட்டிற்கு 7 டி.எம்.சி. நீரைப் பெறுவதற்கு ஒப்பந்தம் மேற்கொள்வதற்காக இறுதிக் கட்டப் பேச்சு வார்த்தை நடத்துவதற்கும் - ஆணை கோரி, கோப்பு: முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அலுவலகத்திற்கு 7-1-2004 அன்றே அனுப்பப்பட்டது.

17 மாதங்கள், அதாவது 7-2004 முதல் 1-6-2005 வரை இந்தக் கோப்பினை முதல் அமைச்சர் அலுவலகத்திலேயே எந்த முடிவும் எடுக்காமல் வைத்திருந்து விட்டு, 2-5-2005 அன்று துறைக்கே திரும்ப அனுப்பப்பட்டு விட்டது.

மீண்டும் கோப்பு ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டு 1-7-2005 அன்று முதலமைச்சர் ஜெயாவின் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு இறுதிவரையில் எந்தவிதமான முடிவும் எடுக்கப்படாமல் 2006 ஆம் ஆண்டு மே திங்களில் ஆட்சி மாற்றம் ஏற்படுகின்ற வரை கிடப்பிலே போடப்பட்டு ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு அந்தக் கோப்பு மீண்டும் துறைக்கே அனுப்பப்பட்டுத் தற்போது என்னிடம் 22-9-2006 அன்று வந்து, நான் அதிலே 28-9-2006 அன்று இப்பிரச்சினை குறித்து அடுத்து வரும் அமைச்சரவைக் கூட்டத்திலே விவாதிக்கலாம் என்று எழுதிக் கையெழுத்திட்டிருக்கிறேன்.

பாண்டியாறு - புன்னம்புழா நீர் மின்சாரத் திட்டத்தினை நிறைவேற்றுவது குறித்த இந்தக் கோப்பு எவ்வளவு ஆண்டுகளாக முதல் அமைச்சரின் கையெழுத்துக்காகக் காத்துக் கிடந்திருக்கின்றது என்பதைப் பார்க்கையில் எத்துணை முக்கியமான பிரச்சினையில் கூட எவ்வளவு அவட்சியமாக அந்தக் காலத்தில் அதிமுக ஆட்சியாளர்கள் செயல்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிற தல்லவா?

சம்சாரம் இல்லாமல் கூட வாழ்ந்து விடலாம்; மின்சாரம் இல்லாமல் வாழ முடியாது என்பது பாமர மக்களும் பயன்படுத்துகிற பொன் மொழியாகிவிட்ட இந்தக் காலத்தில் மின்சாரப் பிரச்சினையில் ஜெயா அரசு காட்டிய மெத்தனத்துக்கு அவர் பூட்டி வைத்திருந்த அந்தக் கோப்பு அசைக்க முடியாத சான்றாக அமைந்திருக்கிறதல்லவா?

அண்டை மாநிலப் பிரச்சினையில்தான் இந்த அளவிற்கு சுறுசுறுப்போடும் அக்கறையோடும் பணியாற்றியிருக்கிறார்கள் என்றால், இதோ அலுவலகத்தைக் கூட்டிப் பெருக்கிச் சுத்தம் செய்கின்ற பணியிலே ஈடுபட்ட இரண்டு துப்புரவுத் தொழிலாளர்கள்

பற்றிய பிரச்சினையிலே எந்த அளவிற்கு அக்கறை காட்டப்பட்டது என்பதற்கும் ஓர் உதாரணம் தெரிவித்திட விரும்புகின்றேன்.

இந்தக் கோப்பு தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயம், உரிய விதிகளைத் தளர்த்தி, சேலம் காவல் துறையிலே பணியாற்றிய திரு.கே.கண்ணன் மற்றும் திருமதி எம். பார்வதி ஆகிய துப்பரவுத் தொழிலாளர்களின் பணியினை உறுதிசெய்து வரன்முறை செய்யலாம் என்று அறிவுரை கூறியதை அமல்படுத்துவது பற்றியதாகும்

தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயம் தனது 8-7-2003 தேதிய தீர்ப்பில் எட்டு வாரக் காலத் திற்குள் இவர்களுடைய பணியினை வரன் முறைப்படுத்த வேண்டுமென்று தெரிவித்துள்ளது. அந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீட்டிற்குச் செல்லலாமா என்று மூத்த வழக்கறிஞரிடம் துறை கேட்டுக்கொண்டது. நிர்வாகத் தீர்ப்பாயத்தின் அரசு வழக்கறிஞர் அந்த வழக்கில் மேல் முறையீட்டிற்குச் செல்ல எந்தவிதமான முகாந்திரமும் இல்லை என்று கருத்துத் தெரிவித்தார்.

இதற்கிடையே அந்த இரு பணியாளர்களும் சென்னை உயர்நீதிமன்றத்தில் தங்களுடைய பணிக் காலத்தை வரன்முறைப்படுத்தக் கோரி வழக்குத் தொடுத்தார்கள். சென்னை உயர்நீதி மன்றம் தனது 10.11.2005 தேதிய தீர்ப்பில், 18 வார காலத்திற்குள் அந்த இரண்டு பணியாளர்களின் மனுவினையேற்று உரிய ஆணையைப் பிறப்பித்திட வேண்டுமென்று தெரிவித்தது.

இந்த இரு பணியாளர்களும் 18 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்திருக்கின்ற காரணத்தால், அவர்களின் முறையீட்டினை ஏற்றுக் கொள்ளலாம் என்று காவல்துறை தலைவரும் (டி.ஜி.பி.) அரசுக்கு தெரிவித்து உரிய ஆணையைப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார்.

எனினும் அ.தி.மு.க. ஆட்சி இருந்தவரை இந்தக் கோப்பில் கையெழுத்திடப்படவே இல்லை. 2003 ஆம் ஆண்டு நிர்வாகத் தீர்ப்பாயம் எட்டு வாரக் காலத்திற்குள் ஆணை வழங்கப்பட வேண்டுமென்று அளித்த தீர்ப்பு எட்டு மாதங்களுக்குப் பிறகும் தீர்வு காணப்படாமல், தற்போது தி.மு.கழக ஆட்சியில் அந்தக் கோப்பு என்னிடம் வந்து நான் அதிலே 28-9-2006 இல் அந்த

இரண்டு துப்புரவுத் தொழிலாளர்களின் பணியினை வரன்முறை செய்து கையெழுத்திட்டுள்ளேன்.

இவ்வாறு ஜெயலலிதா ஆட்சியிலே நாட்டுப் பிரச்சினையிலும் அக்கறை எடுத்துக்கொள்ள வில்லை; உள்ளாட்சித் துறைகளின் பிரச்சினைகளிலும் அக்கறை எடுத்துக்கொள்ளப் படவில்லை; தனிப்பட்ட சாதாரண அரசு அலுவலர்கள் பிரச்சினையிலும் அக்கறை எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆனால் அவர் நாள் ஒன்றுக்கு இருபது மணி நேரம் உழைக்கிறேன் என்று அன்றாடம் கூறிக்கொண்டதில் மட்டும் குறைச்சல் இல்லை!

அன்புள்ள,

மு.க.

02-10-2006

3237. சுழலையும் கடந்து சுலபமாக கரையேறுவோம்!

உடன்பிறப்பே,

புறப்படுகிறேன் இன்றைக்கு, திருநெல்வேலி தொடங்கி மதுரை, திருச்சியென்று முதற்கட்டத் தேர்தல் பிரச்சாரத்துக்காக மூன்று நாட்கள்! பின்னர் சென்னையில் இரண்டு நாட்கள் - அதற்கடுத்து கோவை, சேலம் நகரங்கள்!

அதுபோலவே நமது இனமானப் பேராசிரியர் அவர்கள், இத்திங்கள் 5 ஆம் நாள் முதல் 10 ஆம் நாள் வரையில், பண்ருட்டி தொடங்கிப் பெரம்பலூர் வரையில் சுற்றுப் பயணம் நடத்துகிறார்கள்.

நாங்கள் இருவரும், நகரங்கள், ஊர்கள் என நாள் தோறும் பிரச்சாரத்தில் ஈடுபடும்போது, நமது துணைப் பொதுச் செயலாளர் தம்பி ஸ்டாலின், நாலாம் தேதியன்று குமரி மாவட்டம் களியக்காவிளை தொடங்கி, தேனி மாவட்டம், உத்தமபாளையம் வரையில், நாள் ஒன்றுக்கு பத்து, இருபது நிகழ்ச்சிகள் என நான்கு நாட்கள் மொத்தம் அறுபதுக்கு மேற்பட்ட நிகழ்ச்சிகளில் பிரச்சாரப் பணியாற்றிடக் கிளம்பியுள்ளார்.

இஃதன்னியில் கழக முன்னோடிகள், மத்திய- மாநில அமைச்சர் பெருமக்கள், நமது தோழமைக் கட்சிகளின் தலைவர்கள், கலையுலகின் கழக கண்மணிகள், தலைமைக் கழகத்துடன் தொடர்பு கொண்டு பல்வேறு மாவட்டச் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டுள்ளனர்.

மாவட்டங்களின் அளவிலும், நமது தோழமைக் கூட்டணியின் பிரச்சாரப் பணி, விரிவாக நடைபெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மதுரை மத்திய தொகுதி இடைத் தேர்தலாயினும் - மாநிலத்து உள்ளாட்சி அமைப்புகள் - மாநகராட்சிகள் உள்ளிட்ட தேர்தல்களாயினும் - வாக்களிக்கப் போகும் மக்களுக்கு இனியும்

சொல்வதற்கு என்ன இருக்கிறது? சட்டமன்றத் தேர்தலின்போது, தேர்தல் அறிக்கை வாயிலாக அளித்த வாக்குறுதிகளையும், பின்னர், ஆளுநர் உரையில் வழங்கிய திட்ட அறிவிப்புகளையும், அதைத் தொடர்ந்து, நிதி நிலை அறிக்கையில் தெரிவித்த செயல் திட்டங்களையும் - வரிசையாக ஒவ்வொன்றாகவும், படிப்படியாகவும் - நமது அரசு நிறைவேற்றி வருவதை தமிழ்நாட்டு மக்கள் நன்றியுணர்வோடு நினைத்துப் பார்ப்பதையும் - பாராட்டி மகிழ்வதையும் - எதிலேயும் பார்த்து நாம் தெரிந்து கொள்வதை விட, எதிர் தரப்பினர் எரிச்சல் கொண்டு ஏசிப் பேசுகிறார்களே; அவற்றையே கண்ணாடிகளாகக் கொண்டு நம்மால் தெரிந்து கொள்ள முடிகிறதே!

கிலோ அரிசி இரண்டு ரூபாய் என கொடுத்த வாக்குறுதியையும் - வாரம் இரு முட்டைகள் சத்துணவுடன் வழங்கப்படும் என்ற வாக்குறுதியையும் - உழவர் கூட்டுறவுக் கடன் ஏழாயிரம் கோடி ரூபாய் உடனடியாக ரத்து செய்யப்படும் என்ற வாக்குறுதியையும் - முதலமைச்சராகப் பதவியேற்ற மேடையிலேயே, பல்லாயிரவர் முன்னிலையில் கையெழுத்திட்டு ஆணை பிறப்பித்து நிறைவேற்றியவன்தான் இந்தக் கருணாநிதி என்பதை, நல் மனம் படைத்தோர் நன்றியுடன் நினைத்து வாழ்த்துவதும் - கல் மனம் படைத்தோர்கூட கசிந்துருகித் தங்கள் கடன் தீர்ந்ததே என்று களிப்புறுவதும் - படீர்ப் பேச்சுத் தலைவர்களாலோ - திடீர்த் தோற்ற நண்பர்களாலோ- பட்டுத் திரையே போடப்பட்டால் கூட மறைக்கப்பட்டு விடக்கூடிய சாதனைகளாகி விடுமா? அதனை நினைவூட்டினாலே போதும்! நெஞ்சில் வஞ்சகமென ஒரு கறையுமில்லாதார், கண்டிப்பாக நம்மை ஆதரித்தே கரம் குலுக்குவர்!

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், பெரியார் நினைவு சமத்துவபுரங்களுக்கும், மறுவாழ்வு இல்லங்களுக்கும் நீலகிரி மாவட்டத்தில் வாழும் பழங்குடியினருக்கும், சென்னையில் இரண்டு குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளுக்குமென முப்பதாயிரம் பெட்டிகள் வழங்கப்பட்டு, மேலும் இரண்டாவது கட்டமாக வழங்கிட, இருபத்தி ஐந்து இலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு உலகளாவிய ஒப்பந்தப்புள்ளி கோரலாம் என்று, சட்டமன்றக் கட்சிகள் குழுவில் விவாதித்து முடிவு எடுக்கப்பட்டு, அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

நிலமற்ற ஏழையெளிய விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு, இலவசமாக நிலம் வழங்கும் திட்டம் தந்தை

பெரியார் பிறந்த செப்டம்பர் 17-ந் தேதியன்று, தமிழகம் முழுவதும் தொடங்கப்பட்டு, முதற்கட்டமாக 24,949 விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு 26321 ஏக்கர் நிலம் பண்படுத்தப் பட்டு வழங்கப்பட்டுள்ளதோடு, இத்திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

ஏழைப் பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டம், மீண்டும் கொண்டுவரப்பட்டு, பத்தாயிரம் ரூபாய் எனும் நிதி உதவியை பதினைந்தாயிரம் ரூபாயாக உயர்த்தி 3.6.2006 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

கர்ப்பிணிப் பெண்களுக்கு பேறு கால உதவியாக ஆறாயிரம் ரூபாய் வழங்கிடும் திட்டம், அண்ணா பிறந்த செப்டம்பர் திங்கள் 15 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

12 லட்சம் முதியோர் பயன்பெறும் வகையில், அவர்களுக்கான உதவித்தொகை மாதம் 200 ரூபாய் என்பது 400 ரூபாயாக உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

பெருந்தலைவர் காமராஜர் பிறந்த ஜூலை 15ஆம் நாளை கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்து, அந்த நாளில் அனைத்துப் பள்ளிகளிலும் விழா நடை பெறுவதற்கேற்பத் தனிச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் பல வழிகளிலும் பெரும்பயன் நல்கிடும் வகையில், சமூகப் பாதுகாப்பு மற்றும் நல உதவிச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அமைப்பு சாரா தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பிற்கும், நலன்களுக்கும் 11 நல வாரியங்கள் தனித்தனியாக தொடங்கப்படவுள்ளன.

சிறப்புத் தொகை செலுத்தி மின் இணைப்பு பெற்ற 2,39,511 விவசாயிகளுக்கும், 37.48 கோடி ரூபாய் செலவில் 1.4.2006 முதல் முன் தேதியிட்டு இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

விவசாயிகளுக்கு வழங்கப்படுவதுபோல, 16 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில், 4.78 இலட்சம் கைத்தறி நெசவாளர்களுக்கும், விசைத்தறி நெசவாளர்களுக்கும் இலவச மின்சாரம் வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள 12,618 ஊராட்சிகளிலும் அடிப்படை வசதிகளை நிறைவு செய்திடும் வகையில், ஒரு புதிய திட்டமாக

"அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வரும் ஐந்தாண்டுகளில் 2500 கோடி ரூபாய் அளவிற்கு அனைத்து ஊராட்சிகளும் மாநில அரசின் நேரடி நிதி உதவி பெறும். உள்ளாட்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் மத்திய மாநிலத் திட்டங்களின் இந்தப் புதிய திட்டமே மிகப் பெரிய திட்டமாகும்.

உள்ளாட்சிக்குட்பட்ட கிராமங்களாயினும் - நகரங்களாயினும் - மாநகரங்களாயினும் - ஏன்? மாநிலம் முழுவதுமே எல்லாத் துறைகளின் வாயிலாகவும் நல்லாட்சி நடைபெற, நடந்து முடிந்த சட்டப் பேரவை கூட்டத்தில் தீர்மானங்கள், திட்டங்கள், அறிவிப்புகள், அவற்றுக்கான ஆரம்பப் பணிகள் என, "மக்கள் குரலே மகேசன் குரல்" என்ற மக்களாட்சி மாண்பு உணர்ந்து நடத்த இருக்கின்ற மகத்தான மனித நேயப் பயணத்துக்கு நமது தோழமைக் கட்சிகள் புறப்பட்டிருக்கின்றன - ஒன்று சேரும் வாய்ப்பு ஓரிரு நாட்கள் தாமதமாகிவிட்டதால், விடுதலைச் சிறுத்தைகள் நிறைய இடங்களில் போட்டியிட இயலாவிடினும் - நிறைவான மனத்துடன் களமிறங்கியிருக்கின்றனர்.

ஒன்றிரண்டு இடங்களில் மட்டும் - நிலைமை கருதி தோழமைக் கட்சிகளின் வேட்பாளர்களே போட்டியிட்டுக் கொள்ளும் சூழ்நிலை - அது நமது கூட்டணிக்குள் பெரும் பிளவு என்று பிறர் பிரச்சாரம் செய்யலாம்!

ஆனால் நமது கூட்டணி, இந்த மாநில வளர்ச்சிக்காகப் பெருகியோடி வரும் மகாநதி! அந்த நதியில் எங்காவது ஓரிரு இடங்களில் அது பெருகி வரும் வேகத்தில் சுழல்கள் தோன்றலாம் - ஆனால் அந்தச் சுழல், மகாநதியை வற்றிடச் செய்யாது - சுழலையும் கடந்து நீந்துவோர் சுலபமாகக் கரையேறுவர். நாமும் சுகமாகவே கரையேறுவோம்.

அசைக்க முடியாத இந்த நம்பிக்கையுடன் தொடங்கிடுவோம்; நமது பிரச்சாரப் பயணங்களை - மக்களுக்கான கொள்கைப் பற்றும் பாசமும் கொண்ட நமது ஜனநாயகக் கூட்டணியின் வெற்றி முகடு அதோ தெரிகிறது! வீறு கொண்டெழுவோம் என் அன்பு உடன்பிறப்புகாள்! தோழமைக் கட்சிகளின் செயல்வீரர்காள்!

அன்புள்ள

மு.க.

5-10-2006

3238. நல்ல தீர்ப்பு வழங்க வேண்டும்!

உடன்பிறப்பே,

தத்துவ ரீதியாக இயற்றப்பட்ட பழைய பாடல் ஒன்றுண்டு - “காயமே இது பொய்யடா! காற்றடைத்த பையடா!” என்பதே அந்தப் பாடல்!

நமக்கு ஒரே வியப்பு, ஜெயலலிதாவைப் பார்த்த பிறகுதானே - அவர் பேச்சைக் கேட்ட பிறகு தானே, அவர் வெளியிடும் அறிக்கைகளைப் படித்த பிறகுதானே, இந்தப் பாடலை ஒருவர் பாடியிருக்க முடியும் என்று கருதினேன் - ஏன்? அப்படிக் கருதியது தவறா? - “கருதியது தவறல்ல” என்பதற்கு இதோ ஆதாரங்கள்:-

“அம்மா” அடுத்த அஸ்திரம் தொடுத்து விட்டார்” என்று வார ஏடுகள் வர்ணனை செய்ய, விலைவாசிப் பட்டியல் என்னும் வில் ஏந்தி மேடைக்கு மேடை, விளாசித் தள்ளினார் - அய்யோ பாவம்! அத்தனையும் பொய்! பித்தலாட்டம்! புளுகு மூட்டை!

அவர் வெளியிட்ட விலைவாசிப் பட்டியலை, ஏடுகளில் வந்தபடி அப்படியே தந்து, நான் இப்பொழுது சேலம் சென்றிருந்தபோது அங்கு என்னிடம் தரப்பட்ட (சேலம் ‘லீ’ பஜார்) விலைவாசி விபரத்தையும் இதோ இணைத்துத் தருகிறேன் - சேலம் வியாபாரிகள் சங்கத் தலைவர் திரு. ஜெயசீலன் அளித்த விபரம் இது!

அம்மா படித்தது அ.தி.மு.க. ஆட்சியில், துவரம் பருப்பு கிலோ 28 ரூபாயாம்! இப்போது 52 ரூபாயாம்!

சேலத்தில் என்னிடம் தெரிவிக்கப்பட்ட துவரம் பருப்பு விலை - அ.தி.மு.க. ஆட்சியில் 32 ரூபாய் - இப்போது விலை 30 ரூபாய் என்பது தான்!

ஆனால், “அம்மா” படித்ததாக பத்திரிகையில் பட்டியல் வெளியிட்டிருப்பது - துவரம் பருப்பு கிலோ 52 ரூபாய்!

அம்மா படித்தது அ.தி.மு.க. ஆட்சியில், பாசிப் பருப்பு கிலோ 26 ரூபாயாம்! இப்போது தி.மு.க. ஆட்சியில் 55 ரூபாயாம்!

ஆனால் சேலத்தில் என்னிடம் தெரிவிக்கப்பட்ட பட்டியல்படி, பாசிப் பருப்பு விலை - அ.தி.மு.க. ஆட்சியில் 44 ரூபாய் - இப்போது விலையும் 44 ரூபாய் என்பதுதான்!

அம்மா படித்தது அ.தி.மு.க. ஆட்சியில் புளி கிலோ 25 ரூபாயாம்! இப்போது 50 ரூபாயாம்!

சேலத்தில் என்னிடம் தெரிவிக்கப்பட்ட விலைப் பட்டியல்படி புளி ஒரு கிலோ விலை - அ.தி.மு.க. ஆட்சியில் 45 ரூபாய் - இப்போது விலை 45 ரூபாய் என்பதுதான்!

சென்னையில் புளி ஒரு கிலோ முதல் ரகம் 38 ரூபாய், இரண்டாவது ரகம் 35 ரூபாய். ஆனால், அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 25 ரூபாய் என்றும், அது இப்போது 50 ரூபாயாக உயர்ந்து விட்டது என்றும் ஜெயலலிதா மேடையில் படித்திருக்கிறார், ஏடுகளும் வெளியிட்டுள்ளன.

அம்மா படித்து ஏடுகளில் வந்துள்ள விவரப்படி, அ.தி.மு.க. ஆட்சியில், ரவா கிலோ 14 ரூபாயாம்! இப்போது 22 ரூபாயாம்!

ஆனால் சேலத்தில் என்னிடம் தெரிவிக்கப்பட்ட விவரப்படி, ரவா விலை - அ.தி.மு.க. ஆட்சியில், ஒரு கிலோ 18 ரூபாய் - இப்போதைய விலையும் அதே 18 ரூபாய் என்பதுதான்! ஆனால் ஜெயலலிதா மேடையில் இதை 22 ரூபாய் என்று பொய்யாகத் தெரிவித்திருக்கிறார்.

அம்மா படித்தது அ.தி.மு.க. ஆட்சியில், மைதா ஒரு கிலோ 12 ரூபாயாம்! இப்போது தி.மு.க. ஆட்சியில் 28 ரூபாயாம்!

சேலத்தில் என்னிடம் தெரிவிக்கப்பட்ட, அங்குள்ள வியாபாரிகள் சங்கத் தலைவர் கொடுத்த விவரப்படி, மைதா அ.தி.மு.க. ஆட்சியில், ஒரு கிலோ 18 ரூபாய் - இப்போது தி.மு.க. கழக ஆட்சியிலே மைதா விலை ஒரு கிலோ அதே 18 ரூபாய் என்பது தான்! சென்னையில் மைதா ஒரு கிலோ விலை ரூ. 15.80 தான்.

இதைப் போலவே மேலும் பல பொருட்களின் விலைகளை, அவர்கள் ஆட்சியிலே குறைத்துக் காட்டியும், இப்போதுள்ள

விலையை அதிகரித்துக் காட்டியும், முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா கூட்டத்திலே படித்து, அதை ஏடுகளும் வெளியிட்டுள்ளன. ஒரு பானை சோறுக்கு ஒரு சோறு பதம் என்பது போல சமையல் பண்டங்கள் எல்லாவற்றின் விலையும் இறங்கியே இருக்கிறது - ஏறினாலும் "அம்மா" சொன்னது போல அவ்வளவு உயரம் விலைவாசி ஏறவில்லை.

எப்படியோ, எத்தனை ஆயிரம் பொய்களை வேண்டுமானாலும் கொட்டி அளந்து, இந்த உள்ளாட்சித் தேர்தலிலும் - மதுரை இடைத் தேர்தலிலும் வெற்றி பெற்றுவிட வேண்டுமென்று "அம்மா" வெறிகொண்டுதான் அலைகிறார் பாவம்!

அதனால்தான், மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசத்தில் மளிகை சாமான்களின் விலையைப் பட்டியலிட்டு, மக்களை ஏமாற்றும் மாய்மால விளையாட்டில் இறங்கியிருக்கிறார்.

இந்த விலைவாசி வலையை வீசி மக்களை பிடித்து விடலாம் என்று அம்மா கனவு காண்பாரேயானால், உணவுப் பண்டங்களில் முக்கியப் பொருளான அரிசியின் விலை ஒரு கிலோ இரண்டு ரூபாய் தான் - எனவே அரிசியில் மாதந்தோறும் ஒரு குடும்பத்துக்கு எவ்வளவு மிச்சம் ஏற்படுகிறது என்பதை அந்த மக்கள் கணக்கிட்டுப் பார்க்காமல் இருந்துவிட மாட்டார்கள்.

இவர் கோப்புகள் பார்த்த அழகை, தேதி வாரியாகவும், முழுமையான ஆதாரத்துடனும் நான் வெளியிட்ட பிறகு, கடந்த ஐந்தாண்டுகளில் அவர் அறுபதாயிரம் கோப்புகள் பார்த்ததாக ஓர் அண்டப் புளுகை அள்ளி விடுகிறார்.

முதல்வருக்கு வரும் கோப்புகள் நெம்பர் குத்தி - முத்திரை வைத்துத்தான் வருமென்றும் - ஜெயாவுக்கு ஐந்தாண்டில் அப்படி வந்த கோப்புகள் எண்ணிக்கை 20 ஆயிரத்து 49 தான் என்றும் நான் ஆண்டுவாரியாக செய்தியாளர்களிடம் நிரூபித்துக் காட்டிய பிறகு, பொய், வாயைப் பொத்திக் கொண்டுவிட்டது. என் செய்வது! பலித்த வரையில் பார்க்கலாம்! பாமர மக்களை ஏமாற்றுவது சுலபம் தானே! என்ற பரந்த "மனோபாவத்து"க்கு எங்கே போய் பரிகாரம் தேடுவது என்றே புரியவில்லை!

"உள்ளாட்சி மன்றத் தேர்தல்களும், மதுரை இடைத் தேர்தலும் முடிந்த பிறகு, அடுத்த நாளே, இதுவரையில் வழங்கியுள்ள இலவசங்களையும், சலுகைகளையும், தரிசு நிலங்களையும்,

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளையும் தி.மு.க. ஆட்சி திரும்பப் பெற்று விடும்" என்றும் ஓர் கண்டு பிடிப்பை திடீர் என்று வெளியிட்டிருக்கிறார் ஜெயலலிதா.

ஆம் - உடன்பிறப்பே, பெரியார் நினைவு சமத்துவபுர வீடுகளுக்கும், இரவலர் மறு வாழ்வு இல்லங்களுக்கும், சென்னையில் இரண்டு குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளுக்கும் முதல் கட்டமாக வழங்கியுள்ள முப்பதாயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை "டப்பா" பெட்டிகள் அவை என்றும் கேலி செய்கிறார். அடுத்த வரியிலேயே அந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை யெல்லாம் லாரிகளை அனுப்பி திரும்பப் பிடுங்கிக் கொள்வதாகவும் இந்த "அம்மா"வே கூறுகிறார்!

"சிக்குன் குனியா" நோய் காரணமாக இரு நூறுக்கு மேற்பட்டவர்கள் இறந்துவிட்டதாகவும், அறுபது இலட்சம் பேர் படுத்த படுக்கையாகவும் இருப்பதாக கூட்டத்திற்கு கூட்டம் பேசினார். அந்தப் பட்டியலிலே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இறந்தவர்கள் பெயர்களும், வெவ்வேறு நோய்கள் காரணமாக இறந்தவர்களின் பெயர்களும் இருப்பதை ஆதாரப்பூர்வமாக தலைமைச் செயலாளரும், நானும் விளக்கிக் காட்டிய பிறகு, ஜெயலலிதாவின் இந்தப் புளுகும் வெளிப்பட்டது.

அதேபோல, முதல் கட்டமாக நிலமற்ற விவசாயிகள் 24,949 பேருக்கு வழங்கியுள்ள, 26,321 ஏக்கர் நிலங்களையும் தி.மு.க. ஆட்சி திரும்ப எடுத்துக் கொள்ளுமாம்! திட்டமிட்டுப் புளுகியிருக்கிறார் ஜெயலலிதா! அதுவும் பொது மேடைகளில்!

கூட்டுறவுக் கடன் பெற்றிருந்த விவசாயிகளுக்கு ஒரே நாளில் ரத்து செய்த ஏழாயிரம் கோடி ரூபாய் கடனையும் கூட திரும்பச் செலுத்துக என்று தி.மு.க. அரசு திடீர் உத்திரவு போடுமாம்!

"இந்தத் தேர்தல் முடிந்ததோ இல்லையோ அடுத்த நாளே கருணாநிதி பஸ் கட்டணத்தை உயர்த்தப் போகிறார் - பார்! பார்! நாங்கள் சொல்வது நடக்கிறதா இல்லையா என்று!"

"அது மட்டுமா? வாரம் இரண்டு முட்டைகள் சத்துணவு அருந்தும் பிள்ளைகளுக்குக் கொடுப்பதையும் "சடக்" எனப் பிடுங்கிக் கொள்வார்கள்"

இப்படித்தான் கெட்ட குணம் - கெடு நினைப்பு - பழிவாங்கும் போக்கு - பாதகச் செயல் - அனைத்தையும் - தி.மு.க. ஆட்சி

கற்றுக் கொண்டு, செய்யப் போகிறது என்கிறார்; தன்னைப் போல் பிறரையும் நினைக்கும் ஜெயலலிதா!

இப்படி, தெருவிலே தலை விரித்துப் போட்டுக் கொண்டு "தய்யா தக்கா" என்று ஆடியவாறு யாராவது பித்துப் பிடித்தோர் உளறிக் கொண்டு போனால் - அதை அலட்சியப்படுத்திவிட்டு நம் வேலையைப் பார்க்கலாம் - ஆனால், பத்து ஆண்டுகள் முதலமைச்சராக இருந்தவர் - ரத கஜ துரக பதாதிகளாகப் பத்திரிகைகளைப் பக்கத்திலே வைத்துக் கொண்டு, படித்தோர் - பட்டம் பெற்றோர் - உலகமறிந்தோர் சிலர் - உடன் புடை சூழ இவ் வண்ணம் புலம்புவாரேயானால், புத்தி தெளிவதற்கு ஏதாவது புதிய மருந்துதான் கண்டுபிடிக்க வேண்டும்.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலையொட்டி, தி.மு.க. அளித்த தேர்தல் வாக்குறுதிகளை ஒன்றன்பின் ஒன்றாக - நிறைவேற்றி வருகிற இந்த ஆட்சி, அவற்றையெல்லாம் திரும்பப் பெற்றுக் கொள்ளும் என்று ஏடுகளில் அறிக்கை விடுவதும் - மேடைகளில் அலறுவதும் - என்ன நாகரிகம் என்பதை நாட்டு மக்கள்தான் நன்குணர்ந்து நல்ல தீர்ப்பு வழங்க வேண்டும்.!

அன்புள்ள,

மு.க.

14-10-2006

3239. மனச்சாட்சியிருந்தால் "மய்யம்" கருதிப் பார்க்குமா?

உடன்பிறப்பே,

உள்ளாட்சித் தேர்தல்கள் முடிவுற்று - கிராமங்களில் - நகரங்களில் - மாநகரங்களில் தலைவர் தேர்தல்கள் நடைபெறப் போகும் நேரத்தில், "தமிழ் ஓசை" நாளிதழில் கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தானதும் - மக்கள் தொண்டுக்கு மருந்தானதுமான தலைப்பக்கத்துக் கட்டுரையொன்றையும், தலையங்கப் பகுதியையும் படித்தேன்.

தலைப்பக்கக் கட்டுரை, நண்பர் பாலா எழுதியது - தலையங்கம், ஆசிரியர் தீட்டியது - இரண்டிலும் காணப்படும் கருத்துகள் என் நெஞ்சுக்கு இதம் தரக் கூடியவை என்பதால் - இரண்டு எழுத்தோவியங்களிலுமிருந்தும் இன்றியமையாத பகுதிகள் சிலவற்றை, இந்தக் கடிதத்தில் இணைத்திட விரும்புகிறேன்.

"உள்ளாட்சித் தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. ஒவ்வொரு கிராமத்தையும் குருசேத்திரமாக்கி, இரணகளம் கண்டு, புயலுக்குப் பின் அமைதியாக தமிழகம் மாறியிருக்கிறது.

> "உள்ளாட்சித் தேர்தல் போல் இல்லாமல், ஓர் உள் நாட்டுப் போர் போல் நடந்துவிட்ட இத்தேர்தலில், தோற்ற வேட்பாளர்களை விட, நாடும், மக்களும் இழந்தவை ஏராளம். எல்லா கிராமங்களிலும், 'மில்லி கிராம்' இராஜ்ஜியமே நடந்தது. நல்ல சாராயமும், கள்ளச் சாராயமும் கலந்து 'தேனாறு' பாய்ந்தது. ஒவ்வொரு தெருவிலும் 'குடி' நீர்த் தொட்டி! ஒவ்வொரு வீட்டிலும் 'வாட்டர்' கேன்! ஒவ்வொரு வேட்பாளரும் தம் படைகள் புடைசூழ, வீதியுலா மேற்கொண்டு, ஒவ்வொரு வாக்காளர் வீட்டுக் கதவையும் தட்டியெழுப்பி, பண பலம், இன பலம், பேராசை, நிராசைக்கேற்ப, மிக்சி,

மூக்குத்தி, சின்னம் பொறித்த அன்பளிப்பு, ஒரு வாக்குக்கு நூற்றுக் கணக்கில் ரூபாய் என இலஞ்சத்தைத் திணித்துச் சென்றனர். வாங்க மறுத்தோரை, வராத வாக்குப் பட்டியலில் சேர்த்துக்கொண்டனர். இந்த வம்பே வேண்டாம் என்று வேட்பாளரிடம் இருந்து அன்பளிப்பை பெற்று, "ஏக் தின்கா இராஜா" (ஒரு நாள் இராஜா) ஆனார்கள் வாக்காளப் பெருமக்கள்.

"சூதும், வாதும், சூழ்ச்சியும், வெறியும் கோரத் தாண்டவம் ஆடின. பேய் அரசாள, சாத்தான்கள் எக்காளமிட, சாத்திரங்கள் பிணந்தின்னப் போக, ஒரு குட்டிப் பிரளயம் நடந்து முடிந்தது". படித்து முடித்தாகி விட்டதா? பரபரப்பாக இருக்கிறதா? இப்போது நடந்தத் தேர்தலிலா இப்படி என்று மலைத்து விடாதீர்கள்.

24-10-2001 அன்று, தினமணி பத்திரிகையில் வெளியான கட்டுரையின் ஒரு பகுதிதான் இது. அப்போது தமிழகத் தில் செயலலிதாவின் அதிமுக ஆட்சியில் இருந்தது. அந்த ஆட்சியில் நடைபெற்ற உள்ளாட்சிமன்றத் தேர்தலில் நடந்த வன்முறை, அராஜக கூத்துகளைத்தான் கட்டுரையாளர் இதே அக்டோபர் 24ஆம் தேதியன்று இப்படி விவரித்திருக்கிறார்.

ஐந்து ஆண்டுகள் கழித்து, அதே நாளில் செயலலிதா வின் அறிக்கை இன்று வெளியாகியிருக்கிறது. இப்போது நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தல் நியாயமான முறையில் நடைபெறவில்லை. அராஜகத்தைக் கட்டவிழ்த்து விட்டு, மோசடி மூலம் தி.மு.க. அணி வெற்றி பெற்றிருக்கிறது என்று சாடியிருக்கிறார்."

இப்போது நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல் பற்றி, "ராஜாஜி மையத்தின்" சார்பில் நடத்திட அர்ச்சனை ஒத்திகையுடன் தயாராகும் 'தினமணிக்' கூட்டத்து நண்பர்கள், அதே 'தினமணி' 2001ல் ஜெயலலிதா ஆட்சியில் நடந்த உள்ளாட்சித் தேர்தல் பற்றி எழுதியதையும், தங்களின் இன்றைய சொற்பொழிவுக்கான குறிப்புகளாகப் பயன்படுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

நான் மீண்டும் ஒருமுறை எழுதிக் கொண்டிராமல் நண்பர் பாலாவின் கட்டுரையையே உனக்கும், பொறுப்பேற்றிடும்

உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அது வருமாறு :-

"மக்களின் அடிப்படையான பிரச்சினைகளைத் தீர்ப்பதும், அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதும் உள்ளாட்சி மன்றங்களின் முக்கியப் பணியாக அமைய வேண்டும். வாழ்வுக்குத் தேவையான குடிநீர், மருத்துவ வசதி, மின்சாரம், கழிப்பிட வசதி, கல்வி வசதி இல்லாமல் ஆயிரக்கணக்கான சிற்றூர்கள் இருந்து கொண்டிருக்கின்றன. அங்கே வாழும் இலட்சக்கணக்கான மக்கள், வாயிருந்தும் இவற்றைப் பற்றிப் பேச முடியாமல் ஊமைகளாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுப்பதே, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் முதல் கடமையாக இருக்க வேண்டும்.

இந்த வசதிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதி ஆதார அதிகாரங்களை, மாநில அரசு, தாராளமாக முன் வந்து வழங்க வேண்டும். உள்ளாட்சித் துறை அமைச்சர், மு.க. ஸ்டாலின் தலைமையில், ஒரு உயர் நிலைக் குழுவை, முதல் அமைச்சர் கலைஞர் நியமித்திருக்கிறார். இது நல்ல தொடக்கம். இந்தக் குழுவினர் மற்ற பணிகளுக்கு இடையே, இதற்கு முன்னுரிமை அளித்து, முதல்வர் நிர்ணயித்து வழங்கியுள்ள மூன்று மாத கால அளவுக்குள்ளாக அறிக்கையை அளித்து விட வேண்டும். அந்த அறிக்கையை கிடப்பில் போட்டு விடாமல், அதில் கண்டுள்ள பரிந்துரைகளை முதல்வரும், அரசும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உள்ளாட்சி மன்றங்களுக்கு புதிதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டு நிருவாகத்துக்கு வந்திருப்பவர்கள், தத்தம் பகுதிகளின் பொருளாதார வளர்ச்சிக்கும், சமூக நீதிக்கான வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிப்பதற்கும் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

ஒரு கை தட்டினால் ஓசை எழும்பாது, எதிர்க் கட்சியில் இருப்பவர்களும் அதிகாரத்தில் இருப்பவர்களைக் குறை சொல்வதிலேயே காலம் கழிக்காமல், மக்கள் நலன் கருதி, அரசுடன் ஒத்துழைத்து, மக்கள் நலத் திட்டங்களைச்

செம்மையாக நடத்த உதவ வேண்டும்.”

இந்தக் கருத்துகளை மனத்தில் பதிய வைத்துக் கொண்டு, மக்களோடு மக்களாக இணைந்து பணியாற்றினால், அது கண்டு நான் அடையும் மகிழ்ச்சிக்கு எல்லையும் உண்டோ?

உடன்பிறப்பே, இந்நாள் ‘தமிழோசை’ இதழின் தலையங்கத்தின் இந்தப் பகுதியும் நமக்கு ஊக்கமும், உற்சாகமும், ஊட்டக் கூடிய உண்மையை உணர்ச்சியுடன் சுட்டிக் காட்டுகிற பகுதியேயாகும்.

> “தி.மு.க. ஆளுங்கட்சியான பிறகு - கட்சி மேலிடம் கைகாட்டியவர்கள் எல்லாம் மேயரானார்கள். இதற்குக் காரணம் - அதற்கு முன்னர் 40 ஆண்டுக் காலத்தில் பல் வேறு துறைகளிலும் தமிழின உணர்வும், சுயமரியாதை உணர்ச்சியும் உடைய ஏராளமான பெருமக்கள் தியாகத் தொண்டு மூலம் திராவிட இயக்கக் கொள்கைகளை மக்கள் மன்றத்தில் உயர்ந்த பீடத்தில் அமர்த்தியதுதான்.
>
> ஆனால், அ.தி.மு.க. தோன்றிய பிறகு, தமிழக அரசியலில் வக்கிரப் போக்கு துவங்கி விட்டது. தமிழகச் சட்டப் பேரவை, ஜெயலலிதா நாமாவளி பாடும் பஜனை மடமாகி விட்டது. எதிர்க் கட்சியினர் துரும்பு போல நடத்தப்பட்டார்கள். அவைத் தலைவரே நெடுஞ்சாண்கிடையாக தரையில் விழுந்து முதல் அமைச்சரிடம் தனது விசுவாசத்தை நிரூபிக்க வேண்டிய பரிதாப நிலை தோன்றியது. 1930களில் அக்கால மத்திய ‘அசெம்பிளி’ என்று அழைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் விவாதங்களுக்கு இணையானதாக சென்னை சட்டமன்றத்தின் நடவடிக்கைகள் இருந்ததுண்டு. அதெல்லாம் மலையேறி, மாரியம்மன் கோவில் திருவிழாவில் பக்தர்கள் மருளாடுவது போல, அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் சட்டசபையையே கேலிக் கூத்தாக்கி விட்டார்கள்.
>
> சட்டமன்றத்தின் கதியே இதுவென்றால், மாநகராட்சிகளும், நகராட்சிகளும் அரசியல் போர்க்களங்களாகவே மாறி விட்டன. நாற்காலிகளே ஆயுதங்களாகப் பிரயோகிக்கப்பட்டதும் உண்டு.

மாநகராட்சி நடவடிக்கைகளில் கூக்குரலும், கலவரமும், வெளி நடப்பும் சர்வ சாதாரண நிகழ்ச்சிகள் ஆகி விட்டன. செவி கூசக் கூடிய வசை மாரிகளே மலர்ச்செண்டுகளாகப் பரிமாறிக் கொள்ளப்பட்டதும் உண்டு.

நல்லவேளையாக கடந்த மே மாதத்தில் நடந்த சட்டசபைத் தேர்தல் - தமிழினத்தின் சாபக்கேடு போல கொட்டமடித்து வந்த அ.தி.மு.க. ஆட்சியைத் தூக்கி எறிந்து விட்டு, சனநாயக முற்போக்குக் கூட்டணியின் ஆதரவுடன் தி.மு.க. ஆட்சி மலர்வதற்கு வழி செய்தது. சட்டப் பேரவையில் ஆரோக்கியம் மீண்டது. அதன் நடவடிக்கைகளில் பழைய தரம் எடுப்பாகக் காட்சி தருகிறது. கடந்த ஐந்து மாதக் காலத்தில் சட்ட மன்றம் நடந்து காட்டியுள்ள முறை தமிழ் மக்களிடையே புதிய நம்பிக்கையைத் தோற்றுவித்திருக்கிறது. இத்தகைய சூழலில், தமிழகமெங்கும் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல்களில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி மகத்தான வெற்றியைச் சாதித்திருக்கிறது”

தமிழோசை சுட்டிக் காட்டுகிற இந்தப் பெருமித வெற்றியும், சிறப்பும், உறுதிப்படுத்தப்பட வேண்டுமானால், மாநகராட்சிகள் முதல் - பட்டிக் காட்டு ஊராட்சி வரையில், மக்கள் பிரச்சினைகள் சிறிதா; பெரிதா என்று கூட வேறுபடுத்திப் பார்த்துக் கொண்டிராமல்,

பொதுத் தொண்டு,

மக்கள் சேவை

பொழுது விடிந்து பொழுது போனால், இந்தப் புனிதப் பணியில் பொறுப்பேற்றிருப்போர் ஈடுபட்டால் -

நகர்கள் ஊர்கள் மட்டுமல்ல;
நாடே வாழும்! வளம் பெறும் -
நலம் பெறும்.

அன்புள்ள,

மு.க.

25-10-2006

3240. தோழமை வளர்ப்போம்; துணை நிற்போம்!

உடன்பிறப்பே,

இன்று அக்.25! உள்ளாட்சி மன்ற அமைப்புகளில் இடம் பெற்றிட உறுதிமொழி ஏற்பவர்கள் - தமிழக வாக்காளப் பெருமக்களின் ஆதரவைப் பெற்றவர்கள், மிகப் பெரும்பான்மையோர், தி.மு.க. தோழமைக் கூட்டணியைச் சேர்ந்தவர்கள் என்கிற போது - அந்தக் கூட்டணிக் கட்சிகளின் நெஞ்சார்ந்த ஆதரவுடன் கடந்த மே திங்கள் தமிழக ஆட்சிப் பொறுப்பை ஐந்தாவது முறையாக ஏற்றிடும் வாய்ப்பு பெற்ற எனது தலைமையில் அமைந்த அரசின் அடுக்கடுக்கான சாதனைகளுக்கும், தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகிற வாய்மைக்கும் மக்கள் மன்றம் அளித்த மகத்தான பரிசு என்றே நீயும், நானும் பெருமிதம் கொள்கின்றோம்.

தி.மு.க. தேர்தல் அறிக்கையில் தெரிவித்தவாறே உள்ளாட்சி மன்றத் தேர்தலையும் எந்த சாக்குப் போக்கும் கூறி ஒத்திவைக்காமல், உரிய நேரத்தில் அறிவித்து, அவ்வாறே நடத்தி, இன்றைக்கு ஒரு லட்சத்து முப்பதாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் தங்கள் பதவிப் பொறுப்புக்கான உறுதிமொழி எடுத்துக் கொள்கிறார்கள் என்கிற போது இரட்டிப்பு மகிழ்ச்சியே பெருகுகிறது நமக்கு!

நாடாளுமன்றத் தேர்தலுக்கோ, சட்டமன்றத் தேர்தலுக்கோ, அமைப்பது போன்ற ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை வடிவிலான அமைப்புகளின் தேர்தலுக்கென எளிதாக அமைக்கக்கூடிய கூட்டணியல்ல இது! ஒரு இலட்சத்து முப்பதாயிரத்துக்கு மேற்பட்ட பதவிகளுக்கானத் தேர்தல் என்கிறபோது, என்னதான் அமைப்புரீதியாக வடிவமைக்கப்பட்ட கட்டுப்பாடுமிக்க கட்சிகளாக இருந்தாலும் - கூட்டணியென்று உருவாகிறபோது, அங்கொன்றும் இங்கொன்றுமாக சில “பிசிறு”கள் - ஏன்? “பிணக்கு”களே கூட

தோழமைக்கிடையே ஏற்படுவது என்பது தவிர்க்க முடியாததாக ஆகி விடுகிறது. தமிழக உள்ளாட்சித் தேர்தலிலும் நமது தோழமைக் கட்சிகளின் கூட்டணிக்கிடையே எவ்வளவோ அரும்பாடு பட்டும் கூட, கட்சிகளின் தலைமை அமைப்புகளைத் தாண்டி, அடுத்தடுத்த அமைப்புகள் தொடங்கி - அடித்தளத்து அமைப்புகள் வரையில் உறுதிப்பாடான ஒற்றுமை உணர்வை உருவாக்குவது எல்லா இடங்களிலும் என்று இல்லாவிடினும், ஒரு சில இடங்களில் "முயற் கொம்பா"கவே ஆகிவிட்டது என்பேன்!

இத்தனை இடையூறுகள் சிரமங்களுக்கிடையிலேயும் - கூட்டணி நெறியைக் காப்பதில் தி.மு. கழகத்தைப் பொறுத்தவரையில், இடங்களையும், பதவிப் பொறுப்புகளையும் தோழமைக் கட்சிகளுடன் பகிர்ந்து கொள்வதில் திறந்த மனத்துடன், தாராளமாகவே இருந்திருக்கிறது என்பதை நாடாளுமன்ற - சட்டமன்றத் தேர்தல்களில் கூட்டணி அமைந்தபோதே நடுநிலையாகச் சிந்திக்கக்கூடிய தமிழ் மக்கள் நன்றாகவே அறிவார்கள்.

இப்போதும்கூட பல சிக்கல்களுக்கிடையே, இந்தக் கூட்டணியிலும் தி.மு.கழகத்தைப் பொறுத்தவரையில், திறந்த உள்ளத்துடன்தான் பதவிப் பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளும் பணியை நிறைவேற்றியிருக்கிறது எனலாம்.

எடுத்துக்காட்டாக, சென்னை மாநகரையொட்டியுள்ள திருவொற்றியூர் நகராட்சியில் - 1966ல் காங்கிரஸ் கட்சியின் முனுசாமி நாயுடுவும், 1970ல் தி.மு.க.வின் மா.வெ. நாராயணசாமியும், 1986ல் தி.மு.க.வின் டி.கே.பழனிசாமியும், 1996ல் தி.மு.க. வின் விசுவநாதனும், 2001ல் தி.மு.க.வின் விஜயனும் நகராட்சித் தலைவர்களாக இருந்ததை நீ அறிவாய். இப்போது நமது கூட்டணித் தோழமைக் கட்சியான மார்க்சிஸ்ட் கட்சியின் தோழர் ஜெயராமன் அவர்களுக்கு திருவொற்றியூர் நகராட்சித் தலைவர் பதவி வழங்கப்பட முடிவெடுக்கப் பட்டுள்ளது.

திருவொற்றியூரில் மொத்தம் 48 வார்டுகளில் தி.மு.க. 25 வார்டுகளில் வெற்றி பெற்றுள்ளது. காங்கிரஸ் நான்கு வார்டுகளில் வெற்றி பெற்றுள்ளது. இப்படியொரு நிலையிருந்தும்கூட தோழமைக் கட்சியான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இரண்டே

இடங்களில் மட்டுமே வென்றிருந்தும், தி.மு.க., காங்கிரஸ் மற்றுமுள்ள அமைப்புகள் திருவொற்றியூர் நகராட்சியை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையில் ஒப்படைப்பதாக பகிர்ந்து கொண்டிருப்பது, வேறு சில இடங்களில் விளைந்துள்ள கசப்பு உணர்வைக்கூட மாற்றக் கூடியதாக அமைந் துள்ளது மட்டுமல்ல, "இதை நினைத்து; அதை மறந்துவிடலாம்" என்ற ஆறுதலையும் அளிக்க வல்லதாகவன்றோ இருக்கிறது!

பெருமைப்படத்தக்க இந்த திருவொற்றியூர் பங்கீட்டை கூர்ந்து நோக்கி, சிந்திக்கும் எந்தவொரு உடன்பிறப்பானாலும் - அவர்கள் தங்கள் பகுதியில் உள்ளாட்சி அமைப்புப் பதவிகளுக்கான தோழமைக் கட்சிகளின் பங்கீட்டு முறைக்கு எந்தவொரு பங்கமும் ஏற்படாமல் பாதுகாப்பாக பார்த்துக் கொள்வார்கள்.

அந்த நம்பிக்கையுடன் தான், தோழமைக் கட்சித் தலைவர்கள் கையெழுத்திட்ட வேண்டுகோள் அறிக்கை, ஓரிரு நாட்களுக்கு முன்பே வெளியிடப்பட்டுள்ளது என்பதை மறந்துவிடக்கூடாது.

எனவே, தோழமைக் கட்சிகளின் வேட்பாளர்களின் வெற்றிக்கு இதய சுத்தியுடன் பாடுபட வேண்டும் - துளியும் துரோகம் தலைகாட்டினால், மொத்த முயற்சியும், உழைப்பும் மூளியாகிவிடும் என்பதை ஓர் எச்சரிக்கையாக எடுத்துக் கொண்டு, பகிர்ந்துகொள்ளப்பட்ட பதவிப் பொறுப்புகள் (தி.மு.க. உட்பட) அறிவிக்கப்பட்டவாறு அறிவிக்கப்பட்டவர்களுக்குக் கிடைத்திட, மனச்சாட்சிக்கு ஏற்ப, நடந்து கொள்ள ஒவ்வொரு கழக உடன்பிறப்பும், கட்சிகளின் செயல்வீரர்களும் உறுதி எடுத்துக் கொள்வோமாக!

அன்புள்ள,

மு.க.

26-10-2006

3241. "பாமா"க்களும் "லீமா"க்களும் நிறைந்த பாசறை; இது!

உடன்பிறப்பே,

சென்னை மாநகராட்சியின் மேயர் ஆசனத்திலும், துணை மேயர் ஆசனத்திலும் ஜரிகைத் தொப்பி அணிந்த சீமான்கள் வீற்றிருந்த காலத்தை மாற்றி, அறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில், 1959ஆம் ஆண்டு அ.பொ. அரசு என்ற அச்சுக்கூடத் தொழிலாளியை அமரவைத்து, அழகு பார்த்த காலம் மலர்ந்ததையும் - 1996ல் இரண்டே இரண்டு அ.தி.மு.க. உறுப்பினர்கள் மட்டும் எதிர்க்கட்சி வரிசையில் இருந்து பணியாற்றியதையும், அவர்களது வாதங்களுக்கும் இடமளித்து, கோரிக்கைகளுக்கும் இசைவளித்து, தம்பி ஸ்டாலின் மேயர் பொறுப்பை நிதானமாகவும், நேர்மையாகவும் நிறைவேற்றியதையும் மாநகரின் வரலாறு மறந்து விட முடியாது. மாநகர் நிர்வாகத்தில் மாநகராட்சியில் 1971க்கு முன்பு மாசு வந்தடையுமோ என்று ஐயுற்றபோது, அந்தக் களங்கம் துடைத்திட, கழக அரசு கண்டிப்பான நடவடிக்கை எடுத்ததையும் - அதனை ஓய்வு பெற்ற பெரிய காவல்துறை அதிகாரிகளே ஏடுகளில் பாராட்டி எழுதியுள்ளனர்.

சாதாரண சாமானிய நடுத்தர மக்களின் பிரதிநிதிகள் நாணயமானவர்களாக இருந்து, மாநகரம் முதல் சிறிய பெரிய ஊராட்சிகள், நகராட்சிகள் வரையில் அன்றாடத் தொண்டாற்ற வேண்டும் - என்ற முனைப்பான கொள்கை கொண்டுள்ள காரணத்தினால்தான், தி.மு.க. கூட்டணி வேட்பாளர்கள், இத்தகைய பொறுப்புகளுக்குப் போட்டியிடுவோர், சாதாரண சாமான்ய நடுத்தரக் குடும்பங்களில் பூத்துள்ள தும்பை மலர்களாக இருக்க வேண்டுமென்று கருதுகிறோம்.

அந்தக் கருத்தினை, ஏதோ சொல் அலங்காரத்துக்காகவோ, அரசியல் செப்படி வித்தைக்காகவோ, கழகம் என்றைக்கும் கொண்டிருந்ததில்லை.

அன்று 1959ல் அ.பொ. அரசு மேயராக வந்த போது, அண்ணா அவர்கள், துணை மேயர் பதவிக்கு சிவசங்கரன் என்ற தாழ்த்தப்பட்ட தோழரைத்தான் தேர்வு செய்து அமர்த்தினார். அந்த சிவசங்கரனின் குடிசைக்கு நடந்து சென்று உள்ளே நுழையக் கதவு பொருத்திய வாசல் கிடையாது. ஊர்ந்தும், குனிந்தும்தான் உள்ளே போகமுடியும். அந்த ஏழைத் தோழரை - இலட்சிய வேட்கை கொண்டவரை அன்றைக்கு துணை மேயராக்கிய அந்தக் காட்சி, பிரபுக்கள் நெஞ்சில் கலக்கத்தையும் - பெருந்தனக்காரர் பார்வையில் கனலையும் ஏற்படுத்தத் தவறவில்லை. அதற்காக அன்று அண்ணா எழுதத் தொடங்கிய அந்தச் சமதர்மத் தொடர் வரலாற்றை இப்போது நாங்கள் நிறுத்திவிடவில்லை.

இதோ பார் உடன்பிறப்பே! இது "தினத்தந்தி" நாளிதழில் வெளிவந்த படம். ஆம்! தம்பி சுப்பிரமணியத்தை மேயராகப் பெற்றிருக்கும் தலைநகர் சென்னையில், துணை மேயராகப் பொறுப்பேற்றுள்ள அன்புத் தங்கை சத்ய பாமாவின் பத்தடி நீள, பத்தடி அகலக் குடிசை - ஏழ்மையின் உருவம் - ஆனால் இலட்சியத் திருவிளக்கு - துணை மேயராக ஒரு தலித்தை சிவசங்கரனை நியமித்த அண்ணாவின் அந்த விசால நெஞ்சினை இந்த இயக்கம் எப்போதும் பெற்றிருக்கிறது, இப்போதும் பெற்றிருக்கிறது என்பதற்கு அடையாளமாகத்தான் இந்த நியமனம். துணை மேயர் சத்தியபாமாவின் வாழ்க்கை வரலாறு குறித்து "தினத்தந்தி" நாளிதழில் வெளிவந்துள்ள செய்தியின் சுருக்கம் வருமாறு :-

> "மக்கள் நெருக்கடி மிகுந்த சென்னை பிராட்வே - ஆசிர்வாதபுரம் 12வது தெருவில், குடிசை மாற்று வாரியம் வழங்கிய மிகச் சிறிய வீட்டில், துணை மேயர் சத்தியபாமா வசிக்கிறார். இந்த வீடு 10 அடி நீளமும், 10 அடி அகலமும் உள்ள ஒரே அறையைக் கொண்டது ஆகும்.
>
> துணை மேயர் சத்தியபாமா 6ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். இவரது கணவர் ஆர்.பி. ரூபன் (வயது 61) எட்டாம் வகுப்பு படித்துள்ளார். ஊதுவத்தி வியாபாரம் செய்து வருகிறார். (இதையே "மாலை மலர்" வெளியிடும் போது "தலித் இனத்தைச் சேர்ந்த இவர் வறுமையால் சிறு வயதில் பள்ளிக்கு சென்று படிக்க முடியவில்லை. ஊதுவத்தி தயார் செய்து, கணவர் ரூபனுடன் வீடுகள்,

கடைகளில் படியேறி விற்று, குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார்" என்று எழுதியிருக்கிறது)

தி.மு.க. பிரமுகரான ரூபன் 1992ஆம் ஆண்டு முதல் 25வது வட்டச் செயலாளராக இருந்து வருகிறார். வார்டு கவுன்சிலர் பதவிக்கு போட்டியிட விரும்பிய ரூபன், நண்பர்கள் கேட்டுக் கொண்டதால் 2 தடவை விட்டுக் கொடுத்தார். இந்த முறை 25வது வார்டு பெண்களுக்கு ஒதுக்கப்பட்டது. எனவே, தனது மனைவி சத்திய பாமாவுக்கு வாய்ப்புத் தரும்படி கேட்டார்.

அதன்படி இல்லத்தரசியான சத்திய பாமாவுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. தி.மு.க. சார்பில் போட்டியிட்டு அவர் 25வது வார்டு கவுன்சிலர் ஆனார். சென்னை மாநகராட்சி கூட்ட அரங்கில் கடந்த மாதம் (அக்டோபர்) 25ந்தேதி கவுன்சிலராக பதவியேற்றார். அங்கிருந்து கணவருடன் வீட்டுக்குத் திரும்பினார்.

வீட்டுக்கு வந்ததும் வழக்கம் போல டி.வி. போட்டுப் பார்த்தனர். அப்போது சென்னை மாநகராட்சி துணை மேயர் வேட்பாளராக சத்தியபாமா நிறுத்தப்படுகிறார் என்று முதல் அமைச்சர் கருணாநிதி அறிவித்துள்ளார் என்று செய்தி ஒளிபரப்பானது.

முதலில் வேறு யாராவது இருக்கும் என்று சத்தியபாமா எண்ணினார். அந்தத் தகவலை கணவர் ரூபன் உறுதி செய்ததும் அவருக்கு இன்ப அதிர்ச்சி ஏற்பட்டது. அதிலிருந்து அவர் மீள்வதற்கு சிறிது நேரம் ஆனது.

அந்த சில நிமிடங்கள் பற்றி சத்திய பாமா கூறுகையில், "என்னை துணை மேயராக முதல் அமைச்சர் கலைஞர் அறிவித்ததும், இன்ப அதிர்ச்சியில் பேச்சே வரவில்லை. பதட்டத்தில் உதறலும் ஏற்பட்டது. எனது கணவருக்கு சந்தோஷத்தில் வியர்த்துக் கொட்டியது. அவர் நீரிழிவு நோயாளி என்பதால் பதறிப்போனேன். பதவி கிடைத்த சந்தோஷம் ஒருபுறம். கணவருக்கு இப்படி வியர்த்துக் கொட்டுகிறதே என்ற வேதனை மறுபுறம். சிறிது நேரத்தில் கணவருக்கு சரியாகி விட்டது. மகனும், மகளும் சந்தோஷப்பட்டதுடன் ஏழை மக்களுக்கு

சேவை செய்ய ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது. அதை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்" என்று கூறியதாகத் தெரிவித்தார்.

சத்தியபாமா துணை மேயர் ஆகியிருப்பது பற்றி அவரது கணவர் ரூபன் கூறியதாவது :-

"சாமானியனும் உயர்ந்த பதவிக்கு வரமுடியும் என்பதையே இது காட்டுகிறது. எங்களது மகனும், மகளும் வேலைக்கு செல்லும்வரை வறுமையின் பிடியில் சிக்கித் தவித்தோம். பசியும் பட்டினியுமாக பல நாட்களைக் கழித்தோம். மகன் உழைப்பில் ரூ. 3 ஆயிரம், மகள் வேலைக்கு போவதால் ரூ. 2 ஆயிரம், ஊதுவத்தி தொழில் மூலம் ரூ. 4 ஆயிரம் கிடைக்கிறது.

கட்சி அறிவிக்கும் அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டதால், தமிழ்நாட்டில் நான் பார்க்காத சிறையே கிடையாது. நான் சிறையில் இருந்த போதெல்லாம் சத்தியபாமா அரசியலில் ஈடுபட்டு வந்தார். கட்சிக்கு நீண்ட காலம் உழைத்த நமக்கு எந்தப் பலனும் கிடைக்க வில்லையே என்ற மனச்சுமை எனக்கு இருந்தது. இப்போது அந்த மனச்சுமை நீங்கிவிட்டது" என்கிறார் ரூபன்.

"மக்களுக்கு நல்லமுறையில் சேவை செய்து, கலைஞருக்கும், தளபதிக்கும், பேராசிரியருக்கும் நல்ல பெயர் எடுத்துக் கொடுப்பேன்' என்கிறார் குடிசைப் பகுதியில் இருந்து ரிப்பன் மாளிகைக்கு துணை மேயராக வந்து அமர்ந்துள்ள தலித் பெண் சத்திய பாமா."

★★

உடன்பிறப்பே,

தலித் பெண் - துணை மேயர் - மாநகராட்சியில் பெரும்பான்மை - என்ற மகிழ்ச்சியுடன், நமது கூட்டணியினர் பணிகள் முடிந்து விடு வதில்லை.

நாடு முழுதும் எங்கு ஏற்படும் நலிவாயினும், எந்தக் கேடுபாடாயினும், அவை அனைத்தும் நகர்கள், பேரூர்கள்,

சிற்றூர்கள் அடங்கியவை தான் என்பதை மறந்துவிடாமல் அயராப் பணி ஆற்றிட வேண்டும்.

அன்றாடப் பணி ஆற்றிட வேண்டும். மக்களுக்குத் தொண்டு செய்யும் நேரம் போகத்தான் மற்ற பணிகளுக்கு நேரம் ஒதுக்கப்பட்டாக வேண்டும்.

குடிசைகளிலும் இன்று ஏற்றி வைக்கப்படும் விளக்கு, அந்தக் குடிசை மட்டுமே கோபுரமாவதற்காக அல்ல! எல்லா குடிசைகளும் எழில் மாடங்களாக மாறுவதற்காகத்தான் என்பதை, சத்ய பாமாக்களும் உணர்ந்து செயலாற்ற வேண்டும்.

தற்போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், திருவெட்டாறு தொகுதி சட்டப்பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் திருமதி லீமா ரோஸ் அவர்கள், செங்கல் சூளையில் கூலி வேலை செய்து குடும்பத்தை காப்பாற்றும் நிலையிலிருந்து வந்தவர்தான். எனவே பாமாக்களும்,லீமாக்களும் நிறைந்த பாட்டாளிப் பாசறைகளாம் கழகமும் - அதன் தோழமைக் கட்சிகளும் அடித்தட்டு மக்களுக்கான, சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கான, ஆண்டாண்டு காலமாக அடிமைப்படுத்தப்பட்டு, கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டு வந்த மக்களுக்கான இயக்கங்களே!

அறிஞர் அண்ணா அவர்கள், மிக மிகச் சாமானியன் என்று தன்னை அழைத்துக் கொண்டு - சராசரி மக்களுக்கான சகாப்தத்தைத் தொடங்கி வைத்தார். சமுதாயத்தில் பெரும்பான்மையினராக உள்ள சராசரி மக்களும் உரிய பங்கெடுத்துக் கொண்டு கடமையாற்றுவதுதான் ஜனநாயகத் திற்குப் பெருமை.

“ஊரும் உள்ளமும் தூய்மையானால் - உன்
பேரும் பெருமையும் வாய்மையுறும்!”

அன்புள்ள,

மு.க.

3-11-2006

3242. எங்கள் எண்ணத்தை - இந்த எண்ணிக்கை வெளிப்படுத்தும்!

உடன்பிறப்பே,

தமிழகம் முழுவதும் உள்ள பொது மக்கள் கலந்து கொள்கின்ற அளவிற்கு ஒரு பொதுத் தேர்தலைப் போல 473 மாநகராட்சி உறுப்பினர், 3391 முதல் நிலை நகராட்சி உறுப்பினர், 983 மூன்றாம் நிலை நகராட்சி உறுப்பினர், 8780 பேரூராட்சி உறுப்பினர், 656 மாவட்ட ஊராட்சி உறுப்பினர், 6569 ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் பதவிகளுக்கான தேர்தல்கள் நடைபெற்று முடிந்துள்ளன.

473 மாநகராட்சி உறுப்பினர்களில், தி.மு.கழகம் 238 இடங்களிலும், காங்கிரஸ் 65 இடங்களிலும், பா.ம.க. 22 இடங்களிலும், சி.பி.எம். 19 இடங்களிலும், சி.பி.ஐ. 10 இடங்களிலும், விடுதலைச் சிறுத்தைகள் 1 இடத்திலும், அ.தி.மு.க. 62 இடத்திலும், ம.தி.மு.க. 9 இடத்திலும், தே.மு.தி.க. 16 இடத்திலும், பா.ஜ.க. 2 இடத்திலும், பி.எஸ்.பி. 1 இடத்திலும் சுயேச்சைகள் 28 இடத்திலும் வெற்றி பெற்றிருக்கின்றார்கள்.

3391 முதல் நிலை நகராட்சி உறுப்பினர்களில், தி.மு.க. 1249 இடங்களிலும், காங்கிரஸ் 339 இடங்களிலும், பா.ம.க. 101 இடங்களிலும், சி.பி.எம். 53 இடங்களிலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 32 இடங்களிலும், விடுதலைச் சிறுத்தைகள் 4 இடங்களிலும், அ.தி.மு.க. 778 இடங்களிலும், ம.தி.மு.க. 102 இடங்களிலும், தே.மு.தி.க. 72 இடங்களிலும், பா.ஜ.க. 37 இடங்களிலும், புதிய தமிழகம் 1 இடத்திலும், மற்றவர்கள் 4 இடங்களிலும், சுயேச்சைகள் 619 இடங்களிலும் வெற்றி பெற்றிருக்கின்றார்கள்.

983 மூன்றாம் நிலை நகராட்சி உறுப்பினர்களில், தி.மு.க. 348 இடங்களிலும், காங்கிரஸ் 68 இடங்களிலும், பா.ம.க. 23 இடங்களிலும், சி.பி.எம். 19 இடங்களிலும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 10 இடங்களிலும், அ.தி.மு.க. 239 இடங்களிலும், ம.தி.மு.க. 37 இடங்களிலும், தே.மு.தி.க. 28 இடங்களிலும், பா.ஜ.க. 7 இடங்களிலும், சுயேச்சைகள் 204 இடங்களிலும் வெற்றி பெற்றிருக்கின்றார்கள்.

8780 பேரூராட்சி மன்ற உறுப்பினர்களில், தி.மு.க. 2634 இடங்களிலும், காங்கிரஸ் 742 இடங்களிலும், பா.ம.க. 184 இடங்களிலும், சி.பி.எம். 163 இடங்களிலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 54 இடங்களிலும், விடுதலைச் சிறுத்தைகள் 8 இடங்களிலும், அ.தி.மு.க. 1638 இடங்களிலும், ம.தி.மு.க. 184 இடங்களிலும், தே.மு.தி.க. 229 இடங்களிலும், பா.ஜ.க. 154 இடங்களிலும், புதிய தமிழகம் 4 இடங்களிலும், பி.எஸ்.பி. 2 இடங்களிலும், மற்றவர்கள் 5 இடங்களிலும், சுயேச்சைகள் 2779 இடங்களிலும் வெற்றி பெற்றிருக்கின்றார்கள்.

656 மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களில், தி.மு.க. 308 இடங்களிலும், காங்கிரஸ் 80 இடங்களிலும், பா.ம.க. 50 இடங்களிலும், சி.பி.எம். 7 இடங்களிலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 14 இடங்களிலும், விடுதலைச் சிறுத்தைகள் 3 இடங்களிலும், அ.தி.மு.க. 159 இடங்களிலும், ம.தி.மு.க. 14 இடங்களிலும், தே.மு.தி.க. 15 இடங்களிலும், பா.ஜ.க.3 இடங்களிலும், மற்றவர்கள்4 இடங்களிலும், சுயேச்சைகள் 3 இடங்களிலும் வெற்றி பெற்றிருக்கின்றார்கள்.

6569 ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்களில், தி.மு.க. 2472 இடங்களிலும், காங்கிரஸ் 602 இடங்களிலும், பா.ம.க. 428 இடங்களிலும், சி.பி.எம். 85 இடங்களிலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 82 இடங்களிலும், விடுதலைச் சிறுத்தைகள் 7 இடங்களிலும், அ.தி.மு.க. 1414 இடங்களிலும், ம.தி.மு.க. 184 இடங்களிலும், தே.மு.தி.க. 250 இடங்களிலும், பா.ஜ.க. 31 இடங்களிலும், பி.எஸ்.பி. 1 இடத்திலும், புதிய தமிழகம் 7 இடங்களிலும், மற்றவர்கள் 7 இடங்களிலும், சுயேச்சைகள் 999 இடங்களிலும் வெற்றி பெற்றிருக்கின்றார்கள்.

கட்சி சார்பற்ற முறையில் தேர்தல் நடைபெற்ற ஊராட்சி மன்றங்களை அன்னியில், மீதமுள்ள 20,852 வார்டு உறுப்பினர்களுக்கு கட்சி, சின்னங்களின் அடிப்படையில் நடைபெற்ற தேர்தலில் 7249 இடங்களில் மட்டும்தான் தனியாக திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றது. மீதமுள்ள 13,603 இடங்களில் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த, தோழமைக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் தான் வெற்றி பெற்றிருக்கின்றார்கள். எனவே, அனைத்து இடங்களிலும் ஆளுங்கட்சியே வெற்றி பெற்றது என்பது போன்ற ஒரு நிலையை இட்டுக் கட்டிச் சொல்வது முழுவதும் தவறாகும். ஆளுங்கட்சி தவறு செய்திருக்குமேயானால்,

அந்தக் கட்சி 30 சதவிகிதம் அளவிற்கு மட்டும்தான் வெற்றி பெற்றிருக்க முடியுமா என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

எனவே, எங்கள் எண்ணத்தின் தூய்மையை இந்த எண்ணிக்கையே வெளிப்படுத்தும்!

சென்னை மாநகரில் மொத்தமுள்ள 155 வார்டுகளில், 90 இடங்களில்தான் தி.மு.கழகம் வெற்றி பெற்றிருக்கின்றது. மீதம் உள்ள 65 வார்டுகளில் தோழமைக் கட்சிகளும், எதிர்க் கட்சிகளும்தான் வெற்றி பெற்றுள்ளன. சென்னை மாநகரிலே வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றன, ஆளுங்கட்சிதான் அதற்குக் காரணம் என்றதொரு குற்றச்சாட்டு, தி.மு.க. மீது தேர்தல் முடிவுற்று பல நாட்களுக்குப் பிறகும் சொல்லப்படுகின்றது.

எதிர்க்கட்சியினரால் காவல் துறையிலே தரப்பட்ட குற்றச்சாட்டுகளின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதற்குச் சில உதாரணங்களைத் தெரிவிப்பதையும் கடமையாகக் கருதுகின்றேன்.

சென்னை மாநகரில் மட்டும், தேர்தல் நேரத்தில் 94 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் ஆளுங்கட்சி சட்டப் பேரவை உறுப்பினர் மீதான புகாரில், அவர் கைது செய்யப்பட்டு, பின்னர் ஜாமீனில் விடப்பட்டிருக்கிறார். வழக்கு தொடர்ந்து நடைபெறவுள்ளது.

அதுபோலவே, சின்னதுரை என்ற தி.மு. கழக உறுப்பினர் மீதான வழக்கில், அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். இதே காவல் நிலைய எல்லையில், தி.மு.கழக வேட்பாளர் சேகர் என்பவர், தேவி என்ற சி.பி.எம். வேட்பாளர் மீதும் மற்றும் 12 பேர் மீதும் புகார் மனு கொடுத்ததில் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறதே தவிர, அவரை இதுவரை கைது செய்யவில்லை.

திருவான்மியூர் காவல் நிலைய எல்லையில், காவல் துறை அதிகாரியே பதிவு செய்த வழக்கில், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பழனி உட்பட பத்துப் பேர் கைது செய்யப்பட்டார்கள்.

புரசைவாக்கத்தில் சீனிவாசன் என்பவர் கொடுத்த புகாரின்மீது ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜி.5 காவல் நிலைய எல்லையில், காவல்துறை அதிகாரியே பதிவு செய்த வழக்கில், 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கே.2 அயன்புரம் காவல் நிலைய எல்லையில், தரணிபாலன் என்பவர் கொடுத்த புகாரின்மீது சத்தார் ஜெயபால் என்ற தி.மு.க.வைச் சேர்ந்தவர்மீதும் மற்றும் 32 தி.மு. கழகத்தினர்மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

என்.3 முத்தியால்பேட்டை காவல் நிலைய எல்லையில், தி.மு.க.வைச் சேர்ந்த சிராஜ்சுதீன் என்பவர் அ.தி.மு.க. வைச் சேர்ந்த போஸ் மீதும் மற்றும் எட்டு பேர் மீதும் வழக்கு தொடுத்திருந்த போதிலும், இதுவரை அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்படவில்லை. அது போலவே, ஆர்.3 அசோக் நகர் காவல் நிலைய எல்லையில் காங்கிரஸ் தரப்பில் தொடுக்கப்பட்ட புகாரின்மீது அ.தி.மு.க.வினர்மீது வழக்குப் பதிவு மட்டுமே நடைபெற்றுள்ளதே தவிர, யாரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

கொடுங்கையூர் காவல் நிலைய எல்லையில், திருமதி மோகனா என்ற அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர் கொடுத்த புகாரின்மீது மணிவண்ணன் என்ற தி.மு.க.வைச் சேர்ந்தவர்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பி.5, எம்.கே.பி. நகர் காவல் நிலைய எல்லையில், தி.மு.க. மீது வெங்கடேசன் என்ற மார்க்சிஸ்ட் தோழர் கொடுத்த புகார் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதோடு, அதைப் போலவே தி.மு.க. சார்பில், திருமதி குமாரி கொடுத்த புகாரின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ராஜா என்பவர்மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆர்.10 எம்.ஜி.ஆர்.நகர் காவல் நிலைய எல்லையில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர் மீது பா.ம.க.வைச் சேர்ந்த வேட்பாளர் வெங்கடேசன் கொடுத்த புகாரின்மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

எஸ்.1 மவுண்ட் காவல் நிலைய எல்லைக்குள் பெட்ரோல் குண்டுகளை ஏற்றி வந்த வண்டி சோதனையிடப்பட்ட நேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டு, வாகனங்கள் கைப்பற்றப்பட்டு வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது. எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டு, தற்போது ஜாமீனில் இருக்கிறார். மற்றொரு முன்னாள் அமைச்சர் தலைமறைவாக இருந்து தற்போது முன்ஜாமீன் பெற்றிருக்கிறார்.

எனவே இந்த ஆட்சியில், ஆளுங்கட்சி, எதிர்க் கட்சி என்று இல்லாமல் புகார் கூறப்பட்டவர்கள் மீதெல்லாம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை புரிந்து கொள்ள முடியும். ஆனால், ஆளுங்கட்சியினர் மீது நடவடிக்கை எடுத்தால், அதைக் கண்துடைப்பு நடவடிக்கை என்றும், நடவடிக்கை எடுக்கா விட்டால், நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் கூறுவது என்ன வாதமோ தெரியவில்லை.

மேலும், இப்போது 2006ஆம் ஆண்டில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் வரலாறு காணாத அளவிற்கு வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றதாகத் திட்டமிட்டு தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகிறார்கள். 2001ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியிலே இருந்த போது நடைபெற்ற மாநகராட்சித் தேர்தலில் எந்த அளவிற்கு வன்முறைச் சம்பவங்கள் நடந்தன என்பதற்கு, வாக்குப் பதிவு நேரத்திலே மாத்திரமல்ல, வாக்கு எண்ணிக்கை நடைபெற்ற நேரத்திலேகூட என்ன நடந்தது என்பதற்கு, தி.மு.கழக ஏடுகளிலே அல்ல, இந்து, மாலைமுரசு, தினமலர் போன்ற ஏடுகளில் எப்படியெல்லாம் செய்திகள் வெளிவந்தன என்பதற்கு சில உதாரணங்கள் வருமாறு :-

"இந்து" 17.10.2001

"சென்னை மாநகராட்சி மேயர் மற்றும் கவுன்சிலர்கள் தேர்தலின்போது, ஆயுதம் தாங்கிய கும்பல் பூத்துகளைக் கைப்பற்றியதோடு நகரின் சில பகுதிகளில் வாக்காளர்களை அதிக அளவில் பயமுறுத்தியதோடு, கொசப்பேட்டையில் உள்ள தி.மு.கழகத் தேர்தல் அலுவலகத்திற்கும் தீ வைத்தனர். இந்தக் கூட்டம் வாக்குச்சீட்டுகளையெல்லாம் பிடுங்கிக் கொண்டு, அ.தி.மு.க. மற்றும் ஒரு சில சுயேச்சைகளின் ஏஜெண்டுகளைத்தவிர, மற்ற கட்சிகளின் ஏஜெண்டுகளையெல்லாம் விரட்டிவிட்டு, ஓட்டுப் பெட்டிகளுக்குள் அந்த வாக்குச்சீட்டுகளைத் திணித்துக் கொண்டனர். இது ஒரு திட்டமிட்ட செயலாகும். காவல் துறையினர் அங்கே இருந்தபோதிலும், ஆயுதம் தாங்கிய இரண்டு கும்பல்கள் சுதந்திரமாக பல வாகனங்களில் ஏறிக் கொண்டு பூத்துகளுக்குள் நுழைந்து கட்சிகளின் ஏஜெண்டுகளையும், தேர்தல் அதிகாரிகளையும் பயமுறுத்திவிட்டு, கள்ள வாக்குகளை

போட்டதையும் தடுக்க முடிய வில்லை. திருவான்மியூர் பகுதியிலே 8 மணி அளவிலேயே வன்முறை தொடங்கி விட்டது. ஆளுங்கட்சியான அ.தி.மு.க.வின் ஆதர வாளர்கள் என்று கூறப்படும் ஆயுதம் தாங்கிய கூட்டம், மாநகராட்சிக் கட்டிடத்திலே உள்ள வாக்குச் சாவடிக்குள் ஊடுருவியது. அவர்கள் மற்ற வேட்பாளர்களின் ஏஜெண்டுகளை வெளியே தள்ளிவிட்டு, வாக்குப் பதிவு அதிகாரியிடமிருந்து பேலட் பேப்பர்களைப் பிடுங்கினர். மேயர் பதவிக்கான வாக்குகளை அவர்கள் முக்கியமாக பதிவு செய்து, வாக்குப் பதிவு அதிகாரி தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்த போதிலும் அதைப்பற்றிக் கவலைப்படாமல், வாக்குப் பெட்டிக்குள் அவைகளையெல்லாம் திணித்துவிட்டு ஓடி விட்டனர்."

அன்றைய "மாலைமுரசு" இந்த வன்முறை குறித்து எழுதியிருந்ததில் ஒரு பகுதி மட்டும் வருமாறு :-

"பீகாரில் நடப்பது போல, சென்னையிலும் ஓட்டுச் சாவடியை கைப்பற்றும் சம்பவம் நடந்தது. பட்டாக்கத்தி மற்றும் உருட்டுக் கட்டைகளுடன் ஓட்டுச் சாவடிக்குள் புகுந்த ரவுடிகள், அங்கிருந்த தேர்தல் அதிகாரியை அடித்து மிரட்டி விட்டு ஓட்டு போட்டனர்.

11.30 மணியளவில் இந்த வாக்குச் சாவடி முன்பு இரண்டு கார்கள் வந்து நின்றது. கார்களில் அ.தி.மு.க. கொடி பறக்க விடப்பட்டிருந்தது. கார்கள் இரண்டிலும் பயங்கர மான பட்டாக் கத்திகளும், உருட்டுக்கட்டைகளும் இருந்தன. இரண்டு கார்களிலும் இருந்த சுமார் 20 பேர் திபுதிபுவென இறங்கி வாக்குச் சாவடிக்குள் நுழைந்தனர். உள்ளே சென்றோரில் சிலர், பட்டாக் கத்திகளை பின்புறம் மறைத்து வைத்திருந்தனர். பலர் உருட்டுக் கட்டைகளை அனைவரும் பார்க்கும் வகையில் தூக்கிப் பிடித்திருந்தனர். உள்ளே நுழைந்த ரவுடிகளிடம் அங்கிருந்த தேர்தல் அதிகாரி ஓட்டுப் போடுவதற்கான பெயர் விவரங்களைக் கேட்டார். உடனே இவரை மூலைக்கு தள்ளிய ஒரு ரவுடி, உருட்டுக்கட்டையைக் காட்டி மிரட்டினான். அங்கிருந்த மற்ற தேர்தல் அதிகாரிகளிடம் இருந்த வாக்குச் சீட்டுகளை மற்றவர்கள் பறித்தார்கள். தேர்தல் பணியாளர்கள் அனைவரும்

செய்வதறியாது, கை கால் நடுங்கியபடி நின்றிருந்தனர்.”

“தினமலர்” நாளேட்டில் வெளிவந்த செய்தியின் சுருக்கம் வருமாறு :-

“சைதாப்பேட்டை மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில், தென் சென்னை மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் தலைமையில், அ.தி.மு.க. வேட்பாளர் சங்கர் உட்பட200 பேர் கொண்ட கும்பல், பள்ளியில் உள்ள அனைத்துப் பூத்துகளையும் இழுத்து மூடினர். பெண் தேர்தல் அதிகாரி உட்பட அனைவரையும் பார்த்து, இங்கு நடப்பதை வெளியே சொன்னா அட்ரஸ் கண்டுபிடிச்சு வந்து குடலை உருவுவோம் என்று கத்தியைக் காட்டி குண்டர் படை மிரட்டியது. இதை அடுத்து தேர்தல் அதிகாரிகள், கை கட்டி, வாயை மூடிக் கொண்டனர். பின்னர் சாவகாசமாக கள்ள வாக்குகளை, போஸ்ட் ஆபீசில் முத்திரை குத்துவது போல குத்தோ குத்து என்று 15 நிமிடத்தில்அனைத்து வாக்குகளையும் குத்தி முடித்தனர். பாதுகாப்புக்கு இருந்த ஐந்து போலீசாரும் கடைசிவரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.”

2001ஆம் ஆண்டு தேர்தலின் போதும் ஒவ்வொரு கட்சியிலும் போட்டி வேட்பாளர்கள் வேட்பு மனு தாக்கல் செய்தார்கள். அதைப் பற்றி செய்தியாளர்கள் அப்போது என்னைக் கேட்டபோது, “ஒவ்வொரு தேர்தலிலும் இது தவிர்க்க முடியாதது. அதிருப்தி யாளர்கள் எல்லா கட்சிகளிலும் இருப்பார்கள். அவர்கள் இப்படிக் கட்டுப்பாட்டை மீறி செயல்படுவார்கள். உண்மையிலேயே கொள்கைப் பற்றோடு இருப்பவர்கள், இது போன்ற செயல்களில் ஈடுபட மாட்டார்கள்” என்று கூறினேன். அதற்கு உதாரண மாகக்கூட அப்போது நான் ஒரு சம்பவத்தைக் கூறியது எனக்கு நன்றாக நினைவில் உள்ளது.

காஞ்சிபுரத்தில் நகரசபைத் தலைவராகப் போட்டியிட திருவேங்கடம் அவர்கள், அப்போது என்னையும், பொதுச் செயலாளரையும் சந்தித்து வாய்ப்புத் தர வேண்டுமென்று கேட்டார். நாங்கள் அவருக்கு வாய்ப்பு தராமல், ஆறுமுகம் என்பவருக்கு வாய்ப்புத் தந்தோம். ஆனாலும் நண்பர் திருவேங்கடம் நாங்கள் வாய்ப்புக் கொடுக்கவில்லை என்பதற்காகச் சுயேச்சையாகப் போட்டியிடவில்லை. உண்மையிலேயே அவர் கொள்கைப்

பற்று கொண்டவர் என்ற காரணத்தினால், நாங்கள் அறிவித்த வேட்பாளர் ஆறுமுகத்திற்கு ஆதரவாக வீடு வீடாகச் சென்று வாக்குகளைக் கேட்டார். அவர் ஏற்கனவே உடல் நலம் சரியில்லாத வர் என்ற போதிலும், தனக்கு இடம் கொடுக்கவில்லையே என்று ஆதங்கப்படாமல், ஆறுமுகத்திற்காக வீடு வீடாகச் சென்று வாக்குகளைக் கேட்டுக் கொண்டிருந்தபோது, மயக்கமுற்று மாரடைப்பு ஏற்பட்டு இறந்துவிட்டார்.

அப்படிப்பட்டவர்களும் தி.மு.கழகத்தில் இருக்கிறார்கள், இப்போதும் இருக்கிறார்கள். இடம் கிடைக்கவில்லை என்பதற்காக இடம் மாறுகின்றவர்களும் எங்களை அறியாமல் சிலர் தி.மு. கழகத்தில் இருக்கிறார்கள். மற்ற கட்சிகளிலும் இப்படிப்பட்டவர்கள் இருக்கவே செய்கிறார்கள். தமிழகத்தில் ஊராட்சிகள் உட்பட 1 இலட்சத்து 30 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் தேர்ந்தெடுக்கப் படும்போது, இதுபோல் நடைபெறும் ஒரு சில சம்பவங்களைத் தொடர்ந்து பெரிதுபடுத்திப் பேசிக் கொண்டே இருப்பது சரியல்ல. மேலும், மாநிலம் முழுவதும் உள்ள புள்ளி விவரங்களைப் பார்க்கும் போது, கூட்டணி நெறிக்கு விரோதமாக எல்லா கட்சிகளின் சார்பிலும் போட்டி வேட்பாளர்கள் சிலர் இந்தத் தேர்தலிலே நின்றிருக்கிறார்கள். அது எண்ணிக்கையில் சற்று வேறுபாடாக இருக்கலாம். அந்தப் புள்ளி விவரங்களும் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. தேவைப்படின் தெரிவிக்கப்படும்.

எனவே, இதே விஷயத்தை நானும் பெரிதுபடுத்திக் கொண்டேயிருக்க விரும்பவில்லை. தவறுகள் நடந்திருக்கலாம். அவற்றின்மீது எந்த அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன என்ற ஆதாரங்களும், விவரங்களும் இருக்கின்றன. எனவே, அவற்றைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு, நடந்தவைகள் நாம் விரும்பாதவை, இனி அவை நடக்காமல் இருப்பதில் எச்சரிக்கையாக இருப்போம் என்பதோடு, தொடர்ந்து நடக்க வேண்டிய பணிகளைப் பற்றியும், மக்களுக்கு நாம் ஆற்ற வேண்டிய பணிகளைப் பற்றியும் கவனத்தைச் செலுத்திடுவோம்!

அன்புள்ள,

மு.க.

8-11-2006

3243. அனுபவம் அனைவர்க்கும் உதவட்டும்!

உடன்பிறப்பே,

கூட்டணி என்பது, ஒரே கொள்கை கொண்ட கட்சிகளால் அல்ல! ஆனால், பொதுவான ஒரே குறிக்கோள் கொண்ட இயக்கங்கள் மட்டுமே, தேர்தல் நேரத்திலே தொகுதிப் பங்கீடுகள் செய்து கொண்டும் - தேர்தல் அல்லாத நேரங்களில் பொதுப் பிரச்சினைகளில் ஒன்றுபட்டு நின்று பிரச்சாரப் பணி புரிந்தும் - பொதுவாக ஏற்றுக் கொண்ட குறிக்கோளை எய்திடப் போராடியும் வெற்றி கண்டிடும் நோக்கத்துடன், அமைந்திடும் உடன்பாட்டை ஒவ்வொரு கட்சியின் வலிமைக்கேற்ப செயல் படுத்துவதேயாகும். உதாரணமாக, நான்கு கட்சிகள் இருப்பதாக வைத்துக் கொண்டால், இருபது இடங்களை ஐந்து இடங்கள் வீதம் பங்கிட்டுக் கொண்டு நான்கு பகுதிகளில் நாலு கட்சிகள் போட்டியிடுவது என்பது அல்ல! அந்தந்தக் கட்சிகளின் வலிமையை அடிப்படையாக வைத்துப் பங்கீடு செய்யும்போதுதான் - மூன்று இடங்கள் பெற்ற ஒரு கட்சியும் - ஐந்து இடங்கள் பெற்ற ஒரு கட்சியும் - சம வாய்ப்பு உள்ளவைகளாகக் கருதப் பட முடியும் - இல்லையேல், சம வாய்ப்பு சற்று சரிந்த வாய்ப்பாகவே ஆகி விடும் - எனவே, போட்டியிடுகிற இடங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தல்ல! அந்த இடங்கள் அமைந்த அல்லது அந்த இடங்களைச் சார்ந்த வாக்காளப் பெருமக்கள் வழங்கிடும் கணிசமான ஆதரவும் கணக்கில் கொள்ளப்பட்டே "இடப் பங்கீடுகள்" செய்து கொள்ளும் பணி அமைகிறது.

நமது தி.மு. கழகத்தைப் பொறுத்தவரையில், பொதுத் தேர்தல் நேரமாயினும் - இடைத் தேர்தல்கள் நேரமாயினும் - அறிஞர் அண்ணா அவர்களின் காலத்திலேயிருந்தே மற்ற தோழமைக் கட்சிகளுடன் தொகுதிப் பங்கீடு செய்து கொள்ளும் நிலை எடுக்கப் பெற்று - அதில் ஒரு முடிவு மேற்கொண்டு தேர்தல் களத்தில் குதிக்கும் வரையில்தான் - பிரச்சினைகள், ஒரு சில குழப்பங்கள்

- தலை காட்டுமே தவிர, தேர்தல் நேரத்திலோ அல்லது தேர்தல் முடிவுற்ற பிறகோ - அணியில் இடம் பெற்றிருந்த எந்தக் கட்சிகளுக்குமிடையே பூசல், புகைச்சல் ஏற்பட்டதில்லை. இது தி.மு.க. வின் வரலாற்றில், கட்டுப்பாடு மிக்க அத்தியாயங்களாக, அன்று முதல் இடம் பெற்றே வந்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல்கள், சட்டப்பேரவைத் தேர்தல்கள், உள்ளாட்சித் தேர்தல்கள் என நாம் பிற தோழமைக் கட்சிகளுடன் தொகுதி உடன்பாடு கொண்டு, கூட்டணி அமைத்து களம் கண்ட போதெல்லாம் - நம்முடைய அணியில் உள்ள கட்சிகளுக்கிடையே சுமுக உறவுதான் இருந்திருக்கிறது என்பதை எவரும் மறுக்க முடியாது. ஆனால் அந்தச் சுமுகம், தோழமை, உறவு, நாடாளுமன்றத் தேர்தலில் ஒளி விட்டுப் பிரகாசித்து, நாற்பதுக்கு நாற்பது என எல்லா இடங்களிலும் நமது அணியே வெற்றிக் கொடி பறக்க விட்டு - அடுத்து நடந்து முடிந்த சட்டப்பேரவைக்கான பொதுத் தேர்தலிலும் 234 மொத்த இடங்களில் நமது கூட்டணி 163 இடங்களில் வெற்றி பெற்று - அணியிலிருக்கும் கட்சிகளின் ஆதரவுடன், கழகம் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்து, தேர்தல் வாக்குறுதிகளைத் திறம்பட நிறைவேற்றி வருகிறது.

வாக்குறுதிகளைச் சொன்னபடி நிறைவேற்றும் அந்த வாய்மை, நமது ஆட்சியில் இருப்பதால்தான் பட்டினக் கரை முதல் பட்டிக்காடு வரையில் பரவிக் கிடக்கும் ஏழையெளியோரும், நடுத்தரக் குடும்பத்தினரும் - சகல பிரிவு மக்களும் சந்தோஷத்தை வெளிப்படுத்தும் விதமாகவே நடந்து முடிந்த உள்ளாட்சி மன்றத் தேர்தலில் தமது நன்றியைத் தெரிவிப்பது போல.....பின்வரும் விதமாக;

- 6 மாநகராட்சிகளில் ஒன்று கூட எதிர் அணிக்குச் செல்லாமல், 6 மாநகராட்சிகளிலும் நமது கூட்டணி யினரே, மேயர், துணை மேயர் போன்ற பொறுப்பு களை ஏற்றுள்ளனர். நிலைக் குழுக்களிலும் இடம் பெறும் வாய்ப்பு பெற்றுள்ளனர்.
- மொத்தமுள்ள 152 நகராட்சி மன்றங்களில், 94 மன்றங்களில் தி.மு.க.வும், 21 மன்றங்களில் காங்கிரசும், 7 மன்றங்களில் பா.ம.க. வும், 4 மன்றங்களில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும்,

ஒரு இடத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், ஒரு இடத்தில் விடுதலைச் சிறுத்தைகள் இயக்கமும் வெற்றி பெற்று நிர்வாகப் பொறுப்புகளை ஏற்றுள்ளன.

உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர் தேர்தல் நேரடியாக நடைபெற்றதால், பல நகராட்சி மற்றும் உள்ளாட்சி மன்றங்களில் தீர்மானங்களே கூட நிறைவேற்ற முடியாத குழப்பங்கள் நடைபெற்றதை எண்ணி, மறைமுகத் தேர்தலை இந்த முறை நடத்த முடிவெடுத்து, அதனால் விரும்பத் தகாத சில விளைவுகளும் உண்டு என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்து, அதனை மறுபரிசீலனைக்கு உட்படுத்திட வேண்டிய நிலைமைக்கு உள்ளாகியிருக்கிறோம்.

உள்ளாட்சி அமைப்புகளிலேயே விரிந்து பரந்த பெரும் பொறுப்பான மாவட்ட ஊராட்சித் தலைவர் பதவிப் பொறுப்புக்கு, தி.மு. கழகம் 16 இடங்களில் போட்டியிட்டு, 15 இடங்களையும் - காங்கிரஸ் 5 இடங்களில் போட்டியிட்டு, 5 இடங்களையும், பாட்டாளி மக்கள் கட்சி 5 இடங்களில் போட்டியிட்டு, 4 இடங்களையும் - சி.பி.எம். ஒரு இடத்தில் போட்டியிட்டு, அந்த ஒரு இடத்தையும் - சி.பி.ஐ. இரண்டு இடத்தில் போட்டியிட்டு ஒரு இடத்தையும் - மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் தேர்தலில் வெற்றி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்க வெற்றியேயாகும்.

கூட்டணிக் கட்சிகளுக்கிடையே தேர்தலில் போட்டியிடும் இடங்கள் பேசி முடித்து, அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்ட பிறகு - அணியில் உள்ள தி.மு.க. உள்ளிட்ட ஒவ்வொரு கட்சியின் சார்பில், ஒவ்வொரு இடத்தில் போட்டி வேட்பாளர்கள் நின்றோ - அல்லது நிறுத்தப்பட்டோ - கட்டுப்பாடுகளை மீறிய குற்றச்சாட்டுக்கு எந்தவொரு கட்சியும் உட்படாதது என்று கூற முடியாமல் - அணியில் உள்ள எல்லா கட்சிகளின் சார்பிலும், போட்டி வேட்பாளர்கள் சில இடங்களில் நின்று வெற்றியும் பெற்றுள்ளார்கள் - வாக்குகளைப் பிரித்து அணியின் அதிகாரபூர்வ வேட்பாளர் தோல்வி அடையும் நிலையையும் உருவாக்கியிருக்கிறார்கள் - தம்மையறியாமல் எதிர்க்கட்சிகளின் வெற்றிக்கும் உதவியிருக்கிறார்கள்.

குறிப்பாக, சென்னை மாநகராட்சித் தேர்தலில் எல்லாக் கட்சிகளின் கூட்டணி இல்லை - மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சென்னைக் கூட்டணியில் இடம் பெறாவிடினும் - சென்னை தவிர்த்து மற்ற இடங்களில் அணி சேர்ந்து போட்டியிட்டதாயினும் - அந்த இடங்களில்கூட அக்கட்சியின் போட்டி வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டதற்கும், மற்ற கட்சிகளின் போட்டி வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டதற்கும் உதாரணங்கள் பல உண்டு. அவற்றில் சில வருமாறு :-

வேலூர் மாவட்டத்தில் ஜோலார்ப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், பேச்சு வார்த்தையின்போது தி.மு.க. விற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், பா.ம.க. வைச் சேர்ந்த கிருபாகரன் என்பவர் போட்டியிட்டு வெற்றி பெற்றிருக்கிறார்.

போளூர் பேரூராட்சியில் 9வது வார்டில், பூங்கோதை உலகநாதன் தி.மு.க. கூட்டணி சார்பில் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட்டார். அங்கே வசந்த குமார் காங்கிரஸ் சார்பில் கை சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதே பேரூராட்சியில் 5வது வார்டில் ரங்க விசுவநாதன் என்ற தி.மு.க வேட்பாளர் கூட்டணி சார்பில் நிறுத்தப்பட்டிருந்தார். எனினும், ஏழுமலை என்பவர் காங்கிரஸ் கட்சி சார்பாக கை சின்னத்தில் போட்டியிட்டார். தி.மு.க. அங்கே வெற்றி பெற்றது.

திண்டுக்கல் நகராட்சியில், வார்டு எண். 2, 10, 18, 41, 45, 48 ஆகிய வார்டுகளில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிட ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஆனால், ஒப்பந்தத்தை மீறி வார்டு எண். 44இல் போட்டி வேட்பாளரை நிறுத்தியும், வார்டுகள் 1, 13, 14, 35 ஆகியவற்றில் தி.மு. கழகத்தினரை எதிர்த்தும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் நிர்வாகிகள் பணிபுரிந்தார்கள்.

திண்டுக்கல் ஒன்றியம் வார்டு எண். 1 இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒதுக்கப்பட்டது. ஆனால், அங்கே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி போட்டி வேட்பாளரை நிறுத்தியது.

திருநாவலூர் ஒன்றியத்தில், வார்டுகள் 2, 4, 5, 6, 8, 10, 11 ஆகிய இடங்களில் தி.மு.கழகத்தை எதிர்த்தும், வார்டு 3இல் சி.பி.எம். கட்சியை எதிர்த்தும் பா.ம.க. வினர் போட்டியிட்டிருக்கிறார்கள்.

காஞ்சிபுரம் ஒன்றியக் குழு உறுப்பினர் தேர்தலில், காங்கிரசுக்கு 3 இடமும், தி.மு.க. விற்கு 13 இடமும், பா.ம.க. விற்கு 6 இடமும் ஒதுக்கப்பட்டன. 13வது வார்டு காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கப்பட்டது. அவளூர் ஜி. சீனிவாசன் காங்கிரஸ் வேட்பாளராக கை சின்னத்தில் நிறுத்தப்பட்டார். ஆனால், பா.ம.க. மாவட்டச் செயலாளர் குமாரசாமி, பா.ம.க. ஒன்றியச் செயலாளர் பெருமாள் ஆகியோர் காங்கிரஸ் வேட்பாளருக்கு எதிராக, ஸ்ரீதர் என்பவரை, பா.ம.க. விற்காக ஒதுக்கப்பட்ட இடத்திலே நிறுத்தாமல், 13வது வார்டில் காங்கிரஸ் கட்சி வேட்பாளருக்கு எதிராக மாம்பழச் சின்னத்திலே நிறுத்தப்பட்டார்.

தர்மபுரி மாவட்டத்தில் பெண்ணாகரம் பேரூராட்சியில், வார்டு 2ல் தி.மு.க.விற்கு எதிராக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வட்டத் துணைச் செயலாளர் முருகேசன் தனது மனைவியை சுயேச்சையாக போட்டியிடச் செய்தார். வார்டு 7ல் இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த லெட்சுமணன் அவர்களுடைய கட்சி சின்னத்திலேயே போட்டி வேட்பாளராக நின்றார்.

பாப்பாரப்பட்டி பேரூராட்சியில், 7வது வார்டு பா.ம.க.விற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. அங்கே சிங்காரவேலு என்பவர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் எதிர்த்துப் போட்டியிட்டார்.

இந்தக் கட்டுப்பாடு மீறிய போட்டியில், தி.மு.க. ஒன்றும் விதி விலக்கல்ல! உதாரணமாக, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் தேர்தலில், தி.மு.கழகத்தின் சார்பில் அதிகாரபூர்வமாக ஒருவர் நிறுத்தப்பட்டார். ஆனால், அவருக்கு எதிராக, அந்தத் தொகுதியின் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினரே, அ.தி.மு.க. சார்பில் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பெண்மணியை தி.மு.கழகப் போட்டி வேட்பாளராக நிறுத்தி வெற்றி பெறச் செய்திருக்கிறார். எனவே, உள்ளாட்சித் தேர்தலில் உள்ளூர்ப் பிரச்சினைகளுக்கு மட்டுமே முதலிடம் என்று ஒரு கொள்கையை அவர்களாகவே புதிதாக வகுத்துக் கொண்டு, கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதில் அவர்களுக்கும் சில இடங்களில் பொறுப்பு உண்டு - அதற்கான நடவடிக்கைகளையும் அவர்கள் மீது சம்பந்தப்பட்ட கட்சிகளின் தலைமைகள் எடுத்துள்ளன.

தேர்தல் முடிவு காரணமாக - பெறப்பட்டுள்ள பொறுப்புகளை ஏற்ற விதத்தில் நிறைவேற்றியும் - மக்களின் சுகாதாரம், கல்வி,

போக்குவரத்து, குடிநீர் வசதி, விவசாய முன்னேற்றம், கிராமிய தொழில் வளர்ச்சி, மருத்துவம் மற்றும் எல்லா விதமான பொதுவான பிரச்சினைகளையும் அணுகுவதுடன், கட்சிச் சார்பற்ற முறையில் கைகோத்து நின்று, மக்களுக்கான கடமைகளை நிறைவேற்றிட முன்வர வேண்டும்.

எனவே, உள்ளாட்சித் தேர்தலில் நமக்கு ஏற்பட்ட சில கசப்பான நிலைமைகள், தமிழகம் முழுதும் விளைந்தவை அல்ல!

தலைநகர் தவிர்த்த எல்லாப் பகுதிகளிலும், அமைதியாகவும், ஆரோக்கியமான ஜனநாயக நெறியிலும்தான் நடைபெற்றிருக்கின்றன.

தலைநகரில் கூட ஓரிரு சம்பவங்களே குறிப்பிட்டுக் கூறப்பட்டு, அதுவும் மாநிலத் தேர்தல் ஆணையரால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, காவல் துறையினாலும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மாநிலத் தேர்தல் ஆணையர், எம்.பி.சி. என்பதைத் தவிர, வேறு எந்தக் குறையும் இல்லாதவர் என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

எதிர்காலத்தில், இம்மியளவு குறையும் நேராமல், உள்ளாட்சி ஜனநாயகம் ஓங்கி உயர்ந்திட,

உழைப்பதற்கு உறுதியெடுத்துக் கொள்ள,

இந்த அனுபவங்கள் அனைவருக்கும் உதவட்டும்!

அன்புள்ள,

மு.க.

11-11-2006

1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஏ.ஜே. டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

முதற்பதிப்பு 2022